RAKSHANYA SAMAYA NIRNAYAM.

THE RELIGION OF SALVATION DETERMINED.

First Part.

VASTHU NIRNAYA PIRAKARANAM.

A TAMIL PROSE WORK.

இரக்ஷணிய சமய நிர்ணயம்

முதல் புஸ்தகம்.

வஸ்து நிர்ணயப் பிரகரணம்.

வசன கிரந்தம்.

First Edition, 1,000 Copies.

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA.
LONDON AND MADRAS.

1898.

T21118
R004F02

RAKSHANYA SAMAYA NIRNAYAM.

THE RELIGION OF SALVATION DETERMINED.

First Part.

VASTHU NIRNAYA PIRAKARANAM.

A TAMIL PROSE WORK.

First Edition, 1,000 Copies.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA:
LONDON AND MADRAS.

1898.

S. P. C. K. Press, Vepery, Madras—1898.

இரக்ஷணிய சமய நிர்ணயம்.

முதல் புஸ்தகம்.

வஸ்து நிர்ணயப் பிரகரணம்.

வசன கிரந்தம்.

முதலாம் பதிப்பு.

சென்னபட்டணம்:
இந்திய கல்வி அபிவிர்த்தி சங்கத்தாரால்
கி. க. அ. சங்கத்தாரது அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

௧௮௯௮.

முகவுரை.

இரக்ஷணிய சமயமென்றது யாதெனில் உலகத்தில் வழங்கி வருகிற சமயங்களுக்குள் ஆன்ம ஈடேற்றத்தை யருளத்தக்க மெய்யான மார்க்க மெதுவென்று ஆராய்ச்சிசெய்து தீர்மானிப்பதாதலில் இப்பெயர் கொண்டதென்க.

உலகத்திற் பற்பல சமயங்களுள்ளன. அவைகள் ஒன்றை யொன்று விரோதிக்கின்றன. ஆயினுங் கடவுளொருவருளர். அவரே உலக காரணர். பழுதற்ற திவ்விய லக்ஷணமுடையவர். அவரே சிருஷ்டி ஸ்திதி சம்ஹார கர்த்தர். சன்மார்க்க வரம்பு மனுப்பிரஜைகளுக்கு இருக்கவேண்டியது அத்யந்தாவஷியகம். இன்றியமையாத தென்னலாம். அது கடவுள் வழியாய் பூர்வத்திலிருந்த மகான்கள் மூலமாய் வெளிப்பட்டது. மோக்ஷ நரகமுண்டு. விதிநிஷேதங்களைத் திரிகரண சுத்தியாய்க் கைக்கொள்ளவேண்டும். கைக்கொண்டவ ரெவர்? அவரே யந்தத்தில் மோக்ஷமடைவர். கைக்கொள்ளாதவ ரெவர்? அவரே நரகம் புகுவர். ஆதலால் நன்மை செய்யவேண்டும். தீமையைத் தியக்ஷித்தல்வேண்டும். பாவஞ் செய்தவருக்குத் தண்டனை யுண்டு. புண்ணிய கிரியை செய்வோருக்குத் தெய்வாநுகூலங் கிடைக்கும். இவற்றையொத்த சில விஷயங்களில் எல்லாச் சமயங்களு மொற்றுமையுள்ளன. இந்த ஒற்றுமை சமய நூல்களுக்குள் தயிர் கடைந்தால் வெண்ணெய் திரளுவதுபோலக் கடின சாத்தியமாய்த் திரளத்தக்கது. மேற்காட்டிய சத்தியங்கள் சமயங்களுக்குள் ஏகதேசமா யொற்றுமைப்பட்டு நடை பெறுவதைக் காணலாம். இவற்றைத்தவிர மற்றெல்லா விஷையங்களிலும் எல்லாச் சமயங்களும் ஒன்றுக்கொன்று முரணுகின்றன. சமயங்கள் முரணுவது போலவே சமயாநுசாரிகளும் தத்தமில் சமயாசாரங்களிலும், சமயக் கொள்கைகளிலும், அநுஷ்டானங்களிலும்; சடங்குகள், ஒழுக்கங்கள், கைங்கிரியங்கள், நடையுடை பாவனைகள், சமய சம்பிரதாயங்கள், பேசுகிற பரிபாஷைகள் இத்யாதிகளிலெல்லா, முரணுகின்றன ரென்பது யாவரு மறிந்த விஷையமே. அப்படியிருப்பினும் அவரவர் தாம் தாம் அநுஷ்டிப்பதே சரியென்று பிரமாதமா வாதிக்கிறார்கள். இவைகளை விரிக்கிற் பெருகும். இவ்வாறு பேதப்படுவதற்குக் காரணம் யாதெனில்: இந்தியாவில் மாத்திரமல்ல, மற்றைய தேசங்களிலும் அங்கங்கே காலத்துக்குக் காலந் தோன்றி மறைந்த வித்வ ஜனங்கள் தத்தமிஷ்டப்பிரகாரம் எழுதிவைத்த கிரந்தங்களே பல விகற்பமான கொள்கைகளை யநுசரிக்கவும், இம்மை மறுமைகளைப்பற்றிய தப்பபிப்பிராயத்துக் குட்படவு மிடம்பண்ணின.

இவ்வாறு இந்தியா முழுவதுமுள்ள ஜனங்கள் மதிமருண்டு இரக்ஷணிய மார்க்கத்தை பிதுவென்று அறியாமல் விஷத்தை யமிழ்தமென்று உட்கொள்வார்போல வாணுளை முடிக்கிருர்கள்.

2. 'கடவுளொருவ ருளரென்ற பிரதான கொள்கையை எல்லாச் சமயத்தாரும் ஒப்புக்கொள்ளுகிறுர்க ளென்றபோதிலும் சமயத்துக்குச் சமயம் கடவுளருக்குள் நாம விகற்பமுதலிய பல விகற்பங்களுண்டுபட்டு ஒவ்வொரு சமயமும் தனக்காதீனமான கடவுளே மெய்க்கடவுள், ஏனையர் பொய்க்கடவுளென்று கூறுகின்றன. இதுபோலவே பல பேதங்களுங் கிளைத்திருக்கின்றன. ஆதலில் இந்தியாவில் வழங்குகிற சைவ வைஷ்ணவ முதலிய சமயங்களை வாதிக்கப்படுஞ் சமயமாகவும், கிறிஸ்துமார்க்கமாகிய சுபக்ஷமே வாதிக்கிற சமயமாகவுங்கொண்டு இந்த வஸ்து நிர்ணயப் பிரகரணத்தை யெழுதியிருக்கின்றும். இந்தப் பிரகரணத்தில் தெய்வவணக்கமும் பீடிகையுந் தவிரப் பதினெட்டு அத்தியாயங்களுள்ளன. சமய ஆராய்ச்சி செய்ய விருப்புடையோராய் வாசிப்போருக்கு எளிதிற் பொருள் விளங்குமாறு தெளிவான பாஷைநடையி லெழுதியிருக்கிறது.

3. இந்த மாதிரியான புஸ்தகமொன்று தமிழி லுண்டுபடவேண்டுமென்று கனம்: டாக்டர் மர்டாக் முனிவர் முன்னிலையில் ரெவரென்று டி. உவாக்கர் அய்யரவர்கள், ரெவரென்று. டி. கெம்பர் அய்யரவர்கள், ரெவரென்று E. S. கார் அய்யரவர்கள் முதலிய குருமார்கள் நல்லாலோசனை சொல்லி யேவிவிட்டார்கள். சிலகாலம் பொறுத்து கனம்: கார் அய்யரவர்கள் மூலமாய்க் கனம்பொருந்திய C. M. கமிற்றிமார்களும் அநுமதி கொடுத்ததுமல்லாமல் இந்த வேலைக்கு உதவியாக அநேகமான தமிழ் நூல்களும் வாங்கிக்கொடுத்து உபகரித்தார்கள். இப்படியாக முதற்பாகமாகிய வஸ்து நிர்ணயப் பிரகரணம் ஒருவாறு சமாப்தி பெற்றது. இந்த வேலைக்குத் திருநெல்வேலி நாட்டுத் திருச்சபைக்கு முக்கியஸ்தரான குருவும், மேல்விசாரணைத் தலைவரும், தமிழில் தேர்ச்சிபெற்ற பாண்டித்தியமுடையவருமான ரெவரென்று டி. உவாக்கர் அய்யரவர்கள் இந்த நூல் கையெழுத்துப் பிரதிரூபமா யிருக்கும்போதே அப்போதைப்போது தாமே வாசித்துச் சரிபார்த்தும், அச்சியந்திர மேறிவந்த புரூப்களை இடைக்கிடை பார்வையிட்டுத் திருத்தஞ்செய்தும் ஒவ்வொரு கடைசிப் புரூபுந் தாமே நுட்பமாய்க் கவனித்துத் திருத்திஸ்டிறைச் ஆர்டர் கொடுத்தும், இடைக்கிடை சேர்க்கவேண்டியவைகளைச் சேர்த்தும், மாற்றவேண்டியவைகளை மாற்றியும் இதே ரீதியான பேருதவி செய்தார்கள். "உதவி வரைத்தன் றுதவி யுதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து.' ரெவரென்று வீ. சற்குணம் அய்யாவர்களும் அவசரமான காலங்களிலெல்லாம் இங்கிலீஷ்ப் பயிற்சியில்லாத முட்டுப்பாட்டை நீக்கி வேத ஆராய்ச்சி செய்து

சமயோசிதமான திருவசனங்களைத் தெரிந்துகொடுத்து அநேகமாகப் பேருதவி செய்தார்கள். அல்லாமல் C. M. ஹைஸ்கூல் உதவி உபாத்தியாயர், Mr. வேதமுத்து அவர்களும் அவ்வாறே தக்க உதவி செய்தார்கள். இவ்வாறு குருமாரும் மெய்த்தொண்டருமாக அவரவரே நாளடவிற் செய்த உதவி யொத்தாசைகளையும், அவரவரே இதுவிஷையத்தில் வஹித்துக்கொண்ட கவலை, சிரமம், உழைப்பு முதலியவைகளையும், தவிரவும் காலஞ்சென்றுபோன கிரந்த கர்த்தாக்களுங்கூட இதுவிஷையத்தில் தாங்க ளியற்றிவைத்திருக்கிற நூன்முகமாய் உபகரித்த கருத்துக்களையும் தனித்தனி பிரித்து வெவ்வேறாய் ஒதுக்கிவைக்கும் பக்ஷத்தில் ஆக்கியோன் பக்கத்து மீந்துளது யாது? யாது மின்று. இது உபசார வழக்கன்று. உண்மை வழக்கே.

> "முன்னூ லொழிந்த தொன்னூ லெதுவும்
> என்னூ லேனும் தன்னூ லென்ன
> சொன்னூ லின்றே சொன்னூ லின்றென
> இந்நீ ருலகிற் பன்னுவர் புலவர்."

இதெப்படியெனில், சொற்களோ, சொற்றொடர்களோ, வாக்கியங்களோ, மகாவாக்கிய உபவாக்கியங்களோ, தொடைபடு செய்யுட்களோ, தொடர்நிலைச் செய்யுட்களோ, கட்டுரைக் கதையோ, கற்பனைப்பொருளோ, நவரசாலங்காரங்களோ இன்னோரன்ன எல்லாம் ஒருவர்க்கென வுரிமைப்பட்டதன்று. உலகத்துள்ள கற்றோரெவர்க்கும் உரிமையேயாதலின்.

4. இந்தப் பிரகாரண முடிவதற்கு உதவியாயிருந்துள்ள நூல்கள்.

ஸ்ரீமத் கம்பராமாயணம்.
பாகவதம்.
பாரதம்.
இருசமயவிளக்கம்.
சிவதருமோத்தரம்.
விஷ்ணுபுராணம்.
ஞானவாசிஷ்டம்.
இந்துவேதப்பொருள்.
ஸ்கந்தபுராணம்.
ஜீவகசிந்தாமணி.
சிலப்பதிகாரம்.
சூளாமணி.
தத்துவநிஜாநுபோகசாரம்.
திருவள்ளுவர் குறள்.
நாலடியார்.
நீதிநெறிவிளக்கம்.
ஒழிவிலொடுக்கம்.
கைவல்ய நவநீதம்.
அவிரோதவுந்தியார்.
வேதசமாஜவிண்ணப்பம்.
இந்துவேதம்.
பிராமதருமம்.
சமயத்தொகுதி.
சிவஞானசித்தியார்.
இந்துதேவாரம்.
அரங்ககலம்பகம்.
அரங்கத்தந்தாதி.
மேருமந்தரபுராணம்.
குற்றாலஸ்தலபுராணம்.
விம்பசாரன்கதை.
கிறிஸ்துவேதம்.
விசுவாசப்பிரமாணவிளக்கம்.
இயல்வேத அருள்வேத சம்பந்த சித்தாந்தம்.
இரக்ஷணியயாத்திரிகம்.
தேம்பாவணி.
வே-நீதிநூல்.
வேத அகராதி.
சமய பரீக்ஷை.
பரதகண்ட புராதனம்.
புறம் நானூறு.

இத்யாதிநூல்களைப் உதவியாகக்கொண்டு இந்தப் பிரகாரண முடிவு பெற்றதெனவறிக.

5. இந்து தேவர்களுக்குக் கடவுளர்க்குரிய தேவலக்ஷணங்கள் இல்லையென்று வாதிக்கும் சமயம் இன்னின்னாருக்கு இன்னின்ன லக்ஷணங்கள் முற்றும் பொருந்தவில்லையே யென்று அந்தந்தக் கடவுள் நூல்களில் வித்வான்கள் புனைந்துகூறிய பாகங்களை அவரவர் சொன்ன வாறே சுபக்ஷத்தார் உதாகரணப்படுத்தும்போது இது தேவதூஷண மென்று அமளிசெய்கிறார்கள். சமயாநுசாரிகளாய் மகாபக்திமான் களாய் சிறந்த வித்வான்களாய்ப் புகழ்பெற்றிருந்த பெரியோர்கள் பூர்வத்தி லெழுதிவைத்த கிரந்தங்களில் கடவுளின் சர்வவல்லமை சர்வக்ஞானம் அதிபாரிசுத்த முதலிய லக்ஷணங்களுக்கு நேர்விரோத மாய் அந்தக் கடவுளரின் சரித்திரங்கள் செய்கைகள் உத்பத்தி ஸ்திதி நாசங்களை யெல்லாங் கற்பிதமாகவும் வழுவாகவும் எழுதுவதும் சதா வுலகத்தில் நிலவும்படி யேற்பாடு செய்வதுமன்றோ ஒழியாத தேவதூஷணம். சில ஜனங்கள் வயிறெறிந்து தங்கள் துன்பங்களைச் சகிக்கமாட்டாமல் தெய்வத்தைத் திட்டுகிறார்கள், நிந்திக்கிறார்கள்; இவைகளை நிந்தாஸ்துதியென்று பாராட்டுகிறார்கள். எதிர்வாத சமயத் தில் உங்கள் நூலி லிப்படி யிப்படி யிருக்கிறதேயென்று காட்டுவோர் தூஷணியாவாரா? ஒருக்காலும் அப்படி யாகார். ஒருவன் தேவ தூஷணஞ் சொல்ல ஒருவன் கேட்டுக்கொண்டிருந்தால், சைவசமயத் தில் ஏற்பட்டிருக்கிற விதி யிது:

"யாவரேல் மழுவலானை யிகழ்வரே லுடனே யந்தப்
பாவனை யடுதல்வேண்டும் படாதெனிற் பழிமேல் வைத்து
வீவதே வேண்டும்வேண்டார் வேண்டிடா தவ்வூர் விட்டுப்
போவதே வேண்டும்வேண்டார் பொருந்துவர் சிவத்து ரோகம்."

இவ்வகைத்தாய பரிகாரஞ் செய்துகொண்ட மெய்யான பக்தர் பூர்வீக காலத் திருந்திருப்பார் போலும்.

6. இந்நூலை வாசித்தறிய விரும்புவோருக்குத் தேவாவியின் றிருவருட் பிரசாத பலத்தால் அவர்களுடைய இருதய கமலங் குவி யாது அலரவேண்டுமென்றும், கிறிஸ்துமார்க்க சத்தியத்தின் பிரபை அவர்க ளுள்ளத்தைப் பிரகாசிப்பிக்க வேண்டுமென்றும், "பாவிக ளுடைய மரணத்தை விரும்பாமல் அவர்கள் மனந்திரும்பிப் பிழைப் பதையே விரும்புகிற" திரியேக பெருமானைக் கிறிஸ்து திருச்சபையா ரனைவரும் சதா சத்விநய பயபக்தியோடு ஆவலாய்ப் பிரார்த்தித்து வருகிறோம். ரக்ஷணியமூர்த்தியாகிய ஸ்ரீ கிறிஸ்துபகவான் தம்மு டைய ஆவியை அநுக்கிரகிப்பாராக. அவருக்கே ஸ்துதியும் ஸ்தோத் திரமும் மகிமையும் சதாகாலங்களிலு முண்டாவதாக. ஆமென்.

பொருள் அட்டவணை.

அதி.		பக்கம்.
	தெய்வ வணக்கம்	1
	பீடிகை	3
1.	விவாதாம்ஸம்: பரபக்ஷமாகிய புறச்சமயக் கோட்பாடுகள்	7
2.	பொதுப் பிரமாணம்	20
3.	உலகாயித மதம்	30
4.	சாங்கிய மதம்	46
5.	பௌத்த மதம்	50
6.	ஆருகத மதம், அல்லது க்ஷமண மதம்	53
7.	மாயாவாதி மதம்	65
8.	சைவசமயக் கடவுள்	74
9.	வைசேஷிகமதக் கடவுள்	84
10.	அச்சுமருவாதக் கடவுள்	86
11.	வைஷ்ணவசமயக் கடவுள்	87
12.	பாஞ்சராத்திரக் கடவுள்	100
13.	பிரமனுதிய கடவுள்	108
14.	அநேகேச்சுரவாதம்	122
15.	விக்கிரக தேவ வணக்கம்	126
16.	சுபக்ஷஸ்தாபனம்	161
17.	சந்தேக நிவிர்த்தி	181
18.	முடிவுரை	210

இரக்ஷணிய சமய நிர்ணயம்.

தேய்வ வணக்கம்.

யாராலே யிந்தப் பிரபஞ்ச முண்டுபெட்டதோ, யாராலே யிது நிலைத்திருக்கிறதோ, யாராலே முடிவில் நசிக்கத்தக்கதோ, யாராலே யிந்த ஜெகத்துக்குப் பிரதமத்தில் சங்கற்பமாத்திரமான இயற்கைப் பிரமாணம் விதிக்கப்பட்டதோ, யாராலே உலகந் தினேதினே பாலனஞ் செய்யப்படுகிறதோ, அந்த மகோன்னத பரமபதிக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறேன். எந்த மகாபுருஷன் ஆதிமத்தியாந்தரகிதராய், அநாதிநித்திய ஸ்வயம்புவாய், சமஸ்த மான சிருஷ்டிகளுக்கு முதுமூலகாரணராய், அப்பிரமேயவிபுவாய், வாசாமகோசர மனுதீதராய், நிர்ம்மல நிர்த்தொந்த நிர்விகார நிஷ் பக்ஷபாத நிரஞ்சன நிராமய சர்வ பரிபூரண சர்வ சக்தித்துவ சர்வோத்கிருஷ்ட சர்வாந்தரியாமியாய்த் தாம் அதரிசியாயிருந்தும் தம்மைப் பிரத்தியக்ஷராகத் தம்முடைய படைப்பினுலும் பராமரிப் பினுலும் நீதிநியாயத்தை நடாத்துவதினுலும் விசேஷ கிருபாநுக்கிரக மகத்துவத்தினுலும் யாண்டும் எவ்விடத்து முளராகத் தம்மை விளங் கக் காட்டி நிற்கின்றனரோ அந்த மகா புருஷனுக்கே நான் பிரா ணமஞ் சமர்ப்பிக்கிறேன். யாருக்கு அதியுன்னத பரமஞானத் தைத் திருமேனியாகவும் அதிபாரிசுத்த மகத்துவத்தைத் திவ்விய தேஜஸாகவும், சுவர்க்கலோக பரமாகாயத் துச்சியைச் சிரசாகவும், பூமிமுதலிய கீழுலகங்களை திருவடிப்பாதுகையாகவும், ஜோதிமண் டலத்தைத் திருமுக மண்டலமாகவும், பிரசண்டமாருதத்தைச் சுவாசமாகவும், பரமகாருணியத்தைத் திருநேத்திரங்களாகவும், பரி பூரண இரக்கத்தைத் திருவுள்ளமாகவும், அகண்டாகார வெளி

யைத் திருமாளிகையாகவும் உத்பிரேக்ஷிக்கத்தக்கதோ அந்த ஒப்பற வுயர்ந்த அற்புதமூர்த்தியாகிய மெய்க்கடவுளுக்கே இருதயாஞ்சலி செய்கிறேன். யார் திரிலோகவாசிகளுடைய ஸ்துதி ஸ்தோத்திர எல்லைகளுக்கு அதீதமானவர், யார் தம்முடைய பக்தஜனங்களின் வேண்டுகோளை அவர்கள் நினைவுக்கு முந்தியே யறிகிற சர்வக்ஞானர், யார் எப்போதும் அவர்கள் சமீபத்திருந்துகேட்டும் திருவுள்ளமுவந்தும் அநுக்கிரகிக்கத்தக்க கருணாநிதி, யார் ஏகத்துவமே திரித்துவமாகவும் திரித்துவமும் ஏகத்துவமாகவும் அமைந்துள்ள யதார்த்த நிலையைத் தமது மெய்ச்சுருதியைக்கொண்டு வெளிப்படுத்தியவர், அந்தத் திரியேக கடவுளாகிய ஜெகோவாவின் மகாபுனித மகத்துவ திருநாமத்தையே மனமொழி மெய்களால் ஸ்மரித்து ஸ்தோத்திரித்து நமஸ்கரிக்கிறேன்.

யார் ஆதியில் திருவாக்குருவாய்த் திகழ்ந்தவர், யார் இந்த மிருத்தி காண்டத்தைப் புதைத்துப் போர்த்திருந்த பாபாந்தகாரஞ் சிதைய ஒளியுருவாய் வெளிவந்தவர், யார் அவித்தைச் சிறையில் அடைபட்டு நித்திய மரண தண்டனைக்கு அருகாயிருந்த நராத்தும ஜீவகோடிகளை மீட்டு அவர்களுக்கு நித்திய ஜீவரக்ஷணிய மருளிக் காத்தற்பொருட்டு மூர்த்திகரிச்சு உலகத்தி லுதயமானவர், யார் ஜ்வாலித்தெரிந்துகொண்டிருந்த பரிசுத்தோத்கிருஷ்டமான பரமநீதிக்கும் நிகிருஷ்டமான பாப ஜெந்துக்களாகிய மனித ஜீவகோடிகளுக்கும் இடையில் மத்தியஸ்தராக ஏற்பட்டுப் பிணைநின்று நீதியிரக்க சமரசஞ் செய்து முடித்து நித்திய ஜீவரக்ஷணிய புண்ணியத்தைத் திரட்டி யெடுத்துத் தமது பக்த ஜனங்களுக்குப் பரிமாறி ஆனந்திப்பிக்கிறவர், அவரே திரியேகத்வ தெய்வத்துவத்தில் ஒருவராயிருந்தும், அன்புமயமான திருமேனியைத் தரித்துக்கொண்ட ஸ்ரீ கிறிஸ்துபகவானாகிய இரக்ஷணிய மூர்த்தி. அவருடைய உபய சரணாரவிந்தங்களையே அத்தியந்த பணிவாய் வணங்கி ஸ்தோத்திரஞ் செய்கிறேன்.

யாராலே நரஜீவ ஹிருதயத்தின் அக்ஞான ஸ்தமப்பிழம்பு சிதறுண்டுபோகச் சுக்ஞானதீபச் சுடரொளிலேசம் பொருத்தப்படுகிறதோ, யாராலே பகிர்ம்முகோன் முகமாயுள்ள கருவிகரணாதிகள் புனிதமாக்கப்படுகின்றனவோ, யாராலே ஜென்மத்தே தொடுத்து நின்ற பாபாத்துமாக்கள் யாவு மொருங்கே நசித்துப் புனிதான்ம தத்துவப் பிராப்தியாகிய புநர்ஜனன மடைந்து நரஜீவர் இரக்ஷணிய பெருமானுக்குத் தொண்டுபடுகிறார்களோ, யாராலே அத்தொண்டர்கள் ஜென்மசாபல்ய மடைகிறபரியந்தம் பரிசுத்த நிலையிற் காக்கப்படுகின்றனரோ அந்தத் திரியேக தெய்வத்துவத்தி லொருவரான பரிசுத்தாத்மனாத் திரிகரண சுத்தியோடு ஸ்துதி ஸ்தோத்திரஞ்செய்து நமஸ்கரித்து நிற்கிறேன்.

இவ்வாருக சாக்ஷாத் திரியேக பெருமானுகிய ஜெகோவாவின் திருவருட் பிரசாதங் கிடைக்கவேண்டுமென்று பூரண ஆவலோடு மன்ருடி "இரக்ஷணிய சமய நிர்ணயம்" என்ற பெயருள்ள வசன கிரந்தத்தை யெழுதத் துணிகிறேன். யாதொரு இடையூறுமின்றி இந்த முயற்சி நன்கு முடியவும் இதனை வாசிக்கிறவர்களின் இருதயஞ் சத்தியத்திற் பிரதிஷ்டையாகவும் பரிசுத்தத்திற் பிரவர்த்திக்கவும் தேவகிருபை முன்னிற்கக் கடவது.

தெய்வ வணக்கம் முற்றிற்று.

பீடிகை.

உலகத்திலே தேசங்கள்தோறும் அநேகமான சமயங்களுங் கொள்கைகளும் அநுசரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒவ்வொன்றுந்தானே மெய்ச்சமயமென்றும், கடவுளைப் பற்றியும், பாவ புண்ணியம், மோக்ஷ நரகம், தர்மா தர்மம், விதி நிஷேதம், நன்மை தீமை, இம்மை மறுமை யென்பவற்றைப் பற்றியும் தான் வெளியிடுவதே யுண்மையென்றும், தானே யீடேற்றத்துக்கு வழி நடத்துகிற சரியான மார்க்கமென்றுங் கூறுகின்றது. ஆனபோதிலும் சகலலோக காரண கர்த்தாவாய் சர்வாந்தரியாமியாய் நித்தியராயிருக்கிற மெய்க்கடவுள் ஒருவரே யுளர் என்ற மாருத சத்தியம் நிலைப்படுகிற பக்ஷத்தில், மோக்ஷத்துக்கு வழிநடத்துகிற சத்திய மார்க்கமும் ஒன்ருகவே யிருத்தல்வேண்டுமென்ற நியாயமேற்படுகிறது. அதெப்படி? ஒரு ஊருக்கு ஒரு வழியா போகிறது? கடவுள் ஒருவராயிருப்பினும் அவர் மோக்ஷஞ் சேர்வதற்கு என்று ஏற்படுத்திய மார்க்கங்கள் ஏன் பலவாயிருத்தல் கூடாது? அதனுல் தோஷமென்ன? என்று சிலர் கூறுவர். அது தவறென்பதற்கு நியாயங் காட்டுதும்.

1. உலகத்திலுள்ள சராசரப் பொருள்கள் பலுகிப் பெருகுவதற்குப் பரிபூரண ஞானமுள்ள கடவுள் ஏற்படுத்தியிருக்கிற இயற்கைப் பிரமாணம் தேசங்கள்தோறும் வெவ்வேருயிராமல் எல்லாம் ஒன்ருகவே யிருக்கிறது. அவ்வாறே சமஸ்த ஜனங்களுக்கும் யாதொரு விகற்பின்றி மரணமும் ஆண்டாண்டு சம்பவிக்கிறது. யாராவது வேறுவகையாய் ஜன்மிக்கிருர்களா? யாராவது மரணத்துக்கு நீங்கியிருக்கிருர்களா? எக்காலத்தும் எவ்விடத்தும் ஜெனனமரண இயற்கைமுறை யாதொரு வேறுபாடுமின்றி யொரே ரீதியாய் நடந்தேறிவரப் பார்க்கிருேமே. இந்த இயற்கை முறை கடவுளின் உன்னத ஞானத்தையும் உன்னத சக்தியையும் மாருத

அவருடைய தீர்க்க ஆலோசனையையும் விளக்குகிறதல்லவா? இத்தகையரான கடவுள் ஒன்றுக்கொன்று விரோதமான பல சமயங்களை உலகத்தில் நிலைப்படுத்துவது அவருடைய லக்ஷணத்துக்கு நேர் விரோதமாம்.

2. சமஸ்தமான பிராணிகளும் தாவரசங்கமங்களுமெல்லாம் தத்தமக்குப் பிராணதாரகமான புசிப்பை யவாவிப் பசியுழக்கின்றன, வாட்டமுறுகின்றன. தத்தமக்கு விதிக்கப்பட்ட ஆகாராதிகளைத் தேடி யுட்கொண்டு அவற்றின் சாரம் பிராணதாரக ரூபமான ரக்தமுதலிய தாதுக்களாகத் திரிந்து ஆகிருதி முற்றும் வியாபித்து நிற்க ஆசகலமும் உஜ்ஜீவிக்கின்றன. ஆசகலமும் இளைப்பாறுகையை விரும்பி யொருபடித்தாய்த் துயின்றெழுகின்றன. பசி, ஊண், உறக்கம் இவைகள் உலக முழுக்கவும் எல்லாருக்கும் எல்லாவற்றிற்கும் யாண்டும் நிருவிகற்பா யொத்தியலுகின்றன. கிஞ்சித்தும் வித்தியாசமில்லாமல் பரம காருணியர் ஒரு நெறிச்தா யமைத்திருக்கிறார்.

3. ஆகாரம் தேசதேசங்களுக்கு விகற்பித்திருத்தல்போலச் சமயங்களும் ஏன் பலவாயிருத்தல் கூடாது எனின், ஆகாரம் பலவகைப் பட்டிருப்பினும் எல்லாம் பிராணரக்ஷைக்குத் தாரகமான ரக்தமுதலியனவாக மாறிநின்று தேகத்தை வளர்த்து உயிர்வாழ்க்கையைத் தருதல்போல மார்க்கங்களெல்லாம் ஆன்மரக்ஷையைக் கொடுக்கிறதாயிருந்தால் ஒக்கும். அப்படி யெல்லா மார்க்கங்களும் ஆன்மரக்ஷையைக் கொடுக்கத்தக்கதாயின் அப்பொழுது எல்லாம் ஒரே மார்க்கமேயன்றிப் பல மார்க்கமென்று பேதப்பட்டு வழங்காது. அப்படிக்கின்றி யொன்றுக்கொன்று முற்றும் விரோதமாயும் ஒரு மார்க்கத்துக்குள்ளும் எத்தனையோ பரஸ்பர விரோதமுடையவைகளாயும் கடவுள் மொழிக்கு முழுவது மாறாயுமிருத்தலால் அம்மார்க்கங்கள் ஆத்துமாவைக் கெடுக்கும் விஷமென்று நினைக்கவேண்டியதாயிருக்கிறதேயன்றி யாத்துமாவை வாழ்விக்கத்தக்கவையென்று நினைக்கக் கிஞ்சித்தும் ஹேதுவில்லை. இத்யாதி விபரங்களெல்லாம் பின்னே தெளிவாய்ப் புலப்படும்.

4. மானிட சிருஷ்டிகள் எந்தத் தேசத்தவரென்றாலும் எந்தப் பாஷைக்காரரென்றாலும் எந்தச் சமயத்தவரென்றாலும் எல்லாரும் ஒருப்போலத் தேக அவயவாதிகளில் வித்தியாசமின்றி உத்பத்திக்காலந் தொடங்கித் தாத்காலபரியந்தம் ஒரேமுறையாய் அமைக்கப்பட்டு வருகிறார்கள். இதர சிருஷ்டிகளும் இவ்வாறே ஒவ்வொரு வகுப்பும் ஒரே பிரமாண வரம்பில் உருவேற்பட்டு வருகின்றன.

5. ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள சிருஷ்டிகள் சப்தத்திலும் ரூபத்திலும் பேதப்பட்டிருக்கின்றனவே யென்றால் சிருஷ்டிகளை இவ்விருவகையாய்ப் பேதப்படுத்திக் காட்டாவிடில் சர்வமுங் குழப்பமாயுந் தாறுமாறாயும் முறைகேடாயும் நிகழுமென்பதைச் சர்வ

ஞானமுள்ள கடவுள் தம்முடைய திருவுளத்தில் உத்தேசித்து வித்தியாசப்படுத்தும் இந்த ஒரு முறையைப் பிரதமத்திலேயே யேற்படுத்தி வைத்திருக்கிறூர். அதே ரீதியாகக் கிரமேண நடந்தேறியும் வருகிறது. மற்றப்படி கௌமார சிருஷ்டியென்று ஏற்பட்ட விநோதார்த்தமான ஒரு கதைக்குத் திருஷ்டாந்தமாகவல்லவோ நிகழும்.

6. ஒரு ஊருக்குப் பல வழிகளிருப்பினும் எல்லாம் ராஜபாட்டையல்ல; ராஜபாட்டை யொன்றுதான். மற்றவைகளிற் சில திருடர் வழிப்பறி செய்யத்தக்கவை. சில துஷ்டமிருக சில்லறையுள்ளவை. சில ஜலபானத்துக்கு மிடமில்லாமற் பிராண நஷ்டஞ் சம்பவிக்கத்தக்கவை. சில குறிப்பிட்ட ஊரை நோக்கிச் செல்லாமல் திசைதிரிந்து மோசநாசப்படுகிறீ கொண்டுபோய்க் கவிழ்க்கத் தக்கவை. பிரயாணிகளுக்கு இத்யாதி சங்கடங்களை நிவிர்த்திக்கும் பொருட்டே உலகத்தில் ராஜபாட்டை நிருமிக்கப்பட்டிருக்கின்றது. பிரிவு பாதைகளிற் கைகாட்டிகள் ஸ்தாபகமாயிருக்கின்றன. அரசனுழையர் இடைக்கிடை காத்திருந்து கொள்ளைக்காரர் கைக்கு யாத்திரிகரைத் தப்புவிக்கிறூர்கள். பிரயாணிகள் இராத்தங்கும்பொருட்டும் சிரம பரிகாரத்தின்பொருட்டும் சத்திரங்கள், சாவடிகள், மண்டபங்கள், ஜலதாரகங்கள் இன்னும் வேண்டிய உபகாரணங்களெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அரசனுணையை மீறுமல் பிரயாணிகள் சர்வஜாக்கிரதையாய்ச் சென்றூல் நிர்ப்பயமாய், நிர்விக்கினமாய் உத்தேசித்த ஊரைச் சென்று கூடலாம். அப்படியே சர்வலோக ஏகசக்கரேஸ்வரனுயிருக்கிற கடவுளும் தம்முடைய சிருஷ்டிகளாகிய மன்னுயிர்த்தொகுதிகள் முக்தி சேரத்தக்கதாக உலகத்தில் ஏற்படுத்தி வைத்திருக்கிற ஜீவரக்ஷணிய சமயம் ஒன்றையே உலகத்திலுள்ள சகலஜன சமூஹங்களுக்கும் பொதுவா யேற்படுத்தி வைத்திருக்கிறூர். அதுவே தேவ ரகசியத்தை வெளிப்படுத்திய திவ்விய ஞானமுள்ளது. பரிசுத்தமுள்ளது. சற்போதனையுள்ளது. தவறுத சத்தியமுந் தெளிவுமுள்ளது. பண்டித பாமரருக்கும் பயன்படத்தக்கது. மன்னுயிர்க் கணங்களெல்லாங் கைக்கொள்ள வேண்டியதும் கைக்கொள்ளத் தக்கதுமான விதிநிஷேதங்களுள்ளது. மெய்யுணர்வு மூட்டத்தக்கது. ஆத்மவிசாரந் தரத்தக்கது. பாவநிவாரணமும் ஆத்துமாரோக்கியமும் அருளத்தக்கது. உன்னத முக்தியிலுய்க்கத்தக்கது. பூமண்டல முழுக்கவும் பரவிநின்றது. இதனுடைய பிரபோதச்சுடர் வீசாத இடமில்லை, தேசமில்லை, நாடில்லை, நகரில்லை, ஊரில்லை, வீடில்லை. எங்குஞ் செலாமணியாகி வருகிறது. மற்றெல்லா மார்க்கங்களும் தெய்வயத்தனமாக அமைந்தனவல்லவென்பதைப் பின்னுக்கு விவரித்துக் காட்டுவாம்.

மேலேகாட்டிய நியாயங்களினுலெல்லாம் உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களுங் கடவுளா லேற்படுத்தப்பட்டவைக ளல்லவென்

றும், அப்படி யேற்படுத்துவது கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்து ஆண்டு நடத்திவருகிற முறைக்கும் அவருடைய திவ்விய லக்ஷணத்துக்கும் பொருத்தமான தல்லவென்றும், ஆத்துமரக்ஷிப்பைத் தரத்தக்க இரக்ஷணிய சமயமெதுவோ அதுவே கடவுளாலருளப்பட்ட சமயமென்றும் மெய்ப்பிக்கப்பட்டது. நடுநிலை விலகாது கருதுவோரெவரு மிவற்றை மறுக்கார். ஆதலால், அந்த ஒன்றான இரக்ஷணிய சமய மெதுவென்று இனி யாராய்ச்சி செய்யவேண்டும். அப்படியாகிற பக்ஷத்தில் உலகத்தில் ஆண்டாண்டு ஏற்பட்டு வழங்குகிற சமயங்களையல்ல; இந்துதேசத்தில் ஏற்பாடாய் அநுஷ்டானத்திலிருக்கிற சில முக்கியமான சமயங்களைச் சுருக்கமாய் ஆதாரசகிதம் வரிசைப்படுத்திவைத்துப் பரபக்ஷ நிராகரணமும் சுபக்ஷஸ்தாபனமுமாக நியாயதோரணையோடு முறையே விளக்கி இரக்ஷணிய சமய மிதுவென்றும் அந்தச் சமயத்தின் கோட்பாடும் ஆத்துமரக்ஷை கைவருதற்கு உபாசனைமுறையு மிவையென்றும் நிர்ணயப்படுத்தித் தெள்ளிதிற் காட்டுதும்.

பீடிகை முற்றிற்று.

வஸ்து நிர்ணயப் பிரகரணம்.

1–ம் அத்தியாயம்.

விவாதாம்ஸம்: பரபக்ஷமாகிய புறச்சமயக் கோட்பாடுகள்.

உலகாயித மதம்.

1. உலகாயித மதஸ்தர் காட்சியொன்றே பிரமாணமென்றும், பிருதிவி அப்பு தேயு வாயுவென்கிற நான்கு பூதங்களே மெய்ப்பொருளென்றும், இந்நான்கு பூதங்களின் கூட்டங்களால் அறிவுண்டாகுமென்றும், சரீரம் வளர அறிவு வளருமென்றும், சரீரந் தேய அறிவு தேயுமென்றும், இவ்வறிவைவிட ஆத்துமா வேறில்லையென்றும், இந்நான்கு பூதங்களும் ஜடமாதலால் அவை தாமேகூடிக் காரியப்படமாட்டாவே அவற்றைக் காரியப்படுத்துவதற்குச் சர்வக்ஞன் ஒருவர் வேண்டுமென்றால் அவ்வீஸ்வரனைப் படைத்து அவனுக்கு ஞானமுதலியவற்றைத் தருதற்கு வேறொரு ஈஸ்வரன் வேண்டுமென்று அநவஸ்தாதோஷ முண்டாகையால் ஈஸ்வரன் வேண்டியதில்லையென்று நிறுத்துவது நன்மையென்றும், இம்மையில் சுகமே சுவர்க்கமென்றும், துக்கமே நரகமென்றும், சரீர மிழந்தபின் மேலைக்காவதோர் வினையிருப்பதில்லையென்றுங் கூறுவர். (சமயத்தொகுதி.)

உலகாயிதமத ஆதாரம்.

ஈண்டளவை காட்சிமன மாதியிரு மூன்றாய்
வேண்டுமநு மானமுத லானபல வேண்டா
பூண்டபொருள் பூதமவை புகழ்கடின சீதம்
தீண்டரிய வெம்மைசல னத்தினொடு சேர்வே. 1

சாற்றுபெய ரானவை தலம்புனல் கனற்பின்
காற்றுமென லாமிவை கலந்தகுண போதில்
நாற்றமி ரதமுருவ நற்பரிச மாகும்
போற்றுமிவை நித்தவியல் பாமிவை புணர்ப்பே. 2

ஒத்துறு புணர்ச்சியினு ருக்கள்பல வாகும்
வைத்துறு கடாதிபல மண்ணில்வரு யாபோல்
புத்திகுண நற்பொறி புலன்களிவை யெல்லாம்
இத்தில்வரு நீரினி லெழுங்குமிழி யொத்தே. 3

பூதமிதி லொன்றுபிரி யட்புல னிறக்கும்
நீதியினி னிற்பன நடப்பனவு முற்போல்
ஓதும்வகை யாகியுறு காரியமு லந்தால்
ஆதியவை யாமிதனை யறிவதறி வாமே. 4

(சித்தியார் பரபக்ஷம்.)

நிரீச்சுர சாங்கியம்.

2. கபில முநிவராலே செய்யப்பட்ட சாங்கியநூலில் தேகாதி பிரபஞ்சத்துக்குக் காரணமாய், அருவாய், நித்தியமாய், வியாபகமாய், ஜடமாயிருக்கும் மாயை யுண்டென்றும், வியாபகமாய், அருவாய், நாநாபேதமாய், அறிவுமாத்திரமாயிருக்கும் ஆத்துமா வுண்டென்றும், மாயையையும் ஆத்துமாவையும் பகுத்தறியும் விவேக ஞானத்தினாலே அஞ்ஞானம் நீங்கி, ஆத்துமா முத்தியடையுமென்றும், ஆத்துமாக்களுக்கு வேருய் ஈஸ்வரனொருவ ரில்லையென்றும் சொல்லப்படும். இந்த மதஸ்தர்கள் நிரீச்சுரவாதிகள். (சமயத்தொகுதி.)

நிரீச்சுர சாங்கிய ஆதாரம்.

மூலம் புரியட் டகம்விகிர்தி யாகி மூன்ருய்ப் பிரகிருதி
தூல சூக்கு மம்பரமாய்ச் சுத்த புருடன் சந்நிதியில்
பாலன் சேட்டை புரிந்துலகம் யோனி பலவாய்ப் பரந்தொடுங்கும்
சால வென்று நிரீச்சுவர சாங்கி யன்ருன் சாற்றிடுமே. 1

(சித்தியார் பரபக்ஷம்.)

இலங்கிய புருடன் மற்று மேய்ந்தநற் பகுதி யென்னத்
துலங்கிய விரண்டு முண்மை சொல்லிய பகுதி யின்பால்
மலங்கெழு மானுங் காரம் வகுத்தன விருத்தி யெல்லாம்
சலங்கெழு கட்டும் வீடுந் தனக்குத்தான் புருடன் செய்யும். 2

பகுதியில் விகுதி யாகிப் பரந்தெழு மின்ப துன்பம்
தகுதிநற் சித்தாந் தன்மே லேற்றுதல் பெத்த மாகும்
விகுதிநற் பகுதி யெல்லாம் எனக்கில்லை யென்று பார்க்க
அகலுமற் றதுவே வீடா மறுமைமற் றிறைவே றின்றே. 3

சித்தமான பகுதிகீழ்ச் சிறந்தமூவைந் தொருபதோ
டொத்ததான விருத்திதன்னில் விகுதியொண் பகுதியில்
வைத்தலாற் பகுதியவ் விருத்தியிற் பகைத்தலால்
நித்தமான முத்தியென்னும் நீடுசாங்கிய வாதமே. 4

(தத்துவ நிஜாநுபோக சாரம்.)

பௌத்த மதம்.

3. பௌத்த மதம் பஞ்சபூதத்தினுலாகிய சரீரத்தில் புத்திதத்துவமே யுள்ளதென்றும், புத்திதத்துவ முதலிய எல்லாப் பொருள்களும் க்ஷணபங்கமென்றும், ஆத்துமாவும் ஈஸ்வரனு மில்லையென்றும் சொல்லுவார்கள். பௌத்தநூலிற் சொல்லப்படு முத்தியாவது தண்ணீரோட்டம்போல நித்தியமாய் அநுபவிக்கப்படும் இன்ப துன்பத் தொடர்ச்சியின்றிச் சுத்தமான ஞானமென்பதே. க்ஷணபங்கமென்பது நீரோட்டம். தீபஜ்வாலைபோலும், வித்துக்கெட்டு வித்துவருவதுபோலும், மருந்தெண்ணெயில் மருந்து மாய்ந்து எண்ணெயிலூறியெண்ணெய் பலிப்பதுபோலும், எருத்தழை மாய்ந்து பின் பயிருக்

குப் பலிப்பதுபோலும், அறிவுகெட்டு அறிவாகிற போதம் பிறக்கும். இந்தப் போதமும் கணத்திலே பிறந்து கெடும் என்பது. இப்பௌத்தத்தில் சௌந்திராந்திகம், வைபாஷிகம், மாகாயாமிகம், மாத்திமிகம் என நால்வகைப் பேதங்களுண்டு. (சமயத்தொகுதியிலும், சித்தியாரிலும் காண்க.)

பௌத்தமத ஆதாரம்.

கொலைமுத றவிர்ந்து கூறுங் குற்றமி லருளி னாலே
நிலையிலா முழுது ணர்ந்து நின்றவர் துயர்கட் கெல்லாம்
மலைவிலாத் துக்கி யான நிலையினை மதித்துச் சொன்ன
தலைவனே சுத்த நாதன் சாற்றிய பொருளுங் கேளாய். 1

பாவமே யுயிர்கள் பண்ணிப் பாவத்தின் பெருக்கத் தாலே
கோவமாய்க் கோவத் தீயிற் கொண்டெழுந் தழிக்கு மெல்லாம்
ஆவதாய் உயிர்கள் சென்றே யருவமாம் பிரம தேகம்
தாவிச்சென் றிருக்கும் பாவஞ் சமிக்குமவ் வளவு மன்றே. 2

புண்ணியம் பெருத்துப் பின்பு பொழிந்தது மழைதா னென்னில்
திண்ணிய வெள்ளங் காற்றாற் சென்றுபா லேடே போலே
மண்மிசைப் பரந்த மண்ணை வந்துயிர் நுகரும் போது
நண்ணியே யுருவ மாகும் நல்வினை படைத்ததே கேள். 3

போதமாங் கந்த மைந்திற் போதமுங் கந்த மாகும்
பேதைமை யாதி சார்வாற் பிறந்துபின் பகித்த மாகும்
ஆதிநன் கன்ம நோன்புண் டாகாச மீச னாத்மா
ஜாதியே யில்லை யென்று சாற்றுநற் சுத்த நன்னூல். 4

(தத்துவ நிஜாநுபோக சாரம். 261-ம் பக்கம்.)

ஆருகத மதம் அல்லது க்ஷமண மதம்.

4. ஆருகதர்கள் அருகனென்றொரு கடவுளுண்டென்றும், ஆத்துமாக்கள் அநாதியே குற்றமுடையவையென்றும், அவை தூலதேகம் வளர வளருமென்றும், அது தேயத் தேயுமென்றும், ஆத்துமாக்கள் அருகநூலிற் சொல்லப்படும் சுடுபாறையிற் கிடத்தல் முதலிய தவங்களாலும், உயிர்க்கொலை முதலிய பாவங்களை நீக்குதலாலும், அருகநூற்பொருள் ஞானத்தினாலும் அருகனைப்போலக் குற்றந்தீர்ந்தவையாமென்றும், அதுவே முத்தியென்றும், அருகனு மிவ்வாறே முத்தியடைந்தானென்றும் கூறுவார்கள். இந்த அருகமதஸ்தரில் விசேஷமாய்ச் சந்நியாசிகள் தலைமயிரை வளர்த்தாலும் சிரைத்தாலும் பேன்முதலியவை நசிக்குமென்று அம்மயிர் சிறிதாயிருக்கும்போதே சில கருவிகளைக்கொண்டு பறித்தலும், சீலைப்பேன் பிடியாமலிருக்கும்படி கடுக்காய்ச் சாயந்தோய்த்த வஸ்திரத்தைத் தரித்தலும், எறும்பு முதலியன சாவாதிருக்கும்படி வழிநடக்கையில் மயிலிறகின் கற்றைகளால் விளக்கிக்கொண்டு நடத்தலும், விளக்குவைத்துக்

கொண்டு புசித்தால் அவ்விளக்கில் விட்டில் முதலிய பூச்சிகள் விழுந்து இறக்குமென்று கருதிச் சூரியன் அஸ்தமனமாதற்கு முன்பே புசித்தலும், தண்ணீரிலிருக்கும் ஜெந்துக்க ளிறவாமலிருக்கும்படி பலகால் வடித்துக் குடித்தலுமாகிய இவ்வாறான அஹிம்ஸா தர்மங்களையே அநுஷ்டித்துக்கொண்டு வருவார்கள். (சமயத்தொகுதி.)

ஆருகதமத ஆதாரம்.

ஈறிலாதன வனந்தஞானமுத லெண்குணங்களெனு மொண்குணம்
மாறிலாதமதி மேவுசீதமென மன்னிவானவர் வணங்கவே
வேறுலாவுகுணம் ஞானமாவரணி யாதியெட்டினையும் விட்டசீர்
ஏறுபான்மையுடை நீடுவாழருக னெங்களுக்கிறைவ னென்றனன். 1

கருவிகண்படு துடைக்கொழிந்துவரு காலமூன்றினிகழ் காரியம்
பெருகநின்றொரு கணத்திலேயுணர் பெருந்தவக்கடவுள் பீடிலன்
மருவிநின்றுவழி பட்டவர்க்குமலை வுற்றவர்க்குமன மொத்திடும்
குருசிலெங்களிறை யென்றுபின்னுநிகழ் குற்றமின்மையது கூறுவான். 2

பசித்தல்தாகபய செற்றமோடுவகை மோகசிந்தனை பழித்தநோய்
நசித்தல் வேர்வினொடு கேதமோடுமதம் வேண்டவீண்டதி சயித்தலும்
புசிப்புவந்திடு பிறப்புறக்கமிவை விட்டொரட்டகுண பூதனும்
வசித்தவனுலகின் மேலிருந்தொருசொ விகலனுக்கருளு மென்றனன். 3

அந்தவாய்மொழியி னுலவன்சரண மாதியோகமுத லானநூல்
இந்தமாநில மயங்கிடாதவகை யிங்கியம்பின னிதன்பொருள்
வந்தகாலமுயிர் கன்மதன்மியற மற்றும்விண்மருவு புற்கலம்
பந்தம்வீடினோ டநாதியாயிவை படைப்பதின்றியுள பத்துமே. 4
(சித்தியார்.)

மடவாளையு மில்லான்மக வில்லான்மனை யில்லான்
உடையானது மில்லானுற வில்லானுட வில்லான்
திடமாகிய விரதச்செய லுடையான்செறி வினையான்
நடமாடலு மில்லானமக் கிறையாகிய நாதன். 5

பகையானவும் நினையான்படை பிடியான்கொலை புரியான்
புகையாதெழு தழலாகிய பொறிவாயில்க ளைந்தும்
மிகையாவகை யவைமாய்தரு விரதாதிக ளுடையான்
நகையாகவு மிகையான்செய வசையாகவும் நன்று. 6

இரவினி லுணவு மூனு மெண்ணெயு மேழை மார்பால்
விரவலுங் குளியும் பூவும் வெற்றிலை தினலு மின்றி
மருவலி லெங்க ணீதி வழிபட மறியொன் றுண்டேற்
பரகதி கண்டு பிண்டிப் பரமன துலகஞ் சார்வார். 7

கொன்றல்வெட்டல் குறைத்தல்கூப்பிடல் கோழிகூகைகள் காகமும்
தின்றல்சோறென றீயசொற்கள் புலாலிறைச்சிகள் செப்புதல்
என்றசொற்க ளனந்தமுஞ்செவி யெய்திடிற் சரிதைத்திறம்
அன்றுமுட்டென வோதுமுக்குடை யாதிநாதர் தம்மாகமம். 8
(தத்துவ—ம்.)

மாயாவாதி மதம்.

5. மாயாவாதிகள் ஞானமே சொரூபமாய், பிரபஞ்சத்துக்குக் காரணமாய், எல்லையில்லாத ஆனந்தமாய், உருவமின்றி யருவமாய், எங்கு நிறைந்து நிற்பதுமாய், கேடின்றி விளங்கத்தக்கதுமாய், ஓரடையாளமும் ஓர் குணமுங் கூறுதற்கு ஒன்றுமில்லையாய், இப்படி நிற்கின்ற பொருள் பிரமமென்றும், ஜெகத்தெல்லாம் பிராந்தியல்லாது ஒன்றுமில்லை, மாயைதானே யெல்லாமா யிருக்குமென்றும், காந்தத்தின் முன்னே இரும்பு திரிந்தாற்போல சைதந்ய சந்நிதிக்கே புத்தி கிடைக்குமென்றும், பழுதையைப் பாம்பென்றாற்போலும், நீரின் சலனத்தைச் சந்திர சலனமென்றாற்போலும், அநிர்வசனமாகிய மாயையிலே உலகந் தோற்றுகிறதென்றும், நானே பிரமம் உலகம் பேய்த்தேரென்றும், மாயையின்றேல் உலக முதியாதென்றும், தநுகரண புவன போகங்களிற் கட்டுண்ட ஜீவர்கள் மலபந்தப்பட்டு இருவகைப் பற்றுடையராய்க் கர்ம்ம வசத்தராய்ப் பிறவியிற் சுழன்று வருந்துகின்றனரென்றும், சந்தி காயத்திரி யநுஷ்டான முதலான சத்கர்மங்களை அநுஷ்டித்துவரில் ஞானமுண்டாம், ஞானம் பிரமத்தை நானென்றறிவிக்கும் மாயாகாரியமாகிய ஜெகம்மித்தையென்று விளங்கும், அதுவே நீ நீயே அதுவென்று தெரிவிப்பதே தத்துவ மசிப்பொருள், இதுவே அத்துவித ஞானம், இவ்வாறு ஒருவன் தானே தன்னைப் பிரமமென்றறிவது மோக்ஷமென்றுங், கூறுவர். (தத்துவ நிஜாநுபோகசாரம்.)

மாயாவாதிமத ஆதாரம்.

சாற்றிய பிரம மென்னும் அவிகாரி சந்நி திக்கே
எற்றிய மாயை தானிவ் வுலகுயி ரனைத்து மாகித்
தோற்றரு மனந்த பேத மாய்ச்சுழன் றழியுந் தானே
ஆற்றரும் பெத்த முத்தி பேறிழ வவையு மித்தை. 1

ஆதலா லிகழு மித்தை பரமது தானு மித்தை
ஏதம தறவு மற்றை யகமெனு மதுவு மித்தை
ஓதிய மயல்போய்ப் போத முதித்ததென் பதுவு மித்தை
சாதமே பிரம முத்தன் றானவி காரி யென்றும். 2

சாற்றிப வதுநீ யென்று தான்மறைக் குரவர் கூற
ஏற்றிய வதுவோ நானென் றிசைத்தன்மாத் திரமே ஞானம்
போற்றிய வதுவு மோரிற் பொய்யதா மாயை யின்றே
ஆற்றவங் கறிதன் மாயா வாதமத் துவித மய்யா. 3

சுத்தவத் விதம தங்கள் றுகளறத் துணித லாகா
மெய்த்தகு பிரமந் தான்கண் டநுபவித் திடல்வீ டென்பர்
அத்தகு பிரமங் காணில் அழிவுறு மறியா ரேது
மித்தையென் றிச்சை செய்தே விளையாடித் திரிவ னாயோ. 4

(தத்துவ—ம். 96–ம் பக்கம்.)

சைவ சமயம்.

6. 1–வது. கடவுள்.—சைவசமயத்துக்குக் கடவுள் சிவன். அந்த ஈஸ்வரனுக்கு எக்காலத்திலும் எவ்விடத்திலுங் காரியமுண்டாக வேண்டியிருப்பதால் நித்தியத்துவமும், வியாபகத்துவமும், சர்வக்ஞத்துவமும், சர்வ ஸ்வதந்தரத்துவமும், சர்வேசுரத்துவமுமுண்டு. அந்த ஈஸ்வரன் சிருஷ்டியாதி தொழில் செய்வதைப்பற்றி, பிரமா, விஷ்ணு, ருத்திரனென மூன்று பிரதான நாமங்களாற் சொல்லப்படுகிறான். ஆதலால் கர்த்தா ஒருவரேயன்றிப் பலரல்லர். (சமயத்தொகுதி.)

2–வது. வேதம்.—வைதீகமுறையைக் கூறுகின்ற முதனூல்கள் வேதமாம். அவைகள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு வகைப்படும். ஒவ்வொன்றும் கருமகாண்டம், பக்திகாண்டம், ஞானகாண்டம் என மூன்று வகைப்படும். இவைகளிற் கருமகாண்டமாவது, ஜோதிஷ்டோம முதலிய புண்ணிய கருமங்களைக் கூறுவதாம். ஜோதிஷ்டோமமென்பது சுவர்க்கத்தை விரும்புவோராலே செய்யப்படும் ஒரு யாகம். பக்திகாண்டமாவது, ஈஸ்வரனிடத்திலே செய்யும் பக்தியைக் குறித்துக் கூறுவதாம். ஞானகாண்டமாவது, சரீர முதலியவைகளின் நிலையாமையைக் கண்டு யான் எனது என்கிற இருவகைப் பற்று மற்று முக்தியடைவதற்கு வழியாகிய உண்மை ஞானத்தைக் கூறுவதாம். இந்த ஞானத்தை வேதங்களின் அந்தத்திலுள்ள உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. (சமயத்தொகுதி.)

3–வது. சைவாகமங்கள். — ஆகமங்கள்: காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், திப்தம், சூக்குமம், சகத்திரம், அம்சுமான், சுப்பிரபேதம், விஜையம், நிசுவாசம், ஸ்வாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தான சர்வோத்தமம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம் என இருபத்தெட்டாம். ஒவ்வொன்றுக்குக் கோடி கிரந்தமாக இருபத்தெட்டுக்கோடி கிரந்தங்களுள்ளனவாம். இவைகளுக்குச் சைவ சித்தாந்தமென்றும் பெயர். இவைகள் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் எனத் தனி தனி நான்கு பாதங்களை யுடையனவாகவுமிருக்கும். சரியாபாதத்தில், சிவாலயத்தில் திருவிளக்கிடுதல் முதலியன கூறப்படும். கிரியாபாதத்தில், சந்தியாவந்தனம், சிவபூஜை, ஜெபம், ஹோமம், தீக்ஷை முதலியவை கூறப்படும். யோகபாதத்தில், மனம் அடக்கும்பொருட்டு வாயுவை நிறுத்தல் முதலியவை கூறப்படும். ஞானபாதத்தில், கர்த்தா, ஆத்மா, பாசம் என மூன்றும் அநாதி நித்தியமா யிருப்பவையென்று கூறப்படும். (சமயத்தொகுதி.)

4–வது. பதி, பசு, பாசம்.—பதியாகிய கர்த்தா சித்தும் ஜடமுமான எல்லாப் பிரபஞ்சத்திற்கு மேலானவனாகியும், நின்மலனாகி

யும், ஏகனுகியும், நித்தியனுகியும், அளவில்லாத அறிவும் அளவில் லாத வல்லமையுமுடையவனுகியும், ஆண்டவனுகியும், அவிகாரியா கியுமிருப்பவன். பசுவாகிய ஆத்துமாக்கள், அளவுபட்ட ஆயுளும் அளவுபட்ட போகமுமுடையவையாயும், நித்தியமாய் வியாபகமா யிருப்பவையாயும், சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையவையாயும், நல் வினை தீவினைகளைச் செய்து அவ்வினைப்பயன்களை யனுபவிப்பவை யாயும், தமக்கு ஒரு கர்த்தாவையுடையவையாயு மிருப்பவை. பாச மாவது ஆத்துமாக்களைப் பற்றிநிற்பவையென்றும், ஆத்துமாக்கள் பலகோடி ஜென்மங்களிலே பரமசிவனை நிஷ்காமியமாகப் பூஜித்து வந்த தவப்பயனுலே இருவினை யொப்புவந்து சற்குரு கடாக்ஷத்தி னுலே சிவஞானம் பெற்று முக்தியடையுமென்றுங் கூறப்படுபவை. (சமயத்தொகுதி.)

5—வது. வேதாந்தம் அல்லது சிவாத்துவிதம்.— உபநிஷத்துக் களின் அர்த்தங்களை வியாச ரிஷி பிரமசூத்திரமென்று பெயர்கொடுத்து நான்கு அத்தியாயமாக ஒரு நூல் செய்திருக்கின்றுர். அதற்கு வேதாந்த சாஸ்திரமென்று பெயர். இதற்குச் சங்கராசாரியார் பிர மத்திற்கும் ஆத்துமாவிற்கும் ஐக்கியமென்று அத்துவிதத்தைச் சாதித்து சங்கர பாஷியமென்று ஒரு பாஷியஞ் செய்திருக்கிறுர். இதை முதனூலாகக்கொண்டு தமிழில் அநேகமாக வேதாந்த சாஸ் திரங்கள் உற்பத்தியாயிருக்கின்றன. இவைகளே அகம் பிரம மென்ற கொள்கைக்கு ஆதாரமும், தத்வமசி யென்ற வேதாந்த மூலவாக் கியத்துக்கு அர்த்தமுமாம். (சமயத்தொகுதி.)

சைவசமய ஆதாரம்.

பலகலையாகமவேதம் யாவையினுங்கருத்துப் பதிபசுபாசந்தெரிதல் பதிபரமேயதுதான், நிலவுமருவுருவின்றிக் குணங்குறிகளின்றி நிர்க்குண மாயேகமாய் நித்தமாகி, அலகிலுயிர்க்குணர்வாகி யசலமாகி யகண்டிதமா யானந்தவுருவாயன்றிச், செலவரிதாய்ச் சேர்கதியாய்ச் சிறிதாகிப் பெரி தாய்த் திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்துளோரே. 1

இப்படி யிருப்ப தொன்றென் றியம்புவ தொன்ற தின்றி
ஒப்புட னுணர்வு சூழ்ந்த வுணர்விறந் துணர்வா யென்றும்
தப்பில்பே ரின்ப மாகிச் சந்ததம் விளங்கி யெங்கும்
அப்படி யிருப்ப தொன்றங் கதற்குமாஞ் சிவம தன்றே. 2

எல்லாந்தன் னுள்ளத் தாகி யெல்லாத்துக் குள்ளு மாகி
சொல்லாத பொருளு மாகித் தொல்லையா யெல்லை யின்றி
அல்லாத வடிவொன் றின்றி யானந்த வடிவே யாகிக்
கல்லாதோர் காட்சி யாகிக் கலந்துதா னிருந்த தன்றே. 3

நானுவிதமாய் முதனடுவீ றுகிஞான நேயத்தோ
டானுதயர்தத் துவமாகி யவைதானல்ல லறிவாகி
ஊனுயுயிருள் ளுயிராகி யுயர்சத்திய ஞானத்துடனே
தானுமனந்தா னந்தமதாய்த் தானேதானுந் தற்சொருபம். 4

துரியாதீதப் பரமசிவம் தோன்ருதந்தப் பரயசிவம்
தெரியாவுயிர்க்குள் ளானசிவம் ஜெகமுற்றுமதாய்த் தீர்ந்தசிவம்
முரியாவுதியா தானசிவம் மாசற்ருெளிர்வ தானசிவம்
அரிதாஞ் சொரூபானந்தசிவம் அனைத்தாயில்ல வாயசிவம். 5

(தத்துவம். 162-ம் பக்கம்.)

ஒருவனே டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாத லாலே
தருபவ னொருவன் வேண்டுந் தான்முத லீறு மாகி
மருவிடு மனதி முத்த சித்துரு மன்னி நின்றே. 6

உலகெலா மாகி வேரு யுடனுமா யொளியா யோங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனு யிவற்றின் றன்மை தனக்செய்த லின்றித் தானே
நிலவுசீ ரமல னுகி நின்றன னீங்கா தெங்கும். 7

(சித்தியார்.)

வைசேஷிக மதம்.

7. கணதர் என்ற முனிவராற் செய்யப்பட்ட வைசேஷிக நூலில் ஆத்துமா நித்தியமாய் அருவாய் வியாபகமாயிருக்குமென்றும், அந்த ஆத்துமா பரமாத்மா ஜீவாத்மாவென இருவகைப்படுமென்றும், பரமாத்மா ஈஸ்வரனென்றும், ஜீவாத்மா உடம்புதோறும் வேருய்ப் பலவாயிருக்குமென்றும், ஆத்துமாக்கடோறும் ஞானத்துக்கு ஏதுவான மனமிருக்குமென்றும், ஆத்துமாவுக்கு மனதோடு சையோகத்தால் ஞானமுண்டாகுமென்றும், அதனுலேயே புண்ணிய பாவங்களாகிய கருமாநுஷ்டானங்களுண்டாமென்றும், அந்த ஈஸ்ரவனுக்கு மனதோடு சையோகத்தினுலே ஞானமுண்டாகுமேயல்லாமல் இயற்கை ஞானமில்லையென்றும், இப்படியே பதார்த்தங்களின் பொதுவியல்பு வேற்றியல்புகளை யறியும் ஞானத்தால் ஆத்துமாக்களுக்குக் கருமம் நசிக்குமென்றும், கருமம் நசிக்கவே மனதோடு சையோகத்தால் தோன்றும் ஞானமின்றிக் கல்லைப்போற் கிடப்பதே முக்தியென்றும், வேதம் ஈஸ்வரனுலே சொல்லப்பட்டதென்றும் கூறப்படும். (சமயத்தொகுதி.)

வைசேஷிகமத ஆதாரம்.

மைவண்ண மில்லாத பொருள்க டம்மால் வைத்ததரி சனம்வைசேஷிகமே யன்ருே, அவ்வண்ண மதனுடைய மதமுங் கூறி லாத்மாக்கள் ஜெடராகி யநேக ராகி, மெய்வண்ணங் குணகுணியா லவத்தைமேவி வியன்பாச பந்தர்களாய்ப் பிறந்தி றந்து, உய்வண்ண மதுவின்றி யுறுவார் தங்கட்குயர்வீடு பாவனையா லுளவா மன்றே. 1

அரும்பாசத் தகப்பட்ட பெத்தாத் மாக்க ளநேகபவந் தனில்முயன்றவறங்க டம்மால், திரும்பாத டத்தியது சிவன்பா லுண்டாய்ச் சிவனையநுதினம் பரவி யாரா திக்கப், பெரும்பாவங் கருட்னையே பாவித் தத்தான் பெருவிடந்தீர்ந் ததுபோலப் பாசம் விட்டுப், பரன்போலு நிர்க்குணனுயவத்தைக் கெட்டுப் பரனுெத்தங் கிருப்பதுவே பகர்வீ டாமே. 2

(தத்துவம், 125-ம் பக்கம்.)

அச்சுமரூவாதி மதம்.

8. அச்சுமரூவாதிகள் ஆத்துமாக்கள் ஜநநத்தையடையும்போது முன் ஆணுயிருந்தது ஆணுகவும், முன் பெண்ணுயிருந்தது பெண்ணுகவும் பிறக்குமென்றும், சிவபூசையின் பயனுற் பிறவியொழிந்து சிவசந்நிதியில் அச்சு மாருமலே யிருக்குமென்றுஞ் சொல்லுவார்கள். (சமயத்தொகுதி.)

வைஷ்ணவ சமயம்.

9. 1—வது. கடவுள். — வைஷ்ணவ சமயத்துக்குக் கடவுள் விஷ்ணு. அநாதி நித்நியத்துவமும், சர்வ வியாபகத்துவமும், சர்வக்ஞத்துவமும், சர்வ ஸ்வதந்தரத்துவமும், சர்வேஸ்வரத்துவமுமுண்டு. இவரே பிரதமத்தில் பிரமாவையும், பிரமாவைக்கொண்டு சிவனையும் சிருஷ்டிசெய்து, பிரமாவுக்குப் படைப்புத்தொழிலேயும், சிவனுக்கு சம்ஹாரத்தொழிலேயும் செய்துவரும்படி விதித்துத் தாம் இரக்ஷிப்பின்தொழிலே நடத்திவருகிருரென்பதும், "ஸ்ரீ விஷ்ணுவே இந்த மும்மூர்த்திகளுக்கும் அந்தரியாமியாகிச் சிருஷ்டிஸ்திதி சம்ஹார கிர்த்தியங்களைச் செய்துவருகிருர்" என்பதும் வைஷ்ணவ சமயக்கொள்கை. (விஷ்ணுபுராணம், 104—ம் பக்கத்தும், சமயத்தொகுதியிலுங் காண்க.)

2—வது. வேதம். — வைணவ மதக்கொள்கைக்கு ஆதாரமாயிருப்பதும், எல்லா விதி நிஷேதங்களை விதிப்பதும் முன்காட்டிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்ற நான்கு வேதங்களேயாம். இந்த நான்கு வேதங்களின் கடைசிப்பாகமாகிய உபநிஷத்துக்களும், தமிழ்வேதமென்று பாராட்டுகிற ஸ்தோத்திர கவிகளாகிய திருவாய்மொழி நாலாயிரப் பிரபந்தமும் வைஷ்ணவ சமயத்துக்கு ஆதாரமான கிரந்தங்களாம்.

3—வது. வைஷ்ணவ சமய சித்தாந்தம். — சரியை, கிரியை, யோகம், ஞானமென்கிற நான்கு ஆன்னிக கரும நியமங்களுண்டு. சாலோக சாமீப சாரூப சாயுட்சியமென்கிற நான்கு பதவிகளுமுண்டு. அந்த நியமங்களைக் குருபரம்பரைமுறையில் ஆசாரியர் முன்னிலேயில் உபதேசம்பெற்றுத் திரிகரணசுத்தியாய் அநுஷ்டித்து அநேக ஜென்மங்களாக ஸ்ரீ இலக்குமிதேவியை உபாசித்து நாராயண ஸ்மரணை செய்து வழிபட்டுவருகிற விஷ்ணுபக்தர்கள் தேகாந்தத்தில் முறையே சுவர்க்கமுதலிய பதவிகளேயும் கடைசியிற் பரமபதப் பிராப்தியையும் அடைவார்களென்பது இந்த மத சித்தாந்தம்.

4—வது. திரிபதார்த்த நிர்ணயம் அல்லது பரஜீவபந்தம்.—பரம் என்பது வேதங்களிற் பிரதிபாதிக்கப்பட்ட பரப்பிரம்மமே. அந்த பரப்பிரமமே ஸ்ரீ வாசுதேவனென்கிற சாக்ஷாத் விஷ்ணுவென்பது வைஷ்ணவருடைய கொள்கை. அவனே "சர்வமயனும், சர்வேஸ்

வரனும், முடிவில்லாதவனும், பிறப்பில்லாதவனும், சுருங்கல் முதலானவை யில்லாதவனும், லோகாதாரனும், தனக்கு வேறு ஆதாரமில்லாதவனும், அப்பிரமேயனும், பேதிக்கக்கூடாதவனும், சூக்ஷமங்களிலும் அதிசூக்ஷமமானவனும், ஸ்தூலங்களிலும் அதிஸ்தூலமானவனுமாகிய ஸ்ரீமந் நாராயணனென்றும், அவனே ஷட்குண ஐஸ்வரிய சம்பன்னனான ஜநார்த்தனனென்றும், விஷ்ணுபுராணங் கூறுகின்றது; அல்லாமல் அரியரப்பிரமராகிய அந்தந்தச் சொரூபங்களினின்று சிருஷ்டியாதி தொழில்களைச் செய்வதினால் பிரமா விஷ்ணு ருத்திரனென்ற திருநாமங்களை யடைந்தவன்." அந்தப் பகவான்தானே ஆத்துமாக்களின் பந்தவினையைச் சேதித்து முக்தி கூட்டுவிப்பவனென்றுங் கூறப்படும். (சமயத்தொகுதி.)

ஜீவாத்துமாக்கள் அளவுபட்ட ஆயுளும் அளவுபட்ட போகமுமுடையவையாயும், சிற்றறிவுஞ் சிறுதொழிலு முடையவையாயும், நல்வினை தீவினைகளைச் செய்து அவ்வினைப்பயனை அநுபவிப்பனவாயுமிருப்பவையென்றும், பந்தமென்கிற பாசவினை ஆத்துமாக்களைப் பற்றி நிற்பவையென்றும், ஆத்துமாக்கள் பலகோடி ஜெங்மங்களிலே விஷ்ணுவை நிஷ்காமியமாக ஆராதித்துவந்த தவப்பயனாலே ஞானாசாரியன் முன்னிலையிற் பரஞானம் பெற்று முத்தியடையுமென்றுங் கூறப்படும். (சமயத்தொகுதி.)

5-வது. விஜிஷ்டாத்துவிதம்.—வேதாந்தமாகிய உபநிஷத்துக்களுக்கு நீலகண்டாசாரியார் ஈஸ்வரன் ஆண்டவனென்றும், ஆத்துமாக்கள் அடிமையென்றும், ஆத்துமாக்கள் பாசத்தைப் பொருந்தியிருப்பவையென்றும், பந்தகாலத்திலும் முக்திகாலத்திலும் ஈஸ்வரன் ஆத்துமாக்களோடு வேறறக் கலந்து நிற்கிறாரென்றும், ஈஸ்வரன் ஆத்துமா பாசம் என்பவைகளினியல்பு இவ்வாறென்றும், ஆத்துமாக்கள் பாசநீங்கி முக்தியடையும்வழி யிப்படியென்றும் காட்டி, நீலகண்டபாஷியமென்று ஒரு பாஷியஞ் செய்திருக்கிறார். இராமாநுஜாசாரியாரும் விஜிஷ்டாத்துவிதத்தையே ஸ்தாபித்து இராமாநுஜ பாஷியமென்று ஒரு பாஷியஞ் செய்திருக்கிறார். இவ்விரண்டு பாஷியங்களால் விஜிஷ்டாத்துவித மதமும், மத்வாசாரியார் ஈஸ்வரனும் ஆத்துமாவுங் கலப்பின்றி வேறாயிருக்கின்ற இரண்டு பொருளென்று துவிதத்தையே சாதித்து மத்வ பாஷியமென்று ஒரு பாஷியஞ் செய்திருக்கிறார், இதனால் துவிதமதமுமேற்பட்டு வழங்கிவருகின்றன. (சமயத்தொகுதி.)

பாஞ்சராத்திர மதம்.

10. பாஞ்சராத்திரிகள் வாசுதேவனென்றொரு பரம்பொருளுண்டென்றும், அந்தப் பரம்பொருளிலிருந்து கிருஷ்ணன், அநிருத்தன், மகரத்வஜன், ரௌக்கிணேயன் என்னும் நாலு வியூகங்கள் ஜெகத்தைப் படைத்தற்பொருட்டுத் தோன்றுமென்றும், இந்த நான்கி

ஞாலே ஜடமும் சித்துமாகிய எல்லாவுலகமும் படைக்கப்பட்டன வென்றும், எல்லாம் வாசுதேவன் வடிவமென்றும், பாஞ்சராத்திர மென்கிற நூலிற் சொல்லப்பட்ட முறையே தீக்ஷைசெய்துகொண்டு வாசுதேவனை வழிபட்டு வாசுதேவன் வடிவில் லயமாவதே முக்தி யென்றுங் கூறுவர். (சமயத்தொகுதி.)

பாஞ்சராத்திரமத ஆதாரம்.

ஆதியா யருவ மாகி யகண்டபூ ரணமாய் ஞானச்
சோதியாய் நின்ற மாயன் சுவேச்சையா லுருவு கொண்டு
நீதியார் கருணை யாலே நீள்கடற் றுயின்று நூலும்
ஓதினு னென்று பாஞ்ச ராத்திரி யுரைப்ப னன்றே. 1

உந்தியி லயனை யீன்று மவனைக்கொண் டுலகுண் டாக்கி
அந்தநல் லுலக ழிக்க வரனையு மாக்கு வித்துத்
தந்திடும் ஜகத்தி னுக்குத் திதிகர்த்தா தானே யாகி
வந்திடுந் தோற்ற மீறும் நிலைமையும் பண்ணு மாயன். 2

மீனுமை கேழ னுர சிங்கவா மனனாய் வென்றி
ஆனுத விராமர் மூவ ராயனு யளித்தான் கற்கி
தானும் வருவ னின்ன மென்றவன் சாற்றித் தேவர்
கோனுபு நிற்ப னென்று கூறுவன் குறிப்பி னேடே. 3

எழ்கடற் செலுவி லேற்று மிருங்கிரி முதுகி லேற்றும்
தாழ்தல முழுதுங் கண்டுந் தமனிய னுடல்பி ளந்தும்
வாழுல களந்து மன்னாய் மன்னர்க்கு மன்ன னுயும்
பாழ்பட வுரறிப் பாரும் நோக்கும்பின் பரியு மாயே. 4

பொய்கைவாய் முதலை வாயிற் போதகம் போத மாட்டா
தையனே நாதா வாதி மூலமே யென்ற ழைப்ப
உய்யயாம் பணிமா லோல மோலமென் றோடிச் சென்று
வெய்யவாய் முதலை வீட்டிக் கரிக்கும்வீ டருளி னானே. 5

அலைகட லடைத்தும் வானோர்க் கமுதினை யளித்துந் தீய
கொலைபுரி யசுரர் தம்மைக் கொன்றுல கங்கள் காத்தும்
கலைமலி பொருளன் பர்க்குக் கருணையா லுரைத்து மிக்க
தலைமையி னிற்பன் மாய னென்றும்பின் சாற்றி னானே. 6

மாயையா யுயிராய் மாயா காரிய மாகி மன்னி
மாயையாற் பந்தஞ் செய்து வாங்கிடு மவனு லன்றி
மாயை போகாதென் றெண்ணி மாயனை வணங்கப் பின்னை
மாயைபோம் போனல் மாயன் வைகுண்டம் வைப்ப னன்றே. 7

(செதசியார், 360-ம் பச்சம்.)

பிரமாதி தேவர்கள்.

11. சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரமென்ற முத்தொழிற்கு முறையே பிரமா விஷ்ணு ருத்திரன் என்ற மூவருங் கர்த்தாக்களென்பது சைவ வைஷ்ணவ சமயத்தவர் கொள்கையெனினும், மூவரும் நிருவிகற்பான ஒரே கடவுளென்றும், மூவரினும் பிரமாவே பிரதான கடவுளென்றும் சைவ வைஷ்ணவ சமயசம்பந்தமான நூல்கள் வெளிப்படுத்துகின்றன. இவற்றிற்குப் பிரமாணம்:—

வில்லிபுத்தூரர் பாரதம்.

ஆக்கு மாறய னாமுத லாக்கிய வுலகங்
காக்கு மாறுசெங் கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்கு மாறர னாமவை வீந்தநாள் மீளப்
பூக்கு மாமுத லாமவன் பொன்னடி போற்றி.

பிரமபுராணம், பிரபஞ்ச உற்பவச் சருக்கம்.

மூசிவண் டிமிர் துளபமாலை முடித்திலங்குறுபொற்
றூசினன்றனை வாயினாலெதிர் தோற்றுவித்தரனை
நாசியின்வழி யாகநல்கியும் நானிலத்தயனே
ஆசில்முத்தொழி லுக்கும்வித்தென வங்குநின்றனனே.

பிரமபுராணம், பிரமன் மகிமைச் சருக்கம்.

படைப்பவன் படைத்தி லானேற் பாயிருஞ் சிகரக் குன்றக்
குடைப்பரன் புரக்கு மாறுங் கோலவெண் ணீற்று மேனி
யுடைப்பரன் துடைக்கு மாறு மின்றென வுண்மை யாலே
அடைப்பெரும் பதும பீடத் தண்ணலே கடவு ளாமால்.

இவற்றானறிக. இன்னும் மும்மூர்த்திகளோடொத்து முத்தொழிற்கும் உதவிபுரிந்து வருகின்ற இந்திராதி தேவதைகளுமுளர்.

அநேகேச்சுரவாதி மதம்.

12. அநேகேச்சுரவாதிகள் தேர்முதலியவை செய்யும்போது ஒருவனாற் செய்ய முடியாமல் அநேகர் வேண்டியிருத்தல்போலச் சிருஷ்டியாதி தொழில் செய்வதற்கு அநேக ஈஸ்வரர் வேண்டியிருக்கிறதென்றும், அநேக ஈஸ்வரரும் அநேக உபாதான காரணங்களைக் கொண்டு பஞ்சகிருத்தியங்களைச் செய்வாரென்றும், ஆத்துமாக்களும் அநேக ஈஸ்வரருடைய தொழில்களினாலே ஜநநமரணப்படுவார்களென்றும், ஒரு தொழிலைச் செய்யும் அநேகர் உபகரணமில்லாதவிடத்துத் தொழிலை விடுகிறதுபோல ஈஸ்வரர்களும் கருமமாகிய உபகரணங்களில்லாதவிடத்து ஆத்துமாக்களிடத்தில் சிருஷ்டியாதி தொழில் செய்யாரென்றும், அப்படித் தொழிற்படாதிருப்பதே அவைகளுக்கு முத்தியென்றுங் கூறுவார். (சமயத்தொகுதி.)

பரபக்ஷமாகிய புறச்சமயக் கோட்பாடுகள் முற்றிற்று.

சுபக்ஷமாகிய அகச்சமயக் கோட்பாடு.

13. 1–வது. கடவுள்.—வானத்தையும் பூமியையுங் காணப்படுகிறதுங் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வவல்லமையுள்ள பிதாவாகிய ஒரே கடவுளுண்டு. அவருடைய திருநாமம் வேதம் வெளிப்படுத்துகிற பிரகாரம் மூலபாஷையில் ஜெகோவாவென்பது. அதற்குத் தானாகவிருக்கிறவரென்பது பொருள். சுருதியில் திரியேக தேவனென்றும், பிதாவென்றும், குமாரனென்றும், பரிசுத்தாவியென்றும், இடைக்கிடை வழங்குவதுமுண்டு.

2–வது. வேதம்.—இகபர சர்வார்த்த ஏகசாதனமாகிய இது உலக சிருஷ்டிகரும், இரக்ஷகரும், மனிதருடைய கிருத கிர்த்தியங்களுக்குத்தக்க பலாபலங்களை யூட்டுவிக்கிறவருமாகிய கடவுளைப்பற்றியும், அவருடைய திவ்விய பரிசுத்த பரிபூரண லக்ஷணங்களைப்பற்றியும், அவர் வானத்தையும் பூமியையும் அவற்றிலுள்ள சராசரப் பகுதிகளையும், சிருஷ்டிசெய்த முறையைப்பற்றியும், பரிபாலனஞ்செய்துவருகிற கருணைப் பிரபாவத்தைப்பற்றியும், மநுமக்கள் அநுசரித்துக் கைக்கொள்ளவேண்டிய விதி நிஷேதங்களைப்பற்றியும், பாபம் உற்பத்தியான விவரத்தைப்பற்றியும், அநாதி பரமரகஸியமாயிருந்த ஆத்தும ஞானபோதனை, நீதியிரக்க சமரசம், ஆத்துமரக்ஷணை, மறுமையிலுள்ள நடுத்தீர்ப்பு, மோக்ஷம், நரகம் இவை முதலியவைகளைப்பற்றியும், மெய்த்திருச்சபையின் பூர்வோத்தர விர்த்தாந்தத்தைப்பற்றியும், வருங்கால வர்த்தமானங்களைப்பற்றியுமுள்ள சத்தியத்தை வெளிப்படுத்துகிற கடவுள் அநுக்ஞை பெற்ற திருவாக்காம்.

3–வது. ஆகமங்கள்.—அதனேசி விசுவாசப்பிரமாணம், நீசேயா விசுவாசப்பிரமாணம், அப்போஸ்தல விசுவாசப்பிரமாணம் ஆகிய மூன்றும், இவற்றின் வியாக்கியானங்களும், 39 வேதமார்க்கப் பிரமாணங்களும், இவற்றையொத்து வேதத்துக்கு அவிரோதமாயிருக்கிற தேவாராதனையொழுங்கும், திருச்சபைச் சட்டமுதலியவைகளுமாம்.

4–வது. சித்தாந்தம்.—எவரும் ஞானதீக்ஷைபெற்றுத் திரிகாணசுத்தியாய்த் திரியேகக் கடவுளை வழிபடவேண்டுமென்பதும், விதிநிஷேதங்களை மனோபூர்வமாய்க் கைக்கொண்டு நடக்கவேண்டுமென்பதும், ஒவ்வொருவரும் உண்மையாய்த் தன்னை மகா பாவியென்றுணர்ந்து உத்தம மனஸ்தாபத்தோடு பாவவழியை விட்டு விலகி மனந்திரும்பிக் கிறிஸ்துவே பாவநாசர், இரக்ஷணிய மூர்த்தி, பாவநிவாரண பிராயச்சித்த பலியாகத் தம்மைக் கையளித்துப் பிராணத்தியாகஞ்செய்த மகா பிரபு அவருடைய புண்ணியபலத்தாலேயல்

லாமல் வேறுவகையில் தனக்கு ஆத்தும ஈடேற்றம் லபிக்காதென்று கண்ணீரோடும் பெருமூச்சோடும் கிருபாசனத்தண்டை கிட்டிப் பொறி புலன்களை யொடுக்கிச் சத்விநய பயபக்தியுடன் திரிசந்தியா காலமும் சர்வஜனங்களும் தனித்தனி அநவரதம் பிரார்த்தித்து வர வேண்டுமென்பதும், இப்படி யநுசந்தானம் பண்ணிவருங்கால் தேவ கிருபை பாவமன்னிப்பையும், சித்த சமாதானத்தையும் அருளிச் செய்து ஜீவன்முக்த ராக்குவிக்குமென்பதும், மரணத்துக்குப்பின் நித்திய ஜீவசாம்பிராக்ஷியத்துக்குட் சேர்க்குமென்பதும் இரக்ஷணிய சமய சித்தாந்தமாம்.

விவாதாம்ஸத் தொகுப்பாகிய இந்த முதல் அத்தியாயத்திலே மேலே விதந்துகாட்டிய பதின்மூன்று சமயங்களில் அகச்சமயமாகிய கிறிஸ்து சமயமொன்றே வாதிக்குஞ் சமயமாகவும், பரபக்ஷத்துள்ள ஏனைய பன்னிரண்டு சமயங்களும் வாதிக்கப்படுஞ் சமயங்களாகவும் வைத்து விவகரித்து நிர்ணயஞ்செய்தற்பொருட்டு இதற்குப்பின்னே ஆஸ்திக மதஸ்தர் அனைவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதும், அங்கிகரிக்கவேண்டியதுமான பொதுக்கொள்கை இப்படிப்பட்ட தன்மையுடையதாயிருக்கவேண்டுமென்று காட்டுகிற பொதுப்பிரமாணம் விவரிக்கப்படும்.

சுபக்ஷமாகிய அகச்சமயக் கோட்பாடு முற்றிற்று.

முதலாம் அத்தியாயம் முற்றிற்று.

2-ம் அத்தியாயம்.

பொதுப் பிரமாணம்.

கடவுள் ஒருவருளர்.

1. காரணமில்லாமற் காரியமில்லையென்கிற சர்வத்திர சாதாரண பிரமாணத்தின்படி நமது திருஷ்டிக்கு விஷயமாகிற இந்த உலகமும் உலகத்திலுள்ள விவிதபேதமான அனந்தகோடி சிருஷ்டிப்பொருள்களும் உண்டாவதற்குச் சமஸ்தத்துக்கு முதுமூலகாரணமாயிருக்கிற ஆதியந்தமில்லாததுமாய்க் குறைவில்லாததுமாய் எல்லாவற்றிற்கு மேலானதுமாய் சர்வசக்தி சர்வக்ஞானம் சம்பூரணமுடையதுமாயிருக்கிற அதிபாரிசுத்தவஸ்து ஒன்றிருத்தல்வேண்டும்; அந்த வஸ்துவே கடவுள். இவ்வுண்மை யெல்லாருடைய ஹிருதயங்களிலும் சிலாசாசனம்போற் பதிந்தேயிருக்கிறது.

2. இவ்வுலகத்திலுள்ள பொருள்கள் யாவும் காரியவிருத்திக்கு ஏற்றதாயும், ஒன்றுக்கொன்று உதவியாயும், பிரயோஜனகரமாயுமிருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுகிலும் உபயோகமின்றி வீணாய் அப்பிரயோஜனகரமாய் உண்டாக்கப்பட்டதில்லை. கண்முதலிய ஐம்பொறிகள் காட்சிமுதலிய வைம்புலங்களை யுட்கொள்ளவும், கால்முதலிய அவயவங்கள் நடத்தல் முதலிய தொழில்களைச் செய்யவும், கந்தமூலபலாதிகள், நெல் முதலிய தானியவர்க்கங்கள், ஜலமுதலிய பானவஸ்துக்கள் யாவுந் தேகசமரக்ஷணார்த்தம் போஜனவர்க்கங்களாகப் பிரயோஜனப்படவும், சீத உஷ்ணங்கள் பயிர் வளர்ச்சிக்கும், தேக சௌக்கியத்துக்கும் உபகாரப்படவும், இராப்பகல் இளைப்பாறுகை வேலைமுயற்சிக்கு அநுகுணமாயிருக்கவும், இவ்வாறாக எல்லாப் பொருள்களையும் காரியத்துக்கு வாய்ப்ப உண்டாக்கிவைத்த பரிபூரண விவேகியாகிய பரமபதி யொருவரிருத்தல் வேண்டும். அவரே கடவுள்.

3. சூரிய சந்திராதிகளின் உதயாஸ்தமனங்களும், காலசம்பந்தமாகிய உஷ்ணசீதங்களும், ஜீவப்பிராணிகளின் ஜெனனமரணங்களும், தாவரவருக்கங்களின் தோற்ற ஒடுக்கங்களுமாகிய அனைத்தும் மாறாத பிரமாண ஒழுங்குகொண்டு இயங்குகின்றமையால் இப்படியவைகளுக்குப் பிரமாணங்களை விதித்து ஒருபடித்தா யியக்குவிப்பதற்கு சர்வசக்தியுள்ள மேலான ஒருவரிருத்தல் வேண்டும். அவரே கடவுள்.

4. மனித இயல்புக்கும், சக்திக்கும், ஞானத்துக்கு மேற்பட்ட அற்புதமான அதிசயச் செய்கைகள் காலாந்தரத்தில் அந்தந்தத் தேசத்திலிருந்த சிற்சில தொண்டர்களால் செய்யப்பட்டுள்ளனவென்றும், அவ்வாறாகவே வருங்கால வர்த்தமானங்களை உற்பாதமாக அறிந்து உலகத்துக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்களென்றும், எல்லா ஜாதியாரும், எல்லாப் பாஷையாரும், எல்லாச் சமயத்தாரும் தங்கள் தங்கள் சமய கிரந்தங்களில் வரைந்து வைத்திருக்கிறார்கள். அப்படியானால் இவைகளைச் செய்யத்தக்க சக்தியையும், ஞானத்தையும் அருளிச்செய்யவல்ல பரிபூரண ஞானமுள்ள ஒருவரிருத்தல் வேண்டும். அவரே கடவுள்.

5. உலகத்திலுள்ள மானிடப்பிரகிருதியான கற்றோர் கல்லாரெவருக்குள்ளும் தாங்கள் சத்விநய பயபக்தியுடனும், திரிகரணசுத்தியுடனும் வழிபடுதற்குரிய வொருவருளரென்றும், அவரே தங்களுக்கு இஷ்டகாமியார்த்தங்களைச் சித்திக்கச் செய்கிறவரென்றும், தாங்கள் அபராதிகளாயிருக்கவும் அதைப் பாராட்டாமல் இரக்கம்பாராட்டிச் சார்வதா நன்மைசெய்து காப்பாற்றி வருகிறாரென்றும், தங்களுக்கு ஆண்டாண்டு சம்பவிக்கும் துன்பம் துக்கம்

வியாதி விபத்து சஞ்சலமுதலிய இடுக்கண்களிலெல்லாம் தங்கள் முறைபாட்டைக் கேட்டுக் கருணைபுரிகிறவரென்றும் நம்பி வழிபட்டு ஸ்துதி ஸ்தோத்திரபலிகளைச் சமர்ப்பிக்கிறார்கள். இவ்வாறுள்ள வந்தனை வழிபாடுகளை யேற்றுக்கொண்டு கிருபை பாலிக்கத்தக்க சர்வ வியாபக கருணாநிதியாகிய வஸ்து ஒருவரிருக்க வேண்டும். அவரே கடவுள்.

6. எல்லா மனிதருக்குள்ளும் மனச்சாக்ஷியல்லது ஜீவ சாக்ஷி யென்கிற ஒரு உத்தம தத்துவம் இயற்கையாய் அமைந்திருக்கிறது. அது ஒவ்வொருவ ருள்ளத்திலும் நின்று செய்பத்தகாத பாவ சம்பந்த மான எந்தத் துர்க்கருமத்தையேனும் பிறரறியாவண்ணம் ரகஸியத் திற் செய்ய நினைக்கும்போதே அப்படிப்பட்ட நினைவைத் தடுத் துக் கடிந்துகூறி அவரவருள்ளத்தில் நடுக்கத்தையும், திகிலையும், மனப்பதைப்பையு முண்டாக்கி அந்தத் தீமைக்கு விலக்க முயலுகிறது. இதனாலே பெரும்பாலார் துர்க்கருமத்தைச் செய்யத் துணிவுகொள்ளாமல் தத்தங்கிரியைக்குத் தாங்களே உத்தரவாதி களாயிருந்து கணக்கு ஒப்புவிக்கவேண்டி வருமென்றும், தங்களை விசாரித்து நியாயமான தண்டனை விதிப்பதற்கு மனுதிகளுக்கு எட்டாத ஒருவரிருக்கின்றனரென்று நினைத்து அடங்கி நடக்கிறார் கள். இந்தப்பிரகாரமாக எல்லாருடைய ஜீவ சாக்ஷியுஞ் சொல்லு கின்றமையால் அத்தன்மையான ஒருவரிருத்தல் வேண்டும். அவரே கடவுள்.

7. ஆஸ்திக மதஸ்தர் அனைவரும் மெய்க்கடவுள் ஒருவருளர் என்ற சத்தியத்தை உறுதிப்படுத்தித் தத்தமதகிரந்தங்களில் வெகு வாய்த் தெளிவித்திருக்கிறார்கள். அவற்றுட் சிலவற்றை யீண் டெடுத்துக் காட்டுதும்.

திருவள்ளுவர்—குறள்.

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

ஒழிவிலொடுக்கம்.

பெண்ணு ணலியாய்ப் பிறந்துவளர்ந் தேயழியும்
எண்ணாத பேத மியல்பின்றிப்—பண்ணுங்கால்
காரணகர்த் தாவொருவ னுண்டவனைக் காட்டுநூல்
ஆரணமு மாகமமு மாம்.

அவிரோத உந்தியார்.

நிருமல பூரண நித்தாதி நீங்கா
ஒருபரந் தானுள துந்தீபற
உலகங்கள் தோற்றலா னுந்தீபற.

சித்தியார்.

காரிய கார ணங்கள் முதல்துணை நிமித்தங் கண்டாம்
பாரின்மண் திரிகை பண்ணு மவன்முதற் றுணைநி மித்தம்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சக்தி யாக
ஆரியன் குலால னய்நின் றுருக்குவ னகில மெல்லாம்.

ஒருவனே டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாத லாலே
தருபவ னொருவன் வேண்டுந் தான்முத லீறு மாகி
மருவிடு மனாதி முத்த சித்துரு மன்னி னின்றே.

வே—நீதிநூல்.

மரமுத லசைத லாற்கா லுளதென மதிப்ப ரெங்கும்
பரவிய புகைபாற் செந்தீ யுளதெனப் பகர்வார் சுற்றும்
விரவிய மணத்தாற் பாங்கர் வீயுள தென்னத் தேர்வர்
பரனுள னெனுமுண் மைக்குப் பாரெலாஞ் சான்று மன்னே.

தீட்டுவா னின்றி யாமோ சித்திரந் திகழ்பொற் பாவை
ஆட்டுவா னின்றித் தானே யாடுமோ திவவி யாழின்
மீட்டுவா னின்றிக் கீதம் விளையுமோ சராசரங்கள்
நாட்டுவா னொருவ னின்றி நன்கமைந் தொழுகுங் கொல்லோ.

இப்படி யின்னும் அநேகமான சாமீபங்களுள்ளன. அவைகளை விரிக்கிற் பெருகும். மேலே இத்தகையரான மெய்க்கடவுளுக்குரிய திவ்விய லக்ஷணங்கள் எத்தகையனவென்று ஆராய்ந்து பார்க்குதும்.

கடவுளுக்குரிய நைவீக லக்ஷணம்.

காரியமாகிய வுலகத்தைக் கொண்டன்றே அதற்கு நிமித்த காரணராகிய கடவுளொருவ ருளரென்ற உண்மை வெளிவந்தது. ஈண்டும் ஆச்சரியகரமா யுண்டாயிருக்கின்ற அந்த உலகத்தைக்கொண்டே கடவுளின் திவ்விய லக்ஷணங்களையும் ஒருவாறு கிராகியப் படுத்தலாம். எப்படியெனில்:—

1. அந்தகாரமான இருட்பிழம்பிலே மகார்ணவமாக வியாபித்திருந்த அமோகமான ஜலப்பிரவாகத்தினின்றும் இந்த விஸ்தாரமான பூமண்டலத்தைப் பிரத்தியேகப்படுத்தி அகண்டாகாரமாக வுருட்டித் திரட்டி உருவாக்கியதும், பிரிந்துநின்ற ஜலத்தைச் சமுத்திரமாக வேற்படுத்திப் பூமியைச் சுற்றிநின்று வரம்புகடவாது சார்வதா வொருபடித்தாய் நிலைபெற்று நிற்க நிருமித்ததும், ஆகாய விரிவிலே சூரிய சந்திர நக்ஷத்திரமுதலிய வானஜோதிகளை இந்தப் பூமியிலும் எத்தனையோமடங்கு பெரிதான ஆகிருதிகளுள்ளனவாகப் படைத்து அவைகளுக்கும் பூமண்டலத்துக்கும் ஒரு தொந்தத்தை யுண்டுபண்ணித் தமப்பிழம்பு சிதறுண்டோடத் தூத்

திப் பூலோகமெங்கும் ஒளிபரவும்படி ஆக்ஞாபித்ததும், அனந்தகோடி பேதமான ஜீவராசிகளையும், அளவில்லாத பேதமான தாவரசங்கமங்களையும், எல்லாவற்றிலும் விசேஷமாக எல்லாப் பொருள்களையுங் கையாளும்படி விவேகாத்தும தேகியாகிய மநுப் பிரதமனைப் படைத்ததும், கடைசியாய் இந்த மிருத்திகாண்டத்தையும், வான ஜோதி மண்டலங்களையும், ஆகாய மண்டலத்திலே விட்டெறிந்து யாண்டும் ஓயாது ஒழியாது சுழன்றுகொண்டிருக்கும்படி யியக்குவித்ததும், சகல சிருஷ்டிக்கும் இயற்கைப் பிரமாணங்களைச் சங்கற்பித்து நிலைநிறுத்தியதும் ஆகிய இந்த மட்டிடக்கூடாத விந்தையினும் விந்தையான சிருஷ்டிச்செயலில் ஒப்பற வுயர்ந்த மெய்க் கடவுளின் மகோன்னத சர்வசக்தி யொன்றுமாத்திரமா, மகோன்னதமான அவருடைய சர்வக்ஞானமும் விளங்குகின்றதல்லவா.

2. சிருஷ்டிவர்க்கங்கள் உலகத்தில் விர்த்தியாதற்பொருட்டும், தினேதினே உஜ்ஜீவித்தற்பொருட்டும், வியாதிமுதலிய துன்பங்கள், அபாயங்கள், மோசங்கள், சங்கடங்கள் ஆகிய இத்யாதி கஷ்டநஷ்டங்களினின்று பிரஜைகளை விடுதலையாக்கி மகிழ்ச்சியடைவித்தற்பொருட்டும், அளவிறந்த கோடிகோடி வகையான உபகரணங்களைத் தமது உலகமாகிய பண்டகசாலையில் நிறைத்து வைத்திருந்து அப்போதைக்கப்போது தட்டுத் தடையன்றி அவசரத்துக்குத் தக்கவாறு உபகரித்து "பிதாமாதாவு முன்னைக் கைவிட்டாலும் நாம் உன்னைக் கைவிடோமென்று" திருவாக்கருளித் தைரியப்படுத்திக் காப்பாற்றி ஆண்டு நடத்திவருகிற பொதுவான பாராமரிப்பு விஷயத்தில் கடவுளின் அனந்த கல்யாண குணங்கள் எத்தனை ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. அளவில்லாத தயை, அளவில்லாத பச்சாத்தாபம், அளவில்லாத இரக்கம், அளவில்லாத கருணைப்பெருக்கம் இவ்வகையான காருணிய குணங்கள்மாத்திரமோ எவ்வளவோ நிஷ்பக்ஷபாதம், எவ்வளவோ நீதி, எவ்வளவோ நியாயம், எவ்வளவோ நேர்மை இத்யாதி திவ்விய லக்ஷணங்க ளுள்ளவரென்று பட்டப்பகல்போல வெளியாகிறதே. இம்மட்டோ!

3. உலக சிருஷ்டிகளுக்குள் நடந்தேறுகிற அக்கிரமப் பிரதிபலன்களை அவரவருக்கு ஊட்டுவிக்கிற முறைமையையும் அவர்கள் சீர்ப்பாட்டுக்காகக் கையாடிவருகிற அதிதாக்ஷண்யகரமான யத்தனங்களையும் கவனிக்கிறபக்ஷத்தில் கடவுளின் இரக்கத்தோடு கலந்துவருகிற அதிபாரிசுத்த நீதி யெத்தனையாய் ஜொலிக்கிறது. "அடிக்கு மொருகை யணைக்கு மொருகை" என்ற வதந்தியின்பிரகாரம் உலகத்தில் இடைக்கிடை சம்பவிக்கிற தேவச்செயல் நமக்குத் திருஷ்டாந்தப்படுத்துகிறதே. அல்லாமல் நீடிய பரிதாபம் நீடிய சாந்தம் நீடிய பொறுமை எவ்வளவாய்த் த்வனிக்கிறது. "அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும்" என்ற வதந்திய முண்டன்றோ. கடவுளின்

திவ்யகுண பிரபாவங்களைச் சொல்லிக் காட்டவாவது, வர்ணிக்காமல் இயல்பைமாத்திர மெழுதித் தெரிவிக்கவாவது உலகத்தில் யாரும் அருகரல்லரென்பதற்குத் திருஷ்டாந்தம்.

"நிலையிது குணமீ தைய னெறியிது நாம மீதென்
றுலகுறு பர்ஷைக் கொண்டிங் குரைக்குமா றரிதென் றுள்ளி
அலையுமெய்ச் சுருதி யின்னு மறிவிலா மூகை யாய
புலையனே னினையும் புன்சொற் பொருந்துமோ புனையத் தானே"

என்பதனாலறிக. கடவுளின் குண விபவங்களை மற்றவர் சொல்லக் கேட்டும் எழுதிய எழுத்தை வாசித்தும் அடைகிற ருசியைப் பார்க்கி லும் தானாய்த் தன்னுள்ளத்து உலக காட்சிகளையும் சம்பவங்களையும் கருத்தாய் ஊன்றிச் சிந்திக்கும்பொழுதும் தியானிக்கும்பொழுதும் அதிகமதிகமாய் மதுரிக்கும். மற்றப்படி "தான்தேடாப் பொன் னுக்கு மாற்றுமில்லை யுரையுமில்லை" என்றதுபோலாகும்.

4. வேதாகமாதிகளிற் பெரியோர் கூறியிருக்கிற கடவுளின் திவ் விய லக்ஷணங்களைத் திருஷ்டாந்த பூர்வமாய்க் காட்டுதும்.

வாஜஸநேய உபநிஷத்து, 8–ம் வாக்கியத்தில்—அவர் (கடவுள்) எங்கும் நிறைந்தவர், ஒளிபொருந்தியவர், எவ்வித சரீரமுமற்றவர், பரிசுத்தமானவர், பாபமற்றவர், விவேகி, மனதை யாள்பவர், ஸகல பூதங்களுக்கு மேலானவர், தானுயுண்டானவர், அவர் பொருள்களை அத்தினியல்புக்குத் தக்கபடி சாஸ்வதமாகவும் சமமாகவும் அமைத் தார் என்றும்,

சுவேதாசுவதர உபநிஷத், 6–வது அத்தி. 11, 12–ம் வாக்கியங் களில்—சகல பூதங்களிலு மறைந்தும், சர்வ வியாபியாயும், சர்வ பூதங்களுக்கும் அந்தர் ஆத்மாவாகவும், தொழில்களுக்கு இறைவ னாகவும், சர்வ பூதங்களிலும் உறைந்துகொண்டும், சாக்ஷியாகவும், கேவலம் சேதன ஸ்வரூபியாகவும், தொழில் பலவற்றிலுந் தனிமை யான வசியாகவும், ஒரு வித்தைப் பலவகை யாக்குவோனாகவும் உள்ள ஒருவனே தேவன். அவனைத் தங்களுக்குள்ளிருப்பதாய்க் காணுந் தீரர்கள்மாத்திரம் நிலைத்த சுகமடைவார்களன்றி மற்றவர்க ளடையார்கள் என்றும்,

கடோபநிஷத், 5–வது வல்லி, 13–ம் வாக்கியத்தில்—நித்தியங்க ளுக்குள் நித்தியமாயும், சேதனங்களுக்குள் சேதனமாயும், பலவற் றில் ஒன்றாயு மிருந்துகொண்டு யார் (நமது) கோரிக்கைகளைத் தருகி றானோ அவன் தமக்குள்ளே யிருப்பதாக அறியுந் தீரர்களுக்கு மாத் திரம் சாஸ்வதமான சாந்தியேயன்றி இதரர்களுக்கு இல்லை என்றும்,

முண்டகோபநிஷத், பிரதமமுண்டகம், 1–ம் அத். 6–ம் வாக்கியத் தில்—அது (பிரமம்) அதிருஷியம், கிரகிக்கக்கூடாதது, அடியற்றது, வர் ணமற்றது, கணக்கில்லாததுஃகைகாலில்லாதது, நித்தியமானது, விபுவ்

வரூபி, எங்கும் பாவியது, சூக்ஷமமானது, அவ்யயமானது. அதைத் தீரர்கள் பூதங்களுக்கெல்லாம் ஆதிகாரணமென்று நன்ரு யறிந்திருக்கிருர்கள் என்றும்,

மேற்படி த்விதீயமுண்டகம், 1—வது அத்தி 2—ம் வாக்கியத்தில்—அவன் (பிரமம்) திவ்வியன், மூர்த்தியற்றவன், புருஷன், அகத்திலும் புறத்திலுமுள்ளவன், பிறப்பற்றவன், பிராணனில்லாதவன், மனதில்லாதவன், பரிசுத்தமானவன், அழிவற்ற பெரும்பொருள் என்றும்,

மேற்படி முண்டகம், 2—வது அத்தி. 7—ம் வாக்கியத்தில்—விவேக பரிபூரணனும், சர்வக்ஞனும், திவ்யமான பிரமபுரமெங்கும் பரவியிருப்பவனும், மகிமையுள்ளவனும் ஆகிய ஆத்மா ஆகாசத்திலிருக்கிறுன். அவன் மனோமயமானவன், அன்னத்தின்மேற் சார்ந்திருக்கும் பிராணனுக்கும் தேகத்துக்குங் கட்டளை யிடுவான் என்றும்,

தைத்திரீய உபநிஷத், பிரமானந்தவல்லி, 4—வது அநுவாகத்தில்—எதுக்கு லக்ஷணம் உரைக்கமாட்டாமல் வாக்குப் பின்னிடைகிறதோ, எதையானுல் மனசும் அடையமாட்டாதோ அப்படிப்பட்ட பிரமத்தின் ஆனந்தத்தை யறிந்தவன் எப்போதும் பயப்படுகிறதில்லை என்றும்,

பிரஹதாரணிய சுருதியில் (பிரமத்தை)—யார் தன்னிலும் புறம்பாயிருப்பதாய் நினைத்து வேறு தெய்வத்தை யுபாசிக்கிருனே அவன் ஒன்றுந்தெரியாத மிருகத்துக் கொப்பாவான். தேவர்களுக்கு அவன் மிருகமே என்றும்,

பிராம்மதருமம், 1—ம் காண்டம், 2—வது அத்தி. 10—ம் வாக்கியத்தில்—இவ்வுலக முண்டாவதற்குமுன் ஒன்று மிருந்ததில்லை. ஓ பிரிய சிஷ்யனே உலகமுண்டாவதற்குமுன்னே கேவலம் சத்ஸ்வரூபியும் ஒருவருமான அத்விதீயரிருந்தார். அவரிந்தச் சிறந்தவர், பிறப்பற்றவர், பரமாத்மா, ரூபமற்றவர், சாவற்றவர், நித்தியர், பயமற்றவர் என்றும்,

மேற்படி 1, 3, 17ல்—ஓ! கார்க்கி, பிரம்மஞானிகள் யாரைப் பணிகிருர்களோ அவர் இந்த அழிவற்ற புருஷன். அவர் தூலரன்று, அணுவன்று, குறுகினவரன்று, நீட்சியுடையவரன்று, அவர் வர்ணமுள்ள பொருளன்று, திரவகப் பொருளன்று, அவர் நிழலன்று, இருளன்று, காற்றன்று, ஆகாசமன்று, சுகதுக்கமற்றவர், இரஸேந்திரியமற்றவர், கிராணேந்திரியமற்றவர், கண்ணற்றவர், காதற்றவர், வாக்கற்றவர், மிதமாகிய மனதற்றவர், உஷ்ணமற்றவர், பிராணவாயுவற்றவர், முகமற்றவர்; அவருக்கு ஒப்பில்லை என்றும்,

மேற்படி 1, 3, 24ல்—ஓ! கார்க்கி, இவ்வழிவற்ற புருஷர் பார்வைக்குப் புலப்படார், பார்ப்பார்; செவிக்குப் புலப்படமாட்டார், கேட்பார்; நினைவுக்கு அகப்படார், நினைப்பார்; இவ்வழிவற்ற புருஷரிடத்தில் ஓ! கார்க்கி, ஆகாயம் ஓதப் புரோக்தமாகப் பரவியிருக்கிறது என்றும்,

மேற்படி 1, 5, 37ல்—அவர் (கடவுள்) அசைகிருர், அசையவில்லை; அவர் தூரத்திலிருக்கிருர், சமீபத்திலுமிருக்கிருர், அவரிந்த யாவற்றிற்கும் உள்ளேயிருக்கிருர், அவரிந்த யாவற்றிற்கும் வெளியேயு மிருக்கிருர் என்றும்,

மேற்படி 1, 5, 39ல்—அவர் எங்கும் நிறைந்தவர், தூய்மையுடையவர், உடலற்றவர், விரணமற்றவர், நரம்பற்றவர், நிர்மலர், பாபமற்றவர், யாவற்றையு மறிபவர், மனதினியந்தர், யாவற்றிற்கு மேலானவர், தாமாக விளங்குகிறவர், அவர் பிரஜைகளுக்கு எப்பொழுதும் அவர்கள் சாதனங்களுக்குத் தக்க பலன்களைக் கொடுத்துவருகிருர் என்றும்,

மேற்படி 1, 6, 46ல்—பிரமம் மகத்தானவர், ஞானவொளியினல் தாஞக விளங்குகிறவர், கருதிமுடியாத தன்மையுடையவர், சூக்குமத்தைவிட அதிசூக்குமமாக விளங்குகிறவர். தூரத்தைவிட அதிதூரத்திலு மிருப்பவர், இங்கு சமீபத்திலு மிருப்பவர், இவ்விடத்திலேயே சித்துப் பொருள்களினது உள்ளங்களிலு மிருப்பவர் என்றும்,

மேற்படி 1, 7, 54ல்—ஒப்பற்றவரும் அழிவற்றவருமான கடவுளை யொருவரென் றறியத்தக்கது, அவர் நிர்மலமானவர், ஆகாயத்தைவிட சூக்குமமானவர், பிறப்பற்றவர், பரமாத்மா, பெரியவர், நித்தியமானவர் என்றும்,

மேற்படி 1, 7, 55ல்—யாருடைய நியமத்தினல் வருஷகாலம் இராப்பகல்களாகிய தினங்களாற் சென்றுகொண்டு வருகின்றனவோ அந்த ஒளிக்கு ஒளியும் ஆயுளுக்குக் காரணமும் அழிவற்றதுமான கடவுளைத் தேவதைக ளுபாசிக்கின்றனர் என்றும்,

மேற்படி 1, 7, 60ல்—யார் ஒளியையே வடிவாக வுடையவரோ, யார் அணுவினும் அதிசூக்குமமானவரோ, யாரிடத்தில் உலகங்களும் உலகத்தவரும் நிலைப்படுத்தப்பட் டிருக்கின்றனரோ, அவரே சத்தியஸ்வரூபி, அவரே யழிவற்றவர், அவரே ஞானத்தின லறியப்படத் தக்கவர். ஓ பிரிய சிஷ்யனே நீ யவனை ஞானத்தின லறியக்கடவை என்றும்,

மேற்படி 1, 8, 66ல்—அவர் முகந் தலை கழுத்து எங்குமிருக்கின்றன. அவர் எல்லா வுயிர்களினது உள்ளங்களிலு மிருப்பவர், அந்தக் கடவுள் எங்கு மிருப்பவர், ஆதலால் அவரெதிலுமுள்ளவர், நன்மையையே வடிவாகவுடையவர் என்றும்,

மேற்படி 1, 8, 68ல்—எந்தப் பூரணபுருஷர் எல்லா வுயிர்களும் உறங்கிக்கொண்டிருக்கையிலும் தான் விழித்துக்கொண்டிருந்து, அவைகளுக்கு வேண்டிய யாவற்றையும் படைத்துக்கொண்டிருக்கின்ருரோ, அவர் சுத்தர், அவர் பிரம்மம், அவரழிவற்றவரென்று சொல்லப்படுகிருர். யாரும் அவனை யதிக்கிரமிக்கமாட்டார்கள் என்றும்,

மேற்படி 1, 9, 77ல்—கடவுள் கண்ணுற் காணப்படாதவர், கருமேந்திரியங்களாற் கவரப்படாதவர், வியவகரிக்கப்படக் கூடாதவர், பரிமிதமான லக்ஷணமற்றவர், கருத்திலடங்காதவர், சொல்விமுடியாதவர், உயிர்களினது ஆத்மப் பிரத்தியயத்தையே தன்னிருத்தலுக்குப் பிரமாணமாகவுடையவர், ஸம்ஸார தருமத்தைக் கடந்தவர், சாந்தமானவர், மங்களஸ்வரூபி, ஒப்புயர்வான இரண்டாவதற்றவர் என்றும்,

மேற்படி 1, 9, 88ல்—அவரால் எல்லாப் பொறிகளுடைய பண்புகளும் விளக்கத்தைப் பெறுகின்றன. அவர் எல்லாப் பொறிகளுமற்றவர், அவர் யாவற்றிற்கும் பிரபு, யாவற்றிற்கும் தலைவர். யாவற்றிற்கும் அடைக்கலமானவர், யாவற்றிற்கும் நண்பர் என்றும்,

மேற்படி 1, 12, 103ல்—கடவுள் எல்லாப் பூதங்களிலு மறைந்திருப்பவர், யாவற்றிலும் நிறைந்திருப்பவர், எல்லாப் பூதங்களிலுமுள்ளேயிருப்பவர், ஸகல நற்செய்கைகளுக்குந் தலைவர், எல்லாப் பூதங்களுக்கு மிருப்பிடமாக விருப்பவர், யாவற்றிற்கும் சாக்ஷியாக விருப்பவர், ஞானஸ்வரூபி, சங்கரஹிதர், படைக்கப்பட்ட பொருள்களுடைய பண்புகளற்றவர் என்றும்,

மேற்படி 1, 13, 113ல்—அவர் பார்க்கப்படாதவர், பார்ப்பவர், அவர் கேட்கப்படாதவர், கேட்பவர், அவர் கருதப்படாதவர், கருதுகிறவர், அவரறியப்படாதவர், யாவற்றையு மறிபவர் என்றும்,

மேற்படி 1, 14, 119ல்—அவர் அடியிலே, அவர்மேலே, அவர் பின்புறத்திலே, அவர் முன்புறத்திலே, அவர் தென்றிசையிலே, அவர் வடதிசையிலே, அவர் இறந்தகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் நியந்தா, அவர் இன்றுமிருக்கிறார். நாளையுமிருப்பார் என்றும்,

மேற்படி 1, 14, 120ல்—யார் ஒருவரோ நிறமற்றவரோ யார் பிரஜைகளினது பிரயோஜனங்களை யறிந்து பலவிதமான வல்லமையுடன் கூடியவராகப் பலகாமிய வஸ்துக்களைத் தருகின்றாரோ எல்லாவுலகத்தின் முதலிலும் முடிவிலும் யார் நிறைந்திருக்கிறாரோ அவர் தேவன். அவர் நம்மை நல்ல புத்தியுடன் சேர்ப்பாராக என்றும்,

மேற்படி 1, 14, 121ல்—யாரிலிந்தப் பிரபஞ்சஞ் சுழன்றுகொண்டிருக்கின்றதோ அவர் உலகம் காலம் உருவமுடைய பொருள் இவை யெல்லாவற்றையும்விடச் சிறந்தவர், வேறானவர், அவர் தருமத்திற்கு மூலமானவர், பாபத்தைப் போக்குகிறவர், செல்வத்திற்குத் தலைவர். அவர் எல்லா வுயிர்களுக்கும் உள்ளேயிருப்பவர், அழிவற்றவர், உலகத்திற்கு ஆதாரமானவர், அவர் நன்மையே வடிவாக வுடையவர், உலகத்தைச் சூழ்ந்திருக்கிற வொருவர். இவனை யறிந்து உயிர்கள் மிகச் சாந்தியைப் பெறுகின்றனர் என்றும்,

மேற்படி 1, 14, 123ல்—யார் உலகத்தைப் படைத்தவரோ, உலகத்தை யறிந்தவரோ, ஆன்மாக்களுக்குக் காரணரோ, ஞானமுள்ளவரோ, காலத்திற்குத் தலைவரோ, குணத்தை யுடையவரோ, யாவற்

றையு மறிந்தவரோ, அவர் அசித்துப்பொருள் சித்துப்பொருள் இரண்டையும் காப்பவர். குணங்களுக்குத் தலைவர், ஸம்சாரத்தினது நிலைக்கும் பந்தம் மோக்ஷங்களுக்கும் காரணமானவர் என்றும், இன்னும் இவைபோல்வன பிறவுமாக இந்துவேதமென்று சொல்லப்படுகிற மகாரிஷிகள் வாக்கியங்களில் பிரமத்துக்குரிய மகத்துவ லக்ஷணங்களாக அநேக இடங்களில் விதந்தோதப்பட்டிருக்கின்றன.

5. மேற்கூறியவைகளை யநுசரித்தே தமிழ்ப் பிரதேசத்து மகா வித்துவான்களும் தீர்க்கஞானிகளுமாயிருந்த சில பெரியோர் ஒப்பற்ற கடவுளின் தைவீக லக்ஷணங்க ளித்தகையனவென்று பொதுப்பட விதந்தோதி யிருப்பவற்றிற் சிலவற்றை யீண்டெடுத்துக் காட்டுதும்.

திருக்குறள் கடவுள் வாழ்த்து.

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே யுலகு." இதனாற் கடவுளின் சர்வ வியாபகமும், "கற்றதனா லாய பயனென் கொல் வாலறிவன், நற்றா டொழாஅ ரெனின்." இதனாலும் "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடு வாழ்வார்." இதனாலும் கடவுளின் சர்வக்ஞானமும், "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்ற லரிது." இதனால் ஒப்பற வுயர்ந்த தனியேக கர்த்தத்துவமும், "அறவாழி யந்தணன் றாள் சேர்ந்தார்க் கல்லாற், பிறவாழி நீந்த லரிது." இதனால் கடவுள் தருமக்கடல் கருணைமயர் என்பதும், "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான், றாளை வணங்காத் தலை." இதனாற் கடவுள் எண்குணரென்பதும் வெளியாகின்றனவே. எண்குணமாவன, தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை யென்பனவாம். ஏனையருமிவ்வாறே.

"கடையிலா ஞானத் தோடு காட்சிவீ ரியமே யின்பம்
மிடையுறு நாம மின்மை விதித்தகோத் திரங்க ளின்மை
அடைவிலா ஆயு வின்மை யந்தரா யங்க ளின்மை
உடையவன் யாவன் மற்றிவ் வுலகினுக் கிறைவ னாமே."

தன்வயத் தாதல் முதலில னாதல் தகும்பொறி யுருவில னாதல்
மன்வயத் தெல்லா நலமுள னாதல் வயின்றொறும் வியாபக னாதல்
பின்வயத் தின்றி யொருங்குட னனைத்தும் பிறப்பித்த காரண னாதல் [யே
பொன்வயத் தொளிர்வான் முதலெலா வுலகும்போற்றுமெய்யிறைமையி னிலை

யென்று கடவுளின் திவ்விய குணாதிசயங்களை யுலகுக்கு விதந்தோதி யிருக்கின்றனர்.

6. கடைசியாய், இந்தப் பொதுப் பிரகாணத்திற் காட்டியிருக்கிற கடவுளின் திவ்விய லக்ஷணங்களை யொழுங்குபடத் தொகுத்

துக்கில், கடவுள்—அரூபி, நிரவயவி, விபுஸ்வரூபி, ஆனந்தஸ்வரூபி, ஸத்ஸ்வரூபி, நன்மைஸ்வரூபி, மங்களஸ்வரூபி, ஞானஸ்வரூபி, தர்ம்மஸ்வரூபி, சமானரகிதர், பாபரகிதர், திரிகாலரகிதர், காலத்துக்கு நியந்தா, மனசுக்கு நியந்தா, உலகத்துக்கு ஆதாரர், தர்மத்துக்கு ஆதாரர், அநாதி நித்தியஸ்வயம்பு, சர்வவியாபகர், சர்வக்ஞானர், சாக்ஷிமாத்திரர், அதிபாரிசுத்தர், மகோன்னதர், மகிமைப்பிரதாபர், அதிருஷியர், பரமகாருணியர், நண்பர், நீதியுடையர், தயாளர், க்ஷமையுள்ளவர், கிருபாநிதி, சம்பூரணர், சர்வவல்லவர், இத்தியாதி அனந்தகல்யாண குணமுடையவரென்று மேலே விதந்து காட்டிய பெரியோர் வாக்கியங்களா லேற்படுகிறது.

7. கடவுளொருவ ருளரென்றும், அவருடைய திவ்வியலக்ஷணங்கள் இத்தன்மையனவென்றும், மேலே விவரித்து காட்டியவைகளனைத்தும் ஆஸ்திகமதஸ்தர் அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்கவைகள். ஒப்புக்கொள்ளவேண்டியவைகள், நிஷ்பக்ஷமான நியாயங்களும் மேற்கோள்களும் பிரமாணங்களுமேயன்றிக் கொஞ்சமும் ஒருபக்ஷத்தைச் சார்ந்தவைகளல்லவென்று யாவரும் நிராக்ஷேபனையாக அங்கீகரிக்கத்தக்கவைகள். கடவுளிருக்கிறதாக நம்புகிற எல்லாரும் அக்கடவுள் மேலே விதந்த திவ்யகுணங்களை யுடையவரா யிருத்தல்வேண்டுமென்று நம்பவேவேண்டும். இக்குணங்கள் பொருந்தவில்லை யென்றால் அப்படிப்பட்டவர் கடவுள் அல்லரென்று வளையவேவேண்டும். ஆதலாற் பெரியோர் கூறியிருக்கிற இந்தப் பிரமாணவாக்கியங்களாகிய உரைகல்லில் அந்தந்தச் சமயாதார கடவுளையுரையிட்டுப் பார்த்துப் பொன்னோ அல்லவோவென்று பரீக்ஷிக்கக்கடவோம்.

பொதுப் பிரமாணம் முற்றிற்று.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

பரபக்ஷ நிராகரணம்.

3–ம் அத்தியாயம்.

உலகாயித மதம்.

1. உலகாயிதம் நாஸ்திகம் நிரீச்சுரசாங்கியம் பௌத்தம் சார்வாகம் அநீச்சுரவாதம் என்பனவாகிய இவ்வெல்லா மதங்களும் தத்தமிற் கிஞ்சித் பேதமுள்ளனவெனினும் பொருள்முடிவி லொன்றே

யாம். இந்தக் கொள்கைகளனைத்தும் ஆஸ்திக மதத்துக்கு முற்றும் விபரீதமாயும் நேர்விரோதமாயு முள்ளனவென்பது பெரும்பாலார் அறிந்த விஷயம். ஆஸ்திகர் சர்வத்துக்கு மூலகாரணரான கடவு ளொருவ ருளரென்று அனுசந்தித்து வழிபடுபவர். நாஸ்திகராகிய ஏனையர் கடவுளில்லை; நன்மை தீமை யில்லை; விதிநிஷேதமில்லை; அவற் றின் பிராப்தமாகிய மோக்ஷநரகமில்லை; வேதமில்லை யென்று மறுப் பவர். இவருக்கும் என் தாய் மலடியென்று பிதற்றித் திரியும் பேதை யர்க்கு மென்னபேதம். கடவுளொருவ ருளரென்ற கொள்கையை அநுஷ்டிக்கிற ஆஸ்திகருக்குள் பலவகைப்பட்ட பேதங்களுங் கொள் கைகளுமுடைய மதங்களேற்பட்டு வழங்கி வருமாறுபோலவே கட வுளில்லையென்று சாதிக்கிற நாஸ்திகருக்குள்ளும் சிற்சில பேதங்க ளுண்டுபட்டு வழங்குகின்றன. அவற்றில் ஈண்டெடுத்துக்கொண்ட உலகாயிதமுமொன்று.

2. உலகாயிதக்கொள்கையின் சுருக்கம். தேவேந்திரனுக்குக் குரு வும் மந்திரியுமாயிருக்கிற பிரகஸ்பதி யென்பவர் தேவகூட்டத்துக்கு ஜென்ம விரோதிகளா யிருந்துகொண்டு, அவர்களை எப்போதும் உபத் திரவிக்கிற அசுர கூட்டத்தை யெல்லாங் கெடுத்துத் தம்பகை முடிக்க உத்தேசித்துத் தந்திரமாக ஒரு நூலை யெழுதி அசுரவர்க்கத்துக்குள் மெதுவாய்ப் பிரபலியப்படுத்தி வைத்தாராம். அந்த நூலில் அடங் கிய முக்கியமான பொருள்; பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம், ஆகமம், அருத்தாபத்தி, அபாவம், ஐதீகம், சம்பவம் ஆகிய எட்டுப் பிரமாணங்களும் அநாவசியகம். காட்சிப் பிரமாணமொன்றே தக் கது. அந்தப் பிரமாணத்தைக்கொண்டே சகல பொருளையும் அளந் தறிதல் வேண்டும். அதற்குட்படாத எந்தப் பொருள்களும் பொய்ப் பொருளேயாம். பிருதிவியாதி பூதங்கள் காட்சிப்பிரமாணத்தின் அளவைக் குட்பட்டவை. அவைகளே மெய்ப்பொருள். இந்த ஐந்து மகா பூதங்களினின்று தனித்தனி பிரிந்த ஐவகையணுக் கூட்டங்கள் வேண்டியவாறும் ஒத்தவாறும் ஒன்றோடொன்று கூடி மிஸிரமித்த போது பற்பல பேதமாய் உருக்களுண்டுபடுகின்றன. பின்னர் புத்தி, குணம், பொறி, புலன் முதலாய தத்துவங்கள் தத்தம் அணு நுட் பத்திலிருந்தே விருத்திப்படுகின்றன. க்ஷயகாலத்து வாயு பிரியச்சே ஏனைய பூதங்களும் பிரிந்து தத்த மினத்தோடு பொருந்தும். காரிய மோய்ந்தவிடத்துக் காரணத்தோடு கலந்து ஏகமாகும். இப்படி யறிவதே மெய்யறிவு. இதை விட்டு உலக உத்பத்திக்குக் காரணரா கிய கடவுளொருவ ருண்டென்றும், அவரவர் செய்யு நன்மை தீமைக் குத்தக்க நற்பலன் துர்ப்பலன்களை மறுமையில் அவர்வருக்கு ஊட்டு விக்கிறாரென்றும், தங்களை ஞானிகளென்று நடிக்கிற சில பேதையர் பிறர் மதியை மருட்டி உலகத்திற் கிடைத்த சுகாநுபவங்களைத் தக்க காலத்தே அநுபவித்து, சுகபோக சலாக்கியங்களை நுகரவொட்டாது தடுத்துக்கூறிக் கெடுப்பதற்கு மௌட்டிய நிறைந்த மானிடத் தொகுதி

கள் அப்பேதையரான ஞானிகளுக்குச் செய்த குற்றம் யாதோ யாமறிகிலேம்.

ஆடை யாபரணம் சந்தனம் குங்கும கஸ்தூரி சுகந்தமாலிகைக ளோடுங்கூட வனிதையர் சங்க சுகபோஜநாதி போகங்களைப் பூமி யின்கட் பிரத்தியக்ஷமாகக் கண்டறிந்தும் இவற்றிற்கு மேலான சௌக் கியமில்லை யென்றெண்ணாது அவற்றைவிட்டுப்போய்ச் சுத்தமித்தை யாகிய சுவர்க்காதிபோகங் கொள்வதற்கு ஏற்ற அநுஷ்டானங்கள் பண்ணவேண்டுமென்று பிராந்தராகி மிகவுங் கிலேசப்பட்டு முயற்சி பண்ணுநிற்கு மறிவுகேடரெல்லாம் யாவர்க்கொப்பெனில்; வெயி லிலே தூரவழி நடந்திளைத்துத் தண்ணீர்த்தாக மிகுந்தபோது அவ் விடத்து நல்ல குளிர்ந்த ஜலமானதிருக்க அதனைவிட் டப்பாற் போய்க் கண்டபேரையெல்லா மெங்கே தண்ணீருண்டென்று கேட் டுச் சோகமுற்றுப் பிரயாசப்பட்டுத் திரிந்து கானலைத் தண்ணீரென் றுண்ண விரும்பிச் சலநப்படும் பேதையர்க் கொக்கும். ஐயோ! மகா தேவரென்னும் பரமேஸ்வரனானவர், பார்வதிதேவியாரை வாமபாகத் தில் வைத்தும், கங்காதேவியைத் திருச்சடையிலே தரித்துவைத் தும், மகாவிஷ்ணு மோகினிரூப மெடுத்தபோது அவரைப் புணர்ந்து மாசாத்தரைப் பெற்றும், தாருகாவனத்து ரிஷி பத்தினிக ளெல்லாரை யும் மோகிக்கப்பண்ணியும்; பிரமதேவனானவர், சரஸ்வதிதேவியை நாவிலேவைத்தும், திலோத்தமை காரணமாக மிகவும் பிரமித்து மோகமுற்றுத் தேடி நான்முகனாகியும், ஊர்வசியைக் கூடி மகருஷியா கிய வசிட்டரைப் பெற்றும்; அந்தப் பிரமதேவனுக்கும் மன்மதனுக் குந் தந்தையாகிய நாராயண மூர்த்தியானவர், மகாலக்ஷ்மியை மார் பில் வைத்தும், பதினாறுயிரங் கோபிகாஸ்திரீகளுடன் பதினாறுயிரந் திருவுருக்கொண்டு போகித்தும், பிரதாபித்தும்; முப்பத்து முக்கோடி தேவர்களுக்குக் கர்த்தனாகிய தேவேந்திரன், இந்திராணியைத் துடை யிலேவைத்துக் கூடிச் சுகித்தும், அகலிகைபொருட்டாக ஆயிரங்கண் பெற்றும், இவர்களெல்லாரும் மடவாரிடத்து விருப்பத்தாலே சொல் லுதற்கரிய மார்க்கங்களெல்லாம் பண்ணியல்லோ எல்லாரிலும் மேம் பட்டுப் பெரியரானார்கள்.

அல்லாமல், சுப்பிரமணியரானவர், தெய்வயானையைப் புணர்ந் தும், விருத்தப் பிராமணனாகியும், வேங்கை விருக்ஷமாகி நின்றும், அநேக விநோதமெல்லாம் பண்ணி வள்ளிநாயகியைப் புணர்ந்தும், அவ்விரு தேவியரையும் தமது இரு பாரிசத்திலேயும் வைத்திருந்து மிகுந்த போகமநுபவித்தும்; மன்மதன், ரதிதேவியைக் கூடிச் சுகித்து, ஜெகத்தையெல்லாம் மோகிக்கப்பண்ணும் மகத்துவமுடையவனாகி யும்; சந்திரன், அசுபதி முதலிய இருபத்தேழு பெண்களுடன் கூடிச் சுகித்திருந்து, மிகுந்த தண்ணொளியு முடைத்தாய்ப் பரமேசுரன் திரு முடியில் தரிக்கப்பெற்று மகத்துவமுடையனாகியும்; ஆதித்தபகவான், உசாதேவி பிரத்தியுச்சை யென்னுந் தேவியரைக் கூடிச் சுகித்திருந்

தும், குந்திதேவியைக் கூடிக் கன்னனைப் பயந்தும் பெரியோனாகியும், இப்படிப்பட்ட மார்க்கங்களெல்லாம் புராண சாத்திரங்களே கூற அவைகளை யெல்லாருங் கேட்டறிந்திருந்தும் யானை, குதிரை, ஆடு, மாடு, பக்ஷி யிவைமுதலான சகல ஜீவன்களும், ஸ்திரிபுமான்க ளாகக் கூடிச் சுகித்திருப்பதை யறிந்திருந்தும், அவைகளுக்குள்ள வறிவுமில்லாமல் பிரத்தியக்ஷ இன்பமாயிருக்கிற ஸ்திரீபோகத்தை விட்டு அறிவில்லாமல் மறுமை யுண்டென்றெண்ணிக் கெட்டுப்போ கிறபேருக்கு ஐயோ! மோக்ஷத்துக்குப் பெயர் கலியாணமென்றும் நிருவாணமென்றுஞ் சொல்லுகிறவர்களே, ஸ்திரீயைக் கூடி யின்பம் அநுபவித்தற்பொருட்டு மங்கல்யந் தரிப்பதற்கு கலியாணமென்றும் பின்பவளைக் கூடி யநுபவிக்குங் கிரியைக்கு நிருவாணமென்றும் பெய ருண்டாயிருத்தலால் இவை தம்மையே மோக்ஷமென் றறியாமல் வேறு மொரு மோக்ஷமுண்டென் றெண்ணலாமோ? மாணிக்கவாசக மூர்த்தி யென்னும் பெரியோர் சகலமானபேரும் பிழைக்கும்பொருட் டுத் திருவுள்ளத்திலே கிருபையுற்றிரங்கி மடவாரலியரையும் அவர்க ளைச் சுகிக்கும் போகங்களையும், அநேகவிதமாகப் புகழ்ந்தும் திருச் சிற்றம்பலக் கோவை யென்னுஞ் சிறப்புமிகுந்த நூல் நானூறு கலித் துறையாக வோதினமையானும், திருவள்ளுவரென்னும் பெரியோர் அறப்பால், பொருட்பால் இருவகை முறைமையையு மோதி பிற்பாடு காமத்துப்பாலை மிகுந்த கிருபையினாலே மிகவுஞ் சிறப்பித்து விரித் தோதினமையானும் ஸ்திரீ கூட்டரவினால் வரும் மேலான வின்பமே மெய்யென்றும், இஃதன்றிச் சொல்லப்படுவனவெல்லா மித்தையென் றும் அறிக. ஆனபடியினாலே ஈசனார் முதலான பெரியோர்களைப் போல நீங்களு மிகுந்த சிறப்புடைத்தாய்ப் பேர்பெற்று சுகித்திருக்க விரும்புவீர்களானால் சுகந்த நிறைந்த குழலினையுடைய ஸ்திரீகளு டனே விருப்போடு கூடிப் புணர்ந்தும் சுகித்தும் வல்லவாறு வாழ்வீர் களாக.

"வீட்டினை யுளதென் றோடி மெலிவதிங் கென்னை வீடு
காட்டினோர் கண்டோர் கேட்டோர் கரியவை யுண்டேற் காட்டீர்
நாட்டினி லரச னாணைக் கிசையவே நடந்து நாளும்
ஈட்டிய பொருள்கொண் டிங்கே யின்பத்து ளிசைந்தி டீரே."

இம்மட்டும் எடுத்துக்காட்டிய இவைகள் சித்தியார் முதலிய நூல் களிலிருந்து தெரிந்துகொண்ட உலகாயிதக் கொள்கையின் சுருக்கம்.

3. தேவ குருவாகிய வியாழன் கபடமாக இயற்றிக்கொடுத்த நூல் மாத்திரமன்று; அதை முதனூலாகக்கொண்டு சமஸ்கிருதம் தெலுங்கு தமிழ் முதலான இந்தியபாஷைகளில் காலந்தோறுந் தோன்றிமறைந்த காமாதுரரான சில வித்வான்களும் அந்தந்தப் பாஷைகளில் இவ்வகைப்பட்ட அக்கிரமமான நூலை யெழுதிவைத் துப் போனார்கள். அவைகள் கொக்கோகம், மதனநூல் அநேக

மான கோவைப் பிரபந்தங்களாகிய இவைகள் தமிழ்ப் பிரதேசத்தில் இக்காலம்வரையும் வழங்கிவருகின்றன. அவற்றுள் கொக்கோக மதன்னூல் முதலிய சிலவற்றை அச்சிட்டுப் பிரசித்தஞ்செய்யக் கூடா தென்று கவர்ணமென்ருர் சட்டமேற்படுத்தியுமிருந்தார்கள். அவ்வ கைப்பட்ட நூல்களுள் ஒன்றின் கடவுள் வணக்கத்தைமாத்திரம் ஈண்டெடுத்து உதாகரிக்கிறேம். அதைக்கொண்டே அந்நூல் முழுவ தும் எத்தகையனவென்று எவரும் நிதானிக்கத்தக்கது.

> "கன்னலன்றி வேம்புநுகர் காமத்து ரோகிகள்போற்
> பின்னையொரு தெய்வத்தைப் பேசோமே—எந்நாளுஞ்
> சாற்றுவதுங் காமகலை சாதிப்ப துங்கரணம்
> போற்றுவதுங் காமனடிப் போது"

என்பது மேலே காட்டிய நூல்கள் மாத்திரமல்ல, இந்துசமய புராண இதிகாச முதலிய எல்லா நூல்களும் பெரும்பாலுஞ் சிற்றின்பத்தைப் பெருக்கக்காட்டித் துரிச்சையை மூட்டிவிடத்தக்க விதமாய் அமைந் திருக்கின்றன வென்பதும் யாவரு மறிந்துகொண்டவிஷயம். தீர்க்க புத்திமானுயிருந்த திருவள்ளுவரே,

> "தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
> தாமரைக் கண்ணா னுலகு"

என்று தம்முடைய நூலில் வியந்து மெச்சிப் பேசுவாராயின் ஏனைய பண்டாரப்பாட்டுகளுக்குக் கேட்பானேன். ஆஸ்திக நெறிபற்றியோ ருங்கூடத் தங்கள் மதகிரந்தங்களில் நாஸ்திக மதோத்தாரணஞ் செய் வார்போல வேண்டிய உபகாரணங்களைத் திருத்திக்கொடுத்து வருகி ருர்களே; ஆதலாற்றான் இந்துதேசத்திலுள்ள ஆஸ்திகரிற் பெரும்பா லார் வாக்கில் ஆஸ்திகம் செய்கையில் நாஸ்திகமென்று முன்னோரிடத் திற் சொற்றும். மேலே விவரித்துக்காட்டிய சிற்றின்ப நூல்களே யன்றி இந்து வேதாகமாதிகளில் நாஸ்திகக் கொள்கைக்கு ஆதாரங் கிட்டா; எனினும் வேதாந்த ஸ்படனஞ்செய்து வருவோரெவரும் ஒருவாறு நாஸ்திகக் கொள்கைக்குக் கூட்டாளிகளாய்ச் சற்று முன் பின்னுக ஒத்தவர்கள்தாமென்பது வேதாந்த நிர்ணயமென்ற பாகத் தில் தெளிவாய் விவரிக்கப்படுவதனுல் அவ்விடத் தறிந்துகொள்க.

4. நாஸ்திகமென்று பிரத்யேகமான வொரு மதம் ஆதிதொட்டு ஏற்பட்டதுமில்லை. சந்ததி பரம்பரையாய்த் தொடுத்துவந்து உலகத் தில் நிலைப்பட்டதுமில்லை. தேசதேசங்களி லேற்பட்ட பற்பல பேதமான ஆஸ்திகமத விதி நிஷேதங்கள், சன்மார்க்க சீலங்கள், நித்ய கர்ம்மானுஷ்டானங்கள், ஜெபதப விரத நோன்புகள், இல்லற துறவற தருமங்கள் இவைகளைத் தவறுது அநுஷ்டிக்கிறவர்களுக்கு இக பர மிரண்டினுமுள்ள பலப்பிராப்திகள், இவைகளை மீறுகிற துற்ஜனருக்கு லபிக்கிற துர்ப்பலங்கள் ஆகிய நிபந்தனைகளும் பிர மாணங்களும் ஆஸ்திகமத வேதாகமாதிகளி லேற்பட்டிருக்கிற தல்

லாமலும் அவைகளை நானுதேசங்களிலுமுள்ள பிரஜைகள் யாவரும் அந்தரங்க விநய பக்தியுடனாகிலும் அல்லது பகிர்முக வேஷ மாத்திரையாகவேனும் அநுஷ்டித்து வரும்போது அவ்வகைப்பட்ட வேத நியமங்களையும் ஜன ஸமூஹங்களின் கட்டுப்பாடுகளையும் சில காலமாக அந்தரங்கத்திற் குலைத்துவிட்டு உள்ளத்தில் தேவபய மெடுபட்டு இருதயத்தில் பாவ இச்சை வேரூன்றிச் சிற்றின்பப் பிரியங் கதித்தோங்கி ஜீவசாக்ஷி மழுங்கி யாழத்திற் புதைபட்டு அகங்காரம் மேட்டிமை அடங்காமை செருக்கு முதலிய துர்க்குணங்கள் பெருகி மேலிட்டுக் காலாந்தரத்தில் தங்கள் துஷ்கிருத்தியங்கள் பகிர்முகமாக அவலம்பிக்கச்சே மரியாதைக்கேடும் அவமானமும் உலகத்தில் பலுகிப் பெருகுவதைக் கண்டறிந்து, "நிறையக் குளித்தவனுக்குக் குளிரில்லை" யென்ற வண்ணமாய் ஜனசங்கக் கூட்டுறவை யுதறிவிட்டுத் தங்கள் துராசாரங்களே சுபுத்தி பூர்வமானதென்றும், சரியான நியாயப் பொருத்தமுள்ளதென்றும் காமசுருதிக்கும் யுக்திக்கும் அநுபவத்துக்கு மொத்துள்ள சத்கர்மங்களென்றும் பிதற்றி வாய்ப்பறை யிரட்டிப் போக்குமொழிக் கூற்றுகத் தெய்வமேது, தெய்வ மேற்படுத்திய பிரமாணமேது? மோக்ஷ நரகமேது? பாவபுண்ணியப் பகுப்பேது? பலாபலங்களேது? இவைக ளுண்டெனக் கண்டவனெவன்? செத்தவன் திரும்பிவந்து சொற்ருனு? சொப்பனங்கண்டு சவடி யெடுப்பாருண்டா? கண்டதே காட்சி கொண்டதே கொள்கை. வேதாகம சாஸ்திர முதலியவைகளெல்லாம் ஜீவனோபாயமாக அவரவரே செய்த கட்டுப்பாடுகளேயன்றிப் பிறிதொன்றல்ல. உலகமும் உலகத்திலுள்ள ஆசகலமும் பிருதிவியாதி பூதங்களின் அணுக்கூட்டத்தால் தாமாய்ப் பல வேறுவகைப்பட்ட உருவங்களாகத் தோன்றி யழியத்தக்கவைகள். பிராணவாயு பிரிந்துபோகையில் அவ்வாறே ஒவ்வொரு பூதிய வணுக்களும் பிரிந்துபோகின்றனவென்று இன்னும் பலபல விதமாய் ஆஸ்திகக் கொள்கையை ஆக்ஷேபித்துப் போலி நியாயங்களைப் புகலத் துணிந்தார்கள். இப்படிப்பட்ட அவலக்ஷணக் கொள்கைகளும் அநாசாரக் கிருத்தியங்களைச் சரியென்று சாதிக்கத்தக்க ஆபாச நியாயங்களும் காலாந்தரத்தில் வரவரத் தடிப்புக்கொண்டு ஒவ்வொரு தேசங்களிலும் இதேரீதியான துராசாரக் கொள்கைகளும், துணிகரமான வாக்குவாதங்களும் வளர்ந்து பெருகித் தாயைக் கொன்றவனுக்கும் ஊரிற் பாதிப்பேர் உதவி யென்பது போல அறிவீனரும் பாவப்பிரியரும் அகங்காரிகளும் இனம் இனத்தோடே யென்ற பிரகாரம் ஒன்றுசேர்ந்ததினுல் உலகாயித முதலிய நாஸ்திகமத வேறுபாடுகள் தலையெடுத்தன. இக்கொள்கையர் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பிரகிருதத்தில் அபிவிருத்தியாகி வருகிறுர்களாம். இந்துக்கள் முற்றும் ஆஸ்திகரே. ஆனுல் விவகாரதசையில் எதிர்வாதத்துக்குச் சொல்லு நியாயங்களை நாஸ்திக வாதமென்று பெயரிட்டு வழங்குவார்களேயன்றி மற்றப்படி தங்களை நாஸ்

திகரென்றாவது நாஸ்திகக் கொள்கைகளை யுடையரென்றாவது எதிர் நின்று வாதிக்க எவருந் துணியார்கள்.

5. சர்வத்துக்கு மேலான கடவுளொருவ ருளரென்ற சத்தியத்தையும், சர்வ சிருஷ்டியும் அவர் திருவாக்கி னுண்டுபட்டன வென்ற உண்மையையும், சர்வக்ஞான அந்த ஈஸ்வரனால் கிஞ்சிக்ஞத்துவ முள்ள வான மனித சிருஷ்டிமாத்திரம் படைக்கப்பட்டனவென்ற மெய்யையும் சர்வக்ஞான சர்வேசுரன் தாமே பிரதமத்திற் சப்தரூபமாக மனிதருக்கு வெளிப்படுத்தினார். அல்லாமல் தம்முடைய கட்டளையை மனஸாரக் காத்து நடந்தால் மனுக்களுக்கு ஜீவ நன்மையுண்டென்றும், மற்றப்படி ஜீவநாசம் வருமென்றும் ஆரம்பகாலத்திலேயே வற்புறுத்தியிருந்தார். மேலும் நெறிதவறி வீழ்ந்த நரப்பிரதமருக்குப் பரம காருண்யத்தினாலே தமது திருவுளமிரங்கி இரக்ஷணியமார்க்க மிதுவாக்குமென்று கற்பித்தார். இதுவே பிரதமத்திற் பகவான் மனிதருக்கு வெளிப்படுத்திய அபௌருஷேயமாகிய முதுமூல சுருதி. இதுவே உலகத்துள்ள சமஸ்தமான நர ஜீவகோடிகளுக்கெல்லாம் பொதுவாய் வெளியிட்டருளிய இரக்ஷண்ய சத்திய வேதம். அப்புறங் காலாந்தரத்தில் அப்போதப்போது விதிநிஷேதங்களும் பிரமாணங்களும் தர்மாதர்மங்களும் சொப்பனார்த்தமாகவும் அசரீரி வாக்காகவும் தீர்க்கதரிசிகளைக்கொண்டும் அநேகவிதமான அற்புத அடையாளங்களைக்கொண்டும் வெளிப்படுத்தி யருளினார். ஜலப்பிரளயத்துக்குப் பின்னானகாலத்தில் பலுகிப் பெருகின மனுக்களின் அக்கிரமச் செய்கையினிமித்தம் மூலபாஷை வேறுபட்டு நானா திசைகளிலும் ஜனங்கள் பிரிந்துபோய்க் குடியேற நேரிட்டதில் கர்ண பரம்பரையாய்க் கேட்டறிந்து அநுஷ்டித்துவந்த முதுமூல சுருதியின் நியமங்களும் அநுஷ்டானங்களும் தாறுமாறாய்க் குழம்பி வகுப்பு வகுப்பாய்ப் பிரிந்து காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கதாக விதி வரம்புகளும் மார்க்காசாரங்களும் உடை நடை பாவனைகளும் ஒழுக்க வழக்கங்களும் பல வேறுவகையாய் மாறிப்போயின வெனினும், கடவுளொருவ ருளரென்ற சத்தியமும், அவரே இரக்ஷணிய மூர்த்தியாய்ப் பூவுலகி லவதரித்து ஆன்மாக்களுக்கு ஈடேற்றத்தை யருளுவாரென்ற நிச்சயமும், எல்லா விடங்களினுமுள்ள எல்லா மனிதருடைய உள்ளத்திலும் மாறாத சிலாசாசனம் போல, அழுந்திப் பதிந்திருக்கின்றன. இப்படியாக அங்கங்கே பிரிந்துபோன பிரஜைகளுக்குள் துவக்கத்தில் ஆருகத மதமும் பின்பு பௌத்த மதமும் அதற்குப் பிந்தியகாலத்தில் இந்தியாவில் தாத்காலம்வரை வழங்கிவருகிற சைவ வைஷ்ணவ முதலிய மதங்களும் ஒன்றின்பின் ஒன்றாக வேறுபட்டு பலபல பேதமான கொள்கைகளும் சடங்காசாரங்களும் வீணான கட்டுக்கதைகளும் தலையெடுத்து இந்தியா முழுக்க மித்தையில் அமிழ்ந்தி யிருக்கின்றன. இவ்வகைப்பட்ட மதங்களுக்குள்ளிருந்துதான் உலகாயித முதலிய நாஸ்திகக்

கொள்கைகளுந் தலை நீட்டின. தீர்க்கமாய் ஆலோசிக்குமளவில் ஒன்றுன மெய்த்தெய்வ வழிபாடும், சத்கர்மாநுஷ்டானமும், இரக்ஷண்ய வேதபாராயணமும், சுகுண சுசீல சுதர்ம்ம சுகிர்தங்களோடுங்கூடிய பரிசுத்த நடையும், அப்புரவான ஹிருதயமும், பாவ அருவருப்புமாகிய இத்தியாதி புனித லக்ஷணங்களில்லாத எந்த மதஸ்தராஞலும், எந்தத் தேசஸ்தராஞலும், எந்தப் பாஷைக்காரராஞலும் அவர்களே உலகாயிதர். அவர்களே நாஸ்திகர். அவர்களே நிரீச்சுரவாதிகளென்று சொல்வதற்கு ஆடங்க மென்னை? இல்லையென்ருகில், இரக்ஷண்ய சமயமல்லாத மற்றெந்தச் சமயமும் உலகாயித முதலிய நாஸ்திக மதங்களும் இவ்வுலகத்திற் கொஞ்சங் கொஞ்சம் விகற்பமுள்ளனவாயிருந்தபோதிலும் மறுவுலகிற்கு இவ்வனைத்தும் ஒன்றென்றே தீர்ப்படையத்தக்கது. இனி அடுத்த பிரிவில் உலகாயித மதகண்டனத்தை விளக்குவாம்.

6. உலகாயித மதத்தைப்பற்றி இதற்குமுன் விதந்தவைகளெல்லாங்கூட ஆஸ்திக நாஸ்திகமென்பன இவையென்றும், நாஸ்திகத்தில் உலகாயிதம் ஒரு பிரிவென்றும், உலகாயிதமதக் கொள்கையின் வரலாறிது அதன் சுருக்கமிதுவென்றும், இந்தக் கொள்கைக்கு ஆதாரமான நூல்களிவையென்றும் இந்நூலாதாரங்களைக் கொண்டு உலகாயிதந் தோன்ருமல் உலகாயிதர் செய்கைகளையும் ஆபாசமான அநுஷ்டிப்புகளையும் நிலைப்படுத்தவே அந்நூல்கள் தோன்றினவென்றும் கடவுளால் வெளிவந்த சமயமிது, வேதமிது. இதற்கு மறுதலைப்படுவதாகிய எந்த ஆஸ்திக மதங்களும் உலகாயித முதலிய நாஸ்திக மதங்களும் மறு உலகத்துக்கு ஒன்றேயென்றும் விவரிக்கப்பட்டன. இனி இந்தக் கொள்கையுடையார் கூறும் ஆக்ஷேபனைக்கு எதிர் நியாயஞ்சொல்லிக் கண்டிக்கவேண்டியது அவசரம்.

7. பிரமாண சகிதமாயும், சுருதி யுக்தி யநுபவ சாதனமாயும், திருஷ்டாந்த பூர்வமாயும், சர்வஜந சம்மதமாயும், அகிலலோக காரண கர்த்தாவாய், அநாதிநித்திய ஸ்வயம்புவாய், அகண்டபரிபூரண சச்சிதானந்த அதிபாரிசுத்த மெய்க்கடவுள் ஒருவருளர் என்ற உண்மையாண்டும் நிலைப்பட்டிருக்கவும், தங்கள் கண்களை மூடிக்கொண்டு சூரியனுமில்லை ஒளியுமில்லையென்று பிரத்தியக்ஷ விரோதஞ் சொல்லித்திரியும் மதியிலிகள்போல்வார் சிலர் கடவுளேயிலர், உலகமும் அதிலுள்ள சிருஷ்டிகள் ஆசகலமும் தாமாய்த் தோன்றி யழியத்தக்கவைகள், மோக்ஷ நரகமென்பன இல்லை. பாவ புண்ணியப் பகுப்பும் அவற்றின் பலப்பிராப்திகளும் இல்லை. நாம் அறிந்துகொள்ளக்கூடாத ஒரு சக்தி உலககாரியத்தை யுண்டுபடுத்துகிறதாகத் தோன்றுகிறதெனினும், அதன் சுபாவ லக்ஷணங்களும், செய்கைகளும், நமக்குப் புலப்படவில்லை. ஆகவே நமது அறிவிற்கும், புத்திக்கும், புலப்படாத ஒன்றைக்குறித்து அப்படி யிப்படியென்று கற்பிதஞ்செய்துகொண்டு ஒன்றுக்கும் நாம் கட்டுப்படவேண்டிய அவசரமில்லை. எவ்வளவோ

பெரிய இந்த உலகத்தையும் இதிலுள்ள அநந்தபேதமான சராசரப் பொருள்களையும் உண்டாக்குவதற்குக் காரணமான பெரிய வஸ்து ஒன்றிருக்கிறதென்று நாம் கற்பிதஞ்செய்துகொண்டால் அந்தப் பெரிய வஸ்து எப்படித் தானுயுண்டாகக்கூடும். கூடுமென்றால் உலகமேன் தானுயுண்டாகக் கூடாது என்று பலவாறு பிதற்றுகிறார்கள். ஆகவே அவர்கள் கூறும் ஆக்ஷேபனைகளையும் அவற்றிற்குக் கூறும் சமாதானங்களையும்பற்றிச் சித்தியாருரையில் வெளிப்பட்டவற்றிற் சிலவற்றை யிதனடியிற் காட்டுகிறோம்.

8. ஆக்ஷேபனை. கடவுள் ஒருவருளரென்றால் அவர் கண்ணுக்குப் புலப்படவேண்டும். அப்படி யெக்காலத்தும் எவ்விடத்தும் யாவருடைய கண்ணுக்கும் புலப்படாமையினால் கடவுளுளரென்று சொல்வது நம்பப்படத்தக்க தன்று.

சமாதானம். உலகாயிதா! நீ "உலகத்திற் பிறக்குமுன் உன் தந்தையும் நீ பிறந்தபின் உடனே உன் தாயும் இறந்துபோகப் பின்னர் நீ இளமை நீங்கி அறிவடைந்தபோது உன் பெற்றாரை நீ காணாமையால் அவர் உலகத்தி லிருந்திலரென்றுதான் கொள்வையோ? கொள்ளாய். அவரிருந்தனர் இறந்துபோயினரென்றுதான் கொள்வாய். அப்படிக் கொள்வது காட்சியன்று, அநுமானமாம். எறும்பு முட்டைகொண்டு திட்டையேறினால் மழை வந்ததென்று நிச்சயிப்பதும், நதியிற் பிரவாகம் வரச்சே மலையில் மழை பெய்ததினால் பிரவாகம் வந்ததென்று நிச்சயிப்பதும் காட்சியன்று, அநுமானமே. ஆயினும் இத்யாதி திருஷ்டாந்தங்களை ஒருவேளை பூர்வகாட்சி யுளதென்று சொல்லத் துணிவாய். அப்படியானால் நீ பிருதிவியாதி பூதக்கூட்டத்தினின்று ஒரு அறிவு எழுமென்பதும், பொறிவாயிலாக வுணர்ந்துகொள்வது மனமென்பதும் எந்தப்பிரமாணம்? காட்சியன்று, அநுமானமே. ஆதலில் உலகமாகிய காரியத்தைக்கொண்டு அதற்கு ஒரு காரணகர்த்தன் உளரென்று கொள்வதும் நிச்சயிப்பதும் அவ்வாறென்று அறிந்துகொள்."

9. ஆக்ஷே. பிருதிவியாதிய சாதுர்ப் பூதங்கள் நித்தியமானவை. அந்தப் பூதங்கள் தாமே பிரபஞ்சத்தினுள்ள உருக்களைத் தோற்றுவிக்கின்றன. ஆதலிற் பூதங்களுக்கு வேறாயோர் கர்த்தா வேண்டுமென்பதென்னை?

சமா. பூதங்களாகட்டும், பூதக்கூட்டத்தினின்று தோன்றுகிற உருவங்களாகட்டும், தோன்றியழியத்தக்க தன்மையுடையவைகளாயிருத்தலில் அவைகள் நித்தியமுள்ளவையல்ல. தானாய்த் தோன்றி யழியத்தக்கதுமன்று. அசேதனப் பொருள்களாம். ஆதலின் அவைகளைத் தோற்றுவிப்பவனும், அழிவுபாட்டைத் தருபவனுமாகிய கடவுள் ஒருவர் வேண்டும். குடமுதலியவற்றிற்குக் குயவனும், நீர்க்குமிழி தோற்றுவதற்குக் காற்றும் காரணமாயிருப்பதை யறிந்துகொள்.

10. ஆக்ஷே. பூதக்கூட்டமாகிய அணுக்கள் அழிந்தபோதைக்கும் அக்கூட்டத்தினின்று உண்டாகிய புத்தி ஞானம் அழியத்தக்கதன்று.

எப்படியெனில் பூதக்கூட்டத்தாலாகிய மரத்தினிலே, காய்முதலிய வைகளுக்குச் சிவப்பு முதலிய நிறங்கள் தானுயுளவாதல்போலப் புத்தி ஞான முதலிய வுணர்வுகளும் தானுகவே தோன்றும். ஆகவே பூதங்களுக்கு வேறுயோர் கடவுள் ஏன் வேண்டுமெனில்,

சமா. இலை, பூ, காய் முதலியவற்றி லுண்டுபடும் சிவப்புமுதலிய வர்ணபேதங்கள் இலை, பூ, காய்முதலியவைகள் அழியும்போது கூட வேயழிந்துபோகின்றன. அப்படியே தேகம் அழியும்போது புத்தி ஞானமும் அழிந்துபோதல்வேண்டும். அவ்வாறு புத்தியும் ஞான மும் அழியத்தக்கதன்று. ஆதலின் அவற்றைத் தரத்தக்க கடவுள் ஒருவர் வேண்டவேவேண்டும். மேலும் புத்தி முதலியன பூதக்கூட் டத்தா லுண்டுபடுமென்றுயே அதனைக் காட்சியாலறிந்தனையோ? அநு மானத்தாலறிந்தனையோ? காட்சியாலன்று, அநுமானத்தினுலேதான் அறிந்தாய். அதுபோலவே கடவுளுள ரென்பதையு மறிந்துகொள்.

11. ஆக்ஷே. பூதங்கள் சேதனப்பொருளேயன்றி அசேதனப்பொ ருளல்ல. ஆதலிற் பூதக்கூட்டத்தாலாய வுருக்கள் தோன்றி அத்தோடு நின்ற அறிவு விர்த்திப்படுகிறது. ஆகவே பூதங்களைவிட வேறொரு கர்த்தா எதன்பொருட்டு வேண்டும், அவசரமில்லையெனில்;

சமா. பூதங்கள் அறிவுடையனவென்பதை மண், நீர், நெருப்பு, காற்று இவைகளில் யாண்டுங்கண்டிலம். அவைகள் அசேதனப் பொ ருள்களேயாம். பூதங்களின் அறிவு அவற்றின் கூட்டமாகிய உருவப் பொருள்களிற்றுன் வெளிப்படுமெனில் உருவப்பொருள் சவமாய்க் கிடந்தவிடத்து அந்தச் சவத்தினிடத்து அறிவுகண்டதில்லையே. நாலு பூதங்களி லொன்றுகிய பிராணவாயு நீங்கிவிட்டதினுல் பிரேதத்தினி டத்து அறிவுதோன்றுது. சாதுர் பூதங்களுங் கூடிநின்றவிடத்துத் தான் அறிவு தோன்றுமென்பாயாகில் பிராணவாயு உடலோடு கூடி நிகழச்செயும் நித்திரையில் அறிவில்லாமலிருப்பது எதினுலோ? ஆகவே பூதங்களுக்காயினும் பூதக்கூட்டங்களுக்காயினும் இயற்கை யில் அறிவின்றென்பதாயிற்று. உருக்களை யுண்டுபடுத்துபவனும் அறி வைப் புகட்டுவிப்பவனுமாகிய முற்றறிவுள்ள கடவுள் பூதங்களுக்குங் காரணராய் வேறுளரென்று நிதரிசனமாகிறது. மேலும் அறிவை பூதங்களாலாய உடற்குணமென்றுகொள்ளில் பெரிய காத்திரமுள்ள யானைக்கு அறிவுகுறைவானேன்? சிறிய உடலுள்ள மானிடருக்கு யானையைப்பார்க்கிலும் எத்தனையோ ஆயிரமடங்கு அறிவு கதிப்பா னேன். இதைக்கொண்டுங் கடவுளுளரென்பதை யறிந்துகொள்.

12. ஆக்ஷே. உருவ அணுக்கள் அதிகப்பட்டவிடத்து அறிவு அணுக்கள் குறைவுபடுதலினுலும் உருவ அணுக்கள் குறைவுபட்ட விடத்து அறிவு அணுக்கள் அதிகப்படுதலினுலும் அறிவு பெருத்தும் சிறுத்தும் தோன்றுகிறது இயல்புதான். இதற்காகவே வேறொரு கருத்தா வேண்டுமென்ப தென்னையெனில்?

சமா. சிற்றுருவத்திலுள்ள அறிவு காலஞ் செல்ல வளர்ந்து கதிக்கின்றதை வெளிப்படையாக அறிகிறோம். பேருருவத்துள்ள அறிவு காலஞ் செல்லச்செல்ல இருந்தபடி யிருக்கின்றதேயன்றி அவ்வாறு கதிக்கக் காண்கிலம். ஆகவே பூதங்களி னியல்பன்று. கர்த்தா ஒருவர் அமைக்கும் விதமென்று அறிக.

13. ஆக்ஷே. சாதுர்ப்பூதங்கள் தாமே முதற்காரணமாய் நின்றும் ஒன்றுக்கொன்று உதவியாய்த் தம்மிலே தொழிற்பட்டும் பிரபஞ்சமுழுவதும் நாலுபேதங்களுள்ள உருவங்களாய் நிறைந்திருக்கின்றமை யியல்பாயிருக்கையில் அதை விட்டு வேறொரு கர்த்தா வுளர். அவரே சமஸ்தத்துக்குங் காரணரென்று ஏன் வலிந்து இழுத்துக்கொள்ள வேண்டுமெனில்?

சமா. அற்றன்று. சாதுர்ப்பூதங்கள் அசேதனப்பொருள்கள். தானே யொன்றுக்கொன்று உதவிசெய்வதும் உருக்களை வகுப்பதும் அதற்கு இயல்பல்ல. பூதங்களாகிய அசேதனப்பொருள்களை முதற் காரணமாக வைத்துத் தம்முடைய சக்தியையும் அளவற்ற ஞானத்தையுந் துணைக்கருவியாகக்கொண்டு தாமே நிமித்தகாரணராக நின்று சரங்களாகவும் அசரங்களாகவும் பகுத்து உலகவிருத்திக்கும் காரியத்துக்கு மேற்பச் சராசரப்பொருள்களை அநேகவிதங்களாக அமைத்து ஆண் பெண் அலியென்கிற விகற்பங்களையும் சப்தபேத ரூபபேதங்களையும் வர்ணபேதங்களையு மேற்படுத்திப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்துப் பிரதிதினமும் ஊட்டி யுறக்காட்டிச் சார்வதா நன்மையே செய்து பரிபாலித்துவருகிற பரமபதி யொருவரிருக்கின்றனரென்பதை அவருடைய சிருஷ்டிகள் யாவும் சான்று பகர்ந்துகொண்டிருக்கவும் அதை மறுத்துக் கடவுளில்லை யென்று சொல்லத் துணிவது எவ்வளவு நன்றிக்கேடு; எவ்வளவு அவிவேகம்; எவ்வளவு பாபதோஷங்களுக்குப் பயப்படாத துணிகரம். அல்லாமல் வேறென்னையென்று கொள்ளத்தக்கது.

14. கடவுளொருவ ருளரென்ற கொள்கை சுருதிப்பிரமாணங்களால் ஸ்தாபிக்கப்பட்டதும், யுக்தியநுபவ சாதனங்களால் சாத்தியப்படுத்தப்பட்டதும், தொன்றுதொட்டுள்ள ஆன்றோரெவருக்கும் ஒப்ப முடிந்ததும் சர்வஜன ஸமூஹங்களும் சம்மதமாய் அநுஷ்டிக்கத்தக்கதும் அநுஷ்டித்துவந்ததும் வருகிறதும் வருவதுமாயிருக்கிறது. இந்தச் சத்தியத்தை மறுக்கத் துணிவோரெவரும் இத்தகையரென்று;

> "உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லா ரறிவிலா தார்" என்றும்,
>
> "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
> தலகையா வெண்ணப் படும்"

என்றும் தமிழ்நாட்டுத் தீபம்போன்ற திருக்குறள் தெரிவிக்கிறது. மேலும், இகத்திலேயே புருஷார்த்தங்களை யருளத்தக்கதும், ஜெந்ம

சாபல்யத்தை விளைவிக்கத்தக்கதுமான இந்த மகாவுசிதமான கொள்கையைத் தங்கள் துர்க்குண சீலங்களுக்கும் அநாசார கிர்த்தியங்களுக்கும் ஒரு போக்குத்தேடித் திரிகின்ற சிலர் குறைகூறி மறுக்கத் துணிவது எவ்வளவு பேதமையென்பதை,

> "நீளாக் கழுவி நிழலைப் புதைத்த எப்பர்
> ஆளைப்போல் வாரென்ன லாம்"

என்ற திருஷ்டாந்தவுரை காட்டுகிறது.

15. "தேவனில்லையென்று மதிகெட்டவன் தன்னிருதயத்திற் சொல்லிக்கொள்கிறான்" (சங். 14. 1.). ஆகவே நாஸ்திகருக்கு உலக ஞானம் எவ்வளவோ அதிகமாயிருப்பினும் அவர்கள் ஆஸ்திக ஞானிக்குமுன் பேதையர்தான் என்பதற்குத் திருஷ்டாந்தமாக ஈண்டு ஒரு சிறு சரித்திரம் வரையப்படுகிறது.

இங்கிலாந்தில் ஒரு கிரகஸ்தனிருந்தார்; அவர் நாஸ்திகர். அவர் தம்முடைய வீட்டு முகப்பில் "God is no where" என்று யாவருந் தம்முடைய தீர்க்கஞானத்தை யறிந்துகொள்ளுமாறு வரைந்துவிட்டு வெளியே போயிருந்தார். அவருக்கு மனைவியும் ஒரு சிறுவனு முளர். அந்த அம்மாள் ஆஸ்திகி, அந்தத் தாயின் கரிசனையான போதனையைக் கேட்டு வளர்ந்த சிறுவனும் ஆஸ்திகன். அந்த அருமைப்பிள்ளை யேதோ தற்செயலாய் வெளியேவந்து திரும்பும்போது முகப்பில் வரைந்திருக்கிற எழுத்தைக் கண்டு வாசித்துப் பார்த்து Where என்ற வார்த்தையின் முதலெழுத்துக்கு வலப்புறமாக (காமா) என்கிற அடையாளத்தை மாத்திர மிட்டுவிட்டுத் தன்பாட்டிலே போனான். வெளியே போய்வந்த வீட்டெஜமானன் தானெழுதியதைப் பார்க்கவே God is now here என்று தானெழுதிய கருத்துக்கு மாறுபட்டிருப்பதை வாசித்துப்பார்த்து அந்தப் பொருளையுணர்ந்து சற்று கவலையோடு வீட்டுக்குட் போனபோது பிள்ளை வந்து பப்பா யாரோ வொரு மதிகெட்டவன் நம்முடைய வீட்டு முகப்பில் கர்த்தா வெங்குமில்லையென்று எழுதியிருந்தான். அதை நான் பார்த்து கர்த்தா இப்பொழுது இங்கேயிருக்கிறார் என்று அர்த்தப்படும்படி இந்த அடையாளத்தை யிட்டுவைத்தேன், பாரும் என்று சந்தோஷமாய்த் தகப்பனை யிழுத்துக்கொண்டு போய்க் காட்டினான். பிதாவோ பிள்ளையின் ஞானத்தையும் விவேகத்தையுங் கண்டு நன்கு மதித்து ஆச்சரிய பரவசனாய் இது தேவச்செயல்தானென்று உணர்ச்சியடைந்து பிள்ளையைச் சன்மானித்து அன்றுமுதல் நாஸ்திகக் கொள்கையை யொழித்துவிட்டு ஆஸ்திகக்கொள்கையை வஹித்து உத்தமனானான். இந்த நடபடியைப் பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பிள்ளையைப் பெற்ற உத்தமி கர்த்தருக்குள் எவ்வளவான மகிழ்ச்சியடைந்திருப்பாளென்பதை வாசிக்கிற நீங்களே யறிந்துகொள்ளலாம். இது கதையன்று, நடந்த சரித்திரம்.

16. சமஸ்தத்துக்கும் பரமகாரண வஸ்துவாய் முதுமூல காரணப்பொருளாயுள்ள கடவுள் ஒருவருளரென்று மேலே காட்டிய நியாயங்களால் ஸ்பஷ்டமாய் விளங்கிக் கிடந்தன. இதற்கு மேலும் அந்தக்கடவுள் எப்படியுண்டானூர் அதற்குக்காரணமாயுள்ளவஸ்து எப்படிப்பட்டது என்று மௌட்டியாகாரமாய்ப் பிரசினப்படுத்துவதை நியாயசாஸ்திரம் அநவஸ்தா தோஷமென்று வரைந்து தள்ளுகிறது. அல்லாமல் விவேகாத்துமகேசிகளாகிய மநுக்குலத்தாரெவரும் ஒப்புக்கொள்ளக்கூடியது மன்றென்று அறிக. ஆயினும் இவ்விடத்துச் சில பொது நியாயங்களைச்சொல்லி இம்மத நிராகரணத்தை முடிக்கின்றும்.

17. ஆஸ்திகருக்கும் நாஸ்திகருக்கும் மறுமைக்காரியம் ஒரு பக்கத்திலிருக்கட்டும். இம்மையிலே உண்டுபடுகிற நயநஷ்டங்களெவையென்று விசாரிக்கும்பக்ஷத்தில்; முதலாவது, ஆஸ்திகராயிருப்பவர் வானத்திற் பிரகாசிக்கின்ற நக்ஷத்திரக்கூட்டம்போன்ற பெருங்கூட்டத்தார். நாஸ்திகராவாரோ கறையான் புற்றுகளிலும், எலிப்புழைகளிலும், புதரடர்ந்த இடங்களிலுந் தன்னைமறைத்து தடியடிக் கஞ்சிப் பதுங்கிக்கிடக்கும் கொடுவிடப் பாந்தாள்போன்ற வறுங்கூட்டத்தார். இரண்டாவது, ஆஸ்திகராவார் பசுவின் கன்று தன் தாய்மடியிற் சுரக்கும் மாதுரியமான பாலை நிறையவுண்டு களித்துத் துள்ளிவிளையாடிமகிழ்ச்சியடைவதுபோல "பிதாவுமாதாவுமுன்னைக் கைவிட்டாலும் நாமுன்னைக் கைவிடோ" மென்கிற தங்கள் பரமதந்தையார் தம்முடையபிள்ளைகளாகிய மெய்த்தொண்டருய்யும்பொருட்டாய் உலகமாகிய மடியிற் சுரந்து அனவரத மூட்டுவிக்கிற சத்சாரமாகிய பயனை நிறையவுண்டு சுகித்துக் களித்து அவரை சதாதுதித்துப் பரமானந்த முறுகின்றனர். நாஸ்திகரோ பன்றிக்குருளைகள் மலநுகர்ந்து தேக்கெறிதல்போல், பாப தோஷங்களைக் கவனியாமலெவ்வகையாயினும் பொருளீட்டிப் பரக்கழியாயுண்டுடுத்து உயிரோம்பித் திரிகிறார்கள். மூன்றாவது, ஆஸ்திகர் தமது பரமபிதாவின் சித்தத்துக்கொத்த வேத நியமத்தை மீறாமல் தத்தமுறைப்படி பெண்ணைத் தேடி உத்தம விவாக முடித்து இல்லற தருமத்தை நடத்தி ஸ்திரியும் புமானும் உடலு முயிரும்போல விகற்பின்றிச் சுககாலத்துந் துக்ககாலத்தும் ஒருமித்து வாழ்ந்து பிறர்மனையவரைப் பெற்றதாயெனக் கொண்டு தங்கள் ஜீவிய ஓட்டத்தைக் கடவுளுக்கு மகிமையாயும், இதராளுக்கு உபகாரார்த்தமாயும், தங்களுக்குக் கிடைத்த தாலந்துகளை வீணாக்காமல் புத்திபூர்வமாய்ப் பயன்படுத்திவைத்துச் சமாதானத்தோடு வாழ்நாளைப் பூரணப்படுத்திக்கொள்ளுகிறார்கள். நாஸ்திகரோ கடவுளில்லை, நன்மை தீமை யில்லை, மறுமை யில்லை, மோக்ஷநரகமில்லை யென்பவராதலால் தளையவிழ்த்துவிட்ட கத்தபங்களைபோல தங்கள் மனம்போனபோக்கிலே சென்று அநியாயத்திலே பழகி மனச்சாக்ஷியைப் புதைத்துத் துர்ச்சீலம்பூண்டு முறையிகந்து நேர்ந்த பெண்

டினைத் தாலிகட்டி அவள் ஆஸ்திகத்திலுள்ள உத்தமியாயின் அவளை வழுவித் துச்சாரியாய்,

"மணிநகை யாரே தெய்வம் வாக்குப தேசங் கொங்கைத்
துணைகுரு பீடம் பாதத் தொடைவரு டுவது பூசை
யணைவது முத்தி யாசா னின்னமும் அறியாய் போலும்
கணிகையர் முகத்திற் கூறும் காமனு கமங்க ளென்றான்."

இவ்வாறு குருவை மருட்டிப் புரட்டுந் திருட்டுச்சீடராய்ப் பல்லோர் பழிக்க நல்லோர் பரிதபிக்கப் பொல்லாத் துர்வியாதிப்பட்டு யாருஞ் சீ சீ யென்றிகழ அறுதிநாளில் மனச்சாக்ஷி விழித்து,

இரக்ஷண்ய யாத்திரிகம், நம்பிக்கை நன்னெறிபிடித்த படலம்.

"ஆதி தொட்டெ னருங்கட னாற்றிய வென்னை
எதி லானென வெள்ளினை யென்மதி கொள்ளாய்
நீதி யுற்ற நெறிபிடித் தாயலை நீசப்
பாதை பற்றினை பாவிய ரோடுற வாடி. 11

உற்ப வந்தொட்டி மட்டுமு வந்துண வாதி
அற்பி னல்கி யறிவளித் தாரிடர் போக்கி
நிற்பு ரந்த நிருமல வேந்தை நினைத்துப்
பொற்பி னன்றி புரிந்திலை பேயடி பூண்டாய். 13

பொய்தி ருட்டகி யாயம்பொ றாமைபொல் லாங்கு
கைத வந்தந் திரம்கொடுஞ் சூதுவன் கண்மை
வெய்தி னாய் வினைத்திற முள்ளன வேட்டுச்
செய்து தீவிடம் ஜீவலுக்கீட்டினை தீயோய்." 14

என்று இடித்திடித்துக் கண்டித்து நிர்த்தாக்ஷண்யகரமாய் வற்புறுத்திச் சினந்து வெடுவெடுத்துப் பேசத் தன்பிழை நினைத்திரங்கி ஐயோ!

வியாக்கியானி யரமனைப்படலம்.

"நல்குமெய் மகிழ்ச்சி யென்று நனிமதி மருண்டு தீமை
மல்குசிற் றின்ப போகம் வரைவின்றி நுகர்ந்து வாணாள்
அல்கநின் றயர்ந்தே னிந்த வருஞ்சிறைப் பட்டே னந்தோ
புல்குதீ விடத்தில் ஜீவன் போமெனும் பொறியி லாதேன். 120

என்னுறு மதியீ னத்தா லியைந்ததுற் கரும மாய
கொன்னுனைப் பகழி மாரி யுளத்திடைக் குளிப்ப வேவிக்
கன்னலுற் றேனை வாளாக் கடிந்துபுண் படுத்தே னுள்ளே
மன்னிநின் றுயிரை வாட்டும் வழுவறு ஜீவ சாக்ஷி." 121

என்று பிரலாபித்து துடித்து பயனற்ற தன்னுயிரைப் போக்கடிக்கிறான்.

அமார்க்கப் படலம்.

"தேக மெடுத்தென் னாயுள்ப டைத்தென் திகழ்செல்வ
போக மடுத்தென் பல்கலை கற்றுப் புகழ்பெற்றேன்
மாக தலத்து ஜீவசு கத்தை மதியாமே
லோகம் விடுத்துச் சாநம னித்த ருலகூடே." 23

18. கடவுளொருவ ருண்டு அவரருளிய சுருதிப் பிரமாணமு முண்டு அதுவே மனித ஜீவருக்கெல்லாம் பொதுவான சர்வார்த்த சாதனமாயிருக்கத்தக்கது. கடவுள் மனிதருள்ளத்தி லமைத்துவைத் திருக்கிற ஜீவசாக்ஷியைக்கொண்டும் மற்ற மனோதத்துவங்களைக் கொண்டும், உலகஞ் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதும் பிரதிதினமும் பரிபாலனஞ்செய்யப்பட்டு வருகிறதுமான முறையைக்கொண்டும், சுருதிப்பிரமாணம் எல்லாவற்றையுங்கொண்டும் மனிதன் நன்மை தீமை பகுப்புகளையும் விதி நிஷேதங்களையும் ஐயந்திரிபற உணர்த் தப்படுகிறான். மோக்ஷ நரக பலாபலங்களுண்டென்று மனோபூர்வ மாய் நம்புகிறான். மனஸார சத்விநய பூர்வமாய் அநுஷ்டிக்கி றான். இவைகளெல்லாம் உலகத்திலுள்ள எல்லா ஒழுக்கங்களும் ஆசாரங்களும் அநுஷ்டிப்புகளும் எல்லாக்காலத்திலும் ஒத்துக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றனவேயன்றி எங்கும் பகிரங்கமாய் விரோதப்படக் காண்பது அபூர்வம். அல்லாமல் கடவுள் உலகத் தில் மனிதசமூஹங்களை சிருஷ்டிக்கிற எல்லா முறைகளையும் கவ னிக்கையில் எல்லாரும் ஒருவருக்கொருவர் அந்நியோந்நிய வைக் கியமும் பரஸ்பர உதவியுமாயிருக்கிறதற்கென்றே வெகு ஸ்பஷ்ட மாய்த் தெரியவருகிறது. இவ்வகைப்பட்ட முகாந்தரங்களையும் ஜன சங்கக் கூட்டுறவின் அனுகூலத்தையும் அஃதில்லாமையால் நேரிடும் பிரதிகூலத்தையுஞ் சற்றும் யோசியாமல் தங்கள் துரிச்சைக்குத் திர்ப்தியுண்டானால் அதுவே பரம சாயுச்சியமென்று துணிந்து சென்று அந்தகாரம் நிறைந்த நாஸ்திகப் படுகுழியிற் கண்ணை மூடிக் கொண்டு விழுந்தழிவது எவ்வளவு மதிமோசம்; எவ்வளவு பேதை மை; எவ்வளவு துணிகரம்; எவ்வளவு பாதகம்; அந்தோ! இது பற்றியன்றே நாஸ்திகக் கொள்கை யெதுவும் பைத்தியர் கொள்கை யென்றாகிறது.

19. இன்னொன்று மாத்திரம் தெரித்து இந்த உலகாயிதக் கொள் கையை முடிக்கிறோம். யாதெனில் கடவுள், வேதம், நன்மை தீமை, மோக்ஷ நரகம், பாவபுண்ணியம், மறுமைப்பலாபலம் ஆகிய இத்யா திகள் சதா வுண்டென்று உலகத்தில் ஆதிதொடுத்து வழங்கிவருகிற எல்லா ஆஸ்திகமத கிரந்தங்களுஞ் சுருதிகளுந் தெளிவாய் வெளி யிடுகிறதை உலகத்திலுள்ள சமஸ்தமான பிரஜைகளு மெய்தானெ ன்று பூரணமாய் நம்பி அவ்வெல்லாவற்றையு மொப்புக்கொண்டு சந்ததி பரம்பரையாய் அநுஷ்டித்து வருகிறார்கள். மறுமையில் தங் கள் தங்கள் கிரிகைகளுக்கு தக்க பலாபலன்களை யடைவோமென்று விசுவாசித்து வழிபடுகிறார்கள். பாவதோஷங்களுக்கு விலகிச் சன் மார்க்கப் பிரமாணங்களைத் தழுவி நடக்கிறார்கள். ஏற்றவொருகாலத் தில் தேவசந்நிதியில் நியாயத்தீர்ப்படைவோமென்று பயத்தோடும் நடுக்கத்தோடும் இதுவே ரக்ஷண்யகாலம் இதுவே தகுதியான சமய மென்று ஆத்திரப்பட்டு ஜீவரக்ஷையைப் பெற்றுக்கொள்ளப் பெரும்

பாலும் அதிதீவரமாய் முயற்சிக்கிறார்கள். அவ்வாறு முயற்சியற்று அசிரத்தையா யேனோதானோவென் றிருக்கிறவர்களை விசாரியாவா னொருவன் தன்னோடொத்த பிறனுடைய அசட்டையையும் அவனுக்கு வரவிருக்கிற பயங்கரமான முடிவையும் நினைத்து உண்மையாய்ப் பரிதபித்து;

துயிலுணர்த்து படலம்.

"உடலை யுருக்கிக் குருதிவ டித்திட் டுயிர்தந்த
கடலை நிகர்க்குங் கருணையி ருப்பைக் கருதாமே
புடவி மயக்கிற் சுழலவி டுக்கும் புலைமார்க்க
நடலையை நச்சிச் சுடலைபு காதீர் நமரங்காள்.

தீமலி கும்பி யூடுபு குத்தித் தெறுதீமை
ஆமவை யாவுஞ் சேரவெ றுத்திட் டருளாளன்
கோமகன் யேசு சாமிகி றிஸ்து குமரேசன்
நாமம்வ ழுத்தி நல்வழி கூடும் நமரங்காள்." 13

இரக்ஷண்ய நவநீதப் படலம்.

"விழிமின் மெய்வே தியரெனுங்குக் குடங்கள் விழித்து விளித்தனவால்
விழிமின் சுவிசே ஷக்கிரணம் வீசி யெழுந்தான் நீதிரவி
விழிமின் விடியா நிசிவருமுன் விரைந்து செய்வ செயவேண்டும்
விழிமின் விழிமின் பவத்துயிலை விடுமின் விடுமின் ஜெகத்தீரே." 91

என்று கரிசனையாய் அன்போடு உரக்கக் கூவித் தெருத்தெருவாய் திரிந்து துயிலுணர்த்தி ஜீவரக்ஷை பெற்றுக்கொள்ள வாருங்களென்று தூண்டித் தூண்டி யழைக்கிறான். உலகாயித முதலிய நாஸ்திகராகிய சிநேகிதரே இத்யாதி அன்பின் கிரிகைகளையெல்லாம் புறக்கணித்திகழ்ந்து நிந்தனையாய்த் துர்ப்பாஷியங்களைக் கொட்டுகிறீர்கள். ஆ! இதெப்படி அவர்கள் உங்கள் பரமாய் செய்யும் பக்ஷமான உதவிக்கு நீங்கள் செய்யும் பதிலிதுவா? உங்கள் மனஸை இவ்வாறு கடினப்படுத்தலாமா? "போனநாட் கிரங்கவும் வருமென நலோர் புகன்றதோர்ந் திலைகாணே" என்றுங் கூறியிருக்கிறார்களே, நல்லது கடைசியாய் உங்கள் தீர்மானந்தானென்ன? கடவுள் வேதமுதலிய எல்லா வைதிக அநுஷ்டிப்புக்களும் வீணென்றுதானா தள்ளுகிறீர்கள்; நீங்கள் துணிகரமாய் நினைக்கிறபடியே கடவுளில்லை மறுமையில்லை யென்று வைத்துக்கொண்டாலும் ஆஸ்திக நெறிபற்றி யொழுகுவோருக்கு வரத்தக்க நஷ்டமென்னை? யொன்றுமில்லை. சொல்லவேண்டுமானால் மறுமை யில்லையென்று போனாலும் ஆஸ்திகர் மரித்தபின்பும் இந்த உலகத்தில் அவர்களுக்கு நல்ல பேராவது நிலைநிற்கும். அது நிற்க ஆஸ்திக சித்தாந்தப்படி கடவுள் முதலிய எல்லாம் உண்டென்று மெய்ப்படுமானால் ஆஸ்திகனுக்கு இகத்திலும் நல்லபேர் பரத்திலும் தான் மனப்பூர்வமாய் நம்பித் தான் அன்புகூர்ந்து வழிபட்ட கடவு

ருடைய சந்நிதியிற்சென்று தன் பரமபிதாவின் வீட்டில் நித்திய சுதந்தரவாழியாய்ப் பேரின்ப நிலையையடைந்து சுகித்திருக்க வரும். நாஸ்திக சிநேகிதனே நீ எதிர்பாராத மறுவுலகமும் நீ உண்டென்று நம்பாமல் உன்னால் அலக்ஷியஞ்செய்யப்பட்ட கடவுளும் உன் பிரத்தியக்ஷக் காட்சிக்கு விஷயமாகும்பொழுது உனக்கு என்னவாயிருக்குமென்பதை இப்பொழுதே சற்று உன் உள்ளத்து ஊன்றி நினைத்துப் பார். ஆஸ்திக சிநேகர் பலதரம் பலவாறு சொல்லிக்காட்டிய கரிசனையான நற்புத்தி போதனைகளெல்லாம் உன்னுள்ளத்திற்கூரிய வேல் போல் தைக்க உன் ஜீவசாக்ஷி காய்ந்த நெருப்புப்பாளம்போல் உன் மனதைத் தகிக்க ஆற்றமாட்டாது ஏங்கி யலறுவாயன்றோ! சிநேகிதனே இவ்வெல்லாம் பயமுறுத்தலான வார்த்தையென்று இன்னமும் ஏமாந்துபோகாதே. உண்மையான தேவவாக்கு, மாறாத சத்தியமென்று இப்பொழுதே மனந்திரும்பிக் குணப்படு.

உலகாயித மதம் முற்றிற்று.

மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

4-ம் அத்தியாயம்.

சாங்கிய மதம்.

1. இந்த மதங் கடவுளில்லையென்கிற நாஸ்திகமதத்தைச் சேர்ந்த ஒரு பிரிவேயன்றி அதனின் வேறாயதன்று. ஆகவே கடவுளில்லையென்று சாதிக்கிற எந்தவகையான நாஸ்திகமதக் கொள்கைகளுக்கும் மாறாக மெய்யான கடவுளொருவருளரென்று காட்டியிருக்கிற பிரகரணத்தில் மேலே நியாயங்காட்டிப் போந்தாம். இங்கு நிரீச்சுர ஸாங்கிய மதத்துக்கென்று வேறு நியாயங்காட்ட அவசரமில்லை. ஆயினும் இந்த மதஸ்தர் பிரபஞ்ச வுத்பத்திக்குக் காரணமாய் கடவுள் ஸ்தானத்தில் மாயையென்ற வொரு அபாண்டப் பிரகிருதியை ஸ்தாபிக்க வருகிறார்கள். அந்த மாயை காரணமாகப் பிரபஞ்சம் உத்பத்தியாயிருக்கிறதென்கிற தப்பானகொள்கையைத் தவறென்று காட்ட அவசரநேரிடுகிறது. ஆதலால் 1. மாயை என்பது ஒரு வஸ்துவன்று. ஒன்றுமில்லாத சூன்யமே யென்றும், 2. இன்மையிலிருந்து யாதொன்று முண்டாவதில்லை யென்றும், 3. மாயைக்கு உள்ளதுபோலக் கற்பனைசெய்து லக்ஷணங்களுண்டென்று கொள்வது தவறென்றும், 4. மாயையைப்பற்றியுள்ள தப்பபிப்பிராயத்துக்குப் பேதைமையே காரணமென்றுங் காட்டி, 5. தீர்மானமிப்படியென்றும் தெரிப்பாம்.

மாயையென்பது ஒரு வஸ்துவல்ல வென்பதைப் பற்றியது.

2. மாயை, சூன்யம், இன்மை யென்பன வொருபொருட் பன்மொழி. இதனை வேதாந்திகள் மாயையென்றும், தார்க்கிகர் அபாவமென்றும், வியாகரணிகள் வ்யதிரேகம் எதிர்மறை என்றும், மாந்ரீகர் சூன்யமென்றும், சாமான்ய பிரஜைகள் எதிரீடு எதிரிடை மாயம் மயக்கம் என்றும் வழங்குவார்கள். பூர்வகாலத்திலுள்ள சாஸ்திரக்ஞரும் சாமான்யரும் விவகார தசையில் ஒருவிஷயத்தை விவகரிக்கும்போது இல்லாததை யுள்ளதென்று பாவித்துக்கொள்ளுகிற வொரு பாவனையை வைத்துத் தாங்கள் விவகரிக்கப்பட்ட துறையை முடித்துக்காட்டி வந்தார்களேயன்றி மற்றப்படி அவர்களுக்குள் மாயையென்ற வஸ்து ஒன்றுண்டென்ற கொள்கை யிருந்ததேயில்லை. இந்து மார்க்கங்களுக்கெல்லாம் முக்கிய ஆதாரமாகிய இருக்கு வேதத்திலும் மாயை ஒரு வஸ்துவென்றும், அது அதை யிதைச் செய்ததென்றும் யாதொரு வல்லமை யுள்ளதென்றுங் காட்டவேயில்லை. ஆனால் இந்து வேதங்களின் அந்தத்திற் சேர்க்கப்பட்டிருக்கிற உபநிஷத்துக்களெல்லாம் வெகுகாலத்துக்குப் பின்னுள்ளவர்களாலெழுதிச் சேர்க்கப்பட்டவைக ளென்பதற்குப் போதுமான ஆதாரம் மேலே போக்கி விவகரிக்கப்படும். அதுநிற்க, உபநிஷத்துக்களுக்கு வியாக்கியான மெழுதத் தலைப்பட்ட பிரமுகாளான சாஸ்திரிகளாலே வேதாந்தக் கொள்கை யாரம்பமாயிற்று. அவர்கள் தாம் வரவர மாயையுண்டென்றும், அது சுத்தமாயை அசுத்தமாயையென இரண்டு விதமென்றும், அம்மாயை பிரம்ம சந்நிதியில் ஜேஷ்டித்து ஜகத்தை யுண்டாக்கிற்றென்றும் இப்படியாக உள்ள வஸ்துவின் பிரபாவத்தைக் குறைவுபடுத்தி யொருமூலையி லொதுக்கிவிட்டு இல்லாததான மாயைக்குப் பிரபாவத்தைக் கொடுத்து இந்த மனோராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். சாஸ்திரிகள் மருண்டவிதமும் ஜனங்கள் மருண்டவிதமு மிதுவே. சாஸ்திரமருள் ஜனமருளென்ற இரண்டு மருட்சிக்கும் இதுவே யாதாரம். இந்த முகாந்தரத்தினாலே மாயை யதார்த்தத்திலொரு வஸ்துவல்லவென்று தெளிவா யேற்படுகிறது.

இன்மையிலிருந்து யாதோன்று முண்டாகா தென்பதைப்பற்றி.

3. யாதொரு பொருளுமற்ற சுத்த சூன்யமயமான மாயைதான் சகலலோக உற்பத்திக்குங் காரணபூதமா யிருக்கிறதென்று சொன்னால் இது நம்பப்படக்கூடியதாவென்று ஆக்ஷேபிப்போருக்குக் கானற்ஜலம், கிளிஞ்சில்வெள்ளி, தறியிற்புமான் இத்தியாதிகள் இன்மையிலிருந்து தோன்றுகிறதைக் காண்கிறோமென்று திருஷ்டாந்தப்படுத்தவுஞ் செய்கிறார்கள். காரியமப்படியன்று. சூரியப்பிரகாசத்தின் தீக்ஷணத்தினாலும் அதன் சூன்யத்தினாலும் நயனகோசரம் பேதப்படுகிறது. அந்த மாறுதலினால் உண்மைப் பொருண்மயங்கி அவ்வுண்மைப்

பொருளுக்கு ஏகதேசம் பிண்டாகாரத்தில் ஒற்றுமைப்படுகிற மித்தையான ஆரோப வுணர்ச்சியை மனசு கிரகிக்கிறது. நயனகோசரம் தனது இயற்கைநிலைக்கு வரும்போது மனசு உண்மைப்பொருளை யுட்கொண்டு ஆரோபவுணர்ச்சியை வனைகிறது. ஆகவே கானற் ஜலம் சிளிஞ்சிலாதிய பொய்த்தோற்ற மின்மையி லிருந்தல்ல! சூரிய வெப்பத்தினால் நயனகோசரம் பேதமடைய இந்த வுண்மையிலிருந்தே தோற்றப்பட்டது. இன்மையிலிருந்து எக்காலத்து மெவ்விடத்தும் உண்மைப்பொருள் தோன்றுதாதலில் மாயைகாரணமாக ஜெகத்துண்டாயிருக்கிறதென்று வாதிக்க முயல்வோருக்கு நயனகோசரம் பேதப்பட்டிருப்பதோடு சுபுத்தி தீக்ஷணமு மற்றுப்போயிற்றே வென்று ஊகிக்க நேரிடுகிறது. இதனால் உள்ளதாகிய பிரபஞ்சத்துக்கு இன்மையாகிய மாயை காரணமன்றென அறிந்துகொள்க.

மாயைக்கு யாதோர லக்ஷணமுமின்றெனல்.

4. சாங்கியர் இல்லாததாகிய மாயையொன்றுண்டென வேற்படுத்திக்கொண்டு அதற்குச் சில லக்ஷணங்களையுங் கற்பித்திருக்கிறார்கள். எவையெனில் அருவம், நித்தியம், வியாபகம், ஜடம் என்ற இவைகளே. அருவமுதலிய நான்கு லக்ஷணங்களும், உண்மைப் பொருளுக்கு உள்ளனவேயன்றி இன்மைப்பொருளுக்குள்ளன வென எவருஞ் சொல்லத் துணியார். மாயைக்கு யாதொரு உருவமுமில்லை. அருவமுமில்லை. உருவாருவமுமில்லை. அதனை யின்னதென்று சொல்ல வார்த்தையுமில்லை யென்று ஏனைய மதஸ்தருங் கூறுகின்றனர்.

கைவல்லியம் சந்தேகந் தெளிதல்.

சீடன் வினா.

“மாயை யென்பதே துடையர்யா ரெப்படி வந்தது வருவானேன்
மாயை யென்பதும் பிரமமும் வேறெனில் வஸ்துவு மிரண்டாமே
மாயை யென்பதும் பிரமமும் மொன்றெனில் வஸ்துவும் பொய்யாமே
மாயை யென்றமே கங்களுக் கொருசண்ட மாருத குருமூர்த்தி.” 94

குரு வுத்தரம்.

“அதனை இன்னதென் றுரைத்திடப் படாமையி லவாச்சியவடிவாகும்
இதத னக்குள துடலியா னுலகுமெய்யெனுமவ ருடையோர்கள்
கதையி லாதபொய் வந்ததிப் படியென்று கண்டபே ரிலைமைந்தா
விதன மாயையேன் வந்ததென் றுற்புத்தி விசார மற்றதனாலே.”

இச்செய்யுட்களானு மறிக.

மாயையுண்டென்ற கோள்கை பேதைமையுடைமை.

5. முந்தியபிரிவில் மாயை ஏன் வந்தது என்று சிஷ்யன் வினாவியதற்குப் “புத்திவிசாரமற்றதனாலே” யென்று ஞானாசாரியர்

பிரதியுத்தரஞ்சொல்லியிருக்கிறர். இதனாலே புத்திதீக்ஷணமுந் தீர்க்க விசாரணையுமுள்ளவர்களிடத்து மாயையணுகாது என்றும், அவ்விரண்டுமில்லாத பேதைகளைத்தான் மாயை பீடிக்கிறதென்றுமாகிற தல்லவா? ஆம். மாயையுண்டென்ற கொள்கை எல்லாஞ் சூன்யமென்று மருட்டி யிருட்படுகரிற் கொண்டுபோயமிழ்த்திவிடுமென்பதிற் சந்தேகமென்னவிருக்கிறது. இங்கிலீஷ் கணக்குச் சாஸ்திரத்தில் மாயையுண்டென்ற கொள்கைக்கு வரத்தக்க பலப்பிராப்தி யிவையென்று காட்டுகிற ஒரு திருஷ்டாந்த முண்டு. என்னெனில்;

எண்ணின் கிஞ்சித்துப் பாகமுமில்லாமையைக் காட்டுகிற (0) சைவரென்ற இந்த சின்ன அடையாளத்தைக்கொண்டு உள்ளதாகிய எண்ணை அல்லது எண்களை உறழ்ந்தாலும் அல்லது ஈந்தாலும் வரத்தக்க பேறு ஒன்றுமில்லை. உறழ்த்தற்காவது ஈதற்காவது நேர்ந்த எண்ணோ அல்லது எண்களோ நிர்ச்சலனமாய் இருந்தது இருந்தபடியேயிருக்கும். அப்படியே மாயையாகிய சைவனைக்கொண்டு சாங்கியனே நீ ஜெகத்தை யுறழ்ந்தாலும் ஈந்தாலும் உனக்குக் கிடைக்கத் தக்க பேறும் சைவர்தான். ஜெகமோ உள்ளது உள்ளபடியேயிருக்கும். உனக்குக் கிடைக்கிற பேறுஞ் சைவர்தா னென்றதைப் பலனில்லாமற்போனாலும் போகட்டுமென்று பேதைமையாய் அர்த்தப்படுத்தாதே. இன்மையால் வரும்பேறு இன்மைதான். ஆனால் ஜெகத்தைப்படைத்துக் காப்பாற்றிவருகிற ஜெகதீசன் அவரவர் கிரியைக்குத்தக்க பலப் பிராப்தியைக் கொடுப்பாரென் றறிந்து ஆஸ்திகநெறியில் திரும்பி ஜென்ம சாபல்யத்தை நாடு. ஏனென்றால் கடவுள் உண்மைப்பொருள். உண்மைப்பொருளை உண்மையாய் சேவிக்கிறவர்களுக்கு உண்மையாகவே நற்பலன் கிடைக்குமென்பது முண்மை. இன்மையைச் சேவிக்கிறவர்களுக்கு உண்மைக்கடவுள் ஆஸ்திகநெறியை விலகியோருக்குக் குறித்தபலன் அவனைவிட்டு நீங்காதென்றும் அறிந்துகொள்.

6. மேலே காட்டிய நியாயங்களினாலும், திருஷ்டாந்தங்களினாலும், மாயை என்பது ஒரு வஸ்துவல்லவென்றும், வெறும் பாழான சூன்யமேயென்றும், ஆதலால் அந்தச் சூனியம் ஜெகத் உத்பத்திக்குக் காரணமாக மாட்டாதென்றுந் தீர்மானிக்கப்படுகிறது. மேலும் இன்னொன்று, இந்த சாங்கிய மதநூலைச் செய்தவர் பூர்வத்தில் கபிலரென்ற பெயருள்ள ஒரு பெரிய ரிஷி. இவனை வைஷ்ணவ சமயக் கடவுளாகிய விஷ்ணுவின் அவதாரமென்று விஷ்ணுபக்தரும் சிவபக்தரும் சாதிக்கின்றனர். அந்த விர்த்தாந்தங்களை அவதார நிர்ணய

மென்ற பாகத்தில் தெளிவாயறிந்துகொள்க. ஆண்டு கபிலனைப்பற்றி யும் அவர் செய்த நூலைப்புற்றியும் விவரிப்பாம். இனிப் பௌத்த மதக் கடவுள் எத்தகையரென ஆராய்குதும்.

சாங்கிய மதம் முற்றிற்று.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

5—ம் அத்தியாயம்.

பௌத்த மதம்.

1. இந்த மதம் புத்தமுனிவனால் ஸ்தாபிக்கப்பட்ட தாதலில் பௌத்தமத மென்னப்படுகிறது. இந்த மதாநுசாரிக ளெவரும் ஈஸ்வரனும் ஆத்மாவுமில்லையென்ற கொள்கையையுடையர். ஆதலின் நாஸ்திகரா யொத்தவரெனினும் புத்த ஸ்வாமியாரை மதிக்கு மதிப்பு ஆஸ்திகராவார் கடவுளுக்குச் செலுத்தும் ஸ்துதி தோத்திர வந்தன வழிபாடுகளை யொத்திருத்தலில் அந்தக் கொள்கை தவறென்றும், புத்தன் சாமான்ய மனிததேகியென்றும், ஜெனன மரணத்துக் குட்பட்டவ னென்றும், ஆகவே யவனை யுத்தேசித்துச் செய்யுங் கருமங்கள் விழலுக்கிறைத்த நீர்போல்வதென்றும், புத்தனுக்குத் தேவத்தன்மை சிறிதுமில்லையென்றும் இவ்விடத்துத் திருஷ்டாந்தப்படுத்துவாம்.

புத்தன் சரித்திரசாரம்.

2. புத்தன் மனிதனாகப் பிறந்து சில வருஷங்களாக உலகத்திற் சஞ்சரித்து முனிவனென்று பெயரெடுத்துக் கடைசியில் தேகவியோக மானவர். தாய் வயிற்றிற் கர்ப்பமாயிருக்கையில் சகலரும் பிறக்கிற முறைப்படி பிறந்தால் ஆசுசமுந் தீட்டுமுண்டாம். மேலும் வழக்கப் பிரகாரம் பிறக்கிறவர்கள் எவ்விதத்துஞ் சாகவேவேண்டும். மரணத் துக்குத் தப்ப வகையில்லை. ஆதலினது கூடாதென்று தாய் வயிற் றைப் பீறிக்கொண்டு வெளிப்பட்டாரென்றும், அதே காரணத்தால் தாய் ஏழாநாளில் மரித்துப்போனாளென்றும் விம்பசார கதை யென் கிற புத்தமத காவியமொன்றில் "உலும்பிலி வனத்துளொண் குழைத் தேவி, வலம்படு மருங்குல் வடுநோயுறாமல், ஆன்றோ னவ்வழித் தோன்றின னாதலில், ஈன்றோ னேழாநாள் இன்றுயிர் வைத்தான்" என்று சொல்லியிருக்கிறது. அல்லாமல்; "முத்தராம் புத்தர் தோன் றித் தாய்பமுவை முறித்தேயிட்டார், கொத்துவாழ் குழலாளாருங் குண்டல கேசியாருங், கத்திருவாங் கணவனக்காள்தனையுங் கொன் றிட்டார், இத்துணையாரிருவரும் வந்திங்ஙனே தவமுனாப்பார்"

என்று சைவர் கூற்றென்றைச் சித்தியார் உதாகரிக்கிறுர். புத்தர் தேகவியோகமாகி அரசமரத்து நிழலிலமர்ந்து எழுந்தருளிய பின்னர் அவர் எலும்புகள் தாது நாயனுரென்றும், தாடக நாயனுரென்றும் பெயர் தரிக்கப்பட்டு அந்த நாயன்மார்கள் இன்றுகாறும் ஸ்மிருதி (தர்மசாஸ்திரம்) சொல்லிக்கொண்டிருக்கிறுர்கள் என்பதும் புத்தமதஸ்தரின் ஐதீகம். அல்லாமல்; புத்தர் உலகத்திற் பிறந்த நோக்கமும் அவருடைய பிரவர்த்திப்பும் தன்பொருட்டே யன்று. பிறர் பொருட்டே யென்றும், "அலகிறந்த பிறவியிற் பிறந்து சங்கார ஜீவன்கள் படுகிற இடுக்கண்களைக் கண்டு கருணுபரவசனுகி எண்ணிறந்த பிறப்பி னுருயிரங் கற்பம் "பிறர்க்குழன்றுன்" என்றும், புத்தன்தானே யொருங்கால் "யான்கண்டீர் நோன்பீர்காள் முன்னையோர் பிறப்பின் முயலானேன்" என்று சொன்னுனென்றும், இந்தப் புத்த ஸ்வாமியார் தாஙெழுந்தருளப்போகிற அரசமரத்தையும் தான் இனி உபதேசிக்கப்போகிற பௌத்த திருக்கூட்டத்தையும் வடதிசை நோக்கிக்கண்டு தாம் ஞானத்தை யடைந்தாரென்றும், புத்த தேவருக்கு ஞாதியாவாஞெருவன் அந்தகனென்பான் அவனுக்குத் தர்ம உபதேசம்பண்ணித் தவப்படுத்திப் பிடகமோதுவிப்ப அவன் நித்திரா சமயத்துத் தனது ஸ்திரீயாகிய பாசுந்தரி யென்று வாயாற்ற அந்த வேட்கையைத் தவிர்ப்பான் வேண்டித் தேவலோகத்து அப்ஸா ஸ்திரீகளைக் காட்டிப் பாசுந்தரிமே லுபேக்ஷையைப் பண்ணுவித்தலுற, அவனும் அப்ஸாசுக்களைக் கண்டு ஸ்திரீவேட்கை மிகுத்துத் தபசு விட்டுப் போயினன்" என்றும், சித்தியார் மூலமாய் வெளியாகிறது. ஈண்டெழுதிய புத்த சரித்திர சாரத்தைக் கவனிக்கையில், (1) புத்தன் மனிதனுகப் பிறந்திறந்துபோன வொரு மனிதன்தானென்றும், (2) அவன் தன் தாய் வயிற்றைப் பீறிக்கொண்டு வெளிப்பட்டதினுல் தாய் மடிவாளென்று முன்னுறவறியும் அறிவில்லாதவனென்றும், (3) தாயைக்கொல்லுங் கொலைபாதகத்துக்கு அஞ்சாதவனென்றும், ஆகவே (4) கொலைபாதகத்துக்கு அஞ்சாதவன் மற்றெந்தப் பாவத்துக்கும் அஞ்சத்தக்கவனல்லனென்றும், (5) பாபதோஷங்களுக்குப் பயப்படாத இவன் அஹிம்ஸா தர்மத்தைத்தான் வகிக்கவாவது சாது தர்ம ஞானத்தைப் பிறருக் குபதேசிக்கவாவது அருகனுகானென்றும், (6) அவன் தவவேடங்கொண்டு பிரபஞ்சத்து நடித்த நடிப்பைப் பிரஜைகள் மெய்யென்று நம்பியலைந்ததும் அலைவதும் வீண்பிராந்தி யென்றும், (7) புத்த சரித்திரத்தின் முக்கியபாகம் முழுக்கட்டுப்பாடான பொய்யென்றும், (8) ஆதலிற் புத்தனைக் கடவுளைப்போலப் பாவிப்பது வீணுன பைத்தியக்கொள்கை யென்றும் பட்டப்பகல்போல வெளியாகிறது.

3. புத்தமதஸ்தர் முக்திகூடிய புத்தனே பாமேஸ்வான், வேறு ஈஸ்வானிலன் என்பர். முக்தியை யருளத்தக்க ஈஸ்வானுமில்லை. முக்திநிலை கூடத்தக்க ஆத்துமாவு மில்லையென்று மறுக்கிற இவர்

முக்தியைப்பற்றிப் பேச வாய்திறக்க நீதமில்லை. இவர்க்கு முக்தி யாவது அரசமரத்தடிச் சமாதியேயாம். இதைவிட்டு புத்தன் முக்தி கூடி யீஸ்வர னானென்றால் அவ்வாறு முக்திகூடிய யாவரு மீஸ் வரனாக வேண்டுமன்றோ, அப்படியானால் இதுகாறும் எத்தனையோ கோடி யீஸ்வரருளராதல் வேண்டும். இந்த ஈஸ்வரருக்கெல்லாம் வேலையென்ன? எல்லாரும் உலககாரியம் பார்க்கிறார்களெனில், எத் தனையோ வருஷங்களுக்குமுன் உலகம் நாசமாயிருக்கவேண்டும். அவ்வாறு உலக நாசமாகாமல் ஒரு நெறித்தாய் நடைபெற்று வருதலி னால் அவர்கள் கொள்கை தவறென்பதும் ஈஸ்வரனொருவருளரென் பதும் நிதரிசனமாகிறது.

4. ஈஸ்வரனுமில்லை ஆத்துமாவுமில்லை யென்பவர் முக்தியுண்டு அதையடையத்தக்கவரு முளரென்று கொள்வதெப்படி? முக்தியாவது கடவுள்நெறியைக் கடைப்பிடித்துத் திரிகரணசுத்தியாய் வழிபட்ட ஆன்மகோடிகளுக்குக் கடவுளாலேற்படுத்தி வைத்திருக்கிற பேரின்ப நிலையாம். அதை யடையத்தக்கவரும் ஈஸ்வரனுண்டென்ற ஆஸ்தி கரே. ஏனையர் நாஸ்திகர். அவருக்குக் கதி யதோகதியென்றுதான் கடவுள்மொழி கூறுகின்றது. அல்லாமல்; "தெய்வ மிலதென்பார்க் கில்லைத் தம்மின் புதல்வர்க்கன்றே பலகாலுஞ் சொல்வார் பயன்" என்று உலகநீதியுஞ் சொல்லுகிறது. இதையெல்லாம் விட்டு ஆத்துமா வில்லாத புத்தர் முக்தி கூடுவாரென்றால் அவர் மரித்தபின்னர் அழுகி நாற்றமெடுக்கத்தக்க பிணமா முக்திக்குப் போகிறது? அணுக்கூட் டத்தாலாகிய அறிவும் அவ்வணுக்களோடு ஒழியத்தக்கதாயிற்றே? பின்னை முக்தி கூடுவது யாது? முக்தி கூடுவதன்று. ஆத்துமாவில்லாத புத்த முனிவருக்கும், அவனைவழிபடும் பௌத்தருக்கும், ஸமாதி ஸ்தானமே பேரின்ப நிலையென்றாகிறது.

5. ஆஸ்திகநெறியை விட்டு விலக்கி நாஸ்திகமென்கிற பாழ்ங் கிடங்கில் கோடாகோடி யாத்துமாக்களைக் கவிழ்த்த ஜீவநாசகண்ட கனாகிய புத்தமுனிவனை வழிபட்டு அவனுபதேசத்தைக் கடைப்பி டித்து மறுமையில் முத்தியின்பமடையத் தெண்டிப்பது எதுபோலி ருக்கின்றதெனில் ஜென்மத்தரித்திரனாகிய கோவணாண்டி யொரு வனை யடுத்து ராஜ ஐஸ்வரியமடையப் பிரவர்த்திப்பதுபோலும், எட்டிமரத்தைக் கிட்டி ஜம்பு நாவற்பழமேனுந் திராதபக்ஷம் அதிமா துரியமுள்ள முப்பழங்களி லேதேனும் பழுத்துளவாவென்று மரத் தைச்சுற்றித் தேடுதல்போலும் நிஷ்பிரயோஜனமாமேயன்றிக் கிஞ் சித்தும் பயன்படாவாம். இவ்வாறு புத்தனைத்தவிரத் தங்களுக்கு ஈஸ்வரன் வேறொருவரிலரென்றும், பிருதிவியாதி பூதங்களின் சேர்க் கையால் பிரபஞ்சந் தோன்றுகிறதென்றுஞ் சொல்லுகிற இந்தத் தப் பான கொள்கைக்குத்தக்க எதிர்நியாயம் இதேகொள்கையையுடைய உலகாயிதனை யுள்ளிட்ட நாஸ்திகருக்கு பொதுப்பிரமாண முற்பாகத்

திலும், நிரீச்சுரசாங்கிய நிராகரணத்திலும் அடங்கியிருத்தலால் அவற்றோடு ஒட்டி யுப்த்துணர்ந்துகொள்க. இந்த மதத்தின் மற்றைய தவறான கொள்கைகள் அந்தந்தப் பிரகரணத்திற் கண்டிக்கப்படும். இனி அருகக்கடவுள் எத்தகையரெனப் பார்ப்பாம்.

பௌத்த மதம் முற்றிற்று.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

6–ம் அத்தியாயம்.

ஆருகதம்தம், அல்லது க்ஷமணமதம்.

1. அருகனுக்குத் தேவலக்ஷணங்கள் பொருத்தமுள்ளனவாவென்று ஆராய்ச்சிசெய்து நிர்ணயப்படுத்துமுன் அருகசமயம் எத்தன்மையது. அருகன் கடவுளானவித மெப்படி யென்பதை ஆரம்பத்திலேயே நன்றாய்த் தெளிவுபெற விளக்கிக்கொள்ளவேண்டியது அவசரமாயிருக்கிறது. ஏனெனில் விவாதாம்ஸப் பிரகரணத்தில் குறிப்பிட்ட விஷயங்களைக்கொண்டு வாசிக்கிறவர்களுக்கு அருக சமயம் அவ்வளவாய் விளங்கமாட்டாதென்பதை யுத்தேசித்து ஈண்டு சற்று விபரமாய்க் காட்டுகிறோம்.

இது புராதன சமயம்.

2. அருக பரமேஸ்வரனை வழிபடுஞ் சமயம் ஆருகத மென்னப்படுகின்றது. இந்த மதஸ்தருக்கு ஆருகதர் க்ஷமணர் அமணர் கொல்லாவேதிகள் என்று பெயர். இந்துதேசத்தில் தாத்காலத்தில் பிராபல்ய மடைந்திருக்கிற சைவம் வைஷ்ணவமென்ற மதங்கள் உத்பத்தியாவதற்கு வெகுகாலத்துக்குமுன் ஆரம்ப காலத்திலேயே இந்த க்ஷமணமதம் உத்பத்தியாயிருக்கிறதென்று சில பல ஹேதுக்களைக்கொண்டு இங்கிலீஷ் சாஸ்திரிகள் நிதானிக்கிறார்கள். எப்படியெனில் இந்துதேசத்திலுள்ள பற்பல நாடுகளிலும் நகரங்களிலும் கிராமாந்தரங்களிலும் அதிபூர்வீகத்தேயுளவாயிருந்த சைந விக்கிரகக் கோவில்கள் காலாந்தரத்தில் பாழ்பட்டு அவைகள் இருந்தவிடமுந் தடந்தெரியாமல் பூமிக்குள் புதைந்துகிடந்து பிற்பட்டகாலத்தில் வெளியாகித் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்டதில் அவற்றின் பூர்வோத்திரங்களை விளக்கிக்காட்டுகிற சிலாசாசனங்கள் அகப்பட்டன. அவற்றைக்கொண்டும், இரண்டாவதாக இந்துதேசத்தில் வழங்குகிற கணக்குசாஸ்திரம், இலக்கணசாஸ்திரம், சோதிடசாஸ்திரம், வேத

சாஸ்திரம், அதிபூர்வீகத்தி லுண்டுபட்டனவாய பேரெடுப்புள்ள இலக்கிய நூல்கள், நிகண்டு, திவாகரம், அமரமுதலிய கருவிநூல்கள் ஆசகலமும் சைநசமயத்துளராயிருந்த பூர்வீக மஹாவித்துவான் களாலே யமைக்கப்பட்ட நூல்களாம். இந்துதேசத்து வழங்குகிற சமஸ்கிருதமுதலிய எல்லாப் பாஷைகளிலும் உண்டுபட்டிருக்கிற நூல்கள் முழுக்கவும் க்ஷமண சமய வித்துவான்களாலே யமைக்கப் பட்டவைகளென்பது சந்தேகிக்கத்தக்க விஷயமல்ல. ஏனெனில் சைவ வைஷ்ணவமாதி ஏனைய சமயங்கள் தோன்றுமுன் ஆரியா வர்த்த வாசிகளாயிருந்த முனிவரர், தபசிகள், மயித்திரேயர் முதலான ரிஷிபுரோக்தங்கள் ராஜபரம்பரைகள் பிரஜைகள் யாவரும் அருகசமயத்தராயும் லலாட சூன்யராயுந்தா னிருந்திருக்கிறார்கள். காலஞ்செல்லச்செல்ல அருகசமயாசாரங்கள், விரதங்கள், நோன்புகள், அநுஷ்டானங்கள், கொல்லாமை முதலிய கொள்கைகள் இவ்வகை யாகிய நிர்ப்பந்தமுள்ள ஏற்பாடுகளுக்குஅடங்கியிருக்க மனமில்லாத காரணத்தால் திருகிக்கொண்டு அந்தக் கொள்கைகளை யுதறிவிட்டுத் தங்கள் தங்களிஷ்டப்படியே ஜனங்களுடைய போக்குகளுக்கிசையச் சில சில ஏற்பாடுகளை ஸ்தாபிக்க முயன்றார்கள். அந்தக்காலந்தொடங் கித்தான் ஆரம்பத்தில் ஊர்த்தகோபியும், பின் ஊர்த்ததிரிபுண்டரம், திரிபுண்டரம், சந்தனக்கீற்று, சந்தன திலகம், குங்கும திலகம், விபூதி தூளிதம், விபூதிப்பூச்சு, மாத்துவ சின்னங்கள், சங்கு சக்கராங்கி தங்கள் ஆகிய பல வேறுவகைப்பட்ட மார்க்க அடையாளங்களை நெற்றியிலும் மற்ற அங்கங்களிலுந் தரித்துக்கொள்ளவும், ஒரு மதஸ் தர் மற்ற மதஸ்தரினின்றுந் தங்களை வேறுபடுத்திக்கொள்ளவும் தலைப்பட்டார்கள். சைவ வைஷ்ணவ சமயகர்த்தாக்களும், சில் லறைத் தேவர்களாகக் குறிப்பிடப்பட்டவர்களும் எல்லாம் அருக சமயத்தவருமாய் அந்த மார்க்கத்தில் முதிர்ந்த பக்திமான்களுமாயி ருந்து வழிபட்டவர்க ளென்பதினாலேயே அவரவர்பேருக்குப் பிரதி மைகளை யுண்டுபண்ணித் தாத்காலபரியந்தம் க்ஷமணர் அவைகளைப் பூஜிதைசெய்து கௌரவப்படுத்திவருகிறார்கள், இந்த விபரங்களெல் லாம் அருகசமய வேதாகம சாஸ்திரங்களிலும் புராண இதிகாச கிரந்தங்களிலும் தெளிவாய்க் கண்டறிந்துகொள்ளலாம். அந்த ருசுக்களைக்கொண்டும் அருகசமயமே இந்துதேசத்துச் சமயங்களுக் கெல்லாம் முந்திய பூர்வீக சமயமென்று இங்கிலீஷ் சாஸ்திரிகள் நிர்ணயித்திருக்கிறார்கள். ஒன்றைச் சுட்டிச்சொல்ல வேண்டுமானால், அருகசமய நூலாகிய ஜீவக சிந்தாமணியை ஆதியோடந்தமாக வாசித் துப் பார்ப்பவர்கள் இந்துக்களிடத்து இன்றளவும் வழங்கிவருகிற சகலவிதமான சடங்காசாரங்கள், ஆன்னிகங்கள், வழிபாடுகள், ஆசாரங்கள், கிரகச்சித்திரங்கள், இன்னும் அநேகமான வழக்கங்கள் இவ்வெல்லாவற்றிற்கும் மூலமான ஆதாரவிதிகள் வெகுதெளிவாய்க் காட்டப்பட்டிருக்கின்றன வென்பதை யறிந்துகொள்வார்கள். மற்றச்

சமயநூல்களில் இவ்வளவு திட்ப நுட்பமாய் அவைகள் வெளிப் படக் காண்கிலம். எல்லாம் அருகசமயத்தவர் அநுசரித்துவந்த ஒழுக்க வழக்கங்களின் சிதைவுகளேயன்றி யவ்ரவர் தங்கள் தங்கள் சமயத்துக்கென்று மாத்திரம் ஏற்படுத்திக்கொண்டவைக ளல்லவெ ன்று தெளிவாகிறது. அருகசமயத்தில்மாத்திரம் மேலே விதந்த ஒழுக்க வழக்கங்களுக்குப் பூரணவிதி கிரந்தங்களிருப்பதினாலும் ஏனைய சமயநூல்களில் அவ்வாறு விதி நிஷேதங்க ளேற்படாமை யாலும் ஏற்பட்டவைகளுங்கூட அதை யொட்டிச்சிதைவு பட்ட தென்று தெரியவருகிறதினாலும் அருகசமயமே இந்துதேசத்துப் புரா தன சமயமென்று மெய்ப்படுகிறது.

அருகன் கடவுளானதற்கு மூலம்.

3. இந்துதேசத்திலுள்ள ஜனங்களுக்கென்று பிரத்தியேகமாகத் தெய்வவெளிப்படுதல் உலகசிருஷ்டி தொடங்கி யின்றளவு மெந் தக்காலத்திலாவது உண்டென்று சொல்வதற்கு ஹேதுவுமில்லை அவசி யமுமில்லை. உலகமுழுக்கவும் உள்ள சர்வஜனங்களுக்கும் தெய்வ வெளிப்பாடு வேண்டியது இன்றியமையாத விஷயமும், அத்தியந்த ஆவலியகமுமானதுதான். ஆயின் எவருக்கும் பொதுவாய் மத்தி யஸ்தானத்தில் பிரஜைகள் பெருகியிருக்கிற இடத்தில்தான் தெய்வ வெளிப்பாடுண்டாகவேண்டும். அப்படியே ஏற்றகாலத்தில் அள விறந்த நிதரிசனங்களோடு தெய்வ வெளிப்படுதலுண்டாகியு மிருக் கிறது. ஏதோ வொரு தேசத்தில் தேவசித்தம் வெளிப்பட்டிருக்கிற தென்றால் அது எங்களுக்கு எப்படித் தெரியவருமென்று சில மத ஸ்தர் ஆக்ஷேபிக்கவுங்கூடும். அந்த ஆக்ஷேபனை நியாயாகிதமானது, எப்படியெனில் ஏக சக்கரவர்த்தி யொருவன் தன்னுடைய பிரஜைகள் இன்னபிரகாரம் இறைவரி முதலியவைகளை ராஜாங்கத்துக்குச் செலுத்தி இன்ன இன்ன விதி விலக்குகளைக் கைக்கொண்டு தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று பிரமாணத்தைச் சித்தஞ்செய்து தன்னுடைய காரியஸ்தர் மூலமாய்த் தன்னுடைய முத்திராங்கிதம் செய்த பத்திரத்தைக் கொடுத்து ராஜ்யமுழுவதும் விளம்பரப்படுத் தும்படி கொடுக்கிறான். அரசன் காரியஸ்தர் அவ்வாறு விளம்பரப் படுத்துகிறார்கள். பிரஜைகள் கேட்டு அரசன் கட்டளைக்கு அடங்கி நடக்கிறார்கள். அப்படிக்கன்றி இது ராஜகட்டளையன்று, நாங்கள் ஒப்புக்கொள்ளோம். அரசன் முத்திராங்கித சஹிதம் தனித்தனி யெங்களுக்குக் கொடுக்கவேண்டும். அப்போதான் நாங்கள் கீழ்ப் பட்டிருப்போமென்று விளம்பரத்தை யசட்டைசெய்து அக்கிர மஞ்செய்யத் தலைப்படுவார்களாகில் ராஜதண்டனைக் குள்படவேண் டியது வருமல்லவா? அவ்வாறே கடவுளும் தம்முடைய சித்தத்தை ஏற்றகாலத்தில் ஏற்றஸ்தானத்தில் கிரமேணதம்முடைய காரியஸ்தர் வசம் (ஒரு எழுத்தின் ஒரு சிறிய உறுப்புக்கும் பின்னம் நேரிடாத)

பரம சாசனத்தை முத்திரையிட்டுக் கொடுத்து விளம்பரப்படுத்தி வருகிறார். அத்தை யங்கிகரியோம், எங்கள் தேசத்துக்கும் எங்கள் கிராமங்களுக்கும் எங்களுக்குந் தனித்தனியாயும் தெய்வ வெளிப் படுதல் வேண்டுமென்று திருகி மாறுபட்டு நிற்பதும், அந்தப் பரம கட்டளையை அசட்டை செய்வதும் நியாயமாகுமா? தர்மமாகுமா? ஆகாது. கடவுளுடைய சித்தத்துக்குச் சர்வ சிருஷ்டிகளும் அடங்கி நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றன. இந்த நியாயத்தை மேலேபோக்கி விவரமாய்க் காட்டுதும். இந்துதேசத்தில் தேவசித்த வெளிப்படை யொன்று வேண்டுமென்றும் தாங்கள் அறிவிற் குறைவுள்ளவர்க ளென்ற அந்தப் பரம ஞான முதிக்காமலுமிருந்த அந்தப் புராதன காலத்தில் பரவியிருந்த ஜனங்களுக்குள் அக்காலத்துக் கல்வியறி வும் புத்திதீக்ஷண்யமும் தீர்க்க விசாரணைசெய்து வெகுதூரம்போ யெட்டிப்பார்க்கத்தக்க மனோசக்தியுமுள்ள துறவிகள் முனிவரர் மகாரிஷிகள் ஆகிய இவர்கள் உலகமும் இதிலுள்ள பொருள்களும் எப்படி யுண்டாயிருக்கலாம். உலக சம்ரக்ஷணை யெப்படி நடந்து வருகிறது, தோன்றி விளங்கி மறைந்துபோகிறவித மெப்படியாகக் கூடுமென்ற இவ்வகையான பிரசினங்களைச் சிந்தித்துத் தங்கள் தங்கள் விசாரணையில் வந்தெட்டினமட்டுக்கும் தத்தம் அபிப்பிராயத்தை யெழுதிவைத்தார்கள். அப்படி யெழுதிவைத்தவர்களுக்குள் மகா கடுமையான கோர தபசுசெய்து சாத்தியப்பட்ட அருகனென்று பெய ருள்ள சிறந்த ஞானியுமொருவர். அவர் ஆரம்பத்தில் எழுதிவைத் துப்போன அபிப்பிராயம் இது. யாவெனில்:—

காலம், ஆன்மா, தன்மம், அதன்மம், புண்ணியம், பாவம், ஆகாயம், அணுவாய்த் திரண்டு ஆன்மத்தன்மை பொருந்தின புற் கலம், பந்தம், வீடு, ஆகப் பத்தும் ஒருவராற் படைக்கப்படா தனவாய் அநாதியாயுள்ளனவென்றும், ஆகாயத்திலடங்காப்பொருள் இல்பொருளேயென்றும், உயிரல்லது ஆத்துமா என்பது ஞானதரி சனமேயாம். அது கிரியாலக்ஷணத்தது. கரும்பில் ரசங் கலந்திருத் தல்போல உடல் ஆதியந்தமு நிறைந்திருக்கத்தக்கது. பஞ்சேந்திரி யம் மனோ வாக்குக் காயம் ஸ்வாசம் ஆகிய இவற்றால் ஆன்ம புருஷன் ஜீவியாநிற்பன். பரமாணுநுட்பமே ஆத்ம உத்பத்திக்குக் காரண மாயுள்ளது. ஆத்துமா அநாதியே குற்றமுடையது. தேகம் வளர வளர வளர்ந்து தேயத் தேயத் தேயத்தக்கதென்றும், புண்ணிய பலத் தால் தன்மாத்திகாய மெடுத்துத் தவஞ்செய்வானென்றும், பாவமி குதியால் அதன்மாத்திகாயமெடுத்துக் கீழ்க்கதி யடைவானென்றும், ஆன்மாவிடத்தில் அதனதன் கன்மஞ் சென்று சேரச் சொரூபந்தெரி யாமல் மறைக்கப்படுமென்றும், சமைந்த சோறு உண்டுவிடுவது போல ஆன்மா கன்மத்தைப் புசித்துவிடுவதுதான் வீடென்றும், புற்கலம் அல்லது திரியக்கு ஜாதிகள் (எழுவகைத் தோற்றங்கள்) இவற்றிற்கு உழவு, தொழில், வரைவு, வாணிகம், வித்தை, சிற்பம்

என்ற அறுவகைத் தொழிலுள. அவைகளே கன்மமென்றும், இவ்வெல்லாவற்றையும் காலகதி சுழற்றுவிக்கிறதென்றும், அறமாவது உயிர்களுக்கு இன்பந்தரத்தக்கது, மறமாவது துயரத்தை யுண்டாக்குவது என்றும், அல்லாமல் ஜீவர்கள் அநுசரித்துக் கைக்கொள்ள வேண்டிய சீலங்கள் பதினெண்ணுயிரம், அவற்றுள் முதற்சீலம் மயிரைப் பறித்தல், காவிவஸ்திரந் தரித்தல், மயிற்பீலிக் கற்றையைக் கொண்டுவழிவிளக்கி நடத்தல், கள்ளுண்ணுமை, புலால் உண்ணுமை, பரதார கமனஞ்செய்யாமை, பரபொருளை விரும்பாமை இவ்வகையான சீலங்களை எவ்வகையான இடுக்கண்வரினும், தனக்குப் பிராணுபாயநேரினுங் கைவிடாமல் காத்துக்கொள்ளவேண்டுமென்ற இத்யாதி அபிப்பிராயங்களே.

4. இவ்வாறு அருகமுனிவர் சாதித்துவைத்த அபிப்பிராயங்களையே ஆதாரவாகக்கொண்டு பிந்தியகாலத்தில் ஒருவர்பின் ஒருவராகத் தோன்றிய நாபி மகாராசன் புத்திரரென்று சொல்லப்படுகிற விருஷபதீர்த்தங்கரரை யுள்ளிட்ட ஸ்ரீவர்த்தமான தீர்த்தங்கரர் மட்டுமுள்ள இருபத்தினுலு தீர்த்தங்கர ஸ்வாமிகளும் அங்காகமம் பூர்வாகமம் வெகு சுருதியாகமமென்ற வேதங்கள், ஆகமங்கள், தர்மசாஸ்திரங்கள், நீதிசாஸ்திரங்கள் ஆகிய இத்யாதி நூல்களை யெழுதிப் பகிரங்கப்படுத்தினுர்கள். அப்பால் வர வர சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு முதலிய இந்திய பாஷைகளிலெல்லாம் அப்போ தப்போதுளராயிருந்த அருகசமயத்து மகா வித்துவான்களால் அந்தச் சமய கிரந்தங்கள் உண்டுபட்டுப் பிராபல்ய தசையை யடைந்தனவென்பது இந்துக்கள் யாவரும் ஒப்புக்கொண்ட விஷயமாம். அவைகளில் சமஸ்கிருத பாஷையில் மகாபுராணம், ஸ்ரீபுராணம், மேருமந்தர புராணம், திரிலோக சாரம், கோமடசாரம், பதார்த்தசாரம், ரத்ந காண்டம், தருமப்பரீக்ஷை சிந்தாமணி, சூளாமணி, நீலகேசிவாதம், அமரம், சாகடயனம், நயச்சக்கரம், சத்தபங்கி, தவளம், விஜயதவளம், மகாதவளம், சுபோதினி முதலிய நூல்களும் தமிழில் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதியென்ற பஞ்ச காவியங்களும் நீலகேசி, சூளாமணி, நாலடி, நிகண்டு, குறள், நன்னூல் முதலிய அநேக நூல்களும் உண்டுபட்டு, அவைகளே கல்வி மடந்தைக்கு ஒரு மங்கள பூஷணமாக யாவராலும் அபிமானிக்கப்பட்டு வழங்குகின்றன. இப்படியாக அருகமுனியைத் தெய்வம்போல மதித்துக் கொண்டாடிய பிரஜைகளால் ஆருகதமதம் ஸ்தாபகமாகி, இந்துதேசமெங்கும் பரம்பி, சீனுமுதலிய தேசங்களிலும் நுழைந்து, நாடு நகர் கிராமங்களெங்கும் சைனவிக்கிரகக் கோவில்களும், பூஜைகளும், விழாக்களும் ஏற்பட்டதுமன்றி சந்யாசி மடாலயங்கள், மடாதிபதிகள் ஆகிய பெருங்கோப்புகளெல்லாம் அமைந்துவிட்டன. இவ்விதமாக அருகனென்ற முனி அல்லது ரிஷி கடவுள் ஸ்தானத்தை யடைந்து உலகாக்கிரத்துக்கு 5,000

வில்லுயரத் தூரத்துக்கு மேலேயுளதென்று அச்சமயிகளாற் கூறப்பட்ட பொன்னெயில் வட்டத்தில் அசோக விருக்ஷத்தடியில் வானோர் வழங்கிய பொன்னாசனத்தில் முக்குடை நீழலில் திரிலோகமும் வணங்கி வாழ்த்த வீற்றிருந்து தமது பக்த ஜனங்களுக்கு மோக்ஷத்தை அருளுகிறாரென்பது அருகசமயத்தவர் கொள்கையாம்.

அருகக் கடவுண் மறுதலை.

5. கடவுளுக்குரிய திவ்விய லக்ஷணங்களில் அநாதி நித்திய ஸ்வயம்பு என்ற லக்ஷணமொன்று. அந்தலக்ஷண மில்லாதவரெவருங் கடவுளாயிருத்தல் கூடாது. அருகபரமன் கடவுளாகவிருந்தால் அவர் அநாதிநித்திய ஸ்வயம்புவாயுமிருத்தல் வேண்டும். அவர் மனிதனாகப் பிறந்தார், பிறக்கும்பொழுதே மூன்று ஞானத்தோடு பிறந்தார், பின்னர் சகல தருமங்களையுந் தாமாக ஓதி யுணர்ந்தார், தேவர்களுக்குக் குருவானார், கடுமையான தபசுகளைச் செய்து முடித்தார், சகல விரதங்களையும், பதினெண்ணாயிரஞ் சீலங் களையுங் கைக்கொண்டு மகானானார் என்று இந்த அருகசமயிகளே ஒப்புக்கொண்டிருக்கையிலும் கடவுளென்று மயங்குவதெப்படி? அவருக்கு அநாதிநித்திய ஸ்வயம்புத்துவம் இனி யெங்கிருந்து வரும்? ஆதலின் அருகமுனீந்திரனைக் கடவுளென்று வீண்பிடிவாதஞ்செய்வது பேதமையேயன்றி பிறிதொன் றல்லவென்றுகிறது.

6. அருகனே கடவுளாயிருக்கையில் அவர் தருமசொரூபிதானே. அவர் கேவலம் இந்த மண்ணுலகில் வந்து மானிடதேகங் கொண்டுதானே தர்மங்களைப் படித்தறியவேண்டும். கடவுள் ஞானத்திலும் உலக ஞானம் அவ்வளவு சிறந்ததா? முன் உலக ஞானமுமில்லாத வொரு வஸ்து கடவுளாயிருத்தல் கூடுமாவென்று சற்று யோசியுங்கள். "தண்டாச்சிறப்பிற் றம்மின்னுயிரைத் தாங்காது கண்டுழியெல்லாம்" கள்ளத் துறவுவேடம் பூண்டு அலைந்த பண்டாரங்களையுங் கூடப் பண்டாரச் சந்நிதிகளாக்கி மடாலயங்களிலிருத்திக் கடவுட்பாவனை செய்து தீபதூப சோடச வுபசாராதிகள் செய்து வணங்குவது இந்துக்களாகிய சில மதஸ்தருக்குள் வழக்கமாயிருப்பதுபோலவே சைநசமயிகளுள்ளும் அருகனைப் பூஜிக்கிற சம்பிரதாய மேற்பட்டுவிட்டதேயன்றி அருகனைக் கடவுளென்று கொண்டாடத் தக்கதாக வேறென்ன ஆஸ்பதமிருக்கிறதென்று சொல்லக் கூடும்.

7. அருகன் இயல்பிலே கடவுள்தன்மை யுடையரல்லர், மனிதராகப் பிறந்து செய்தற்கரிய கடுந் தபசுகளைச் செய்து கடவுளாயிருக்குந் தன்மையை யடைந்துகொண்டாரெனச் சிலர் கூறுவர், அப்படியாயின் அருகன் யாரைநோக்கித் தபசு செய்தார்? யார் இவருக்கு இந்த உன்னத ஸ்தானத்தையும், கர்த்தத்துவத்தையும், நித்திய சர்வ ஸ்வதந்தரமாகக் கையளித்தவர்? அவ்வாறு இவருக்குப் பிரசாதித்

தவரன்றோ சகலலோககாரண கர்த்தாவா யிருத்தல்வேண்டும். ஆம், முன்னிருந்த கடவுளே இவருக்கு இந்த உன்னத பதவியை யருளிச் செய்தாரெனில் சர்வாதிகாரத்தையும் சர்வ மகத்துவத்தையும் பூர்வ கடவுள் நவீன அருகனுக்குத் தத்தஞ்செய்துபோட்டுக் குற்றேவல் செய்துகொண்டிருக்கிறாரென்பதோ உங்கள் கருத்து? இதுதானா க்ஷமணமத சித்தாந்தம்? அன்றெனில் அருகன் தானே தன்னுடைய தபோபலத்தால் பூர்வ கடவுளை ஜெயித்துக்கொண்டா ரென்னல் வேண்டும். இவ்விரண்டும் அசம்பாவிதம், எவ்வளவான கோர தபசுகளைச் செய்து முடித்தாலும் அருகன் கடவுளாவாரா? "குப் பைக்கீரை கப்புவிட்டாலும் கப்பற் பாய்மரத்துக்காகுமா?" புல் வாய்பருமம் பொறுப்பினும் பாய் பரிமாப்போற் பொருமுரணுற்றுத லின்றென்பதை நினையுங்கள். நீங்கள் அருகனுக்குத் தெய்வ வழி பாடுசெய்து வாணாட்கழித்துவிட்டுப் பின் அடையப்போகிற பயன் இருப்புக்கதவை யுடைத்து தவிட்டுக் கொழுக்கட்டை யெடுக்குஞ் சீலமாயிருக்கிறது.

8. மேலும், உலகத்தில் அவரவரே செய்யத்தக்க தபசு காமியார்த் தமென்றும், நிஷ்காமியார்த்தமென்றும், இருவகைத்தாம். அவ் விரண்டில் அருகதேவனார் செய்த தபசு எவ்வகைத்து? காமியார்த்த மென்றால், அவர் விரும்பியவாறு தர்மாதர்ம ஞானம் லபித்தபோது அந்த ஞானத்தைப் பிரபஞ்சத்திலுள்ள ஜன ஸமூஹங்களுக்குள் ஊடாடித் திரிந்தல்லவோ உபதேசித்து ஈடேற்ற வழியைக் காட்டல் வேண்டும். அவ்வாறின்றிப் பொன்னெயில் வட்டத்துட் புகுவா னேன்? அல்ல, அவர் நிஷ்காமியார்த்தமான தபசுசெய்தாரென்றால் நிரியாணதசையில் முக்திகூடியவராயிற்றே? பின்னர் அதைவிட்டுத் திரும்பி உலகாக்கிரமான பொன்னெயில் வட்டத்துவர நிமித்த மென்ன? அசோகவிருக்ஷ நிழலையும், முச்சகநிழற்று முழுமதி முக் குடையையும், வானோர் சமைத்துவழங்கிய பொன்னாசனத்தையும், பரிவாரமுதலிய ராஜவிபவங்களையும் விரும்பி சம்வற்சரணமென்ற திருக்கோயிலை யிடமாகக்கொண்டருளுவானேன்? எதன்பொருட்டு? அல்லாமல், இன்று காறும், அருகபரமன் சுமந்துகொண்டு பாதுகாத் துவரு மானிடத் திருமேனியினால் எந்த உத்தேசியம் நிறைவேறு மென்று எண்ணம். இந்தத் திருமேனிக்கு முக்தி கிடைத்ததும் அங் குள்ள நித்தியானந்த வரத்தைப்பெற்று பேரின்ப அமிழ்தத்தை யுண்டு தெவிட்டி மீண்டுவந்து பொன்னெயில் வட்டத்து இன்ப நுகர்ச் சியை நுகர்ந்துகொண்டிருப்பதும் பெரிய விந்தையே. முக்தியை வாராநெறியென்றும், மீளாப்பதமென்றும், இந்து சமயத்தவரெல்லா ரும் ஒருப்போல சொல்லுகிறார்களென்று நீங்களும் அறிவீர்களே? அதுவென்ன? அபத்தந்தானா? ஒரு மனிதன் கடுந்தபசு செய்தான் கடவுளானானென்று யார் யார் பிதற்றினாலும் சுபுத்தியுள்ளார் அதைச் செவிகொடுப்பார்களா? நம்பி மோசம்போவார்களா? "எப்பொருள்

யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று உங்களிலுள்ள தீர்க்க ஞானி சொல்லியதென்ன? வீணு? நன்று யோசியுங்கள்.

9. அருகபாமன் பசி, தாகம், பயம், கோபம், மகிழ்ச்சி, மயக் கம், சிந்தனை, நிந்தனை, நோய், சாவு, வேர்வு, கிலேசம், கர்வம், அதி சயம், உணவு, பிறப்பு, உறக்கம், விருப்பம் ஆகிய இந்த பதினெண் குற்றங்களையும் தழுவாது அகற்றிவிட்டு, அனந்த சுகம், அனந்த ஞானம், அனந்த வீரியம், அனந்த தரிசனம், நிர்நாமம், நிர்க்கோத் திரம், நிராயுஷ்யம், சம்மியதாபாவம், (அழிவின்மை) ஆகிய இந்த எட்டுக்குணங்களையும் தழுவி நிற்கின்றுரென அருகநூல் கூறு கின்றதுடன் நூல்விதந்த பதினெண் குற்றங்களும் மானிடதேகிக ளாகிய ஜீவர்களுக்குரிய குணங்களாதலில் அருகதேவன் மானிட தேகியென்றும், ஒருகாலத்தில் அருகனை யிந்தக் குணங்கள் அநுசரித் திருந்தனவென்றும், பின்னர் தக்க பருவமடைந்து தர்மாதர்ம விதி நிஷேதங்களை யறிந்து அவரடைந்த தீர்க்க ஞானத்தாலே இந்தத் தீக் குணங்களைத் தீரத்தியஜித்து விட்டனரென்றுந் தானே யேற்படுகிறது. ஆகவே அருகன் தீக்குணங்களைத் தள்ளிவிட்டுச் சற்குணங்களைத் தழுவிநின்று கடுந்தபசு செய்து உத்கிருஷ்ட தசையையடைந்த ஒரு மகாதபசி அல்லது ஒரு மகாரிஷியா யிருக்கவேண்டுமென்ற நிர்ணயந் தான் நிலைப்படுகிறது. இதைவிட்டுக் கடவுளென்று நினைப்பதற்கும், பேசுவதற்கும், அருகன் அருகனல்லனென்றறிக.

10. "கருவிகண்படுதுடக் கொழிந்துவரு காலமூன்றி னிகழ் காரியம், பெருகநின்றெரு கணத்திலே யுணர் பெருந்தகைக்குரிசில்" என்ற இந்த மூலத்துக்கு இந்திரியத்தால் வருந்துடக்கத்தைத் தன் னிடத்தினின்றுங் கைவிட்டுப் பெருங்காலமுதலாக மூன்றுகாலத் தினுமுள்ள காரியங்களை மிகவுமொரு கணமாத்திரத்திலே அனந்த ஞானத்தாலே யறியத்தக்க பெரிய தவத்தையுடைய அருகபாமனென உரையு மெழுதியிருக்கின்றனர். இதற்கு மறுதலையாகச் சித்தியாரில் அருகன் சரீரியென்ப துண்மையாயின் மனமுதலாகிய கருவிக ளுண்டாயிருத்தல்வேண்டும். அப்படியானுல் சாமான்யனைப் போலவே அறியத்தக்கவனுவான். அப்படிக்கல்லாமல் அவன் சரீரி யல்லனென்ப துண்மையாயின், அவன் எல்லாவற்றையுங் கண்டு வாழுமென்பது மித்தியாவாதமாய் மற்றென்றையு முணர்ந்ததில்லை யாவான். ஒருபொருளை யறிதற்குக் கருவியான மூன்றுகாலத்தையும் ஒருகாலத்திலே யுணருந்தன்மையனல்லன் எனக் கண்டிருக்கிறது. இந்த மறுதலை நியாயமானதென்று யாமும் உடன்படுகிறோம். "ஏனெ னில், மனுஷியந்தக்காணங்களும் விடையங்களை யுட்கொள்ளத்தக்க ஞானேந்திரியங்களு மில்லாமல் திரிகால வர்த்தமானங்களையும், சம்பவங்களையும், அறிந்துகொள்ளத்தக்க சக்தி கடவுளொருவருக்கே

யுளது. அவரே யந்தரியாமிப்பொருள், அவரே சர்வவியாபகர், அவரே சர்வக்ஞானர். மற்றவைகளெல்லாம் கருவிகரணங்களைக் கொண்டு காரியா காரியங்களை அப்போதப்போது நிகழச்சே யறியத் தக்கனவைகளாம்." "நாழிமுகவாது நானுழி" என்பதை நினைக்க. அருகன் மானவ சிருஷ்டிப்பொருளாகையில் கிஞ்சிக்ஞத்வனே யன்றிச் சர்வக்ஞத்வனுகான். ஆவானெனில், அது பரிகாசமாகும். "இல்லபுகழ்தலின் வைதலே நன்று" என உங்களவரே சொல்லி யிருக்கின்றனர். கருவிகரணங்களின்றி யருகன் எல்லாவற்றையு மறிவானெனில் பிறவிக்குருடன் வாசிக்கவும், முடவன் நடக்கவும், குற்றி உலக காரியங்களை யறிந்துகொள்ளவுங் கூடியதென்றுஞ் சொல்லலாம். ஆதலின், இது மித்தியாவாதமெனச் சித்தியார் சொற் றது உண்மையே.

11. "மருவிநின்று வழிபட்டவர்க்கு மலேவுற்றவர்க்கு மனமொத் திடுங்குரிசில்" என்ற உன்னுடைய மூலத்தை யெடுத்துக்காட்டி அதற்குத் தனது பெருந்தகைமைக்கேற்பத் தன்னை யடுத்துநின்று வழிபடுவோருக்கும், தன்னோடு மாறுபட்டுப் பகைசாதிப்பவருக்கும், ஒரு நீர்மையான தலைவன் என்று சித்தியாரில் உரையிட்டிருக்கிறது. அன்றியும், ஜீவகசிந்தாமணிப் பாயிரத்தில், பகை நண்போடில்லான் என்ற மூலத்துக்கு இறைவன் அன்பில்லனுயினும் அருஞ்சுரத்தின் மரம்போல அடைந்தார்க் களித்தல் அவர்க்கியல்பு என உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியமும் அந்த உண்மையைத் திருஷ்டாந்த பூர்வமாய் உறுதிப்படுத்துகின்றது. இவ்வெல்லாவற்றிலும் விசேஷ மாகத் திருவள்ளுவ நாயனுரும் "வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க், கியாண்டும் இடும்பை யில" என்று தமது பிறவிச்சமயக் கோட்பாட்டை மறுக்காது ஸ்திரப்படுத்தியிருக்கிறார். இவ்வாறு அருகசமயத்தவர் கற்பிக்கிற நவீனமான தேவலக்ஷணம் கடவுள் தன்மைக்கு ஏற்றதுதானு? அல்லவாவென்பதை நிதானிப்பாம்.

12. முதலாவது, இந்துக்கள் யாவரும் பொதுப்பிரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்ட ரிக்வேதத்தில் வெளியாயிருக்கிறதும், மேலே விவரித்துக் காட்டியிருக்கிறதுமான தேவலக்ஷணங்கள் முப்பத்திர ண்டில் கடவுள் விருப்பு வெறுப்பில்லாதவரென்பதை யொன்றுகக் கண்டிலம். பரமகாருண்ணியர், நன்மைஸ்வரூபி, தருமஸ்வரூபி, நண்பர், அதிபாரிசுத்தர், சர்வக்ஞானர் என்ற இத்யாதி திவ்யலக்ஷணங்கள்தா முண்டென்று காண்கிறோம். ஸ்வபக்ஷத்துக்குச் சுதந்தரமான சுருதி யிலும் கடவுள் விருப்பு வெறுப்பில்லாதவரென்றில்லை. தேவன் அன் பாகவே யிருக்கிறார். எல்லாரும் மனந்திரும்பிப் பிழைக்கவேண்டு மென்று விரும்பித் தம்முடைய ஒரேபேறுன குமாரனைக் கொடுத்து உலகத்தாரிடத்தில் இவ்வளவாய் அன்புகூர்ந்தார். "பிதாவு மாதாவும் உன்னைக் கைவிட்டாலும் நாமுன்னைக் கைவிடோம்" என்ற இத்யாதி வசனங்களினுல் தேவ அன்பும், தேவன் பாவிகளை பக்ஷிக்கிற அக்கினி,

பாவத்தைப் பகைக்கிறார், அருவருக்கிறார் என்றிதையொத்த அநேக வாக்கியங்களால், தேவனுக்குப் பாவத்தின்மேலுள்ள வெறுப்பும், இத்தகையதென்று வெளியாகிறது. இது சுருதிப்பிரமாணம்.

இரண்டாவது, தேவன் ஒருவருளரென்றும், அவர் தாம் சிருஷ்டித்த உலகத்தைத் தமது பரமகாருணியத்தால் பிரதிதினமுங் காப்பாற்றிவருகிறாரென்றும், தமது நீதியினாலே உலகத்தையாண்டு நடத்திவருகிறாரென்றும், சத்தியத்தைப் பரிபாலித்து, அக்கிரமத்தைத் தண்டனைக்குட்படுத்தித் தர்மத்தை நிலைநிறுத்தி வருகிறாரென்றும், ஆஸ்திகமதஸ்த ரனைவரும் சர்வ சம்மதமாக ஒப்புக்கொண்டும், அதைத் தங்கள் அநுஷ்டானங்களினால் பகிரங்கப்படுத்தியும் வருகிறார்கள். இதில் தேவன் தம்முடைய பிரஜைகளைப் பரிபாலிக்கிறாரென்பதும், சத்தியத்தை ஸ்தாபித்து நீதியை நடப்பிக்கிறாரென்பதும், கடவுள் திருவுளம் விரும்பிச்செய்கிற செய்கையென்றும், அக்கிரமத்தை தண்டனைக்குட்படுத்துகிறாரென்பது வெறுப்பின் செய்கையென்றுந் தெளிவாய் விளங்குகிறதல்லவா? இதைவிட்டு அருக தேவன் விருப்பு வெறுப்பில்லாதவரென க்ஷமணர் கூறுகின்றார்கள். அப்படியானால் தீக்குணங்கள் பதினெட்டைத் தள்ளிவிட்டது வெறுப்பின் செய்கையென்றும், பதினெண்ணுயிரஞ் சீலத்தைத் தழுவிக்கொண்டது விருப்பின் செய்கையென்றும் ஏன் கிராகியஞ் செய்யக்கூடாது. விருப்பத்தினாலே தபசு செய்தார். தர்மசித்தியடைந்தார். பொன்னெயில் வட்டதுட்புக்குத் தேவரும் வணங்க உன்னத ராஜ ஐசுவரியத்தைப் பெற்றார். ஒரு செய்கையுண்டென்றால், விருப்பமுண்டு செய்கையின்றெனில் விருப்பமுமில்லை; இரண்டும் இல்லையெனில் அந்த அவதரத்தில் அது உணர்ச்சியற்ற பிண்டம் அல்லது ஒரு குற்றியென்றுதான் சொல்லவேண்டும். அருகன் விருப்பும் வெறுப்புமில்லாதவரெனில் அவரால் உலகத்துக்கு என்ன நன்மையுண்டாகும்? அல்லது தீங்குதான் என்ன உண்டாகும் இரண்டுமில்லை. ஆதலின் விருப்பும் வெறுப்பும் அவற்றாலுண்டாகும் யாதொரு செய்கையுமில்லாத அருகனைக் கடவுளென்று நம்பி வழிபடுவதும் நிஷ்பிரயோஜனமான செய்கையென்றறிக. இதுபற்றியன்றே சித்தியார் அருகமத மறுதலை நான்காவது கவியுளாயில் வழிபட்டவர்களை சந்தோஷித்து அநுக்கிரகம்பண்ணுதலும் ஒறுத்தாரை வெறுத்தநுக்கிரகம்பண்ணுதலும் இவ்விரண்டு தன்மையும் பொருந்துதலில்லாமை சொல்லின் உனது கர்த்தா பிணத்தை யொப்பாவனென்றார். ஞானப்பிரகாசரு மற்றுரையாசிரியரும்,

மூன்றாவது, நிர்க்குணப்பிரமம் என்று வீண்வாதஞ்செய்கிற பிரமவாதிகள்தான் கடவுளுக்கு விருப்பும் வெறுப்புமில்லையென்பார்கள். அந்தக் கொள்கைக்கும் கடவுளே யில்லையென்று சாதிக்கிற நாஸ்திகக் கொள்கைக்கும் பேதமில்லை. அருகமதஸ்தராகிய நீவிரும் அந்தக்

கொள்கையைக் கொண்டுவரில் நாஸ்திகரே யாவீர். எப்போ சாக்ஷாத் மெய்க்கடவுளை யுபேக்ஷித்து அருகனையாகட்டும், மற்றெந்த வஸ்துவையாகட்டும் தெய்வமென்று கொள்ளுகிற எவரும் நாஸ்திக ரென்பதற்குச் சந்தேகமென்ன? மெய்த்தெய்வத்தை வழிபடுவோரே ஆஸ்திகர். ஏனையர் தெய்வமுண்டென்று விவகாரதசையில் ஒப்புக் கொண்டாலும் தெய்வமல்லாததைத் தெய்வமென்று வழிபட்டுத் தங் கள் அநுஷ்டானத்தினால் மறுக்கிறார்களாதலில் அத்தகையர் நாஸ்தி கரே யாவார் என்றறிக.

13. அநாதி யருகபரமனிடத்து ஆதியருகபரமன் சென்று தன்மம் பகவ என்று வினவியதற்கு மாறுத்தரமாக "பஞ்சாத்திமயம்" என்றொரு சொற்பிறந்ததாகவும், அதுகொண்டு ஆதியருகனாகிய இக லாத்தன்—ஜீவம் புற்கலம் தருமம் அதருமம் ஆகாசம் என்னு மிவை பஞ்சாத்திமயம் அல்லது பஞ்சாத்திகாயமென்றும் இவற்றோடு காலத்தைச்சேர்த்து ஆறுக்கி ஷட்திரவியமென்றும், இன்னும் ஜீவம், அஜீவம், புண்ணியம், பாவம், ஆஸ்ரவம், சம்வரை, நிர்ச்சரை, பந்தம், மோக்ஷமென இவை நவபதார்த்தமென்றும் பாகுபாடுசெய்து, அங்காகமம் 12-ம் பூர்வாகமம் 14-ம் பகுசுருதியாகமம் 16-ம் ஆகிய நூல்களை இயற்றிவைத்து உலகத்துக்கு உபகரித்தார் என்றும் அருக சமய நூல் கூறுகின்றது.

1. அநாதியருகனாகிய சகலாத்தனுக்காவது ஆதியருகனாகிய இக லாத்தனுக்காவது சொல்லவாயினுங் கேட்கவாயினும் மனுதியந்தக் கரணங்களுமில்லை. பொறி புலனுகர்ச்சியுமில்லை. ஆகவே இவ்விரு வருக்குள்ளும் உத்தரப் பிரதியுத்தரம் நிகழ்ந்தவாறெங்ஙனம்? ஆதலி னால் "ஒல்லையூம ரூமருக் குரைத்தாவாற தொக்குமே" என நன்கு சொற்றனர் சித்தியார்.

2. அருகபரமன் சொன்னது பஞ்சாத்திமயம் அவற்றோடு ஆதி யருகன் காலத்தைக் கூட்டியாறென்றும் இன்னுந் தள்ளுவன தள்ளிக் கூட்டுவன கூட்டி நவபதார்த்தமென்றும், ஸ்திரத்துவமின்றி நூல் செய்திருக்கின்றனர். ஆயின் அநாதியருகனிலும், ஆதியருகன் அதிக ஞானவானென்றாகிறது. ஆம் பெரிய ஞானவான்தானெனில் தன்மம் பகவவென்று கடாவியதென்? அதுபோகட்டும், அநாதியருக னிலும் ஆதியருகன் பெரியவர்தானென்று நன்கறிந்த அருகசமயிகள் ஆதியருகன் கடவுள் ஸ்தானத்துக்கு வரும்படி பிரமோஷன் செய் யாதது யாதுகாரணம்? பெரிய ஞானவானாகிய இகலாத்தனுங்கூட ஒருக்கால் ஆறென்றும், மற்றொருக்கால் ஒன்பதென்றும், மயங்கு தற்குக் காரணம் யாது? அறிவின் குறைதானன்றோ? ஆகவே யிருவ ரறிவும் குறைபாடுடையது நிரம்பிய முற்றறிவின ரல்லரென்றாகிறது. ஆதலில் சிற்றறிவினராகிய இவர் கர்த்தத்துவத்தை மேற்கொண்டு நிருவகிப்பதெப்படிச் சாத்தியமாகும். ஆதலின் அந்த ஸ்தானத் துக்கு இருவரும் அருகரல்லரென நிர்ணயப்படுகிறது.

முடிவுரை.

14. இந்தியாவுக்கு அருகசயமே முதலில் தோன்றிய பூர்வீக சமயமாயிருந்தும் அந்தச் சமய நூல்களில் விதந்தோதப்பட்ட சில பல நல்லகொள்கைகள், நோன்புகள், விரதங்கள், சீலங்கள் ஆகிய இவ்வகைப்பட்ட அநுஷ்டிப்புகளும், உஜிதமான நன்மைகளை யுண்டாக்கும் வழிவகைகளும் அமைந்திருக்கிறது மாத்திரமல்ல, உலகத்திற்குரிய அநேகவகையான டாம்பீகங்கள், மாயசாலங்கள், தேக பூஜிதைகள், முழுப்பொய்கள், அபாரகற்பனைகள், இத்யாதி அநுசிதங்கள் கலப்பில்லாமல் துப்புரவாயும் அதிநுணுக்கமாயுமுள்ள போதனைகளும் அமைந்திருந்தும், மெய்த்தெய்வவழிபாடு யாதென்றறிய முயலாக்குறையினிமித்தம் தப்பான வழியில் தெய்வவழிபாடு சமைத்தார்கள். எப்படியெனில் அருகன்முதலிய தீர்த்தங்கராராகட்டும், அக்காலத்துள்ள வித்வ ஜனங்களாகட்டும், நல்ல புத்திசாலிகளுமாய் தேர்ந்த ஞானிகளுந் துறவிகளுமாயிருந்திருக்கிறார்களென்பது தெளிவாய் விளங்குகிறதே? இப்படிப்பட்டவர்களில் ஒருவராவது தங்களைத் தெய்வங்களென்றாவது, தெய்வப் பிறப்பென்றாவது, அவதாரபுருஷரென்றாவது, அல்லது அதை யிதைச் செய்ய வல்லவரென்றாவது சொல்லவுமில்லை, சொல்ல வேவவுமில்லை; காட்டவுமில்லை, காட்டி நடிக்கவுமில்லை; தங்கள் மனசின் எண்ணங்களையும், தோற்றங்களையும், அபிப்பிராயங்களையும் உலகத்துளவாகும் பின் சந்ததி பரம்பரைகளுக்குத் தாந்தாமெழுதிய கிரந்தங்கள் மூலமாய் விளக்கிக்காட்டி வெளியிட்டுக் காலஞ்சென்று போனார்கள். ஆதலால் அவர்கள் அதுவிஷயத்தில் நிர்த்தோஷிகளே. ஆனால் அவர்களுக்குப் பிந்தியகாலத்திலுண்டுபட்ட சந்ததி பரம்பரைகள் முன்னோருடைய தீர்க்கஞானம், தபம், வீரவிரதம், சீலம், நியமாநுஷ்டான முதலியவைகளைப் பார்த்தும், கேட்டும், வாசித்தும், அறிந்தும், இவர்கள் மனிதப்பிறப்பின ரல்லர், தேவப் பிறப்பினரென்று ஒருகாலத்தும், அதற்குப் பிந்தியகாலத்துத் தேவப்பிறப்பின ரல்லர் தேவர்களே யென்றும், அவர்களுக்குள் விசேஷ ஞானிகளாகக் காணப்பட்ட அருகனை அருகபரமேஸ்வரன் சித்தபரமேட்டி சகலாத்தன் அருகக் கடவுள் என்று மதிமயங்கிப் பூர்வகிரந்தங்களை அநர்த்தம்பண்ணிக் கொண்ட நிமித்தமாய் அருகசமயம் வரவரத் தடிட்புக்கொண்டது. அருகனுக்குத் தெய்வவழிபாடு எவ்வாறு ஸ்திரப்பட்டது என்பதை இந்தப்பாகத்தைக் கருத்தாய் வாசிக்கிறவர்கள் ஸ்பஷ்டமாய்க் கிரகித்துக்கொள்வார்கள். "சொற்றவற்றியலான் மற்றையபிறவுந் தெற்றெனவுணர்தல் தெளிவோர் திறனே" என்றதனாலும் நூல் விரிந்துபோமென்பதற் கஞ்சியு மிம்மட்டோடே இந்தப் பாகத்தை முடிக்கிறோம்.

ஆருகதமதம், அல்லது க்ஷமணமதம் முற்றிற்று.

ஆறும் அத்தியாயம் முற்றிற்று.

7-ம் அத்தியாயம்.

மாயாவாதி மதம்.

நிர்க்துணக் கடவுள்.

1. மாயையினாலே பிரபஞ்ச முண்டுபடுகிறதென்றும், மாயை யின்றேல் பிரபஞ்சமின்றென்றும் வாதிக்கிற மதமாதலின் மாயா வாதி மதமென்று பெயராயிற்று. இந்த மதஸ்தர் பெயருக்குமாத்தி ரம் சமஸ்தத்துக்கு மூலகாரணமாயுள்ள பிரமம் ஒன்று உண்டென் றும், அது நிர்க்குணவஸ்துவென்றும் சொல்லிக்கொண்டு மாயையே ஜெகத் காரணமாயிருந்து முத்தொழிலையும் நடத்திவருகிறதென்று சாதிக்கிறார்கள். ஆதலால் பிரமமாகிய கடவுளின் தன்மை யெப்ப டியென்றும், கடவுளின் கிருத கிர்த்தியங்க ளெல்லாவற்றையு மாயையே தலைமையாகவிருந்து நடத்திவருகின்றதெனில் அந்த மாயையின் தன்மை யெப்படியென்றும் ஆராய்ந்து நிதானிக்கவேண் டிய அவசரம் நேரிடுகிறது. ஆகவே பிரமமாகிய கடவுளைப்பற்றி முத லில் ஆராய்ச்சிசெய்வோம்.

2. இந்த மதஸ்தர் வேதங்களிற் பிரதிபாதிக்கப்பட்ட பரப்பிர மமே தங்கள் மதத்துக்குக் கடவுளென்பார்கள். ஆக்ஷேபணையில்லை. ஆனால் நிர்க்குணப் பிரமமென்று சொல்வதுதான் தோஷம். ஏனென் றால் நிர்க்குணமுள்ள எந்த வஸ்துவுக்கும் விருப்புமில்லை வெறுப்பு மில்லை. அவையின்றெனில் அந்த வஸ்துவுக்கு யாதொரு செயலு மில்லாததாம். செயலில்லாத பக்ஷத்தில் சர்வஞானமும் சர்வசக்தியு மிருக்கவேண்டிய அவசரமில்லை. அல்லாமல் சுத்தமுமில்லை அசுத் தமுமில்லை. நன்மையுமில்லை தீமையுமில்லை. பாவமுமில்லை புண் ணியமுமில்லை. இவ்வெல்லாமின்றெனில் அந்த வஸ்துவிருந்தும் யாதொரு பயனுமில்லை. உணர்ச்சியற்ற வஸ்துவினால் உலகமுண் டாகமாட்டாது. அப்படிப்பட்ட வஸ்துவே சமஸ்தத்துக்கு மூல காரணமென்பதுங் கூடாது. வேதஞ் சொல்லுகிறதேயென்றால்; வேதம் வேதமாயிருக்கிற பக்ஷத்தில் மாத்திரம் எவரும் நிராக்ஷேபமா யொப்புக்கொள்ளவேண்டியது. அதுவே ஒவ்வொருவருக்கு முக்கிய மான கடமை. அதிபூர்வத்தில் வேதத்தைக் கர்ண பரம்பரையாய்ச் சொல்லுவித்த மகாரிஷிகள் தங்கள் தங்கள் கருத்துக்குப் புலப்பட்ட வுண்மையை வெளிப்படுத்தினார்கள். பிற்காலத்துத் தோன்றியவர் கள் பூர்வ ரிக்வேதத்தில்லாததாயும், தங்கள் கருத்துக் கிசைந்ததாயும், அந்தந்தக் காலத்துக்குத் தக்கபடி வழக்கங்களை யநுசரித்தும், சில வற்றைக் கூட்டியும் குறைத்தும் வேதத்தின் கடைசியிற்சேர்த்து நுழைத்துவைத்தார்கள். இவ்வாறாகப் பலருந் தத்தம் அபிப்பிரா

யங்களேயுங் கொள்கைகளேயும் பரஸ்பர விரோதங்களேக் கவனியாமல் காலந்தோறும் பலபலவிதமாக எழுதிவைத்தார்கள். வரவர அவரவர் ஜீவனேபாயங்களும் வேதத்தில் சொருகப்பட்டன. பிரமம் அனந்த மங்கள்குணுகரர் என்று பூர்வ எழுத்துப் புகல் அத்தைப் பூர்வபக்ஷஞ்செய்து பிரமம் நிர்க்குணமுடையதென்று மழுக்கிக் குழப்பப் பிந்திய காலத்துள்ளார் ஒன்றுக்கொன்று நேர்விரோதமாயிருத்தலேக்கண்டு ஒரு ஸ்திரப்பாடின்றி வழிவிலகி யலேப்புண்டு திரிய நேரிட்டிருக்கிறது. இவ்விதமாகப் பூர்வீக ரிக்கென்று சொல்லுகிற வேதம் செல்லரித்து உருக்குலேந்து தற்சொரூபந் தோன்ருமல் பழுதுபட்டுப் போயிற்று. பின்வந்த எழுத்துக்கள் முன்னுள்ள வுண்மையை மூடிப்போட்டது. ஆதலின் இவ்வெல்லாம் வேதந்தானு? இவ்வகைப்பட்ட வேதம் எட்டும், இரண்டும் பன்னிரண்டென்று சொல்லவுங்கூடுமே. அப்படிப்பட்டவற்றை யேதோ தப்பாயிருக்கிறது பிழைபாடுடையது என்று வரையவேண்டுமேயன்றி அதைவிட்டு வேதஞ் சொல்வதெல்லாம் சரியென்றுகொள்வது புத்திக்குத் தோஷமல்லவா. மேலும் உலகத்திற் சிற்சில வேதங்களுண்டு பட்டிருக்கின்றன. அவற்றிற் பற்பல பேதங்கள் கிளேத்திருக்கின்றன. அவ்வெல்லாம் மெய்யாயிருத்தல் கூடாது. அவற்றின் சாதகபாதகங்களேயெல்லாம் சீர்தூக்கி மெய்வேதம் இத்தகையதென்று காட்டுகிற வேத நிர்ணயப் பிரகரணத்திற் கண்டு தெளிக. அல்லாமல் கடவுள் மனிதருக்குப் பகுத்தறிவு நுண்ணிய விவேகம் மனேசாக்ஷியாகிய இத்யாதி சுலக்ஷணங்களே யருளியிருக்கிருர். அதுகொண்டு காரியாகாரியங்களே நிதானித்தறிந்துகொள்ளவேண்டும். அப்படியே திருவள்ளுவரென்ற மகாஞானி,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று சொல்லுகிருர்.

சிந்தாமணியில்,

"மெய்வகை தெரிதல் ஞானம் விளங்கிய பொருள்க டம்மைப்
பொய்வகை யின்றித் தேறல் காட்சியைம் பொறியும் வாட்டி
உய்வகை யுயிரைத் தேயா தொழுகுத லொழுக்க மூன்றும்
இவ்வகை நிறைந்த போதே யிருவினே கழியு மென்ருன்"

என்றும் கூறியிருக்கிறது.

இவ்வாறிருக்கச் சற்று முன் பின் கருத்தூன்றிப் பாராமல் அனந்தமங்கள குணநிதியாய் அருளே திருவுருவா யமைந்திருக்கிற மெய்ஞ்ஞான ஜோதியாகிய பரப்பிரமத்தை நிர்க்குணப்பிரமமென்று வாதிக்கத் துணிவது எவ்வளவு பெரிய தூஷியம்.

3. இந்த மாயாவாதிகள் பிரமம் நிர்க்குணவஸ்து வென்பதற்கு சுவேதாசுவதா உபநிஷத்து 6–வது அத்தியாயம் 11, 12–வது வாக்

கியங்களையும் இன்னும் இவற்றைப்போன்ற சில வாக்கியங்களையும் ஆதாரமாகக் கொண்டுவருகிறார்கள். குறிப்பிட்ட அவ்விரண்டு வாக்கியங்களாவன:—

"சகல பூதங்களிலு மறைந்தும் சர்வவியாபியாயும் சர்வ பூதங்களுக்கும் அந்தராத்துமாவாயும் தொழில்களுக்கு இறைவனாகவும் எல்லாப் பூதங்களிலு முறைந்துகொண்டும் சாக்ஷியாகவும் கேவலம் சேதனஸ்வரூபியாகவும் குணங்களற்றும் தொழிலற்ற பலவற்றிலுந் தனிமையான வஷியாகவும் ஒருவித்தைப் பலவகை யாக்குவோனாகவும் உள்ள ஒருவனே தேவன். அவனைத் தங்களுக்குள்ளிருப்பதாய்க் காணுந் தீரர்கள்மாத்திரம் நிலைத்த சுகமடைவார்களேயன்றி மற்றவர்க ளடையார்கள்." இந்த வாக்கியங்களில் "குணங்களற்றுந் தொழிலற்ற பலவற்றிலும்" என்று குறிப்பிட்ட இந்தச் சொற்றொடருக்குக் (குணமுந் தொழிலுமுள்ள சரப்பொருளிடத்தில் பிரமம் எப்படி வியாபித்திருக்கின்றனரோ) அப்படிக் குணமுந் தொழிலுமில்லாத அசரப் பொருளிடத்திலும் ஏகமாயிருக்கிற பிரமம் வியாபியாயிருக்கிறார் என்பதே நேரான பொருள். இதைவிட்டுக் குணமுந் தொழிலுமில்லாத பிரமம் அசரப்பொருளிலும் வியாபியாயிருக்கிறாரென்று பொருள்கொள்ளத்தக்கதா? இது தங்கள் பிடிவாதக்கொள்கையை ஸ்தாபிக்கத்தெண்டும் இவர்கள், கொள்ளத்தக்க பொருளேயன்றி வேறே யார்தான் இவ்வாறு அனர்த்தஞ்செய்யத் துணிவார்கள். குணந் தொழிலற்ற என்ற விசேஷணம் பலவற்றிலு மென்றதைத் தழுவி நிற்கிறதென்று எழுத்தறிவில்லாப் பேதையரு மறிவர். இவ்வகையாய் அவர்கள் நிர்க்குணப் பிரமமென்பதற்குத் தேடிப்பொறுக்குஞ் சுருதிகள் வெளிக்கு வரும்பக்ஷத்தில் அவைகள் அர்த்தபேதம் பண்ணப்பட்டவைகளாகத்தானிருக்குமென்று ஊகிக்கவேண்டி வருகிறது. ஆதலால் உபநிஷத்துக்களின் மூலகிரந்த கர்த்தாக்கள்மேல் அவ்வளவாய்த் தோஷம் பொறுக்காதுபோலிருக்கிறது. எப்படியும் ரிக்வேதத்தோடொத்த அதிகாரம் உபநிஷத்துக்களுக்கு இல்லையென்பதை யறியக்கடவர். ஏனெனில் அவைகள் பிந்தியகாலத்துண்டான சாஸ்திரக்ஞராலும் பாஷியக்காரராலும் கலப்புற்றவைகள். மேலும் வேதத்தின் முன்பாகத்திலே அனந்த கல்யாண குணமுள்ளவரே பரப்பிரமமென்று சொல்லியிருக்கப் பின்னே நிர்க்குணப்பிரமமென்று சொல்வதும் வேதந்தானென்று கொண்டுவரில் இது பரஸ்பர விரோதமுடையதென்றும் ஆதலினது வேதமன்றென்றுந் தானே சொல்லவரும். இந்த வேதுவினால் பிரமம் நிர்க்குணமுடையதென்பது தப்பான கொள்கை.

4. நிர்க்குணப் பிரமமென்று சாதிக்கிற இந்த மாயாவாதக் கொள்கையும், எல்லாம் பிரமமயமேயென்று சாதிக்கும் பிரமமயக் கொள்கையும், கடவுளே யில்லையென்று சாதிக்கிற நாஸ்திகக் கொள்கைக்குப் பிந்தி நிற்கத்தக்கனவல்ல. முந்திக்கொள்ளக் கூடியவைதான்.

ஏனெனில் நாஸ்திகர் தெய்வமேயில்லை. ஜெகத் எல்லாந் தானுய் ஸ்வயங்கிருதமாய்ச் செய்கைபட்டு வருகின்றது; என்று தங்கள் அறியாமையினுலே சொல்லுகிருர்கள். மற்ற இருதிறத்தாரும் கடவுளொருவருளரென்றறிந்தும் ஒப்புக்கொண்டும் அதை மறுத்துக் குணமுந் தொழிலுமற்ற அசரப் பொருளென்றும் உலகத்திலுள்ள எழுவகைத் தோற்றமும் பிரமந்தான், ஸ்வர்க்க இன்பத்தை அநுப விப்பதும், நரகதுன்பத்தைச் சகிப்பதும் பிரமந்தானென்று சொல்லத் துணிவது எவ்வளவு பயங்கரப்படத்தக்கது. இந்தவகையான மௌட் டியம் நாஸ்திகக்கொள்கையில் இன்று. ஆதலால் முந்திக்கொள்ளத் தக்கதென்ருும்.

5. இந்த மதஸ்தர் கடவுளுக்கு நிர்க்குணத்தைக் கற்பிப்பதோ டேகூட கடவுள் தானே பரமாத்மா ஜீவாத்மாவென இரண்டாகப் பிரிந்து நின்று பரமாத்மா சாட்சிமாத்திரமாய் எங்கும் வியாபித்து ஒன்றேடுந் தாக்கற்றுப் பூரணமாய் நிறைந்து நிற்பதென்றும், ஜீவாத்மா ஜடமாகிய உடல்கடோறுந் தனித்தனி புகுந்து உபாதிகளிற் சிக் குண்டு தனுகரண புவனபோகங்களை யநுபவித்துத் திரிகிறதென்றும், கன்மத்துக்கிடாய் ஜெனனவட்டத்துட்பட்டுச் சுழலுமென்று மயங்கிக் கூறி அவிகாரியை விகாரியெனப் பேதப்படுத்தி வாதிக்கிருர்கள். ஒன்று யெங்குமாய் வியாபித்திருக்கிற பிரமம் இவ்வாறு பிரிவுபட்டுப் பரமாகவும் ஜெகத்தாகவு மிருக்கிறதென்ருல் எல்லாம் பிரமமென்று தானேயாகிறது. எல்லாம் பிரமமயமென்ற கொள்கையுடையார் மனித ருக்கு ஆத்மா வொன்றுண்டு. ஆனுலது மாயையாலானது என்று பிரத்யேகப்படுத்துவார்கள். இந்த மாயாவாதக்காரரோ இருபிள வாகிய இந்தப் பிரமம் முழுக்கவும் மாயையின் வசப்பட்டுத் தனக்கு ஸ்வாதந்தரியங் கிஞ்சித்து மில்லாமல் உலகமுழுவதிலும் தெருத் தெருவா யலைகிறதென்கிருர். ஆ! இது எவ்வளவான பைத்தியக் கொள்கை. மனேவாக்குக் கெட்டாததாய்ச் சர்வோத்கிருஷ்டமாய் அதிபாரிசுத்தமாய்ப் பூரண சச்சிதானந்தப் பொருளாயிருக்கிற அநாதி பரப்பிரமவஸ்து மாயையின் வசத்தாயகப்பட்டு மித்தையாகிய உலகமாகவும் சராசரப்பொருளாகவுந் தோற்றுகிறதெனில் இது முத லாவது வேதவிரோதமான கொள்கை. இரண்டாவது உள்ளதாகிய பிரபஞ்சத்தை மாயா தோற்றமென்றும் அதுவே பிரமமென்றுஞ் சொல்வது பிரத்தியக்ஷ விரோதமான பொய். மூன்ருவது பேதியாது நிருவிகாரமாய் ஒரு நெறித்தாயிருக்கிற பிரமத்தை ஜெகமாகப் பேதித்திருக்கிறதென்ருல் அது இயற்கை விரோதமான மூடக் கொள்கை. இப்படியாயின் அவர்கள் சொல்லுகிற அவிகாரத்துவம் அல்லது நிருவிகற்பமென்ற லக்ஷணம் இந்தப் பிரமத்துக்கு எவ்வாறு பொருந்தத்தக்கது. தங்கள் நூல் சொல்வதையே தாங்கள் மறுத்து ஸ்வய விரோதஞ் சாதிக்கிருர்கள். இவ்விதமாய்ப் பிரமத்தை இஷ் டமானபடியெல்லாஞ் சொல்லத் துணிவது மகா பயங்கரமான பாவக்

கொள்கை. சித்தியார் இதற்கொரு திருஷ்டாந்தங் காட்டுகிறது. அதை யிவ்விடத்து உதாகரிக்கின்றும்.

ஒரு மலட்டுக்காகம் தனது கருங்குஞ்சுக்கு மிக்க பசியைத் தணிப்பான்வேண்டி கருங்கற்பாறையின் இறைச்சியை வாங்கிக் குஞ்சின் வாயிலே கொண்டுவந்து கொடுத்ததென்று சொல்லுந் தன்மைக்கு ஒக்குமென்பது. இதில் நிருவிகற்பமாகிய பிரமத்துக்கு மலட்டுக்காகமும், அந்தப் பிரமத்திலே நின்று ஜீவான்மாப் பேதித்ததென்பது அக்குஞ்சும், அந்த ஜீவான்மாவுக்குக் கன்மாதிகளுண்டாக்கிக் கொடுத்ததற்குக் கல்லின் மாம்ஸமும் உவமையாயிற்றென்றறிக. இதனாலே பிரமம் பேதிக்கத்தக்க வஸ்துவுமன்று, பிரபஞ்சமும் சராசரப் பொருளுமெல்லாம் பிரமமுமல்ல. பிரமத்திற் பிரிந்த பாசமுமல்ல. பிரமத்தாலே சிருஷ்டிக்கப்பட்ட பிரத்தியேகமான சிருஷ்டிப் பொருளே பிரபஞ்சமென்றறிக.

6. அகம் பிரமம் அதாவது நானே பிரமமாயிருக்கிறேனென்ற உபாசனை யொருவனுக்குப் பலப்பட்டால், அதுவே மோக்ஷமென்று சொல்வதும் இம்மதத்தவர் கொள்கை. இது எவ்வளவு துணிகரம்? எவ்வளவு மௌட்டியம்? ஆணவம் மயக்கம் காமியமென்ற மும்மல பெத்தனாய்த் தான்செய்த கன்மத்துக்கீடாய் உலகத்தில் இன்ப துன்பங்களைப் புசித்து ஜெனன மரணத்துக்குட்பட்டுச் சுதந்தர ஈனனுமாய், மிகவுஞ் சிற்றறிவுடையனுமாய், ஆன்மவர்க்கத்திலொன்றான தன்னை அநாதி மலமுத்த சிற்சொரூபமாய்ச் சர்வோபாதி ரகிதமாய் சர்வக்ஞ சர்வ கர்த்திருத்வ சர்வ சுதந்தரத்வ முடையதாயுள்ள பிரமமென்று நினைப்பதைவிட மகாபாதகம் பிறிதுண்டா? இதுபற்றியன்றே இவனை மதிகேடனென்றும் பேயனென்றும் சித்தியார் கூறுகின்றது. அசத்தாய தன்னைப் பிரமமென்று பிதற்றுவதும், உளதாய பிரபஞ்சத்தைப் பொய்யென்று உழறுவதும் மதிகெட்ட பேய்த்தனமேயன்றி வேறென்னவென்று சொல்லத்தக்கது. இருக்கட்டும் அநாதியே யுண்டான வேதத்தில் அகம்பிரமம் மொன்றென்றே சொல்லுகிறதெனில் கேள். அந்த வேதத்திலேயே ஞாதுரு ஞான ஞேயமென்கிற மூன்று முதலுண்டென்றுங் கூறுகின்றதே. ஆயின் நீ சொன்ன ஏகம்பாவனை பின்னுக் கோடுகின்றதல்லவா? மேலும் நானே பிரமமென்கிற அகம் பிரமமாகிய சொல்லோடு அதேவேதத்தில் நீயதுவானா யென்ற அர்த்தத்தில் வருகிற தத்துவமஸியாகிய சொல் விரோதப்படுகின்றதல்லவா? அன்றியும் உனக்கு ஆன்மாவும் உணர்ச்சியு மின்மையினாலே உனக்குப் பிரமாநுபூதியு முண்டாகமாட்டாதென்றறிக. எவ்வளவுகாலம் உனக்கு இவ்வகைத்தான பிரமோபாசனை பலப்பட்டாலும் அந்த உபாசனை உன்னைத் தாழ்ந்த மலபாதலத்துக்கு அதோமுகமாய்க் குப்புற விழுத்தி யமிழ்த்தத்தக்கதே யல்லாது ஊர்த்த கதிக்கு உன்னை உயர்த்தத்தக்கதன்று எனத் தீர்மானமா யறிந்து கொள்க. "முக்கால் முழுகினாலும் காக்கை கொக்காகுமா?" ஆகாது.

நல்லது இந்த உபாசனை தப்பென்றால் ஊர்த்தகதிதான் எவ்வாறு கிட்டுமென்பாயோ சற்று கேள்.

(1) நான் அவிவேகி, அகந்தைக்காரன், அசுத்தன், அக்கிரமஸ்தன், அறக்கொடும் பாவியென்று உன்னைப்பற்றி ஜீவசாட்சியே சாட்சியாக உண்மையாய் மனங்கசந்து உள்ளுடைந்து கண்ணீர்வடி.

(2) தெய்வ மகோன்னதர்; அதிபாரிசுத்தர், பாவிகளைப் பட்சிக்கிற அக்கினி, மகா நீதிபரர், ஆயினுங் கிருபைக்கடல், அன்புமயமானவர், உள்ளிந்திரியங்களையும் அறிகிறவர், பாவிகளை யழைத்து ஆட்கொண்டு புது ஜீவனை யருளிக் கடைசிமட்டுங் கிருபைபாலித்துக் காப்பாற்றுகிறவரென்றறிந்து உன் அந்தரங்கத்தில் அவர் சந்நிதியைக் கிட்டி மன்றாடு.

(3) புண்ணியமூர்த்தி யொருவருளர். அவரைக் கூவிக் கிட்டிச் சேர். அவர் உன்னைத் தேவசமுகத்திற் கூட்டிப்போகத் தக்கவர். இல்லையென்னாமல் யாருக்கும் ஈடேற்றத்தைக் கொடுக்கிற வள்ளல். அவரையே சார்வதா உபாசனைசெய். இவ்வாறு திரிகரணசுத்தியாய் வழிபடுவாயாகில் இகத்தில் ஜீவன் முத்த நிலைமையும் தேகாந்தத்தில் சாமீபமுக்தியின் பேறும் லபிக்கும்.

7. வன்னபேதமாகிப் பல வேற்றுமைப்பட்ட உருவங்கள்தோறும் பிரமம் வெளிப்பட்டு நிற்குமென்பது இம் மதஸ்தர் கொள்கை. குற்றமில்லாத ஜடத்தினிடத்திலே பிரமமுண்டாயிருக்க அந்த ஜடம் அவஸ்தைப்பட்டவிடத்தில் அறிவின்றிப் பிரேதமாய்க் கிடப்பானேன். வாயுவும் மனாதியந்தக்கரணங்களும் நீங்கிவிட்டதினாலேயெனில் பிரமத்தின் அறிவு கெடத்தக்கதாயிற்றோ? அதுவன்றிப் பிரமம் நிற்கவும் வாயுமுதலியவை நீங்கியது யாதுகாரணம்? ஆதலின் ஆன்மா பிரமமன்றென்றறிக.

உதாரணம்.

மாகங்கடந்தோறும் வாய்த்தமுறை போற்பிரமம்
ஆக்கைதொறு முறுமென்றாய்.

ஊரில்சவந்தனிலு முண்டதுதான் கண்டிலமேன்
மாறில்மனம் வாராமலோ.

நாத்திகனும் ஆத்திகனுமொன்றோ நவின்றிடாய்
ஒத்துணரிற் பேதமேயுண்டு.

ஆக்கைதொறும் வெவ்வேறனுபவ துக்கஞ்சுகமும்
ஆக்கைதொறும் வெவ்வேறனு.

துன்புறுவானுங் குழியின் மேலைத்துறக்கத்தின்
இன்புறுவானும் வேறென்றெண்.

அரையனும்வேறே யபரா தரும்வேறே
அவர்பலமும் வேறென்றறி.

8. பிரமமானது காயத்திலே நின்றதாயினும் அக்காயத்தோடு பற்றில்லாமல் நிற்குமென்பார்.

பிரமம் ஆர்வத்துடனே கூடிநின்ற வுடம்பு நரை திரை நோய் சிறை இவற்று ளுறுப்பழிவுண்டானபின்பும் இவ்வுடம்பைப் பொல்லாதென்று நீங்கி நிற்கமாட்டாது. அவ்வுடனீங்கவென்று வருமிடத்து மிகவும் வியாகுலப்பட்டு நடுநடுங்கா நிற்கும். இப்படிக் காயத்தோடு பற்றி நிற்குமுறைமையை யெவ்விடத்தினுங் கண்டிருந்தும் பிரமத்துக்குக் காயத்தோடு பற்றில்லையென்று உன்னுசையாற் சொல்ல வுள்ளதன்றிப் பற்று விட்டதில்லை யென்க. ஆதலிற் பற்றுள்ள தான்மாவே பிரம மன்றென்க.

உ தா ர ண ம்.

தனத்தினை மனைதனை தானியந்தனை
நினைத்தினி யெவரநு பவிப்பர்நீங்குநாள்
எனக்கிவை யங்கிய மாகுமேயென
மனத்துயர் மலியுமே மாயுமாவியே.

பாம்பழல் வாயினுற்பற்ற மண்டுகம்
தேம்பிடுந் துயருறும் ஜீவன்றேயுநாள். (சிவதருமோத்தரம்.)

9. இந்த மாயாவாதிகள் பெரும்பாலும் சில போலியான திருஷ்டாந்தங்கள் மூலமாய்த் தங்கள் கொள்கையை மெய்ப்படுத்தவும் நிலைப்படுத்தவும் பார்க்கிறார்கள். ஆதலின் அவர்கள் கூறும் நியாய திருஷ்டாந்தாபாசங்களைப் புலப்படுத்திக் கண்டிக்கிற சித்தியாருரையைச் சற்று தெளிவாகப் புலப்படுத்திக் காட்டுவோம்.

(1) பாத்திரோதகங்கள்தோறும் சூரியபிம்பம் பிரதிபலித்தல் போல காயங்கடோறும் பிரமச்சாயை பிரதிபலிக்கும், என்பது.

உபாதிகளோடுங்கூடி யுருவேற்பட்ட காயத்திலே குற்றமில்லாத அருவப்பொருளாகிய பிரமச்சாயை பொருந்திப் பிரதிபலிக்கமாட்டாது. மேலும் உருவப்பொருளுக்குச் சாயையேயன்றி அருவப் பொருளுக்குச் சாயையின்றாம். அல்லாமல் கடஜலத்தை யொரு நிழலில் அல்லது கிரகத்துக்குள் வைத்தால் சூரியபிம்பந் தோன்றாது மறைந்துவிடும். அதுபோலக் காயங்கடோறும் நின்ற பிரமமும் எவ்விடத்து மறைந்து நிற்கத்தக்கது. இன்னும், சூரியபிம்பத்தைக் காண்பா னொருவனுளன்—அதுபோலப் பிரமப் பிரதிபலனத்தைக் காண்பான் வேறோராத்துமா வுளனாதல்வேண்டும். பிரத்யேகாத்மா இன்றென்பது மாயாவாதக் கொள்கையாம். ஆதலின் இதுபோலித் திருஷ்டாந்தமென்றறிக.

உ தா ர ண ம்.

ஏகதேசம் பரிதியேயும் பிரதிபிம்பம்
ஏகதேசங் கடத்துள்ளே
இந்தமுறை பிரமத்தில்லையே யாதலினால்
இந்த உடற் பட்டான் வேறாம்.

(2) மணியும் ஒளியும்போலப் பரமான்மாவும் ஜீவான்மாவும் ஒன்றுபட்டிருக்கு மென்பர்.

இது குணகுணிப்பொருளுவமை. ஜீவான்மா காயங்கடோறும் பிரிந்து வேறுபட்டிருத்தலில் இவ்வான்மாக்களைக் குணமென்றல் பொருந்தாது அல்லாமல் நிர்க்குணப் பிரமமென்ற கொள்கையோடு மாறுகோடலுள்ளது. குணத்தை வேறு பிரித்தலொல்லா. பிரிக்க முயலின் குணிக்குநாசம் வரும். அன்றியும் ஜீவான்மாவுக்கு இச்சா ஞானக்கிரியை முதலிய பல குணங்களுள்ளனவென்று பிரத்தியக்ஷத்தில் அறிகின்றும். பரமான்மாவுக்கு அந்த இச்சா ஞானக்கிரியை யின்றெனில் ஒப்பில்லாத பிரபஞ்சத்தை யுண்டாக்குந் தொழிலு மில்லையாய் அவற்றைக் காத்தழிக்கவேண்டுமென்ற அறிவு மில்லை யாய்ச் சுத்த சூனியப்பொருளாய் முடியும். ஆதலின் இதுவும் போலி யேயாம்.

உதாரணம்.

மணியொளிபோ லேகமெனின் மாமணியுந் தேசும்
குணகுணியென்றே பேதங்கொள்.
குணாதீதமென்றுநீ கூறுவையே யாகில்
ஒணுதுலகமுந் தருமாறென்.

(3) இருளிற் பழுதையைக் கண்டு பாம்பென்று மயங்கிப் பீதி யடைவார்க்குப் பழுதை பாம்பென்றே தோற்றுமாறுபோலப் பிரமத்திலே தோற்றிய பிரபஞ்சமும் அதனைக்கியத்தாலே மெய்யாய்த் தோன்றுகிறதென்பர்.

அவ்வாறு மயங்கிய ஆன்மாக்களும் இச்சா ஞானக்கிரியை யுண்டாய் பிரபஞ்சகிருத்தியம் செய்வதில்லையென்று நீ கூறும் பிரமத்தின் பேதமாய்த் தானே நிற்கின்றனர். அப்படி இருக்கில் இவ்வாறு மயங்கிப் பீதியடையக் காரணமென்? இப்படி நீ சொல்லின் உனக்குப் புத்தி மயக்கமுண்டாயிருக்கிறதென்றும் நீ பிரமமாகிற இன்பம் உனக்கு இன்றென்றுந் தீர்மானிக்கவருகிறது. கேவலம் கிஞ்சிக்ஞத்வனாகிய உனக்குள்ள புத்தி மயக்கத்தைப் பிரமத்துக்குளதென்று தானே சாதித்ததுபோலாகிறது. ஆ! இதென்ன பயித்தியம்; போகட்டும் இனியாகிலும் நீ கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டியென்று நினை.

(4) சிலம்பிப் பூச்சியின் வாயிடத்தே நின்று பொய் நூலானது தோன்றிப் பின் கெட்டவிடத்து மீளவும் அதனிடத்தே யிந்த நூல் தோன்றிவந்தாற் போலப் பிரமத்திடத்திலே உலகமானதுந் தோன்றிப் பின் கெட்டவிடத்து மீளவும் பிரமத்திலே நின்று முன்போலத் தோன்றிவருமென்பர்.

அரூபமாயும் அவிகாரமாயுமுள்ள பிரமமும் பிரபஞ்சத்திலே யகப்பட்டு மயங்கத்தக்கதென்றாகும். ஆதலால் நீ கூறிய உவமை பொருத்தமின்று; விரோதமாம். நூலாகிய சேடத்துக்குள் அச்சிலம்பி

யகப்படாது நின்றாற்போலப் ப்ரபஞ்சமாகிய சேடத்துக்குள்ளும் பிரமங்கூடிநில்லாது காரணமாய் நிற்குமென்று கூறின் கடத்துக்கு மண் காரணமாயிருக்கவும் காரணமாகிய மண்ணில் கடந்தானே தோன்றாது. தோன்றுமிடத்து ஆதிகாரணமாகிய மண்ணும் நிமித்த காரணமாகிய குலாலனும் துணைக்காரணமாகிய திரிகையுங்கூடித் தொழிற்செய்யக் கடந்தோன்றுமாப்போலப் பிரபஞ்சத்துக்கும் ஆதி காரணமுண்டாய்த் தோன்றவேண்டும். வேறு ஆதிகாரணம் வேண் டா. பிரமமே யாதிகாரணமெனில் சித்திலே யசித்துத் தோன்று தென்றறிக.

சிலம்பிநூல்போலச் சகம் பரத்திற்றோன்றின்
மலம்பரத் துண்டென்றே மதி.

(5) பலவர்ணமாகிய அநேக மணிகளைக் கோவையாகக் கோத்த விடத்து ஒருநிறப்பட்ட நூல் பலநிறமாய் நின்றாற்போலப் பிரபஞ் சத்திற் றோன்றப்பட்ட ஜீவசிருஷ்டிகள் பலவாகப் பேதிக்கப்படுகை யால் அதனோடுகூடிய பிரமமும் பல பேதப்பட்டாற்போல அங்கங்கே தோன்றும். தோன்றினும் நூல்போல ஒரே தன்மைத்தாய்ப் பேதப் படாதென்பர்.

மணிகள் வேறு நூல் வேறாயிருத்தல்போலப் பிரபஞ்சமும் வேறு, பிரமமும் வேறு, பிரபஞ்சம் பிரமத்தின் பேதமுமன்று; பொய்த் தோற்றமுமன்று; பிரமத்தின் இச்சா ஞானக்கிரியைகளிலேபிரபஞ்ச மணிகள் கோக்கப்பட்டுள தென்றறிக. ஆதலில் பிரமம் பேதமில் லது, பிரபஞ்சம் பேதமுள்ளது; எனவே பிரமம் ஜீவான்மாவாக வும், பரமான்மாவாகவும் பேதிக்குமென முன்னர்க் கூறியதற்கு இந்த வுவமை மாறுகொளக் கிடந்தது. ஆதலின் வழுவேயாமென்க.

10. இம்மட்டும் விவரித்துக்காட்டிய நியாயங்களினால் நிர்க்குணப் பிரமம் கடவுளாகாதென்ற உண்மை வெள்ளிடையிற் கிடக்கின்றது. இனிக் கடவுளின் கிருதகிர்த்தியங்க ளெல்லாவற்றையும் தானே நட த்திவருகின்ற மாயையின் தன்மை யெப்படியென்று விசாரிக்கவேண் டியதாம். ஆயின் மாயை என்பது ஒரு வஸ்துவன்று ஒன்றுமில் லாத சூன்யமே யென்றும், 2-வது, இன்மையிலிருந்து யாதொன்று முண்டாவதில்லை யென்றும், 3-வது, மாயைக்கு உள்ளதுபோலக் கற் பனைசெய்து லக்ஷணங்க ளுண்டென்றுகொள்வது தவறென்றும், 4-வது, மாயையைப் பற்றியுள்ள தப்பபிப்பிராயத்துக்குப் பேதமையே கார ணமென்றும் சாங்கியமத நிராகரணத்தில் தெள்ளிதின் நியாயங்காட் டிப் போந்தாம். ஆதலின் ஈண்டு வேறுகூற அவசரமில்லையென்று விடுத்து மேலே சைவசமயக் கடவுளாகிய சிவபிரானிடத்துக் கடவு ளிலக்கணமுள்ளனவா வென்பதைப்பற்றி விசாரிப்பாம்.

மாயாவாதிமதம் முற்றிற்று.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

8-ம் அத்தியாயம்.

சைவசமயக் கடவுள்.

1. சிவனை வழிபட்டு முக்தியடையக் கற்பிக்குஞ் சமயமெது, அது சைவசமயம். ஆகவே சைவசமயத்துக்குப் பிரதான கடவுள் சிவனென்றாகிறது. சைவசமயிகள் தாங்கள் செய்யும் நித்திய கர்ம மானுஷ்டானங்கள், ஆன்னிகங்கள், பூஜாகைங்கிரியங்கள், ஜெபதப விரதாதிகள், யாகாதிகிருதுக்கள், தானதர்மங்கள், ஸ்தலயாத்திரை, தீர்த்தயாத்திரை முதலிய பாவநிவாரண கர்மங்கள் யாவத்சடங்குகளையும் சிவனை யுத்தேசித்தே செய்கிறார்கள். அவருக்கே அர்ப்பணம் பண்ணுகிறார்கள். இவ்வாறு சைவர் வழிபடுகடவுளாகிய சிவபிரானுக்கு முந்திய பிரகரணத்தில் விதந்துகாட்டிய கடவுள்தன்மை யிருக்கிறதாவென்று பரீக்ஷிக்குமளவில்,

1. சிவன் கடவுளென்பதற்கு இந்துவேத ஆதாரமில்லை யென்பதினாலும்,
2. ஆகமங்கள் பிரமாண கிரந்தங்க ளாகமாட்டாதென்பதினாலும்,
3. சிவன் சரீரசம்பந்தமும் ஸம்சார பந்தமுமுள்ளவரென்பதினாலும்,
4. அவர் அறியாமையினால் ஆபத்துக்குட்பட்டவ ரென்பதினாலும்,
5. மும்மூர்த்திகளும் நிருவிகற்பவஸ்து வல்லரென்பதினாலும்,
6. சிவனுக்குரிய சில திருநாமங்களின் காரணமே அவர் கடவுளல்லரெனக் காட்டுகிறதென்பதினாலும்,
7. சர்வேஸ்வரத்துவ முடையவரல்ல ரென்பதினாலும்,
8. மெய்க்கடவுளுக் குரியவாய் வேதங்கூறுகிற லக்ஷணங்களில் ஒன்றேனும் பொருந்தவில்லை யென்பதினாலும்,

சிவனுக்குக் கடவுள் தத்துவமில்லையென்று மெய்ப்படுகிறது. ஆதலின் அவைகளை முறையே விளக்கிக் காட்டுதும்.

2. சிவன் கடவுளென்பதற்கு வேத ஆதாரமில்லை யென்பதைப் பற்றி,

இந்துதேசத்தில் ஏகதேசம் மூவாயிர வருஷக்காலமாய் வழங்கி வருகிற சைவ வைஷ்ணவ முதலிய சமயங்களுக்கு ஆதாரமாயுள்ள முதனூல் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு

வேதங்களே. இவைகள்தா முக்கிய பிரமாண நூல்களென்று ஒப் புக்கொள்ளுகிறார்கள். அப்படி இந்து சமயிகள் முழுக்கவும் பூரண மாயொப்புக்கொள்ளுகிற நான்கு வேதங்களுக்குள்ளும் பரப்பிரம வஸ்துவே சமஸ்தத்துக்கு மூலகாரணமென்று சில விடங்களிலும் இன்னுஞ் சில இடங்களிற் சோம சூரியாக்கினி இந்திரன் முதலிய திக்குபாலகர் அஷ்டவசுக்கள் இவர்களே விசேஷித்த தேவர்களென் றும், இவர்களாலே யுலகபாலனம் நடந்துவருகிறதென்றும் கண்டிருக் கிறதேயன்றிச் சிவனைப்பற்றி யொரு பிரஸ்தாபமுமில்லை. ருத்திர னென்கிற பெயர் வேதத்தினிடைக்கிடை வழங்குகிறதுண்டு. அதி னால் "இருச்குவேத காலத்திலுள்ளவர்கள் ருத்திரனென்றொரு தே வனை வணங்கினார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனாலும் அவர் கள் வணங்கின ருத்திரனுக்கும் இப்பொழுதிருக்கிற சிவபக்தர்கள் வணங்குகிற சிவனுக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. எப்படியெ னில் சிவபக்தர் சிவனே யெல்லாத் தேவர்களிலும் பிரதான தேவ னென்றும், பிரம்மா விஷ்ணு முதலான தேவர்களும் சகலலோகங் களும் அவனுக்குள்ளடக்கமென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆனால் வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிற ருத்திரன் பிரதான தேவனல்லன். அவன் மருத்துக்களுக்குத் தகப்பன். காற்றுக்களுக்கு மருத்துக்க ளென்றும், உருத்திரனுடைய மக்களென்றும் பெயர். ஆதலால் அந்த ருத்திரன் காற்றுக்களுக்குத் தகப்பன். அவனை அக்கினியின் ஊழியனென்றும், தானுபதியென்றும், அக்கினியென்றுஞ் சொல்லி யிருக்கிறது. ருத்திரனென்கிறதும், பசுபதியென்கிறதும் அக்கினிக் குப் பெயரென்று வேதத்தைச்சேர்ந்த சதபதப்பிரமாணத்தி லறிந்து கொள்ளலாம், அனலுக்குங் காற்றுக்கு முண்டாயிருக்கிற சம்பந்தத் தினாலே காற்றுக்குத் தகப்பனாயிருக்கிற ருத்திரனை யிப்படி யக்கினி யோடே சம்பந்தப்படுத்தி யிருக்கலாமென்று நினைக்கத்தக்கது. ருத் திரன் மருந்துக்கு உதவத்தக்க பூண்டுகளை யுண்டாகும்படி செய்து வைத்தியர்களுக்கு வைத்தியனாயிருக்கிறவனென்றும்கண்டிருக்கிறது. அவனைச் சில சமயங்களில் தயவுள்ளவனாகவும், சில சமயங்களில் முற்கோபமுள்ளவனாகவும், முகாந்தரமில்லாமல் மனிதரைக் கொல் லுகிறவனாகவும் காட்டியிருக்கிறதன்றிச் சில கவிகளில் அவனைச் சடையனென்றுங் காட்டியிருக்கின்றது. அதினால் அவனுடைய ஜடை தீக்கொழுந்தென்று சிலர் நினைக்கிறார்கள்."

"இருக்குவேதத்தில் ருத்திரனென்னப்பட்டவன் சிவன்தானோ அல்லவோவென்று மேற்சொல்லியவைகளை வாசிக்கிற, யாவரும் நிதானித்துக்கொள்ளலாம். அவன் சிவனல்லவென்றால் இருக்கு வேதகாலத்திற் சிவனில்லவேயில்லையென்று நிச்சயமாய் விளங்கும். அந்த உருத்திரன் சிவன்தானென்றால் இருக்குவேதகாலத்தில் சிவன் நானாவித தேவர்களுக்கு ஒத்தவனேயல்லாமல் எல்லாத் தேவர்களி லும் பெரியதேவனல்லனென்பது நிதரிசனமாய் விளங்கும். முத

லாமண்டலம் 44—வது சூக்தத்தில் மித்திரனும் வருணனும், ருத்திர னும், சகலதேவர்களுஞ் சந்தோஷப்பட்டு எங்களுக்குத் தயவு செய்வார்களாகவென்று சொல்லியிருக்கிறதைப்பார்த்தால் வேதத்தை யெழுதின ரிஷிகளும், அக்காலத்திலுள்ள மற்ற இந்துக்களும் ருத்தி ரனை மித்திரன் வருணனென்ற ஆதித்தியருக்குச் சமானமாக வெண் ணினார்களேயன்றி அவனையே கடவுளென்றாவது, இந்திரனுக்குச் சரி யானவனென்றாவது எண்ணினதில்லையென்று விளங்கும். விஷ்ணு ருத்திரனென்ற பெயர்கள் எவ்வளவோ தாழ்ந்தவைகளென்பது இருக்குவேதத்தில் முதலாம் அஷ்டகத்திலுள்ள 121 சுலோகங்க ளில் இந்திரனுக்கு 45. அக்கினிக்கு 37. மருத்துக்களுக்கு 12. உதையத்துக்கு 4. ருத்திரர்களுக்கு 2. மற்ற சுலோகங்கள் பற்பல சிறு தேவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. விஷ்ணுவுக்குத் தனி யாக அந்த அஷ்டகத்திலொன்றுமில்லை. இதைக்கொண்டும் நிதா னிக்கலாம்."

3. ஆகமங்கள் பிரமாணமாகமாட்டா வென்பதைப்பற்றி.

வேதங்களில் ஆதாரமில்லையென்றாலும் வேதங்களோடொத்த கௌரதையுள்ள காமிகமுதல் வாதுளமீறாகிய 28சைவாகமங்க ளிருக் கின்றனவே. அவைகளிற் சிவபிரானே சர்வத்துக்கு மேலான அநாதி காரணமாயுள்ள பரப்பிரம வஸ்து. அவனே மெய்க்கடவுளென்றும், சரிதை கிரியை யோகம் ஞானமென்ற நான்கு பாதங்களை யநுஷ் டித்து நின்று அவனை வழிபட்டு உபாசிக்கு முபாசனைமுறை இவை யிவையென்றும், 28 கோடி கிரந்தங்கள் கூறுகின்றனவே யென்றால்; பிராமணர் முதலிய இந்துமார்க்கத்தார் யாவரும் பிரமாண கிரந்தங்க ளாக ஒப்புக்கொள்வது நான்கு வேதங்களே. அவைகளுக்கு அவி ரோதமாய் எம்மட்டுக்கு ஒத்துவருகிறதோ அம்மட்டுக்கு ஸ்மிருதி யையும் பிரமாண கிரந்தமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள், இவற்றிற் குப் பொருந்தியிராத எந்த நூலும் அக்கிராகியமானவைகளென்று ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். ஆதலால் ஆகமங்களாகட்டும், அஷ் டாதச புராணங்களாகட்டும், இதிகாசங்களாகட்டும், சுருதி ஸ்மிருதி களுக்கு நேர்விரோதமான கொள்கைகளையும், அநுஷ்டானங்களையும் கற்பிக்கிற நூல்களானதால் அவைகள் பிரமாணங்களாகமாட்டா. பூர்வத்திலிருந்த சமஸ்கிருத வித்வான்களாலே ஜீவனோபாயமாக வுண்டுபட்ட கட்டுப்பாடான கிரந்தங்களென்றறிக.

4. சிவன் சம்சார பந்தமுள்ள தேகியாயிருத்தலில் அவருக்குக் கடவுள் தன்மை பொருந்தா தென்பதைப்பற்றி.

கடவுள் அருவப்பொருளாயும், அதரிசியாயும், பஞ்சேந்திரிய நுகர்ச்சியற்றவராயு மிருக்கிறவரென்று இந்துவேதங்கள் ஸ்பஷ்டமாய் த்வனித்துக்கொண்டிருக்கச்சே ஐந்து முகமும் எட்டுத் தோளும் ஜடாதாரமும், திரிநேத்திரமும், புலித்தோலுடையும், யானையுரிப் போர்வையும், திரியம்பகம், திரிதலைச்சூலம், மழு முதலிய ஆயுதங்க

ளைப் பரித்த அஸ்தங்களும், அக்கினிவர்ணமான திருமேனியும், விபூதி தூளிதமும் உடையராய்ப் பார்வதி தேவியை மணந்து பிள்ளையார் ஆறுமுகர் வீரபத்திரர் முதலிய அனேக புத்திரரைப் பெற்று அவர்களுக்குச் சம்பந்தமுஞ் செய்து பௌத்திராதிகளையுங் கண்டு களித்துக் கைலையங்கிரி வாசியாய்த் திரிலோகங்களும் வணங்க வீற்றிருக்கின்ற சிவபிரானைக் கடவுளென்று சொல்வ தெப்படி? ஒன்றில் வேதஞ் சொல்வது தப்பு என்றாகவேண்டும். அல்லது வேதத்துக்கு விரோதமாய்ச் சிவன் கடவுளென்கிற கொள்கையும் அநுஷ்டிப்புந் தப்பு என்றாகவேண்டும். எது சரியென்று நிதானியுங்கள். சூரஸம்ஹாரத்தின் பொருட்டுச் சிவன் கல்லால மரத்தடியில் தக்ஷணாமூர்த்தமா யெழுந்தருளியிருந்து பதினாயிரந் தேவவருஷம் தபசு செய்திருந்தனரென்றால் சர்வவல்ல கடவுளுக்கு மேற்பட்ட கடவுளுண்டாயிருப்பதெப்படி? மற்றப்படி தம்மை நோக்கித் தாமே தபசு செய்திருந்தாரென்று சொல்லவேண்டுமேயன்றி வேறு யாது சொல்லக்கூடும்.

ஸ்கந்தபுராணம், மோனநீங்குபடலம். 9.

நோற்றுமாயவன் முதலினோர் யாவரு நுனதாளைப்
போற்றி யர்ச்சனைபுரிய வித்திருவெலாம் புரிந்தற்றாய்
தோற்றமின்றியே யைந்தொழி லியற்றிய தொல்லோய்நீ
ஆற்றுகின்றதோர் தவநிலை யெம்பொருட்டா லன்றே

என்றும்,

இராமாயணம் தாடகை வதைப்படலம். 2.

பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா லுணர்வுமேன் முடுகினா ரறிவுசென்
றுற்றவா னவனிருந்து யோகுசெய் தனனெனில்
சொற்றவா மளவதோ மற்றிதன் றூய்மையே

என்றும், கூறியிருப்பனவற்றால் சிவன் தபசு செய்தாரென்பது திருஷ்டாந்தமாகிறது. இத்யாதி செய்கையுள்ள சிவபிரானிடத்து அரூபம் அதிருஷ்யம் இந்திரிய நிக்கிரகமென்ற குணங்களுள்ளனவென்றால் அது பகடிவார்த்தை யென்பதிற் சந்தேகமென்ன விருக்கிறது.

“இல்லபுகழ்தலின் வைதலே நன்று.”

5. அறியாமையினா லாபத்துக்குட்படுகிறாரென்பதைப்பற்றி.

கடவுளுக்குரிய சர்வவல்லமை சர்வக்ஞானம் பரிசுத்தம் நீதி முதலிய குணங்களில்லை யென்பது விருகாசுரன் தபசுக்குவந்து அவனுக்கு வரங்கொடுத்து ஓடியதும், விஷ்ணு பிரமசாரி வடிவமெடுத்து வந்து தந்திரமா யவனைக் கொன்றதும், கவனிக்கையில், சிவபிரான் சர்வவல்லமையும் சர்வக்ஞானமும் எங்குற்றன. அசுரரை வஞ்சித்துக் கொன்று தேவர்களுக்கு அமிர்தபானஞ் செய்வித்த விஷ்ணுவாகிய ஜெகன்மோகினியைக் கண்டு மயங்கிக் கிரீடித்து அரியர புத்திர

னென்ற ஐயனார் உதயமானாரென்று பரிமளிக்கிறதே. இதில் சிவபிரானுடைய பரிசுத்தமும் நீதி முதலிய தைவீக லக்ஷணங்களும் யாண்டு சென்றிருந்தன. எல்லாமொருங்கே தொலைந்து பாழாயினவோ இன்னுமுளவோ. மனிதருக்குள்ளு மிப்படிப்பட்ட ஆபாசச் செய்கை நாற்றமும் அருவருப்புமானதென்று வெறுக்கச்சே இவைகள் சிவகடவுளாருக்குத் திருவிளையாட்டென்னலாமோ. விளையாட்டுத்தனமுள்ள இவனைக் கடவுளென்று சைவசமயத்தார் பாராட்டுவதும் பட்டங்கட்டுவதுந் தகுமா. மேலு மிப்படிப்பட்ட ஆபாச கிர்த்தியங்களைத் தெய்வத்தின்மே லேற்றுவது தேவநிந்தையென்று தோன்றாதது என்னை? நிதான புத்தியோடு யோசியுங்கள். மேலே குறிப்பிட்ட இரண்டு கதைகளைப்பற்றி இருசமய விளக்கம் சிவனது இடுக்கண்மூர்த்த பரிச்சேதத்தும் ஸ்கந்தபுராணம் மகாசாத்தப் படலத்துங் கண்டுகொள்க.

6. பிரமா விஷ்ணு ருத்திரன் மூவரும் ஒருவர். நிருவிகற்ப வஸ்து வென்பதைப்பற்றி.

(சிவனுக்குச் சர்வேஸ்வரத்துவமுண்டு) "அந்த ஈஸ்வரன் சிருஷ்டியாதி தொழில் செய்வதைப்பற்றிப் பிரமா விஷ்ணு ருத்திரனென மூன்று பிரதான நாமங்களாற் சொல்லப்படுகிறான். ஆதலால் கர்த்தா வொருவரேயன்றிப் பலரல்லர். சைவர்கள் சிவனென்கிற நாமத்தினாற் சொல்லப்பட்ட பொருளே முத்தொழிற்குங் காரணமென்றும், வைஷ்ணவர்கள் விஷ்ணுவென்கிற நாமத்தினாற் சொல்லப்பட்ட பொருளே முத்தொழிற்குங் காரணமென்றும், சொல்லுதலினாலே அவ்விரு சமயத்தாரும் கர்த்தா வொருவரென்றே கூறுகின்றாரல்லாமற் பலரென்று கூறுகின்றிலர்" என்பது சமயத்தொகுதி. இது தவறென்பதற்குத் திருஷ்டாந்தம்.

(a) வஸ்து வொன்று நாம மூன்றாயிருப்பதில் ஆக்ஷேபனை யாதுமில்லை. ஆனால் காரியம் அப்படிக்கில்லை. பிரமா விஷ்ணு சிவன் என்ற மூவரும் ஒருவராய் நிருவிகற்பாய் அபேதமாயிருந்தால் பிரமாவுக்குப் பிறந்தநாள் உரோகணி, விஷ்ணுவுக்குப் பிறந்தநாள் திருவோணம், சிவனுக்குப் பிறந்தநாள் திருவாதிரை யென்றிவ்வாறு ஜாதகர்மஞ் செய்திருப்பதாக வருவானேன்.

"வாழி யந்தரங்கமுள்ளாய் மருவுமாதிரை யையாவாய்"

என்று குற்றால ஸ்தலபுராணத்தும்,

"ஆதிரைநா ளுகந்தானும் ஆரூரமர்ந்த அம்மானே"

என்று அப்பர் தேவாரத்தும் வருவனவற்றைக் கண்டுகொள்க.

(b) பிரமாவுக்குச் சரஸ்வதியும், விஷ்ணுவுக்கு இலக்குமியும், சிவனுக்குப் பார்வதியுந் தேவிமார்களாயிருக்கும்வித மெப்படியாகும்.

(*c*) பிரமாவுக்குக் காசிபர் புலத்தியர் முதலிய புத்திரரும், விஷ்ணுவுக்குப் பிரமா, மன்மதன் முதலிய புத்திரரும், சிவனுக்குப் பிள்ளையார், ஷண்முகர் முதலிய அநேகம் புத்திரரும் உண்டுபட்டு ஒவ்வொருவரும் ஏகதேசங் கடவுள் தன்மையை யடைந்திருக்கிறார்களே. இவர்களெல்லாரும் அபேதப் பிரகிருதிகளாகவா ஜனித்தார்கள்.

(*d*) நாம விகற்பமேயன்றி வஸ்து விகற்பமில்லாதிருந்தால் தாமரைமலர் திருப்பாற்கடல் வெள்ளியங்கிரியென்ற ஸ்தான விகற்பம், ரூப விகற்பம், வர்ண விகற்பம், உடை விகற்பம், அணி விகற்பம், குண விகற்பம், தொழில் விகற்பம், ஆயுத விகற்பம், வாகன விகற்பம், பெண்டு விகற்பம், பெற்றபிள்ளைகள் விகற்பம், கோவில் விகற்பம், சிலை விகற்பம், விம்ப விகற்பம், ரத விகற்பம், விழா விகற்பம், பூசை விகற்பம், நைவேத்திய விகற்பம், மந்திர விகற்பம், புண்டர விகற்பம், ஸ்துதி விகற்பம், சமய விகற்பம், சாஸ்திர விகற்பம், ஆன்னிக விகற்பம் அனைத்தும் விகற்பமாகச் சகல நடபடிகளும் நடந்துகொண்டு வரும்போது மூவரும் ஒரே வஸ்துவென்ற போக்கு வார்த்தை பொருந்தத்தக்கதா.

(*e*) ஒருவரையொருவர் பகைத்துப் பொறுமைப்பட்டு நீ சிறியவன் நான் பெரியவன் என்று திவேசமூண்டு ஒருவரையொருவரெதிர்த்துச் சண்டை செய்வதும், ஒருவர் செய்ததை யொருவரழிப்பதும், காரியத்துக்குத் தக்கதாகக் கலந்துகொள்வதும், காரிய முடிந்தாற் காலைவாருவதும் நிருவிகற்ப வஸ்துவுக்கு லக்ஷணமாகுமா? ஈண்டெடுத்துக் காட்டியவற்றி லெத்தைச் சைவசமயிகள் மறுக்கக்கூடும். ஆதலால் இத்யாதி வீண்வாதங்கள் செல்லத்தக்கனவல்ல.

(*f*) மும்மூர்த்திக ளொவ்வொருவருக்கும் தன்தனக்குரியதும் பராதீனப்படக் கூடாததுமான தற்கிழமைப் பொருளும், பிறிதின் கிழமைப் பொருளும் பிரத்யேகம் பிரத்யேகமாய் அவரவருக்குச் சம்பந்தப்பட்டு அவரவர் கையாட்சியிலிருப்பதை மூவரும் ஒருவர் தான் நாம விகற்பமேயன்றி வேறு விகற்பமில்லை ஆதலிற் பலரல்லர் என்ற கட்சியை நிலைப்படுத்தும்பொருட்டு அவரவருக் குரிமைப்பட்ட பொருள்களையும் மூவருக்கு முரிமைப்பட்ட சம்பந்தப் பொருளாக்குவிப்பது எவ்வளவு ஆபாசமும் அநுசிதமுமான முறைப் பிறழ்வு, எவ்வளவு நீதிக்கேடு என்பதை யுணரார்போலும்.

7. சிவனுக்குரிய சில திருநாமங்களைப்பற்றி.

சிவனுக்குரிமையாய் வழங்குகிற சில பரியாய நாமங்களின் காரணத்தை சரித்திர சம்பந்தத்தோடு விளக்கிக் காட்டுவதினால் அவருடைய கடவுட்டன்மை யெப்படிப்பட்டனவென்று பரிஷ்கார

மாய்த் தெரிந்துகொள்ளக்கூடும். அதன்பொருட்டு அவற்றின் காரணத்தைத் தெரிவிக்குதும்.

(a) தாருகாவனத் திருடிகள் தவச்செருக் குற்றனரென்றும், அவ்விருடிகளைக் கர்வபங்கப்படுத்த வேண்டுமென்றுஞ் சிவபிரான் திருவுளங்கொண்டு பிக்ஷாண்ட வேடந்தரித்து நிருவாணியாய் ரிஷி பத்தினிகளை மயக்கி அவர்கள் பதிவிரதா தர்மத்தைக் கெடுத்தனரென்றும், இந்த அவலக்ஷண செய்கையை முனிவரறிந்து சிவனை வதைக்க விரும்பி அபிஸார ஹோமஞ்செய்து அதனில் நின்றுந் தோற்றுவித்த சர்ப்பம், யானை, புலி, மான், மழு, பூதகணம் இவை முதலியவைகளைச் சிவன்பேரிலேவ அவர் சர்ப்பத்தை யாபரணமாகத் தரித்தும், யானையை யுரித்துப் போர்த்தும், புலியதளை யுடுத்தும், மழு முதலிய ஆயுதங்களை அஸ்தங்களிற் பரித்தும், பூதகணங்களைத் தமது பரிவார சைநியங்களாக்கியும் இவ்வாறாக அவைகளை ஜெயித்து மேற்கொண்டாரென்றும், இந்தக் காரணத்தால் நக்கன், திகம்பரன், யானையுரித்தோன், புலித்தோலுடையன், மானிடமேந்தி, மழுவாளி, அழலேந்தி, பூதநாதன் என்ற பெயர்கள் ஏற்பட்டனவென்று ஸ்கந்தபுராணம் வெளியிடுகிறது.

(b) சிவனுக்குப் பித்தன் கபாலி யென்கிற பெயர்களுமுண்டு. "பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா" வென்று விசேஷமானவொருபக்தர் இந்தவிசேஷமானபெயரைச்சொல்லிப்பக்தி பூர்வகமாய் விளித்து முன்னிலைப்படுத்துகிறார். இந்தத் திருநாமங்கள் சிவனுக்கு வந்த வரலாறென்னையெனில்; பூர்வத்திற் பிரமாவைக்கர்வபங்கஞ்செய்யும்பொருட்டு அவர் சிரசில் ஐந்திலொன்றைத் தன் கையாற் கிள்ளியெறிய உடனே பிரமஹத்திதோஷம் பிடித்துக் கிள்ளுண்ட தலை கையைவிடாமற் பற்றிக்கொண்ட நிமித்தம் சிவபிரானுக்குப் பைத்திய முண்டாகி யெங்குந் திரிந்தனரென்றும், பலிக்குழன்று காசியையடுத்தபோது விஷ்ணுவானவர் அந்தப் பிரமஹத்தியைப் போக்கி முன்போலப் பார்வதி ஸமேதராயிருக்க வரம் பிரசாதித்தனரென்றும் ஸ்கந்தபுராணம் இருசமய விளக்கம் அரங்கத்தந்தாதி முதலிய நூல்களிற் கூறியிருக்கின்றது. இவ்வாறே சிவ திருநாமங்கள் சில வுள்ளன. "ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்கிற ஸ்தாலிபுலாபாக நியாயத்தின்படி மேல்விதவாமல் ஈண்டெடுத்துக் கூறிய இவைகளே யமையுமென்று நிறுத்துகிறோம்.

8. சிவன் சர்வேஸ்வரத்துவ முடையவரல்ல ரென்பதைப்பற்றி.

"தேகாதிகளைச் சிருஷ்டி செய்வதற்கு வேறு சமர்த்தர்களில்லாமையால் (சிவனுக்குச்) சர்வேஸ்வரத்துவமுண்டு" என்று சமயத்தொகுதியில் வரைந்திருக்கிறது. இது மெத்த விநோதம். வேறு சமர்த்தர்களிருந்தால் சிவனுக்குச் சர்வேஸ்வரத்துவம் நீங்கி

விடுமோப்போலும். "ஆளில்லாத வூரில் நரி யம்பலம் செய்வது போல" என்றபடி சாக்ஷாத் மெய்க்கடவுள் அதரிசியாயிருப்பதினால் சைவசமயிகள் கடவுளிலரென்று கருதி எப்படியும் பேருக்காவது நமக்கொரு கடவுள் வேண்டுமே. அதற்கு இருக்கிறவர்களுக்குள் சம்போ மகாதேவனென்று "சொல்லாமற் சொன்னவனை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்" எனத் தீர்மானித்துச் சிவனுக்குக் கடவுட்பட்டங் கட்டி வணங்குகின்றார்போலும். அந்தச் சிவனுங் காலஞ்சென்றுபோனபின் மேலுஞ் சரமரணமடையா திருத்தற்பொருட்டு எங்குங் கருங்கற் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து சிவாலயங்களை யேற்படுத்தி ஆறுகால அபிஷேகம் பூஜை நைவேத்தியங்களை நிருமித்து விழாவெடுத்து வணங்குகின்றனர்போலும் என்றல்லவோ உண்மையை விரும்புவோர் யாவரும் நினைக்க இடங் கொடுக்கிறது. மெய்யாகவே சிவனுக்குச் சர்வேஸ்வரத்துவ முளவானால் விருகாசுரன் முதலியோருக்கு வெந்நிட்டது எதினாலே. வாணாசுரனுக்குத் துணைசெய்து நின்ற யுத்தத்தில் முறிபட்டு "முக்கணீசன் மக்களைத் தேடியோட" என்று வசைபாட நேரிட்டது என். சர்வேஸ்வரத்துவம் போகட்டும் ஈஸ்வரத்துவத்துக்காவது பொருந்தத்தக்கதா. அன்று. ஆதலால் சிவபிரானுக்குக் கடவுட்டன்மையில்லையென்று வெளியாகிறது.

9. மேலே பொதுப் பிரகாணத்தில் விதந்துகாட்டிய மெய்க்கடவுளுக்குரிய லக்ஷணங்களில் ஏதேனும் சிவபிரானிடத்துள்ளதா வென்று திட்டமா யறிந்துகொள்ளுநிமித்தம் இதனடியில் ஒரு அட்டவணை காட்டப்படுகிறது.

மெய்க்கடவுளுக்குரிய லக்ஷணம்.	சிவனுக்குப் பொருந்தா தென்பதற்குத் திருஷ்டாந்தம்.
1. அரூபி	திருவாதிரையிற் பிறந்தவர், ஸம்சார பந்தமுள்ளவர், தாருகாவனத்து ரிஷிகள் அவரைக் கொல்ல அபிசாரஹோமஞ் செய்தலில் மரிக்கத் தக்கவர். இவற்றால் ஜெனனமரணத்துக்குட்பட்ட ஸம்சாரியாகிய தேகி. ஆதலின் அரூபியல்லர்.
2. நிரவயவி	ஐமுகன், எண்டோளன், திரியம்பகன், ஜடாதாரியென்ற பெயர்களும் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்துவருகிற ஆசாரமும் உண்மையில் அவயவியேயாம்.
3. விபுஸ்வரூபி	தேகமுடையவர் விபுத்துவராகார்.

மெய்க்கடவுளுக்குரிய லக்ஷணம்.	சிவனுக்குப் பொருந்தா தென்பதற்குத் திருஷ்டாந்தம்.
4. ஆனந்தஸ்வரூபி	பலிக்குழன்றவர், சனியாற் பீடிக்கப் பட்டவர், கோபிஷ்டர், யுத்தங்களில் அபஜெயப்பட்டவர், இவ்வெல்லாந் துக்கஹேதுக்களாதலில் ஆனந்த ஸ்வரூபியாகார்.
5. சத்ஸ்வரூபி	தேகியாதலில் சத்ஸ்வரூபரல்லர்.
6. நன்மைஸ்வரூபி 7. தர்ம்மஸ்வரூபி }	பதிவிரதா தர்மத்தைக் கெடுத்தவர், ஜெகந் மோகினியோடு கிரீடித்தவர், பிரமஹத்தி செய்தவர், ஆதலின் இரண்டும் பொருந்தா.
8. மங்களஸ்வரூபி	நான்காவதைப் பார்க்க.
9. சமானரகிதர்	இந்திராதிதேவர் சிவனைவிடச் சிறந்தவரென்று வேதங் கூறுகின்றது. அதுவும் ருத்திரன்தான் சிவனென்ற கட்சி ஸ்திரப்படுகிற பக்ஷத்தில்.
10. பாபரகிதர்	ஆறுவதைப் பார்க்க.
11. ஞானஸ்வரூபி	துஷ்டருக்கு வரத்தைக் கொடுத்துச் சிஷ்டாசாரத்தைக் கெடுக்கிறவரெனப் புராணங்கள் கூறுகின்றன.
12. திரிகாலரகிதர்	தேகிகள் யாவருங் காலசக்கரத்துக்குட் சுழல்பவர், இவர் தேகி; ஆதலில் திரிகாலரகிதராகார். ஆனல் முக்காலத்து மில்லாதவரெனல் பொருந்தும்.
13. காலத்துக்கு நியந்தா	காலமில்பொருள், அதற்கு நியந்தாவாவதெப்படி, மேலுந்தேகி.
14. மனசுக்கு நியந்தா	அந்தரியாமிப்பொருளுக் கடுத்ததேயன்றித் தேகிகளுக்கு அடுக்காது.
15. உலகத்துக்கு ஆதாரர்	தமக்கே கைலையும் இடபமும் ஆதாரம். தாம் உலகத்துக்கு ஆதாரமாவ தெங்ஙனம்.
16. தர்மத்துக்கு ஆதாரர்	ஆறுவதைப் பார்க்க.
17. அநாதிநித்திய ஸ்வயம்பு.	தேகிகளுக்கு இந்த லக்ஷணம் பொருந்தாது.
18. சர்வவியாபகம் 19. சர்வக்ஞானம் }	மேற்படி வகைப்படி.

மெய்க்கடவுளுக்குரிய லக்ஷணம்.	சிவனுக்குப் பொருந்தாதென்பதற்குத் திருஷ்டாந்தம்.
20. சாக்ஷிமாத்திரர்	தேகிகள் சர்வசாக்ஷியாயிருத்தல் கூடாது. மேலும் மார்க்கண்டன் விஷயத்திற் பொய்த்தவர்.
21. அதிபாரிசுத்தர்	ஆறுவதைப் பார்க்க.
22. மகோன்னதர்	சுலக்ஷணமில்லாத வெவரு மகோன்னதராகார்.
23. மகிமைப் பிரதாபர்	லஜ்ஜைக்கஞ்சாதவருக்கு மகிமையாவது மகிமைப் பிரதாபமாவது.
24. அதிருஷ்யர்	தேகியாதலில் திருஷ்யரே.
25. பரமகாருணியர்....	சம்ஹாரகர்த்தாவென்று சொல்லச்சே பரமகாருணிய மெவ்வாறு பொருந்தும். மேலுங் கோபிஷ்டர். மனைவி பிள்ளைகளையுஞ் சபிப்பவர்.
26. நண்பர்	காருணிய மில்லாவிடத்து மெய்யன்பிராது.
27. நீதியுடையார்	நீதியுடையவராயிற் காலகாலனென்ற திருநாமம் வருவானேன்.
28. தயாளர்	துஷ்டரை யுத்சாகப்படுத்திச் சிஷ்டரை யுபத்திரவிக்கச்சே தயாளமெப்படி வரும்.
29. க்ஷமையுள்ளவர்	கதைகளிலுங்கூடப் பொறுமை காட்டினாரென்று காணோம். உண்டேற் கூறுக.
30. கிருபாநிதி	பொறுமைமுதலிய லக்ஷணங்களில்லாவிடத்துக் கிருபையிராது.
31. சம்பூரணர்	தேகிகளெவருஞ் சம்பூரணராகார்.
32. சர்வ வல்லவர்	விருகாசுரனுக்கு வெந்நிட்ட சங்கதியை நினைக்க.

10. இவ்வாறு நான்கு வேதங்களிற் கூறப்பட்ட பரப்பிரமத்துக்குரிய தைவீக லக்ஷணங்கள் 32ல் ஒன்றேனும் பொருந்தாதவரும் அம்மட்டன்று; முற்றும் அந்த லக்ஷணங்களுக்கும், உலகநீதிக்கும் முழுவிரோதமான கிருத கிருத்தியங்களைச் செய்த அபராதியாயுமிருந்த இந்தச் சிவபிரான் கடவுளாவாரா? ஆகார். அவருடைய துர்ச்செய்கைகளைப்பற்றிப் புராணாதி யிதிகாசங்கள் வெளியரங்கமாய்க் கூறுகின்றவைகள் உண்மையாயிருக்கிறபக்ஷத்தில் சிவபிரான் உலகநீதியின் தண்டனைக்குத் தப்பிப்போனவரா யிருந்தாலும், தேவ

நீதியின் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ள இடமிராதென்பதைச் சைவசமயிகள் உய்த்துணரக்கடவர். சிவன் கடவுட்டன்மையுடையரல்லரென்று மேலேகாட்டிய எட்டுப்பிரிவிலுமுள்ள நியாய திருஷ்டாந்தங்களினாலே மெய்ப்பிக்கப்பட்டது. ஆதலின் இனி வைசேஷிக சமயக் கடவுள் எப்படிப்பட்டவரென்று பார்ப்போம்.

சைவசமயக் கடவுள் முற்றிற்று.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

9-ம் அத்தியாயம்.

வைசேஷிகமதக் கடவுள்.

1. கணாதர் அல்லது கணாதர் என்ற முநிவர் கற்பிதமாக வைசேஷிகமென்றவொரு நூலைச்செய்ய அதன்மூலமாய் இந்த மதம் ஸ்தாபகமாயிற்றென்று தெரிகிறது. இந்தச் சமயத்துக்குக் கடவுள் சிவனென்றபோதிலும் இவருக்கும் சைவர் வழிபடு கடவுளாகிய சிவனுக்கும் அநேகமாய் வித்தியாசமுள்ளன. சைவர் சிவனே சாக்ஷாத் பரப்பிரம மென்கிறார்கள். இவர்களோ பரமாத்மாவென்ற பெயரையுடைய ஆத்மாவே கடவுள். அந்தக் கடவுள்தான் சிவன் என்று கொள்ளுகிறார்கள். அல்லாமல் சைவர் சிவனை இயற்கையிலே சர்வஞான முள்ளவரென்கிறார்கள். இவர்களோ தங்கள் சிவனுக்கு இயற்கை ஞானமில்லை; மனசின் சையோகத்தால் ஞானமுண்டாகிறது என்கிறார்கள். இப்படியே இன்னுஞ் சில விஷயங்களில் வேற்றுமைப்படுவதினால் இந்த வைசேஷிகர் சொல்லுகிற பரமாத்மாவாகிய சிவனுக்குக் கடவுள் தன்மையில்லை யென்பதற்குரிய நியாயம் விவரிக்கப்படுகிறது.

2. சுருதி ஆதாரமின்றெனல்.

கணாதர் கற்பிதமாகச் செய்த வைசேஷிக நூல் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க பிரமாண கிரந்தமாகாது. இந்துமார்க்கங்களுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கிற நான்கு வேதங்களிலும், இவர்கள் கொள்கைக்கு அநுகூலமாக வொரு சான்றுமில்லை. உண்டென்று மெய்ப்படுத்தும்போது அதைப்பற்றி யோசிப்போம். கணாதரைப் போலவே, புத்தர், கபிலர் முதலிய சிலர் காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்க ஒவ்வொரு உத்தேசங்களைக்கொண்டு சில சில்லறை நூலை யெழுதிவைத்திருக்கிறார்கள். அவைகளை யங்கிகாரத்துக்குரிய பிரமாண கிரந்தங்களாக மற்றவர்கள் ஒப்புக்கொண்டதுமில்லை. ஒப்புக்கொள்ளத்தக்க கொள்கையுடையவைகளுமல்ல. இப்படியே இந்தி

யாவில் அநேகமான அப்பிரமாண நூல்கள் வழங்கிவருகின்றன. அவைகளெல்லாம் சமயவாதத்துக்கு ஆதாரமாகக் கொண்டுவரக் கூடிய தகுதியுடையவைகளல்ல. நான்கு வேதங்களினுலும் ஆதாரப் படாத இந்த வைசேஷிகமதம் ஆத்மாவைக் கடவுளென்று சாதித்தால் அதனை யிந்துக்களும் ஒப்புக்கொள்ளார்கள்.

3. கடவுளுக்குரிய லக்ஷணம் ஆத்மாவுக்கின்றெனல்.

கடவுள் சர்வக்ஞத்துவர்.	ஆத்துமா கிஞ்சிக்ஞத்துவன்.
கடவுள் அநாதிநித்தியர்.	ஆத்துமா ஆதிநித்தியன்.
கடவுள் ஸ்வயம்பு.	ஆத்துமா சிருஷ்டிக்கப்பட்டது.
கடவுள் பூரணர்.	ஆத்துமா அபூரணன்.

இப்படி யெல்லா லக்ஷணங்களிலும் குறைவுபட்டிருக்கிற ஆத்துமாவைக் கடவுளென்பது பிராந்தி. ஆதலின் ஆத்துமாவைக் கடவுளென்பது கூடாது.

4. ஆத்துமாவும் கடவுளு மொன்றென்பதை மறுத்தல்.

ஆத்துமா வொன்றையே பரமாத்மாவென்று பேரிட்டுக் கடவுளாகவும், ஜீவாத்மாவென்று பெயரிட்டு ஜெகத்திலுள்ள ஜீவர்களாகவும் வைத்துக்கொள்ளுகிற இந்தக் கொள்கைக்கும், கடவுளே பிரபஞ்சத்துள்ள எல்லாமாயிருக்கிறுரென்ற கொள்கைக்கும் வித்தியாசமென்ன? இவ்வாறு சர்வ ஸ்வதந்தரமும், சர்வஸ்வயாதீனமுமுடைய சிருஷ்டிகனையும், ஸ்வதந்தர ஹீனதையும் பராதீனமு முள்ளதாகச் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களையு மொன்றென்று கொள்வது புத்திக்குத் தோஷமாதலாலும், உலகத்திலிறங்கி மானிட தேகங்களிற் புகுந்த ஆத்துமா கர்மபந்தப்பட்டு மும்மல சகிதராய் ஜெனனசஞ்சிதத்தால் வருந்திச் சிவனை வழிபட்டுக் கிடைத்த புண்ணியபலத்தால் பரமாத்மாவாகிய கடவுளோடு சேர்ந்துகொண்டவைகள்போக மீதியானவை உலகத்திலடைந்த வருத்தங்களோடு நரகயாதனைப் படுகையில் அந்த யாதனையையும் கடவுள் அநுபவிக்கின்றுரென்றுதானே யாகும். அவ்வாறு சொல்வது அபுத்தி பூர்வகமாதலாலும் ஆத்மா வேறு, கடவுள் வேறு என்பதே சுருதிநிச்சயமும் சர்வஜன சம்மதமுமான துணிபென்றறிக.

5. ஈஸ்வரனுக்கு இயற்கைஞான மின்றென்பதை மறுத்தல்.

பரமாத்துமாவாகிய ஈஸ்வரனுக்கு மனவின் சையோகத்தினுலேதான் ஞானமுண்டாகிறது. மற்றப்படி யியற்கைஞான மில்லையென்றுல் ஞானமில்லாத வொன்றைக் கடவுளென்று அபிமானித்து வழிபடுங்கொள்கை எவ்வளவு ஞானசூன்னியமானது எவ்வளவு அவிவேகமானது (1 யோவா. 2. 11.) கடவுள் ஞானமே திருமேனியாகவுடையவரென்று சுருதி முறையிடுகிறது. ஜெகத்து அவருடைய உன்னத பரமஞானத்தைக் கரதலாமலகமாகக் காட்டுகின்றது. ஒவ்வொருவருடைய ஜீவசாக்ஷியும் கடவுள் சர்வக்ஞானர், சர்வாந்தர்யாமி, தீமைசெய்யத் துணியாதேயென்று வற்புறுத்திப் பேசுகின்றது. அந்

தக்கரணங்கள் அஞ்சி நடுக்கமடைகின்றன. இவ்வாறு ஞானதிக்காரயிருக்கிற கடவுளை இயற்கையில் ஞானமற்றவரென்று சொல்லத் துணிவது எவ்வளவு பாதகம். அதுநிற்க மனிதருக்குத்தான் இயற்கைஞானமில்லை. மனிததேகம் பரமாணு நுட்பத்திலிருந்து ஆரம்பித்து உறுப்புக்கள் நிரம்பி உருவேற்படுகிறது. அறிவாகிய ஆத்துமம் அந்தத் தேகத்தில் ஆயுற்பவித்து அங்குரிக்கிறது. பொறிவாயிலாக வுட்செல்லும் விடய வுணர்ச்சி பரிணமித்த மனசு வர வரத் தடித்து அறிவை விருத்திப்படுத்துகிறது. அறிவாகிய ஆத்துமா விடைய வுணர்ச்சியைச் சேகரித்துக் கூட்டுகிற அவதாரத்தில் அதற்கு மனசென்ற பெயரேற்படுகிறது. மேற்கூறியவாறு விருத்திப்படுகிற அறிவில் நன்மை யின்னது தீமையின்னது என்று கிராஹியஞ்செய்யத்தக்க பகுத்தறிவாகிய புத்தி தத்துவ மேற்படுகிறது. அப்பால் சித்தமென்ற தத்துவம் நன்மைதீமையிலொன்றைத் தீர்மானிக்க அகங்காரதத்துவம் அதை நிறைவேற்றுகிறது. நன்மையின் கூட்டுறவு கதித்தவிடத்துச் சுக்ஞானமென்றும் தீமையை அநுசரித்த இடத்து அக்ஞானமென்றும் பெயருள்ள ஞானமுண்டாகிறது. இவ்வெல்லாம் ஆன்ம தத்துவங்களேயன்றிப் பிறிதொன்றன்று. இவ்வாறாக சுக்ஞானத்தை யடைந்த ஆத்மா தேகமழிந்தவிடத்து மனமுதலாகிய தத்துவங்களைத் தேகத்தோடு நீத்துவிட்டுத் தன்னைத்தந்த கடவுள் சானித்தியத்துக்குத் திரும்புகிறது. அக்ஞானத்தை யடைந்த ஆத்துமா இருட்படுகருக்குச் செல்லுகிறது.

6. மேலேகாட்டிய நியாயங்களினால் வைசேஷிக மதஸ்தர் கடவுளைப் பற்றிக்கொண்டிருக்கிற கொள்கை முழுதுந் தவறென்றும், அதை நம்பி யநுஷ்டிப்பது மோசமென்றும் மெய்ப்படுத்தப்பட்டது. மேலே அச்சுமறுவாதத்தை விசாரிப்பாம்.

வைசேஷிகமதக் கடவுள் முற்றிற்று.

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

10–ம் அத்தியாயம்.

அச்சுமறுவாதக் கடவுள்.

1. இந்த வாதிகளுக்குக் கடவுள் சிவபிரான். இந்தக் கடவுள் மெய்க்கடவுள் அல்லரென்று சைவசமயக் கடவுள் மறுப்பில் திருஷ்டாந்தப்படுத்தி யிருக்கிறது. மற்றக் கொள்கைகள் அந்தந்தப் பிரகரணத்திற் கண்டிக்கப்படும்.

அச்சுமறுவாதக் கடவுள் முற்றிற்று.

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

11-ம் அத்தியாயம்.

வைஷ்ணவசமயக் கடவுள்.

1. விஷ்ணுவை வழிபட்டு முக்தியடையக் கற்பிக்கும் சமய மெது? அது வைஷ்ணவசமயம். ஆகவே வைஷ்ணவசமயக் கடவுள் விஷ்ணுவென்ருகிறது. சைவசமயிகளைப்போலவே வைஷ்ணவ சமயிகளும் தாங்கள் செய்யுஞ் சகலவிதமான சடங்குகள் சைங்கிரியங்கள்முதலிய எல்லாவற்றையும் விஷ்ணுவின் பிரபாவத்தை யுத்தேசித்தே செய்துவருகிருர்கள். விஷ்ணுவுக்கே யர்ப்பணமுஞ் செய்கிருர்கள். இவ்வாறு வைஷ்ணவர் வழிபடு கடவுளாகிய விஷ்ணுவுக்கு முந்திய பிரகாணத்தில் விதந்துகாட்டிய மெய்க்கடவுளுக்குரிய தைவீகலக்ஷணங்க ளிருக்கின்றனவாவென்று ஆராயும்பக்ஷத்தில் அவைகளி லொன்றேனு மில்லையென்றே நிதரிசனமாகிறது. அதற்குத் திருஷ்டாந்தங்கள் வருமாறு.

2. விஷ்ணு கடவுளென்பதற்கு வேத ஆதாரமில்லை. இந்து மார்க்கங்களுக்கெல்லா முக்கிய ஆதாரமென்று சொல்வது நான்கு வேதங்களும், மநு முதலியவர்களா லுண்டுபட்ட ஸ்மிருதிகளுமாம். அவைகளில் விஷ்ணுவைக் கடவுளென்று யாண்டுங் கூறுதிருக்கவும் பிந்தியகாலத்தி லுண்டுபட்ட புராணம் இதிகாச முதலியவைகள்தாம் அவனைக் கடவுளென்று பிரஸ்தாபிக்கின்றன. ஆனல் புராணுதி இதிகாசங்கள் பிரமாண கிரந்தங்களாகப் பெரும்பாலு மொப்புக் கொள்ளப்பட்டவைகளல்ல. சிறுபான்மையோர் வேதவிரோதமான தங்கள் அநுஷ்டானங்களுக்கு ஆதாரமாகக் காலாந்தரத்தில் ஏற்படுத்திக்கொண்டவைகள். அவைகள் உத்பத்திக் கிரமமும் பிரமாண கிரந்தங்க ளாகாவென்பதற்குரிய நியாயங்களும் புராண நிர்ணயப் பிரகரணத்தில் தெளிவாய் விவரிக்கப்படும்.

3. விஷ்ணுவென்ற நாமம் பிரமாண கிரந்தங்களில் இடைக்கிடை வழங்குகிறதுண்டு. ஆனபோதும், கடவுளென்று கொண்டாடுகிற கருத்தாயல்ல, சாமான்யரான ரிஷிவர்க்கங்களோடு சேர்ந்தவொரு ரிஷியென்றே தெளிவாய்க் காட்டியிருக்கிறது. அதற்குப் பிரமாணம்.

> மந்வத்ரி விஷ்ணுஹாரீத யாக்ஞவல்கியோ ஸநோங்கிரঃ
> யமாபஸ்தம்ப ஸம்வர்த்தঃ காத்யாயனபிரகஸ்பதிঃ
> பராசரவ்யாஸ சங்கலிகிதா தக்ஷகொதமௌঃ
> சாதாதபோ வஷிஷ்டঃ சதர்ம்ம சாஸ்திர ப்ரயோஜகாঃ

இவற்றின் பொருள் மநு, அத்திரி, விஷ்ணு, ஹாரிதர், யாக்ஞவற்கியர், உஸநர், ஆங்கிரஸர், யமன், ஆபஸ்தம்பர், ஸம்வர்த்தகர், காத்

தியாயநர், பிரகஸ்பதி, பராசரர், வியாஸர், சங்கலிகிதர்கள், தக்ஷ கௌதமர்கள், சாதாதபர், வஸிஷ்டர் என்ற இந்தப் பதினெண்மர் தாம் ஸ்மிருதிகர்த்தாக்களாகிய தர்மசாஸ்திரப் பிரவர்த்தகர் என்ப தாம். மேற்குறித்த ஸ்மிருதிகர்த்தாக்களி லொருவராகிய இந்த விஷ்ணுவே (விஷ்ணுவின் அம்ஸாவதாரமாகிய) நாரதரென யாரேனு முதலெடுப்பிற் பிரமித்தபோதிலும் தர்மசாஸ்திரந் தெரிந்தவர்களின் ஸஹாயத்தால் இந்த (பதினெண்மரில் ஒருவராகிய) “விஷ்ணுவானவர் கேவலம் ஒரு ரிஷியேயன்றி வைஷ்ணவர்களுடைய குலதெய்வ மல்ல” என்று வேதசமாஜப் பிரவர்த்தகராயிருந்த ராஜகோபாலா சாரியாரென்கிற மகாபண்டிதர் தாமெழுதிய வேதஸமாஜ விண்ணப் பத்தில் 168-ம் பக்கத்தில் தெளிவாய்க் காட்டியிருக்கிறார். ஆதலால் இந்த விஷ்ணு வைஷ்ணவருக்குக் குலதெய்வ மல்லரென்று ஏற்படுகிறதுமாத்திரமல்ல, சாமான்யமான வொரு ரிஷியேயென்றும், நாரதர் இந்த விஷ்ணுவின் அவதாரமல்லரென்றும் இந்த விஷ்ணுவுக்குத் தேவத்தன்மை யில்லையென்றும் ஸ்பஷ்டமா யேற்படுகிறது.

4. ஸ்மிருதிகர்த்தாக்களி லொருவராகிய விஷ்ணு சாக்ஷாத் விஷ்ணுவாகிய கடவுளின் திருநாமந் தரிக்கப்பெற்றவர் இவருக்குத் தெய்வத்தன்மை யில்லையென்பது மெய்தான். ஆனால் கடவுளாகிய விஷ்ணு வேறேயுளரென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். வேதத்தின் வேறு சிலபாகங்களிலும் விஷ்ணுவென்ற பெயர் வருகிறது. அந்தப் பெயர் ருத்திரன், மித்திரன், வருணன் என்கிற ஆதித்தியருக்குச் சமானமாக எண்ணப்பட்டு வந்ததேயன்றி யெவ்விடத்தாயினுங் கடவுள் தன்மையுடைய பெயராக வழங்கப்படவில்லை. விஷ்ணு வென்கிற பெயரையுடையவன் எவ்வளவோ தாழ்ந்த வகுப்புத் தேவர்களி லொருவனென்பது இருக்குவேதத்தின் முதலாம் அஷ்டகத்திலுள்ள 121 சுலோகத்தில் விஷ்ணுவுக்குத் தனியாக அந்த அஷ்டகத்தில் ஒரு சுலோகமுமில்லை யென்பதினாலும் இந்திரன் அக்கினி முதலிய தேவர்களைப்பற்றிய பிரதாபங்களா யிருக்கின்றன வென்பதினாலும், தெளிவாய் விளங்குகின்றதென்று மகா ஞான பண்டிதரும் இந்துவேத ஆராய்ச்சியுள்ளவருமான இங்கிலீஷ் சாஸ்திரக்ஞர் ஒருவர் வெளியிட்டிருக்கிறார். ஆதலால் ஈண்டு வியக்தமாயெடுத்துச் சொல்லப்பட்ட விஷ்ணு தாழ்ந்தவகுப்புத் தேவர்களி லொருவரேயன்றிக் கடவுட்டன்மை யுடைய ரல்லரென வேற்படுகிறது.

5. பரப்பிரமமே விஷ்ணு வென்பதைப்பற்றி.

விஷ்ணுவுக்கு அநேக திருநாமங்களுள்ளன. அவற்றுள் விஷ்ணுவென்பது ஒன்று, இந்தப் பெயரை விசேஷமாய் வேதங்களிற் கூறவில்லையென்றாலும் அவருடைய திருநாமங்களிலொன்றாகிய பரப்பிரமமென்ற திருநாமத்தைப்பற்றி இடமிடந்தோறும் விசேஷமாய்க் கூறியிருக்கின்றதே யென்றால்; மெய்தான் பரப்பிரமமே சமஸ்தத்

துக்கும் அநாதி காரணவஸ்துவென்று தெளிவாய்க் கூறியிருக்கிறது. இதனால் விஷ்ணு பரப்பிரமமென்றுவதெப்படி? பிந்தியகாலத்தி லுண்டுபட்ட பற்பலசமயத்தவரும் இந்துவேதம் வெளிக்குவரவெளிக் குவர உயர்வான கடவுளுக்கு வேதத்திற் பரப்பிரமமென்ற பெயர் வழங்கியிருக்கிறதென்றறிந்து தங்கள் தங்கள் சமயகர்த்தாக்களை இவரே பரப்பிரமம் இவரே பரப்பிரமமென்று அவரவரே அபிமான வசத்தால் பெயரிட்டு தத்தங் கடவுளுக்கு மகிமையை நிலைப்படுத்த முயலுகிறார்கள். அப்படியே வைஷ்ணவர்களுஞ் சொல்லிவருகிறார் கள். இம்மட்டேயன்றி மெய்யாய்ப் பரப்பிரமமே விஷ்ணு, விஷ் ணுவே பரப்பிரமமென்று ரூபிகரிக்கப் பிரமாண கிரந்தங்களில் நிதரி சனப்படவில்லை. மேலுந் தேவர்கள் பெயரைத் தங்கள் புத்திரருக்கு அபிமானத்தாலிட்டுவழங்குகிற வழக்கம் சில மதஸ்தருக்குள்ளுண்டு. இதனால் அந்தப் பிள்ளைகளை அந்தந்தப் பெயராற் குறிக்கப்பட்ட தெய் வங்களாகப் பாவித்து ஊரவர் வணங்குவார்களா? போகட்டும் பெயரிட்ட பெற்றோரேனும் பூஜிப்பார்களா? ஒருக்காலும் அப்படிச் செய்யார். அல்லாமல், தேசத்தையாளுகிற அரசனுக்கும் அவன் பிரஜைகளி லிழிவான வொருவனுக்கும் 'மகாராஜன்' என்று பெயர். இதனால் பிரஜைகளிலொருவனாகிய மகாராஜன் யாவராலும் பூஜிதை செய்யப்படுவானா? படானே. இன்னமும், சங்கரன்—அயன்—மால் என்ற மும்மூர்த்திகளுக்கும் கேவலம் நரிக்கும் 'சம்பு' வென்ற பெயர். "சங்கரன் அயன் மால்நரி" என்பது நிகண்டு. இதனால் நரி மும்மூர்த்திகளிலொரு மூர்த்தி யென்று ஆராதிப்பாருண்டா? யாண்டுமிலர். ஆதலால் விஷ்ணுவுக்குப் பரப்பிரமமென்ற பெயரி ருப்பினும் பரப்பிரமத்துக்கென்று வேதங்களில் விதந்தோதப்பட்ட குணமுஞ் செயலுமில்லாத விஷ்ணுவைப் பரப்பிரமமென்று மதா பிமானத்தாற் சொல்லத்துணிவது செல்லத்தக்க நியாயமாகுமா? ஆகா தெனவறிக.

6. நாராயணனென்ற பெயரைப்பற்றி:

நாராயணனென்ற பெயர் விஷ்ணுவுக்குரிய பரியாய நாமங்களி லொன்றாகப் பிந்தியகாலத்தி லேற்பட்டு வழங்குகிறது. ஆனால் ரிக்வேதத்தில் ஸ்தோத்திரத்திரட்டினது பாகத்தில் அடங்கியிருக்கிற முழுக்கூறும் தெய்வத்தன்மையையுடைய தெய்வ புருஷர்களைக் குறித் தவைகளாயிருக்கின்றன. அவைகள் பிரஜாபதியென்றும், பரமேஷ்டி யென்றும், நாராயண புருஷனென்றும் பெயர்வைக்கப்பட்ட, முதலில் வெளிப்பட்ட வஸ்துவைக் குறித்தவைகளாயிருக்கின்றன. (இது வேதப்பொருள் விளக்கம், 72—வது பிரிவு.) இதை யாதாரமாக்கி விஷ்ணுபுராணம் நான்காம் அத்தியாயம் ஸ்ரீ வராகாவதார வைப வத்தின் துவக்கத்தில்,—"பிரஜாபதிகளுக்கு அதிபதியாய் நாராயணத் மகனாய்த் தேவதேவனுமான அந்தப் பிரமஸ்ரூபியான பகவான் பிர ஜைகளைச் சிருஷ்டித்த விதத்தை யறிவிக்கிறேன், கேளும். முன்

சொன்னபடி சதுர்யுக ஸகஸ்ரமான ராத்திரியெல்லாம் யோகநித்திரை செய்தருளி விடியற்காலத்தில் நித்திரைதெளிந்து பிரபோதமடைந்து சத்துவகுண மேலிட்டவனுய்ச் சதுர்முகன் சூன்யமான மூன்று லோகத்தையும் மறுபடியும் சிருஷ்டிக்கத் திருவுளமானுன். பராத் பரனும் ஷட்குண ஐஸ்வரிய சம்பன்னனும் அனுதியும் சர்வ ஜெகத் காரண பூதனும் சதுர்முக சொரூபனுமான அந்த ஸ்ரீமந் நாராயணனே சகல லோகங்களுக்கும் பிரபு. மயித்திரேயரே சிருஷ்டிகாலத்தில் பிரமாவினிடத்தில் அநுப்பிரவேசித்துச் சிருஷ்டியை நடத்துகின்றுன்" என்று விஷ்ணுபுராண கிரந்தகர்த்தாவானவர் மேலைய வேதவாக்கியத்துக்கு அர்த்தத்தை விவரித்திருக்கிறுர். இந்தப் பாகத்தைச் சற்றுக் கருத்தாய் வாசிக்கிற விவேகிகளுக்கு இதிலுள்ள தப்பபிப்பிராயம் விளங்காமற்போகாது. ஆயினும் சாமான்யரை யுத்தேசித்துப் புராணகர்த்தாவின் தப்பபிப்பிராயத்தையும் நாராயண சப்தம் பிரமத்துக்குப் பொருந்தாதென்பதையும் இங்ஙனம் விதந்து காட்டுவாம்.

முதலாவது பிரஜாபதி யென்ற வார்த்தைக்கு இனித் தோன்றப் போகிறதாகிய சகல மனுக்குலங்களுக்கும் காரணபூதனுய் முதலிற் பிறந்த அல்லது உண்டான தலைவன் என்றும், இரண்டாவது பரமேஷ்டி யென்ற வார்த்தைக்குப் பிரமத்தின் சித்தமாத்திரமா யுண்டானவன் என்றும், மூன்ருவது நாராயண புருஷனென்பதற்கு, நாரம்—அயனம்--புருஷன் என்ற மூன்று பதங்கள். அவற்றில் நாரம் என்பது ஜலம், இது காரணப்பெயர்; என்னகாரணமெனில், நரன் ஜலத்தினின்று தோன்றின காரணத்தால் ஜலத்துக்குத் தத்திதாந்த நாமம் நாரம், அயனம்=அசைவு, போக்கு, வழி என்றர்த்தம். புருஷன் என்பதற்கு ஆத்மா, ஆண் என்று அர்த்தம். ஆகவே இந்த மூன்றும் வடபதங்களாதலில் அந்தச் சந்திப்பிரகாரம் நாராயணன் என்ருகிறது. இதில் நரனைப் பிறப்பித்த ஜலம் நாரமென்ருயிற்றென்பது ஸ்வயங்கிருதார்த்த மன்று. விஷ்ணுபுராணம், 12-ம் பக்கம் 3-வது பாரக்கிராப் 3-வது வரியிற் காண்க. பிரஜாபதி, பரமேஷ்டி, நாராயணபுருஷன் என்ற இவைகளை பிரஜாபதியாகிய நாராயணன் அல்லது நாராயணனுகிய பிரஜாபதி யென்ருலும் அல்லது தனித்தனியிருவராகக் கொண்டாலும் ஆக்ஷேபனையில்லை. ஆனுல் பிரஜாபதியாகட்டும் நாராயணனுகட்டும் மனிதப்பிரகிருதியேயன்றி தேவப்பிரகிருதியன்றென்பது மாத்திரந் தீர்மானமாகிய பொருள். "தெய்வத்தன்மையுடைய வஸ்துக்களென்று வருகிறதேயெனில் அதற்குச் சமாதானம் பின்னே வருகிறது. தனித்தனி வெவ்வேறு பொருள் குறித்தவைகளல்ல. ஒரே பொருளுக்குரிய மூன்று காரணப் பெயர்களாம். ஸ்தோத்திரஞ் செய்கிறவர்கள் ஸ்தோத்திரிக்கப்படுகிற பொருளுக்குரிய சில முக்கிய காரணங்களைச் சுட்டிக்காட்டிச் சிலாகிப்பதுண்டு. அவ்வாறே தமிழ் வித்துவான்களும் புனைந்து ஸ்தோத்திரித்திருக்கின்றனர்."

"நீறுதாங்கிய திருநுதலானை நெற்றிக்கண்ணனை நிரைவளைமடந்தை
கூறுதாங்கிய கொங்கையினுனைக் குற்றமில்லியைக் கற்றையஞ்சடைமேல்
ஆறுதாங்கிய வழகனையமரர்க் கரியஜோதியை வரிவராலுகழுஞ்
சேறுதாங்கிய திருத்தினைநகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடைமனனே"

என்ற சுந்தரமூர்த்தி தேவாரத்தாலு மறிக. ஆகவே பிரஜாபதிமுதலிய மூன்றுபெயரையும் மனுக்களுக்குப் பிரதானனுய்ப் பூமியோடு மிஸிரமித்திருந்த ஜலத்திலிருந்து பரப்பிரமத்தின் சித்தமாத்திரையிலுண்டாக்கப்பட்டவன் என ஒட்டிப்பொருள்படுத்தினும் விகற்பின்று. ஆயின் தெய்வத்தன்மையுடைய வஸ்துவென்றிருப்பதெப்படியெனில், பாபரகிதமான நிலையைக் காத்துக்கொள்ளும்பரியந்தம் அந்த வஸ்து தேவத்தன்மையுடையது என்பதில் தோஷமென்ன? ஆனாலுந் தெய்வத்தன்மை யுடையதென்றமாத்திரமே பூரண தெய்வத்தன்மையென்றுகாதென வறிக. தெய்வம் சர்வக்ஞர். மற்றெல்லாச் சிருஷ்டிகளும் கிஞ்சிக்ஞத்துவ முடையவைகள்தானே. பரமேஷ்டி யென்றதினுல் சிருஷ்டிக்கப்பட்டவன் என்றும், நாராயண னென்றதினுல் பூத சிருஷ்டியாகிய ஸ்தூலதேகியென்றும், பிரஜாபதியென்றதினுல் மானுஷ்ய சிருஷ்டியென்றும் தெளிவாய்ப் பொருள்பட்டுக் கிடக்கின்றன. எப்படியும் நாராயணனென்றாலும் பிரமாவென்றாலும் பிரதமத்தில் மெய்க் கடவுளின் சித்தமாத்திரையிற்றோன்றின முதல் மனுஷன் அல்லது முதல் மனுஷர் என்பதே ரிக்வேத தாத்பரியம். இது இவ்வாறிருக்க:

இரண்டாவதாகப் புராணகர்த்தா சித்தாந்தித்திருக்கும் விதத்தைப் பார்ப்போம். முதலாவது வேதத்தில் பிரஜாபதி யென்பதை யொருமைப்பெயராய் வழங்கியிருக்கவும் இவர் அதைப் பன்மைப் பெயராக்கிப் பிரஜாபதிகளுக்கு அதிபதியாய் பிரமமென்று வியாக்கினிக்க அவசரமென்ன? பிரஜாபதி யென்பதைப் பிரதம மனும்கனென்று உள்ளதை யுள்ளபடியே யர்த்தங்கொள்ளும்பக்ஷத்தில் நாராயணனைப் பிரமமென்று கூறப் பொருந்தாது. ஆதலில் பன்மையைப் புணர்த்திப் பிந்தியகாலத்திற் புராணம் உத்பத்திசெய்துவிட்ட தக்ஷன்முதலிய பத்துப்பிரஜாபதிகளுக்குத் தலைவனென்று பொருள் கூறியிருப்பதை நிதானிக்கும்போது எவ்விதத்தும் நாராயணபுருஷனுக்கு மானிடத்துவத்தை நீக்கித் தேவத்துவத்தைக் கற்பித்து ஸ்திரப்படுத்த வேண்டுமென்பதே புராணகர்த்தாவினுள்ளுறை. இது பின்வருகிற பிரிவிலுந் தெளிவாய் விளங்கும்.

இரண்டாவது நாராயண புருஷனென்பதற்கு நாராயணுத்மகனுய்த் தேவதேவனுமான அந்தப் பிரம்மரூபியான பகவானென்று மெள்ளப் பிரமத்தோடு ஒட்டுநிமித்தமாய் ஆத்மகனென்ற வார்த்தையை நாராயண சப்தத்தோடு சேர்க்கிறூர். சிருஷ்டிக்கப்பட்ட எல்லாம் பிரமமயமென்ற கொள்கையொன்று வைஷ்ணவ சமயத்தாருக்கிருக்கச்சே நாராயணன்மாத்திரங் கடவுளாவதெப்படி? எல்லாங் கடவுளென்றுதானேயாகும்.

எல்லாம் பிரம்மமயமென்ற கொள்கைக்கு ஆதாரம்.

"துன்பமு மின்பமு மாகிய செய்வினை யாயுல கங்களுமாய்
இன்பமில் வெந்நர காகி யினியநல் வான்சுவர்க் கங்களுமாய்
மன்பல் லுயிர்களு மாகிப் பலபல மாய மயக்குகளாய்
இன்புறு மிவ்விளை யாட்டுடை யானைப்பெற் றேதுமல் லலிலேன்"

என்பது திருவாய்மொழி.

"போற்று தேவர்கள் மனுக்கள்மற் றவரெழிற் புதல்வர்
சாற்று மாந்தர்கள் மரீசியே முதலிய தவத்தோர்
ஆற்று நீர்ப்பிரி வெனவவன் கலையினிற் பிரிவாய்த்
தோற்று வாரிதை யேத்துவார் தொல்வினை யறுப்பார்."

இது பாகவதம் அங்கிஷாவதார முனைத்த வத்தியாயம்.

மேலேகாட்டிய இரண்டு கள்ளச் சாதனங்களாலும் பிறக்கிற சாத்தியமென்னவெனில்,—நாராயணன் பரப்பிரம வஸ்துவென்றும், அவ்வஸ்துவின் சித்தப்பிரியங் காரணமாயுண்டானவன் பரமேஷ்டியாகிய சதுர்முகப் பிரமாவென்றும், அதையுங்கூடக் காட்டாமற் காட்டிச் சதுர்முகன் சிருஷ்டித்தொழிலை நடத்துவதும் நாராயணன் அநுப்பிரவேச மாத்திரத்தாலுண்டாகிறதென்றும், மொட்டத்தலைக்கு முழந்தாளுக்கு முடிச்சுப்போடக்கருதும் பாவனையாய் வாக்கியத்தை முடித்துக் காட்டுகிறார். காட்டியுமென்ன? "உள்ளது போகாது இல்லது வாராது" என்றுதான் காரியப்படுகிறது. மேலேகாட்டிய முகாந்தரங்களினாலெல்லாம் நாராயணன் உலகத்தில்தோன்றிய முதல் மனிதன் என்றும், அவனைப் பிரமமென்றாவது பிரமாவென்றாவது விஷ்ணுபுராண கிரந்தகர்த்தா சொல்லுகிறபடி யொப்புக்கொள்ள மேலெடுத்துக்காட்டிய வேதமொழிகள் இடங்கொடுக்கவில்லையென்றும், இப்படியே வேதத்தின் யதார்த்தக் கருத்தை விளக்காமல் தங்கள் அபிமானத்தையும் கொள்கையையும் ஸ்தாபிக்கத் தப்பாய் அர்த்தஞ்செய்வது இந்து வித்துவான்களிற் பெரும்பாலாருடைய வழக்க மென்றும், வெகு தெளிவாய் வெளிப்படுகிறது.

7. வாசுதேவன், பரவாசுதேவன், பரவாசுதேவமூர்த்தி என்ற இந்தப் பெயர்கள் வைஷ்ணவமத நூல்களில் விஷ்ணுவுக்குரிய விசேஷ நாமங்களோடு சேர்த்து வழங்கிவருகின்றன. வேதங்களில் இந்தப் பெயனைப்பற்றிய பிரஸ்தாபம் யாண்டுமில்லை. புராணதி யிதிகாசங்களிலும் வேதத்தோடொத்த உபநிஷத்துக்களின் சாரமாகிய வேதாந்தநூல்களிலுங் கூறியிருக்கின்றதேயென்றால், வேதங்கள் தவிர இதரநூல்களெல்லாம் பிரமாண கிரந்தங்களாகக் கிராஹியப் பட்டவைக ளல்லவென்று விவேக தீக்ஷணமுள்ள இந்துக்களான சில பெரியோர் அவைகளை யொதுக்கி வைத்திருக்கிறார்களென்று மேலே காட்டியிருக்கிறதேபோதும். ஆயினும், பரவாசுதேவமூர்த்தியைப்

பாஞ்சராத்திரிகர் தங்கள் சமயக் கடவுளாகக்கொள்ளுதலின் அந்த மதசித்தாந்தத்தை நிராகரிக்கச்சே ஆண்டு சர்ச்சிக்கப்படும்.

8. விஷ்ணுவுக்காயினும் அவருடைய விசேஷித்த அவதாரங்களுக்காயினும் சமயத்தொகுதியிற் குறிப்பிட்டிருக்கிற அநாதி நித்தியத்துவம், சர்வ வியாபகத்துவம், சர்வேஸ்வரத்துவம், சர்வக்ஞத்துவம், சர்வ ஸ்வதந்தரத்துவம் என்ற தேவலக்ஷணங்கள் கிஞ்சித்துமில்லையென்பது இதன் பின்னேவருகிற பிரிவுகளிற் கண்டு கொள்க.

9. விஷ்ணுவானவர் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தின்பொருட்டு அநேகமான அவதாரங்கள் செய்து தர்மத்தை நிலைநிறுத்திப் பின் பரமபதத்துக்கு (தன்னடி ஜோதிக்கு) எழுந்தருளிப் போனாரென்ற விஷையம் உலகத்தில் அந்தந்தக் காலாந்தரத்திலிருந்த பிரஜைகளுக்கெல்லாம் பிரத்தியக்ஷத்தில் வெளிப்பட்டிருக்கச்சே அதற்கு என்ன முகாந்தரஞ் சொல்லி மறுக்கக்கூடுமெனில்;— அவதார விஷையங்களெல்லாம் பின்னிடையிலுண்டுபட்ட புராணக்கட்டுப்பாடான கதைகளேயன்றி யதார்த்தமாய் விஷ்ணுவென்ற வொரு கடவுளுமில்லை. அவர் உலகத்தில் அவதரித்து அதை யிதைச் செய்தாரென்பதுமில்லை. இந்துதேசஸ்தருக்குள் பூர்வீகந்தொடங்கி யொரு ஐதீகமுண்டு. யாதெனில்;— மகைஸ்வரியமும் ராஜரீக மகத்துவமும் கீர்த்திப்பிரதாபமுமுள்ள பெரிய அரசனையும், யார் ரணரங்கத்தில் வீரபராக்கிரமராய் யுத்தஞ்செய்து பகைவரைக் கொன்றுழக்கி ஜெயங்கொள்ளுகிருரோ அல்லது முன்வைத்தகாலைப் பின்வாங்காமல் எதிர்த்துநின்று சண்டைசெய்து மடிகிருரோ அந்த மகா சூரனையும், யார் சர்வ பரித்தியாகஞ்செய்து சருகு ஜல பக்ஷணம்பண்ணி வனசஞ்சாரியாய்த் திரிந்து சாபாநுக்கிரக வல்லமை யுடையோமென்று உலகைப் பிரமிக்கச் செய்து அதிதாந்திரிகராய் நடிக்கின்றனரோ அப்படிப்பட்ட மகா தபசிகளையும், ஜீவனோபாயமாகச் சித்தரென்ற பெயரை வகித்து மாயசால வித்தைகளைச் செய்து மயக்கித் திரிகிற சில எத்தரையும், இன்னுஞ் சொல்லவேண்டுமானால் தேசத்துக்கும் நாட்டுக்கும் அநேக அழிமதிசெய்து மனிதரையும் அடித்து முறித்துக் கொன்று குருதி தேக்கித் திரிந்த சில பெரிய துஷ்ட மிருகங்களையுங்கூட, விஷ்ணு அவதரித்த திருக்கோலமென்று மதிமறந்து சொல்லியும், அந்தந்தப் பாவனையான அர்ச்சைகளை உருப்படுத்திப் பிரதிஷ்டைசெய்து உற்சவாதிகளை நடப்பித்துச்சேவித்துத்திரிகிற வீண் எண்ணமே அந்த ஐதீகமென்றறிக. விஷ்ணு அவதரித்ததாய்ச் சொல்லுகிற எல்லா அவதாரங்களைப்பற்றியும், அததன் விபவாதிசயங்களைப்பற்றியும் அவதார நிர்ணயமென்ற பிரகாணத்தில் விவரமாய்க் கூறப்படும். ஆண்டு தெள்ளிதுணர்க.

10. விஷ்ணுவுக்குரிய பரியாய நாமங்களில் இரண்டு மூன்று திருநாமங்களை யீண்டெடுத்துக் காட்டிப் புராணாதி யிதிகாசங்கள்

மூலமாய் வெளியாகிறபடி அப்பெயர்க் காரணங்களைக் கவனிப்பதி னால் விஷ்ணுவுக்குரிய கடவுட்டன்மை யெப்படிப்பட்டதெனத் தெளிவாய்ப் புலப்படுமென்பதை யுத்தேசித்து இவ்விடத்துச் சில பெயர்க்காரணங்கள் விவரிக்கப்படுகின்றன. அவற்றுள்:

முதலாவது மாயன். உள்ளதை யில்லாததாகவும் இல்லதை யுள் ளதாகவுந் தோற்றுவிக்கிறது மாயம். நடந்ததை நடவாததாகவும் நடவாததை நடந்ததாகவும் நடித்து மெய்போலப் பொய்சொல்லிப் பிறரை யேமாற்றுகிறதும் மயக்குகிறதும் மாயம். நன்மையைத் தீமையாகவுந் தீமையை நன்மையாகவுங் காட்டிப் பகட்டுவது மாயம். இது ஒரு குணப்பெயர். இந்தக் குணத்தைத் தொழிற்படுத் துஞ் சக்திக்கு மாயையென்று பெயர். இந்த மாயா சக்தியை யுடையவனே மாயன். இது விஷ்ணுவின் பெயர்களிலொன்று. ஆன் மகோடிகளை உள்ளதை யுள்ளபடி யுணரவொட்டாமல் பிறக்கும் பொழுதே விஷ்ணுமாயை மூடிச் சுக்ஞானத்தைக் கெடுத்து அக் ஞானத்தை விருத்திப்படுகிறதென்றும், அதனாலேதான் ஜீவர்களுக் குக் கர்மபந்தமும் கர்மத்தினாலே பிறவியும், பிறவியினாலே யுலக விர்த்தியு முண்டாகிறதென்றும், மாயை மூடாமல் மெய்ஞ்ஞானமே விருத்திப்படுமாயில் அதனால் ஜீவர்கள் சிற்றின்பத்தை வெறுத்துப் பேரின்பத்தை விரும்பித் துறவறம் பூண்டு கடுந்தபசுசெய்து முக்தி யடைவார்களென்றும், அப்படியானால் உலகம் விருத்தியாகாமற் பாழ்பட்டுப்போமென்றும் கருதி, இந்தக் கடவுள் உலகத்தை மா யைக்குட்படுத்தி யிருக்கிறாரென்றும் வைஷ்ணவமத நூல்கள் கூறு கின்றன. இதற்குப் பிரமாணம் கம்பராமாயணம் கவந்த ஸ்தோத் திரம், விராதஸ்துதி, பெரிய திருவடி ஸ்தோத்திரங்களிற் காண்க. ஆகவே சகல மன்னுயிர்களிலும் எந்தக்காலத்திலேனும் மாயா சம் பந்தமின்றிப் பிறந்தவர் ஒருவராகிலு மில்லையாவென்றால் ஒருவ ருண்டு. அவர் பெயர் சுகர், வியாசருடைய புத்திரர், தாய் கர்ப்பத்தில் 12 வருஷம் வெளிப்படாம விருந்துகொண்டு தன்னை விஷ்ணுமாயை பிடிக்காதிருந்தால்மாத்திர முலகத்திற் பிறப் பேன், மற்றப்படி நான் வெளிப்படமாட்டேனென்று யார் வந்து சொன்னபோதுங் கேட்காமல் பிடிவாதம் பண்ணிக்கொண்டிருக் கையில், கடைசியாய் விஷ்ணுவே வந்து வெகு போராட்டஞ் செய்து என் மாயை உன்னைப் பற்றாதென்று வாக்குக்கொடுத்ததன் மேல் துறவியாகவே பிறந்து மகா தபசியாய் என்றுஞ் சாவாதவரா யிருக்கிறாரென்பது வைஷ்ணவமதக் கதை.

“பிறந்தபொழு தேதுறந்து பிறைக்குழவி போனடப்பப்
பின்போய்த் தொன்னூல்,
அறைந்தபுகழ் வியாதமுனி யாதரத்தால் மதலா யென்
றழைப்பச் செவ்வாய்,

திறந்துநறை பொழியுமலர்ச் செழுந்தருவு மேனென்ன
வுயிர்கள் யாவும்,
நிறைந்துறையுஞ் சுகமுனிவ னிரையிதழ்த்தா மரைமலர்த்தாள்
நினைதல் செய்வாம்''

என்று பாகவதத்தில் வெளிப்படுகிறது.

''உலகத்துக்கு நன்மையையே செய்வது கடவுள் வேலை. உலகத்துக்குத் தீமையையே செய்வது பைசாஸப் பிரகிருதிகள் வேலை.'' இது சான்றோர் மரபு. இதனால் உலகத்துக்குக் கேடு செய்வதே விஷ்ணுவுக்குப் பிரகிருதியானதால் அவரைக் கடவுளென்று நினைப்பது புத்திமயக்கமாத்திரமல்ல, பெரிய பாவமுமாகிறது.

இரண்டாவது சீதரன், பூமிகொழுநன் என்ற பெயர்களும் விஷ்ணுவுக்கு வழங்குகின்றன. சீதரன் என்பதற்கு இலக்குமியை மார்பத்திற் றரித்துக்கொண்டவனென்பது பொருள். தேவர்கள் கூடிப் பாற்கடல்கடையும்போது அதிலிருந்து ஸ்ரீதேவி தோன்றினாளென்றும், அவளை விஷ்ணுவானவர் தமக்குப் பெரிய பிராட்டியாகக்கொண்டு தமது மார்பத்தில் வைத்துக்கொண்டாரென்றும், அதனால் ஸ்ரீதரன் என்ற பெயர் வந்ததென்றும் வெளியாகிறது. அல்லாமற் பூமிகொழுநன் பூமிதேவிக்கு நாயகனென்று பொருள். பூர்வத்திற் பூமியைப் பாய்போலச் சுருட்டிக் கக்ஷத்தி லிடுக்கிக்கொண்டு சமுத்திரத்திற் பதுங்கிக்கொண்டிருந்த இரணியாக்ஷனைக் கொல்லுநிமித்தமாய் விஷ்ணு வராகாவதாரஞ் செய்து அசுரன் கக்ஷத்திருந்த பூமியைப் பறித்து தன் கால்களுக்கு இடையில் இடுக்கிக்கொண்டு இரணியாக்கனைக் கொன்று அப்பால் பூமியைப் பழைய ஸ்தானத்தில் விரித்து வைத்தாரென்றும், கவட்டிலிடுக்கி வைத்த காரணத்தால் பூமி விஷ்ணுவுக்கு மனைவியாகிவிட்டாளென்றும், அந்தக் காரணத்தாற் பூமி கொழுநனென்கிற பெயர் வந்ததென்றுங் கதை யிருக்கிறது. விஷ்ணு புராணம் பெரிய பிராட்டியார் அவதார வைபவத்தும் வராகாவதார வைபவத்துங் காண்க. ஸ்ரீதேவி பூதேவியாகிய இரண்டு மனைவிமாரோடுகூடிச் சிற்றின்ப நுகர்ந்து சுகித்திருக்கும் இந்த விஷ்ணு கடவுளாயிருப்ப தெப்படி? தாழ்ந்த வகுப்புத் தேவர்களுக்கும் சிற்றின்பப் பிரியம் வரும்போது பூலோகத்தில் வந்து விவாக சம்பந்தப்பட்டு அவ்வின்பத்தை யநுபவிப்பாரென்று புராணகதைக ளேற்பட்டிருக்கச்சே சாக்ஷாத் கடவுளாயிருக்கிற இவரும் கேவல மனிதரைப் போலவே இல்வாழ்க்கையுடையவராயிருந்து தமது பரமபதத்திற் பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்திருப்பாராயில் இவர் கடவுளுமல்லர். இவர் வசிக்குந் தானம் பரமபதமு மல்லவென்றுதானே தீர்மானிக்க வேண்டிவருகிறது.

11. விஷ்ணுவின் சரித்திர சம்பந்தமான சில விஷையங்களைக் கவனிக்கும்போதும் அவருக்குரிய கடவுள் தன்மை யெப்படிப்பட்டதென்று வெகு சுலபமாய்த் தீர்மானிக்கலாம். அதன்பொருட்டு

அவருடைய பிரபாவமான கிர்த்தியங்களி லொன்றை யீண்டெடுத்துக் காட்டுகிறோம்.

விஷ்ணுவாகிய கடவுள் சலந்தராசுரன் மனைவியாகிய விருந்தை யென்பவளை யிச்சித்துக் காமாதுரனாய் நெடுநாளாகச் சமயந் தேடிக் கொண்டிருக்கையில், ஒருகால் சலந்தரன் சகல தேவரையும் வென்று ஜெயங்கொண்டு கடைசியில் சிவ கடவுளாரிடத்து யுத்தஞ்செய்து வெற்றியடைதற்பொருட்டு வெள்ளியங்கிரிக்குப் போய் அறைகூவி நிற்கச், சிவன் வேற்றுருவமைந்து வந்து நீ சிவனோடு யுத்தஞ்செய்வதிருக்கட்டும், இந்தச் சக்கரத்தைத் தூக்கி உன் சிரமேல் வைத்துக் கொள் பார்ப்போம் என்று தந்திரமாய்ச் சொன்னதை யறியாமல் அசுரன் தன் முழுப்பலமுங்கொண்டு வெகு கஷ்டத்தின்பேரில் தூக்கித் தன் தலையில் வைத்தபோது அந்தச் சக்கரம் சிரசு தொடங்கிப் பாதம் வரையும் அவனுடைய மகா காத்திரமான தேகத்தை யிருபிளவாகப் பிளந்து அவனைக் கொன்றுவிட்டதென்றும், சலந்தரன் தன் மனைவியைப் பிரிந்த இந்தச் சமயம் பார்த்துப் பதிபோட்டிருந்த விஷ்ணு வேற்றுருவெடுத்து மகா தபசியாக நடித்துச் சலந்தரன் மனைவியிடம் புக்குச் சிலநாள் மாயஞ் செய்துகொண்டிருக்கையில், சலந்தரன் பிரேதத்தை அவன் படைஞரெடுத்துவந்து அவன் மனைவிக்கு முன் வைக்கவும் அவள் கணவனிழந்த துக்கத்தினால் தன் பிராணனை விட யத்தனித்தபோது விஷ்ணுவாகிய தபசி வேண்டாம் உன் பர்த்தாவை உயிரோடெழுப்பித் தருகிறேன் கலங்காதே யென்று தடுத்து மடிந்த சலந்தரன் ஆக்கையில் தானே பரகாயப் பிரவேசம்பண்ணி விஷ்ணு சலந்தரனாக உயிரோடெழுந்து நிற்கையில் ஐயோ பாவம் அந்தப் பதிவிரதை யென்னசெய்வாள் தன் பிராணநாயகன் தானென்று மயங்கி அவனை யாலிங்கனஞ்செய்து சிலகாலம் அவனோடு கூடிக் கிரீடித்துக்கொண்டிருந்தாளென்றும், பின்னர் சிவபிரான் இந்த மோசத்தை யறிந்து விருந்தைக்கு விஷ்ணுமாயத்தை வெளிப்படுத்தினபோது அவள் தன் பதிவிரதா தர்மத்தை யிழந்துவிட்டதற்காக ஆறாத் துக்கமடைந்து விஷ்ணுவின்மேல் உக்கிரகோபம் பிறந்து இந்த அதிபாபகரமான செய்கைக்கு உடந்தையாயிருந்த உன் துவாரபாலக ரிருவரும் உனக்குக் கொடிய பகைவராகக்கடவர்; நீ யிந்தத் தூர்த்த வியாபாரஞ் செய்ததினால் உன் கற்புடை மனைவியைப் பகைவர் திருடிக்கொண்டுபோக நீ லோகாபவாதத்தைச் சுமக்கக்கடவை யென்று சபித்தும், பின்பு ஆசூசப்பட்ட தன் உடலை அக்கினிக்கு இரையாக்கினாளென்றும், அப்பால் விஷ்ணு அதிமோகாக் கிராந்தனாய் மதிமயங்கிக் காமக்கோட்டி பிடித்து விருந்தை வெந்த சாம்பரிற்கிடந்து புரண்டு சிலகாலம் அலைந்து திரியச்சே, விஷ்ணுவுக்குச் சகோதரியும் சிவபிரானுக்கு மனைவியுமாகிய ஸ்ரீ பார்வதி தேவி தமையனுக்கு இப்படி நேர்ந்ததேயென்று பிரலாபித்து சலந்தரன் மனைவி தகிப்புண்ட சாம்பரினின்றும் அவளைத் திருத்துழாய்ப்

பூண்டாக முளைக்கச்செய்து அந்தத் துழாயிதழைத் தொடையலாக்கி அதனை விஷ்ணுவுக்குத் தரித்தபோது காமவெறி தீர்ந்து ஸ்வயபுத்தி யடைந்தனரென்றும், அதுமுதல் விஷ்ணுவுக்கு வனமாலிகையென்ற பிராட்டி யொருத்தி சேர்க்கப்பட்டாளென்றும் ஸ்கந்த புராணந் ததிசியுத்தரப்படலம் 212-ம், கவிமுதல் வெளியாகிறது. ஒருவேளை சைவ சமயிகள் வைஷ்ணவமத த்வேசிகளாதலில் இந்தக் கதையைக் கட்டுப்பாடுசெய்து தூஷியப்படுத்தி யிருக்கிறார்களென்று வைணவர் சொல்லவுங்கூடும். ஆனால் விஷ்ணு விம்பத்துக்குத் துளசி மாலையை விசேஷமாய்த் தரிப்பதற்கும், அர்ச்சனைக்குத் துளசியை விசேஷித்துக்கொள்வதற்கும், விஷ்ணுவாலயங்களிற் சேவிக்க வருவோர்க்கு ஸ்ரீபாத தீர்த்தத்தோடு திருத்துழாயை பிரசாதிப்பதற்கும், விஷ்ணு பக்தரான பாகவதர்கள் துளசிமணித் தாழ்வடத்தை யணிந்துகொள்வதற்கும், பிரம்மாலயங்களில் திருத்துழாய் மாடங்கட்டி வைக்கவில்லையெனில், பிராமணீய மில்லையெனப் பிரதிபந்திப்பதற்கும், காரண மென்னையென்று கூறுவர்?

வைணவ சமயத்தார் இந்த மகாபுனித சரித்திரத்தை மறந்துவிடாது ஞாபகப்படுத்திக்கொள்ளுமாறு பிரதிதினமும் தாங்கள் திருத்துழாயை அநுஷ்டித்துச் சங்கதியையும் அநுசந்தானம் பண்ணிக்கொண்டுவரும்போது பரமதஸ்தர் கட்டுப்பாடாகக் கற்பித்த கதையென்று சொல்லுவது பொருந்துமா? பொருந்தாது. அதுநிற்க;— இவ்வாறு துராகிருதத்துக் குட்பட்ட விஷ்ணுவை கடவுளென்றும், அவனை வழிபட்டு முத்தியடையலாமென்றும் நம்பி முயல்வது எவ்வளவு பேதைமை!

12. மேலே பொதுப்பிரமாணத்தில் கூறியிருக்கிறபடி பரப்பிரமத்துக்குரிய லக்ஷணங்களில் ஒன்றேனும் வைஷ்ணவ சமய கடவுளுக்குப் பொருந்தியிருக்கிறதாவென்று பார்ப்போம். அதனிமித்தம் இதனடியில் ஒரு அட்டவணை வரையப்படுகின்றது:—

பரப்பிரமம் அல்லது மெய்க் கடவுளுக்குரிய லக்ஷணம்.	விஷ்ணுவுக்குரிய தன்மை.
1. அரூபி.	ரிஷிவர்க்கங்களி லொருவராகிய ஸ்தூலதேகி யென்றும், தாழ்ந்த வகுப்புத்தேவர்களிலொருவரென்றும், அவரும் ஸம்ஸார பந்தமுள்ளவரென்றும், நாராயணனென்ருலோ முதலில் வெளிப்பட்ட பூத சிருஷ்டி, ஸ்தூலதேகி, மனுஷ்யப் பிரகிருதியென்றும், மேலே விதந்த பத்து நியாயங்களில் புலப்படுகின்றது. ஆகவே அரூபியன் றென்ருகிறது.

பரப்பிரமம் அல்லது மெய்க் கடவுளுக்குரிய லக்ஷணம்.	விஷ்ணுவுக்குரிய தன்மை.
2. நிரவயவி	தேகியென்ற மாத்திரமே அவயவியே யன்றி நிரவயவி யல்லர்.
3. விபுஸ்வரூபி	தேகமுடையோர் யாரும் விபுத்து வராகார்.
4. ஆனந்தஸ்வரூபி	காமாக்கினியாற் பீடிக்கப்பட்டவர், யுத்தங்களில் அபஜெயப்பட்டவர், ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டவராதலில் ஆனந்த ஸ்வரூபியாகார்.
5. சத் ஸ்வரூபி	தேகமுடையார் சத்ஸ்வரூபி யாகார், நசிக்கத்தக்கவரே.
6. நன்மை ஸ்வரூபி..	பதிவிரதா தர்மத்தைக் கெடுத்தவர் நன்மை ஸ்வரூபி யாவதெப்படி?
7. தர்ம்ம ஸ்வரூபி	மேற்படி வகைப்படி.
8. மங்கள ஸ்வரூபி....	நான்காவதைக் காண்க.
9. சமானரகிதர்	இந்திராதிகள் இவரிலுஞ் சிறந்தோ ரென்பது வேதம்.
10. பாபரகிதர்	6—வதைப் பார்க்க.
11. ஞான ஸ்வரூபி....	மாயன் ஞான ஸ்வரூபி யாவதெங் ஙனம்?
12. திரிகாலரகிதர்	தேகிகள் யாவருங் காலசக்கரத்துக் குட் சுழல்பவர். விஷ்ணு தேகி. ஆதலிற் காலரகிதரல்லர்.
13. காலத்துக்கு நியந்தா	காலசக்கரத்துக் குட்பட்டவர் அதற்கு நியந்தா வாவதெப்படி?
14. மனசுக்கு நியந்தா	தன் மனசை யடக்கச் சக்தியற்றவர் அதற்கு நியந்தா வாவதெங்ஙனம்?
15. உலகத்துக்கு ஆதாரர்....	பூமியும் பாற்கடலும் சேஷசயனமும் கருடவாகனமும் விஷ்ணுவுக்கு ஆதாரமாயிருக்கையில் இவர் ஆதாரராகார்.
16. தர்மத்துக்கு ஆதாரர்	6—வதைக் காண்க.
17. அநாதிநித்திய ஸ்வயம்பு.	தேகிகள் தோன்றி யழியத்தக்க வஸ்துக்களாதலில் அது கூடாது.

பரப்பிரமம் அல்லது மெய்க் கடவுளுக்குரிய லக்ஷணம்.	விஷ்ணுவுக்குரிய தன்மை.
18. சர்வவியாபகம்	மேற்படி வகைப்படி.
19. சர்வக்ஞானம்	மேற்படி வகைப்படி.
20. சாக்ஷிமாத்திரம்	மாயனாதலிற் சாக்ஷிக்கருகரல்லர்.
21. அதிபரிசுத்தம்....	6—வதைக் காண்க.
22. மகோன்னதர்	சுலக்ஷணங்களின்மையால் மகோன்னதராகார்.
23. மகிமைப்பிரதாபம்	லஜ்ஜைக்கஞ்சாதவருக்கு மகிமையாவது மகிமைப்பிரதாபமாவது!
24. அதிருஷியர்	தேகிகள் திருஷ்யரேயன்றி யதிருஷியராகார்.
25. பரமகாருணியர்....	மாயனாதலிற் பரமகாருணியரல்லர்.
26. நண்பர்	ராகத்வேஷிகள் நண்பராகார்.
27. நீதியுடைமை	மாயஞ்செய்பவர் நீதியுடையவராகார். மேலும் 6—வதைக் காண்க.
28. தயை	நரகாசுரனையும் ஸ்வர்க்காசுரனையும் வதைத்த சரித்திரத்தைக் கவனிக்க.
29. க்ஷமை	இன்ன சந்தர்ப்பத்தில் இன்னமிகையைச் சமித்தாரெனில் ஆண்டு யோசிக்கத்தக்கது.
30. கிருபாநிதி....	தயை யில்லாதவரிடத்துக் கிருபை யிருப்பதெப்படி?
31. சம்பூரணத்துவம்	கிஞ்சிஞத்வரெவரும் ஸம்பூரணராகார்.
32. சர்வ வல்லமை	மேற்படி வகைப்படி.

13. மேலே சிவபிரான் கடவுளல்லரென்று ஸ்தாபித்துக் கடைசியிற் காட்டியிருக்கிற முடிவுரையையே விஷ்ணுபிரான் கடவுளல்லரென்று ஸ்தாபித்திருக்கிற இந்தப் பாகத்துக்கு முடிவுரையாகக் கொள்க. பாஞ்சராத்திர மதத்தைப்பற்றி விசாரிப்பாம்.

12-ம் அத்தியாயம்.

பாஞ்சராத்திரக் கடவுள்.

விவாதாம்ஸப் பிரகரணத்தில் இந்த மதத்தைப்பற்றி மிகவுஞ் சுருக்கமாய்க் காட்டியிருக்கிறது. வாசிக்கிறவர்கள் தெளிவின்பொருட்டு துவக்கத்தில் இந்தச் சமய உத்பத்தியும் அதன் கொள்கை விவரமும், சற்று விரிவாய்க் காட்டப்படுகிறது.

சமய உத்பத்தி.

1. கர்த்தமரிஷி பெண்ஜாதி தேவஹுதி யென்பவள் வயிற்றில் கபிலரென்ற ஒரு மகாரிஷி பிறந்தார். இவரை யிந்தச் சமயிகள் விஷ்ணு அம்ஸ அவதாரங்களி லொன்றாகிய அவதார புருஷர் என்பர். பிந்தியகாலத்தில் தன் புத்திரனுடைய தபோ மகிமையையும் தீர்க்க ஞானத்தையும் நன்கறிந்த மாதாவாகிய தேவகதி தன் மகனிடத்து அப்பா குழந்தாய்! எனக்கு ஆத்மஞானோபதேசஞ் செய்யவேண்டுமென்று கேட்க, அவர் கூறியது:—

"தாயே! ஜெகத்ஸர்வம் விஷ்ணுமயம் என்று எவருஞ்சொல்லிக் கொள்வதைக் கேட்டிருக்கிறாயன்றோ. அதுவே ஆத்துமார்த்தமான பிரம்மக் ஞானோபதேசம். அதைச் சற்று விவரமாய்ச் சொல்லுகிறேன், கேளும். ஆதிமூலப்பொருளாயிருக்கிற விஷ்ணு மெய்ஞானாகாசத்தில் வந்தார். அவர் மனசிற் பிரமா வந்தான். பின்பு விஷ்ணுதான் மாயாதீதனாயிருந்து, மாயையினாலே சர்வலோக சிருஷ்டியார்த்தமாகக் கிருபையினாலே பாற்சமுத்திரத்தில் சேஷசயனனாயிருந்து, ஆகமங்களை யுண்டுபண்ணித், தனது நாபிக்கமலத்திலே பிரமாவை தோற்றுவித்து, அந்தப் பிரமாவினுடைய நெற்றியிலிருந்து ருத்திரனை யுண்டாக்கி, அவரைச் சம்ஹார கர்த்தாவாக்கித், தான் ஸ்திதிகர்த்தாவாயும் எல்லாவற்றிற்கும் அதிகார கர்த்தாவாயும் ஏற்பட்டு, முத்தொழிலும் மும்மூர்த்தியுந்தானேயாய், மாயையாய், மாயாகாரியமுமாய், உயிர்களுமாய், உயிர்களுக்கு மாயையினாலே பந்தமுஞ்செய்து, அதனை விடுவித்து, மாயையைப்போக்கி வைகுந்தத்தில் வசிப்பவராயிருப்பர். இதுவே தடஸ்தலக்ஷணம்.

"பெத்தமாவது: ஜீவராசிகளும் பிரகிருதியும் விஷ்ணுவைப் போல அநாதியாய் ஸ்வயமாய் ஒருவராலும் உண்டாக்கப்படாதனவாயுமிருக்கும். இப்படி யநாதியாய் அணுப்பிரமாணமான ஜீவராசிகளைக் கட்டுப்படுத்தி, மாயாகன்மங்களால் ஜெனன மரணப்பட்டுச், சொற்க நரகங்களை யனுபவித்துக்கொண்டு, பிரகிருதி மாயா காரியத்தால் பகவானை யறியாமல் திரிவதுதான் பெத்தநிலை."

"முக்தியாவது: இந்தச் சீவனுக்கு முன் அனந்தகோடி ஜென் மங்களிற் செய்த சுகிர்தத்தால் பகவத்சொரூபமான சற்குருவை யடைந்து பிரதானதத்துவம் இருபத்துநான்கையும் தெளிந்து அத னைச் சடமென்று கழித்து இதில் நான் ஸ்தூல சூக்ஷமகாரண தேக மல்லேனெனப் போக்கி இருபத்தைந்தாவதாய்நின்ற ஆத்மாவைய றிந்து மூலப்பிரகிருதி மகதத்துவம் அகங்காரம் காலபுருஷனையும் போக்கி அப்பால் நின்ற பரம புருஷனே ஆதிமூல பரவாசுதேவ னென்று அனுபவத்திற்கண்டு ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியமாகி இப்படி ஞானத்தினுல் அந்தரங்கத்திற் கண்டு பகிரங்கத்தில் எல்லா வற்றிற்கும் காரணமான பிரகிருதிக்கு மேலாயிருப்பதே பிரதமயூ கப் பரவாசுதேவர். அவரே பரமாத்மா. இரண்டாவது யூகம், சங்கருஷணன். அவரே ஜீவன். மூன்ருவது யூகம், பிரத்தியும் மின். அவரே மனம். நான்காவது யூகம், அநுருக்தன். அவரே யகங்காரம். இவ்வாறு பிரகிருதி, ஜீவன், மனம், அகங்காரம் என்ற நான்கு யூகத்திலும் நான்கு சொரூபமாயிருக்கிற பரவாசுதேவர் சங் கருஷணன் பிரத்தியும்மின் அநுருக்தன் என்ற பெயரையுடைய நால்வருஞ் சமமாகவிருப்பர். இவர்களை யந்தரங்கத்திற் கண்டும் பகிரங்கத்திலும் வைகுந்தத்திலும் இப்படியிருப்பாரென்று சமாரா தனைபண்ணிய உயிர்கள் இவர்களிடமாகப் பரமபதமெய்திக் கெடாத யூகமாகிற இன்பத்தில் பொருந்தி அநேக நாட்சென்றபிறகு பரவாசு தேவரிடம்போய்க் கலக்கும். இதுவே பரமபதப் பிராப்தி அல்லது முக்தி யென்றறிக."

இந்த முக்தியையடைதற்கான இன்னெறிவழி.

2. அவதார விக்கிரகங்களையாகிலும், லக்ஷ்மி ஸம்புக்தனன ஆதி மூலத்தையாகிலும், தனியாதிமூலத்தையாகிலும், விக்கிரகமூலமா யாராதித்து, சங்குசக்கராயுதத்தைத் தேகத்திற்பொறித்து, கேசவாதி நாமம் இருபத்துநான்கையும் உச்சரித்துத், துவாதச நாமங்களையும் தேகத்தில் தரித்துத், தான் வைஷ்ணவனுய் பரமபாகவதர்க் கிச்சை செய்து, பாஷண்டரையடுக்காமல், மதுபான சுராபானங்களை மந் திரவசத்தாகக்கொண்டு, தன்னை விஷ்ணுவாகவும் தன்னுடைய ஸ்திரீ களை லக்ஷ்மியாகவும் பாவித்து, அஷ்டாக்ஷரத்தை ஜெபித்து, ஆழ் வாராதிகள் பாடலை அநுசந்தானம் பண்ணிக்கொண்டு, உடல்பொருள் முதலியவைகளை யபிமானியாமல், குருவைச் சேவைசெய்து, மற்றத் தெய்வங்களை யாசிரயிக்காமல் விஷ்ணுவே தெய்வமென்றுகொண் டால், அந்தியகாலத்தில் விமானுரூடராய் விரஜாநதியில் ஸ்நானஞ் செய்து, பிரகிருதிதேகத்தை விட்டு அப்பிராகிருத தேகத்தை யெடுத் துக்கொண்டு, அப்பால் ஸ்ரீவைஷ்ணவர் புருஷாகாரத்தையடைந்து, பின்பு அதை யுலகுடையானிடத்திற் சேர்த்துப், பின்பு விஷ்ணு வைப்போலச் சங்குசக்கரதாரியாய்ப் பரமபதத்தில் அமர்ந்திருப்பது அமலமோக்ஷமென்றறிக.

பாஞ்சராத்திரமதக் கடவுள் மறுப்பு.

3. விஷ்ணுவென்கிற மாயன் ஆதிபூதனாய் அரூபியாய் சர்வவியாபகனாய் ஞானசொரூபியாயிருப்பன்; அவன் ஆன்மாக்களை ரக்ஷிக்க வேண்டித் தனது இச்சையானே தசாவதாரமெடுத்தும், கருணையினாலே க்ஷீராப்தியிலே யோகநித்திரை செய்தும், அநாதியாகிய வேதத்தையும் அருளினான் என்று பாஞ்சராத்திர நூல் கூறுகின்றது. சித்தியார் பரபக்ஷம் 360-ம் பக்கம் முதற்கவியைப் பார்க்க. இதன் மறுப்பு:

ஆதி யென்பதற்குத் தோற்றம், துவக்கம், பிறப்பு என்பது பொருள். ஆதியுமந்தமுமில்லாத அநாதிவஸ்துவே கடவுளென்று ரிக்வேத வாக்கியங்கள் கடவுளுக்கு லக்ஷணங் கற்பிக்கின்றன. இப்படியிருக்கப் பிரதம சிருஷ்டியாகத்தோற்றிய மாயன் கடவுளாவதெப்படி? விஷ்ணு தோற்றமுடைய ரென்பதினால் விஷ்ணுவுக்கு முந்தியுள்ள அநாதிநித்திய ஸ்வயம்புவாகிய கடவுள் ஒருவருளரென்றாகிறது. ஆகவே விஷ்ணு கடவுளல்லன்.

அரூபி. இதுவும் விஷ்ணுவுக்கு அடாதலக்ஷணம். ஏனெனில் விஷ்ணு உருவப்பொருளேயன்றி அருவப்பொருளல்லன். பஞ்சாயுதபாணி; நீலசாமள மேகவர்ணன்; கௌஷ்தவாபரணன்; செந்தாமரைக்கண்ணன்; சேஷசயனன்; தாமோதரன்; பள்ளிகொண்ட பெருமாள்; கருடத்துவஜன்; கருடவாகனன்;—என்ற இத்யாதிபெயர்கள் வழங்குவதினாலும்—

"காலாயிர முடியாயிரம் ஆயிரங் கைபரப்பி,
மேலாயிரந் தலைநாகங் கவிப்பவிண் பூத்தகஞ்சம்,
போலாயிரங்கண் வளரெம்பிரான் பொன்ன ரங்கமென்றே
மாலாயிரங்க வல்லார்க் கெய்தலாந்திரு வைகுந்தமே"

என்று பிரபந்தங்க ளேற்பட்டிருப்பதினாலும் அருவத்தன்மை யுடையனல்லனென்பது ஸ்பஷ்டமாகிறது.

ஞானஜோதி. விஷ்ணு ஞானஜோதியாயிருப்பது மெய்யானால் அவன் மாயாமயனாயிருப்ப தெப்படி? ஒளியை யிருள் பற்றத்தக்கதா? அல்ல, அவனே மாயையா யிருக்கிறானென்றால் அவன் ஞானஜோதியல்லனென்றாகிறது. ஆகவே விஷ்ணு ஞானஜோதியுமல்லன். மாயாமயனுமல்லன். சாமான்ய மனிதனையொத்த எழுவகைத் தாதுக்களாலுண்டுபட்ட மனிததேகியென்றே தீர்மானமாகிறது. மனிதன் ஜனன மரணத்துக் குட்படத்தக்கவனாதலில் அவன் கடவுளாவது அசம்பாவிதம்.

சர்வவியாபகன். ஏகதேசனாயிருப்பதே மனித சுபாவமாதலினால் மனிததேகிகளெவருக்கும் சர்வவியாபகம் கூடாது.

சுவேச்சையின்படி வேண்டுருவெடுப்பன்; அப்படியாயில் தக்ஷயாகத்தில் அவியுண்ணப்போய் ருத்திரகோபத்தினால் தலை யறுப்புண்டபோது அறுபட்ட தலையை மறுபடி தனக்கென்றாக்கிக்கொள்ள ஏலா

தவனெனப் பரமதஸ்தர் வசைகூற வருவானேன்? இவ்வெல்லாம் வீணான கட்டுக்கதைகளாம். உண்மையில் மெய்க்கடவுள் ஒருவரேயுளர். அவரே சர்வ திவ்விய லக்ஷணங்களுமுள்ளவர். ஏனையர் பொய்த்தேவர்களேயாம்.

4. இந்துமதஸ்தர் யாவரும் பிரமாணமாக ஒப்புக்கொள்ளத்தக்க நான்கு வேதங்களிலாவது, அவற்றோடொத்த கௌரதையுள்ள ஸ்மிருதிகளிலாவது பரவாசுதேவனைப் பற்றியாகிலும் அவருடைய நான்கு வியூகங்களைப்பற்றியாகிலும் கிஞ்சித்து ஆதாரமுமில்லை. ஒரு பிரஸ்தாபமுமில்லை. விஷ்ணுவைப்பற்றியாவது தேவவகுப்பில் தாழ்ந்த தரத்தி லுள்ளவனென்றும், ஸ்வயம்பாகஞ்செய்கிற உத்தியோகமுள்ளவனென்றும் சில இடங்களில் அருகிவருகிறது. பரவாசுதேவனைப் பற்றி அதுதானுமில்லையே. எவ்வகையானும் சுருதி ஸ்மிருதிகளில் பிரஸ்தாபப்படுத்தாதிருக்கிற கேவலம் மனித சிருஷ்டிகளி லொருவனாகிய வசுதேவபுத்திரனுக்குக் கடவுள் ஸ்தானத்தில் இடம்பிடிக்க முயல்வதைப்பார்த்தால் "மல்லுக்கு மாகாணிப்பங்கு" என்ற லோகவதந்தி இத்யாதி வம்புச் செய்கைகளுக்காகவே வழங்கப்பட்டதென்று மெய்ப்படுகிறது. முதலுக்கே மோசமாயிருக்கையில் வட்டிக் கழுவாருண்டா? பிரமாணங்களில்லாத இதுபோலுள்ள வீண்கொள்கைகள் எதுவும் கிராகியமாகமாட்டாது. ஆதலிற் பரவாசுதேவனை பரப்பிரம வஸ்துவென்று சாதிக்கத் துணிவது துரபிமானம்.

5. பரவாசுதேவனென்கிற பெயர் எப்படி யுண்டாயிற்றென்று விசாரித்துப்பார்த்தால், அதினாலேயே இவர் கடவுள் தன்மையுடையரல்லரென விளங்கும். எப்படியெனில், வசுதேவன் என்பவன் யதுகுல வம்சத்தரசரி லொருவன். இவருக்குத் தேவகன்புத்திரி தேவகி பாரியையானாள். அவள் வயிற்றில் எட்டாவது மகவர்கவொரு பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளைக்கு கிருஷ்ணன் அல்லது கண்ணனென்று பெயரிட்டார்கள் (கிருஷ்ணன்=கறுப்பன்; கண்ணன்=அழகான நேத்திரங்களையுடையவன் என்றர்த்தமாம்). இதுவே முதலில் வழங்கிய பெயர். இந்தப் பிள்ளை பிறந்தது ராஜ கிரகமாயினும் வளர்ந்தது ஆயர்பாடி யென்கிற இடைச்சேரியில். அந்தக் குலத்தார் வழக்கப்படி கிருஷ்ணன் சிறுவனாகவிருக்கையில் மாடு மேய்ச்சிப் பையனாயிருந்த காரணம்பற்றிக் கோபாலனென்று பெயராயிற்று. அந்தப் பிள்ளையின் பிந்தியகாலத்து நடபடிகள் மகாதந்திரமும் கபடமும் சூதுவாதுகளு முள்ளனவாயிருந்த நிமித்தம் பற்றிக் கபட நாடக சூத்திராவதாரி, சோரநாட்டியன், கள்ளப்பிரான் என்ற பிரபல நாமங்களேற்பட்டன. பிந்தியகாலத்தில் தோன்றின வித்வான்கள் மேலேகாட்டிய பெயர்களையும், வசுதேவ புத்திரனாகையால் வாசுதேவனென்கிற பெயரையும் இன்னும் அநேக காரணப் பெயர்களையுஞ்சேர்த்து தாம்தாமெழுதிய கிரந்தங்களில் வழங்கிவந்தார்கள். இவர் தேவனாகவே யிருக்கவேண்டும், மற்றப்படி இவ்வளவு

அரிய பெரிய காரியங்களைச் செய்ய அருகராவாரா என்ற திகைப்புத் தோன்றித் தேவாராதனை செய்யத்தொடங்கின காலமுதலாக 'பர' என்ற விசேஷணத்தையுஞ் சேர்த்துப் பரவாசுதேவனென்ற பெயரை வழங்கத் தலைப்பட்டார்கள். பரத்திலிருந்து வசுதேவனுக்குப் பிள்ளையாகவந்த விஷ்ணுவென்ற அர்த்தம் சொல்லி இந்தப் பேரைத் தங்கள் மதகிரந்தங்களில் வழங்கியிருக்கிறார்களென்பதே துணிவு. இத்யாதி பெயர்களையும் அதற்குக் காரணங்களையும் ஊகிக்கிறபக்ஷத்தில் பரவாசுதேவனுக்குக் கடவுட்டன்மை கிஞ்சித்து மில்லையென்பது ஸ்பஷ்டமாய் விளங்கும்.

6. வாசுதேவன் உலக சம்ரக்ஷணார்த்தமாக மகோத்தமனாயிருந்த வசுதேவனுக்கு விஷ்ணு திருவுள்ளமுவந்து தாமே பிள்ளையாகவந்து அவதரித்த அவதாரபுருஷன்தான். அவருக்கும் விஷ்ணுவுக்குஞ் சற்றும் பேதமில்லை. அவரே விஷ்ணு, அவரே வாசுதேவன். ஆதலில் வாசுதேவனே கடவுள். அவரே பரப்பிரமமென்றுஞ் சிலர் சொல்லுவார்கள். நல்லது அப்படியிருக்கட்டும். இருந்தாலுமென்ன? தெய்வீகலக்ஷணங்கிஞ்சித்துமில்லாதவாசுதேவனைக்கடவுளென்றுகொள்வதெப்படியாகும்? குணாதிகிர்த்தியங்கள் தெய்வத்தன்மைக்கு அவிரோதமா யொத்திருக்கவேண்டுமே. இந்த வாசுதேவனாகிய கிருஷ்ணமூர்த்தி எப்படிப்பட்டவரென்று கவனிக்கவேண்டியது அவசரமிருக்கிறது. சுகப்பிரமரிஷியாலெழுதப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தில் தசமஸ்கந்த முழுவதும் கிருஷ்ணனுடைய குணாதி கிர்த்தியங்கள்தானே பரிமளிக்கிறது. கபட நாடக சூத்திராவதாரி யென்ற பெயர் சோரநாட்டியன் கள்ளப்பிரான் என்ற பெயர்கள் இவற்றின் பொருள்கள்தானே வெட்ட வெளியாய் விளங்குகிறது. இவரைப்போலத் துச்சாரியும், இவரைப்போல வஞ்சனைக்காரனும், இவரைப்போல பொய்யனும், உலகத்தி லொருவனிருந்தானென யாரையாவது குறிப்பிடக்கூடுமா? கூடாதே. ஆதலினாலன்றோ ஒருகாலத்தில் திரியோதனன்,

"முடையெடுத்த நவநீதந் தொட்டுண்டும்
கட்டுண்டு முன்னாளைக்
குடையெடுத்தும் மழைதடுத்தும் வஞ்சனைக்கோர்
கொள்கலமாங் கொடியபாவி
படையெடுத்துப் போர்புரியே னெனப்பணித்த
மொழிதிறம்பிப் பகைத்தபோரில்
இடையெடுத்த நேமியினால் வெயின்மறைத்தா
னின்னமிவ னென்செய்யானோ"

என்று திட்டுகிறான். ஆனால் அவன் பகைவனாதலில் இப்படியென்பீர். அவன்சொற்றவற்றில் எது அபத்தம்? உள்ளவற்றைத்தானே சொல்லியிருக்கிறான். இவ்வாறு வஞ்சனையுஞ் சூதும் வாதும் கள்ளமும் பயின்று உலகத்துக்கு மாதிரி காட்டுவதுதானோ கடவுள் லக்ஷணம்?

"பூமி பாரந் தீர்க்கவந்து பொல்லாங் கியற்றிப் பொய்பேசிக்
காம வெறியா லீரெண்ணா யிரங்கோ வியரைக் கற்பழித்த
சீமா னுக்குத் தொழும்புசெய்து தீவாய் நரகிற் பதையாமல்
சாமியேசுக் கிறிஸ்துதிருச் சரண மடைமின் ஜெகத்தீரே.

வெண்ணெய் திருடிக் கட்டுண்டு வெதும்ப அடிக்க விம்மிவிம்மிக்
கண்ணைக் கசக்கி யழுதுநின்ற கள்ளப் பிள்ளை கருத்தாவென்
றெண்ணப் போமோ தெய்வத்துக் கிதுவோர் விளையாட் டெனலாமோ
நண்ணிக் கிறிஸ்து திருவடியை நயந்து போற்றும் ஜெகத்தீரே.

தொட்டுச் சிசுவை யுயிர்ப்பிக்கச் சோரன் சோர இடைச்சிகளை
கட்டிப் புரண்டும் நட்டமந்தைக் கற்போல் நிருவி காரிமகா
சிட்டப் பிரம சாரியென்று தெட்டி னவனைத் தெய்வமென்று
கெட்டுப் போகா தியேசுசரண் கிட்டிப் பிழைமின் ஜெகத்தீரே."

இவ்வாறு வருவனவற்றுலுங் கண்டறிக.

7. ஜெகஜீவபரம் அல்லது பரஜீவபந்தம் என்ற மூன்றும் அநாதி நித்திய ஸ்வயம்புவா யென்றுமுள்ள வஸ்துக்களேயன்றி எவராலாயினும் உண்டுபட்டனவல்ல வென்பதும் அல்லாமல் பரவாசுதேவனே சமஸ்தமுமாயிருக்கிறுர், அவரைத்தவிர இரண்டாவதாக ஒரு பொருளுமில்லை, அந்நியமாய்க் காணப்படுவன வெல்லாம் அவருடைய மாயாலீலை யென்று சாதிப்பதும் இந்த மதஸ்தர் கொள்கையாம். இந்தக்கொள்கை தவறென்பதற்கு நியாயம்:—

(1) இவ்விரண்டு கொள்கைகளும் ஒன்றுக்கொன்று நேர்விரோதமான கொள்கைகளாம். எப்படியெனில், பரவாசுதேவனே எல்லாமாயிருந்தால் ஆத்மாவும் பந்தமும் தனித்தனி வேறுபொருளென்றும், அம்மட்டன்று, அநாதி நித்திய ஸ்வயம்புவாகிய பொருளென்றும் கொள்வது நேர்விரோதமல்லவா? பரவாசுதேவனுக்கு அந்நியமான இரண்டாவது பொருள் யாதுமின்றென்பதாயிற்றே. ஜெகமும்ஜீவனும் அந்நியமென்று வேறுபடுத்திக் காட்டுவதும் அந்த நூல்தானே. ஆதலால் இது பரஸ்பர விரோதமுடைய தென்பதில் ஆக்ஷேபனையென்ன?

(2) இது மதிமயக்கமான கொள்கை. எப்படியெனில், மூன்று வஸ்துக்கள் அநாதி நித்திய ஸ்வயம்புவாயிருப்ப தெப்படி? அநாதி யென்பதற்குத் துவக்கமற்றது, எவற்றிற்கு முந்தியுள்ளது என்பது தானல்லவா பொருள்? "மூலமும் நடுவும் ஈறுமில்லதோர் மும்மைத் தாய காலமுங் கணக்கு நீத்தகாரணன்" என்று இதிகாசங் கூறுகின்றதே. மூன்று பொருள் நித்தியமாயிருக்கலாம். அநாதி ஸ்வயம்புவாயிருத்தல் கூடாதவிஷயம். கூடாததைக் கூட்டுவிப்பதே மாயா கிர்த்திய மென்பர் மாயாமாயர். எல்லாப் பொருள்களுக்கு முந்தியுள்ள வஸ்துவே பிந்தியுண்டுபட்ட எப்பொருட்குங் காரணமாயும், அவ்வெல்லாவற்றையுந் தனக்குள்ளடக்கி யாண்டு நடத்தத்தக்க சர்வ

சக்தி, சர்வஞானம், சர்வவியாபகம்—முதலிய சுலக்ஷணங்கள் யாவும் பரிபூரணமாகவுடையதுமாயுள்ள வஸ்து. அதுவே கடவுள். இதரமானவைகளெல்லாம் அந்தக் கடவுளாலே யுண்டுபட்ட சிருஷ்டிப் பொருள்களாம். அவைகளுக்குக் கிஞ்சிஞத்துவமே யல்லாமல் சர்வஞத்வ முரிமையுடையதல்ல. ஆதலாற் கடவுளொருவரே எல்லாவற்றிற்கு முந்தியுள்ள அநாதி நித்திய ஸ்வயம்பிரகாசர். ஆத்மா கடவுளாலே சிருஷ்டிக்கப்பட்ட வஸ்து. பந்தமென்பது ஒரு பொருளன்று. ஆத்மாவின் செய்கையே மோக்ஷ நரகபலாபலன்களை ஆத்துமா வடைவதற்குக் காரணமாய் அதனைப் பந்தித்ததாதலிற் பந்தமென்ற பெயராயிற்று என்றறிக.

(3) தேவலக்ஷணங்களெல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளதாயும், அவிரோதமானதாயும் இசைந்து பொருந்தியிருப்பவை. ஒரு லக்ஷணங் குறைவுபடுமாயினும் மற்றெல்லா லக்ஷணங்களும் பழுதுபடத்தக்கது. அநாதிநித்திய ஸ்வயம்பு என்றது கடவுளுக்குமாத்திரம் உரியது. ஆதலி னவற்றோடு மற்றெல்லா லக்ஷணங்களும் பொருந்தியிருக்கத்தக்கது. ஏனையோருக்கு அது செல்லாது. பொருந்தமாட்டாது. இப்படியிருக்க, ஆத்மாவும் பந்தமும் அநாதிநித்திய ஸ்வயம்பு என்றால், அவற்றோடு சர்வசக்தி, சர்வக்ஞானம், சர்வவியாபகம், அதிபாரிசுத்தம், ஒப்பற உயர்தல், முதலாகிய இத்யாதி லக்ஷணங்கள் பொருந்தியிருத்தல் வேண்டுமே. இந்த லக்ஷணங்கள் ஆத்துமாவுக்குமில்லை, பந்தத்துக்குமில்லை யென்பது யாவருந் தெளிவாயறிந்த விஷயம். இதை மறுத்துப் பேசத்துணிவது "நான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்பதுபோலுள்ள பிரத்தியக்ஷ விரோதமான பிடிவாதமேயல்லது வேறென்னவென்று சொல்லத்தக்கது. பரத்துக்காவது தேவலக்ஷணம் பொருந்துமேயென்றால், ஆம் பொருந்தத்தக்கதுதான். ஆனால் பரவாசுதேவனாகட்டும், விஷ்ணுவாகட்டும் சாக்ஷாத் மனிதனேயன்றிக் கடவுளல்லனென முந்தி நியாயங் காட்டிப் போந்தாம். அதைக்கண்டு தெளிக.

8. பரவாசுதேவனென்ற பரப்பிரமமே உலகமும் அதிலுள்ள சராசரங்களாகிய சமஸ்தமுமாயிருக்கிறான் என்றால், எல்லாங் கடவுளென்றுதா னாகுமல்லவா? அப்படியானால், இந்தக் கொள்கைக்கும், கடவுளேயில்லை எல்லாம் தானாய்த்தோன்றி நின்றழியத்தக்கதென்று சாதிக்கிற நாஸ்திகக் கொள்கைக்கும் என்ன பேதம்? கிஞ்சித்தும் பேதமில்லை. ஆயினும் எல்லாம் பரவாசுதேவப் பிரமமயமென்கிற பாஞ்சராத்திர மதஸ்தனிலும் கடவுளே யில்லையென்று அறியாமையினால் மறுக்கத்துணிந்த நாஸ்திகன் சற்று குணக்கியன்; ஏனெனில், அநேக நாஸ்திகர் தங்களுக்கு நியாயந்தோன்றின மாத்திரமே ஆஸ்திகராயிருக்கிறார்கள். வைணவர் சைவரைப்போலப் பெரும்பாலுஞ் சாஸ்திரக்ஞரல்லர்; பிடிவாதமேயதிகம். நாஸ்திகக்கொள்கையை

இடமிடந்தோறுங் கண்டித்திருக்கின்றோமாதலின் அவற்றைக் கண்டு தெளிக. அல்லாமல், விஷ்ணுமாயையினாலே பிரபஞ்சங் கானல் ஜலம்போலத் தோற்றுகின்றதென்பதும், எல்லாம் பொய்த்தோற்றமே யென்பதும் இம்மதஸ்தருக் குடம்பாடாம். ஆகவே இதுவும் நாஸ்திகக்கொள்கையோ டொத்ததேயாம். ஆதலில் அதற்குச் சொற்ற நியாயங்களையே இதற்கு உபயோகப்படுத்திக்கொள்க. மேலும் சாங்கிய மத மறுப்பையுங் கண்டு தெளிக. பெத்தமுத்தியின் தன்மைகளைப் பற்றி அதனதன் பிரகாணத்திற் காட்டுதும்.

9. அரியரப்பிரமரென்ற மூவரும் ஒருவரே, பிரத்தியேகமான கடவுளரல்லர், முத்தொழில் நடத்துங் காரணம்பற்றி மூவரென்ற பெயரா லழைக்கப்படுகிறார்கள், மற்றப்படி மூவரும் நிருவிகற்பமான ஒரேவஸ்து வென்பதும் இம்மதக் கொள்கைகளிலொன்று. இந்தக் கொள்கையை சைவமதக் கடவுள் மறுப்பிற் கண்டித்திருக்கிறோம்; அதனைக் கண்டுகொள்க.

10. முடிவுரை: மேலே பாஞ்சராத்திர மதக் கொள்கைகள் இப்படிப்பட்டனவென்று தெளிவுபெற விவரித்து அதன்மேல் அம்மதஸ்தர் கடவுளாகப் பாராட்டிவருகிற விஷ்ணுவாகிய பரவாசுதேவனுக்குத் தேவலக்ஷணங் கிஞ்சித்து மின்றென்றும், பிரமாண கிரந்தங்களில் ஆஸ்பதமில்லையென்றும், வாசுதேவ சரித்திர ஆபாசங்களிவையென்றும், ஜெகஜீவபரத்துக்கு அநாதி நித்ய ஸ்வயம்புத்வ மில்லையென்றும், இந்த மதக்கொள்கைகளிற் சில நாஸ்திகக்கொள்கையோ டொத்துளவென்றும், சில கொள்கைகளுக்கு மறுப்பு இன்னின்ன கட்டங்களிற் பார்த்தறிகவென்றும் விவகரித்திருக்கிற நியாயதிருஷ்டாந்த ஆதாரங்களினால் பரவாசுதேவன் கடவுளல்லரென்று இந்தப்பாகத்தை யேனோதானோவென்று ஒப்புக்கு வாசித்துப் பார்க்கிறவர்கள் முதலாய்க் கிராஹியஞ் செய்துகொள்வார்களென்பதற்குக் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. வைணவ சமயிகளில் அநேகம் பிரிவுகளுள்ளன, அந்தப் பிரிவின் கொள்கைகளைத் தனித்தனி விவகரிக்கப் புகில் மெத்த விரியுமாதலில் இம்மட்டோடே இத்தை முடித்து இனி பிரமாதியரைப்பற்றி விவகரிக்கத் தொடங்குவாம்.

பாஞ்சராத்திரக் கடவுள் முற்றிற்று.

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

13-ம் அத்தியாயம்.

பிரமனாதிய கடவுள்.

1. சைவசமயம் வைஷ்ணவசமய மென்றதுபோலப் பிரமசமய மென வொரு சமயமுமில்லை. சமயத்தவருமில்லர். கோவில்களும், விக்கிரகங்களும், பூஜை நைவேத்தியங்களும், விழாக்களும், ரதோற்சவங்களும், மற்ற எவ்வகையான ஆடம்பரங்களும் பிரமாவை யுத்தேசித்துச் செய்வா ரொருவருமில்லர். காரணம்போக்கிச் சொல்லுதும். இப்படியிருப்பினும் சைவரும் வைஷ்ணவரும் பிரமாவைத் திரிமூர்த்திகளி லொரு மூர்த்தியாகவும், தினேதினே சிருஷ்டித் தொழிலை நடத்திவருகிற சிருஷ்டி கர்த்தாவாகவு மொப்புக்கொண்டு வருகிறார்கள். இந்தப் பிரமாவுக்கென்றே பாத்ம புராணம் பிரம புராணம் என்கிற புராணங்க ளுண்டுபட்டிருக்கின்றனவன்றி, ஏனைய புராணங்களிலும் சில இடங்களிற் புகழ்ந்தும் சில இடங்களி லிகழ்ந்தும் இடைக்கிடை வெளிப்படுகின்றன. ஆகவே, இத்தகையராக இரு சமயத்தாரும் உண்டென்று சொல்லுகிற பிரமா தெய்வத்தன்மை யுடையவர்தானா, சிருஷ்டிகர்த்தாவெனில் வாஸ்தவமாகவே கருவியின்றி மானத சிருஷ்டி செய்யத் தகுந்தவரா வென்பதை ஆதார சகிதம் நிர்ணயப்படுத்துவாம்.

பிரமா தேய்வத்தன்மை யுடையவரல்ல ரேன்பது.

2. வேதப்பொருள் விளக்கம் 33-ம் பக்கம் யசுர் வேதத்தைச் சேர்ந்த ரிக்வேத வாக்கியம் "யாருக்குமுன் ஒன்றும் பிறக்கப்படவில்லையோ, யார் எல்லா வஸ்துக்களுமா யிருக்கிறாரோ அவரே பதினாறு அவயவங்களோடாகிய சரீரத்துடன் சிருஷ்டி கர்த்தாவாகிச் சிருஷ்டியில் ஆனந்தங்கொண்டார்" என்று சொல்லியிருக்கிறது. இதனால் பிரமாவானவர் எல்லாம் வல்லகடவு ளொருவரால் அவயவங்களோடு உலக ஆரம்பத்தில் மானிடவடிவமாகச் சிருஷ்டிக்கப்பட்ட மனுப்பிரதமனென்று தீர்க்கமாகிறது. மனிதனென்று கொண்டால் அவன் எல்லா வஸ்துக்களுமா யிருக்கிறவித மெப்படியெனில், ஆம் கடவுளுடைய பிரதம சங்கற்பத்தினால் உலகத்தில் விருத்தியாகப்போகிற சகல ஜன ஸமூகங்களும், அவர்களால் உண்டுபடப்போகிற ஸகலமான வஸ்துக்களும், அவர்களுக்காக உண்டுபடப்போகிற ஸகலமான சிருஷ்டிகளும், ஸகலமான கல்விகளும், ஸகலமான கைத்தொழிற் பிரவர்த்திகளும், அவர்களால் நடந்தேறப்போகிற ஸகலமான நன்மை தீமைகளும் பாவதோஷங்களுமெல்

லாம் ஆதியிலெங்கே யடங்கியிருந்தன? மநுப் பிரதமருடைய நாதேந் திரிய வித்தினன்ருே காந்திருந்தன. "வித்தில்லாத சம்பிர தாய மேலுமில்லை கீழுமில்லை" யென்பதை யறியீர்களா? பிரமா வின் முகம், புஜம், இடுப்பு, பாதம் என்ற ஸ்தானங்களில் சாதுர் வர் ணத்தாரும் உற்பத்தியானுர் என்று நீங்கள் கொண்ட கொள்கையின் கருத்துத்தானென்ன? சற்று யோசித்துப் பாருங்கள். நல்லது அஃ திருக்கட்டும். சிருஷ்டி கர்த்தாவென்று மனிதனைச் சொல்லலாமா வென்ருலோ அன்றுதொட்டு இன்றுவரையும் உலகாந்தமட்டும் தோன்றியழிந்தவும் தோன்றி யழியத்தக்கவுமான சமஸ்தமான மா னிட சிருஷ்டிகளுக்கெல்லாம் மூலபுருஷனுயிருந்த அவனைச் சிருஷ்டி கர்த்தாவென்று ஏன் சொல்லக்கூடாது? தர்மகர்த்தா, ஆதீனகர்த்தா, குடும்பகர்த்தா, கிரந்தகர்த்தா, புராணகர்த்தா, வியாக்யானகர்த்தா இவ்வகைபான அநேக கர்த்தாக்களு முளராகச்சே மநுப் பிரத மனைச் சிருஷ்டிகர்த்தா வென்பதில் யாது தோஷம்? நிர்த்தோஷ மென்றறிக. இந்துவேதத்தில் இந்த வாக்கிய முளதென்று கண்ட றிந்தும் பிரமாவை மானுஷ்ய சிருஷ்டியன்று, தேவசிருஷ்டி யென் றுங் கடவுளென்றுங் கொள்ளலாமா? அப்படிக்கொள்வது மதி மருட்சி யென்றும் வீண்பிடிவாதமென்றுந் தானே விவேகிகள் சொல் லத்தக்கது.

3. முந்திய பிரிவிற் சொன்ன கருத்துக்கிசைவாக யசுர்வேதத் தைச் சேர்ந்த ரிக்வேத வாக்கியம் 90-வது பிரிவில், "சரீரம் பிறப்ப தற்கு முன்னதாய் வேறுபாடுள்ள வடிவங்களாக விருந்தது. ஆத்துமா மாநுஷ்ய வடிவுகொண்டு உடனே தன்னைச் சுற்றிலும் பார்த்தான். அந்த ஆதிவஸ்து தன்னைத்தவிர மற்றொன்றுங் காணவில்லை." மேற் படி 92-வது பிரிவில் "அவன் பயமுற்ருன். அதனுல்தான் மனி தன் தனியாயிருக்கும்போது பயப்படுகிருன். ஆனுல் அவன் தன்னைவிட வேருென்று மில்லாததினுல் நான் பயப்படவேண்டிய தென்னவென்று ஆலோசித்தான். அவனுடைய பயம் அவனை விட்டுப் போய்விட்டது." மேற்படி 93-வது பிரிவில் "அவன் ஆனந் தப்படவில்லை. ஆகையால் மனுஷன் தனித்திருக்கும்போது ஆனந் தப்படுகிறதில்லை. மற்ருெருவ ரிருக்கவேண்டுமென்று அவன் கோரி னுன். உடனே அவன் ஒரு ஆண்பிள்ளையும் ஒரு பெண்பிள்ளை யுமாகி யொருவர்க்கொருவர் தழுவிக் கொண்டிருக்கும்படியான அவ் விதமாய்விட்டான். தன்னிலிருந்தேதானே இரண்டாகும்படி இதைச் செய்தான். இவ்விதமாக வொரு புருஷனும் ஒரு மனைவியுமானுன். அவன் அவளைச் சேர்ந்தான். அதனுல் மனுஷர் உற்பத்தியானுர்கள்" என்று வெகு தெளிவாய் வெளிப்படுகிறதே. இதனுலே வேதத்திற் சொல்லப்படுகிற பிரஜாபதியென்ருலும் பிரமாவென்ருலும் முதல் முதல் கடவுளால் உலகத்திற் சிருஷ்டிக்கப்பட்ட முதல மனுஷன் என்றே நிதர்சனமாகிறது. ஆதலிற் பிரமா கடவுளல்லர்.

4. இந்து வேதங்களில் சமஸ்தமும் பிர்ம்மத்தினிடத்திலிருந் துண்டாகின்றன, பிரமத்தினிடத்தில் லயமாகின்றன வென்றே யிட மிடந்தோறுங் கூறியிருக்கின்றது. பிரமம் பிரமனென்ற இரண்டு பெயரும் ஏகதேசம் ஒத்திருக்கின்றமையால் வேதத்திற் பிரதிபாதிக்கப் பட்ட அந்தப் பிரமமே யிந்தப் பிரமனென்று வைத்துக்கொண்டா லென்ன குறையென்று ஒரு கேள்வியுண்டாகலாம். பெயரும் எழுத்தும் ஒத்துப்போவதினால் அந்தப் பிரமமே யிந்தப் பிரமனென்று சாதிப்பது முழுத்தவறு. பெயரொத்திருத்தல்போலக் குணங்களுஞ் செய்கைகளும் யாதொரு விகற்பின்றி யொத்திருத்தல் வேண்டும். வேதத்திற் சொல்லுகிற பிரமத்துக்கும் தற்காலம்வரை சைவ வைஷ்ணவ மதஸ்தர் உண்டென்று கொண்டாடுகிற பிரமாவுக்கும் எத்தனையோ விகற்பங்களுள்ளன. அவைகளை யெல்லாம் தெரிவிப்பது கூடாத காரியம். ஆயினும் சிலவற்றை இதனடியில் தெரிக்குதும்:—

(1) பிரமத்தைப்போல அருவத்தன்மை பிரமாவுக்குண்டுமா? இல்லை. அல்லது பிரமாவைப்போல நாலுமுகம் பிரமத்துக்குண்டுமா? அதுவுமில்லை.

(2) பிரமத்தைப்போல அநாதிநித்திய ஸ்வயம்புத்துவம் பிரமாவுக்குண்டுமா? இல்லை. அல்லது பிரமாவைப்போல ஜெனனமரணம் பிரமத்துக் குண்டுமா? அதுவுமில்லை.

(3) பிரமத்தைப்போலத் தெய்வீகம் பிரமாவுக்குண்டுமா? இல்லை. அல்லது பிரமாவைப்போல மனுஷீகம் பிரமத்துக்குண்டுமா? அதுவு மில்லை.

(4) பிரமத்தைப்போல சர்வக்ஞானம், சர்வவல்லமை பிரமாவுக் குண்டுமா? இல்லை. அல்லது பிரமாவைப்போல அறியாமை பலவீனம் பிரமத்துக்குண்டுமா? அதுவுமில்லை.

(5) பிரமத்தைப்போல அதிபாரிசுத்தம் பிரமாவுக்குண்டுமா? இல்லை. அல்லது பிரமாவைப்போலக் காமாக்கினி பிரமத்தைத் தகித்ததா? அதுவுமில்லை.

நல்லது பிரமத்துக்குரிய எந்த லக்ஷணமாவது பிரமாவுக்குப் பொருந்துமா? பொருந்தா. அல்லது பிரமாவுக்குரிய எந்தக்குறைவு மீனதையுமுள்ள லக்ஷணமாவது பிரமத்துக்குப் பொருந்துமா? அதுவும் பொருந்தாது. இப்படியிருக்கப் பிரமந்தான் பிரமாவென்று சொல்லலாமா? சொன்னாலுந் தகுமா? சொல்லவுங் கூடாது. சொன்னாலுந் தகாது.

5. பிரமா ஜெனன மரணத்துக் குட்பட்டவராதலில் அவர் கடவுளாகார். எப்படியெனில், விஷ்ணுவின் உந்தியந்தாமரையில் வெகுகாலம் புருஷ கர்ப்பமாயிருந்து பின்பு வெளிப்பட்டாரென்றும், விஷ்ணு அவரைச் சந்தித்துச் சிருஷ்டி கர்த்தாவாக ஏற்படுத்தி வைத்தாரென்றும், "எண்ணுஞ் சதுர்யுக மீராயிரங் கழியில் நண்ணும் பிரமனுக்கு நாளொன்று" இந்தக்கால அளவின்படி நூறு

வருஷக் காலம் பிரமனுயுளென்றும், அந்த ஆயுள் முடியும்போது பிரமா மாண்டு முன்போல விஷ்ணுவின் உந்தியந்தாமரையிற் கற்பமாயிருந்து மறுபடி பிறந்து சிருஷ்டித்தொழில் செய்வாரென்றும், விஷ்ணு புராணம் 3-ம் அத்தியாயத்திலும் இன்னும் அந்தப் புராணத்தின் பல விடங்களிலும் கூறியிருக்கின்றது. அல்லாமல்—

"நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனுந்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்—யான்முகமாய்
அந்தாதி மேலிட் டறிவித்தேன் ஆழ்பொருளைச்
சிந்தாமற் கேண்மினீர் தேர்ந்து"

என்று திருமழிசை யாழ்வார் திரு அந்தாதியினும் கூறியிருக்கிறது. இவ்வாறு பன்முறை பிறந்தும் இறந்தும் காலசக்கரத்தில் ஜெனன வட்டத் துட்பட்டுச் சுழன்று தடுமாறித் திரியும் இந்தப் பெரிய மனிதனைக் கடவுட்டன்மை யுடையரெனக்கொள்வதுதேவதூஷணம். தெய்வத்தன்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவென்பது வீண்புகழ்ச்சி யென்றறிக.

6. பிரமனைக் கடவுளென்று கூறுகிற புராணங்களே அவனை யிழிவுபடுத்தி அசத்தர், கர்வி, பொய்யனென்று பறையறைகின்றது. விஷ்ணுவும் பிரமாவுந் தகப்பனும் பிள்ளையுமென்பது சைவர் வைஷ்ணவர் யாவரும் ஒத்துக்கொள்ளும் விஷயம். இவ்விருவருக்குள்ளுந் தான்தான் பெரியவனென்கிற கர்வமாகிய கெடுபுத்தி யொருகாற் றோன்றினதாம்.

"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து."

"பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்"

என்று சொன்ன பிள்ளைஞானமுதலாய்ப் பிரமாவுக்கில்லாமற் போயிற்று; போகட்டும். பிள்ளைக்குத் தானில்லை, பிதாவுக்காயினும் பிருக்கலாகாதா? அவரும் அகங்காரத்துக் கிடங்கொடுத்து இருவருக்குள்ளும் பகைமூண்டு ஒருவரோடொருவர் நெடுநாளா யுத்தஞ் செய்யவும் அதனால் உலக காரியம் பார்ப்பாரின்றிப் பாழ்படவும் நேர்ந்த சம்பவங்களையும் அனர்த்தங்களையும் கண்டு சிவன் இருவருக்கும் ஊடே அக்கினிப் பிழம்பாக அடியுமுடியு மறிதற்கரிதாய் ஜோதிப்படிவமெடுத்தருளி, "வீண்வாதம் வேண்டாம், இந்த அக்கினிப் பிழம்பின் அடிமுடியைக் கண்டு முந்தி வருகிறவனே பெரியவன்" என்று நடுப்புகன்றார். இருவருஞ் சம்மதித்து விஷ்ணுவானவர் பன்றிரூபமெடுத்துப் பூமியைக் கிண்டிக்கிளறி அடியைத் தேடிப்போனார். பிரமாவோ அடியைத் தேடப்போகிறதே அவமானமென வொல்கித் தான் முடிதேடி வருவதாகச் சம்மதித்து அம்ஸப்பக்ஷி வடிவமாய் உயரப் பறந்து தீவிரமாய்ப் போனார். "உயரப் பறந்தாலு மூர்க்குருவி பருந்தாமா?" ஆகாது. அவ்வாறே அனேக வருஷகாலந் தேடிப்

போய் முடியைக் காணக்கூடாமல் அக்கினிரூபமாய் நிற்கிற சிவனுடைய சிரசிலிருந்து தவறி அதோமுகமாய் விழுகிற தாழம்பூவைப் பிடித்து இணக்கப்படுத்தித் தனக்காகப் பொய்ச்சான்றுரைக்கச் சம்மதப்படுத்திக்கொண்டு சிவ சந்நிதியில் வந்து நான் முடியைப் பார்த்து வந்தேனென்று பிரமக்கடவுள் பொய்சொல்லத், தாழம்பூவும் ஆமென்று கள்ளச்சாக்ஷி பகர்ந்தது. விஷ்ணு திரும்பி வந்து நான் வெகு காலமாய்த் தேடிப்போனேன், அடியைக் காணவில்லை, வந்துவிட்டேனென்று உண்மை சொற்றனர். மார்க்கண்டனுக்குச் சாகாவரங் கொடுத்த சிவனுக்குக் கோபமூண்டு பிரமாவுக்கு உலகத்திலெங்கும் பூசையுங் கோவிலும் போகவென்று சாபமிட்டுத் தாழம்பூவை நாம் உன்னை யினித் தரிக்கோமென வரைந்துவிட்டு விஷ்ணுவைச் சன்மானித்தாரென்பது புராணகதை. "மெலியவர் பாலதேயோ வொழுக்கமும் விழுப்பந்தானும்—வலியவர் பிழையே செய்தாற் புகழன்றி வசையுண்டாமோ" உண்டாகாது என்பது இராமாயணம். இந்தக் கதை மெய்யென்றால் பிரமா பொய்யனென்றும் பிறரையுங் கள்ளச் சாக்ஷிக்குப் பயிற்றினாரென்றுந்தானே யேற்படுகிறது. "கடவுள் பொய்சொல்ல மனிதனல்ல." இது மெய்ச்சுருதி. பொய்பேசுகிற யாவரும் யாவராயிருப்பினும் மனிதரே. பிரமாவுஞ் சிவனும் பொய்பேசினார்கள். ஆகவே யிருவரு மனிதரேயன்றிக் கடவுளுமல்லர் தேவரு மல்லரென்றுதான் சாத்தியப்படுகிறது.

மேலே உதாகரித்துக்காட்டியிருக்கிற ரிக்வேத யசுர்வேத வாக்கியங்களாலும், மற்றைய நியாயங்களாலும் சைவரும் வைஷ்ணவருமுண்டென்று கொண்டாடுகிற பிரமா கடவுளுமல்லர் தேவனுமல்லர். உலகத்தின் ஆரம்பத்தில் முதற்பிறந்த சாக்ஷாத் மநுப்பிரதமனே யென்று மெய்ப்படுத்தப்பட்டது. இனி யேனைய மதக் கடவுண் மறுப்புத் தொடங்குமுன் சைவ வைஷ்ணவ சமயத்தாருக்குப் பொதுவில் உரிமைப்பட்டிருக்கிற மும்மூர்த்திகளின் பூர்வோத்தர விர்த்தாந்தங்களைப் பற்றிச் சிலவற்றை மீண்டு சர்ச்சிப்பாம். எப்படியெனில்:

7. இருக்குவேதம் 4-வது பிரிவில் ரிக்வேத நிகண்டு தேவதைகளின் பெயரைக்குறித்து மூன்று அட்டவணைகளோடு முடிந்திருக்கிறது. முதலாவது அட்டவணையில் அக்கினிக்கு ஏகார்த்தமுள்ள பல பெயர்களாயிருப்பவை யடங்கியிருக்கின்றன. இரண்டாவது அட்டவணையில் வாயுவுக்கு ஒரு பொருள் குறித்த பல பெயர்களாயிருப்பவை யடங்கியிருக்கின்றன. மூன்றாவது அட்டவணையில் சூரியனுக்கு ஒரு பொருள் குறித்த பல பெயர்களா யிருப்பவை யடங்கியிருக்கின்றன. நிருக்தத்தின் கடைசிப்பாக முழுவதும் தேவதைகளையே குறித்துச் சொல்லுவதாயிருக்கின்றது. அதில் மூன்று கடவுள்மாத்திர மிருப்பதாக இரண்டிடத்தி லுறுதியாகச் சொல்லியிருக்கிறது. அதாவது; திசர ஏவ தேவதா என்பது. இதில் ஒரே

கடவுளென்று குறித்துக் காட்டுவதற்கேயென்று கொள்ளும் விசேஷ யூகிப்பு வேதத்தின் அநேக வாக்கியங்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதுமல்லாமல், நிருக்தம், வேதம் இவைகளின் அதிகாரத்தைக் கொண்டு ரிக்வேதத்தின் ஆரம்பத்தில் மிகவுந் தெளிவாகவுஞ் சுருக்கமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்படி 13–வது பிரிவில் "கடவுளர் மூவராகமாத்திர மிருக்கிறார்கள். அவர்கள் அக்கினி, வாயு, சூரியன் என்பவர்கள். சிருஷ்டிகர்த்தாவாகிய பிரஜாபதி படைப்புக்குடன்பட்டவைகளுக்குக் கடவுளாயிருக்கிறார். 'ஹோம்' என்கிற அசை யந்தந்தக் கடவுளைக் கருதுகின்றது." எனினும் "அது அகண்டரூபியா யிராநின்ற பிரமத்திற்கு, தேவனுக்கு அத்தியாத்மாவுக்கு உரித்தாகின்றது" என்று தெளிவாய் விவரிக்கப்பட்ட இந்த வாசகத்தை வாசிக்கிற விவேகிகள் ரிக்வேத முன்பேபடுங்காலத் துளராயிருந்த ரிஷீஸ்வரரோ முநீஸ்வரரோ சாதாரண பிரஜைகளோ. சூரியன், அக்கினி, வாயு, இந்திரன், வருணன், மித்திரன், வசுக்கள், அசுவினிகள் முதலாகிய இவர்களையே தெய்வங்களென்று நம்பி வழிபட்டு வந்தார்களென்றும்,—பின்பு காலாந்தரத்தில் தோன்றிய ரிஷிகள் முதலானோர் இந்தத் தேவர்களெல்லாம் ஒருகாலத்து நசிக்கத்தக்கவர்கள்; பூதங்களொன்றில் ஒன்று அடங்கத்தக்கது; உலகமொருகாலத்தில் நசிக்கத்தக்கது; ஆதலின் யாண்டும் நசியாதிருக்கத்தக்க வஸ்து பிரமமொன்றே; அதுவே தெய்வம்; அதுவே சமஸ்தத்துக்கும் மூலகாரணப்பொருள்; அதுவே இஷ்டசித்தியருளத்தக்கதென்று வரவரத் தேறித் தெளிந்து வணக்கமுறையை அவரவருக்குத் தோன்றினபிரகாரம் ஸ்தாபித்தார்களென்றும்,—இந்தக்காலமும் போய்ப் பின்னுள மத்தியகாலத்தில் தோன்றிய வித்வான்கள் துறவிகளானவர்கள் யுக்தி பூர்வகமாக உபநிஷத்துக்களையுண்டுபடுத்தி வேதங்களின் கடைசிப் பாகங்களிற் சேர்த்தார்களென்றும்,—அதற்கும் பின்னுள்ளகாலத்தில் ஒரே கடவுளுளரென்று ரிக்வேதத்தில் பின்பு சேர்த்துள்ள வாக்கியங்களா லேற்பட்டிருந்தபோதிலும் அதை யுபேக்ஷித்துக் கடவுளுக்கு இரண்டாவது ஸ்தானத்தில் புராண கிரந்தகர்த்தாக்களில் நின்றும் உற்பத்தியான பிரமா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகளைப் பிரதானப்படுத்தி, 3–வது ஸ்தானத்தில் சூரியன் முதலியோரைச் சில்லறைத் தேவர்களாக ஏற்படுத்திப் பாகுபாடு செய்து, விநோதம் விநோதமான கதைகளையும் பொறுக்கிச் சேர்த்துப் புராண இதிகாச முதலிய பாடல்களைக் கற்பனாலங்காரங்களோடு ஏழை ஜனங்கள் மருளத்தக்கதாகப் புனைந்து வித்வான்கள் தங்களுக்குந் தங்கள் சந்ததிக்கும் தங்கள் சுஜாதிக்கும் உதர ஜீவனோபாயந் தேடி வெகுசாய்ப் பலப்படுத்தி வைத்திருக்கிறார்களென்றும்,—வேதங்களை யிதர ஜாதியார் பார்க்கக்கூடாது, கேட்கக்கூடாது; அவைகள் கர்ண பரம்பரையாய் ஓதியுணர்ந்து அத்தியயனஞ் செய்துவருகிற பிராமணருக்கே சொந்தம்; அதையறிந்த

பிராமணர்களே, பிராமணரல்லாத இதர ஜாதிகளுக்குத் தெய்வம்; ஆதலா லவர்களுக்குப் பூசுரர் வையகதேவர் எனப் பெயர் தரித்து அமரங்களையும், நிகண்டுகளையும் ஏற்படுத்தினார்களென்றும்,—

"கரிய மாலினுங் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோ ரைந்தினும் மெய்யினும்
பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால்" என்றும்,

"தெய்வா தீனம் ஜெகத் ஸர்வம்
மந்திரா தீனம் ததை வசா
தன் மந்திரம் பிராமணா தீனம்
பிராமணோ மம தேவதா" என்றும்,

சனப்பன் வீட்டுக் கோழி தானே விலங்கு மாட்டிக்கொள்வது போல அதிதாந்திரிகமான கட்டுப்பாட்டில் ஏழை யிந்துக்கள் அகப்பட்டுச் சுழலுகிறார்களென்றும்,—ஊத்தை திரண்டுக்குழுக்காணியாயிற் றென்ற பிரகாரம் மெய்க்கடவுளின்றி திருவுளத்துக்கேற்காத எல்லா விபரீதக் கொள்கைகளும் இந்துதேசத்தில் தடிப்புக்கொண்டதென்றும் கிராஹியஞ்செய்துகொள்ளக் கூடும்.

8. இந்துக்களான சைவ வைஷ்ணவரென்ற இரு சமயத்தவரும் தம்மில் அநேக விகற்பமான கொள்கையுடையரா யிருந்தபோதைக்கும், பிரமா, விஷ்ணு, ருத்திரனென்ற மும்மூர்த்திகளையும் இரண்டு பக்ஷத்தாருங் கடவுளர்தாம் என்று ஒப்புகொண்டு சில விஷயங்களி லொற்றுமைப்பட் டிருப்பதுபோலவே, சூரியன், அக்கினி, வாயு, இந்திரன், வருணன் முதலிய கடவுளு முளரென்ற கொள்கையை வகித்து வழிபட்டு அந்தந்தத் தேவர்களாலும் தங்களுக்குப் பலாபலங்கள் பிராப்தியாகின்றனவென்று நம்பி உபாசிக்கிறார்கள். அந்தக் கொள்கையுந் தவறென்று காட்டு நிமித்தமாய் அவைகள் கடவுட்டன்மை யுடையனவல்ல வென்பதும், மேற்காட்டிய வஸ்துக்கள் தேவர்களானவித மிப்படியென்பதும், இதனடியில் விவரிக்கப் படுகின்றன.

சூரியன் முதலிய மூன்று வஸ்துக்களைப்பற்றி.

9. வேதப்பொருள் விளக்கம், ரிக்வேதம், 13-வது பிரிவில் "கடவுள் மூவராகமாத்திர மிருக்கிறார்கள். அவருடைய இடங்கள் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகமாக விருக்கின்றன. அவர்கள் அக்கினி, வாயு, சூரியன் என்பவர்கள். இக்கடவுளர் பலவாகவு மறைவாகவு மிராநின்ற பேர்களையுடையவர்களா யுச்சரிக்கப்படுகிறார்கள். பல திக்குகளுக்குரியவர்களாயிருக்கிற மற்றத் தேவதைகள் மூன்று கடவுளருடைய அம்ஸமாக விருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுடைய பல கிர்த்தியங்களைப் பற்றிப் பலவாய நாம மிடப்பட்டும், குறிக்கப்பட்டு மிருக்கிறபடியினாலேதான். ஆனால்

வாஸ்தவமாய் ஒரே தெய்வ மிருக்கிறது. அதாவது மகாத்மா. அத்தெய்வஞ் சூரியன் என்று சொல்லுகிறது. ஏனென்றால் அச்சூரி யன் எல்லாப் பொருள்கட்கும் ஆத்மாவாக விருக்கிறரென்பதால். இது மகாத்மாக்களாற் கூறப்பட்டிருக்கிறது. மற்றத் தேவதைகள் அவருடைய கூறுகவிருக்கின்றூர்கள். இப்படி யறிஞரால் வெளிப் படையாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஞானிகள் அக்கினி, இந்திரன், மித்திரன், வருணன் முதலாகிய பேர்களை ஸ்தோத்திரிக்கிறூர்கள்."

இந்த வாக்கியங்கள்தாம் பூர்வீக (ரிக்வேதகால) த்துள்ள இந்துக் கள் நினைத்து வணங்கி வழிபடுதற்கு மூலமாயுள்ளது.

10. இற்றைக்கு மூவாயிரம் வருஷத்துக்குமுன் தொடங்கி யுள்ள வசிஷ்டர், விஸ்வாமித்திரர், பரத்துவாசர் முதலிய சில மகா ரிஷிகளால் வசனரூபமாகக் கர்ண பரம்பரையாய் இந்துக்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட வேதம் மேற்காட்டிய வாக்கியங்களடங்கியவை. இதற்குத்தான் ரிக்வேதமென்று பெயர். இதுவொன்றே பூர்வீக வேதம். அதுவும் ஒருவராலல்ல, பலராலானது. மேலும் ஒருகாலத் திலல்ல. பின்பின்னுகக் காலாந்தரத்தில் உண்டுபட்டது. ஆதலால் ரிக்வேத முதற்பாகத்தைக் கற்பித்த ரிஷிகள் ஜீவனற்ற சூரியன், அக்கினி, வாயுவென்ற சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் அதிசயிக் கத்தக்க விதமாய்த் தோன்றி மறைவதையும், உலகத்துக்கு அவை கள் பிரயோஜனப்படும் விதத்தையும், அவைகளின்றெனில் உல கத்துக் குண்டாகத்தக்க நஷ்டம் கெடுதி முதலியவைகளையும் தம் மில் ஊகித்து, இவைகளே உலகத்துக்கு ஆதாரம், இவைகளின் றெனில் உலகம் நாசமாம், இவைக ளின்றியமையாப் பொருளாத வில் இந்த மூவரே கடவுள், மூன்றிலுஞ் சூரியனே பிரதான கட வுள், ஏனெனில் அக்கினியுங் காற்றுஞ் சூரியனி லடங்கியதுதா னென்று தங்கள் மனவிற் றோன்றிய அபிப்பிராயத்தை யாதொரு வஞ்சனையின்றி இந்தியாவுக் கொப்புவித்தார்கள். உலக ஆரம்பந் தொட்டுண்டான அதிபூர்வீக சத்தியம் ரிக்வேத நிருமாணிகரான ரிஷிகளுக்கு வந்தெட்டியிருக்குமென்றால், இவ்வாறு உத்தேசப் பிர மாணமான தங்கள் கருத்தை ஸ்தாபிக்க முயன்றிருக்கமாட்டார் கள். இவ்வாறு சூரியன், அக்கினி, வாயுவென்ற இவற்றைக் கடவு ளென்று ஸ்தாபித்தது மாத்திரமல்ல; அக்கடவுளளா வழிபடுதற்கு ரிய உபாசனை முறைகள் இன்ன இன்னவென்று ரிக்வேதத்திலே யே கற்பித்தும்விட்டார்கள்.

அக்கினிஸ்துதி.

ரிக்வேதம், 1-ம் மண்டலம், 58-ம் சூக்தம். (பாட்டு.)

(1) பலத்தினு லுற்பத்தியாகித் தேவர்களை யழைக்கிறவனும் ஆரா தனை செய்கிறவர்களின் தூதனுமாகிய சாகாத அக்கினியானவன் தீவிரமாய்ப் புறப்படுகிறுன். அவன் ஏற்றவழிகளாய்ச் சென்று

ஆகாரத்தைத் தோன்றப்பண்ணி யாகத்திலுள்ள பலிகளினுலே தேவர்களைப் பூஜிக்கிறுன்.

(2) குன்றுத அக்கினியானவன் தன் ஆகாரத்தைத் தீனியி னுலே பதப்படுத்தி அதைச் சீக்கிரமாய்ப் புசித்து விறகுகளின் மேல் ஏறுகிறுன். பக்ஷிக்கிற சுவாலையானவன் வேகமான குதிரை போல ஓடி உயர்ந்த வானத்தில் முழங்குகிற மேகம்போல முழங்கு கிறுன்.

(3) பலிகளை வாங்குகிறவனும், ருத்திராாலும் வசுக்களாலும் வணங்கப்பட்டவனும், தேவர்களை யழைக்கிறவனும், யாகம் நடப் பித்து ஐஸ்வரியத்தைக் கொடுக்கிறவனும், தொண்டர்களாற் புகழப் பட்டவனும், மனிதர்களுக்குத் தேர்போல விளங்கியவனும் ஆகிய சாவாமையும் பிரகாசமுமுள்ள அக்கினியானவன் முறையாய்ச்செலுத் தப்படும் பலிகளை அங்கிகரிக்கிறுன்.

(4) அக்கினியானவன் காற்றினுலெழுப்பப்பட்டு வலுவாய் முழ ங்குகிறுன். தன் சுவாலைகளாலும் உக்கிரத்தினுலும் மரங்களுக்குள் எளிதாய்ச் செல்லுகிறுன். குன்றுமல் உக்கிரமாய்ப் பற்றியெரிகிற அக்கினியே! காட்டு மரங்களுக்குள் நீ எருதுபோலப் பாயும்பொழுது உன்னுடைய பாதை கறுத்துப்போகிறது.

(5) சுவாலை ஆயுதமுள்ளவனும் காற்றினு லெழுப்பப்பட்டவனும் ஆகிய அக்கினியானவன் தன் முழுப்பலத்தோடே மரங்களின் ஈரத் தைத் தீயினுலே தாக்கிக் காட்டிலுள்ள சகலமானவைகளின்மேலும் எருதுபோல வீரியமாய்ப் பாய்கிறுன். அவன் விரைந்தோடும் போது சராசரங்களெல்லாம் அவனுக்குப் பயப்படுகிறது.

(6) ஒளிவிடுகிற அக்கினியே! உன்னைத்துதிக்கிறவனுக்கு அடைக் கலமாயிரு. செல்வமுடையவனே! பலிகளைச் செலுத்துகிற பாக் கியவான்களுக்குச் செல்வந்தா. அக்கினியே! உன்னை யாராதிக்கிற வனைப் பாவத்திற்கு விலக்கிக் காத்துக்கொள். நீதியான கிரியை களில் செல்வமுடையவனுகிய அக்கினியானவன் காலையில் தீவிர மா யெங்களிடத்தில் வரக்கடவன்.

(7) அக்கினிதேவனே நமது பகைஞரைப் பக்ஷிப்பான். சூ. 12. நம்மை நிந்திப்போர் யாவரையுந் தகனித்து நமக்குக் கேடுசெய்வோர் யாவரையுஞ் சங்காரஞ் செய்வான். சூ. 29.

உதயத்தைத் துதிக்கும் பாட்டு.

1-ம் மண்டலம், 123-ம் சூக்தம்.

(1) யுக்தியுள்ள உதயமானவனுடைய விலாசமான ரதம் பூட் டியிருக்கிறது. சாகாத தேவர்கள் அதிலேறியிருக்கிறுர்கள். எங் கும் வியாபிக்கிற மேன்மையுள்ள உதயமானவன் இருட்டினின் றெழுந்து மனிதருடைய குடியிருப்புகளுக்கு ஆரோக்கியத்தைக் கொண்டுவந்து கொடுக்கிறுன்.

(2) உலகத்திலிருக்கிறவர்களில் அவனே முதலாவது விழித்தெழுந்திருக்கிறவன். இருட்டின்மேலே ஜெயங்கொள்ளுகிறான். மகத்துவமுடையவனும் உயரத்தினின்று வெளிச்சங்கொடுக்கிறவனுமாகிய அவன் எல்லாவற்றையும் பார்க்கிறான்.

(7) இரண்டு பங்காகிய நாளானது பிரிக்கப்படாமல் நடந்தேறி வருகிறது. ஒரு பங்கு பின்னுக்கு வாங்குகிறது. ஒரு பங்கு முன்னுக்கு ஏறுகிறது. மாறிமாறிவருகிற அந்தக் காலங்களில் ஒன்று சகலத்தையு மறைக்கிறது. உதயமோ தன் மினுக்கான ரதத்தினாலே சகலத்தையும் பிரகாசிப்பிக்கிறான்.

(12) குதிரைகளை யுடையவர்களாய் பசுக்களை யுடையவர்களாய் சதாகாலமு மிருக்கிறவர்களாய் சூரியனுடைய கதிர்களுக்கொப்பாக இருட்டை அகற்றுகிறவர்களாய் தயாளமான உதயமானவர்களே! மனிதருக்கு நன்மைகளைப் பொழிந்துவிட்டுக் கடந்துபோய்த் திரும்பவும் வாருங்கள்.

(13) சத்திய சூரியனின் கதிர்களுக்கு உடன்கிரியை செய்கிறவளாகிய உதயமே! எந்த நற்செய்கைகளையும் உறுதிப்படுத்து. எங்களால் வாஞ்சையாய் அழைக்கப்பட்ட உஷஸானவளே யாக ஐஸ்வரியமடைந்த எங்களுக்கு மற்ற ஐஸ்வரியமுங் கிடைக்கும்படி நீ வந்து இருட்டை நீக்குவாயாக.

அக்கினிக்கும் சந்திரனுக்கும் பொதுவான ஸ்தோத்திரப் பாட்டு.

1-ம் மண்டலம், 93-ம் சூக்த முழுவதும்.

(1) அவாவை வருஷிக்கும் அக்கினிதேவனே! சோமனே! தயவுவைத்து என் வேண்டுதலைக் கேளுங்கள். நான் செலுத்துந் துதிகளையேற்றுக்கொண்டு இதனை நிவேதிக்கும் எனக்கு நல்வாக்கை யீந்தருள்வீராக.

(2) அக்கினிபகவானே! சோமனே! இக்கோரிக்கையை உங்களிருவரிடத்திலுங் கேட்கிறவனுக்கு மிகு பலனுள்ள திரளான ஆடுகளையும் குதிரைகளையும் அருள்வீர்களாக.

(3) அக்கினிபகவானே! சோமனே! உங்களிருவருக்கும் நைவேத்தியஞ் செலுத்துகின்றவன் ஆயுள்பரியந்தம் மிகு பலனையுஞ் செளந்தரியத்தையும் அனுபவிப்பானாக.

(4) அக்கினிபகவானே! சோமனே! பாணியின் போஜனமான பசுக்களைக் கவர்ந்துபோன உங்கள் வல்லமை நமக்குத் தெரியும். பிரிசாசயன் குலத்தைச் சங்கரித்தீர்கள். வெகுஜனப் பிரயோஜனத்திற்காக ஒரு ஜோதியாகிய சூரியனை யடைந்தீர்கள்.

(5) அக்கினிதேவனே! சோமனே! நீங்களிருவரு முயன்று ஆகாயத்திலுள்ள தாரகாகணங்களை யாதரித்தீர்கள். பிரபலதோஷத்தினால் அசுசிப்பட்ட நதிகளை விடுவித்தீர்கள்.

(6) அக்கினிதேவனே! சோமனே! உங்களிலொருவனை வாயுபக வான் வானத்திலிருந்து கொண்டுவந்தான். மற்றவனைப் பருந்து மலைமுடியிலிருந்து வலிமையாற் கொண்டுபோயிற்று. துதிகளால் விருத்திபெற்று யாகத்துக்காக உலகத்தை விரிவாக்கினீர்கள்.

(7) அக்கினிதேவனே! சோமனே! உங்களுக்கு நிவேதிக்கப்பட் டவைகளை யுண்ணுங்கள். நமக்கு அருள்புரிவீர்களாக. நாம் அபே க்ஷிப்பவைகளை நமக்குப் பொழிகின்றவர்களே நமக்கு அருள் செய் வீர்களாக. அனுகூலமு முருக்கமுமுள்ள காவலரே! மங்கலக் காட் சியுடையராய் இந்நைவேத்தியத்தைச் செலுத்துபவனுக்குச் சுகத்தைக் கொடுத்துத் தீமையை விலக்கியருள்வீர்களாக.

(8) அக்கினிதேவனே! சோமனே! தேவர்கள்மேற் பத்தியுடைய னுப் நெய்யையும் நைவேத்தியங்களையும் கொண்டு உங்களை வணங் கும் இவனைத் தீமையினின்று விலக்கி அவன் பலியைக் காப்பாற்றிக் கொள்வீர்களாக. ஆராதனை செய்யு மவனுக்குப் பேரின்பத்தையும் ஈந்தருள்வீர்களாக.

(9) சமவணக்கத்தையும் ஏக சாதாரண ஜெபத்தையும் பெற்றவர் களாகிய அக்கினிதேவனே! சோமனே! நமது துதிகளைப் பங்கிட்டுக் கொள்ளுங்கள். ஏனெனில், நீங்களே தேவர்களுக்குள் எப்போதுந் தலைமை பெற்றிருந்தவர்கள்.

(10) அக்கினிதேவனே! சோமனே! உங்களிருவருக்கும் இந்த நெய்யை நிவேதிக்கின்ற இவனுக்கு நல்ல பிரதிபலனை யருளுங் கள்.

(11) அக்கினிதேவனே! சோமனே! நாம் செலுத்தும் நைவேத் தியங்களை யுவந்து நம்முடனேகூட வாருங்கள்.

(12) அக்கினிதேவனே! சோமனே! நமது துரகங்களைப்போஷிப் பியுங்கள். நாம் உங்களுக்கு நைவேத்தியமாகச் செலுத்தும்படி நமக்கு வெண்ணெய் கிடைக்கும்படியாகப் பாலைத் தருகின்ற பசுக்க ளும் நன்றாய்ப் போஷிக்கப்படுவனவாக. வைதீகச் சடங்குகளைச் செலுத்துதற்குப் பாக்கியம்பெற்ற நமக்குப் பெலனைத் தந்து நாமிடும் பலி, செல்வ விர்த்தியைத் தரப்பண்ணுங்கள்.

ஈண்டு விதந்துகாட்டிய ரிக்வேத வாக்கியங்கள், பாட்டுகளினு லெல்லாம் அக்காலத்துள்ள இந்துக்களின் தெய்வ வழிபாடுக ளுங் கொள்கைகளுஞ் சடங்காசாரங்களும் இத்தன்மையனவென்று வாசிக்கிற அனைவருந் தெளிவா யறிந்துகொள்ளலாம். ஆனால் காலஞ் செல்லச்செல்ல அக்கினி, வாயு, சூரியனென்ற இந்த மூன்று கடவு ளருக்குமுரிய வழிபாடுகள் தாத்கால பரியந்தம் சைவ வைஷ் ணவ சமயத்தவரால் அநுஷ்டிக்கப்பட்டே வருகின்றன வெனினும், இந்த மூன்று கடவுளுக்கும் பதிலாகப் பிரமா, விஷ்ணு, ருத்திர னென்ற திரிமூர்த்திகள் கடவுட்பட்டம் பெற்று உத்தியோகத்தில்

நியமிக்கப்பட்டபின் முன்னிருந்த மூவருக்கும் பிரதானிக்க மாத்திர நீங்கிவிட்டது.

11. சூரியன், அக்கினி, வாயுவென்ற மூன்றும் அசரப்பொருளே யன்றிச் சரப்பொருளல்ல வென்னு முண்மை தாத்காலத்திற் சொல்லிக்காட்ட அவசரமில்லை. பிற்காலத்திலுண்டுபட்ட இந்துசமய நூல்களே அசரப் பொருள்களென்று காட்டுகின்றன. சிவஞான சித்தியாரில் இவைகளை யசரப் பொருள்களென்றும், அறிவில்லாதவைகளென்றுங், கொண்டு விவகரித்திருக்கிறது. லிங்க புராணத்திலும் பூர்வத்திற் பிரமாவானவர் நித்திரைசெய்து விழித்தெழுந்து பிரபோதமடைந்து எங்கும் அந்தகாரம் வியாபித்திருப்பதைப் பார்த்துச் சற்றுத் திகைப்புற்றிருந்தாரென்றும், மகார்ணவமாயிருந்த ஜலத்தினின்று அக்கினிஜோதி வெளிப்படும்படி திருவுள்ளமானு ரென்றும், அப்படியேஉண்டாயிற்றென்றும், அதை—திவ்வியாக்கினி, ஜடராக்கினி, பாத்திவாக்கினி யென—மூன்று பாகப்படுத்தித் திவ்வியாக்கினித்திரளே சூரியனாக வுதித்தொடுங்கி யுலகத்துக்கு வெளிச்சங் கொடுக்கவும், ஜடராக்கினி உயிர்கள்தோறும் உதரத்தினின்று ஆகாராதிகளை ஜீரணிப்பிக்கவும், பாத்திபாக்கினி மனைகடோறுமிருந்து உண்டிவர்க்கங்களைப் பக்குவப்படுத்தவும் ஆக நிருமித்தாரென்றும் கூறியிருக்கிறது. ஆகவே அக்கினி, அக்கினியின் ஓர் கூறுகிய சூரியன், வாயு, ஜலம், மிர்த்திகை இவைகள் சாதுர்ப்பூதங்கள். பூதங்கள் யாவும் ஜடப்பொருள்கள். ஆதலிற் பிராணனற்றவைகள். மேலுஞ் சிருஷ்டிக்கப்பட்டவைகள். இவைகள் கடவுளராவதெப்படி? ஆஞரென்று சொல்வார் சொன்ஞலும் ரிக்வேத காலத்துள்ளவர்களாய்க் கேட்டோருக்கு மதியெங்கே போயிற்று? இந்துக்கள் சூரியன் முதலிய மூன்று பொருளுக்கும் தொன்றுதொட்டுத் தெய்வ வணக்கஞ் செலுத்திவந்த போதைக்கும், இந்துநூல்களே அவைகள் அசரப் பொருளென்று ஒப்புக்கொள்வதினுல் அதற்குமேல் வேறு நியாயஞ் சொல்ல அவசரமில்லையென்று விடுகிறோம்.

இந்திரன், மித்திரன், வருணன் என்பவரைப்பற்றி.

12. இந்த அத்தியாயம்5—வது பிரிவில் உதாஹரித்திருக்கிற ரிக்வேதம் 13—வது பிரிவின் கடைசியில், "ஞானிகள் அக்கினி, இந்திரன், மித்திரன், வருணன் முதலாகிய பேர்களை ஸ்தோத்திரிக்கிறுர்கள்" என்று ஒரு வாக்கியம் வருகிறது. இது பிந்தியகாலத்துச் சேர்க்கப்பட்டுள்ளதென்று சில பெரியோர் நினைக்கிறுர்கள். இதில் அக்கினியைப்பற்றி முந்திய பிரிவில் விவரமாய்ச் சொல்லியாயிற்று. இந்திரன் முதலான ஏனைய தேவரைப்பற்றி ரிக்வேதத்தில் ஸ்தோத்திரப் பாட்டுகளு முள்ளன. அவற்றுள் சிலவற்றை யிவ்விடத்து உதாகரிப்பாம்.

வேதம், 1-ம் மண்டலம், 32-ம் சூக்தம்.

(1) இந்திரன் செய்த வீரியமான கிரியைகளை இடிமுழக்கங்கள் அடைந்த ஜெயங்களைக் கூறுகிறேன். அவன் மேகத்தைப் பிளந்தான். தண்ணீர்களைப் பூமியில் விழத்தள்ளினான். மலையாறுகள் ஓடுகிறதற்கு வழியைத் திறந்தான்.

(2) மலையில் அடைக்கலந் தேடின மேகத்தை யிரண்டாக வெட்டினான். வெகுதூரஞ் சுழற்றி யெறியத்தக்க அவனுடைய இடியைத் துவஷ்டன் (கருமான்) தீட்டிக் கொடுத்தான். அப்போது தண்ணீரூற்றுகள் பாய்ந்து பசுக்கள் தங்கள் கன்றுகளுக்கு இரங்கி ஓடினாற்போலச் சமுத்திரத்திற்குத் தீவிரமாய் ஓடிற்று.

(4) இந்திரனே! நீ மேகங்களின் தலையீற்றை யிரண்டாக வெட்டினதினாலே மோசக்காரரின் வஞ்சனைகளை யழித்தாய். அப்பொழுது நீ சூரியனையும், உதயத்தையும், ஆகாசத்தையும்ஜெனிப்பித்து (தோன்றப்பண்ணி) உன்னை யெதிர்க்கத்தக்க சத்துரு ஒருவனாயினும் மீதியாயிராதபடி செய்தாய்.

(5) சங்காரஞ்செய்கிற தன் பெரிய இடியைக்கொண்டு இந்திரன் இருளுள்ள விருத்திரனை அடித்தான். மரங்கள் கோடரியினாலே வெட்டப்பட்டுச் சாயுமாப்போல அகியன் தரையிலே விழுந்து கிடந்தான்.

(9) விருத்திரனுடைய தாய் தன் மகன்மேல் குனிந்து நின்றாள். அப்பொழுது இந்திரன் தன் இடியினாலே அவளையு மடித்தான். மகன் கீழாகவுந் தாய் மேலாகவும் விழுந்தார்கள். பசு தன் கன்றுக்குட்டியோடே படுக்குமாப்போலத் தனுவென்கிறவள் மகனோடே நித்திரையடைந்தாள்.

(15) இடியை ஆயுதமாகக் கொண்டிருக்கிற இந்திரன் அப்பொழுது சராசரங்கள் அனைத்திற்கும் கொம்புள்ள ஜீவன்களுக்கும் கொம்பில்லா ஜீவன்களுக்கும் இராஜாவானான். அவன் சதாகாலமாய் மனிதருக்கு ராஜாவா யிருப்பதினாலே, வண்டிவுருளையின் சுற்றளவில் ஆரைக்கால் அடங்கியிருக்கிறது போலச் சமஸ்தமும் அவனுக்குள்ளே யடக்கம்.

இந்தப் பிரிவில் மேலே காட்டிய ரிக்வேத வாக்கியத்தையும், ரிக்வேத ஸ்தோத்திர கவிகளையும் அக்காலத்துள்ள ரிஷிகள் ரிக்வேதத்தோடே சேர்த்து வைத்தார்க ளென்பதுமாத்திரமல்ல; அப்படிச் சேர்ப்பதற்குரிய முகாந்தரமும் அந்தக் கவிகளாலேயே விளங்குகிறது. எப்படியெனில், 'பூமி உஷ்ணத்தினாலே வறண்டுபோயிருக்குங்காலத்தில், கார்மேகங்கள் எழும்பியும் மழை பெய்யாமல் அந்த மேகங்கள் கடந்துபோகிறதை ஜனங்கள் கண்டு துக்கித்திருப்பதையும், பின்பு ஜடுதியாய் மின்னல் தோன்றி மேகத்துக்கு மேகம் பளிச்சென்று பாய்ந்து இடிமுழக்கமுண்டாகிப் பெருமழை வருஷிப்ப

தையும் அக்காலத்து ரிஷிகள் கண்டு சிந்தித்து, வானமே மழை பெய்யப் பண்ணினதென்று ஊகித்து, அந்த வானத்தையே தெய்வமாகக்கொண்டு, இந்திரனென்று பெயரிட்டு (இந்திரம்=நீலவர்ணம்), மழை பெய்யவொட்டாத மேக அசுரனை இந்திரன் இடியினாலே கொன்றானென்று அவனைப் பெரிய தேவனாக மெச்சி வணங்குகிறார்கள்,—" என்று கீர்த்திபெற்ற இங்கிலீஷ் சாஸ்திரியாரொருவர் எழுதியிருக்கிறார். அவர் கருத்துக்கொள்ளுகிறபடியும் ஒருவேளை யிருக்கலாம். ஆனால் கவிகளை வியந்துகொள்ளத்தக்க பிரகாரம் புனைவதற்கென்று ஏற்பட்ட அநேக அலங்காரப் பிரமாணங்களுள்ளன. அவைகளிலொன்று ரூபகாலங்காரம். அந்த அலங்காரத்தைத் தழுவி நீலவர்ணமான வானத்தை இந்திரனென்றும், கருமேக சாலத்தை விருத்திராசுரன் என்றும், இடி மின்னல்களை இந்திரனுடைய ஆயுதமென்றும், உருவகப்படுத்தி, அவர் புனைந்துவைத்த கவிகளைப் பிற்காலத்துள்ள வித்துவான்களோ பிரஜைகளோ தப்பாய்க் கருதி, மெய்ப்பொருளாக அல்லது பூதார்த்தமாகப் பொருள்செய்து, இந்திரனைத் தேவனாகக் கொண்டாடினார்களென்று ஊகிக்கவுமிடமிருக்கிறது. இவ்வளவேயன்றி இந்திரன் என்றொரு தேவனுமில்லை. அவனைச்சேர்ந்த மித்திரன் முதலியோர் தெய்வமுமல்லர். இவ்வெல்லாம் வீண் மனோராஜ்யம்.

13. கடைசியாய், முன்னே சொல்லியபடி, இருக்குவேத கவிகளுண்டான காலத்தில் இந்துக்களெல்லாரும் வணங்கிவந்த தேவர்கள் இந்திரன், அக்கினி, சூரியன், காற்று முதலிய பஞ்சபூத தேவர்களே. இப்பொழுதிருக்கிற இந்துக்கள் வணங்குகிற திரிமூர்த்திகள் அக்காலத்திலில்லை. அந்தத் திரிமூர்த்திகள் செய்யுஞ் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரமாகிய முத்தொழிலும், அவர்கள் மூவரையும் குறிக்கும் ஓங்கார மந்திரமும் அப்பொழுது தெரியாது. இருக்குவேதத்திலுள்ள ஆயிரத்திருபத்தெட்டுப் பாட்டுகளிலும் சிவனென்கிற பெயர் இல்லை. பார்வதி, உமையவள், துர்க்கை, காளி என்ற பேர்களையுடையவளும் அப்போதில்லை. அப்பொழுது பிள்ளையாரும், சுப்பிரமணியனுமில்லை. வீரபத்திரனும், வயிரவனும், ஐயனாரும் அப்பொழுது இல்லை. அக்காலத்திலே லிங்கமுந் தெரியாது. விபூதி ருத்திராக்ஷமுந் தெரியாது. அப்படிப்போலவே, இருக்குவேத காலத்தில் இராமனுங் கிருஷ்ணனுமில்லை, லக்ஷ்மியுமில்லை, ஹநுமானுமில்லை. விஷ்ணுவின் பத்து அவதாரங்களும் அப்பொழுது தெரியாது. நாமமுந் துளசியும் அப்பொழுது தெரியாது. கைலாசமும் வைகுண்டமும் அப்போதில்லை. இக்காலத்திலுள்ள சிவபக்தரும் விஷ்ணுபக்தரும் விசேஷமா யெண்ணுகிறவைகளி லொன்றாவது இருக்குவேதகாலத்தில் வழங்கவில்லை. வேதபாட்டுகள் உண்டான காலத்தில் சிவனையாவது கிருஷ்ணனையாவது ஒரு ரிஷியும் வணங்கவில்லை.

இருக்குவேதகாலத்திற் பிராமணரென்கிற பேர் ஒரு ஜாதிக்கு ரிய பெயராயிராமல், ஒரு தொழில் செய்கிறவர்களுக்குரிய பெய ராயிருந்தது. யாதொரு ஜனங்களைத் தொடுகிறது தீண்டல் என் றும் அவர்களோடு சாப்பிடுகிறது தீட்டு என்றும், அக்காலத்துள்ள வர்கள் எண்ணினதில்லை.

பசுமாடுகளை அக்காலத்து ரிஷிகள் முதலாய்ப் பலியிட்டும் புசித்தும் வந்தார்கள். திருஷ்டாந்தமாக:—

"அக்கினியே! மலட்டுப் பசுக்களைக்கொண்டும் கன்றுள்ள பசுக்க ளைக்கொண்டும் உனக்கு யாகஞ்செய்திருக்கும்போது, நீ முற்றிலும் எங்கள் பக்ஷத்திற் சேருகிறாய்" என்று இருக்குவேதத்திலுள்ள இரண்டாம் மண்டலம் 7—ம் சூக்தத்திலும்,—

"விசேஷித்த திவ்ய போஜனம் பசுக்களே" என்று ஆறும் மண்ட லம் 39—ம் சூக்தத்திலும்,—

"ஒரு பசுவை ஜனங்கள் சந்து சந்தாக அறுக்கிறதுபோல, இந்தி ரனே! விருத்திரனைத் துண்டு துண்டாக வெட்டிப்போடு" என்று முத லாம் மண்டலம் 61—ம் சூக்தத்திலும் சொல்லியிருக்கிறது.

14. இவ்வாறாக சைவ வைஷ்ணவ சமய சம்பந்தமாயுள்ள கட வுளராகிய திரிமூர்த்திகளாகட்டும், அதிபூர்வீகமான ரிக்வேத சாகை களிற் பிரதிபாதிக்கப்பட்ட சூரியன், இந்திரன், அக்கினி, வாயு முதலிய தேவர்களாகட்டும், மற்றும் அனந்தமான குட்டித்தேவர்களா கட்டும், மெய்க்கடவுளுக்குரிய திவ்ய லக்ஷணங்களிற் சிலவேனும் பொருந்தாத கல்பிதமான பொய்த்தேவர்களென்று இந்தப் புஸ்தகம் 8—ம் அத்தியாயம் தொடங்கி இம்மட்டாகத் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டினும். நிஷ்பக்ஷபாதமாய்ச் சத்தியத்தைக் கிரகிக்க விரும்புகிற யதார்த்தவாதிகளெவரும் நிராக்ஷேபனையாக வொப்புக்கொள்வா ரென்பதற்குக் கிஞ்சித்துஞ் சந்தேகமில்லை. ஆதலின் இனி இதே மதஸ்தரின் கொள்கையைச் சார்ந்துள்ள அநேகேச்சுரவாதி மதம் எத்தகையவென்று ஆராய்ச்சி செய்வாம்.

பிரமணுதிய கடவுள் முற்றிற்று.

பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

14—ம் அத்தியாயம்.

அநேகேச்சுர வாதம்.

கோள்கை விபரம்.

1. சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார திரோபவ அநுக்கிரகமாகிய பஞ்ச கிருத்தியங்கள் ஒரு ஈஸ்வரனு லாகத்தக்கதா? கேவல மாடமாளிகை, கூடகோபுரம், தேர் முதலியவைகளையுங்கூட ஒருவன் செய்து

முடிக்க இயலாதே. இவைகளைச் செய்வதற்கு எத்தனைபேர் எவ்வ ளவுகாலம் வேலைசெய்யவேண்டும்! வேலைசெய்கிறவர்கள் மாத்திர மிருந்தாற் போதுமா? அவற்றிற்கு வேண்டிய உபாதான ஹேதுக்க ளிருந்தாலல்லது முடியுமா? முடியாது. அப்படியானால், இந்த விஸ் தாரமான பூமண்டலத்தையும், இதில் நிறைந்த சகலவிதமான சிருஷ் டிப் பொருள்களையும், வானஜோதிகளையும், இன்னும் மற்ற உலகங்க ளையு முண்டாக்கவும், காப்பாற்றவும், அழிக்கவும், சக்தியில் மறைத்து வைக்கவும், கடைசியில் அநுக்கிரகிக்கவும், ஒரே கர்த்தா போதுமா? ஆகவே, அநேக கர்த்தாக்களும் அனந்தகோடி யுபகரணங்களும் வேண்டவேவேண்டும் என்று சாதிப்பார்கள். அந்த ஈஸ்வரர்கள் யாரெனில், சிற்பரம், பரம், சிவம், பரை, குடிலை நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மாயன், பிரமன், வேதம், ஆகாசமுதலிய பூதங்கள். இவைகள் முறையே ஒன்றிலிருந்து ஒன்று உற்பத்தியாகின்றது. இவர்களே பிரதான தேவர்கள். இனி உபாதான தேவர்கள் யாரெனில், பிள்ளையார், ஷண்முகர், வீரபத் திரர், லக்ஷவீரர், வீரவாகு, கிருஷ்ணன், அநுருத்தன், மகரத்து வஜன், ரௌக்கிணேயன், காளிமுதலிய பெண் தெய்வங்கள், சுட லைமாடன் முதலிய ஸ்மசான தேவர்கள், அய்யனார் முதலிய மலைத் தெய்வங்கள், சிவனணைந்த பெருமாள் முதலிய பரிவாரத் தெய்வங் கள், மதுரைவீரன் முதலிய வெட்டுண்ட தெய்வங்கள், இவைகளல் லாமல், இந்திராதிதிக்குபாலகர், அஷ்டவசுக்கள், சப்தமருத்துக்கள், ஏகாதசருத்திரர், துவாதசாதித்தர், நவகோடி நாராயணர், முப்பத்து மூன்று கோடியான பதினொருவகைத் தேவர்கள், இன்னும் அளவிறந்த கோடி தேவர்களும் ஈஸ்வரர்களு மிருந்துதான் பஞ்சகிர்த்தியங்களை நடத்துகிறார்களென்றும்,—இந்தத் தேவக்கூட்டங்களெல்லாம் பசுமா ட்டின்வால், கால், மேல், தோல், தலை, முகம், கொம்பு, செவி, குளம்பு முதலிய மேனியெங்கும் மயிர்க்கால் ஒவ்வொன்றிலும் வாசமாயிருக் கிறார்களென்றும்,—இந்தத்தேவர்களில்யாரைவழிபட்டாலும் இஷ்ட காமிய சித்திபெற்று மறுமையில் மோக்ஷஞ் சேரலாமென்றும்,—பசு மாட்டைப் பூஜிதைசெய்தாலும் மோக்ஷங் கிடைக்குமென்றும்,—நம் பித் தாத்கால பரியந்தம் அநுஷ்டித்தும் வருகிறார்கள். இந்துக்கள் பெரும்பாலார்கொண்ட கொள்கையிதுதான். சைவரானாலும் வைஷ் ணவரானாலும் மற்ற இந்து சமயத்தா ரெவரென்றாலும் ஏகேஸ்வர வாதிகளல்லர். அநேக ஈஸ்வரவாதிகளே. பேச்சுக்காலில் நாங்கள் ஏகேஸ்வரவாதிகளென்பார்கள். மகம்மது மார்க்கப் பள்ளிவாசலி லும் போய் நோன்பு பிடிப்பார்கள். இந்தக் கொள்கை தவறென்ப தற்கு மேலே நியாயங்காட்டுதும்.

2. கிஞ்சிக்ஞத்துவமுள்ள மனிதன் மாடமாளிகை முதலிய தொ ழில்களைச் செய்துமுடிக்க யத்தனித்தால், மெய்தான் அநேகர் தன் னோடிருந்து வேலைசெய்யவேண்டும். அல்லது தான் செய்விக்க

வேண்டும். அநேக வகையான உபகரணங்களும் வேண்டும். இவ்வெல்லாமிருப்பினும் காலதேச வர்த்தமானங்கள் ஒத்திருக்கவேண்டும். இடம். பொருள், ஏவல் கிடைத்திருக்கவேண்டும். இவ்வளவு ஹேதுக்களும் வாய்க்காவிடில், தன்னுடைய உத்தேஸிய நிறைவேறத் தக்கதன்றாம். ஆனால், நினைத்ததை நினைத்தவுடன் முடிக்கத்தக்க எல்லாம் வல்லவரும், பூரண ஞானமுள்ளவரும், எங்குமிருப்பவருமாகிய உன்னதமான மெய்க்கடவுளுக்கு உதவியும் வேண்டா. உபகரணங்களும் வேண்டா. இந்த வுலகம்போல இன்னும் அனந்தமான வுலகங்களை யமைக்க அவருக்குத் திருவுளமுண்டென்றால், அதே நிமிஷத்தில் ஆக்கவும் வல்லவர், காக்கவும் வல்லவர், அழிக்கவும் வல்லவர், சர்வோத்கிருஷ்டரான கடவுளென்றறிக.

அசக்தரான மனிதர் சர்வசக்தரான கடவுளின் உன்னதத்தையும் ஞானத்தையுஞ் சீர்தூக்கிப் பார்க்க முயல்வது அறிவின் சிறுமை.

3. அநேக தேவர்களோ ஈஸ்வரர்களோவிருந்து இந்த உலகிற் சிருஷ்டியாதி தொழில் செய்யப்பட்டுள்ளதென்றால், உலகமிப்பொழுதுள்ள ரீதிப்படிக்கும் ஒழுங்கின்படிக்கும் நடைபெறாது. ஏனெனில், உபாதான தேவர்களாகிய குட்டித் தேவர்களெல்லாரும் அறிவிலும் யுக்தியிலும் ஞானத்திலும் சக்தியிலும் ஒருப்போலுள்ளவரல்லர். ஒவ்வொருவருக்கும் வைஷம்மிய முதலிய துர்க்குணமுண்டு. ஒருவரி லொருவர் சிறியவர், ஒருவரிலொருவர் பெரியவரென்கிற அகங்காரம் மேட்டிமை, குரோதாதிகளுள்ளவரென்று புராணங்கள் பகிரங்கமாய் வெளியிடுகிறது. இந்த லக்ஷணமுள்ள இவர்கள் சிருஷ்டியாதி தொழில்களைச்செய்திருப்பாரென்றால், சர்வமும் விகாரப்பட்டுச் சகலமுங் குழம்பித் தாறுமாறாய் உலகந் தலை தடுமாறிப் போயிருக்குமென்பதிற் சந்தேகமென்ன? பிரமன் சிறைப்பட்டபோது, இடையிற் கொஞ்சக்காலங் கௌமார சிருஷ்டி நடந்ததாக ஏற்பட்டிருக்கிறதே. அதன் விபவங்களை யறியீர்களா? சில தேவர்கள் வயிற்றிலே வாயையும், விலாவிலே மூக்கையும், முதுகிலே கண்ணையும், உச்சியிலே செவியையும், சிலர் ஏகபாதரிஷி வியாக்கிரபாதம், பதஞ்சலிபோல் வாலையும், சிலர் குளிர்ந்த சூரியனையும், சூடான சந்திரனையும், சிருஷ்டிப்பார்கள். சிலர் ஒரு வாரத்துக்கு இரவும் ஒரு வாரத்துக்கு பகலுமாயிருக்கச் செய்வார்கள். சிலர் சூரியன் தெற்கு வடக்காயுதித் தொடுங்கச் செய்வார்கள். இவ்வாறு அனந்தபேதமான தேவர்கள் அனந்த பேதமாகச் சிருஷ்டித்துக்கொண்டிருந்தால், இந்த உலகமெப்படி யிருக்குமென்பதைச் சற்றே ஊன்றிக் கவனியுங்கள். அநேக ஈஸ்வரர்களிருந்தால் தங்களுக்குள் கலகம்பண்ணி உலகத்தை நாசஞ் செய்திருப்பார்கள். அப்படிக்கில்லாமல், உலக நடந்தேறிவருவதே கடவுள் ஒருவரே யுளர், அவருடைய ஆக்ஞையே எக்காலத்தும் எவ்விடத்தும் நடந்தேறிவருகிறதென்பதற்குப் போதுமான சான்றாயிருக்

கிறது. மெய்க்கடவுள் ஒருவர் நீங்கலாக மற்ற இந்துமதத்துள்ள கோடானகோடி ஈஸ்வரர்களும் பூர்வத்திலுள்ள இந்து வித்துவான்களாற் சிருஷ்டிக்கப்பட்ட மானத சிருஷ்டிகளென்பதே, தீர்க்க ஞானிகளுடைய துணிபென்றறிக.

4. "அப்படியன்று; சிவனாகிய கடவுள்தான் காரியங்களினிமித்தம் பல தேவர்களாக ரூபிகரித்திருக்கிறார். அதினால் பல தேவர்களென்றுவ தெப்படி?" யெனில், அச்சிவனே வெண்ணெய் திருடி உரலிலே கட்டுண்டு தன் தலையைத் தானே வெட்டிக் குட்டுண்டு சிறையிருந்தும், இன்னும் அநேககோடி தேவர்களும் அவரவரே யனுபவித்த சங்கடங்கள், நிந்தைகள், அபஜெயங்கள் முதலிய எல்லாவற்றையும் சிவன்தானே யனுபவித்தாரென்று ஒப்புக்கொள்ளவும் வேண்டும். ஆதலால் ஒருவர்தான் பலரென்ற போக்கு மொழி உரையேறாது. இதைப்பற்றிச் சிவன் கடவுளல்லரென்ற பாகத்தில் தெளிவாய் விவரித்திருக்கிறது.

ஜெனன மரண முள்ளவர்கள் தேவர்களாகாரெனல்.

5. மேலே விதந்து காட்டியிருக்கிற அநேகரான இந்து தேவர்களின் நிலைமையைப் பார்த்தால், "அவர்கள் பிறந்தவர்களென்றபோதே இறந்துபோவார்களென்றும் இந்துமதக் கொள்கையின்படி சொல்லவேண்டியதுதானே. அல்லாமல், அந்தந்த தேவர்கள் பிறந்த விதங்களையும், நோக்கங்களையும், பிறந்து அவர்கள் செய்த செய்கைகளையும், அவர்கள் குணகுணங்களையும், பார்க்கும்பொழுது, அவர்கள் தேவர்களாயிருக்கத் தகுதியற்றவர்களென்றே தெளிவாய்த் தெரிகிறது."

அசுத்தமான செய்கையுடையார் தேவராகாரெனல்.

6. விசேஷமான தேவர்களென்று கொண்டாடுகிற பிரமா, விஷ்ணு, ருத்திரனென்னு மும்மூர்த்திகளும் அலங்கோலமானவர்களாய் மனிதரிலுங் கேடான ஸ்திதியினையுடையரா யிருந்தனரென்று முன்னமே திருஷ்டாந்தப்படுத்தியாயிற்று. முக்கிய தேவர்களி னிலைமை யிப்படி யிருக்கிறதென்றால் அவர்களுக்குக் கீழ்ப்பட்ட கணபதி, சுப்பிரமணியன், வைரவன், வீரபத்திரன் என்பவர்களும், இந்திரன் முதலிய மற்றத் தேவர்களும், அவர்களைப்பார்க்கிலும் தீழ்ப்பான நிலை பரத்தினரென்று பேசவேண்டிய தென்னவிருக்கிறது. "தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சீலை" யென்று தானே யாகும்.

புராணங்கள் பிரமாணமாகாதெனல்.

7. ஜெகத் காரணராக அநேக ஈஸ்வரருளரென்பதற்கு இந்து வேத ஆதாரமில்லை. இந்தக் கொள்கைக்குப் புராணாதிகளே ஆதாரம். அவைகள் சிலவிடங்களில் அந்தந்த ஈஸ்வரரை விசேஷமாய்ப்

புகழ்ந்தும், பரிசுத்தம், அன்பு, நீதி முதலிய திவ்விய லக்ஷணங்களுள்ளவர்போலச் சிலாகித்தும் மகிமைப்படுத்திப் பேசி, இன்னுஞ் சில இடங்களில் முன் சொன்னதற்கு முற்றும் விரோதமாய் அசுத்தம், அநீதி, குரோதம் முதலிய துர்க்குணங்களும், துன்மார்க்கங்களும் நிறைந்தவர்களென்று பெரும்பாலுங் கூறியிருக்கின்றது. இவ்வாறு பரஸ்பர விரோதங் கூறும் புராணங்களைப் பிரமாண நூல்களாக யார்தான் அங்கீகாரஞ் செய்வார்கள்? பெருந் திருட்டுத்தொழில் செய்கிறவனென்று பேர்பெற்ற வொருவனைச் சுத்த நடையுள்ளவனென்று சொன்னால் ஒப்புக்கொள்ளலாமா? அவர்கள் துராசாரமுந் துர்ச்செய்கையு முடையரென்பது அவர்கள் கிரியைகளினாலே பிரத்தியக்ஷமாயிருக்க, வாய்ப்பேச்சினால் யோக்கியரென்று சொல்லிக் கொண்டால் யோக்கியராய் விடுவார்களா? இல்லையே. இவ்வாறே உத்தேச இலக்கணப் பரீக்ஷைகளால் அளவிட்டுப் பார்க்குமிடத்து, அநேகேஸ்வரரென்று சொல்லத்தக்கவர்களி லொருவரேனும் மெய்க் கடவுளென் றழைக்கப்படத் தகுதியுடையவர்க ளல்லரென்று பூரணமாய்த் திருஷ்டாந்தமாயிற்று.

மேற்கூறப்பட்டவர்கள் தேவர்களல்லரென்பதற்கு சான்று.

8. மேலே விதந்து காட்டிய தேவர்கள் தேவர்களல்லவென்று இந்துக்களாகிய பல ஞானிகளுஞ் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கிற பாடல்களை இதன் அனுபந்தத்திற் காண்க.

அநேகேச்சுரவாதம் முற்றிற்று.

பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று.

15–ம் அத்தியாயம்.

விக்கிரக தேவ வணக்கம்.

உத்பத்திக்கிரமம்.

1. விக்கிரகத் தொழும்பு உலகத்தில் இப்படி யுத்பத்தியாயிருக்கலாமென்று சில பல ஹேதுக்களைக்கொண்டு உலக சரித்திர நூல்களை நன்குணர்ந்த பெரியோர் அநுமானித்து எழுதியிருக்கிறார்கள். அதன் தாத்பரியத்தை இவ்விடத்துக் காட்டுவாம், ஜலப் பிரளயத்துக்குப் பின்னானகாலத்தில், பல விடங்களிலுஞ் சிதறிக் குடியேறின பூர்வீக பிரஜைகளுக்குள் சில வகுப்பில் தங்கள் குடும்பத்தில் நீடித்த ஆயுள் பெற்றிருந்து, நாடிநா முதிர்ந்த வயோதிகராய்ப் பலக்ஷயப்பட்டு, இருக்க எழுந்திருக்க நடக்கத் தனுக்குறைந்து,

காலஞ் சென்றுபோன கிழங்களைச், சேமியாமல் அப்படியே மருந்திட்டுப், பதனிட்டுத், துர்க்கந்தத்தைப் போக்கிச், சுகந்த மூட்டி, உருக்குலையாமற் சரக்காக்கிப், பெட்டகத்துக்குள் அடக்கிவைத்திருந்து, வேளாவேளையில் விசேஷங் கொண்டாடப்பட்ட சமயங்களில், அந்த முதிய கிழத்தையும் அழைத்துவைத்துத் தக்கமரியாதை செலுத்தித், தங்கள் கொண்டாட்ட முடிந்தபின், திரும்ப அதன் ஸ்தானத்துக்கு அனுப்பிப், பாதுகாத்துவைக்கிற வழக்க மிருந்திருக்கிறது. சில வகுப்பில் மேற்சொன்னவாறு இறந்துபோனபின் அதைச் சமாதி செய்துவிட்டுப், பின்பு அவர்களை நினைப்பூட்டும் அறிகுறியாக எதிலும் உருச்செய்து, சந்ததி பரம்பரையாய்க் காத்துவைத்திருந்ததாகவும் வெளியாகிறது. இந்த வழக்கமே ஜனங்களுக்குள் உண்டுபட்டிருக்கிற விக்கிரகாராதனைக்குப் பூர்வ உற்பாதம். அதுநிற்க,— இந்தியாவின் பூர்வ குடிகளுக்குள்ளும் கொலைபாதக முதலிய குற்றங்களினால் கொலையுண்டவர்கள், அகஸ்மாத்தாய் வெட்டுண்டவர்கள், ரணரங்கத்திற் சூரராய் யுத்தஞ்செய்து மடிந்தவர்கள், பலவித வன்கொலையாகச் செத்தவர்கள், அவமிருத்துவாகப் பிராணனை விட்டவர்கள், கணவனோடு உடன்கட்டை யேறின பெண்கள், இப்படிப்பட்டவர்களுடைய உடல்கள், அக்கினிசமாதி, ஜலசமாதி, வனசமாதி, பூசமாதி செய்யப்பட்டுச் சாம்பலாய், ஜலசரம், பறவைகள், நாய், நரி முதலிய மிருகங்களுக்கு ஆகாரமாய், மண்ணோடு மண்ணாக உருக்குலைந்து, அணு அணுவாய்ப் பிரிந்துபோனபோதைக்கும், அவரவர்கள் ஆவிமாத்திரம் அந்தந்தக் குடும்பத்தை அந்தந்த வூரை அந்தந்த நாட்டைவிட்டுப் பிரிந்துபோகாது நின்று, உயிரோடிருக்கிற மற்றவர்களைக் கெடுக்கவும் வாழ்விக்கவும் வல்ல தெய்வங்களாய் எங்குஞ் சஞ்சரிக்கின்றன வென்கிற ஐதீகம், தாத்காலம் வரை சாமான்யரான பிரஜைகளுக்குண்டு. இந்த முகாந்தரத்தினால் மேற்கூறிய ரீதியாய் மாண்டுபோனவர்களுக்கு அவரவர்கள் பேரால் கல்லாலும், மரத்தாலும், மண்ணாலும் உருக்கள் செய்து சிறு சிறு கோவில்களையுங் கட்டி அந்த விக்கிரகங்களை வைத்துப் பொங்கிப் பொரித்துப் பலியிட்டுத் தீபதூபங் காட்டி வணங்கிவருகிறார்கள். இந்த வகை விக்கிரகங்களுக்குத் துஷ்டதேவதைகளென்று பெயரேற்பட்டிருக்கிறது.

2. காலாந்தரத்தில் ஆரியாவர்த்த மலைப்பிரதேச வாசிகளாயிருந்த ஆரியர், ஏகதேசம் இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்போல வலசைவாங்கி யிந்தியாவில் வந்து குடியேறினபின்பும், அருகசமயத்தினின்று சைவ வைஷ்ணவமென்ற நவீனக் கொள்கைகள் பிரிந்தபின்பும், அதிலும் பல குடும்பத்தார் கூடி விருக்ஷத்தடியில் ஹோமஞ் செய்து அந்தக் குண்டத்து வெள்ளை மண்ணைத் தங்கள் நெற்றியில் ஊர்த்த கோபியாய்த் தரித்துக்கொள்ளுகிற வழக்கம் ஏற்பட்டு ஸ்திரப்பட்டபின்பும், விஷ்ணு முதலிய சாது தேவதைகளுக்காகவும்

பூதஜனங்களின் தேவாலயத்தையொப்ப அந்தப் பிரமாணங்களைத் தழுவி மூலஸ்தானம் அல்லது கர்ப்பகிரகம், விமானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், மணிமண்டபம், த்வஜஸ்தம்பம், பிராகாரங்கள், திருமதில்கள் கோபுரங்களென்ற வகுப்புகளைச் சமைத்து, ஆலயங்களை அமைத்து, விக்கிரகங்களைப்பிரதிஷ்டித்து, அந்தத் தேவர்களை அந்தந்த விக்கிரகங்களில் ஆவாகனம்பண்ணிப், பாமரஜனங்களுக்கு ஜென்மசாபல்யங் கிடைத்தற்பொருட்டு என்று ஒரு வீண்முகாந்தரத்தைக் கல்பித்துக்கொண்டு, சுஜன ஜீவனோபாயமாக இந்த முறையை ஸ்தாபித்தார்கள். இங்கிலீஷார் துரைத்தனத்தில் பல பக்கங்களிலும் சாஸ்திராப்பியாசங்களால் துரபிமான நீங்கிக்கொண்டுவரும் இக்காலத்திலே 1850-ம் வருஷத்தில் மயிலாப்பூரில் பிச்சையெடுத்துக்கொண்டிருந்த அப்பரென்னும் ஒரு பரதேசிக்கும், 1852-ம் வருஷத்தில் உஸ்ஸூரில் தாசில்தாராயிருந்த நரசிம்மாசாரிய ரென்பவருக்கும், விக்கிரகங்கள் வார்ப்பித்துக் கோவில்களுங் கட்டப்பட்டு பிரம்மோத்சவாதிகள் நடந்துவருகின்றனவெனில், சில காலத்துக்கு முன் சற்று எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் விக்கிரகம் ஏற்படுவது ஆச்சரியமல்லவே. இந்த ஆசாரத்தால் இத்தேசத்தில் தெய்வத்துக்குக் குறிப்பாகவென்று எத்தனை பொம்மைகளேற்பட்டிருக்கின்றனவோ அத்தனை பக்த விக்கிரகங்களும் உண்டாயின. இவற்றினிடத்தில் அனைவருக்கும் பக்தியுண்டாகும்பொருட்டு பரமபதத்திலிருந்து ஒடிந்து விழுந்த உத்தரணியின் துண்டு ஒரு பக்தராகவும், விளக்கின் கரி மற்றொரு பக்தராகவும், விஷ்ணுவின் கூத்திமார் கொண்டை புஷ்பம் இன்னொரு பக்தராகவும், இன்னும் இவ்வாறே அவ்விடத்திலுள்ள ஒவ்வொரு சாமானும் ஒவ்வொரு பக்தராகவும் அவதரித்து இவ்வுலகத்தைப் பரிசுத்தமாக்க வந்ததாய்ப் புராணங்களெழுதிவைப்பது புதுமையான ஆதாரமல்ல. ஆகையால் அதைக்குறித்து விசேஷமாய்ப் பிரஸ்தாபிக்கவேண்டியதில்லையென்று நினைக்கிறோம். இவ்வாறு ஆரியராலே யிந்தியாவில் விக்கிரகாராதனை தடிப்புக்கொண்டது மாத்திரமல்ல, இந்துக்களுக்குள் சாதுர் வர்ண பேதங்களும் பஞ்சமருக்குள் தொண்ணூற்றாறுஜாதி விகற்பங்களும் உற்பத்தியாயின. இத்தியாதி பேதங்களுக்குக் காரண பூதராயிருந்த ஆரியராகிய பிராமணரே தாங்கள் பிரமகுலத்தாரென்று தங்களை முதல்ஜாதியாக்கித், தங்கள் சுஜாதிக்கு நன்மையும் பிரயோஜனகாரமுமாயுள்ள அநேக நூதன ஏற்பாடுகளையும் ஜாதிஜாதியாகக் கைக்கொள்ளவேண்டிய விவித சடங்காசாரங்களையும், தர்மாதர்மங்களையும், ஏற்படுத்திப் பிரஜைகளுக்குப் போதித்துப் பயிற்சிபண்ணுவித்துத் தாங்கள் உத்கிருஷ்ட ஜாதியார், தேவாராதனை செய்யப் பாத்திரமானவர்கள், வேதந் தங்கள் ஆதீனத்திலேயே யிருக்கவேண்டியது, மற்றப்படிப் பிழைபாடுடையதாகும், ஏனையர் வேதத்தைத் தீண்டவுங்கூடாது, அந்த ஸ்வரத்தைக் காதாரக் கேட்டாலும் மகா

தோஷம் லபிக்கும் என்றும், தாங்களே உலகத்தில் நடமாடித் திரிகிற வையகதேவர், தங்களேயே எல்லாரும் வந்திக்கவேண்டும், சகல விதமான தானங்களை யேற்றுக்கொள்ளவும் ஜனங்களை ஆசீர்வதிக்கவும் தங்களுக்கே ஸ்வாதந்திரியமுண்டென்றும் மருட்டி, எல்லாக் கட்டுப்பாடுகளையும் அநுஷ்டானத்தில் நிலேப்படுத்தியும் வைத்தார்கள். அதுவே தாத்கால பரியந்தம் இந்தியாவைத் தொழும்புபடுத்தி இந்துதேசத்து வைதீக ஆளுகையை யதேச்சையாய் நடத்தியும் வருகிறது. இந்த ஆளுகைக்கு சமஸ்கிருத பாஷையிலுள்ள நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், பதினெட்டு ஸ்மிருதிகள், முப்பத்திரண்டு உபநிஷத்துக்கள், பதினெண் புராணங்கள், இரண்டு இதிகாசங்கள், ஆயிரக்கணக்கான ஸ்தலபுராணங்கள், அளவிறந்தகோடி ஆகமங்கள், இத்தியாதி நூல்களே ஒழுக்கம், வழக்குத், தண்டங்களுக்கு ஆதாரமான பிரமாணத்தை நிர்ணயிக்கிற சட்டங்கள். இவ்வகைச் சட்ட நிரூபணச் சபையாரும் விதிகர்த்தாக்களும் மோக்ஷநரக பலாபல நுகர்ச்சிக்குத் தீர்ப்புக்கொடுத்து அனுப்புகிற நியாயாதிபதிகளும் எலலாம் பிராமணரே. இவ்வகையாக வையகதேவரும் பூசுரருமென்று சொல்லப்படுகிற பிராமணர் வைதீக ஆளுகை செய்துவருகிறார்கள்.

3. இப்படியாக பிரஜைகளின் அறியாமை காரணமாகத்தோன்றி அவபத்தி காரணமாகத்தடித்து இந்தியாமுழுக்கவும் பரவிய விக்கிராராதனம் இந்துக்களில் பெரும்பாலாருடைய ஹிருதயத்தில் யதார்த்தமாகவே வேரூன்றிவிட்டதினால் வரவரப் பலத்து நித்திய நைமித்தியங்களும் ஆறுகால, அபிஷேக, அலங்கார, தீபதூப, ஷோடச உபசாரங்களும் நைவேத்தியங்களும் சங்கீத மேளவாத்திய நடனமுதலாய விபவங்களும் ஏற்பட்டு நடந்தேறிவருவது மாத்திரமோ, ஆட்டை விசேஷமமாஸ்தை விசேஷம் திருவிழாத்தேரோட்டம் அநேகவித வேடிக்கைகள் விநோதங்கள் உல்லாசமான கொண்டாட்டங்கள் முதலிய சம்பிரமங்களுமலிந்து மேலுமேலும் பிரபலமடைந்து வருகின்றன. இந்த விக்கிராராதனையானது முதலாவது பிராமணார்த்தமாகவும், இரண்டாவது மௌட்டியாகாரமான வெகுஜனங்களுக்கு ஜீவனோபாயமாகவும், மூன்றாவது பரத்தையர் பிழைப்பின் பொருட்டாகவும், நான்காவது கூடிவரும் பிரஜைகளுக்கு விநோதார்த்தமென்கிற பிரதிகூலார்த்தமாகவும் உபயோகப்பட்டுவருகிறது. இந்த ஆராதனைக்கு இந்தியாவே முக்கிய ஸ்தானமெனினும், தக்ஷணமே மற்றெல்லாப் பாகங்களிலும் சிறப்புற்ற விசேஷ ஸ்தானமென்று தீர்க்கமாய்ச் சொல்லத்தக்கது.

4. விக்கிரக ஆராதன முண்டுபட்டதற்கு மூலம் இவ்வாறுயிருக்க, இதை நன்காராயாத அத்தொழும்பர்களில் முக்கியமாய் வைஷ்ணவசமயத்தொரு பிரிவாகிய பாஞ்சராத்திரிகர் சர்வத்துக்கு மூலகாரணராயிருக்கிற பரப்பிரமமாகிய விஷ்ணுவுக்கு ஐந்துவித

மான பிரவர்த்தி நிலையுள்ளனவென்றும், அவை—பரம், வியூகம், விபவம், அந்தரியாமி, அர்ச்சையென ஐந்துவகையென்றும், அவற்றுள், பரமென்பது சத்து, சித்து, ஆனந்தமாகிய சச்சிதானந்த பரப்பிரம்மவஸ்து, வியூகமாவது வாசுதேவன், சங்கருஷணன், பிரத்தியுமனன், அநுருத்தன் என்ற பிரதான அவதாரபுருஷர்கள், இவருள் முந்திய இருவரும் பரத்துவத்தோடு பொருந்தியவர், பின்னைய இருவரும் அவரிலும் சற்றுத் தாழ்ந்தவர், இந்த வியூகராலேதான் சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரமாகிய தொழில்கள் நடந்தேறிவருகின்றன, விபவமாவது நீருண்ட காளமேகம்போன்ற திருமேனியையுடையராய் சங்கு சக்கர சாரங்க கதா கட்கமென்ற பஞ்சாயுதபாணியாய் இலக்குமிதேவியை மார்பத்தில் வைத்துச் சகலவித சம்பிரமத்துடனே சர்வலோக சரணியனாய் ஸ்ரீவைகுந்தத்தில் வீற்றிருந்தும் க்ஷீராப்தியென்கிற திருப்பாற்கடலில் சேஷசயனத்தில் யோகநித்திரை செய்துகொண்டுமிருப்பர், இவரே காரியார்த்தமாக உலகத்தில் தசாவதாரஞ்செய்து சுதர்மத்தை நிலை நிறுத்தி முடிவில் தன்னடி ஜோதிக்கெழுந்தருளி விபவத்தோடு பொருந்துபவர், அந்தரியாமியாவது ஜீவகோடிகளின் ஹிருதயங்களில் சாக்ஷிமாத்திரமாய்த் தங்கியிருப்பவர், கடைசியாய் அர்ச்சையாவது பாமர ஜனங்களின் பொருட்டாக விக்கிரக உருக்களில் ஆவிர்ப்பவித்துச் சேவை சாதிப்பதனால் அவர்களுக்கு க்ஞானலேஸமுண்டாக அநுக்கிரகிக்கும் அர்ச்சாவதார மூர்த்தியென்றும், இவற்றைத்தானே சவிஸ்தாரமாகக் கூறி இதற்காதாரமாகச் சில புராணங்களையும் இருசமய விளக்கமுதலிய நவீனமான சில சில்லரைக் கிரந்தங்களையும், முக்கியமாய் வேதத்தில் புருஷ சூக்தமென்ற பாகத்திலுள்ள சில வாக்கியங்களையுங்கொண்டு வந்து உதாகரிக்கிறார்கள். இந்துவேதமும் ஸ்மிருதியுந்தவிர மற்ற நூல்கள் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க பிரமாண கிரந்தங்களல்லவென்று முன்னமே நியாயங் காட்டிப்போந்தாம். ஆதலால் அதைப் போக்கிவிட்டு இந்துக்களில் சிறந்த பாண்டித்தியமும் தீர்க்காலோசனையும் நிதான ஸக்தியுமுடையவராயிருந்த நியாயவாதி யொருவரெழுதிய "வேத ஸமாஜ விண்ணப்பம்" என்ற பெயரையுடைய ஒரு புஸ்தகத்தில் கண்டபடி விக்கிரகத் தொழும்பர் கூறும் ஆதாரங்களையும் அதன்மேல் அந்த மகாபண்டிதர் கூறும் ஆக்ஷேப சமாதான நல்லாலோசனைகளையும் அவசியத்துக்குத் தக்கவண்ணம் ஒன்றுங் கூட்டாமற் குறைக்காமல் உள்ளதை யுள்ளபடியே ஈண்டெடுத்து காட்டுகின்றோம். ஏனெனில், அர்ச்சையின் ஜாதகபாதகங்களைச் சுபக்ஷத்தாராகிய நாங்கள் எவ்வளவோ விநயமாயு முண்மையாயுந் தெரித்த போதைக்கும், பரபக்ஷத்துக்கு அவ்வளவு சாந்தத்தையுண்டாக்க மாட்டாதென்ற கருத்தால், பரபக்ஷத்தாரில் ஒருவராகிய அந்த மகா பண்டிதர் வெளியிட்டிருக்கும் அந்த வாக்கியங்களைக்கொண்டே தெளிவுபடுத்துகின்றோம்.

5. முதலில் அர்ச்சைக்கு ஆதாரமாயுள்ள பிரமாணங்களை யோசிப்போம். உத்தரகீதையில்—

அக்நிர்தேவோ த்விஜாதீநாம்
முநீநாம் ஹிருதி தைவதம்
ப்ரதிமாஸ் வபரபுத்தாநாம்
ஸர்வத்ர ஸமதர்விநः.

இதன்பொருள்: "துவிஜர்களுக்குத் தெய்வம் அக்நியில், முநிவருக்குத் தெய்வம் ஹிருதயத்தில், புத்தி குன்றியவர்களுக்கு விக்கிரகத்தில் தெய்வம், ஸமதிருஷ்டியுடையவர்களுக்கு எங்குந் தெய்வம்" என்பதாம். இதன் கருத்தைச் சற்றுத் தீர்க்கமாய் விசாரிப்போமாகில் இதில் நால்வகை மனிதரைக்குறித்துப்பிரஸ்தாபித்திருக்கிறதென்றும், பிரகிருதி பதார்த்த விக்ஞானதிசாஸ்திரங்களையும் ஜீவாத்ம பரமாத்ம ஸ்வரூபங்களையும், அவற்றிற்குரிய பரஸ்பர அநுபவங்களையும் நன்றுயுணர்ந்து சுகதுக்கங்களிலும், செல்வவறுமைகளிலும், சாவு வாழ்வுகளிலும் சமதிருஷ்டியை வைத்திருக்கும் மகாநுபாவர்களுக்கு எப்போதும் எவ்விடத்தும் கடவுளின் விசித்திர செயல்கள் விளங்குமாகையால், அவர்களுக்கு எங்குந் தெய்வமென்று நான்காம் பாதத்தினாலும், கேவலம் இந்திரிய வியாபாரங்களெல்லாம் ஒழித்துவிட்டு யோகாப்பியாசஞ் செய்யுமுநிவர் தியானத்தினால் கடவுளையறிவாரென்று இரண்டாம் பாதத்தினாலும், இவ்விருவகுப்பாருக்கும் வர்ணாச்சிரம தர்மமில்லையென்று மேற்படி சுலோகமுழுமையாலும், வர்ணாச்சிரம தர்மங்களை யுடையவர்களுக்குள் துவிஜர்களென்றும் பிரம்ம க்ஷத்திரிய வைசியர்களுக்குக் கர்மசாதனமான அக்கினியில் தெய்வம் விளங்குமென்று முதற்பாதத்திலும், முற்றுங் கல்வியும் ஞானமுமற்றுமனிதரிற் கடையோராகவும், மற்றவர்க்கடிமையாகவும், தட்டுமுட்டுகளை யொத்தவராகவும் ஒதுக்கப்பட்டிருந்த சூத்திரர்கள் ஞானத்துக்காவது கர்மத்துக்காவது அதிகாரிகளல்லவென்று நீக்கப்பட்டிருந்தமையால் அவர்களுக்கு மேற்கூறிய வழிகளில் உபாசிக்க அசக்தராயிருந்தபடியாலும், ஒருவிதத் தெய்வபத்தியாவது இல்லாவிடில் அவர்களிடத்தில் நீதிமார்க்கமே யிராதாகையாலும், அக்காலத்தில் அவர்கள் திறத்துக்கு இயைந்தவாறு விக்கிரக ஆராதனம் ஏற்படுத்தப்பட்டதென்று மூன்றாம் பாதத்திலும் ஸ்பஷ்டமாய் விளங்கும்.

விக்கிரக ஆராதனத்துக்கு இந்தச் சுலோகத்திற் சொல்லிய ஹேதுவெல்லாம்கூடி அறிவின்மையாகவே யிருக்கிறது. முற்காலத்தில் சூத்திரர் முற்றும் அக்ஞானிகளா யிருந்தபோதிலும் பிரகிருதத்தில் அவர்களிற் பலர் பிராமணருக்குச் சமானமான கல்வித்தேற்ற முடையவராயும், சிலர் பிராமணருக்கும் மேலான ஞானமுடையவராயுமிருக்கையில், இப்போதும் அவர்களுக்கு அர்ச்சையை உபாசித்தல் பொருந்துமோ? மிருகங்களைப்போலன்றி மனிதருக்கு அருட்கடவு

ளானவர் தமது குணங்களெல்லாவற்றிலும் சிறந்ததும் தமது ஸ்வரூபகுணமுமாகிய நேரும் நிகருமற்ற ஞானத்தையளித்ததில் அவருடைய உத்தேஸியம் என்னவாம்? நாம் அதை நமது சக்திவஞ்சனையின்றி விருத்திசெய்துகொண்டு, அவருடைய மகிமையை அறிந்து அவருடைய தகைக்கு இசைந்தவழியால் அவரைத் தொழுதேத்திக் களிக்கவேண்டுமென்பதே யல்லவா? இதுதான் அவர் கருத்தென்பதற்கு நிஸ்ஸந்தேகமான சுருதிப்பிரமாணம் பின்னுலுரைக்கப்படும்.

புராணங்களிலும் அர்ச்சையைக்குறித்துத் தனித்துப் பிரஸ்தாபிக்குங்கால், அதை யொருவாறு சிறப்பித்துச் சொல்லியபோதிலும் இதர உபாசனுமார்க்கங்களுடன் இதை யொப்பிடும்போது அர்ச்சையைக்காட்டிலும் இழிவானமார்க்கம் உலகிலில்லையென்று நிந்திக்கப்பட்டிருப்பதாய் அனைவர்க்குந் தெரியும். ஆகிலும் இவ்வுண்மையை அறியாதவர் யாராவதிருந்தால் அவர்கள் திருப்திக்காக இவ்விடத்தில் சில திருஷ்டாந்தங்களை யெடுத்துரைக்கிறேம்.

ஸ்கந்த புராணத்தில் ஞானயோககாண்டத்தில் நாடி சக்கிராத்தியாயத்தில்—

தீர்த்தே தானே தபோ யக்ஞே
காஷ்டே பாஷாணகேபதா
ஷிவம் பஸ்யதி மூடாத்மா
ஷிவோ தேஹே ப்ரதிஷ்டித.

இ—ள். மூடாத்துமாக்கள் தீர்த்தத்திலும், தானத்திலும், தபசிலும், யக்ஞத்திலும், கட்டையிலும், கல்லிலும், சிவனிருப்பதாய் நினைக்கிறர்கள், சிவனே நமக்குள்ளேயிருக்கிறர் என்றும்,—

சர்வத்ராவஸ்திதம் ஸாந்தம்
ந பஸ்யதி சங்கரம்
க்ஞான சக்ஷுர்விஹீநத்வாத்
அகோமாயா பல முநே.

இ—ள். ஓ முநியே, ஞானக்கண்ணில்லாமையாலும் மாயையின் பலத்தாலும் (அல்லவா) எங்கும் வசிக்கும் சாந்தமூர்த்தியாகிய சங்கரனைக் காண்கிறதில்லை என்றும்,—

ஷிவம் ஆத்மநி பஸ்யந்தி, ப்ரதிமாஸு ந யோகிநः,
அக்ஞானம் பாவநார்த்தாய ப்ரதிமா பரிகல்பிதாः.

இ—ள். யோகிகள் சிவனைத் தமக்குள்ளே காண்பார்களேயன்றிப் பிரதிமைகளிற் காணர். அக்ஞானிகளுக்கும் பாவனர்த்தம் பிரதிமைகள் செய்யப்பட்டிருக்கிறதுகள் என்றும்,—

சாதாதப வசனம்.

அப்ஸு தேவா மநுஷ்யாணம்
திவி தேவா மநீஷிணம்
காஷ்டலோஷ்டேஷு மூடாநாம்
யுக்தஸ்யாத்மநி தேவதா.

இ—ள். சாதாரண மனிதருக்குத் தெய்வம் நீரில், சற்று தெரிந்தவர்களுக்குத் தெய்வம் ஆகாசத்தில், முட்டாளுக்குத் தெய்வம் கல்லிலுங் கட்டையிலும், யோகிகளுக்குத் தெய்வம் அவர்களுக்குள்ளே என்றும்,—

மஹாநிர்வாணத்தில்.

ஏவம் குணநுஸாரேண
ரூபாணி விவிதாநிச
கல்பிதாநி ஹிதார்த்தாய
பக்தாநி அல்ப மேதஸாம்.

இ—ள். இவ்வித ஸ்வபாவங்களை யநுசரித்துப் பலவித உருவங்கள் அல்பப் புத்தியுடையவர்கள் நிமித்தம் கல்பிக்கப்பட்டன என்றும்,—வெளிப்படுகின்றன.

6. இத்தன்மையான வாக்கியங்களைக் கணக்கின்றி யெடுத்துரைக்கக் கூடுமாகிலும் கக்ஷியாவேசத்தால் "நான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்பவர்களுக்கு எவ்வளவு திருஷ்டாந்தங்களைக் காட்டினாலும் போதாதாகையாலும் ஆந்தரியமாக உண்மையை அறிந்துகொள்ளவேண்டுமென்னும் விருப்பமுடையவர்களுக்கு இப்போதுரைத்த பிரமாணங்களே போதுமாகையாலும் இவ்வளவுடன் நிறுத்துகிறோம். சற்று கவனமாய்ப் பார்ப்பவர்களுக்குப் பிரகிருதத்தில் நடந்தேறிவரும் அர்ச்சைக்காதாரமான பிரமாணங்கள் சிலகாலத்துக்கு முன்னுண்டாகிய புராணங்களிலும், அவற்றிலுந் தாழ்ந்த கௌரவமுடைய ஆகமாதிகளிலும்மாத்திரங் கிடைக்குமென்றும், இத்தன்மையான பிரமாணங்களாலும் அர்ச்சையானது உபாசனா மார்க்கங்களிலெல்லாம் அதிநீசமானதென்றும், தானாய் விளங்கும். உண்மை யிவ்வாறிருப்பினும், கக்ஷியாவேசத்தினால் அர்ச்சைக்குச் சுருதிப்பிரமாண முண்டென்று வாதிக்கலாமாகையால் அதைச் சற்று யோசிக்கவேண்டிய தாவஸியகமாகிறது. சுருதியில் இதற்குப் பிரமாணமே யில்லையென்பதைக் காட்டும்பொருட்டு வேதமுழுமையுமெடுத்து இவ்விடத்தி லுரைத்தாலன்றி முடியாதாகையால் பண்டிதர்கள் அர்ச்சைக்கு ஆதாரமாக உரைத்த புருஷ சூக்தத்தைக்குறித்து முதலில் விசாரிப்போம். அதைக்குறித்துச் சர்ச்சிக்கத் தொடங்குமுன் அவர்கள் ஆதாரமாகக்கொண்ட பாகத்தை மொழிபெயர்த்துரைப்பது உத்தமமாக விருக்குமாகையால் அப்படியே செய்கிறோம்.

சுருதிப்பிரமாணம் புருஷசூக்தம்.

7. தஸ்மத் விராட ஜாயதः	அதினின்றும் விராட்டுண்டாயிற்று.
விராஜோ அதிபுருஷ....	விராட்டுக்கு அதிபுருஷனாகிய.
ஸஜாதோத்யரிச்ய	அவன் (ஆதிபுருஷன்) பிறந்தமாத்திரத்தில்.
தபச்சாத் பூமிம் அதோ புருஷ	பூமியைமுன்னும்பின்னுங்கடந்தான்.
யத் புருஷேண ஹவிஷா தேவாயக்ஞமநவத....	புருஷனை ஹவிஷாகக்கொண்டு தேவர்கள் எந்த யக்ஞம் செய்தார்களோ.
வஸந்தோஸ்யவீதாஜ்யம்	அதற்கு (அந்த யக்ஞத்துக்கு) வசந்தருது நெய்யாயிற்று.
கிரீஷம இதம	கிரீஷ்மருது சமித்து (விறகு).
சரத் அவி	சரத்ருது ஹவிசு (சோறு) ஆயிற்று.
ஸப்தாஸயாஸஜ பரிதயः திரிஸபதஸ்மிதக்கிருதாः	அதற்கு இருபத்தொரு சமித்துக்களாற் செய்யப்பட்ட ஏழு பரிதிகள் (எல்லைகள்).
தேவா யத் யக்ஞம் தந்வாரः அபத்நஜபுருஷம் பசும்தம்யக்ஞமபர்ஹீ ஷிப்ரௌக்ஷஜ புருஷ மஜாதம்கிருதः	எப்போதும் யக்ஞம் செய்பவராகத் தேவதைகள் புருஷனாகிய பசுவைக் கட்டினார்களோ முதற்பிறந்த அந்த யக்ஞமாகிய புருஷனை ப்ரோக்ஷித்தார்கள்.
தேநதேவா அயஜந்த ஸாத்யாருஷயச்சயே	அவனால் தேவரும் ருஷிகளும் சாத்தியரும் யஜித்தார்கள்.
தஸ்மாத்யக்ஞாத் ஸர்வபூதம் ஸம்ப்ரதம்பரஷ தாஜயம்	எல்லோருங் கோஷிக்கத்தக்க அந்த யக்ஞத்தினின்றும் புருஷதாஜ்யம் பரிக்கப்பட்டது.
பஸ்வூர்கம்ஸ்தார் கம்சக்ரேவாயவ்யாங் ஆரணயம்கிராம்ஸாங்ச்சயே.	வாயு சம்பந்தமானவும், காட்டிலுள்ளவும், ஊர்களிலுள்ளவும் பசுக்களாக அவைகளைச் செய்தான்.
தஸ்மாத்யக்ஞயாத்ஸர்வஹூதः ருசஸ்ஸாமாநிஜக்ஞரே	அழைக்கத்தக்க அந்த யக்ஞபுருஷனிடத்தினின்றும் ருக்வேதமும் ஸாமவேதமு முண்டாயின.
சசந்தாரகம்வி ஜக்ஞரே தஸ்மாத்	அதினின்றும் சந்தஸுக்களுண்டாயின.
யஜுஸ்தஷ்மாதஜாயத..	அதினின்றும் யசுர்வேதங்களுண்டாயின.
தஸ்மாதஸ்வாத்ஜயத்....	அதினின்றுங் குதிரைகளுண்டாயின.

ஏகேசோ பயாத்தஃ காவோ அஜக்ஞரே தஸ்மாத்..	அதினின்றும் இரண்டுவரிசைப் பற்களுடைய ஜந்துக்களுண்டாயின, அதினின்றும் பசுக்களுண்டாயின.
தஸ்மாத்ஜாதா அஜாவயஃ..	அதினின்றும் ஆடுகளும் பக்ஷிகளுமுண்டாயின.
யத்புருஷம் வயத்துஃ அதிதாவ்ய கல்பயஜ	எந்த புருஷனை நிறுத்தினார்களோ, அவனை யெவ்விதமாய்க் கல்பித்தார்கள்.
முகம் கிம்ஸ்ய	முகமெது.
உகெள்	கைகளெவை.
காவூருபாத உச்யே	தொடைகளும் பாதங்களுமெவை யென்னப்படுகின்றன.
ப்ராஹமணேஸ்ய முகமாவீத்....	அவனுக்குப் பிராமணன் முகமானான்.
பாகுராஜங்யஃ கிருதஃ....	க்ஷத்திரியன் கைகளாக்கப்பட்டான்.
ஊருதததஸ்ய யத்வைஸயஃ..	வைசியனெதுவோ அது அவனுக்குத் தொடைகள்.
பத்பார்கம் ஸூத்ரோத் அஜாயத்	பாதங்களினின்றும் சூத்திரனுண்டானான்.
சந்த்ரமாமநஸோஜதஃ ..	மனதினின்றுஞ் சந்திரனுண்டானான்.
சக்ஷோஸ் ஸூர்ரேய அஜாயத்	கண்களினின்றும் சூரியனுண்டானான்.
முகாதிந்தரஸ வாக்நிச்ச.	முகத்தினின்றும் இந்திரனும் அக்கினியும்.
ப்ராணுத்வாயுரஜாயத ..	பிராணனினின்றும் வாயு உண்டாயிற்று.
நாப்ய ஆஸீதந்தரிக்ஷம்.	நாபியினின்றும் அந்தரிக்ஷமுண்டாயிற்று.
வீரஷணேத் யெளஸ் ஸம்வதாத	தலையில் சுவாசமிருந்தது.
பதப்யாம் பூமிர் திசஸ் ரோத்ராத்	பாதங்களினின்று பூமியும் காதினின்று திக்குகளும்.
அதாலோகாங் கல்பயங்..	இப்படி யுலகங்களைக் கல்பித்தார்கள் என்று சொல்லியிருக்கிறது.

8. இந்தச் சுருதியினால் பரப்பிரமத்துக்குச் சரீரமுண்டென்றும், அந்தச் சரீரத்தின் அவயவங்களினின்றும் பிராமணாதி சதுர்வர்ணங்களும் இந்திராதி தேவதைகளுமுண்டானார்களென்றும், எல்லோரும் நம்பவேண்டுமென்பதும் மேற்கூறிய பண்டிதர்களின் கருத்தாய் விளங்குகிறதல்லவா? இதன் பொருள் மேற்சொல்லிய பொழிப்புரை

யாலே தானும் விளங்குமாயினும் நம்முடைய பண்டிதர்கள் அதற்கு லோகவிலக்ஷணமான பாஷியஞ்செய்யத் துணிந்தபடியால், அதைச் சற்று விவரமாய் விசாரிக்கவேண்டியது ஆவஸ்யகமாய்த் தோன்றுகிறது. ஒரு வாக்கியத்துக்குப் பொருள்செய்ய வேண்டும்பொழுது, அந்த வாக்கியம் வரும் கிரந்தத்தின் நோக்கத்தையும் அதிலுள்ள மொழிகளின் லிங்கத்தையும் அது வருஞ் சந்தர்ப்பத்தையும் யோசித்து இதர கௌரவப்பிரமாணங்களுக்கு விரோதமில்லாமற் பொருள் செய்யவேண்டுமென்று நியாயப்பிரமாணமிருக்கிறது. சுருதிகளிற் சொல்லிய வாக்கியங்களில் சில குணார்த்தவாதங்களாயும், சில பூதார்த்த வாதங்களாயுமிருக்கும். நடந்ததை நடந்தவாறு சரித்திரமாயுரைக்கும் பாகங்களுக்கு பூதார்த்தவாதமென்றும், கேவலம் தத்துவவிஷையமாகவும், மகிமாவிஷையமாகவுஞ் சொல்வது மனதில் பொருந்தும் பொருட்டு லக்ஷியமாகவும், உபமானமாகவும் அபூதகல்பனையாய்ச் சொல்லப்பட்ட பாகங்களுக்கு குணார்த்தவாதமென்றும் பெயர். வேதத்திற் கதையாகச் சொல்லப்பட்ட பாகங்களெல்லாம் இவ்விரண்டிலொன்றாயிருக்க வேண்டுமேயன்றி வேறுவழியில்லை. இந்தப் புருஷ சூக்தங் குணார்த்தவாதமென்பதே யெங்கள் கொள்கை.

9. முதல்வர்ணனையில் விராட்டென்னும்பிரபஞ்சத்துக்குப் பிராமணன் முகமானான். க்ஷத்திரியன் தோள்களாக்கப்பட்டான். வைசியன் என்பது எதுவோ அதுவே தொடைகள் என்று சொல்லியிருப்பதால் இவர்களை முகமாகவும், புஜங்களாகவும், தொடைகளாகவும் உத்பிரேக்ஷித்திருப்பதாகக் கருத்தேயன்றி அந்த அவயவங்களினின்றும் அவர்களுண்டானார்க ளென்பதன்று. இந்த உத்பிரேக்ஷைக்கு ஹேதுவில்லாமற் போகவில்லை.

புத்திக்குக் குறியாகிய முகத்தைக் கல்வித்திறத்தால் விளையும் ஞானத்தைக் குறியாகக்கொண்டிருக்கும் பிராமணனாலும், பலத்துக்கு ஸ்தானமாகிய புஜத்தை ராஜ்யசம்ரக்ஷணார்த்தம் உதவும் பலத்தைக் குறியாகவுடைய க்ஷத்திரியனாலும் சஞ்சாரத்துக்குச் சாதனமான தொடைகளை வர்த்தகத்துக்கு இன்றியமையாக் கருவியாகிய சஞ்சாரமுடைய வைசியனாலும் விளக்கியிருக்கின்றது. இக்கருத்தின் உண்மையைக்குறித்து ஐதரியப்பிரமாணம், 7—வது பஞ்சிகை, நாலாவது அத்தியாயமுழுமையுங் கவனிக்க. ஆனால் இந்த வர்ணனையில் கடைசி வாக்கியத்தில் "பாதங்களினின்றுஞ் சூத்திரனுண்டானான்" என்று சொல்லியிருக்கிறபடியால் அவ்விடத்தில் உண்டாதல் என்பதற்கு உத்பிரேக்ஷயென்று எப்படிப் பொருள்செய்யலாமென்றால், அந்த வாக்கியத்தை மேற்கண்ட வினாக்களுடனும், முதல் மூன்று வாக்கியங்களுடனும் ஒட்டிப் பொருள்செய்தால் அந்த வினைக்குங் "கற்பிக்கப்பட்டது" என்பதுதவிர வேறு பொருளேற்படுவதற்கு வழியில்லை.

10. இத்யாதி ஹேதுக்களாலும் பிரமாணங்களாலும் அர்ச்சைக்குச் சுருதிப்பிரமாணம், அடியோடில்லையென்று ஏற்படுகிறதல்லவா?

இப்படிக்கிருந்தும் பிரகிருதத்திற் பட்டியமானமாயுள்ள வேதங்களில் அர்ச்சைக்குப் பிரமாணமில்லாவிடினும், நமது தேசத்தில் வெகு ஜனங்களால் அநுஷ்டிக்கப்பட்டிருக்கிற இந்த மார்க்கத்துக்கு வேதத்திற் பிரமாணமில்லாமற் போகமாட்டாதென்றும், "அநந்தா வைவேதா:" (வேதங்கள் முடிவற்றன) என்கிற பிரமாணமிருக்கிறபடியாலும், வேதங்களில் பல பாகங்கள் லுப்தமாகிவிட்டபடியாலும், அப்படி லுப்தமாகிவிட்ட பாகத்தில் இத்தற்குப் பிரமாணமிருந்தேயிருக்குமென்றும், சிலர் குதர்க்கஞ்செய்யலாமாகையால், அதைச் சற்று யோசிக்கவேண்டியது ஆவஷியகமாகிறது. முதலில், தொன்றுதொட்டு நமது தேசத்தில் வேதங்களைப் புஸ்தகங்களிற் படித்துப் பொருள்செய்யாமல் சப்தார்த்தமுந் தெரியாமல் சந்தைசொல்லி உருப்போட்டுப் பாடஞ்செய்வதே வேதாத்தியயன மார்க்கமாயிருக்கிறபடியாலும், யஜுர்வேதத்தில் அசிதித்துவயமென்கிற சாகா பாகத்தைப் பாடஞ்செய்வதற்கே சுமார் பன்னிரண்டு வருஷஞ் செல்லுகிறபடியாலும், இந்த ரீதியாகவே, ருக்குவேதத்தையும், சாமவேதத்தையும், அதர்வணவேத சிரசு சிகைகளையும், அந்தந்த வேதங்களுக்குரிய பிரமாணங்களையும், மொங்தையுருவினல் ஒருவன் பாடஞ்செய்ய மீதி புருஷாயுசு போதாதாகையாலும், இந்த ஹேதுவைப்பற்றியும், கேவலம் மகிமாவிஷையமாயுமாத்திரம் "அநந்தா வை வேதா:" என்று சொல்லப்பட்டதேயன்றி உண்மையில் வேதத்தில் இத்தனை கிரந்தம் அடங்கியிருக்கிறதென்று தெரியாதென்பதினலாவது, தெரிந்துகொள்ளக் கூடாதென்பதினலாவதல்ல. பூர்வத்தில் ராவணுதிகளால் சக்குபந்தி யேற்படுத்தப்பட்டிருக்கிற சுவல்பப் பாகங்கள்தவிர, மற்ற அநந்தமான பாகங்கள் லோபித்துப்போயின வென்றுரைத்தாலும், எங்களுக்குச் சம்மதமே. ஈஸ்வரப் புரோக்தமென்று சிலரும், அதற்குக் கர்த்தாவே யில்லையென்று சிலரும் ஒத்துக்கொள்ளப்பட்ட வேதங்களில் இப்போது நிலைத்திருக்கிற பாகங்களினலெல்லாம் அர்ச்சை யென்பது மானிடத்தன்மைக்கே இசையாத நீசமார்க்கமென்று ஏற்படுகையில் லுப்தமாய்விட்ட பாகங்களில் அதற்கு நேரே விரோதமாக விதித்திருக்கலாமென்று ஊகிப்பது யுக்திக்காவது, நியாயத்துக்காவது பொருந்ாததல்லவா? அன்றியும், பிரத்தியக்ஷமாயுள்ள பிரமாணங்களை விட்டுவிட்டு, அதற்கு விரோதமாயும், பிரமாணங்களிருந்திருக்கலாமென்று சொல்வதினல் விளையுந் தீமைகளைச் சற்று மனதிற் கொள்ளவேண்டும். அவற்றுள் முக்கியமானது என்னவெனில்: உலகத்திலுள்ள ஒவ்வொரு குடியனும், குடிகேடனும் தத்தமது தீச்செயல்களுக்கு ஆதாரமாக ஒவ்வொரு சமஸ்கிருத வாக்கியத்தைக் கல்பித்துக்கொண்டு அதைக் கிலசுருதியென்று சொல்லத் துணிவானகில், உலகத்தில் இன்னது சதாசாரம் இன்னது துராசாரமென்கிற வியவஸ்தை யழிந்து யதேச்சையாகப் பிரவர்த்தித்து உலக முழுகிப்போமென்பதிற் சந்தேக

முண்டா? ஆகையால் அனைவராலும் வேதமென்று ஒத்துக்கொள்ளப் பட்ட பாகந்தவிர வேறே பாகம் இருந்ததாயாவது அது பிரமாண மென்றாவது கொள்ளாமை வெகு நலமாயிருக்கும். இப்படிக்கில்லா விட்டால், கணக்கன் சுருணையைக்காட்டிலும் வேதத்தில் அதிநம் பிக்கை வைக்கக்கூடுமோ? கடைசியாக இப்போது ஒருவிதமாய் ஆசாரமிருக்கிறபடியால் வேதத்தில் அதற்குப் பிரமாணமிருந்திருக்க வேண்டுமென்பது ஒரு வாதமாகுமா? அப்படியாகில், அல்லாச்சாமி முதலிய சூத்திரதேவதைகளுக்குப் பிரார்த்தித்துக்கொண்டு விகார மான வேஷங்களைப்பூண்டு, வெட்கங்கெட்டு மிருகப்பிராயமாய் ஆடித் திரிந்துகொண்டிருக்கும் ஹிந்துக்களும் தங்கள் செய்கைகளுக் குக் கிலசுருதியில் பிரமாண மிருந்திருக்குமென்று வாதித்தாலும் ஆக்ஷேபிக்கக்கூடாதல்லவா? ஆனால் அது நவீனமாய்வந்த ஆசார மாகையால் அநாதியாய் நடந்துவரும் அர்ச்சைக்கு அதைத் திருஷ் டாந்தமாக்கக் கூடாதெனச் சிலருரைக்கலாம். இந்த வழக்கம் இரு நூறு வருஷக்காலமாய் நடந்தேறிவந்தால் அர்ச்சை அதிகபக்ஷம் இரண்டாயிரம் வருஷத்துக்குமுன் வந்திருக்குமேயன்றி அநாதி யென்று சொல்லப் பொருந்தாதே. பிராசீனமான புராணங்களில் பேருரில்லாதவனெல்லாம் செய்த அப்பிரயோஜனமான காரியங்க ளனைத்தையும் வர்ணித்திருக்கையில், வியாசபராசராதி ருஷிகள் இன்னின்ன கோவில்களில் சென்று பூஜித்தார்களென்கிற பிரஸ்தா பமே யில்லாமையைக் கவனித்தால், அக்காலத்தில் அர்ச்சை யென் பதே கிடையாதென்று ஏற்படுகிறதல்லவா? அன்றியும்—

11. காசிகாண்டத்தில்,

> சம்சலேந்தரிய வருத தித்வாத் கலிகல்மஷ
> ஜ்ருபணாத் அல்பாயுஷ் யாத்ததா நிருணாம்
> கவேஹயோக மஹோதய:, நவிஷ்யதி கலௌ
> யோகோ நவிஷ்யதி கலௌ தப:

இ—ள். இந்திரிய சாஞ்சலியத்தினாலும், கலியிற் பாவம் பெருகி யிருப்பதாலும், மனிதர் அல்பாயுஷாயிருப்பதாலும், யோகமெப்ப டிச் சித்திக்கும்? கலியில் யோகம் சித்திக்கிறதில்லை. கலியில் தபசு சித்திக்கிறதில்லை. எ-ம். இதனால் கலியுகம் பிறந்து வெகுநாட் கழித்து மனிதருடைய சுபாவமும் ஆசாரமும் சக்தியு மாறியபிற கல்லவா அவர்களுடைய சக்திக்கனுகுணமான இந்த ஏற்பாடு செய் திருக்கக்கூடும். ஆகையால் அதிகபக்ஷம் இரண்டாயிரம் வருஷத் திற்கிப்பால் யோகாப்பியாசத்துக்குப் பதிலாய் அர்ச்சை யேற்படுத் தப்பட்டிருக்கவேண்டுமென்று ஸ்பஷ்டமா யேற்படுகிறபடியால் இப் படி நவீனமாய்வந்த ஏற்பாட்டிற்குச் சுருதியிற் பிரமாண மிருந் திருக்குமென்பது யுக்திக்குப் பொருந்துமா? ஆனால் அர்ச்சைக்கு விரோதமான பிரமாணமாத்திரம் எப்படிக் கிடைக்குமென்றாலோ

பிரம்மஸ்வரூப மிப்படிப்பட்டதென்றும் அதைத் தொழவேண்டிய மார்க்க மின்னதென்றும் விதித்துவிட்டு அதற்கு விரோதமானதை யெல்லாம் நிஷேதித்துவிட்டிருந்தால், அந்த நிஷேதத்தில் அடங்கிய தெல்லாம் விலக்கப்படவேண்டியதல்லவா?

காடகம் மூன்றும் பிரசினத்தில்—

தாவா ஏதாஃ பஞ்சஸ்வர்கஸ்ய லோகஸ்ய த்வாராஃ
தபஃ ப்ரதமாம்ரக்ஷதி ஸ்ரத்வா த்விதீயாம் மநஸ் சதுர்த்தம் சரணம் பஞ்சமீம்.

இ—ள். முக்தியடைவதற்கு இந்த ஐந்து வழிகளேயுண்டு. தபசு முதல், சிரத்தை யிரண்டாவது, சத்திய மூன்றுவது, மனது நான்காவது, சரணம் ஐந்தாவது என்றும்,—

வாஸநேய உபநிஷத்து, 12—வது வாக்கியத்தில்—

அஜந்தம ப்ரவிஜந்தீயே ஸம்பூதி முபாஸதே
ததோபூய இவதே தமோ உஸம்பூத் யாக்ரதாஃ

இ—ள். இயற்கையைத் தொழுவோர் நாஸ்திகர், அந்தகாரத்தை யுடையவர்கள். படைப்பைத் தொழுவோர், இன்னுங்கொடிய அந்தகாரத்தை யடைவார்கள் என்றும்,—

ஸ்வேதாசுவதர உபநிஷத்து, நாலாவது அத்தியாயம், 19,20 வாக்கியம்—

நைநமூர்த்வந்திர்யஞ்ச நமத்யே பரிஜக்ரூபத்
நதஸ்ப் ப்ரதிமா அஸ்தி யஸ்யநாம மஹித்யஸஃ

இ—ள். அவன் உயரத்தையாவது அகலத்தையாவது இடையையாவது ஒருவரும் கண்டறியார், மஹா யசஸ் என்னும் பெயரை யுடைய அவருக்குப் பிரதிமையில்லை என்றும்,—

மேலேகாட்டியிருக்கிற இத்தன்மையான எண்ணிறந்த கௌரவப் பிரமாணங்களை யெடுத்துரைக்கக் கூடுமாயினும் இதுவிஷயத்தை வளர்க்க மனமின்றி இம்மட்டோடே இந்தப் பிரிவை முடிக்கிறோம். இம்மட்டில் அர்ச்சையடியோடு மானிடத்தன்மைக் கிசையாத அதிஹேயமார்க்கமென்று சுருதியாலும், புத்தியுள்ளவர்கள் விஷயத்தில் அது நிஷேதமாகிலும் மூடர்களுக்குமாத்திரம் அது கிராகியமாகுமென்றும் நம் பண்டிதர்கள் பிரமாணமாகிய புராணாதி கௌணப் பிரமாணங்களாலும் ஏற்படுகிறபடியால் சுருதியாற் சபிக்கப்பட்ட மார்க்கத்தைச் சாதுவென்று விதிக்கப் புராணாதிகளுக்கு எத்தன்மையான அதிகார முண்டென்பதை யோசிக்கவேண்டியிருக்கிறது என்று அந்தப் பாகத்தை முடித்திருக்கிறார்.

12. மேற்படி 3—ம் அத்தியாயத்தில் கண்டபடி அர்ச்சையை அவலம்பிப்பதினால் விளையத்தக்க சாதக பாதகங்கள் இவையென்று கீழே விவரிக்கப்படுகின்றன.

அர்ச்சையால் விளையு நன்மை யொன்றேனுமில்லாமையால், அதைக்குறித்துப் பிரஸ்தாபிக்கக் கூடாமைபோலவே அதனால் விளையும் அநந்தமான தீமைகளையும் எழுதிமுடிப்பது அசாத்தியமாகிலும், சிறிதைமாத்திரம் இவ்விடத்திலுரைத்தால் மற்றவை புத்திமான்களுக்குத் தாமாய் விளங்குமாகையால், அவ்வாறு செய்தலே போதுமென்று நம்புகிறோம். முதலாவது அர்ச்சை யென்னும் பாவத்தொழிலானது கடவுளின் கருத்துக்கும் அக்கருத்தை விளக்கும் வேதத்துக்கும் விரோதமா யிருக்கின்றமையால் அதுவே பிரபல பாதகமாயிருக்கிறது. கடவுளானவர் நமது கண், வாய், முதலிய இந்திரியங்களுக்குப் புலப்படமாட்டாரென்பதற்குப் பல சுருதிப் பிரமாணங்கள் முன்னாலே யுரைக்கப்பட்டபடியால் புனருக்தியாவஸியகமில்லை. அவரை யறிந்துகொள்வது நமது நீங்கலாக் கடமையென "அவரொருவரையே அறிந்துகொள்" என்பதுமுதலிய அநேக சுருதிவாக்கியங்களாலேற்படுகிறது.

"இகச்சேத வேதீ தத் ஸத்யமஸ்தி
நசேதிக வேதீ நமகதி விநஷ்டிঃ"

இ—ள். இப்பிறப்பிலே பரப்பிரமத்தை அவருடைய ஸ்வரூபத்தில் அறிந்துகொண்டால் நிலையுண்டாகும், இப்பிறப்பில் அறிந்துகொள்ளாவிட்டால் அளவற்ற துன்பமே யுண்டாகுமென்பது முதலிய சுருதிவாக்கியங்களால் அந்த உத்தரவாதத்தின் தன்மை வெளியாகும். அவரையறியும் வழியென்னவெனில்:

"மநஸ வேதமாப்தவ்ய மநேக நாமாஸ்தி கிம்சன
மிருத்யோஸ்ஸமிருத்யும்கச்சதி இகநாநேவ பஸ்யதி."

இ—ள். மனஸினாலேமாத்திரம் அவனை யறியக்கூடுமேயன்றி யவனை யறியப் பலவழிகளில்லை. பலவழிகளிருப்பதாய் மதிப்பவன் மிருத்தியுவினின்று மிருத்தியுவையே யடைகிறான் என்றும்,—

"தியான நிர்மத நாப்யாஸாத்
தேவம் பஸ்யேந் நிகூடவத்."

இ—ள். தியானமார்க்கத்தினாலே, மறைந்திருக்குந் தேவனை அறியவேண்டியது என்றும்,—இன்னும் அனந்தவாக்கியங்களாலும் மனதொன்றுதவிர வெறொன்றாலும் அவரை யெட்டிமுடியாதென்று ஸ்பஷ்டமாய் விதித்திருக்கிறது. வேதத்தில் பலோத்தேஸியமாக விதிக்கப்பட்டிருக்கிற அநேக தொழில்களைச் செய்யாமையினாலே அப்பயன் மாத்திரம் கைகூடிவாராமற்போகுமேயன்றி இதரபாதகங்களொன்றும் விளையாது. ஆனால் பிரமத்தை உபாசிக்கவேண்டிய மார்க்கத்தைக் குறித்த விதிகளை வழுவாமல் அநுஷ்டிப்பதினால் பிரபல பிரயோஜனங் கிடைப்பதுமாத்திரமேயன்றி, அதில் ஈஷத்தாவது தவறினால் மீட்கக்கூடாத துன்பம் விளையுமென்று கண்டோக்தமாய்ச் சொல்லியிருக்கிறது. மநுஸ்மிருதி இரண்டாவது அத்தியாயத்தில் ஸ்ருதி

ஸ்மிருதியாகிய இந்த இரண்டு மூலங்களை மதிக்காமல் அப்பிரமாண மான நூல்களைப் பற்றிக்கொண்டு போவானாகில், அவனைப் பெரியோர்கள் நாஸ்திகனென்றும் வேத நிந்தகனென்றும் ஒதுக்கிவைக்கவேண்டியதென்று சொல்லியிருக்கிறார். இவ்வாறு நம்மீது சுமந்திருக்கும் உத்தரவாதத்தைச் செலுத்தாவிடில் நாம் கரையேறும்வழி யெதுவாம்? நம்முடைய சக்தி யிவ்வளவென்று அறிந்துகொள்ளாமல் கடவுள் ஆக்ஞாபித்தாரெனக்கூடுமா? அப்படியாகில் அவருக்குச் சர்வக்ஞத்துவமேது? இதுநிற்க, கடவுளால் நமக்களிக்கப்பட்ட ஒவ்வொரு அவயவமும் பழக்கத்தால் பலமடைதலும், பழக்கமில்லாவிடிற் சோர்வடைதலும் லோகப்பிரசித்தம். தொழும்பர் செய்யும் பல விசித்திர விநோதங்களுக்கு அவர்களுடைய சரீரப்பயிற்சியைவிட வேறெதைக் காரணமெனக்கூடும்? அவயவவிஷயத்தில் தான் இப்படியென்று கொள்ளவேண்டாம். பாலியத்தில் இரண்டு மூன்றும், ஐந்தென்பதற்குக் கையினால் விரல்களை விட்டு வாயினாலுச்சரித்து பலதரம் பழுதுபார்த்தும் பிசகிப்போகின்ற சிறுவனே பழக்கத்தின் வலுமையாலேயல்லவா அல்பகாலத்தில் வெகுகடினமான கணக்குகளையெல்லா மனதிலே தியானித்து முடிக்க வல்லவனாகிறான்! இப்படியிருக்கையில், நாம் பிரம்மதியானத்தில் மனதைப் பயிற்சி செய்யாமையினாலேயல்லவா மனதிற்கு வலுமை குன்றி அவர் ஸ்வரூபத்தை யறியக்கூடாமற்போகிறது. வேதத்திற் குறித்ததுதவிர வேறுவழி யில்லையென்றிருப்போமாகில் நாம் தியானத்தில் முயன்றேயிருப்போமென்பதிலும், அப்படியே முயல்வோமாகில் அதற்குரிய பயனையடைந்தேயிருப்போமென்பதிலும் சந்தேகமில்லை. "அப்படிக்கின்றிப் பயனற்ற சோம்பேறித்தொழிலை நற்றொழிலென்று கொள்ளவேயல்லவா நாமுடியவும் சோம்பேறிகளாய் நின்று பெரும்பயனெல்லா மிழக்கும்படி நேரிட்டிருக்கிறது." பூர்வத்தில் எத்தனையோபேர் பிரம்மதியான பலத்தால் நற்பயனை யடைந்திருக்கிறார்கள். இவர்களுடைய மனது பொன்னாலும் பின்னவர் மனது இரும்பாலுஞ் செய்யப்பட்டன வென்னலாமா? முற்காலத்தில் வாழ்ந்த தீரர்கள் மனதிற்கு மெட்டாத அநந்த விசித்திரமான சாஸ்திரவிஷயங்களையெல்லாம் இக்காலத்தார் அறிந்து அநுஷ்டிக்கையில் பிரம்மோபசனமார்க்கம் ஒன்றில்மாத்திரம் இவர்கட்கு சக்தியில்லையென்பது யுக்திக்குப் பொருந்துமோ? அதை விதித்த வேதத்துக்குப் பொருந்துமோ! அதை விரும்பிய கடவுளின் கருத்துக்குத்தான் பொருந்துமோ. எவ்விதத்தும் பொருந்தத் தக்கதன்று. மேற்குறித்த சர்ச்சையினால் அர்ச்சையை அநுசரித்தல் சுருதிப் பிரமாணங்களுக்கு விரோதமென்பதுந்தவிர நமது விருத்திக்கும் ஹானியாய் முடிந்ததென விளங்குகின்றதே.

13. இரண்டாவது விக்கிரக ஆராதனம் "நமது யுக்திக்கும் அடுக்காத காரியமாயிருக்கிறது. பிரகிருதத்தில் நம்மவர்களைப்

போன்றவர் தங்கள் கக்ஷியின் துர்ப்பலத்தை மனதிற்கொண்டு பல வித குயுக்திகள் செய்தபோதிலும், உண்மையை யோசிக்குங்கால் அவர்கள் விக்கிரகத்தையே தெய்வமென்று நம்பி அநுஷ்டிக்கிறார்க ளென்பதிற் சந்தேகமில்லை." இவர்களிற் சிலர் "யாதொரு விக்கிர கத்தைக்கண்டு ஆனந்தமடையும்போது இந்தத் திவ்விய மங்கள விக்கிரகத்தின் சௌந்தரியம் அன்னியாதிருஷ்யம் நானெங்குங் கண்டறியேனே" என்கிறார்கள். "என்னமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று அவர்களுடைய ஆழ்வார்களில் ஒருவர் சொல்லிய வாக்கியத்தை இவ்விடத்தில் உதஹரிக்கவேண்டி யிருக்கிறது. தீபஹார்த்தி, கர்ப்பூரஹார்த்தி முதலிய உபசாரங்கள் கேவலம் விக்கிரகத்துக்குச் செய்யப்படுகிறதோ அல்லது நம்மவர் இப்போது வாதிக்கிறவாறு அதற்குள்ளிருக்கிற வேறு அதிருஷிய மான பதார்த்தத்துக்குச் செய்யப்படுகிறதோ வென்பதையுஞ் சற்றுக் கவனிக்கவேண்டியது. இயல்பிலே நமது கண்களுக்கு விளங்காத பொருளை ஆயிரம் விளக்கேற்றிப் பார்த்தாலும் விளங்காதல்லவா? ஆகையால் விக்கிரகங்களிலுள்ள மூலை முடக்குகளெல்லாம் நன்றாய் விளங்கவேண்டுமென்பதே தீபஹார்த்தி முதலிய உபசாரங்களின் உத்தேசியமென்பதிற் சந்தேகமோ? இவர்கள் தொழுவது விக்கிரகத் தையேயன்றி வேறொன்றையுமல்ல வென்பதற்குக் கோயில்களில் நடந்தேறிவரும் ஆசாரங்களில் எண்ணரிய திருஷ்டாந்தங்கள் தாமாய் விளங்குமாகையால், அதை யிவ்விடத்தில் விரித்துரைக்கவேண்டிய ஆவஸியகமில்லை. கேவலம் பிரபஞ்சவேதிகள்கூட பரப்பிரமத்தின் அபரிமித அனந்த கல்யாண குணங்களை ஒத்துக்கொள்ளுகிறார்கள். இவ்வாறு அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிற எண்ணரிய குணங்களில் ஒன்றையாவது விக்கிரகத்தில் காணக்கூடுமோ? ஒரு சாணிடத்திலடங்கும் இந்த அசேதன பதார்த்தத்துக்குச் சர்வவியா பகத்துவமேது? சர்வக்ஞத்துவமேது? நேற்றுத் தவலையாயும் இன்று விக்கிரகமாயும், நாளைத் தம்பலப்படிக்கமாயும் இன்னும் பற்பல அவதாரங்களெடுக்கும் இதற்கு பிறப்பும் இறப்பும் இல்லையெனப் பொருந்துமா? கட்டிய கட்டையவிழ்க்கவும் உருக்கவெடுக்குங் கன் னை யெதிர்க்கவும், ஒரு அடி நகரவும்மாட்டாத பொம்மையிடத்தில் சர்வஸக்தித்துவம் எப்படியிருக்கும்? இவ்வாறு இழுத்தவழியெல் லாம் ஆடுவதே பக்தபராதீனத்துவமென யாரேனுங் கூறுவார்களோ? அப்படியாகில், அது பக்தர் கையில் மாத்திரமேயன்றி மற்றவர் கை யிலு முற்றும் ஸ்வாதந்திரியமற்று பாரதந்திரியமுள்ளதாகவே யிருப் பதற்குக் காரணமென்னவாம்? ஒருவிதத்தில்மாத்திரம் பிரமத்துக் கும், பிம்பத்துக்கும் சாதிருஷிய முண்டெனில், நாங்கள் ஒத்துக் கொள்வோம். பிரமத்தின் கலியாண குணங்களையுஞ் சொல்விமுடி யாது. பிம்பத்தின் ஹேயகுணங்களையும் சொல்விமுடியாது. இது நிற்க,—

14. நமக்குள் ஒருவனையொருவர் முட்டாளே! நாயே! பேயே! என்றழைக்கும்போது, நமக்கு அசங்ஹியமான ஆக்கிரக முண்டாமெனில், ஞானனந்த ஸ்வரூபியாகிய கடவுளை நோக்கிக் கல்லே! மண்ணே! காணயே! என்பது மாத்திரமேயன்றி அவனை அவ்வாறே மதிப்போமாகில் அவர் திருவுளத்துக்கு எவ்விதமாய்ப் படவேண்டியதோ அதைச் சற்று கவனிக்கவேண்டியது. இதுபற்றியேயல்லவா பாகவதத்தில் இக்கொடியதொழிலை மற்ற உபாசனமார்க்கங்களுடன் ஒப்பிடும்போது,

"அகம் ஸர்வேஷு பூதேஷு பூதாத்மா வஸ்திதஸ் ஸதா,
தமவக்ஞாய மாமர்தயः குருதேர்சா வித்தம்பநம்."

இ—ள். நான் எப்போதும் சகல பூதங்களினும் அந்தராத்மாவாக வசித்துக்கொண்டிருக்கையில் மனிதன் அதையறியாமல் அர்ச்சையாகியபரிகாசத்துக்குஎன்னையுட்படுத்துகிறன்—என்றுசொல்லியிருக்கிறது. சிலர் குழந்தைகள் திட்டுவதைக் கேட்டுப் பெரியோர் கோபிப்பார்களோ, ஆகையால் நமது சரிதையைக் கண்டு கடவுளுங் கோபிக்காரென வாதிக்கலாம். குழந்தைகள் திட்டுக்குக் கோபமுண்டாகாமை மாத்திரமேயன்றி ஆனந்தமுண்டாவது முண்மையே. இதற்குக் காரணமென்னவென்று விசாரிக்கப் புகுங்கால், குழந்தைகளுக்குத் தாங்கள் சொல்லுஞ் சொற்கள் திட்டென்றுகூட அறிந்துகொள்ளக்கூடாத ஞானசூனியத்துவமேயென்று விளங்கும். பூரணக் ஞானமில்லாவிடினும் ஆறுவயதிற்கு மேற்பட்ட சிறுவர் சொல்லுந் துர்ப்பாஷியங்களால் கோபம் விளைகிறதல்லவா? அப்படியே நாமும் முற்றும் ஜடராயிருக்கும்பட்சத்தில் நாம் எப்படிச்செய்தாலும் பாதகமிராது. அப்படிக்கன்றி கடவுளானவர் தமது ஸ்வரூபத்தை விளக்க, வேதத்தையும் பிரபஞ்சத்தையும் அமைத்து அதை யறிந்து அநுஷ்டிக்க நமக்குப் புத்தியையும் சக்தியையும் அளித்திருக்கையில், அவருடைய ஸ்வரூபத்தின் தன்மை நமக்குத் தெரியாதென்றாவது தெரிந்திருந்தும் அநுஷ்டிக்கச் சக்தியில்லையென்றாவது சொல்வோமாகில் அது சமாதானமாய் ஏறுமோ? அப்படிக்காகில் உலகத்தில் ஒருவித பாபபுண்ணியமுமில்லை யென்றல்லவா சொல்லவேண்டும். சாதாரண விஷயங்களிலெல்லாம் இரவும் பகலு முயலுகிற நாம் அத்தியாவஸியகமான பகவத்தியானத்தைமாத்திரம் ஒருவிஷயமாக மதிக்காமலிருந்துவிட்டு அது கடுமையான மார்க்கமென்பது வெகு புதுமை!

15. சிலர் விக்கிரகத்தையே ஆராதிப்பதில்லையென்றும், அதற்குள் ஆரோபிக்கப்பட்டிருக்கும் பிரம்மத்தையே தொழுகிறோமென்றுஞ் சொல்லுகிறார்கள். சகல பூதங்களிலும் அந்தரியாமியாக இருக்கும் பிரமத்தை யாராதிக்கிறோமெனில், பிரயத்தனமின்றிப் பார்க்குமிடங்களிலெல்லாம் விசித்திர விநோதமான பூதங்களிருக்கையில் பிரயத்தின புரஸ்ஸரமாய் விசேஷ திரவியச் செலவுசெய்து விக்கி

ரகமென்னும் ஒரு பண்டத்தைப் படைப்பதற்கும், அதில் மந்திரங்களையோதிப் பிரமத்தை யாவாஹனஞ் செய்வதற்குங் காரணமென்ன? அப்படி யாவாஹனஞ் செய்யாதவனாயில், அந்தர்யாமியாகக்கூடப் பிரம்மம் அதிலில்லையென்றுவது அல்லது ஆவாகனஞ் செய்தபிறகு அதில் இரட்டிப்புப் பிரம்மம் இருக்கிறதென்றுவது சொல்லப் பொருந்துமோ? நம்மவர் மந்திரபலத்தால் பிரம்மத்தைக் கட்டி விக்கிரகத்துக்குள்ளடக்கச் சக்தரென்றே ஒப்புக்கொண்டபோதிலும், கடைசியில் அது விக்கிரகத்தைக்காட்டிலும் வேறான அதிருஷிப் பொருளென்னும்பக்ஷத்தில், அவ்விக்கிரகத்தால் அடையக்கூடிய பயனின்னதென்று விளங்கவில்லை. இரண்டாவது பிரம்மத்தை மனதினுலெட்டுவது கடினமாயிருக்கின்றமையால் அதற்குதவும் பொருட்டு விக்கிரகத்தை யவலம்பிப்பதாகச் சொல்லுகிறார்கள். குதிரையை முற்றுமறியாத ஒருவனுக்கு ஒரு குருவியைக் காட்டுவதினுற் பயனுண்டோ? அவ்விரண்டிற்கும் சிலவிஷயத்தில் சாம்மியமிருந்தபோதிலும், ஆவஸியகமான இரண்டொரு விஷயங்களில் சாதிருஷியமில்லாமையாலே குதிரை யிம்மாதிரியானதென்று விளக்கக் குருவி சமர்த்தமாகாதெனில், ஒருவிஷயத்திலாவது சாதிருஷியமற்றிருக்கும் இரண்டு பதார்த்தங்களில் ஒன்றையொன்று எப்படி விளக்கமாட்டும்? சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரகர்த்த திருக் சர்வக்கிய சர்வஸக்த அதிருஷிய அத்விதீய பரபுருஷனுக்குச் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார விஷயக்ஞான சூனிய சக்தியபாவதிருஷிய பலவற்றிலொன்றாகிய விக்கிரஹம் எப்படி அபிவியஞ்சகமாகுமோ எங்கள் புத்திக்கு எட்டவில்லை. நம்மவர்கள் சாமர்த்திய மெப்படிப்பட்டதென அறிந்துகொள்ளவேண்டியபோது கைநாட்டு (தற்குறி) போடு மடையனைக்கொண்டு அவர்களுடைய க்ஞானத்தை யறியக்கூடுமல்லவா!!! ஸாஜாத்திய மில்லாதவனாயில், ஒரு பொருள் மற்றொன்றின் ஸ்வரூபத்தை விளக்கச் சமர்த்தமாகமாட்டாதென்பது நிச்சயம். ஸர்வகுணோபேதமான பிரமத்துக்கும், சர்வகுணாபாவமான பிம்பத்துக்குமுள்ள வைஷம்மியத்தை விளக்க எங்கட்குச் சக்தியில்லாவிடினும், இதைப் படிக்கும் அன்பர்கள் ஊகித்து இக்குறையை பரிபூர்த்தி செய்வார்களென்று நம்புகிறோம்.

16. பலவித கவலையுடைய மனிதர் புத்தி சாதாரணமாய்த் தெய்வத்தை நாடாதாகையால் அவர்கட்கு ஞாபகமுண்டாக்கும்பொருட்டுக் கேவலம் ஒரு குறிக்கொம்பாகமாத்திரம் விக்கிரகம் வைக்கப்பட்டிருக்கிறதேயன்றி வேறல்லவென்று நம்மவர் வாதிக்கலாம். நம்மைச் சுற்றிலுமுள்ள சகல ஸ்தாவர ஜங்கமங்களும் இடைவிடாது கடவுளின் புகழைக் கோஷித்துக்கொண்டிருக்கையில், அவரிடத்து நமது கவனத்தைச் செலுத்த இவையெல்லாம் போதாமல் தனியாயொரு குறிக்கொம்பு வேண்டுமென்பது சூரியனைத் தேடிப்பிடிக்க விளக்கேற்றுவதுபோலும். இப்படிப்பட்ட குறிக்கொம்பு வேண்டியதேயென்று

ஸ்தாபிக்கப்பட்ட பக்ஷத்திலும், ஒழிந்தபோதெல்லாம் நினைவுவர வேண்டியதற்காக அவரவர் வசிக்குமிடத்திலல்லவா அதிருக்கவேண்டும்? அப்படிக்கன்றி, எப்போதோ ஒருக்கால்மாத்திரம் உதவும்படியாகக் கோயில்களில் அதை நட்டுவைப்பதிற் பயனென்ன? அந்தக் குறிக்கொம்பினால் எவ்வளவு ஞாபகம் வரக்கூடுமோ அவ்வளவு கோயிலுக்குப் போகப் பிரயத்தினப்படுவதினாலே யுண்டாகமாட்டாதோ? பிறகு பிரயாணப்பட்டுப் போகும்போது பந்தல் பரிவாரம், பாணமத்தாப்பு தீவட்டி, தோசை வடையோகனைகள் முதலிய உற்சவ விமர்சைகளை நினைத்துக்கொண்டும் வர்ணித்துக்கொண்டும் சென்று ஸ்தலத்தைச் சேர்ந்ததன்மேல், முதலில் வயிற்றுப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துவிட்டு, பிறகு கும்பலில் விழுந்து ஆணென்றும் பெண்ணென்றும் பாராமல் ஒருவர்மீதொருவர் உரைந்துகொண்டு கோயிலிற்புகுந்து கையிலுள்ள துட்டெல்லாம் கோயில் துறையாரென்னுங் கடனாளிக்குத் தொலைத்துவிட்டு, கர்ப்பூர தீபமேற்றி விக்கிரகத்திலுள்ள மேடுபள்ளம் ஆடையாபரணங்களையெல்லாம் கணக்கிட்டு மதிப்பிட்டுக்கொண்டு இழந்த பணத்துக்குப் பதில் துளசியுந் தீர்த்தமும், வில்வமும், விபூதியும் வாங்கிக்கொண்டு விக்கிரகத்துடன் கோலஞ்சென்று ஒவ்வொரு சிறப்பையும் பார்க்குந்தோறும், தேரிலுந் தாசியிலுந் திருவாரூர் சிறந்ததென்றும், தெருவில் திருவிடைமருதூர் சிறந்ததென்றும், பாணத்திற் பள்ளிகொண்டை சிரேஷ்டமென்றும், பாயசத்தில் புல்யாணி பேர்பெற்றதென்றும், இட்டலியிற் காஞ்சிபுரம் முதன்மையென்றும், தேங்குழலில் மன்னார்கோயில் சிறந்ததென்றும், ஞானோத்பாதகமான விசாரங்களைச் செய்துகொண்டுபோய் மண்டபப்படி சென்றவுடனே வெல்லப்பானையில் ஈமொய்ப்பதுபோல் கைநீட்டி மேல்விழுந்து பலவித ஓகனைகளைப் பெற்று குரங்குகளும் வெட்கும்படியாக மொக்கிவிட்டு மீந்த காசுக்குப் புஷ்பமுஞ் சந்தனமும் வாங்கித் தரித்துக்கொண்டு பரிமளிப்போர் சிலரும், ஓரெழுத்துந் தெரியாது உடலெல்லாஞ் சித்திரம் வைத்துத் திருவளூர்த் துளசியென்றும், திருப்பதி வடையென்றும், ஆழ்வார் புளியம்பட்டை யென்றும், ரங்கன் அபயஸ்தமென்றும், அமுதன் திருப்பவித்திரமென்றும், பழனி வில்வமென்றும், பலசரக்குச் செட்டியைப்போல பற்பல விதங்களான ஊசற்பண்டங்களெல்லா முடிந்தெடுத்துக்கொண்டு உற்சவம் வருமோவென்று ஏக்கமுற்றோடிவந்து, இந்திரனும் உங்கட்கீடோ சந்திரனும் உமக்குத் தாழ்வோ நீர் செய்யும் பாகவத ஆராதனத்தால் பலவித பாபங்களெல்லாம் புண்ணியமேயாகுமென்றும், இஞ்சிதின்ற குரங்குகள்போற் பற்களை இளித்துக்கொண்டு ஏமாந்தவர்களுக்குப் பூச்சுற்றி ஏறியவனாயில் நாஸ்துதி செய்து காசைக்கழட்டவருங் கபடகுலீனர்கள் சிலரும், கும்பலைத் தேடிவந்து ஒன்றுக்குப் பத்தாக விலைகூறி லாபம் பெறவரும் வர்த்தகர்கள் சிலரும், மன்மதன் நண்பராக மாதர்மதியைக் கெடுத்துத்

துட்டுக்கு ஆசைப்பட்டுத் துஷ்டர்வலையிற் சிக்கச்செய்து வயிறு வளர்க்கவரும் விழலர்கள் சிலரும், இன்ன மித்தன்மையான பல வகையாரும் உற்சவத்தை யலங்கரித்து ஞான விருத்திசெய்கிறார்க ளல்லவா? சத்பிரயோஜனம் யாதோ அறிகிலம். பகவந்நிக்கிரக மாத்திரங் கைகண்ட பலனாயிருக்கிறது.

17. இன்னும் நம்மவர்கள் இதர உத்கிருஷ்ட மார்க்கங்களுக்கு அர்ச்சையானது பிரதம சாதனமென்றும் ஒரு யுக்திவாதஞ் செய்கிறார்கள். "முதல்தரம் பண்டிதர்களெல்லாம் பால்யமுதல் யாவத் ஜீவமும், 70—80 வருஷகாலம் இந்த அர்ச்சையைக் கட்டிக் கொண்டு திரிந்தும், வேறு உத்கிருஷ்டமார்க்க மிருப்பதாயாவது, அதற்கு இது சாதனமென்றாவது மதிக்காமல், இதுவே பரமசாத்திய மென்று நம்பிக் காலத்தை யொழித்தார்களெனில், இது யார்விஷை யத்தில் சாதனமாய் வழங்கிற்றோ இந்தச் சாதனத்தால் இதர உத்கிரு ஷ்டமார்க்கங்களை யார் அடைந்தார்களோ தெரியவில்லை." மேலே விதந்துகாட்டியவற்றால் அர்ச்சையானது கடவுளின் கருத்துக்கும் அக்கருத்தை விளக்கும் வேதத்துக்கும் விரோதமான பிரபலபாதக மாயிருக்கிறதென்றே மெய்ப்படுகிறது.

18. அர்ச்சையை அவலம்பிப்பதினால் கடவுளுக்குப் பல விதத்திலும் பரிபவமுண்டாகிறது. விக்கிரகங்களில் பிரம்மத்தை ஆவாகனஞ் செய்வதினால் அவற்றில் அவர் ஆவிர்ப்பவிக்கவாவது இல்லாமலாவது இருக்கவேண்டுமேயன்றி வேறுவழியில்லை. ஆவிர்ப் பவித்த பக்ஷத்தில் சகல விக்கிரகங்களையும் சமமாய்க் கிரகிக்கவேண் டியதும், இல்லாதபக்ஷத்தில் அவற்றைச் சமமாய்த் தியக்ஷிக்க வேண் டியதும் யுக்தி யுக்தமாயிருக்கிறது. இப்படியிருக்கையில் இங்கிலீ ஷார் உத்தியோகங்களுக்குப் பலவித பரீக்ஷக ளேற்படுத்துவது போல நம்மவர் விக்கிரகங்களுக்குள் பலவித வகுப்புகளை யேற்ப டுத்தி யிருக்கிறார்கள். அவற்றுள் முதலாவது, ஆழ்வார்களால் பாடப்பெற்ற ஸ்தலங்கள் சர்வோத்கிருஷ்டமானவைகளென்று கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வாழ்வார்கள் தயை செய்து மன மிரங்கிப் பாடிப் பரிமளிக்கப்பட்ட ஸ்தலங்கள் நூற்றெட்டுண்டு. இதனால் ஆதியில் அர்ச்சையைப் பிராமணர்கள் அவலம்பிக்கவில்லை யென்றும், பிறகு தங்கள்பொருட்டோ பிறர்பொருட்டோ இந்த ஆழ் வார்கள் அதை யாதரித்ததன்மேல், சாதாரண ஜனங்கள் அதை யவ லம்பித்தார்களென்றும் ஏற்படுகிறதல்லவா?

அக்காலத்தில் கேவலம் பிராமணர் மாத்திரமேயன்றி கற்றுணர்ந்த சூத்திரர்களும் அதை யாக்ஷேபித்தார்களென்பதற்குப் போதுமான நிதர்சனங்களிருக்கின்றன. இவ்விஷையத்திற் பட்டணத்துப் பிள்ளை யுரைத்ததைக் கவனிக்கவேண்டியது:—

சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லிலும் மாசற்ற வாகாயந்தன்னிலும் ஆய்ந்து விட்டோர்
இல்லிலும் அன்பரிடத்திலும் ஈசனிருப்ப தல்லாற்
கல்லிலுஞ் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே.

உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகி லேனுயர் பொன்னெனவே
ஒளியிட்ட தாளிரண்டுள்ளே யிருந்ததுவ துண்மை யென்று
வெளியிட் டடைத்துவைத்தே னினிமே லொன்றும் வேண்டிலனே

சிவவாக்கியர்.

காணவேணு மென்றுநீர் கடல்கலைக ளோறுவீர்
ஆணவம தல்லவோ அறிவில்லாத மாந்தரே
வேணுமென்றவ் வீசர்பாத மெய்யுளே தரிப்பிரேல்
தாணுவாக நின்றஜீவன் றான்சிவம தாகுமே.

தீர்த்தலிங்க முத்தியென்று தேடியோடுந் தீதரே
தீர்த்தலிங்க முள்ளினின்ற ஜீவனைத் தெளியுமோ
தீர்த்தலிங்க மும்முளே தெளிந்துகாண வல்லிரேல்
தீர்த்தலிங்கந் தானதாய்ச் சிறந்ததே சிவாயமே.

ஆடுகொண்டு கூடுசெய் தமர்ந்திருக்கு மாறுபோல்
தேடுகின்ற செம்பினைத் திடப்படப் பரப்பியே
நாடுகின்ற தம்பிரானு நம்முளே யிருக்கவே
போடுபெத்திர பூஜையென்ன பூஜையென்ன பூஜையே.

நட்டகல்லு தெய்வமென்று நாலுபுட்பஞ் சாற்றுவார்
சுற்றிவந்து முணுமுணென்று சொல்லுமந்திர மேதடா
நட்டகல்லுப் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ.

இத்தன்மையான எண்ணிறந்த திருஷ்டாந்தங்களை யெடுத்துரைக்கக்கூடும். ஆயினும் விரிவிற்கஞ்சி யிம்மட்டோடே முடிக்கிறோம்.

19. இரண்டாவது, புராண ஸ்தலங்களெனச் சிலவுண்டு. பழைமை பற்றியோ, அல்லது நூதனமாய்க் கல்பிக்கப்பட்ட புராணங்களைப்பற்றியோ, அவற்றிற்குப் புராணஸ்தலமென்று பெயர் வந்திருக்க வேண்டும். பழைமை பற்றியெனில், ஆதியில் அங்கிகரிக்கக்கூடாத பதார்த்தம் பழமைப்படுந்தோறும் கிராஹியமாவதாய்ச் சொல்ல வேண்டியிருக்குமல்லவா? அப்படியாகில், தலைமுறை தலைமுறையாய்க் கொலைசெய்பவரை நிந்திக்காமல் கொண்டாட வல்லவர் வேண்டும். அல்லது விக்கிரகத்தில் ஏறியவுடனே தெய்வம் இளைசாயிருக்கின்றமையால் கிராஹியமல்லவென்றும், அத்தெய்வங் காலத்தாற் பழுத்து வயிரமேறுவதால் கிராஹியமென்றுங் கொள்ளவேண்டிய

தோ? புதிய ஸ்தலங்களை யம்மைபிடாரி கோயில்களுக்குச் சமான மாக மதிப்பதற்கும், பழையஸ்தலங்களிற் சமைக்கப்படும் சோற்றில் ஒரு பற்றுவது மீராமல் மொக்குவதற்கும் காரணமின்னதென்று எங் கட்கு விளங்கவில்லையாகையால், நம்மவர்கள் தயைசெய்து வெளி யிடுவார்களென்று நம்புகிறோம். இவ்வாறன்றிப் புராண ஆதாரத்தி னுலே அந்த ஸ்தலங்களுக்கு மகிமையென்னும் பக்ஷத்தில் இத்தன் மையான ஸ்தலங்களுக்கு ஆதாரமாகப் புராணமேற்படும் வழியைக் குறித்து முன்னமே யெச்சரித்திருக்கிறோம். இதனால் ஒரு கெட்ட காரியத்தின் சம்பந்தத்தால் மற்றொரு கெட்டகாரியஞ் சாதுவாகி விடுவதுபோலும். ஆதியில் கௌரவிக்காத இத்தன்மையான கோ யில்களே பிற்காலத்தில் புராணமென்னுந் தப்புத் தஸ்தவேசுகளைப் பற்றியல்லவா பரிமளிக்கின்றன. இதற்கெல்லாம் ஹேதுவில்லாமற் போகவில்லை. "சூடே சூட்டைத் தணிக்கிறது" என்பதுபோல ஒரு தோஷம் மற்றொன்றால் பரிஹரிக்கப்படுகிறதென்று நம்மவரைப் போன்றவர் கொள்வதும், அவர்களிடத்தில் ஞானோபதேசம் பெற்ற வர்கள் ஆதியில் தொடக்கும் பொய் வியாஜ்ஜியத்துக்குப் பரிஹாரமா கப் பிறகுபொய்த் தஸ்தவேசு சிருஷ்டிப்பதும் என்று கொள்ளவேண் டியதாகிறது. அதுநிற்க—

20. மூன்றாவது, அபிமான ஸ்தலங்களெனச் சிலவுண்டு. சாதா ரண ஜனங்களுக்குள் ஒருவர் சிபாரிசினால் மற்றொருவர் முன்னுக்கு வருவதுபோலவே தெய்வத்தின் விஷயத்திலும் கொள்ளவேண் டியதென வேற்படுகிறதல்லவா? தெய்வமும் பலவாகில் இவ்வாக்ஷே பம் ஜனிப்பதற்கிடமிராது. விக்கிரகத்தைப்பற்றினவுடனே நாங் கள் தெய்வத்தைப் பலவாகவே மதித்துவிட்டோமல்லவா என்பார் களாகில், இவ்வளவு க்ஞானபரிபாகத்தை யடைந்தவர்களோடு வாதாட எங்கட்குத் திறமில்லை. அர்ச்சையினால் விளைந்த அந்தப் பயன் அவர்கட்குச் சாசுவதமா யிருக்கவேண்டுமெனில், அதைத் தடுக்க எங்கட்கு அதிகாரமில்லாவிடினும் எங்கட்கு அந்த நற்பயன் வேண்டியதில்லை யென்றுமாத்திரம் வினயமா யெச்சரிக்கிறோம். ஏனெனில், அத்தன்மையான க்ஞானமின்றியே சகல யுக்திகளுக்குஞ் சுருதிகளுக்கும் இயைந்த மார்க்கத்தில் முயன்று, அந்த முயற்சிக்கு அநுகுணமான பயனையடைவதே யெங்களுக்குப் போதும்.

21. அரூபியாகிய கடவுளைத் தியானிக்கவாவது பூஜிக்கவாவது எங்களால் முடியுமோவெனில், எங்களினுந் தாழ்ந்தவர்களுக்கும் அது சுலபமாயிருக்குமாகையால் எங்களுக்கு அசாத்தியமாயிருக்குமென நம்பக்கூடவில்லை. முதலில் அவரை தியானிக்கும் வழியைக்குறித்து விசாரிப்போம். எவ்வித ரூபமுமற்றவருக்கு ஒரு ரூபமிருப்பதாய்ப் பாவித்து அந்த ரூபத்தைத் தியானிக்கத் தொடங்கினால் அது கடின மாகவேயிருக்கும். ஏனெனில், உள்ளதை உள்ளபடி நினைப்பதை

யும், சொல்வதையும்விட ஒன்றைப் புதிதாய்க் கல்பித்தல் உண்மையாகவே கடினமானதாயிருக்கும். அவர் நமது மனதுக்குமாத்திரம் விஷையமாவாரேயன்றிக் கண்களுக்கு விளங்கமாட்டாரெனச் சுருதி முறையிடுவதின் கருததெல்லாங்கூடி அவரை நமது பிரகிருத உடல் கூற்றுடன் பிரத்தியக்ஷமா யறியக்கூடாது. அநுமானத்தாலே யறிய வேண்டுமென்பதேயல்லவா? அநுமானமென்பது காரியகாரண சம்பந்தவிசாரம். ஆகையால் ஒருநாளுக்குமேல் நிலைக்காத ஒரு அற்பமானவும் அசேதனமானவும் புஷ்பத்தைச் சற்றுக் கவனமாய் நோக்குவோமாகில் பரப்பிரம்மமானவர் ஆயுதங்களும் அவயவங்களுமின்றியே அதற்குள் ஒளித்திருந்து மற்றவர்க்கெல்லாம் அசாத்தியமான ஸௌஷ்டவ, ஸௌகுமாரிய, சௌகந்திய, ஸாவர்ணியாதிகளை யதற்குத் தந்ததுமன்றி, அதற்குள் அணுரூபமான வொரு பழத்தையும், அப்பழத்துக்குள் பரமாணுரூபமாகக் காயிலை யரும்புமுதலிய அவயவங்களோடுகூடிய வெகு பெரிதான விருக்ஷத்தையும் அமைத்து, அவற்றின் விருத்திக்ஷயத்துக்குரிய சாமக்கிரிகளையும் வைத்திருப்பதுமான அவர்சக்திக்கு அளவில்லையென்று அறியமாட்டாதவரும் உலகத்திலுண்டோ? இவ்வாறு ஒருபொருளில் மாத்திரமன்றி அணுமுதல் அண்டபரியந்தமுள்ள அஸங்கியேய பதார்த்தங்க ளொவ்வொன்றிலும் இரவும் பகலுமின்றி யிருந்துகொண்டு அநிர்வாச்சியமான விவித விசித்திரங்களையும், சமுதாயப் பிரயோஜனங்களையுங் கைவிடாமல் முடிப்பதைக் கவனிக்கையில், அவருடைய சர்வக்கியதை, சர்வவியாபகத்துவம் முதலிய குணங்கள் வெளியாகுமல்லவா? ஒருவன் அடுத்து இரண்டு மூன்று விஷையங்களில் கவனத்தைச் செலுத்துவானாகில் அவனை அஷ்டாவதானியென்றும் சதாவதானியென்றுங் கொண்டாடித் துதிக்கிறோமல்லவா? ஏககாலத்தி லநந்த இடங்களிலிருந்து அனந்தாவதானஞ் செய்வதுமாத்திரமேயன்றி பரஸ்பர விரோதிகளாய்த்தோன்றும் அனந்த கல்யாண குணங்களையும் சமரசப்படுத்திக்கொண்டு நாம் செல்லுமிடமெல்லாந் தொடர்ந்து வந்து விசித்திர விததியைகளெல்லாம் கூலிகேட்காமலே யாடிக்கொண்டிருக்கும் கடவுளையறிதலும், கடினமாமோ? கடவுள் முடிக்கும் வித்தைகளனைத்தையும் நமது அற்பப் புத்தியாலே எட்டிமுடியாதாகிலும், மக்களெல்லாஞ் சேர்ந்து விளைக்கும் வித்தைகளெல்லாம் திரண்டாலும், கடவுள்புரியும் விந்தைகளில் அத்தியல்ப பாகத்துக்கும் ஈடாகமாட்டாதல்லவா? பிரமத்தின் தொழிலைக்கொண்டே யவரை யறிய வேண்டுமென்பது நாங்கள் கேவலம் யுத்தியாற்சொல்லும் வழியென நினைக்கவேண்டாம். ஆதிமுதல் பிரம்மநிச்சயத்தை யநுஷ்டித்தவர்களெல்லாம் இந்த மார்க்கத்தையே யநுசரித்ததாக சுருதியெங்கு முறையிடுகிறது. இதற்கு நிதர்சனமாகச் சாந்தோக்கிய உபநிஷத்திலிருந்து ஒரு பிரமாணமெடுத்துக் கூறுகிறோம்:—

22. 6–வது அத்தியாயம், 12, 13, 14–வது கண்டங்களில்—

"நயக்ரோத பலமத ஆகரேதி; இதம்பகவ இதி, பீந்திதி; பிந்நம்பகவ இதிः கிம்தர பஸ்யவீதி; கண்வ்ய இவேமாதா நாபகவ இதி; ஆஸாமம் கைகாம்பீந்தீதி; பிந்நபகவ இதி; கிமத்ர பஸ்யவீதி; கிம்தந நகபவ இதிः தகமஹோவாசः யம்வைஸோம்யை தமணிமாநம் நநிபாலயச. ஏதஸ்யவை ஸோம்யை ஷோணிம்ந ஏவமமஹாந்யக் ரோதஸ் திஷ்டதி. ஸரத்ததஸ்வ ஸோம்யேதி; ஸய ஏஷோணிமைத தாத்ம்ய மிததம் சர்வமதத் ஸத்யகம், ஸ ஆத்மா, தத்வமஸிஸ வேதகைதோ இதி, பூய ஏவமாபகவாந்விக் ஞாபயத் விதி; ததாஸோம் யைதி ஹோவா."

(இதன்பொருள்.) (உத்தாலகர் புத்திரனைப் பார்த்து) இந்த நியக்குரோத மரத்தின் பழமொன்று கொண்டுவாவென்றார். (புத்திரன்) இதோ கொண்டுவந்தேன் பகவானே யென்றார். (பிதா) அதை உடை யென்றார். (புத்திரன்) உடைத்தேன் பகவானே யென்றார். (பிதா) அதில் என்ன காணப்படுகிறதென்றார். (புத்திரன்) ஒரு சிறிய வித்துக் காணப்படுகிறதென்றார். (பிதா) அன்புள்ளவனே அதை உடையென்றார். (புத்திரன்) பகவானே இதோ உடைத்தேன் என்றார். (பிதா) அதில் என்ன காண்கிறா யென்றார். (புத்திரன்) ஒன்றுமில்லை பகவானே யென்றார். (பிதா) எதில் ஒன்றுங் காணப் படவில்லையோ அதில் ஒரு பெரிய நியக்குரோத மிருக்கிறது. அன்புள்ளவனே யதைக் கவனிப்பாயாக. இவற்றிற்கெல்லாம் ஆதார மாகிய அணு சத்தியம். அது ஜகத்துக்கெல்லாம் ஆத்மா. நீ யதுவா யிருக்கிறாய், சுவேத கேதுவே யென்றார். (புத்திரன்) அதை மறுபடி விளக்குவீராக என்று கேட்க, (பிதா) அப்படியே யென்றார்.—இவ் வாறாகவே அந்த ஆறும் அத்தியாய முழுவதிலும் தியான மார்க்க மிப்படிப்பட்டதென்றும் தெளிவாய்க் காட்டியிருக்கிறது.

(இந்தப் போதனையில் சில குறைபாடுள்ளன.)

23. இனித் தேவ வழிபாடு அல்லது பூஜாகைங்கிரியம் அல்லது தேவாராதனை யெப்படிப்பட்டதெனில்; — விலையுயர்ந்த பண்டங் களைக்கொண்டு அவரைத் தொழுவதினால் அவர் சந்துஷ்டியடை வாரென மயங்கவேண்டாம். இதுபற்றித்தான், பாகவதத்தில், "ஓ நிர்த்தோஷமானவனே! சகல பூதங்களுக்கும் அவமானம் விளையும் படியாக என்னை யர்ச்சையாக்கி உயர்ந்த பதார்த்தங்களைக்கொண்டு பூஜிப்பவரிடத்தில் நான் சந்தோஷ மடையவேமாட்டேன்" என்று சொல்லியிருக்கிறது; பலவித தீமையெல்லாம் புரிந்துவிட்டு உத்தி யோகஸ்தர்களுக்கு லஞ்சங்கொடுத்து நன்மை பெற்றுக்கொள்வது போலக் கடவுளுக்கும் பொருளளித்து ஏமாற்றிவிடலாமென்று நினைக்கவேண்டாம். அவரைத் தொழும் வழிதானென்னவெனில், நமது நிலைமையையும் அவர் தயையையும் மனதிற்கொண்டு, காமக் குரோதாதிகளுக்கு ஆட்பட்டு நாம் புரிந்த பாவத்தொழில்களைக்

குறித்து உண்மையாய் அநுதாபப்பட்டு அவற்றையெல்லாம் மன்னிக்கவேண்டுமென்று கசிந்துருகிப் பிரார்த்தித்து இனி நல்லவழியிற் செல்ல நற்புத்தி யளிக்கவேண்டுமெனக் கேட்டு; வாயினுற் கேட்டுக்கொண்டவாறே மனதினுற் சகல பிரயாசையும்பட்டுத் தீமையை யொழித்து நன்மையை இயற்ற முயன்று கடவுளின் கட்டளைகளைத் தவருது கைக்கொண்டு நடந்து அவரளிக்கு நன்மைகளுக்கெல்லாம் நமது நன்றியறிவை விளக்குவதே உண்மையான பூஜையாகும்.

"கசந்து பவத்தை யுணர்ந்து சொரி கண்ணீர்த் திருமஞ்சனமாட்டி
இசைந்த ஜெபமா லிகைசூட்டி யிதய பீடத்தினி திருத்தி
அசைந்திடாமெய் விசுவாச அன்பின் கிரியை நிவேதித்துப்
பசைந்த மனமோ டியேசுதிருப் பதம் பூஜியுமின் ஜகத்தீரே."

இது ஆத்மார்த்தமான மெய்த் தேவாராதனமன்ருே? பலவித ஸம்ஸாரபந்தங்களால் பாதிக்கப்பட்ட நமக்கு அவரை யிவ்வாறு நிரந்தரமாய் தியானிக்க முடியுமோ வெனவேண்டாம். அவருடைய சிருஷ்டியிலடங்கிய சகலவித பூதங்களும் குறைவின்றி வாழவேண்டியதே அவருடைய முக்கிய உத்தேசியமாகையால், பெற்ருேர், பிறந்தோர், மனைவி, மக்கள்மார், நண்பர், சுற்றத்தார், தேசத்தார், பிராணி, சாமான்யங்கள்முதலிய பலவகையாரிடத்தில் நமக்குள்ள பல படித்தான கடமைகளையும் உத்தரவாதங்களையும் மெய்மனச்சோர்வின்றிச் சத்தியமாயும் வஞ்சனையின்றியும் செலுத்துவதே நாம் கடவுளுக்குச் செய்யவேண்டிய பூஜையில்முக்கியமானபாகமாகும். நமதுகாயமுள்ளவரையில் காயிகமான தர்மங்களும் வியாபாரங்களும் ஒழியுமென்பது கனவிலு முடியாது. ஆகிலுங் கல்வியாலும், அப்பியாசத்தாலும் கூடியவரையில் அவற்றை நிக்கிரகித்துக் குற்றமற்றவரையில் அவற்றை யநுஷ்டித்துப் பாத்திரமறிந்து இரப்பவர்க்கிட்டுப் புலையுங் கொலையுங் களவுந் தவிர்ந்து நிலைபெற அறத்தின் நுட்பத்தையறிந்து நிலையாய் நடப்போமாயின், கடவுளிருப்பதாய் மதிக்காவிடினும்நமது தொழிலுக்கு அவர் கூலியளித்தே தீரவேண்டுமாகையால் நீதிதவருு ஒழுக்கமே நாம் அவருக்குச் செய்யும் பூஜைகளிலெல்லாம் சர்வ சிரேஷ்டமானதென்று ஏற்படுகிறது.

24. அர்ச்சையின் சம்பந்தமாக ஜாரத்துவக்கு எவ்வளவு ஆஸ்பதமுண்டாகிறதோ அதைச் சற்று கவனிக்கவேண்டியது. மனிதர் புத்தியையும் ஸ்வரூபத்தையுங் கெடுப்பதையே தங்களுக்கு ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கும் விலைமாதருக்கு விக்கிரகக்கோயிலை உறைவிடமாக்கியதால் விளையுந் தீமைகளை யெவ்வாறு மட்டுப்படுத்தி உரையிடக்கூடும்? அவர்களைக் கோயில்களில் சேர்த்துவைத்ததில் முதற்பிரயோஜன மென்னவெனில், முதல்தரம் பண்டிதர்கள்கூட விக்கிரகங்களை யவர்களுக்கு நாயகர்களாகவும் அவர்களை யவற்றிற்குக் கூத்தியாளாகவும் மதிக்கும்படியாயும், மனிதரில் ஒருவருக்

கொருவர் சொல்லிக்கொள்ளவும் லஜ்ஜைப்படுகிற ஹேயமான தொழிலை தெய்வத்தினிடத்திலும் ஆரோபிக்கவும் நேரிடுகிறது. அர்ச்சகர்க ளென்னும் சத்புருஷர்கள் அவற்றிற்குக் குமாஸ்தாவாகப் பக்தர் களுக்குப் பிரசாதமளிப்பதுபோல விலைமாதருக்கும் நாயகராக இருக்கிறார்களென்பது லோகப்பிரசித்தம். அவ்வாறிருப்பதே யவர் களுக்கு ஸ்வரூபமென ஸ்தாபிக்கும்பொருட்டு திருக்கண்ணபுரத்தார் உரைக்கும் ஒரு ஐதீஹத்தை யிவ்விடத்திற் கூறுகிறோம். அந்த ஸ்தலத்திலுள்ள ஒரு அர்ச்சகன் கோயிலுக்குவந்த புஷ்பத்தைத் தன் விலைமாதுக்களித்து அவள் சூடினமேல் அதை விக்கிரகத் துக்குச் சாற்றினதாயும் அதில் ஒரு உரோமமிருக்கக்கண்டு சந்தே கித்த மணியகாரன் அவனை விசாரிக்கும்போது அவன் விக்கிரகத் தின் தலையில் மயிர் முளைத்திருக்கிறதென்றதாயும், பிறகு அந்த விக்கிரகத்தைப் பரிசோதிக்குங்கால் அது தன் பக்தனாகிய அர்ச் சகனைக் காப்பாற்றும்பொருட்டு மயிர்த்தலையுடன் விளங்கினதாயும், ஆகையால் அதற்குச் சவரிராஜனென்கிற பெயர்வந்ததாயும் அந்த ஸ்தலத்தார் உரைக்குங் கதையைப் பலர் கேட்டிருப்பார்களே. மனோக்கியமான சரீரத்துடனும் அதிகுச்சிதமான அபிநயங்களுட னும் நடித்து அரை மனதுள்ளவரை யிழுத்து அடியோடு படுகுழி யிற் பாய்ச்சும் இக்கலியுக மிருத்துக்களின் சான்னித்தியத்தால் விளை யத்தக்க தீமைகளை நன்றாயறிய விரும்புவோர் திவ்வியஸ்தலங்களில் வசிக்குங் கோயில் துறையார் முதலிய மகாநுபாவருடைய சரிதை யைக் கவனித்தாலன்றி நன்றாய்த் தெளியமாட்டார்.

25. இத்தன்மையான நீசமார்க்கத்தைக் கோயில்களில் ஏற்படுத் துவானேனெனில், அதின்பொருட்டாவது பலர் கோயில்களுக்கு வருவார்களென்பதே அதின் உத்தேசியமென்று கோயில்களில் தொண்டுபட்ட பெரியோர்கள் விடையுரைக்கின்றனர். இவ்விதமான நீசவலைகள் வைத்துப் பிடிக்கத் தொடங்கினவரையில் அர்ச்சையை அவலம்பித்தவர் வெகு சிலர் என்று ஏற்படுகிறதல்லவா? கோயில்க ளாலும் தங்களாலும் ஜனங்களின் கொள்கையும் நடையுஞ் சீரடைந்து நீதி நிலைக்கவேண்டியதாயிருக்க, சுபாவத்தில் நல்ல நடத்தையுள்ள வர்களெல்லாம் கோயில்புகுந்தால் நடைகோணிச் சீரழியும்படி நேரி டுகிறதல்லவா? உண்மையான பக்தியுடன் கோயிலுக்கு வருவோர் வேசிகளை மதிக்கமாட்டார்களாகையால் இவர்களால் அவர்களுக்கு யாதொரு தீங்கும் விளையத்தக்கதில்லையெனச் சிலர் யுக்திவாதஞ் செய்கிறார்கள். யாருக்கு வேசிகளால் தீங்குவிளையாதோ அவர்க ளைக் கோயிலுக்கு ஆகர்ஷிக்கத் தாசிகள் ஆவஷியகமில்லையென்பதை மாத்திரம் கவனிப்போரில்லை. தாசிகளின் ஆகர்ஷணத்தினாற் கோயி லுக்கு வருவோர் தாசிகளைக்காட்டினும் வேறொன்றையுங் காணப் போகிறதில்லை. ஆகையால் அவர்கள் கோயிலுக்கு வந்தும் பயனில்லை. அவர்களை வியாஜமாகக்கொண்டே கோயிலுக்கு வருவோர் சற்றேயா

வது விக்கிரகத்தைப் பார்க்கும்படி நேரிடலாமேயெனச் சிலர் வாதிக்கின்றனர். வீட்டிற் பழகுந் தவலை செம்புகளெல்லாம் லோஹமயமாயிருக்கையில், வேசிகளுக் கடிமைப்பட்டாவது கோயிலிலுள்ள லோஹத்தைப் பார்ப்பதினூற் பயனென்ன? தாசிகளின் ரூபசௌந்தரியங்களிற் கருத்தாயிருப்பவன் ஒருவேளை விக்கிரகத்தைப் பார்த்தபோதிலும் அதன் வடிவுதவிர வேறொன்றும் அவன் மனதிற் செல்லாது. ஒருவேளை யதைத் தெய்வமென்று நினைத்தே பூஜிக்கத் தொடங்கினாலும், அப்போதுந் தன் பிராணநாயகிகளாகிய தாசிகளை நினைத்தே அவர்கள் நோயில்லா வாழ்வுடனும், குறையில்லாச் செல்வத்துடனும், மாறாத யௌவனத்துடனும், இணைபிரியாது தன்னுடனே யிருந்து இன்பந்தந்து தான் பரலோகஞ் செல்லுங்கால் அவர்களுங் கூட வரும்படியாக அநுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்வானேயன்றி வேறெதையாவது நினைப்பானெனக் கூடுமோ? இத்தன்மையானவர் பிரகிருதத்திற் பலருளரென்பதிற் சந்தேகிக்க வேண்டாம். கடைசியாய்ப் புத்தி குன்றியவருக்கே கோவில்களேற்பட்டதாய் ஒத்துக்கொள்ளும் நம்மவர் அத்தன்மையான புத்தி குன்றியவர் வேசிகட்குமாத்திரம் வசப்படமாட்டாரென்பது எவ்வளவு நேரோ எங்கள் மனதிற்கு எட்டவில்லை. புத்தியுள்ளவர்களெல்லாம் வேசிகளிணக்கத்தால் புத்திகெடுவார்களெனில், புத்தி குன்றியவர்கதி *கைமுதிக நியாயமா யிருக்கிறது.

26. கடைசியாய் இந்தக் கொடிய மார்க்கத்தினால் விளைகின்ற அளவற்ற தீமைகளை விரித்துரைக்க ஒரு புருஷாயுசும் போதாதாகையாலும், நாங்களெழுதிய புஸ்தகம் வெகு சிறிதாகையாலும், அதை யிவ்வளவுடன் சங்கிரஹித்து முடிக்கிறோம். நம்முடைய பிரகிருத தீனதசைக்கு இது ஒன்றே காரணமென்று நாங்களுரைக்கவில்லை. நம் பெண்பாலார் அநுபவிக்குந் துன்பங்கள் முதலிய இன்னும் பல காரணங்கள் இதன்பொருட்டுப் பிரவர்த்தித்தபோதிலும், அவற்றுள் இந்தப் பகவன்னிக்கிரகமே பிரதானமானதென்பது எங்கள் கருத்து. இச்சண்டாள மார்க்கத்தினாலல்லவா நமது ஐகமத்தியஞ் செத்து நாமெல்லாம் உயிர்ப்பிணங்களானோம்? முடிவில் நாம் நமது அறிவின்மையினாலாவது அயலார் மோசத்தினாலாவது மதிமோசம் போவது, மனிதராகிய நம்மியல்புக்குப் புதுமையல்ல. உண்மை வெளிவந்த இனியாகிலும் துரபிமானத்தைத் தூரவிட்டுத் தீரயோசித்ததின்மேல் பிறகாவது நம்மவர் இதுவரை யவலம்பித்த துர்மார்க்கத்துக்காக முழுகிவிட்டு நமது பெருங்காலத்தைப் பாழுக்கிறைத்தோமே யென்றநுதாபப்பட்டு சலிக்காத சன்மார்க்கத்தை யளிக்கவேண்டுமென்று அவ்வள்ளலைப் பிரார்த்திப்போமாக.

---

* கைமுதிக நியாயமாவது=சொல்லாமலே யறிந்துகொள்ளத்தக்கது. உ-ம். பிரகஸ்பதியும் பேச்சிற் றவறுவானானால் மற்றவர்களுக்குக் கேட்பானேன்? என்றாற் போல்வன.

27. சுபக்ஷத்துக்கு ஆதாரமாகிய மெய்ச்சுருதி இந்த விக்கிரக வணக்கத்தைப்பற்றி யெப்படியென்று கற்பிக்கிறதெனில்: கடவுள் சகல மனிதருக்கும் பொதுவாய் விதித்த கற்பனைகளில் ஒன்றாகவும், செய்யக்கூடாதென்ற விலக்குவிதிகளில் முக்கியமானதாயு முள்ள தென்பதற்குப் பிரமாணம்:—

என்னையன்றி உனக்கு வேறே தேவர்களுண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ யவைகளை நமஸ்கரிக்கவுஞ் சேவிக்கவும் வேண்டாம். யாத். 20: 3, 4, 5.

கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையுங் காணவில்லை. ஆகையால் நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொண்டு, ஆணுருவம், பெண்ணுருவம், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தினுருவம், ஆகாயத்திற் பறக்கிற யாதொரு செட்டையுள்ள பக்ஷியினுருவம், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியினுருவம், பூமியின்கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தினுருவமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும், உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின்கீழ் எங்குமிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வசேனைகளாகிய சந்திரசூரிய நக்ஷத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்களாத்துமாக்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். உபா. 4: 15–19.

28. விக்கிரக வணக்கந் தேவனுக்கு அருவருப்பானது என்பதற்குப் பிரமாணம்:—

அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியாற் சுட்டெரிக்கக்கடவாய். நீ அவைகளில் சிக்கிக்கொள்ளாதபடிக்கு அவைகளிலிருக்கிற வெள்ளியையும் பொன்னையும் இச்சியாமலும், அதை யெடுத்துக்கொள்ளாமலும் இருப்பாயாக; அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள். அவைகளைப்போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டு போகாயாக; அதைச் சீயென்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய், அது சாபத்துக்குள்ளானது. யாதொரு சிலையையும் நிறுத்தவேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார். உபா. 7: 25, 26; 16: 22.

சென்ற வாழ்நாட்காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டது போதும்; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும், துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம் பண்ணிக்

களியாட்டுச்செய்து வெறிகொண்டு அருவருப்பான விக்கிரக ஆராதனையைச் செய்துவந்தோம். அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு உங்களைத் தூஷிக்கிறார்கள். 1 பேது. 4: 3, 4,

ஆதலால், நீயென்னு இகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமான உன் கிரியைகளால் (விக்கிரகவணக்கத்தால்) நீ யென் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினபடியால் என் கண் உன்னைத் தப்பவிடாது, நான் உன்னைக் குறுகிப்போகப் பண்ணுவேன். எசேக். 5: 11.

29. விக்கிரக ஆராதனை தேவகோபத்தையும் சாபத்தையும் விளைவிக்கத்தக்க தென்பதற்குப் பிரமாணம்:—

அவர்கள் வேறே தேவர்களிடத்தில் (விக்கிரக தேவர்களிடத்தில்) திரும்பி, அவர்களைச் சேவித்து, எனக்குக் கோபமூட்டி, என் உடன்படிக்கையை மீறுவார்கள். உபா. 31: 20.

அந்த ஜனங்கள் நித்தம் என் சந்நிதியிலே கோபமுண்டாக்கித் தோட்டங்களிலே பலியிட்டுச் செங்கற்களின்மேல் தூபங்காட்டி. ஏசா. 6: 3.

அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும், அவைகளுக்கு ஆராதனை செய்யாமலும், அவைகளைப் பணியாமலுமிருந்து, நான் உங்களுக்குத் தீமை (தண்டனை) செய்யாதபடிக்கு உங்கள் கைகளின் செய்கைகளால் (விக்கிரக வணக்கத்தால்) எனக்குக் கோபமுண்டாக்காமலுமிருங்கள். எரே. 25: 6.

கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால்செய்யப்பட்டதும்வார்ப்பிக்கப்பட்டதுமானயாதொரு விக்கிரகத்தை யுண்டுபண்ணி ஒளிப்பிடத்தில் வைக்கிறவன் சபிக்கப்பட்டவன். உபா. 27: 15.

30. விக்கிரகத்தொழும்பர் இத்தகையரென்றும், விக்கிரகத்தின் அமைவு இவையென்றுங் காட்டுகிற பிரமாணங்கள்:—

விக்கிரகங்களை யுருவாக்குகிற யாவரும் வீணர்; அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது; அவைகள் ஒன்றுங்காணாமலும் ஒன்றுமறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாக்ஷிகளாயிருக்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்? இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள்; தொழிலாளிகள் நரஜீவன்கள்தானே; அவர்களெல்லாருங் கூடிவந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாய்த் திகைத்து வெட்கப்படுவார்கள். ஏசா. 44: 9, 10, 11.

கொல்லன் இரும்பைக் குறட்டால் இடுக்கி, உலையிலே காயவைத்துச் சுத்திகளால் அதை உருவாக்கித் தன் புயபலத்தாலதைப் பணிப்படுத்துகிறான்; பட்டினியாயிருந்து பெலனற்றுப் போகி

ருன்; தண்ணீர் குடியாமற் களைத்துப்போகிருன். தச்சன் நூல் பிடித்து, மட்டப்பலகையால் மரத்துக்குக் குறிபோட்டு, உளிகளினுல் உருப்படுத்திக், கவராசத்தினுல் அதை வகுத்து, மனுஷசாயலாக மனுஷரூபத்தின்படி உருவமாக்குகிருன்; அதைக் கோவிலிலே நாட்டிவைக்கிருன். அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிருன்; ஒரு மருதமரத்தையாவது, ஒரு கர்வாலிமரத்தையாவது தெரிந்துகொண்டு, காட்டுமரங்களிலே பெலத்தமரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிருன்; அல்லது அசோகமரத்தை நடுகிருன், மழையதை வளரச் செய்யும். மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளிலெடுத்துக் குளிர்காய்கிருன்; நெருப்பைமூட்டி அப்பமும் சுடுகிருன்; அதினுல் ஒரு தெய்வத்தையு முண்டுபண்ணி, அதைப் பணிந்துகொள்ளுகிருன்; ஒரு விக்கிரகத்தையும் அதனுற்செய்து, அதை வணங்குகிருன். அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிருன்; ஒரு துண்டினுல் இறைச்சியைச் சமைத்துப் புசித்துப் பொரியலைப் பொரித்துத் திருப்தியாகிக் குளிருங்காய்ந்து: ஆ! ஆ! அனலானேன்; நெருப்பைக்கண்டேனென்று சொல்லி, அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரகதெய்வமாகச் செய்து, அதற்குமுன் விழுந்து, அதை வணங்கி: நீ யென் தெய்வம், என்னை ரக்ஷிக்கவேண்டுமென்று அதை நோக்கி மன்ருடுகிருன். அறியாமலும் உணராமலு மிருக்கிருர்கள்; காணுதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது. அதில் பாதியை அடுப்பில் எரித்தேன்; அதின் தழலின்மேல் அப்பத்தையுஞ் சுட்டு, இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன்; அதில் மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரகமாக்கலாமா? ஒரு மரக்கட்டையை வணங்கலாமாவென்று சொல்லத் தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை; அம்மாத்திரம் அறிவும் ஸ்வரணையுமில்லை. அவன் சாம்பலை மேய்கிருன்; வஞ்சிக்கப்பட்ட மனம் அவனை மோசப்படுத்தினது; அவன் தன் ஆத்துமாவைத் தப்புவிக்காமலும்: என் வலதுகையில் அபத்தமல்லவோ இருக்கிறதென்று சொல்லாமலு மிருக்கிருன். ஏசா. 44: 12–20.

31. விக்கிரகத்தொழும்பு உணர்வற்றதும் அவிவேகமுமான செய்கையென்று காட்டுகிற பிரமாணங்கள்:—

அவர்கள் விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிருந்துங் காணுது. அவைகளுக்குக் காதுகளிருந்துங் கேளாது; அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்குக் கைகளிருந்துந் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையாற் சத்தமிடவுமாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப்போலவே யிருக்கிருர்கள். சங். 115: 4–8.

32. விக்கிரக தேவாலயங்களின் ஒழிவைப்பற்றி மெய்ச்சுருதி வெகுதிட்டமாய் வற்புறுத்திக் காட்டுகிற பிரமாணங்கள்:—

மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான். ஏசா. 2: 21.

இந்த வாக்கியம் கிறிஸ்துவுக்குமுன் 700—ம் வருஷத்தில் ஏசாயா தீர்க்கதரிசியினு லெழுதப்பட்டது. எழுதி நாளதுவரை 2655 வருஷமாகிறது. இந்துதேசத்தில் விக்கிரகக்கோவில்கள் உண்டாவதற்கு ஏகதேசம் 600 அல்லது 700 வருஷங்களுக்கு முன்னுள்ள தீர்க்கதரிசனமென்று நிதானிக்க இடமிருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசன வாக்கியம் மற்றைய தேசங்களில் நிறைவேறிவருகிற விர்த்தாந்தங்களை யீண்டெடுத்துக் கூறுவதில் இத்தேசஸ்தருக்கு அவ்வளவு திர்ப்தியுண்டாகாதென அதைவிடுத்து இந்த இந்துதேசத்திலேயே அந்த வாக்கியம் நிறைவேறிவருகிறதைக் கைநெல்லிக் கனிபோல விளங்கக்காட்டுவாம்.

பூர்வீகத்தில் சென்னபட்டணத்துக்கு தெற்காயுள்ள சதுரங்க பட்டணத்தையடுத்து அகோபலம் அல்லது அகோபளம் என்ற பெயருள்ளதும், அக்காலத்து அதிக பிரபலமுள்ளதுமான வொரு விஷ்ணுஸ்தலத்தில் சமுத்திரதீரத்தை யொட்டியிருந்த வொரு மலையைக்குடைந்து வெகுவிநோதமான வேலைப்பாடுள்ளதாய் விஷ்ணு சமய ஐதீகங்களுக்கு ஒத்ததாய் அந்த மலைச்சுவரில் மகாதிறமையுள்ள சிற்பர்களால் சமைத்த அநேக விக்கிரகங்கள் நிறைந்த கோவில் ஒன்று உண்டுபட்டிருந்தது. அக்காலத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள சைவ வைஷ்ணவ முதலிய சமயத்தவரெவரும் ஸ்தல யாத்திரை செய்துவந்து இந்த அகோபள ஸ்தலத்திலுள்ள நரசிங்கப் பெருமாளை வெகு கொண்டாட்டமாகச் சேவித்து வணங்கி யாராதித்து வந்திருக்கிறுர்கள். இப்போது அந்த க்ஷேத்திரமெங்கே? "ஆறு கொண்டது பாதி, தூறுகொண்டது பாதி" யென்றவண்ணமாய்ச்சமுத்திர தீரத்தலையால் மொத்துண்டு மொத்துண்டு பெருமாள் குடிபோய் விட்டார்போலும். பிரபலமான அந்த க்ஷேத்திரம் சில நூறு வருஷங்களாகப் பாழ்பட்டுக்கிடக்கின்றது பலருமறிந்த விஷயம். அல்லாமல் வைஷ்ணவ சமய சத்துருவாயிருந்த சோழதேசத்தரசன் ஒருவன்காலத்தில் அநேகமான விஷ்ணு ஸ்தலங்களை யிடித்துப் பாழாக்கினுன். இதுவும் லோகப்பிரசித்தம். மகம்மதியர் அரசாண்ட காலத்து இடிபட்டுப்பாழான சிவஸ்தலங்களெத்தனை? விஷ்ணு ஸ்தலங்களெத்தனை கணக்குண்டா? கணக்கிட்டால் இந்தியா முழுக்கவும் பாழ்பட்டுக்கிடக்கிற விக்கிரக ஆலயங்களெத்தனையென்று அறியக்கூடும். இவ்வகையாக மெய்வேதத்தில் ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வாக்கியத்தின்படி நிறைவேறியுமிருக்கிறது, நிறைவேறியும்வருகிறது என்று தெளிவாய் அறிந்துகொள்ளலாம்.

33. மேலே விளங்கக்காட்டிய வேதவாக்கியங்களில் திரிகால நியந்தாவாயிருக்கிற சர்வக்ஞானமுள்ள தேவன் முற்கூட்டியே உற்பாதமாக விதிநிஷேதப் பிரமாணங்களை ஜநநங்களுக்கு ஏற் படுத்திய அன்றே விக்கிரகவணக்கம் விலக்கப்பட்டுள்ளதென்றும், இந்தப் பிரமாணத்தை மீறுவது உணர்வற்றதும் அவிவேகமும் வீணத் தனமுமான செய்கையென்றும், அதற்கு வரத்தக்கசாபமோ தண்டனை யோ கெடுதிகளோ பொல்லாங்குகளோ அப்பாலுள்ளகதியோ ஆகிய இத்திறத்த துர்ப்பலன்கள் இவையென்றும், இந்த நீசத்தனமான வணக்கத்தைத் தேவன் பகைத்து அருவருத்து வெறுக்கிறாரென்றும், இந்தத் துர்ச்சீலத்தைக் கட்டோடே தள்ளிவிட்டு மனந்திரும்பி மெய்த் தெய்வ வழிபாட்டுநெறியை அதாவது தியானமார்க்கத்தைப் பிடிப்ப வருக்குத் தேவ ஆசீர்வாத முண்டாகுமென்றும், விக்கிரக ஆலயங் களுக்கு வரப்போகிறகதி இவ்வாறென்றும் மிகத்தெளிவாய்ப் புலப் படுகிறது. இந்தப் பிரிவில் இம்மட்டும் விக்கிரக ஆராதனையைப் பற்றி மெய்வேதத்தின் கருத்து இத்தகைத்தென விதந்தோதினும். இனிப் பொதுவான நியாயங்கள் சில ஈண்டு கூறுகின்றும். அவற்றுள்:

34. மெய்த்தேவனையன்றி மற்றவர்களையாவது யாதொரு விக்கிர கத்தையாவது வணங்குவது மகா பாவம். எப்படியெனில், தேவ கட்டளையை மீறிச் செய்யுங்கிரியைகளே பாவமாம். விக்கிரகவணக் கம் தேவகற்பனைக்கு விரோதம். ஆதலாலது பாவம்.

35. நம்முடைய மனசுக்கும் அறிவுக்கு மெட்டாத அதரிசன மாகிய கடவுளின் சுபாபத்தைப்பற்றி நாம் அறியவிரும்பினால் தெய் வம் வெளிப்படுத்திய வேதஞ்சொல்லுகிறதையே நம்பி நாம் மனத்தி யானஞ்செய்து திரிகாணசுத்தியாய் வணக்கஞ் செலுத்தவேண்டிய தேயல்லாமல் அதைவிட்டு யானைத்தலையையாவது காளியின் நீண்ட நாக்கையாவது சிவலிங்கவடிவத்தையாவது (சிவனுடைய ஆண்குறி) தெய்வத்துக்கு அறிகுறியாகக்கொண்டு தியானம் பண்ணினால் கண் ணாரப் பிரத்தியக்ஷத்திற் கண்டகாட்சிப்பொருளேயன்றி வேறென்ன மனதில் உறுதியாய்ப் பதியத்தக்கது? யானையைப்பார்த்தால் யானை யையேயன்றிப் பிறிதொன்றை யெப்படி நமக்கு விளக்கிக்கொள்ளக் கூடும்? அப்படியே பெண்குறி யாண்குறியைக் குறியாகக்கொண்டு தியானிப்பவர் மனசுக்கு அருவருப்புத் தோன்றுமேயன்றிக் கடவு ளைத் தியானிக்க மனஸை யெழுப்பிவிடுவதில்லை. நல்லது, வாயுவை யெந்தப்பொருளினாற் குறிக்கலாம்? ஒருபொருளாலுங் குறிக்கக் கூடாதேயாகில் அரூபவஸ்துவாய் எங்கும் நிறைந்தும் எவற்றோடுந் தாக்கற்ற பரிபூரணமான வஸ்துவை விக்கிரகங்களாற் குறிப்பிட்டு வணங்குவது அபுத்திபூர்வமென்பதற்கு ஆடங்கமென்னை?

நமது புத்திக்கெட்டாத சர்வக்ஞானம், சர்வவல்லமை, நீதி, இரக் கமுதலிய திவ்விய லக்ஷணங்களையுடைய மகா பரிசுத்த தேவனைத் தியானித்து மானதமாக வணங்கித் தொழுவதோ, விக்கிரகத்தை நோக்

கித் தேவனேயென்று எண்ணுவதோ, எது எளிது? கல், மரம், பொன் முதலிய வஸ்துக்கள் தேவலக்ஷண முடையனவாமென்று நினைப்பதே அரிது.

36. விக்கிரகம் தேவனல்ல. அதிலே தேவனை மந்திரத்தினால் ஆவாகனம் பண்ணினபின்புதான் தேவன் அதிலே வருகிறாரென்று விக்கிரக பக்திக்காரர் சொல்லுகிறார்கள். அது மெய்யானால் பிரதிஷ்டைபண்ணப்பட்டுத் தேவதாவாகனஞ் செய்யப்பெற்ற கல் முதலிய விக்கிரகங்கள் அப்படியல்லாத மற்றுங் கல் முதலியவைகளைப்போலவே பஞ்சேந்திரியங்க ளற்றுக்கிடப்பதும், தங்களுக்கு வருமோசங்களுக்கு விலக்கிக்கொள்ள ஏலாதிருப்பதும் என்ன? சங். 115: 2–8.

அற்பவல்லமையுள்ள ஆத்துமா புகுந்திருப்பதினால் தேகம் ஐம்புல நுகர்ச்சிபெற்று அதிசய இயக்கங்கொண்டிருக்குமெனில், சர்வ வல்லமையுள்ள கடவுள் கல்லினுட் புகுந்திருந்தால் அந்தக்கல் சும்மா விருக்குமோ? விக்கிரகங்களுக்குள் மந்திராவாகனத்தினால் தேவன் புகுந்திருக்கிறாரெனில், அவ்விக்கிரகங்களை யேன் இயங்கப்பண்ணாதிருக்கிறார். இயங்கப்பண்ணாதபொழுதே தேவன் அவற்றுட் புகுந்திருக்கிறதில்லையென்று நம்புவதற்குத் தடையென்ன?

இப்படியே உயிரற்ற விக்கிரகத்தை ஸ்நானஞ்செய்வித்து வஸ்திரம் உடுத்தி யலங்கரித்துச் சோடச வுபசாரங்கொடுத்து ரதத்தின் மேலேற்றி வீதிவலம் வருவித்து விழவுகொண்டாடுவது ஜநநங்களுக்கு வீண்பொரு ளிழவேயன்றி அது தெய்வவழிபாடாகுமா? ஒருக்காலும் ஆகாது. ஆனால் பாமரஜனங்களுக்கு விநோதமும் வேடிக்கையுமான கொண்டாட்டமாகும்.

சர்வ வியாபகரான கிருபையுள்ள தேவனை நாம் இருதயத்தால் வணங்கி மனதினால் தியானித்து அவரால் நாம் அடையவேண்டிய தயவுகளை விண்ணப்பங்களால் வேண்டிக்கொள்வதே நமக்கு வேண்டியது. அதைவிட்டுச் சோமசூரியாக்கினி முதலியவைகளையும் கல் மர முதலியவற்றா லுருப்படுத்திய விக்கிரகங்களையும் நோக்கி வாயும் மனமும் புண்படத்தக்கதாகக் குழறி எவ்வளவு பக்தியுடனே யிரந்து வேண்டினாலும் அவ்விண்ணப்பங்களைக் கேட்கவும் அருள்செய்யவும் அவைகளுக்குச் சக்தியில்லையே, "விடிய விடிய மழைபெய்யினும் ஓட்டாங் கிளிஞ்சில் கரைவதுண்டோ."

தேவனோ எங்கும் வியாபித்துச் சருவஞான முடையராயிருக்கின்றனராதலால், நாம் தம்மைநோக்கி விசுவாசபக்தியுடனே நமக்கு வேண்டிய காரியங்களை யிரந்துகேட்டால் அவ்வேண்டுதல்களைக்கேட்கவும் அருள்புரியவும் வல்லவராயிருக்கிறார். ஆதலால், அவரை நோக்கிச் சிந்தாத்தியானஞ்செய்து ஜெபஸ்தோத்திரஞ் செலுத்துவதே உத்தமம்.

இத்தேசத்தை யரசாளுகிற நமது சக்கரவர்த்தினியாகிய விக்டோரியாள் என்பவர் அங்கிலோ தேசத்தில் வசிக்கின்றார். அவரை

யெத்தேசத்தவரென்றும் எங்கேயிருக்கிருரென்றும், எவ்வளவு உபாயமாக ராஜ்யபாரந் தாங்கிவருகிருரென்றும், எப்படிப்பட்டவரென்றும், பிரஜைகள் யாவரும் அறிந்ததில்லை. ஆயினும் அந்தச் சக்கரவர்த்தியிருந்து அரசுபுரிவதை யறியாதவன் யாவன்? எவர்களுமறிவார்களே. அவ்வாறே தேவனைக் காணுதிருந்தும் அவரே நம்மையும் இப்பிரபஞ்சத்தையும் உண்டாக்கி ஆண்டுகொள்ளுகிருர். இதை யல்லவென்பான் யாவன்? இப்படியிருக்க, விக்கிரகங்களையும் நீச விலங்குகளையும் மானிடரிற் சிரேஷ்டமாயிருந்தவர்களையும் பேய்களையும் வணங்குவது மகாபாவமல்லவா? இவைகளைத்தள்ளித் தேவன் ஒருவரைத் தொழுதுகொள்வதே மானுஷ்ய கடமை. தேவனொருவரையன்றி வேறு யாதாயினுமொன்றைவணங்கினுல் அது விபசாரஞ் செய்வதற்கு ஒப்பாகவேயிருக்கும். ஏசா. 50: 1. எரே. 3: 1–5.

37. இவ்வண்ணமே சங்கராசாரியார், சிவவாக்கியர், பட்டணத்துப்பிள்ளை முதலான இந்து ஞானிகளும் விக்கிரகாராதனை தவறுனதென்று சொல்லியிருக்கிருர்கள். அவைகளை ஈண்டுரைக்கிற் பெருகும். அல்லாமல் அகச்சமயநூலும்—

“விக்கிரகநம் மிணையாக்கி விழுந்து வணங்கும் விழலனாநம்
உக்கிரகோபந் தகிக்குமென உரைத்த கடவுள் உமைமுழுதும்
நிக்கிரகஞ்செய் திடுமுன்னர் நீச வுருவா ராதனமாம்
அக்கிரமம்விட் டியேசுதிரு வடியை யடைமின் ஜகத்தீரே.

கல்லைச் செம்பைக் களிமண்ணைக் கடவுளெனவே யுருப்பிடித்துப்
புல்லைப் பூவை நறுங்குழையைப் போட்டுப்பூஜை புரிவீர்காள்
தொல்லைப் பவமும் புரிபவமுந் தொலையுமாறு கிறிஸ்துவெனும்
செல்வக் குமரன் திருவடியைச் சேரவாரும் ஜகத்தீரே.

மண்ணை மணலைச் சிவலிங்க வடிவாய்சமைத்து மலர்தூவி
எண்ணமின்றி மந்திரஞ்சற் றியம்பிப் பழம்பாட் டுகள்பாடிப்
பண்ணும்பூஜை பயன்படுமோ பரவை கடக்கக் கற்புணைகொண்
டொண்ணுமோ ரக்ஷண்யகலத் துவந்து புகுமின் ஜகத்தீரே”

என்று கூறுகிறது, உய்த்துணர்ந்துகொள்க.

விக்கிரக தேவ வணக்கம், பரபக்ஷநிராகரணம் முற்றிற்று.

பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

16-ம் அத்தியாயம்.

சுபக்ஷஸ்தாபனம்.

1. சுபக்ஷத்துக்கு கிறிஸ்துசமயம், இரக்ஷணியசமயம், கிறிஸ்துமார்க்கம், சத்திய வேதமார்க்கம், நித்திய ஜீவமார்க்கம், மோக்ஷமார்க்கம், ஈடேற்ற மார்க்கம் என்ற பெயர்களும் இவைபோன்ற சில காரணப்பெயர்களும் வழங்குகின்றன. இந்தச் சமயத்துக்குக் கடவுள் திரியேக தேவன். இவருக்கு இவர் அநுக்ஞை பெற்றெழுதிய மெய்வேதத்தில் சில திருநாமங்கள் வழங்குகின்றன. அவற்றுள்:

(1.) ஜெகோவாவென்பதே பிரதான திருநாமம். இந்த மகத்தான திருநாமம் மற்றெந்த வஸ்துக்களுக்காவது தேவர்களுக்காவது வேறெதற்காவது வழங்கப்படுவதன்று. இது மூலபாஷைச் சொல். இதற்கு ஆதிமத்தியாந்தரகிதர், அநாதி நித்திய ஸ்வயம்பு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் தாமாயிருக்கிறவ ரென்பதே பொருள். யாத். 6: 3. ஏசா. 42: 8.

(2.) ஏலோகீம், பலமுள்ள மூலகாரணவஸ்து என்பது அதன் பொருள். மூலபாஷையில் இந்தப் பெயர் பன்மை விகுதிபெற்றது.

(3.) அதோனு, ஆளுகிறவர், ஆண்டவர் என்பது அதன் பொருள்.

(4.) மேற்காட்டியவைகள்தவிர ஜெகோவாமுதலிய பெயர்களுக்குப் பதிலாகத் தமிழில் பராபரன், தேவன், கர்த்தர், ஆண்டவர் என்ற பெயர்களும் வழங்குகின்றன. இவைகளல்லாமல் கடவுள், ஆதி, பரமன், பரன், ஈசன், ஈசுரன், சர்வேசன், சர்வேசுரன், ஜெகதீசன், முதல்வன், ஸ்வாமிமுதலிய பொதுப்பெயர்களும், பிதா, சிருஷ்டிகர், இரக்ஷகர், நித்தியர் என்ற சிறப்புப்பெயர்களும் வழங்குகின்றன. அன்றியும் அவருடைய அதிபாரிசுத்த முதலிய திவ்விய மங்களகுண விபவங்களை விளக்கி வழங்குகிற திருநாமங்களும் திருச்சபையில் தொன்றுதொட்டு வழங்கிவருகின்றன.

2. திரியேக தேவன் என்ற இந்தத் திருநாமம் மனிதர் மனதுக்கும் புத்திக்கு மெட்டாத பரம ரகஸியமானது. ஆயினும் மனதுக்காவது புத்திக்காவது விரோதமானதன்று. மெய்ச்சுருதியில் கடவுளைத் தனியேகவஸ்துவென்றும், அந்த வஸ்துவே மூன்றுதத்துவங்களுள்ள ஒரு பொருளென்றும், அந்தத் தத்துவங்கள் தம்மில் நிருவிகற்பாயுள்ள ஏகவஸ்துவே யென்றும், ஆதலால் தேவன் ஒருவரேயன்றி மூவரல்ல ரென்றும், திரித்துவராய மூவரில் ஒருவர் முந்தினவருமல்லர் பிந்தின

வருமல்லர், ஒருவரிலொருவர் பெரியவருமல்லர் சிறியவருமல்லர், மூவரும் சமநித்தியரும் சரிசமானருமா மென்றும் வெளிப்பட்டிருக்கிறது. ஆதலில் அவ்வாறு விசுவாசித்து வழிபட்டு ஈடேற்றத்துக்கு அருகராக முயலவேண்டுவதே மனிதர் கடமை. வேதந் தெய்வீக அதிகாரமுள்ளதா இல்லதா வென்பதைப்பற்றி மாத்திரம் தீரத் தெளிய ஆராய்ச்சிசெய்து தெய்வீகமுள்ளதென்று கண்டால் அதற்குக் குறுக்கு நினையாமல் திரிகரணசுத்தியோடு அநுஷ்டிக்கவேண்டியதுதான் அவசரம். மனிதரெவரும் பூரணருமல்லர் சர்வக்ஞருமல்லர்; எல்லாவகையிலுங் குறைவுள்ளவர். ஆதலில் "நாழிமுகவாது நானுழி" என்பதையும், "எல்லாம் அறிந்தவருமில்லர்," "ஒன்றும் அறியாதவருமில்லர்" என்பதையும் நினைத்துத் தேவவசனத்துக்கேற்கச் செய்காரியம் தவிர்காரியங்களை நிர்ணயிக்கவேண்டும். இதைவிட்டு நம்முடைய சக்திக்கும் அறிவிற்கும் அடாதபிரகாரம் பரமரகசியத்தைத் தெளிவா யறியவேண்டுமென்று முயற்றல் வீண். "நரிவாலைக்கொண்டோ கடலாழம் பார்ப்பது?"

3. கடவுள் திரியேக வஸ்துவாயிருக்கிறாரென்கிற இந்தப் பரமார்த்த நிஷ்கருஷத்தை நாம் சிருஷ்டிகளினாலுமல்ல, நம்முடைய புத்தியினாலுமல்ல, அவர் அநுக்ஞை கொண்டெழுதிய வேதத்தினால் மாத்திரம் அறிந்திருக்கிறோம். வேதமானது தேவ அநுக்ஞை பெற்றெழுதியதுதானென்னு முண்மை வேத நிர்ணயப்பிரகாணத்துத் தெளிவாய் வெளிப்படும். அதை யுய்த்துணர்க. அவ்வாறு தெள்ளிதினுணர்ந்து வேதந்தெரிக்கும் சத்தியத்தை நாம் சந்தேகியாமல் நம்பி விசுவசிக்கவேண்டுவது கிஞ்சிக்ஞத்துவராய மானிடப்பிரஜைகளுக்கெல்லாம் கடமை. மனிதருக்கு மனிதர் தம் உள்ளத்தை வெளிப்படுத்தாவிடில் ஒருவர் கருத்தை யொருவர் அறிந்துகொள்ளக் கூடாதே. அப்படியிருக்க, அதரிசியவஸ்துவாகிய கடவுள் தம்மைப்பற்றி நமக்குத் தெரிவியாவிட்டால் நாமெப்படி யறிதல்கூடும்? தேவன் ஒருவராயிருக்கிறதுமன்றி மூவராயு மிருக்கிறாரென்று வேதத்தில் வெளியாகிறது. மூவரு மூன்று தேவர்களல்லர்; ஒரே தேவனென்றுந் தெரிகிறது. ஆதலினாற்றான், திரியேகத்துவம், ஏகதிரித்துவமென்று சொல்லுகிறோம். மேலும் அம்மூவரி லொருவராகிய குமாரனானவர் தேவ வார்த்தையென்றும் அவ்வார்த்தையானவர் மனிதரை இரக்ஷிக்கும்படி மனிதாவதாரஞ் செய்தாரென்றும், அவரே தேவகுமாரனென்றும், மனிதகுமாரனென்றும், இயேசுகிறிஸ்துவென்றும் சுருதி வாக்கியங்களில் வெளியாகிறது. குமாரனுடைய மனிததத்துவத்தைக்குறித்து இனிமேல் விவரமாய்த் தெரிவிப்பாம். இவ்விடத்தில் ஒருவரேயான கடவுள் மூவராயிருக்கிறதையும் அம்மூவருந் தேவத்தன்மை யுடையராயிருத்தலையும், அம்மூவரும் ஒரே தேவனாக விருத்தலையும், வேத வசனத்தைக்கொண்டு மெய்ப்படுத்துகிறோம்.

குமாரனைப் பற்றியது.

4. "பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே நீங்கள் அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள்." மத். 28: 19.

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்தாவியின் ஐக்கியமும் உங்களுக்குண்டாயிருக்கக் கடவது." 2 கொரி. 13: 14.

"பரமண்டலத்திலே சாக்ஷியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்தாவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்." 1 யோவா. 5: 7.

"கர்த்தராகிய தேவன் என்னையும் தமது ஆவியையும் அனுப்பினாரென்று கர்த்தர் (கிறிஸ்து) திருவுளம்பற்றினார்." ஏசா. 48: 16.

"தேவனுடைய வார்த்தையினாலே பரமண்டலங்க ளுண்டாக்கப்பட்டன. அவருடைய வாயின் சுவாசத்தினாலே அவைகளின் சேனைகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன." சங். 33: 6.

"நாம் நம்முடைய சாயலாக மனிதனை யுண்டாக்குவோமாக." ஆதி. 1: 26.

"மனிதன் நம்மிலொருவனைப்போ லானான்." ஆதி. 3: 22.

இவ்விடத்து உதாகரித்திருக்கிற சுருதிவாக்கியங்களினாலே தேவனுடைய திருவாக்குக் குமாரதத்துவமென்றும், தேவனுடைய ஆவியே பரிசுத்தாத்ம தத்துவமென்றும், ஆகவே தேவனாகிய பிதா, தேவவார்த்தையாகிய குமாரன், தேவாவியாகிய பரிசுத்தாவியென்ற மூவரும் நிருவிகற்பாயுள்ள ஒரே தேவவஸ்து வென்றும் ஸ்பஷ்டமாகிறதல்லவா?

5. இனி அம்மூவருந் தேவத்தன்மை யுடையவர்தான் என்று காட்டுகிற பிரமாணங்களைக் கவனிப்பாம்:—

* "எகோவாவுக்காக வழியைச் செவ்வைப்படுத்துங்கள், காட்டிலே நம்முடைய தேவனுக்காகப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள்." ஏசா. 40: 3.

"கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்களென்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமுண்டென்று ஏசாயா தீர்க்கதரிசியினாற் சொல்லப்பட்டவன் இவனே." மத். 3: 3.

"சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள். அவரே உங்கள் பலமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக. ஆகிலும் இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும் இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கலின் கண்ணியுமாயிருப்பார்." ஏசா. 8: 13, 14; 28: 16. 1 பேது. 2: 6, 8.

* எகோவா வென்பது தமிழில் பராபரன், கர்த்தர், தேவன் என்று வழங்குகிறது.

"அப்பொழுது ஜனங்கள் மோசேயினிடத்திற் போய் நாங்கள் பராபரனுக்கு விரோதமாய் மொறுமொறுத்தபடியினாலே பாவம் செய்தோ மென்றார்கள்." எண். 21: 5, 7.

"அவர்களிற் சிலர் கிறிஸ்துவைப் பரிக்ஷைபார்த்துப் பாம்புகளாலே அழிக்கப்பட்டார்கள்." 1 கொரி. 10: 9.

"ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டேன்" என்று ஏசாயா எழுதியிருக்கிறான். ஏசா. 6: 1, 2. யோவா. 12: 41.

"நான் ஆதி, நான் அந்தம் என்னையன்றித் தேவனில்லையென்று இஸ்ரவேலின் இராஜாவும் சேனைகளின் கர்த்தாவுமாயிருக்கிற பராபரன் திருவுளம்பற்றுகிறார்." ஏசா. 44: 6.

"நான் அல்பாவும் ஒமேகாவும் ஆதியும் அந்தமும் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்" என்று கிறிஸ்து தாமே திருவுளம்பற்றியிருக்கிறார். வெளி. 22: 13.

"நீதியுள்ள தேவனும் இரக்ஷகருமாகிய என்னையன்றி வேறு தேவனில்லை. என்னைத்தவிர வேறு ஒருவருமில்லை. நானே தேவன், வேறொருவரில்லை. ஆகையால் பூமியின் கடைசிவரையெங்குமுள்ளவர்களே! நீங்கள் என்னை நோக்கி இரக்ஷிப்படையுங்கள். முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும். பிலிப். 2: 10. நாவுகள் யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும். தேவனிடத்தில்மாத்திரம் நீதியும் பலனுமுண்டென்று சொல்வார்கள்" என்பதே. ஏசா. 45: 21, 24.

"ஆ தேவனே! உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளதென்றும், அவரே உன் ஆண்டவர்; ஆகையால் அவரைத் தொழுதுகொள்வாயாக." சங். 45: 6, 11.

"நம்முடைய பாவங்களுக்காக ஓராட்டுக்குட்டியைப்போல அடிக்கப்பட்டவராகிய இயேசுகிறிஸ்து கர்த்தாதி கர்த்தருமாய் பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாய் மகிமையின் கர்த்தருமாயிருக்கிறார்." வெளி. 1: 5; 17: 14. 1 கொரி. 2: 8.

"ஆதியிலே வார்த்தை யிருந்தது. அவ்வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அல்லாமலும் அவ்வார்த்தையே தேவன். அவ்வார்த்தையானவர் மனிதனானார்." யோவா. 1: 1, 14.

"கிறிஸ்து என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்க சர்வத்துக்கு மேலான தேவனாயிருக்கிறார்." ரோ. 9: 5.

"நமக்காக ஒரு பாலகன் பிறந்தார். ஒரு குமாரன் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார். ஆளுகை யவருடைய தோளின்மேலிருக்கும். அவருக்கு அதிசயரென்றும், ஆலோசனைக்காரரென்றும், பலத்த தேவனென்றும், நித்திய பிதாவென்றும், சமாதானக் கர்த்தரென்றும் பெயருண்டாகும்." ஏசா. 9: 6.

"நமக்கு மகாதேவனும் ரக்ஷகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மகிமை பிரசன்னமாகும்." தீத். 2: 13.

"தேவத்துவத்தின் நிறைவெல்லாம் மெய்யாய்க் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கின்றன." கொலோ. 2: 9.

"அவருடைய (கிறிஸ்து) வருகைகள் அநாதியாயிருந்தன." மீகா. 5: 2.

"இயேசுகிறிஸ்துவானவர் நேற்றும் இன்றும் என்றும் ஒரேவிதமாயிருக்கிறவர்." எபி. 13: 8.

"இம்மையின் முடிவுவரைக்கும் எப்பொழுதும் உங்களுடனே கூடவிருக்கிறேன். இரண்டு பேராவது மூன்று பேராவது என்னுடைய நாமத்திலே கூடிவந்திருக்கிற இடமெங்கேயோ அங்கே அவர்களுக்குள்ளே யிருக்கிறேன்." மத். 18: 20; 28: 20.

"அவர் (கிறிஸ்து) எல்லாவற்றையும் நிரப்புகிறவர்." எபே. 4: 10.

"நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் அறிந்துகொள்ளுகிறவர் என்பதாக எல்லாச் சபைகளும் அறிந்துகொள்வார்கள்." வெளி. 2: 23.

"இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் (கிறிஸ்து) வெளியரங்கமாக்கி இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்" 1 கொரி. 4: 5.

"மனிதர் உள்ளத்திலிருக்கிறதை அவர் (கிறிஸ்து) அறிகிறவரானபடியால் மனிதனைக்குறித்து ஒருவரும் அவருக்கு அறிக்கைகொடுக்க வேண்டுவதில்லை." யோவா. 2: 25.

"பரமண்டலத்துக்கும் பூமண்டலத்துக்கும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன." மத். 28: 18.

"பிதாச்செய்யக் குமாரன் கண்டதையன்றி வேறொன்றையுந் தானாகச் செய்யான். அவர் செய்கிறவைக ளெவைகளோ அவைகளையே குமாரனுஞ் செய்கிறான்." யோவா. 5: 19.

"நான் சர்வவல்லமையுள்ள கர்த்தர்." வெளி. 1: 8.

"கர்த்தாவே ஆதியிலே தேவரீர் பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். வானங்களும் உம்முடைய கைகளின் கிரியைகளாயிருக்கின்றன." சங். 102: 25. எபி. 1: 10.

"அவர் (கிறிஸ்து) எல்லாவற்றையுந் தமது வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறார்." எபி. 1: 3.

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். நானே கடைசிநாளில் அவர்களை யெழுப்புவேன். பிரேதக்குழிகளிலுள்ள யாவரும் மனிதகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனையடையும்படிக்கும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையடையும்படிக்கும் எழுந்துபோவார்கள்." யோவா. 11: 25; 6: 39; 5: 28, 29. எபி. 2: 14. 2 தீமோ. 1: 10. வெளி. 1: 18.

"நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிறுத்தப்படுவோம்." ரோ. 14: 10. 2 கொரி. 5: 10.

"பிதாவானவர் ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடாமல் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கான அதிகாரம் யாவையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்தார். மனிதகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமையைப் பொருந்தித் தம்முடைய தூதருடனேகூட வருவார்; அப்பொழுது அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாகப் பலனையளிப்பார்." யோவா. 5: 22. மத். 19: 28.

(கிறிஸ்து நாதர்) "நம்முடைய விசுவாசத்தை ஆரம்பமுதல் நடத்துகிறவராயு முடிக்கிறவராயு மிருக்கிறார்." எபி. 12: 1.

"அவர் (கிறிஸ்து) மனந்திருப்புதலையும் பாவமன்னிப்பையும் கொடுக்கிறார்." அப். 5: 31.

"அவர் (கிறிஸ்து) தம்முடைய ஜனங்களைப் பரிசுத்தம் செய்கிறார்." எபி. 2: 11. எபே. 5: 26. தீத். 2: 14. எபி. 12: 10.

"என்னுடைய சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன்" என்று (யேசுநாதர்) சொன்னார். யோவா. 14: 27.

"நான் அவர்களுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன். அவர்கள் ஒருக்காலும் கெட்டுப்போகார்கள். ஒருவனும் அவர்களை என் கையிலிருந்து பறித்துக்கொள்ளான். நீ மரணபரியந்தம் உண்மையாய் நிலைத்திரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." யோவா. 10: 28. வெளி. 2: 10.

"நீங்கள் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறீர்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என்மேல் விசுவாசமாயிருக்கிறவன் என்மேல் மாத்திரமல்ல, என்னை யனுப்பினவர்மேலும் விசுவாசமாயிருக்கிறான். என்னைக் காண்கிறவன் என்னை யனுப்பினவரையுங் காண்கிறான்." யோவா. 14: 1; 12: 44–45.

"ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்ஜியத்திற் சேரும்பொழுது அடியேனை நினைத்தருளும்." லூக். 23: 42.

"கர்த்தராகிய யேசுவே என் ஆவியை யேற்றுக்கொள்ளும்." அப். 7: 59.

"தேவதூதரெல்லாரும் அவரை (கிறிஸ்துவை) தொழுதுகொள்ளக்கடவர்கள்." எபி. 1: 6.

"அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளுவதற்குப் பாத்திரராயிருக்கிறாரென்று ஆயிரம் ஆயிரம் தூதர்கள் சொல்லக்கேட்டேன்." வெளி. 5: 11, 12.

"அவரிடத்தில் (கிறிஸ்துவினிடத்தில்) நம்பிக்கையாயிருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்." சங். 2: 12.

"பிதாவிலிருந்து புறப்படுகிற சத்திய ஆவியை உங்களுக்கு அனுப்புவேன்." யோவா. 15: 26.

"அவரே உங்களுக்குப் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானங் கொடுப்பார்." மத். 3: 11.

இம்மட்டுமேலே உதாகரித்துக் காட்டியிருக்கிற சுருதிவாக்கியங்களைக்கொண்டு இயேசுகிறிஸ்து நாதருக்கு ஜெகோவாவென்றும், தேவனென்றும், கர்த்தாவென்றும், ஆண்டவரென்றும், தேவதிருநாமங்கள் வழங்குவதனால் 1—வது. அவர் தேவத்தன்மை யுடையவரென்றும், 2—வது. அவர் அநாதி நித்திய ஸ்வயம்புவாய் என்றென்றைக்கு மாறாதவராயிருக்கிறாரென்றும், 3—வது. அவர் சர்வவியாபக முடையவரென்றும், 4—வது. சர்வக்ஞராய் எல்லாரையும் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவரென்றும், 5—வது. அவர் சர்வவல்லமையுள்ளவரென்றும், ஆகவே மெய்யான தேவலக்ஷணமுடைய பரிசுத்த தேவனென்றும், சிருஷ்டிஸ்திதி ஆத்மாரக்ஷைக்குக் கர்த்தாவாய் உலகத்துக்கு ஆதாரராய் மரித்தவர்களை உயிரோடெழுப்பி உலகமுழுவதுக்கும் அவரவர் கிரியைக்குத் தக்கபிரகாரம் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறவராய் ஆளுகை செய்வதில் அவர் மெய்யான தேவன்தானென்றும், இன்னும் மனிதர்களுக்கு மனந்திருப்புதல், பாவமன்னிப்பு, விசுவாசம், நீதி, பரிசுத்தம், புத்திரசுவிகாரம், திவ்வியசமாதானம், நித்தியஜீவன் முதலிய கிடைத்தற்கரிய மகத்தான புனித வரப்பிரசாதங்களை யருளிச்செய்கிறவரென்றும், தேவஆவியைத் தம்முடைய அடியார்களுக்கு அநுக்கிரகிக்கிறவர் என்றும், இப்படி மெய்க்கடவுளுக்குரிய திவ்வியலக்ஷணங்கள் அவரில் பூரணமாய்ப் பொருந்தி யிருக்கின்றனவென்று தெளிவாய் அறிகிறோம்.

பரிசுத்தாவியைப் பற்றியது.

6. "வேதவாக்கியங்க ளெல்லாந் தேவஆவியினாலேயுண்டாயிருக்கின்றன." 2 தீமோ. 3: 16.

"பராபரனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே வப்பட்டுப் பேசினார்கள்." 2 பேது. 1: 21.

"அவைகளை நாங்கள் மனிதருடைய சொந்தஞானம் போதிக்கிற வார்த்தைகளாலல்ல, பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பிரசங்கம் பண்ணுகிறோம்." 1 கொரி. 2: 13.

"நீ பரிசுத்த ஆவியினிடத்திற் பொய் சொல்லும்படிக்கு சாத்தான் உன்னிருதயத்தை நிரப்பினதென்ன? நீ மனிதரிடத்திலல்ல, பராபரனிடத்திற் பொய்சொன்னாய்." அப். 5: 3, 4.

"பராபரனுடைய ஆலயம் பரிசுத்தமா யிருக்கின்றது. நீங்களே யந்த ஆலயமென்றும், உங்கள் சரீரமானது பரிசுத்தாவியினுடைய ஆலயமாயிருக்கின்றதென்று அறியாமலிருக்கிறீர்களா?" 1 கொரி. 3: 17; 6: 19.

"தேவனுடைய ஆவியேயல்லாமல் ஒருவனும் தேவனுடைய ஆழங்களை யறியமாட்டான்." 1 கொ. 2: 11.

“தேவனுடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் என்னத்தினாலே ஒருமைப்பட்டீர்கள்.” அப். 5: 9.

“என்னுடைய ஆவி எப்பொழுது மனிதர்களோடே போராடமாட்டாதென்று தேவன் திருவுளம்பற்றுகிறார்.” ஆதி. 6: 3.

“நான் பராபரனுடைய ஆவியினாலே பசாசுகளைத் துரத்துகிறேன்.” மத். 12: 28.

“உம்முடைய ஆவிக்கு விலகி யெங்கே யோடுவேன்? உம்முடைய சன்னிதானத்தினின்று எங்கே போவேன்? நான் வானத்துக்கேறினாலும் தேவரீர் அங்கேயிருக்கிறீர்.” சங். 139: 7.

“பரிசுத்தாவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்திற் பிறக்கும் பரிசுத்தமானது தேவனுடைய குமாரனென்னப்படும்.” லூக். 1: 35.

“தேவனுடைய ஆவி ஜலத்தின்மேல் அசைந்துகொண்டிருந்தது.” ஆதி. 1: 2.

“தேவன் தமது ஆவியினாலே வானங்களைச் சிறப்பாக்கினார். தேவனுடைய ஆவியானவர் என்னையுண்டாக்கினார்.” யோபு. 26: 13; 33: 4.

“கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனுடைய அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராக நடத்தக்கடவர்.” 2 தெச. 3: 5.

பரிசுத்தாவியின் பரமாக இவ்விடத்து உதாகரித்திருக்கிற சுருதிவாக்கியங்களினால்;—1. வது. அவர் பரிசுத்தமான திவ்விய மெய்யறிவை உலகத்துக்கு வெளிப்படுத்தியருளி யநுக்கிரகிக்கிற தேவனென்றும், 2-வது. மகத்துவமுள்ள ஜெகோவாவுக்குரிய திருநாமங்கள் தரிக்கப்பட்டிருத்தலில் அவரும் பிதாவோடு நிருவிகற்பாயுள்ள தேவனென்றும், 3-வது. சர்வஞானமுதலிய தேவலக்ஷணங்கள் நிறைவாயுடைய தேவவஸ்துவென்றும், 4-வது. திருச்சபையெங்கும் பரிசுத்தத்தை நிலைப்படுத்திப் பெருகச்செய்து வளர்த்துவருகிறவரென்றும், 5-வது. திரியேக தெய்வத்துவத்தில் நிருவிகற்பாயுள்ள அதிபாரிசுத்தத்துவமென்றும் ஸ்பஷ்டமாய் விளங்குகிறது.

திரியேகத்துவ பரம்.

7. “பரமண்டலத்திலே பிதா, வார்த்தை, ஆவியென்று இம்மூவருஞ் சாக்ஷியிடுகிறார்கள். அம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்.” 1 யோவா. 5: 7.

“நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்.” யோவா. 10: 30.

“என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான், நான் பிதாவிலேயும் பிதா என்னிலேயு மிருக்கிறதை நீ விசுவாசியாமலிருக்கலாமா?” யோவா. 14: 9, 10.

“நான் பராபரனுடைய நியாயப்பிரமாணத்துக்கு ஊழியஞ்செய்கிறேன். கிறிஸ்துவின் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.

ஆவியின் பிரமாணம் என்னை விடுதலையாக்கிற்று." ரோ. 7: 25. கலா. 6: 2. ரோ. 8: 2.

"நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே." யாக். 4: 12.

"கர்த்தருடைய சிந்தனையை அறிந்தவன் யாவன்?"

"நாங்களோ கிறிஸ்துவினுடைய சிந்தையைப்போலச் சிந்தையுள்ளவர்களாயிருக்கிறோம்."

"இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை யின்னதென்று அறிந்துகொள்ளுகிறார்." 1 கொரி. 2: 16. ரோ. 8: 27.

"தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளேயிருக்கிறார். கிறிஸ்து உங்களிடத்திலிருக்கிறார். ஆவியானவர் உங்களுக்குள்ளே யிருப்பார்." 1 கொரி. 14: 25. 2 கொரி. 13: 5; 6: 16. யோவா. 14: 17. எபே. 3: 17. ரோ. 8: 11.

"எல்லாவற்றையும் எல்லாருக்குள்ளும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. கிறிஸ்துவே எல்லாருக்குள்ளும் எல்லாமாயிருக்கிறார். அந்த ஒரே ஆவியானவர் இந்த வரங்களையெல்லாம் நடப்பிக்கிறார்." 1 கொரி. 12: 6, 11. கொலோ. 3: 11.

"நானே வானத்தையும் பூமியையும் நிரப்புகிறேன். (தேவன்). கிறிஸ்துவினுடைய (சபை) எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவான சரீரமாயிருக்கின்றது. உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கேயோடுவேன்." எரே. 23: 24. எபே. 1: 23. சங். 139: 7, 8.

"தேவனே உங்கள் ஜீவன்." உபா. 30: 20.

"நமக்கு ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படுவார்." கொலோ. 3: 4.

"ஆவியே ஜீவனாயிருக்கிறது." ரோ. 8: 10, 11.

மேலே உதாகரித்துக் காட்டியிருக்கிற வேதவாக்கியங்களினாலே பிதா, குமாரன், பரிசுத்தஆவி யென்கிற மூவரும் சுபாவத்திலும் குணத்திலுஞ் செய்கையிலுஞ் சித்தத்திலும் யாதொரு விகற்பமும் வேறுபாடுமில்லாமல் எல்லாவகையிலும் ஒத்துச் சகல லோகங்களையும் ஆண்டு நடத்திவருகிற முறைமையில் மூவரும் பிரத்யேகமான மூன்று தேவர்களாயிராமல் திரியேக கடவுளாய்த் தம்முடைய மெய்ச்சுருதியிற் பிரதிபிம்பிக்கிறாரென்பதை விசுவாசக் கண்கொண்டு தரிசிக்கலாம்.

8. இந்தத் திரியேக தேவவஸ்து நம்முடைய புத்திக்கு எட்டாத பொருள். அப்படியிருந்தும் அவருடைய திருவசனத்தின்படியே நாம் அதை உண்மையாய் விசுவாசிக்கவேண்டும். நம்முடைய சிறுபுத்தி அவருடைய அளவற்ற சுபாவத்தை யெப்படிக் கிரகித்துக் கொள்ளக்கூடும்? நாம் நம்முடைய ஆத்துமாவும் சரீரமும் ஒன்றாயிருக்கிற வகையையும் நம்முடைய கண் காணுகிற வகையையும் பயிர்வளருகிற வகையையும் மற்றும் இப்படிப்பட்ட அனந்தமான

நடக்கைகளையும் அறியாமலிருக்கிறோமே. சர்வத்திற்கு மேலான உன்னத தேவவஸ்துவின் முழுத்தத்துவத்தையும் நாமெப்படி யறிந்து கொள்வோம். ஆனதால் சிலர், பிதா, குமாரன், ஆவியென் றிம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்களென்கிற சங்கதியை நம்முடைய புத்தியினாலறிந்து கொள்ள முடியாதென்றுசொல்லி அதை நம்பாமல் தள்ளுகிறது மிகவும் புத்தியீனமாயிருக்கிறது. நம்முடைய புத்தி தேவபுத்தியல்லவே. தேவன் அருளிச்செய்த திருவசனத்துக்கு நம்முடைய புத்தி மேலானதாகுமா? அந்த வசனமில்லாவிட்டால் நாம் பாவமின்னதென்றும் புண்ணிய மெத்தகையதென்றும் அறியமாட்டோமே. ஆகையால் நாம் மரணத்துக்குப்பின்பு உயர்ந்த புத்தியுள்ளவர்களாகுமளவும் திரியேக தேவனை மிகுந்த வணக்கத்தோடே நம்பிக்கொள்ளக்கடவோம்.

9. மேலும் திரியேகவஸ்துவாகிய பிதா, வார்த்தை, ஆவியென்னு மூவரில் வார்த்தையானவர் பாவிகளை இரக்ஷிக்கும்படிக்குத் தம்மைத்தாமே வெறுமையாக்கி யெளிய மனிதனாகிச் சிலுவைமரணத்தை யடையுமட்டாகத் தம்மைத் தாழ்த்தி நம்மைப்போலானபடியினாலே அவர் பிதாவுக்குக் கீழ்ப்பட்டவரென்றும், அவராலே சகலத்தையும் பெற்றவரென்றும் வேதத்திற் சொல்லியிருக்கிறது. அப்படிச் சொல்லுகிற வேதவாக்கியங்களை நாம் பார்க்கிறபொழுது நாம் அவருடைய மனிதத்தத்துவத்தை நினைத்து அவர் இவ்வளவாய்த் தம்மைத் தாழ்த்தினதினாலே அதிக ஆச்சரிய பரவசமடைந்து அன்பினாலே நிரப்பப்பட வேண்டுவதேயல்லாமல் அவருடைய தேவதத்துவத்திற்கு அதினாலே ஈஷத்தாவது குறையுண்டாயிற்றென்று ஒருக்காலும் நினைக்கக்கூடாது.

தேவனுடைய கிரியைகளெல்லாம் அம்மூவருக்கும் உரியவைகளாயிருந்தும் அவைகளை வெவ்வேறாக ஒழுங்காய்ச் சொல்லுகிறபொழுது, பிதாவானவர் சிருஷ்டித்தாரென்றும், குமாரனானவர் இரக்ஷித்தாரென்றும், ஆவியானவர் பிழைப்பித்துப் பரிசுத்தமாக்குகிறாரென்றும் சொல்லப்படும். அதேபிரகாரம் பிதாவானவர் குமாரனை நமக்கு ரக்ஷகராகக் கொடுத்தாரென்றும், குமாரனானவர் வந்து நமக்கும் தேவனுக்கும் மத்தியஸ்தராக நம்முடைய காரியத்தை நடப்பிக்கிறாரென்றும், ஆவியானவர் பிதாவையும் குமாரனையும், குமாரன் கொடுக்கிற ரக்ஷிப்பையும் நமக்கு வெளிப்படுத்தி நம்மை மறுபடியும் ஜெனிப்பிக்கிறாரென்றும் சொல்லப்படும். மேலும் பிதா தீர்மானிக்கிறவரென்றும் குமாரன் நிறைவேற்றுகிறவரென்றும், ஆவி ஈகிறவரென்றுஞ் சொல்லப்படும். அல்லாமல் பிதாவின் மூலமாய்க் குமாரனாலே ஆவியைக்கொண்டு நாம் சிருஷ்டிக்கப்பட்டும், இரக்ஷிக்கப்பட்டும், புதிதாய்ப் பரிசுத்தமாக்கப்பட்டும் இருக்கிறோமென்றுஞ் சொல்லப்படும். ஆதலால் பவுல் அப்போஸ்தலன் எபேசு பட்டணத்திலுள்ள சபையை நோக்கி நாம் இயேசுகிறிஸ்துவினாலே ஒரே

யாவியோடே பிதாவினிடத்திற் சேருகிற நிலைமையைப் பெற்ருே மென்று சொல்லியிருக்கிருர். எபே. 2: 18.

இம்மூன்று கிரியைகளைக்குறித்தும், நாம் திரியேக தேவனைத் தொழுதுகொண்டு ஸ்தோத்திரித்துப் புகழ்ந்து கீர்த்திக்கவும், அம் மூன்று தத்துவங்களின் கிரியைகளை வெவ்வேருகச் சொல்லி மகிமைப் படுத்தவும் நாம் கடமைப்பட்டிருக்கிருேம். திரியேக தேவனுக்கே என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக.

10. மேலே பொதுப்பிரகரணத்தில் விதந்துகாட்டிய மெய்க்கடவு ளுக்குரிய லக்ஷணங்கள் சுபக்ஷத்துக் கடவுளாகிய திரியேக பெருமா னுக்குரித்தானவா? இல்லனவா? வென்பதை ஆராயவேண்டிய தவ சியமாதலால், முறையே அந்த ஒவ்வொரு லக்ஷணத்தைப்பற்றியும் கவனிப்போமாக. கவனிக்குங்கால் முன்னர் புலப்படுத்தியிருக்கிற பொதுலக்ஷணங்களனைத்துந் திரியேக பெருமானுக்கு ஒருங்கே யமைந் துள்ளன வென்பதைச் சுருதிவாக்கியத்தால் விளங்கக்காட்டிப் பின் னர் அந்தந்த லக்ஷணத்துக்கு விரோதமாய்ப் பரபக்ஷத்தார் கூறும் ஆக்ஷேபனைகளுக்குத்தக்க சமாதானக் கூற்றுகளையும் தெளிவுறப் புலப்படுத்திக் காட்டுவாம்.

11. (1.) அரூபி. இந்தலக்ஷணம் சுபக்ஷக்கடவுளுக்கு ஸ்வயங்கிருத மாயுள்ளதென்று கிறிஸ்து வேதத்திற் பற்பல இடங்களில் வெளியாகி றது. எப்படியெனில், "தேவன் ஆவியாயிருக்கிருர், அவரைத் தொ ழுது கொள்ளுகிறவர்கள் ஆவியினுலும் உண்மையினுலும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்." யோவா. 4: 24.

"நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசியமுமுள்ள ராஜனு மாய் ஒருவராய் ஞானமுள்ள தேவனுமாயிருக்கிற அவருக்குக் கன முந் துதியும் என்றென்றைக்கு முண்டாயிருப்பதாக." 1 தீமோ. 1: 17.

"மனிதரில் ஒருவராலுங் காணப்படாமலும், ஒருவராலுங் காணப்படக்கூடாமலு மிருக்கிறவர்." 1 தீமோ. 6: 16.

"அவர் (கிறிஸ்து) அதரிசனமான தேவனுடைய தற்சொரூபம்." கொலோ. 1: 15.

"(மோசே) விசுவாசத்தினுலே அதரிசியமானவரைத் தரிசித்தாற் போலப் பொறுமையாயிருந்து ராஜாவின் குரோதத்துக்கு அஞ்சா மல் எகிப்தை விட்டுப் போனுன்." எபி. 11: 27.

உதாகரித்த இந்த வாக்கியங்களினுலே சுபக்ஷக் கடவுளின் அரூப லக்ஷணம், ஆதிமத்தியாந்தரகிதம், திவ்வியஞான முதலியவைகள் மெய்ப்படுகின்றன காண்க.

(2.) நிரவயவியென்பதும் அரூபியென்பதும், சொல்லளவில் இரண் டேயன்றிப் பொருளளவில் ஒன்றுதான். உருவப்பொருளுக்குத் தான் அவயவமுள்ளது. அருவப்பொருளுக்கு அஃதின்றென்பது கைமுதிக நியாயமாய் த்வனிக்கிறது. கடவுள் அரூபியாயிருக்கிரு

ரென்பது மெய்ப்படும்பொழுதே நிரவயவியாயு மிருக்கிறாரென்பதே துணிவு. இதுவிஷயத்தில் பரபக்ஷத்தார் இன்னொரு ஆக்ஷேபனை சொல்ல வருவார்கள். யாதெனில், கிறிஸ்துசமயக் கடவுளுக்கு வாய், கை, கால் முதலிய அவயவங்கள் உள்ளனபோலச் சில வாக்கியங்களில் வெளியாகிறதென்பது மெய்தான். மனிதருடைய அற்பப்புத்திக்கு விளங்கும்படிக்கு விஷயமாகாத ஒன்றை விஷயமாகும் பொருளுக்கொத்தவண்ணம் பாவித்துச் சங்கதியை விளக்கிக்காட்டுவது எல்லாப் பாஷைக்கும் இயல்புதான். அதேபிரகாரமாகச் சுபக்ஷச் சுருதியிலும் கடவுளுடைய கரிசனையான பராமரிப்பைக் காட்டுமிடத்து இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லையென்றும், கடவுள் எல்லாவற்றையும் அறிகிறார் என்று விளக்குவதை வேண்டி இருதயத்தின் யோசனைகளையும் மற்ற யாவையுந் தேவனுடைய கண்கள் காணுகின்றனவென்றும் வெளியிடுகின்றன. இப்படிப்பட்ட இடத்துக் குணார்த்தஞ் செய்துகொள்ளவேண்டும். அதைவிட்டுப் பூதார்த்தம் பண்ணுவது, ஒன்று அறியாமையாயிருத்தல்வேண்டும். அல்லது வீண்குதர்க்க மெனல்வேண்டும். இந்துமார்க்க வேதத்தில் தெரிந்தெடுத்த பிராமதருமத்தில் பிரம்மத்தைப் பற்றி அழிவற்ற புருஷன் என்றும், பார்வைக்குப் புலப்படமாட்டார் பார்ப்பார் என்றும், செவிக்குப் புலப்படமாட்டார் கேட்பார் என்றும், நினைவுக்கு அகப்படார் நினைப்பார் என்றும், அவரவர்கள் சாதனங்களுக்குத் தக்கபலனைக் கொடுக்கிறாரென்றும், எல்லாவுயிர்களும் உறங்கிக்கொண்டிருக்கையிலும் அவர் (பிரமம்) விழித்துக்கொண்டிருக்கிறாரென்றும் சொல்லியிருக்கிறதே. இந்த ஹேதுவைக் கொண்டு பிரமத்துக்குத் தேகமுமுண்டு அவயவமுமுண்டு என்று பொருள் செய்வது தகுதியாமா? புத்தியாமா? ஒருக்காலும் ஆகா. "தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின் என்குற்ற மாகு மிறைக்கு." என்று திருவள்ளுவரும் கூறுகின்றனரே.

(3.) விபுஸ்வரூபி. அரூபலக்ஷணத்தில் உதாகரிக்கப்பட்ட முதல் வாக்கியமே இதற்கும் உபயோகிக்கத்தக்கது. எப்படி? விபு, ஆவி, ஆன்மா, சித்து என்பன ஏகதேசம் ஒருபொருட் சொற்களாம். இச்சொற்கள் கடவுளுக்கு வழங்கும்போது எக்காலத்தும் எவ்விடத்தும் ஏகதேசமில்லாமல் முழுக்கவும் சர்வவியாபகராயிருந்து தம்மை உளராக விளக்கிக்கொண்டிருக்கிற வஸ்துவென்றாகும். கடவுளுக்கல்லாமல் மற்றத் தேவர் மனிதர் முதலியோருக்கு வழங்கும்போது கிஞ்சிக்ஞத்துவமுள்ள ஏகதேசிகளாய் விளங்கும் பொருளென்று அர்த்தப்படும். தேவராவார் ஆவிப்பொருளாயினும் சூக்குமதேகிகள். மனிதராவார் ஆத்துமமுள்ள தூலதேகிகளென்றறிக.

(4.) ஆனந்தஸ்வரூபி.

"உம்முடைய சமுகத்திற் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமுமுண்டு." சங். 16: 11.

"அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கிராதிபதி." 1 தீமோ. 6:15.

(5.) சத்ஸ்வரூபி. திரிகாலங்களிலு முள்ளவரென்பதாம்.

"அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும்பிராணிகளாகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்." ரோ. 1: 23.

"நித்தியமும், அழிவில்லாமையும், அதரிசனமுமுள்ள ராஜனுமாய்த் தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமா யிருக்கிறவருக்குக் கனமு மகிமையும் சதாகாலங்களிலு முண்டாயிருப்பதாக. ஆமென்." 1 தீமோ. 1: 17.

"ஒருவராய்ச் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவருங் கண்டிராதவரும் காணக்கூடாதவருமா யிருக்கிறவர். அவருக்கே கனமும் நித்திய வல்லமையு முண்டாயிருப்பதாக. ஆமென்." 1 தீமோ. 6: 16.

"அநாதி தேவனே உனக்கு அடைக்கலமானவர், அவருடைய நித்திய புயங்களே உனக்கு ஆதாரம்." உபா. 33: 27.

"நீர் பூமியையும், உலகத்தையும் உருவாக்கு முன்னும் நீரே அநாதியா யென்றென்றைக்குந் தேவனுயிருக்கிறீர்." சங். 90: 2.

"சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள் மகிமையையும், கனத்தையும், ஸ்தோத்திரத்தையும், செலுத்தும்போது" வெளி. 4: 9. இவற்றோடொத்த வாக்கியங்களாலுமறிக.

(6.) நன்மைஸ்வரூபி. "தேவன் ஒருவர்தவிர நல்லவனொருவனுமில்லையே." மத். 19: 17.

"கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார்." சங். 25: 8.

"தேவரீர் நல்லவரும் நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர்." சங். 119: 68. இவற்றோடொத்த வாக்கியங்களானுமறிக.

(7.) தர்மஸ்வரூபி. நன்மையில் ஒரு கூறேயன்றிப் பிரத்யேகமான வொன்றன்று. ஆதலில் வேறெடுத்துக் கூறிற்றிலம்.

(8.) மங்களஸ்வரூபி. ஆனந்தஸ்வரூபி யென்பதற்குக் காட்டிய பிரமாணங்களையே இதற்குங் கொள்க. இரண்டும் ஒருபொருட் சொற்கள்.

(9.) சமானரகிதர். "தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும் துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?" யாத். 15: 11.

"கர்த்தரே தேவன், அவரையல்லாமல் வேறொருவருமில்லை." உபா. 4: 35.

"நான் முந்தினவரும் பிந்தினவருந்தானே. என்னைத்தவிரத் தேவன் இல்லையென்று இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனை

களின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்.'' ஏசா. 44: 6.

''எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை. எனக்குப்பின் இருப்பதுமில்லை. நான் நானே கர்த்தர். என்னையல்லாமல் இரக்ஷகரில்லை.'' ஏசா. 43: 10, 11. இவற்றோடொத்த வாக்கியங்களானுமறிக.

(10.) பாபரகிதர். ''துன்மார்க்கத்திற் பிரியப்படுகிற தேவனல்ல. தீமை உம்மிடத்திற் சேர்வதில்லை. வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள். அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர். பொய் பேசுகிறவர்களை யழிப்பீர். இரத்தப் பிரியனையும், சூதுள்ள மனுஷனையும், கர்த்தர் அருவருக்கிறார்.'' சங். 5: 4—6.

''தேவனே உமது சிங்காசன மென்றென்றைக்குமுள்ளது. உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர்.'' சங். 45: 6, 7.

''துன்மார்க்கருடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது.'' நீதி. 15: 9. இவற்றோடொத்த வாக்கியங்களானுமறிக. 1 யோவா. 1: 5. ஆபகூ. 1: 13.

(11.) ஞானஸ்வரூபி. ''தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின்மூலமா யென்றென்றைக்கு மகிமையுண்டாவதாக.'' ரோ. 16: 27.

''நித்தியமும் அழிவில்லாமையும், அதரிசனமுமுள்ள ராஜனுமாய்த் தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்குக் கனமு மகிமையும் சதாகாலங்களிலு முண்டாயிருப்பதாக.'' 1 தீமோ. 1: 17.

''தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக. ஞானமும் வல்லமையும் அவருக்கே யுரியது.'' தானி. 2: 20. இவற்றோடொத்த வாக்கியங்களானுமறிக.

(12.) திரிகாலரகிதர். இந்த லக்ஷணம் கடவுள் அநாதி நித்திய ஸ்வயம்புவாயிருக்கிறாரென்று திருஷ்டாந்தப்படுத்தி யிருப்பதினால் அந்த லக்ஷணத்தோடு கூடியதேயன்றி வேறில்லை. ஆதலில் இதற்கென்று வேறு வேதவாக்கியங்களைக் காட்ட அவசரமில்லையென விடுக்கின்றோம். கடவுளல்லாத ஏனைய சிருஷ்டிப் பொருள்களெல்லாம் காலசக்கரத்துக்குள் சுழலுகின்றன. கடவுள் தாமே காலத்துக்கு வரம்பு கட்டிப் பருவபேதங்களை யமைத்தவர். ஆதலில் அவருக்குத் திரிகாலமு மில்லனவென்று தானே விளங்கும். இது கைமுதிகநியாயம்.

(13.) காலத்துக்கு நியந்தா.

''அவர் தமது வார்த்தையைப் பூமியிலே யனுப்புகிறார். அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது. பஞ்சைப்போல

உறைந்த மழையைத் தருகிறார். சாம்பலைப்போல உறைந்த பனி யைத் தூவுகிறார். அவர் தமது கல்மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார். அவருடைய குளிருக்கு முன்பாக நிற்பவன் யார்? அவர் தமது வார்த்தையை யனுப்பி அவைகளை உருகப்பண்ணுகிறார். தமது காற்றை வீசும்படி செய்யத் தண்ணீர்கள் ஓடும்." சங். 147: 15–19.

"பூமியுள்ள நாளளவும் விதைப்பும், அறுப்பும், சீதளமும், உஷ்ணமும், கோடைகாலமும், மாரிகாலமும், பகலும், இரவும் ஒழிவதில்லையென்று தம்முடைய உள்ளத்திற் சொன்னார்." ஆதி. 8: 22.

"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணிப் பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும், அவர்கள் குடியிருப்பி னெல்லைகளையும் குறித்திருக்கிறார்." அப். 17: 26.

"மேலும் ஒருநாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந் தெழுப்பினதினாலே அதின் நியாயத்தை யெல்லோருக்கும் விளங்கப்பண்ணினார்." அப். 17: 31. இவற்றோடொத்த வாக்கியங்களானு முணர்க.

(14.) மனசுக்கு நியந்தா. "பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் லீதியாளுடைய ஹிருதயத்தைத் திறந்தருளினார்." அப். 16: 14. நீதி. 21: 1. எரே. 24: 7. எசே. 36: 26.

(15.) உலகத்துக்கு ஆதாரர்.

"அவர் (தேவன்) கட்டளையிட அவைகள் (உலகங்கள்) சிருஷ்டிக்கப்பட்டன. அவர் அவைகளை யென்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலு நிலைக்கும்படி செய்தார். மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார்." சங். 148: 5, 6.

"அவர் எல்லாவற்றிற்கு முந்தினவர். எல்லாம் அவருக்குள் நிலைத்திருக்கிறது." கொலோ. 1: 17.

"இவரை (கிறிஸ்துவை) க்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து சர்வத்தையுந் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்." எபி. 1: 3.

"அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்துப் பூமியை அவாந்தரவெளியிலே தொங்கவைத்திருக்கிறார்." யோபு. 26: 8.

"அதின் (பூமியின்) ஆதாரங்கள் எதின்மேற் போடப்பட்டது. அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்? (தேவன்.)" யோபு. 38: 6. இவற்றோடொத்த வாக்கியங்களானுமறிக.

(16.) தர்மத்துக்கு ஆதாரர். உலகத்துக்கு ஆதாரர் என்றதனோடு சேர்ந்தது. ஏனெனில் உலகத்துக்கு ஆதாரராயிருக்கிற கட

வுளே அவ்வுலகம் நிலைபெறுதற்கேதுவாகிய தர்மத்தைப் பரிபாலித்து வருவதனுல் அவரே தர்மத்துக்கும் ஆதாரரென்றுதானே யேற்படு கிறது. ஆதலால் வேறு கூறிற்றிலம். சங். 72: 4; 12, 13. யாக். 1: 17.

(17.) அநாதி நித்திய ஸ்வயம்பு. கடவுள் அநாதி நித்திய ஸ்வ யம்பு என்று மெய்ப்படும்போது திரிகாலரகிதர் என்ற லக்ஷணமும் சேர்ந்துளதெனப் புலப்படும்.

"அநாதி தேவனே உனக்கு அடைக்கலம். அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்." உபா. 33: 27.

"பர்வதங்கள் தோன்றுமுன்னும் நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும் நீரே யநாதியா யென்றென்றைக்கு மிருக்கிறீர்." சங். 90: 2.

"இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்ல மையுள்ள கர்த்தர், நான் அல்பாவும், ஓமேகாவும், ஆதியும், அந்தமு மாயிருக்கிறேனென்று மோசேயுடனே சொல்லி இருக்கிறேனென்ப வர் என்னை யுங்களிடத்துக்கு அனுப்பினுரென்று இஸ்ரவேற் புத்தி ரரோடே சொல்வாயாக." இவற்ருேடொத்த வாக்கியங்களானுமறிக.

(18.) சர்வவியாபகம்.

"தேவன் மெய்யாக மனுஷரோடே பூமண்டலத்தில் வாசம் பண்ணுவாரோ. இதோ வானங்களும், வானுதிவானங்களும் உம் மைக் கொள்ளாதே, நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்." 2 நாளா. 6: 18.

"நான் சமீபத்திற்குமாத்திரமா தேவன். தூரத்திற்குந் தேவ னல்லவோவென்று கர்த்தர் சொல்லுகிருர். யாவனுகிலும் தன்னை நான் காணுதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக் கூடுமோ வென்று கர்த்தர் சொல்லுகிருர். நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவரல்லவோவென்று கர்த்தர் சொல்லுகிருர்." எரே. 23: 23.

"வானம் என் சிங்காசனம். பூமி யென் பாதபீடம் நீங்கள் எனக்காகக் கட்டின வீடு எங்கே. நான் இளைப்பாறும் ஸ்தானம் எங்கே." ஏசா. 66: 1. சங். 139: 3, 7–12. இவற்ருேடொத்த வாக்கியங்களானுமறிக.

(19.) சர்வக்ஞானம்.

"தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின்மூலமா யென்றென்றைக்கு மகிமையுண்டாவ தாக." ரோ. 16: 27.

"நித்தியமும், அழிவில்லாமையும், அதரிசனமுமுள்ள ராஜனு மாய்த் தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமா யிருக்கிறவருக்குக் கன மும், மகிமையும் சதாகாலங்களிலு முண்டாயிருப்பதாக." 1 தீமோ. 1: 17.

"தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக. ஞானமும் வல்லமையும் அவருக்கேயுரியது." தானி. 2: 20. இவற்றோடொத்த வாக்கியங்களானுமுணர்க.

(20.) சாக்ஷிமாத்திரர்.

"கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து நல்லோரையுந் தீயோரையும் நோக்கிப் பார்க்கின்றன." நீதி. 15: 3.

"கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும், எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர். என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவிற் சொற்பிறவாததற்கு முன்னே இதோ, கர்த்தாவே அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்." சங். 139: 1–4.

"அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி யொன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்." எபி. 4: 13. இவற்றோடொத்த வாக்கியங்களானுமுணர்க.

(21.) அதிபாரிசுத்தர்.

"அவைகள் இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரென்று இரவும்பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன." வெளி. 4: 8.

"உங்கள் தேவனும் யேகோவாவுமாகிய நானே பரிசுத்தராயிருக்கிறபடியால் நீங்களும் பரிசுத்தராயிருக்கவேண்டும்." லேவி. 19: 2.

"உங்களைப் பரிசுத்தப்படுத்தும் யேகோவாவாகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியால் அவனும் உனக்கு முன்பாகப் பரிசுத்தனாயிருக்கவேண்டும்." லேவி. 21: 8.

"அவரே பரிசுத்தமுள்ள தேவன்." யோசு. 24: 19.

"இந்தப் பரிசுத்த தேவனாகிய யேகோவாவுக்கு முன்பாக நிற்கத் தக்கவன் யாவன்?" 1 சாமு. 6: 20.

"சேனைபதியாகிய யேகோவா பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்." ஏசா. 6: 3. இவற்றோடொத்த வாக்கியங்களானுமறிக.

(22.) மகோன்னதர்.

"யேகோவாவென்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின்மேலும் உன்னதமானவர்." சங். 83: 17.

"ஆகிலும் உன்னதமானவர், கைகளினாற் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்." அப். 7: 48.

"நித்திய வாசியும், பரிசுத்தரென்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும், உன்னதமுமானவர் சொல்லுகிறார். உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான் பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை

உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்." ஏசா. 57: 15. இவற்றோடொத்த வாக்கியங்களாலுமறிக.

(23.) மகிமைப்பிரதாபர்.

"கர்த்தருடைய மகிமை என்றென்றைக்கும் விளங்கும். கர்த்தர் தம்முடைய மகிமைகளில் மகிழுவார்." சங். 104: 31.

"ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே." மத். 6: 13.

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது." சங். 19: 1.

"அப்போது அவன் (மோசே) உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளுமென்முன்." யாத். 33: 18.

"என் மகிமை கடந்துபோகும்போது," யாத். 33: 22.

"நாமெல்லாருந் திறந்தமுகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமை அடைந்து மறுரூபப்படுகிறோம்." 2 கொரி. 3: 18. இவற்றோடொத்த வாக்கியங்களானுமறிக.

(24.) அதிருஷியர். இது அரூப லக்ஷணத்தோடு சேர்ந்துள்ளது.

(25.) பரமகாருணியர், தயாளர், கிருபாநிதி என்பனவும் இது.

"யேகோவாவே தயாபரர், அவர் தயை என்றுமுள்ளது." சங். 100: 5.

"தேவனாகிய யேகோவாவே இரக்கமும், கிருபையும், நீடிய பொறுமையுமுள்ளவர், தயையிலும் சத்தியத்திலும் பரிபூரணர்." யாத். 34: 6.

"யேகோவாவே இரக்கமும், கிருபையும், நீடிய பொறுமையும், மகா தயையுமுள்ளவர்." சங். 103: 8.

"ஆண்டவரே உம்மை நோக்கிப் பிரார்த்திக்கும் யாவருக்கும் நன்மை செய்பவரும் மன்னிப்பவரும், பூரண தயாபரருமாயிருக்கிறீர்." சங். 86: 5.

"உங்கள் தேவனாகிய கர்த்தர் கிருபையும், இரக்கமுமுள்ளவர். நீங்கள் அவரிடத்தில் திரும்பினால் அவர் தம்முடைய முகத்தை உங்களைவிட்டு விலக்குவதில்லை." 2 நாளா. 30: 9.

"கர்த்தர் வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும், மனவுருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையுமுள்ளவருமான தேவனாகிய நீர் அவர்களைக் கைவிடவில்லை." நெகே. 9: 17. இவற்றோடொத்த வாக்கியங்களானுமுணர்க.

(26.) நண்பர்.

"அன்பில்லாதவன் தேவனையறியான். தேவன் அன்பாகவேயிருக்கிறார்." 1 யோவா. 4: 8.

"தேவன் தம்முடைய ஒரேபேறுன குமாரனை விசுவாசிக்கிற வன் எவனே அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை யடையும் படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந் தார்." யோவா. 3: 16.

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினர்." ரோ. 5: 8.

"குருடரின் கண்களைக் கர்த்தர் திறக்கிருர். மடங்கடிக்கப்பட் டவர்களைக் கர்த்தர் தூக்கிவிடுகிருர். நீதிமான்களைக் கர்த்தர் சிநேகிக் கிருர். பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிருர். அவர் திக்கற்ற பிள்ளையையும், விதவையையும் ஆதரிக்கிருர்." சங். 146: 8. இவற் ருேடொத்த வாக்கியங்களானுமறிக.

(27.) நீதியுள்ளவர்.

"நீதியும், நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம். கிருபையும், சத்தியமும் உமக்குமுன்பாக நடக்கும்." சங். 89: 14.

"நியாய விசாரணையையும், நீதியையுஞ் செய்கிற யேகோவா." எரே. 9: 24.

"எங்கள் தேவனுகிய யேகோவா தாம் செய்யுங் கிரியைகளெல்லா வற்றிலேயும் நீதியுள்ளவர்." தானி. 9: 14.

"தேசத்தாரின் அரசனே உம்முடைய நெறிகள் நீதியும், சத்திய முமானவைகள்." வெளி. 15: 3.

"அவர் பராக்கிரமத்திலும், நியாயத்திலும், மிகுதியான நீதியிலு மேன்மையானவர்." யோபு, 37: 23. இவற்ருேடொத்த வாக்கியங்க ளானுமறிக.

(28.) தயாளர். பரமகாருணிய லக்ஷணத்துக்குரிய பிரமாணங் களே இதற்கும் பிரமாணமாம். அதனைக் காண்க.

(29.) க்ஷமையுள்ளவர்.

"சாந்தம் பொறுமையென்பனவும் சாந்தமாம்."

"கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர். அக்கி ரமத்தையு மீறுதலையு மன்னிக்கிறவர்." எண். 14: 17.

"கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகாதயை யும், சத்தியமுமுள்ள தேவன்." யாத். 34: 6. இவற்ருேடொத்த வாக்கியங்களானுமறிக.

(30.) கிருபாநிதி. பரமகாருணியத்துக்குரிய பிரமாணங்களே இதற்கும் பிரமாணமாம். அதனைக் காண்க.

(31.) சம்பூரணர்.

"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கி றதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்." மத். 5: 48. எபே. 1: 7; 2: 4, 6. கொலோ. 1: 19.

"உம்முடைய சமுகத்திற் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமுமுண்டு." சங். 16: 11. இவற்றோடொத்த வாக்கியங்களானுமறிக.

(32.) சர்வவல்லவர்.

"ஆபிரகாமுக்குத் தொண்ணூற்றென்பது வயதானபொழுது யேகோவா அவனுக்குத் தரிசனையாகி அவனை நோக்கி நான் சர்வவல்லமையுள்ள தேவன். நீ என் முன்னிலையிலே திடங்கொண்டு நடந்து சற்குணனாயிரு." ஆதி. 17: 1.

"ஆ! ஆண்டவராகிய யேகோவாவே நீர் உமது பராக்கிரமத்தினாலும், ஓங்கிய உமது புயத்தினாலும் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தீர். நீர் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லை. நீர் மகத்துவமானவர் வல்லமையுள்ள தேவன். சேனாபதியாகிய யேகோவாவென்னும் நாமத்தையுடையவர். கிரியையில் வல்லவர்." எரே. 32: 17–19.

"பார் யேகோவாவாகிய நானே யெல்லா மாம்ஸத்துக்குந் தேவன். என்னாற் செய்யமுடியாத காரியமொன்றுண்டா." எரே. 32: 27.

"இயேசு அவர்களை நோக்கி மனிதரால் இது கூடாது. தேவனாற் கூடாததல்ல; தேவன் எந்தக் காரியத்தையுஞ் செய்ய வல்லவரென்றார்." மாற். 10: 27.

"இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சருவவல்லமையுள்ள தேவனான கர்த்தர்." வெளி. 4: 8.

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருஷ்டித்தார்." ஆதி. 1: 1. இவற்றோடொத்த வாக்கியங்களானுமறிக.

12. இரண்டாம் அத்தியாயம் பொதுப்பிரமாணத்தில் விவரித்திருக்கிறபிரகாரம் கடவுளுக்கேயுரிய பொதுலக்ஷணங்கள் முப்பத்திரண்டையும் தனித்தனி இந்த அத்தியாயத்தில் முந்தியபிரிவில் விளங்கக்காட்டி அவைகள் திரியேக பெருமானிடத்துக் குறைவற வொருங்கே பொருந்தியிருக்கின்ற தன்மையைக் கரதலாமலகமாய்த் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

"சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி" என்றதையும்,

"சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்ட மின்மை பெறின்"

என்றதையும் உள்ளத்திற்பேணி நடுநிலைபிசகாது வாசிப்பீராயின் உட்பொருள் விளங்கும். திரியேகபெருமான் றிருவருட்பிரசாதங் கிடைக்க மன்றாடுதும்.

சுபக்ஷஸ்தாபனம் முற்றிற்று.

பதினொரும் அத்தியாயம் முற்றிற்று.

17-ம் அத்தியாயம்.

சந்தேக நிவிர்த்தி.

1-வது கேள்வி. *பாபம் உலகத்தில் எப்படி வந்தது?*

இந்தக் கேள்விக்கு உத்தரவு சொல்லத் தொடங்குமுன் பரபக்ஷத் தாராகிய இந்து சமயத்தார் தாம் இதைப்பற்றி யென்ன அபிப் பிராயங் கொண்டிருக்கிறார்க ளென்பதைப்பற்றி விசாரித்துக் கொண்டு அதன்மேல் சுபக்ஷத்தார் கூறும் உத்தரவுக ளிவையென்று தெளிவாய்க் காட்டுவோம்.

1-வது. *அத்துவைதிகளாகிய வேதாந்திகள் பிரமத்தை நிர்க் குணமுடையதென்றும், பிரபஞ்சத்தை மாயாமயமாகிய பொய்த் தோற்றமென்றும் சொல்லுகிறவர்களாதலால் நன்மையுமில்லை, தீமையு மில்லை, பாபமுமில்லை, புண்ணியமுமில்லை யென்பார்கள். இதற் குப் பிரமாணம்:—*

"சிந்தை பயமில்சை சீல மருவருப்பு
அந்தைவிடுஞ் சாந்திகுல மாசாரம்—இந்தவகை
எட்டுஞ் சிவயோகிக் கில்லையென மாமறைகள்
தட்டும் பெருமுரசந் தான்."

"நாயேறி வீழ்ந்தென் நடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாம் ஜகம்பழித்தென் பேணுகிலென்—தோயார்
பெருமை சிறுமையிலை பின்னு முனுமில்லை
வரைவற்று வேண்டிய செய்வார்."

(ஒழிவிலொடுக்கம் பொதுவிலுபதேசம். 54—56.)

இச்செய்யுட்களால் விருப்பமுதலிய எட்டுக்குணங்களும் அந்த அந்தக் குணத்தைப்பற்றி நிகழுஞ் செய்கைகளும் அச்செய்கைகளைப் பற்றி நிகழும் பலப்பிராப்திகளும் சிவயோக சிவஞானிகளுக்கு இல்லையென்றும், வரைவற்றுவேண்டிய செய்வாரெனறதுணை யானே பாவபுண்ணியப் பகுப்பில்லாமல் தத்தம் இஷ்டம்போல வேண் டியதை நீக்கமின்றிச் செய்வாரென்றும் மாயாமயமான ஞானநூல்கள் பறைகின்றன. அல்லாமல்,

"மெய்யுறு தவத்தரும் வேட்கை யாளரும்
மையுறு தடங்கணார் வலையிற் சிக்குவார்
ஐயுறு பறவையும் அங்கணப் புளுஉம்
கையுறு கவசமுங் கணக்கும் போலவே"

என்று ராமாயணத்துங் கூறியிருக்கின்றது. இதன் கருத்து ஞானி களும் அஞ்ஞானிகளும் ஸ்திரீ பிராந்திக்குட்பட்டுச் சிக்கிக்கொள்ளு

கிறார்கள். ஆனால் ஜலதாரைச் சேற்றுள் முழுகிக்கிடக்கிற பிள்ளைப் பூச்சி முடிவில் நிர்மலமாய் வெளிப்படுவதுபோலும், எழுத்தாணி தான் பொய்க்கணக்கை யெழுதியும் பின்பற்றற விலகிக்கொள்வது போலும் ஞானிகள் பரிசுத்தராய் விலகிக்கொள்ளுகிறார்கள். அஞ்ஞானிகளோ கபத்தில் அகப்பட்ட ஈ மாய்ந்துபோவதுபோலும், கள்ளக்கணக்குத் தெய்வநடையிற் கிழிபடுவதுபோலும் தங்கள் செய்கைக்குரிய துர்ப்பலனை யடைகிறார்கள் என்பதாம். இதற்குத் திருஷ்டாந்தம் விசுவாமித்திரர் என்று பெயர் வழங்குகிற கௌஷிக மகாரிஷி சௌபரி மகாரிஷி இவர்கள் சரித்திரங்களைக் கண்டறிக. இதனாலே பாபபுண்ணிய முண்டென்பது மாயையினாலுண்டுபட்ட மதிமயக்கமென்றும், அது அஞ்ஞானிகளைப்பற்றி நின்று பீடிக்குமேயல்லாமல் மெஞ்ஞானிகளைப் பற்றவுமாட்டாது பீடிக்கவுமாட்டாது என்றும் ஏற்படுகிறதல்லவா? இதுவே அத்வைத ஞானிகள் பாபத்தைப்பற்றிக் கொண்ட அபிப்பிராயம்.

இக்கொள்கை தவறென்பதற்குத் திருஷ்டாந்தம்.

1. கடவுளை யாதொரு குணமுஞ் செயலுமற்ற நிர்க்குணப்பிரமமென்றும், காணப்படுகிற பிரபஞ்சத்தைப் பிரத்தியக்ஷ விரோதமாய் மாயாதோற்றமென்றும், அநுபவசாதனமாய் யாவரும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிற பாவத்தை யில்லையென்றும் மறுக்கிற மதிமருளிகளை ஞானிகளென்று சொல்வதும் கொண்டாடுவதும் அவர்கள் சொல்லும் இவ்வகைப்பட்ட வீண்வார்த்தைகளை ஆதாரமாகக் கொண்டு வாதாட முயல்வதும் நிதான புத்தியில்லாதவர்களுடைய செய்கையென்று சொல்வதற்கு ஆடங்கமென்னை? "சொல்வார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியில்லையா?" வென்பது லோகவதந்தியன்றோ. எக்காலத்தும் எவ்விடத்தும் நெருப்புச்சுடுவதும் ஜலம் குளிர்வதும் விஷங்கொல்வதும் அமிழ்தம் பிழைப்பூட்டுவதும் எப்படி யியற்கைமுறையோ அப்படியே பாபங் கேடுபயப்பதும் புண்ணியம் நன்மைபயப்பதும் இயற்கை முறையாகிய சுபாவ தர்மமென்றறிக.

2. துராசாரமாகிய பாபகர்மங்களுக்குத் தீரவிலகிச் சதாசார சீலராயும், திரிகாண சுத்தராயும் அகங்கார மமகாரப்பற்றற்றிருந்து நன்னெறிபற்றி நடப்பதன்றோ தவம். இவ்வகைப்பட்ட நிலையில் இறுதிகாறும் விடாது பற்றிக்கொண்டு ஊக்து நிற்பவனன்றோ ஞானி. இதற்குப் பிரமாணம்.

"உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு."

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்" (என்று திருக்குறளும்,)

"மெய்வ்வகை தெரிதல் ஞானம் விளங்கிய பொருள்க டம்மைப்
பொய்வ்வகை யின்றித் தேறல் காட்சியைம் பொறியும் வாட்டி
உய்வகை யுயிரைத் தேயா தொழுகுத லொழுக்க மூன்றும்
இவ்வகை நிறைந்த போதே யிருவினை கழியு மென்றான்"

என்று ஜீவக சிந்தாமணியும் வரையறுத்துக் கூறுகின்றவற்றைக் காண்க. இவ்வாறாய் பரமார்த்தங்களையெல்லா மொழித்துவிட்டு நன்மையிது, தீமையிது, பாவமிது, புண்ணியமிதுவென்றும் அவற்றின் பலாபலன்க ளிவையென்றும் பகுத்தறிகின்ற சுக்ஞானமில்லாத அக்ஞானிகளும், வயிறுபிழைக்க மதியற்றுச் சோம்பித் திரிகின்ற விழலராவார் சிலரும்,

"தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று."

"தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
அஃதிலார் மேற்கொள் வது."

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்க ணாரில்" (என்று திருக்குறளும்,)

"நீட்டிய சடையுமாகி நீர்மூழ்கி நிலத்திற் றேய்ந்து
வாட்டிய வுடம்பின் யாங்கள் வரகதி விளைத்து மென்னில்
காட்டிடைக் கரடிபோகிக் கயமூழ்கிக் காட்டி னின்று
வீட்டினை விளக்கவேண்டும் வெளிந்துணா விடுமி னென்றான்"

என்று சிந்தாமணியுந் தெளிவாய்த் தெரிவிக்கிறபடி கரவில் சிற்றின்ப நுகர்ந்து தீயொழுக்கிகவாது கள்ளத்தவவேடம்பூண்டு தங்களை அத்துவித ஞானிகளெனப் பெயரிட்டு, எட்டிரண்டறியாத பேதை ஜனங்களை மயக்கி நடித்துப் பொருட்பறிசெய்து வருந்திருடராய் தம்மொழுக்கை நல்லொழுக்கென்று உலகத்துக்கு மெய்ப்படுத்தக் கருதி அனந்த மங்களகுண சகிதராகிய கடவுளை நிர்க்குணரென்றும், காணப்படுகிற பிரபஞ்சத்தை மாயாதோற்றமான மித்தையென்றும், ஆகவே பாபமில்லை புண்ணியமில்லை நன்மையில்லை தீமையில்லை தன்னைக் கடவுளென்று நினைப்பதே முக்தியென்றும் தப்புமார்க்கத்தை உபதேசித்துத் திரிகிறார்கள். சிலர் அப்படியன்று, நியாயமிது உண்மையிதுவென்று கிராஹியஞ் செய்துகொள்ளச் சக்தியின்றிப் பூர்வந்தொடங்கி வருகின்ற வேதாந்த நூல்களும் அபத்தங்கூறத்தக்கனவா? என மதிமருண்டு அந்நூல்களைப் படித்து மௌட்டியாகாரமான வொருவித நம்பிக்கை உள்ளபடியே தங்கள் மனவில் தடிப்புக் கொண்டலைகிறார்கள். இத்தகையரில் எத்தனையோபேர் தங்கள் மரணப்படுக்கையில் பாவங்களை நினைப்பூட்டிக் கண்டிதஞ்செய்கிற ஜீவசாக்ஷியின் வாதையைப் பொறுக்கமாட்டாமல் கதறித் தவிப்புற்று மடிகிறார்கள். இதுபற்றியன்றே,

"சித்த விர்த்தியைக் கெடுப்பது தீநெறியொழுகப்
புத்தியை மயக்கிடுவது புவனகோ சரத்தை
மித்தைமித்தையென் றேய்ப்பது மெய்யுணர் விலாதாச்
சுத்தசூனிய கதியிடைக் கவிழ்ப்ப தத்துவைதம்."

"மெய்வழி தெரிந்தார் போல விழுத்தவ வேடம் பூண்டு
பொய்வழி யலேந்து தீமை புரிந்தபே தமைவந் தான்றச்
செய்வழி வகைகிட் டாது தெருமர லுழந்து தேம்பி
உய்வழி யினியின் றென்று வுயிர்ப்பெறிந் துயங்குவானா."

"அஞ்சி டாமல கம்பிரம மென்றுரைத்
தெஞ்சி டாதுமண் ணனவ ரீசனைச்
செஞ்செ வேகண்டு தீவிட நாகத்தின்
நஞ்சுண் டாரிற்றி சைத்து நடுங்கினர்"

என அகச்சமயமுங் கூறுகின்றது.

2–வது. இந்துசமய சித்தாந்திகளில் ஒருபக்ஷத்தார் தெய்வமே பாவத்துக்குக் காரணர். அவராலேதான் ஆத்துமாவைப் பாவம் பற்றிக்கொண்ட தென்கிறுர்கள். இதற்குப் பிரமாணம்.

"நம்மை மாயையின் கீழ்ப்படுத்துகிறவரும் அதினின்று விலக்குகிறவரும் அவரே." (கடவுளே.)

"மற்றெவைகட்கும்போலச் சன்மார்க்கங்களுக்கும் துன்மார்க்கங்களுக்கும் பிரமமே காரணமென்று வேதம் வெளிப்படுத்துகின்றன."

"உலகத்தினின்று எவனை யெடுத்துக்கொள்ள விரும்புகிறுரோ அவனையே நல்வினை செய்யப்பண்ணுகிறுர். இவ்வுலகத்தில் எவனை மீளவும் அனுப்புகிறுரோ அவனைத் தீமைகளைச் செய்யப்பண்ணுகிறுர்." கௌசிக உபநிஷதம். பிரமசூத்திரம். 3, 2, 38.

ஆக்ஷேபனை. தெய்வம் பாவத்துக்குக் காரணரென்றுமேற்காட்டியிருக்கிற உபநிஷத்துக்களோ கீதைகளோ பூர்வ ரிக்குவேதத்திலில்லாதவைகள். உபநிஷத்துக்களென்று கூறப்பட்டவைகளெல்லாம் ரிக்வேதகாலத்துக்கு அநேக வருஷங்களுக்குப் பின்னுனகாலத்துள்ள வித்வஜனங்களால் கல்பிதமாகச் செய்யப்பட்டு ரிக்வேதத்தின் கடைசியிற் சேர்க்கப்பட்டவைகள். இதற்கு அநேகமான சாக்ஷியங்களுள்ளன. பூர்வ ரிக்குகளி வில்லாதனவும் அதற்கு விரோதமானதும் வாக்கியங்கள் பிரமாணமாக ஒப்புக்கொள்ளத்தக்கவைகளல்லவென்று பெரியோர் ஒதுக்கிவைத்திருக்கிறுர்கள். ஆதலால் தேவன் பாவகாரணரென்பதற்கு மேலே தெரிந்துகொண்ட வாக்கியங்கள் உதவாதன வென்றறிக. மேலும் உபநிஷத்துக்களை ஆதாரமாகக்கொண்டு பிந்தியகாலாந்தரத்தில் உற்பத்தியான வேதாந்த நூல்களொன்றில்:

"இந்த ஜீவனுல் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்
அந்தத் தேவனுல் வருமென்ற மூடர்க ளநோகதி யடைவார்கள்"

என்று கூறியிருக்கின்றது. இவ்விரண்டு பிரமாணங்களில் முன் காட்டியவை தவறென்றும், பிற்காட்டியதே சரியென்றுந்தானல்லவா நிதான புத்திமான்கள் நிர்ணயிக்கத்தக்கது. இதையெல்லாம் யோசியாமல் தாங்கள் செய்துவந்த துஷ்கிர்த்தியப் பழக்கத்துக்குப் போக்குத்தேடி அதிபாரிசுத்தரான கடவுள் தான் பாவகாரணரெனத் துணிகரமாய்ப் பிதற்றுவது மகாபெரிய பாவமும் காதினுற் கேட்கக் கூடாத தேவநிந்தையுமா யிருக்கிறதென்றறிக.

3—வது. மற்றெரு பக்ஷத்தார் பாவத்துக்கு மாயைதான் காரணமென்று கூறுவர்.

ஆக்ஷேபனை. மாயையென்பதற்கு மயக்கம் சூனியமென்பதே பொருள். அப்படியானுல் பாவத்துக்குக் காரணம் மாயையென்னும்போது, பாவத்துக்குக் காரணமின்னதென்று சொல்ல நிச்சயமாய் ஒன்றுந் தெரியவில்லை. மயக்கமாயிருக்கிறதென்று அர்த்தப்படுமேயன்றி மற்றப்படி மாயை யொருபொருளென்றும் அதனிடத்து நின்று பாவம் உற்பத்தியாகி வந்ததென்றும் பொருள்படுமா? படாது. எப்படியுந் தங்கள் குற்றங்களை யொப்புக்கொள்ள மனமில்லாத இந்தப் பக்ஷத்தார் பாவிகளென்று ஒப்புக்கொள்வது தங்களுக்குக் குறைவென்றே, அல்லது தங்கள் முன்னேர்கொண்ட கொள்கைக்கு விரோதமென்றே, அல்லது வேறெந்த நோக்கத்தினுலோ பாவகாரணந் தெரியவில்லை யென்பதற்குப் பதிலாக அதேபொருளுள்ள வார்த்தையை யொரு வஸ்துவாக்கி அதன்பேரிற் சாட்டுகிறூர்கள். பாவம் வந்தற்கு முதுமூலகாரணம் நிச்சயிக்கக்கூடவில்லை யென்பதற்கு யாமும் உடன்படுகிறேம். ஆயினும் மனிதனிடத்து நின்றே அவன் செய்கைவாயிலாகப் பாவம் வெளிப்பட்டதென்பது நிராடங்கமாய் யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டியதும் ஒப்புக்கொள்ள அவசரமுமான விஷையம். கிறிஸ்து சமயக்கொள்கையு மிதுவே.

4—வது. மற்றெரு பக்ஷத்தார் பதி, பசு, பாசம் என்ற மூன்று பதார்த்தங்கள் என்றுமுள்ளன. இம்மூன்றுக்கும் அநாதிநித்திய ஸ்வயம்புத்துவமுமுண்டு. இம்மூன்றில் பதி என்பது கடவுள். பசுவென்பது ஆத்துமா. பாசம் என்பது பாவம். ஆத்துமாவைப் பாசமென்னப்படு மலம் அல்லது பாவம் அநாதியிலேயே பற்றிக்கொண்டது. ஆதலால் தானுப் என்றுமுள்ளதாயிருக்கிற பாசத்தை யெப்படி வந்ததென்று வினுவுதல் கூடாது. கூடுமானுல் கடவுளையும் எப்படி வந்தாரென்று பிரசினப்படுத்தல் போலுமாம். கடவுள் எப்படியோ, ஆத்துமாவும் பாசமும் அப்படியே யென்பார்கள். இதற்குப் பிரமாணம்:

"பதிபசு பாசமெனப் பகரிம் மூன்றில்
பதியினைப்போல் பசுபாசம் அநாதி."—நந்திவிளக்கம்.

"ஆதியலச் செம்பிலுறை களிம்புதானும்
ஆராயி லதற்கதுவே யநாதியாகும்,
ஆதியல மூலமல மநுக்கட்கெல்லாம்
ஆணவமு மாருயிர்கட் கநாதியாகும்."—சிவதருமோத்தரம்.

ஆக்ஷேபனே. பாசம், பந்தம், கர்மம், மலம் இவ்வெல்லாம் பாவமென்ற பொருள் குறித்தசொற்களன்றி வெவ்வேறு பொருள் குறித்தவைகளல்ல. இவற்றி லெந்தச் சொல்லைப் பிரயோகித்தாலும் உலகத்தில் சாமான்ய வழக்கமாயிருக்கிற பாவமென்றேயாகிறது. இத்தன்மையான பாவம் மனிதனுடைய செய்கை அல்லது தொழில்மாத்திரமாயிருக்கிறதேயன்றித் தனிமையான யாதொரு வஸ்துவன்று. அந்தத் தொழில் எவ்வகைத்து எப்படியாகிறதெனில், மனிதன் தனக்கு விதிக்கப்பட்ட தெய்வீகப்பிரமாணங்களை மீறிச்செய்யாது விட்டுவிடுதலும், விலக்கப்பட்ட பிரமாணங்களை மீறிச்செய்தலுமாகிய அந்தத் தொழிலே பாவமாம். ஆகவே யொருவன் செய்யுந் தொழிலாகிய செய்கையைத் தொழில் செய்யத்தக்க கருத்தாவென்றுவது ஒரு வஸ்துவென்றுவது சொல்வது பொருந்துமா? பொருந்தாது. ஏனெனில் செய்கைக்கு அநாதிநித்திய ஸ்வயம்புத்துவமுண்டெனச் சாமான்யமான அறிவுடையோரெவருஞ் சொல்லமாட்டார். பொருளுண்டான பின்பல்லவா அதன் செய்கை யுண்டாதல்வேண்டும். ஆதலால் பதி, பசு, பாசம்என்ற மூன்றில் கடவுளொருவரே அநாதிநித்திய ஸ்வயம்பு. ஆத்துமா கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டு அழிவற்றுள்ள நித்திய வஸ்து. பாசமாவது ஆத்துமாவின்பற்றுள்ளத்து விளையும் செய்கை. அதுவே பாவம், இதனை அநாதிநித்திய ஸ்வயம்புவென்பது எவ்வளவு மதிமயக்கம். மேலேகாட்டிய இவைகளையே வேறுரூபமாகக் காட்டிப் போலித் திருஷ்டாந்தங்களைக்கொண்டு மயக்கித் தாங்கள் சொல்வதே சரியென்று சாதிப்பார்கள். ஒரு திருஷ்டாந்தத்தைக் கொண்டு அதன் ஆபாசத்தை அறியலாம். ஆத்துமாவை அநாதியிலேயே பாவம் பற்றியிருக்கிறது. எதுபோலெனில், செம்பிலுள்ள களிம்புபோலவென்று மேலேகாட்டிய செய்யுளில் வெளியாகிறது. இதைக் கவனிக்குங்கால் களிம்பென்றும் செம்பென்றும் இரண்டு பொருள் சேர்ந்து ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டதில்லை. களிம்பே செம்பாயிருப்பதன்றித் தனித்தனி இரண்டு பொருளன்றும். களிம்பை முற்றும் நீக்கினவிடத்துச் செம்பென வேறுபொரு ளில்லையாய் முடியும். அவ்வாறே ஆத்துமாவுக்கும் மலசம்பந்தந் தொலைந்தவிடத்து ஆத்துமாவும் அதனோடு ஒழியவேண்டுமல்லவா? அப்படிக்கின்றி ஆத்துமா அழிவில்லாத வஸ்துவாயிருக்கிறதென்று அறிகிறோமே. ஆகவே யிது திருஷ்டாந்தாபாசமென்க. மேலும் அநாதியே ஆத்துமாவிற் சம்பந்தப்பட்டது. பாசமெனில் அது ஆத்துமாவுக்கு

இயல்பென்ருகும். ஒருபொருளின் இயல்பைச் சேதிக்கும்போது பொருளுக்கே நாசமுண்டாகும். இந்த நியாயத்தினுலும் பாவம் அநாதியே யுள்ளதன்று. மனிதனுல் வந்த துஷ்கிருதம் அல்லது தீவினை யென்ருகிறது. பாவம் எப்படி வந்ததென்பதற்கு இம்மட்டும் இந்துசமயத்தார் கொண்ட தாத்பரியத்தை விளக்கி அப்படியன்றென ஆக்ஷேபித்து நியாயங்கூறி வனைந்தாம். இனிச் சுபக்ஷத்தார் சொல்லு கிற சித்தாந்தத்தை எவ்வாறென்று விசாரிப்பாம்.

2–வது. பாவம் எப்படி வந்ததென்ற கேள்விக்குச் சுபக்ஷத்தார் கூறும் உத்தரவு.

முதலில் இந்தக் கேள்விக்கு உத்தரவு சொல்லும்போது அத ேைடு சம்பந்தப்பட்டொன்றின்பின் ஒன்ருய்த்தொடர்ந்துவருங் கேள் விகளும் சில வுள்ளன. எவ்வாறெனில், மனிதன் பாவஞ்செய்வா னென்பதைத் தேவன் அறிந்திருந்தும் அவனை ஏன் படைத்தார்? ஏன் கட்டளை கொடுத்தார். ஏன் சுயாதீனத்தைக் கொடுத்தார். அவன் பாவஞ்செய்யும்போது ஏன் தடுக்கவில்லை. ஒருவன் பாவஞ்செய்ய அவன் சந்ததி பரம்பரைகளையெல்லாந் தண்டனைக் குட்படுத்து வானேன் என்றிவைபோல்வனவாம். ஆதலால் பிரதமத்தில் தேவன் பாவகாரண ரல்லரென்பதையும், இரண்டாவது மனிதனே பாவ காரண னென்பதையும் விவகரிப்பாம்.

1. ஜெகோவாவாகிய கடவுள் சர்வபரிபூரண ஞானமுள்ளவ ரெனில், பிரதம சிருஷ்டியாகிய மிருத்திகேயன் தம்முடைய கட் டளையை மீறிப் பாவஞ்செய்வானென்பதை உற்பாதமாக அறிந் திருத்தல்வேண்டும். பரிபூரண காருணியமுள்ளவரெனில் அவனைச் சிருஷ்டிக்காதிருத்தல்வேண்டும். அப்படிக்கின்றி அவனைப் படைக்க வும், அதனுலவன் சாபத்துக் குட்படவுஞ் செய்ததினுல் அவரே பாவத்துக்குக் காரணரென்றும் இரக்கமில்லாதவரென்றுஞ் சொல்லிச் சிலர் குதர்க்கமாடுகின்றனர்.

உத்தரவு. தேவன் சர்வபரிபூரண ஞானமுதலிய அனந்தமான சுலக்ஷணமுடையவ ரென்பதில் எட்டுணையும் ஐயமின்று. மனிதன் தம்முடைய கட்டளையை மீறிப் பாவஞ்செய்வானென்பதும், சாபத் துக் குட்படுவானென்பதும் கடவுள் திருவுள்ள மறிந்திருந்த விஷை யமே. அவர் திருவுள்ளத்தில் நினைப்பதெல்லாம் நன்மை. செய் வதெல்லாம் நன்மை. நன்மை செய்வதே யவருக்கு வேலை. தம் முடைய பரிசுத்த லக்ஷணத்துக்கு அடாத எந்தத் தீய நினைவுக ளும் தீய செயல்களும் அவர் பக்கத்தும் அணுகா. "நெருப்பிலே புழுப்பற்றுமா." தேவரீர் பரிசுத்தர் பரிசுத்தரென்று தேவகணங்கள் ஓயாமற் புகழ்ந்து துதிக்கிருர்கள் என்பது வேதநிர்ணயம். இத்த கையரான சித்துப்பொருளாகிய கடவுள் எக்காலத்தும் எவ்விடத்துந் தாமுளர்ரகத் தோன்றப்பண்ணத்தக்க யாதொரு கிரியையுமின்றிச்

சும்மாவிருக்கக்கூடிய வஸ்துவா? சித்துப்பொருளெதுவும் தன்னையுள தாக விளக்கிக்கொண்டிருக்கத்தக்க சுபாவமுடைத்து. திருஷ்டாந்த மாக மனிதஆத்துமா கிஞ்சிக்ஞத்துவமுள்ள சித்துப்பொருளாதலில் பிரத்தியக்ஷப்படாதிருந்தும் தானுளதாகத் தன்னை விளக்கிக்கொண் டிருப்பதை நாம் ஐயந்திரிபின்றி யறிந்திருக்கிறோமல்லவா? அவ் வாறே கடவுளுந் தாம் சர்வக்ஞத்துவமுள்ள சித்துப்பொருளாதலில் அரூபமும் அதரிசியமுமாகிய தாம் நிர்க்குணப்பிரமம்போலாது தம்மை விளங்கச்செய்ய வேண்டுமென்பது துணிவு. இல்லாவிடில் மேலே விதந்தோதப்பட்ட திவ்விய லக்ஷணங்களுக்கு யாதுபயன்? ஒன்றுமின்றும். ஆகவே சர்வ பரிபூரண ஞானமுள்ள கடவுள் தமது அநாதி நிர்ணயப்பிரகாரம் சிருஷ்டித்தொழிலைச் செய்யவும் சிருஷ்டிக்கப்படுபவைகளில் தம்முடைய சாயலாகச் சிருஷ்டிக்கிற மனித சிருஷ்டிகளுக்குத் தம்முடைய பரிபூரண சத்குண விலாசங் களையும் உன்னத மகிமைப்பிரதாபத்தையும் விளக்கிக்காட்டவுந் திருவுள்ளங்கொண்டு சமஸ்தத்தையும் சிருஷ்டித்தார். மனிதனைத் தம்முடைய சாயலாகச் சிருஷ்டித்தார் என்ற துணையானே தமக்குக் கீழ்ப்பட்டிருக்கிற ஸ்வயாதீனம் பரிசுத்தம், ஞானம், பாக்கியம், விவே கம் அல்லது பகுத்தறிவு நல்மனச்சாக்ஷி முதலிய தத்துவங்களமைந்த ஆத்துமதேகியாகப் படைத்தார். ஏனைய மிருகமுதலிய படைப்பு களுக்கு ஆத்தும மின்றென்றுமாகிறது.

“தேவன் தாமுண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்து அவை மிகவும் நல்லனவென்று கண்டார்.” (ஆதி. 1: 31.) தைவீக அருள் பெற்றெழுதப்பட்ட சுருதி நலமென்று கற்பிப்பதைக் கிஞ்சிக்ஞத் வராய் மனிதரெவரும் தீதென்று கொண்டுவரல் நியாயமன்று. நியாய ரஹிதமென்று ஆக்ஷேபிக்க அருகருமல்லர்.

2. தேவன் சருவஞானமுள்ள தம்முடைய திருவுள்ளத்தில் நலமென்று கண்டவற்றை வரும் இடையூற்றுக்காகப் பின்னிடைந்து செய்யாதிருக்கில் அவருடைய சர்வவல்லமை யென்னவாம். ஆத லால் தமது திருவுள்ளத்தில் நலமென்று கண்டபடியே சிருஷ்டிப்புத் தொழிலைச் செய்து முடித்தார். இயற்கைப் பிரமாணத்தையுங் கற் பித்தருளினர். இன்னும் தமது சர்வஞானத்தால் மனிதனுக்கு வரும் விக்கினத்தையறிந்து அவன் தன்னை விலக்கிக் காத்துக்கொள்ளும் பொருட்டுத் தகுதியான தத்துவங்களையும் உபகரணங்களையும் அவன் சுபாவத்தோடு பொருந்த அமைத்தருளினர். இவ்வகையாக ஏனைய சிருஷ்டிகளுக்குக் கிடையாத அபூர்வ சிலாக்கியமான லக்ஷணங்கள் அமையப்பெற்றிருந்தும் தேவகட்டளையை மீறினாற் சம்பவிக்கத்தக்க நஷ்டங்கள் தெளிவாய் வற்புறுத்தப்பட்டிருந்தும் இவ்வெல்லாவற் றையும் உபேக்ஷித்து அநாதரித்துச் சுபுத்தியைப் போக்கடித்துத் துர்ப்புத்திக்குச் செவிகொடுத்து தேவர்களி லொருவனைப்போலாகலா

மென்று மௌட்டியமாக வீண்பெருமைகொண்டு நல்மனச்சாக்ஷியையு மழுக்கி விதித்தவழியை விட்டு விலக்குவழியிற் சென்று பாவக் கிடங்கில் அதோமுகமாக விழுந்தானென்றால் அந்தக் கேடு மனிதனுடைய தவறுதலால் நேர்ந்ததேயன்றி தேவனுடைய காருண்ய மின்மையெனல் பொருந்துமா? அளவற்ற பரமகாருண்யத்தினாலே யல்லவோ மனிதனுக்கு உத்கிருஷ்டமான நன்னிலை கிடைத்தது. "தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி யென்செய்வார்" என்ற பழமொழியு முண்டன்றோ? மனிதனைக் கடவுள் நன்னிலையிற்றான் படைத்தார். அவன் ஈடேற்றத்துக்கு வழியைச் செப்பனிட்டுமிருக்கிறார். வருந்தியழைக்கவுஞ் செய்கிறார். இவற்றாலே தேவஞானமும் பரமகாருணியமும் ஸ்பஷ்டமாய் விளங்குகிறதல்லவா? இத்தையெல்லாங் கவனியாமல் விட்டு விட்டுப் பெருவழியில் துணிந்து செல்வது மனிதன் தவறேயாம். தேவன்பேரிற் போடுவது அநியாயமும் அறிவீனமுமாம்.

2-வது. கேள்வி. ஏதேனென்னும் ஸ்ரீங்காரவனத்தின் மத்தியில் நன்மை தீமை யறியத்தக்க கனியைக்கொடுக்கும் விருக்ஷத்தைத் தேவன் உண்டாக்கி வைத்ததினாலன்றோ வினைவந்து சூழ்ந்தது, அப்படிச் செய்வானேனென்பர்.

உத்தரவு. இந்தக் கேள்வி கடவுள் மனிதனுக்குப் பல கண்களைக் கொடாமல் இரண்டு கண்களைமாத்திரங் கொடுத்ததற்கு நியாயமென்னவென்று கேட்பதுபோலிருக்கிறது. இவ்வகைப்பட்ட நியாயங்களைத் தேவன் நமக்கு வெளிப்படுத்தினதில்லை. அகிலாண்டங்களையும் அவற்றிலுள்ள தமது சிருஷ்டிகளாகிய சமஸ்த சராசரங்களையும் தமது ஒரே ஆக்ஞாசக்கரத்தின் கீழமைத்து அரசாக்ஷி செய்வதற்கு யாவும் இன்னின்னபிரகாரமா யிருக்கவேண்டுமென்று தமது ஞானத்தினா லேற்படுத்தினாராதலால் அவரியற்றிய அனைத்தும் சரியென்றே நம்பவேண்டும். அரசனொருவன் தன்னுடைய ராஜ்யத்திலுள்ள பிரஜைகளை அடக்கியாண்டு நடத்துவதற்கென்று செய்யுங் காரியங்களனைத்திற்கும் அவர்களுக்கு நியாயங்கூறி விளக்கிக் காட்டுவதில்லை. அதுபோலவே தேவன் செய்யுங் காரியங்களொவ்வொன்றிற்கும் நியாயத்தை நமக்கறிவிக்கிறதில்லை. நாம் அறிவதற்கவசியமானவைகளைத் தேவன் நமக்கறிவித்தும் அறிவதற்கு வழியைக் காட்டியுமிருக்கிறார். நமது சிற்றறிவுக்கு எட்டாத காரியங்களையெடுத்து அது நியாயவிரோதமென்று சொல்லித் தேவன்பேரிற் குற்றஞ்சாட்ட முயல்வது எவ்வளவு மதியீனம்.

மனிதன் முதலாக ஊர்வன ஈறாக உலகத்திலுள்ள ஜீவபிராணிகளையும் தாபரமுதலிய அசரவஸ்துக்க ளனைத்தையும் உற்றுப்பார்க்கும்பொழுது அவைகளனைத்தையும் கடவுள் தமது சருவஞான சாமர்த்தியத்தினாலேயே சிருஷ்டித்திருக்கிறாரென்பது பிரத்தியக்ஷ

மாய் விளங்குகிறது. ஆதலால் நன்மை தீமை யறியத்தக்க கனிகளைக் கொடுக்கும் விருக்ஷத்தைப் பரதீசு நந்தனவனத்தின் மத்தியில் நாட்டி வைத்ததும் அவரியற்றிய மற்றும் எக்கிரியைகளும் அவ்வவ்வித மாகவே இயற்றப்படவேண்டியது உத்தமமென்று கண்டு திரிகால தரிசனமுடையராகிய நமது கடவுள் தமது மட்டற்ற ஞானத்தினுற் செய்தாரெனவே ஐயமற நாமனைவரும் நம்பிக்கொள்ளவேண்டியது.

சிற்றறிவுடையனுகிய மனிதன் சருவஞான சாமர்த்தியத்தினுல் சருவவல்லவராகிய கடவுளியற்றிய கிரியைகளனைத்தையும் வரை யறுத்து அவர் சருவ சராசரங்களையும் சிருஷ்டித்த நோக்கத்தையும் அவ்வவற்றிற்குரிய காரண காரியங்களையும் இன்னின்னவென்று அளவிட்டறிய வல்லவனு? அவன் தன்னியல்பைத் தானும் நிதானித் தறிய வல்லவனல்லன். நிலத்தின்மேல் முளைத்திருக்கிற புல், பூண்டு முதலிய அற்பவஸ்துக்களின் தன்மையைத் தானும் தெளிந்தறியக் கூடாதவனுயிருக்கிருனே. அப்படியிருக்க நமது மனுதிகளுக்கு எட்டாத தேவன் தமது பரிபூரண ஞானத்தினுலே சிருஷ்டித்த சிருஷ்டிகளை யாதுகாரணங் கருதிச் சிருஷ்டித்தாரென்று வினுவி வாதுசெய்யப் புகுவது எவ்வளவு புத்தியீனம். கிருஷிகன் வயல் நிலத்தை உழுதுவரும்போது அங்கிருந்த புற்றென்று கொழுநுனி யால் இடறுண்ண அதனுள்ளிருந்த அற்பப்பிராணியாகிய எறும்பு எழும்பி ஓ! மனிதனே என்னத்துக்காக நான் குடியிருக்கிற புற்றை உழுது கெடுக்கிறுயென்று கேட்பது சரியா? உழுது பயிரிடுவதினுலே தானியம் விளையுமென்றும், விளைந்தால் அத்தானியங்களைக் கூட்டிச் சேர்த்து ஜீவியம் பண்ணலாமென்றும் பகுத்தறிய விவேகமற்ற அவ் வெறும்பும் தன்னளவிற் சமாதானமுள்ளதா யிருக்கின்றதே. எறும் புந் தேவனுற் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டி. மனிதனுந் தேவனுற் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டி. மனிதனேடொத்துப் பார்க்கும்போது எறும்பு அற்பச்சமானமேனும் உடைத்தாயிருக்கின்றது. மனிதனைத் தேவனேடொத்துப் பார்க்கும்பொழுது அவனே சிறிது சமான மேனுமில்லாத மகா அற்பவஸ்துவாகவே யிருக்கிருன். அவ்வியல் பினனுன மனிதன் வரம்பில்லாத ஞானத்தையுடைய தேவனின் வழியையும் கிரியைகளையும் பகுத்தறிய வல்லவனு? யோபு. 9: 1—10.

நன்மை தீமை யறியத்தக்க கனியைக்கொடுக்கும் விருக்ஷத்தை நாட்டிவைத்த நோக்கத்தைத் தேவன் நமக்கறிவியாதே போனுராயி னும் அதற்குரிய சில நியாயங்கள் நமது சிற்றறிவுக்குப் புலப்படுகின் றன. அவற்றை யீண்டெடுத்துக் காட்டுதும்.

மனிதன் சிருஷ்டியாரம்பத்திலே தேவனுற் சிருஷ்டிக்கப்பட்ட சர்வ சிருஷ்டிகளுக்கும் இறுதியிற் படைக்கப்பட்டவன். பூலோ கத்திலுள்ள சர்வ பிராணிகளுச்குள்ளும் அவனே உத்தம சிருஷ்டி.

அவன் பரிசுத்த லக்ஷணமனைத்தும் பெற்றவன். சகல ஜீவபிராணிகள்மேலும் அவனுக்கு அதிகாரமிருந்தது. அக்காலத்திலே பூலோகம் அவனுக்குச் சீரும் செழிப்பும் இன்பமு நிறைந்த வாசஸ்தானமாயிருந்தது. இப்படியே அவன் பூலோகத்தின்கண்ணுள்ள அனைத்தின் மேலும் அதிகாரம் பெற்றவனுயிருந்ததினல் முன்னிருந்த தேவதூதர் ஆணவங்கொண்டு கெட்டுப்போனதுபோல அவனும் ஆணவங்கொண்டு கெட்டுப்போகாமல் தான் தேவனுற் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டியே யென்பதை யவன் எப்பொழுதும் நினைவுகூர்ந்து கீழமைந்து நடக்கப்பண்ணத்தக்கதாக அவ்விதமான வொரு பிரமாணம் விதிக்கப்பட்டது. அதை நியாயமல்லவென்று சொல்வது தகுதியா? அந்தப் பிரமாணத்தைத் தேவன் விதித்ததே நியாயம். மனிதன் அதனை யங்கீகரித்து அதற்குக் கீழமைந்து தேவனே சிருஷ்டிகர். தான் அவராற் சிருஷ்டிக்கப்பட்டவனென்றெண்ணி அவரைச் சார்ந்து நடக்கவேண்டும். அப்படி நடந்தால் அவனுக்கு வரும் நன்மைகளுக்கு எல்லையிராது. அதை விட்டுத் தனக்குக் கிடைத்த ஞானத்தையும் விவேகத்தையும் மனச்சாக்ஷியின் திவ்விய போதனையையுந் தள்ளித் துர்ப்புத்திக் கிடங்கொடுத்து கேட்டுக்குள் விழுந்தது மனிதனுடைய குற்றமாமேயன்றி மனிதனை யிரக்கமாய் நன்னிலையில் வைத்த தேவனுடைய குற்றமென்று அவர்பேரிற் சாட்டத்துணிவது மகா பயங்கரமான பாவம்.

3–வது கேள்வி. மனிதனைச் சுயாதீன சித்தமுள்ளவனுகத் தேவன் சிருஷ்டித்ததினுலல்லவோ அவன் பாவத்தில் விழ நேரிட்டது. அப்படி ஏன் அவனைப் படைக்கவேண்டு மென்பர்.

உத்தரவு. மனிதனுக்குச் சுயாதீனத்தை யருளிச்செய்தது அவனுக்கு எவ்வளவோ பெரிய மகிழ்ச்சிக்கும் பேரின்ப சுகத்தை யடைந்து வாழுகிற நித்திய வாழ்க்கைக்கும் ஹேதுவான பெரிய கிருபையான யத்தனம். இதனுலே கடவுளின் ஜீவகாருணியமும் அவருடைய நீதியும் வெளிப்படுகிறது. மனிதனுக்குச் சுயாதீனத்தை மாத்திரங் கொடுத்து அம்மட்டோடே விட்டுவிடாமல் ஞானம், விவேகம், நல்மனச்சாக்ஷி இவைகளையும் அருளிச்செய்து அவன் தன்னை நன்னிலையிற் காத்துக்கொள்ளத்தக்க சர்வசக்தனுகவே யவனைப் படைத்தார். மேலுந் தான் தேவனுற் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டி யென்றும், சார்வதா தன்னுடைய சிருஷ்டிகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளத் தான் கடமைப்பட்டவனென்றும் இந்த வுணர்ச்சி எந்நாளும் அவனுள்ளத்தில் நிலைப்படும்பொருட்டு இன்னது செய்யத்தக்கது இன்னது செய்யக்கூடாதது என்ற விதிநிஷேத கற்பனையையும் அருளிச்செய்து இதை மீறி நடந்தால் இன்னதண்டனை சம்பவிக்குமென்றும் திட்டமாய் வற்புறுத்திச் சொல்லியுமிருக்கிறுர். இந்த நல்ல ஹேதுக்களையெல்லாம் புத்தியோடு கையாள மதிமறந்து

அவைகளை யுபேக்ஷித்துத் தேவகட்டளையை மீறிப் பாவத்தில் விழுந்த குற்றம் மனிதனுடையதேயன்றித் தேவனுடையதென்று சொல்லத் துணிவதெப்படி? துணியினும் அது தேவன்பேரிற் சாரத்தக்கதன்று. மேலும் சுயாதீனமென்பது தன்னிஷ்டப்படி யொன்றைச் செய்யவும் செய்யாதிருக்கவுந்தக்க இயல்பு. நன்மையை வழுவித் தீமை செய்ய வாயினும் தீமை செய்யாமல் நன்மை செய்யவாயினும் தன் சொந்த இஷ்டம்போலச் செய்துகொள்ளலாம். அப்படியாகச் சாதுக்களா வார் ஞானம், விவேகம், நல்மனச்சாக்ஷியென்ற இத்யாதி புனிதத்துவங் களுக்குப் பற்று அவா, இச்சை யென்றவைகளைக் கீழ்ப்படுத்தி அடக்கி நடந்து தேவனுக்குப் பிரியமானவும் தேவகற்பனைக்கு அவிரோத மானவும் கருமங்களைச் செய்து சன்மார்க்கத்தில் வளருவார்கள். சன் மார்க்கம் வளர மனோவிருத்தியுண்டாம். மனோவிருத்தி சுதிக்க மனப்பாக்கிய முண்டாகும். இது சாதுதர்ம்மம். ஏனையர் பற்று, அவா, இச்சை முதலியவைகளுக்கு ஞானம், விவேகம், மனச்சாக்ஷி யாகிய புனிததத்துவங்களைக் கீழ்ப்படுத்தித் தேவகற்பனைக்கு நேர் விரோதமான துஷ்ட கிருத்தியங்களைச் செய்து துன்மார்க்கத்தில் வளருவார்கள். துன்மார்க்கம் வளர மனோதர்ம்மங் கெடுகின்றது. மனோதர்ம்மங் கேடுற்றவிடத்து நித்திய நிர்ப்பந்தம் பீடிக்கும். இதுவே பாபகர்ம்மம். சாதுதர்ம்மத்தை யநுஷ்டிக்கிறவர்கள் நித்திய பேரின்பத்தையும், பாபகர்மத்தை யநுஷ்டிக்கிறவர்கள் நித்திய நாசத் தையுமடைவார்கள். இந்த முறைதான் பரிசுத்தமான தேவநீதிக் கும் உன்னதமான சர்வஞானத்துக்கும் பொருந்திய ஏற்பாடு. இப் படிக்கில்லாமல் மனித சிருஷ்டியைப் பிரதிமைகளாக வைத்து தேவன் தமது சித்தத்தின்படியே நடத்துகிறதானல் நன்மை தீமைப் பகுப்பேதுக்கு? நீதிநியாயமுறை யேதுக்கு? மோக்ஷநரக பதவி யேதுக்கு? சுகதுக்க வியவஸ்தை யேதுக்கு? ஸ்வயாதீனமில்லையென் ருல் விதிநிஷேதமில்லனவாம். அவையின்றெனில் ஒழுக்கமின்ரும். ஒழுக்கமின்றெனிற் குற்றமின்ரும். குற்றமின்றெனில் தண்டமின் றென்ரும். தண்டமின்றெனில் நீதியும் நீதி நடாத்தும் அரசனும் வேண்டாமென்ரும். ஆகவே யெல்லாந் தலைதடுமாறி நிலைகலங்கி உலகத்திலும் இப்பொழுதுளவாயிருக்கிற சீரும் சிறப்புஞ் செழிப்பு மின்பமு மின்ருய்ப் பாழ்பட்டிருக்கும். அப்படிக்கின்றி உலகம் இதேரீதியில் நிலைபெறடைந்துவரும் இயற்கையே எந்த மனிதனும் ஸ்வயாதீனம் பெற்றவனென்றும் அவனவன் செய்கைக்கு அவ னவனே உத்தரவாதியென்றும் சாக்ஷி பகர்ந்துகொண்டிருக்கிறது. இதையெல்லாங் கவனியாமல் பரிசுத்த நீதிபரனைக் குற்றப்படுத்தப் பார்ப்பது மகா மோசமான காரியம்.

4-வது கேள்வி. மனிதன் பாவத்தில் விழுவானென்பதைத் தேவன் அறிந்திருந்தும், உடனே தடுக்காமல் அவனை ஏன் பாவத் தில் விழவிட்டார் என்பர்.

உத்தரவ. மனிதனுக்கு ஸ்வயாதீனத்தை யருளிச்செய்து அவன் தன்னிஷ்டப்படி யொன்றைச் செய்யவும் அதனதன் பலப்பிராப்தியை அவனடையவும் என்று தாம் நிருமித்த நியமனத்துக்கு மாறாக அவனை யப்போதப்போது தடுக்க அவருக்கு ஆவஷியகமில்லை. அப்படிச் செய்வதிலும் அவனைச் சுயாதீனமற்றவனுகச் செய்துவிடுவது சுகமான செய்கையாயிருக்குமல்லவா? அப்போது மனிதனிலைமை யெத்தனை நிர்ப்பந்தமாயிருக்கும். இந்தக் கேள்வி சுயாதீனமாய் நடக்கமாட்டாமல் பலாத்காரமாயேவி நடத்தப்படுகிற மிருகங்களைப் போல அவனைத் தேவன் ஏன் படைக்காமல் விட்டாரென்று கேட்பதுபோல விருக்கின்றது. அல்லாமல் தேவன் விதித்தவரம்பை மீறி மனிதன் உள்ளத்தில் பாவ இச்சை தோன்றும்போதே ஒரு பக்ஷமாய்த் தேவன் தடுத்துவருகிறுர். எப்படியெனில், உலகத்திலுள்ள மானிடத்தொகுதிகள் அனைத்திற்கும் தேவனருளிய பொதுவான விதிவிலக்குப் பிரமாணத்தை அவமதித்துத் தன்னிஷ்டப்படி நடக்க யத்தனிக்கும்போதே அவரவருள்ளத்தில் கடவுள் அமைத்து வைத்திருக்கிற நல்மனச்சாக்ஷி கண்டித்துப் புத்திசொல்லித் தடுக்கின்றது. அந்தத் தடுக்கலையு மீறிப் பாவஞ்செய்வானுகில் சர்வலோக ஏகசக்கரேஸ்வரரின் சந்நிதியில் அது போய்த் தெரிவிக்கிறது என்ற கருத்தையடக்கி,

"புவனமன் னுயிர்க ளிந்தப் பொதுவிதிப் பிரமாணத்தை
அவமதித் தொழுகுங் காலை யவரவ ரகத்துவாழுந்
தவலரும் ஜீவசாக்ஷி தடுப்பனத் தடையை மீறிற்
குவலையா திபனுக் கெல்லாங் கூறிமுன் னிற்பன்மாதோ"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஜீவசாக்ஷி சொல்லும் போதனை தேவஅருளாற் கிடைத்ததன்றோ; இவற்றையெல்லாம் அநாதரவுபண்ணி மனிதன் பாவத்தில் விழுந்தால் அந்தக் குற்றம் யாருடையது. நீவிரே நிதானியுங்கள். தேவனுடையதென்று சொல்லத்துணிவது மோசமும் புத்தியீனமுமாம்.

5-வது கேள்வி. கடவுள் அதிபாரிசுத்தரா யிருக்கையில் அசுத்தமாகிய பாவம் பின்னை யெப்படித்தான் உலகத்தில் வந்தது என்பர்.

உத்தரவ. சுத்தத்தினின்று அசுத்தந் தோன்றுமா? தோன்றுவதில்லை. ஆதலால் கடவுள் பாவகாரணரல்லரென்று விளங்குகிறது. பின்னைப் பாவம் பூமியிலே யெப்படி வந்து நுழைந்தது என்பதைத் தேவன் திருச்சித்தங்கொண்டு நமக்கு வெளிப்படுத்தினுலன்றி நாமறிந்துகொள்ளுதல் கூடாதகாரியம். மனிதன் தானுகவே பாவத்தைச் சம்பாதித்துக் கொண்டானென்று கிறிஸ்துவேதஞ் சொல்லுகின்றது. பிணியாளிக்கு மருந்து வேண்டியதுபோல நமக்குப் பாவப்

பிராயச்சித்த வழியொன்றே வேண்டியது. கிறிஸ்து வேதநூலே அதனை நமக்கறிவிக்கின்றது.

2 பேதுரு, 2: 4—ம் வாக்கியத்திலும், யூதா, 6—ம் வசனத்திலும் காண்கிற பொருளே யூதஜாதியார் பாவத்தின் காரணத்தைக்குறித்து எண்ணியிருந்த எண்ணத்துக்கு ஒத்திருக்கின்றது. எப்படியெனில், தேவன் தமது தூதர்வசத்திலே இப்பிரபஞ்சத்துச் சில பகுதிகளை ஆளும்படி யொப்புவிக்க அவர்களில் ஒரு தூதன் தனது உத்தியோகத்திலுயர்ந்து சிருஷ்டிகராகிய கடவுளுக்குச் சமானமாயிருக்கவேண்டுமென்கிற ஆணவசிந்தையுள்ள தனது இஷ்டர்களால் ஏவுண்டு அவர்களுடனே கூடிச் சருவவல்லவராகிய தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினதினாலே தேவன் அவனையும் அவனிஷ்டர்களையுங் கீழே தள்ளிவிட்டார். அவர்கள் தேவனுக்கு விரோதிகளாயிருந்ததினாலே அவரது சிருஷ்டிகளாகிய, ஆதாம்முதலான மனிதரனைவரையும் பாவத்திலே விழுத்தித் தங்களைப்போலாக்கிவருகிறார்கள்.

மேன்மையுள்ள சிருஷ்டிகளாகிய தேவதூதர் எப்படிப் பாவத்தில் விழுந்தார்களென்று கேட்கில் அவர்களும் மனிதரைப்போலவே யுக்தி, விவேகம், சுயாதீனமுதலியன உள்ளவர்களாயிருந்ததினாலே மேற்காட்டியபடி அவர்களும் பாவத்தில் விழக்கூடியவரென்பதற்குச் சந்தேகமென்ன?

இதுநிற்க: தான் செய்யவேண்டிய கடமைகள் இன்னின்னவென்று அறியத்தக்க மேலான வரத்தையும், நன்மையின்னது தீமையின்னதென்று பகுத்தறியத்தக்க சாமர்த்தியத்தையுமுடைய மனிதன் இடைவிடாமல் வீணாகப் பாவங்களைச் செய்கிறதெப்படி? இது நமக்கு விளங்கவில்லையேயெனில் அகிலாண்டங்களையும் அவற்றிலுள்ள யாவையும் சிருஷ்டித்து ஆண்டுவருகின்றவராகிய சருவபரிபூரண தேவனால் இப்பிரபஞ்சத்தில் இயலுகின்ற யாவும் நமது புத்தியினாற் கிரகித்துக்கொள்ளுகிறபடி யிருப்பனவல்ல. ஆகிலும் தேவன் செய்தவைகளெல்லாம் நன்மையாய் முடிந்திருக்கும். அனவரதகாலமுள்ளவராகிய கடவுளது முடிவில்லாத தனியரசிருக்கையின் கீழ் நடக்குங் காரியங்களின் இயல்பைக்குறித்துச் சிறிதெனினும் விளங்கிக்கொள்ள நமக்குச் சக்தியில்லாதிருக்கும்போதே நமது அற்பப் புத்திக்குச் சமாதானப்படாதவைகளைக்குறித்து வாதாடுவது பேறறிவல்லவென்றறிக.

6—வது கேள்வி. தேவகட்டளையை மீறி விலக்கப்பட்ட மரத்தின் கனியை யருந்தி முதல் மனிதர் பாவிகளாக அதற்கு நேர்ந்த தண்டனை அவர்கள்மட்டோடே நில்லாமல் நிரபராதிகளான அவர் சந்ததி பரம்பரைகளையும் தொடுத்துப் பிடிக்கவும் சாவுக்குட்படுத்தவும் வந்த முகாந்தரமென்னை? உலகநீதி முதலாய்க் குற்றவாளியைத்

தானே தண்டனைக் குட்படுத்துகிறது. தேவநீதி நிரபராதிகளைத் தண்டிப்பது சரியாகுமா? ஆதலின் அது ஒப்புக்கொள்ளத் தக்கதன்றென்பர்.

உத்தரவு. 1-வது. தொன்றுதொட்டு மாதுர் பிதுர்வழியாய்ச் சந்ததி பரம்பரையாய்த் தாத்காலபரியந்தம் பிரபஞ்சத்தில் உற்பத்தி திதி நாசமடைந்துவருஞ் சமஸ்த மானிடப் பிரகிருதிகளும் வடிவத்திலுங் குணத்திலும் சப்தத்திலும் செய்கையிலும் பெரும்பாலும் அவரவர் பிதா மாதாக்களின் சாயலாக ஏகதேசமா யொற்றுமைப் பட்டுப் பிறக்கின்றனவென்பது யாவரும் நிராக்ஷேபனையாய் ஒத்துக் கொள்ளத்தக்க விஷயம். இது சரீரோத்பவம்.

2—வது. ஒரு விளக்கினின்று மற்றொரு தீபமேனும் அநேக தீபமேனுங் கொளுத்தப்படுவதுபோலப் பிதுர் பரம்பரையாக ஆத்மோற்பவமும் நடந்துவருகின்றதென்பதும் பெரும்பாலார் ஒப்புக்கொண்ட விஷயம். ஆனால் சிலர்மாத்திரம் கடவுளே பிரதிதினமும் சிருஷ்டியாதி தொழிலை நடத்திவருகின்றன ரென்பர். அக்கொள்கை தவறு. சிருஷ்டியாதி தொழில்களெல்லாவற்றையும் கடவுளது பிரதமசங்கற்பமாகிய இயற்கைப்பிரமாணமே நடத்திவருகிறதென்று கற்பிக்கிறது சுருதி.

ஆத்தும சிருஷ்டிகளல்லாத ஏனைய சிருஷ்டிகளிலும் அசர சிருஷ்டிகளிலுங்கூட இவ்வாறு சில விஷயங்களி லொற்றுமைப் பட்டிருப்பதைப் பிரத்தியக்ஷத்திற் காணலாம். ஜாதி ஜாதியான மிருகங்கள், பறவைகள், மத்ஸ்யங்கள், ஊர்வனங்கள் முதலியன வடிவு நிறங் கதியாதிகளில் அநேகமா யொற்றுமையுள்ளன. தாவர சங்கமங்களைப் பார்த்தாலோ ஒவ்வொரு வருக்கமும் வடிவத்திலும் இலை, பூ, காய், கனி, சுவை முதலியவற்றிலும் எவ்வளவாயோ ஒற்றுமைப்பட்டிருக்கின்றன. சிலவேளை கால விகற்பம், ஆகாய விகற்பம், நீர் விகற்பம், நில விகற்பம், பக்குவ விகற்பம் இத்யாதிகளால் சிற்சில வருக்கங்கள் சிலவற்றிற் பேதப்பட்டாலும் படும். அவைகளைச் சாமான்ய நியமமென்று கொள்ளாமல் பிரமாணமாகக் கொண்டுவரல் புத்திக்குத் தோஷம். இவ்வாறு இயற்கைப்பிரமாண வரம்புக்குட்பட்ட சந்ததி பரம்பரைகளின் உற்பத்திக் கிரமமிருக்கச்சே ஆத்துமாவுந் தேகதத்துவ முழுவதும் சம்பந்தப்பட்டு மாதா பிதாக்கள் செய்த பாபகர்ம்ம தோஷங்களாகிய விஷமக்குணத்துக்குமாத்திரம் சந்ததிகள் அபாத்தியஸ்தராவ தெப்படி? "வித்தில்லாத சம்பிரதாய மேலுமில்லை கீழுமில்லை" என்கிற லோகவதந்திப்படி பிதுரார்ச்சிதமான பாபதோஷம் சந்ததிகளிலும் ஒட்டிக் கிளைத்து வளர்ந்து பெருகிவருகின்ற தென்றறிக.

பெற்றோருக் குள்ளனவாயிருந்த சில வியாதிகள் கருவில் ஒட்டிநின்று கருப்பத்திற்சேர்ந்து சிசுக்களில் வியாபித்து உலகத்திற் பிறந்து பிள்ளைகள் வளர வளரப் பிணியும் வளர்ந்து பெருகி ஔஷ

தங்களுக்குந் தீராமல் இறுதிகாறும் பீடித்துநிற்கிறதை அறியாதவர் யார்? அவ்வாறே பெற்ருருடைய பாபகர்ம்ம லேசமும் கர்ப்போத் பத்திக் காலந்தொடுத்து பிள்ளைகளோடு தடித்து உலகத்தில் வளர்ந்து சகல துர்க்குணங்களுக்குங் காரணமாய் ஊத்து நின்று கடைசி யாய்ப் பருவகாலத்தில் செய்கைப் பாவத்தை விளைவிக்கிறது. மற் றப்படி முதிராப்பிண்டங்கள் தாயுதரத்தே யொழிந்துபோவதற்கும், பகுத்தறிவு முதிராத சிசுக்கள் மரணத்தின் வாய்க்குள் புகுவதற்கும் காரணமென்னை? பெற்ருேர் செய்த பாபகர்ம்மமேயன்றி நீவிர் மயங் கிக் கூறுகின்ற பூர்வ ஜென்மத்து அநுபவித்து முடியாது மீந்து நின்ற பூர்வகன்ம சேடமன்றெென வறிக. இதற்குப் பிரமாணம்:

"நான் துர்க்குணத்தி லுருவானேன், என் தாய் என்னைப் பாவத்திற் கர்ப்பந்தரித்தாள்." சங். 51: 5.

"கருவிலே விடம்போற் பாவங் கலந்துபின் கதித்துப் பாழ்த்த
உருவிலு மனுதி யந்தக் காணத்து மொருவா தாக
மருவிஙின் றுடற்றி நாளும் மரணபா தலத்தைக் காட்டித்
தெருவிலே விடுக்குஞ் செய்கை ஜெகங்கண்டு தெருளா தின்னும்."
(இ-யாத்திரிகம். சோக. 20.)

இச்செய்யுளாலு மறிக.

3–வது. பிதா மாதாக்களுடைய தன தான்ய சம்பத்துக்களாலு லும், கடன்முதலிய கஷ்ட நஷ்டங்களாலும், மற்றவகையான லாப லோபங்கள் துன்ப இன்ப சுகதுக்கக் கூறுபாடுகளாலும் எல்லா வற்றிற்கும் அவரவர் சந்ததிகளே உலகத்தில் உரிமைப்பட்டவர் களாகவும் உத்தரவாதிகளாகவும் பாத்தியப்பட்டு வருகிருர்கள். இது தொன்றுதொட்டு உலகத்தில் நடந்துவருகிற நியமமான ஏற்பா டென்று எவரும் அறிந்த விஷயம். அப்படியே பிதா மாதாக்கள் செய்த பாவக்கறையும் பிள்ளைகளுடைய ஆத்துமாவைப் பற்றிநிற் கிறதென்று சொல்லும்போது ஊடே பிதுரார்ச்சிதமான தனரணங் களுக்கும் ஏனைய லாபலோபங்களுக்கும் பிள்ளைகள் பாத்தியப்படு வது இவ்வுலகத்தில் வழக்கமா யேற்பட்டு நிலைப்பட்ட முறையே யன்றித் தேவ நியமமன்றென்றும், அது தேவநீதிக்குச் சரியல்லவென் றும் சிலர் வீண்வாதஞ் செய்கிருர்கள். இது தப்பான அபிப்பிராய மென்று இந்துமத நூல்களும் சில அநுஷ்டானங்களுந் தெளிவாய்க் காட்டுகின்றன. அவை வருமாறு—

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றுன் கொல்லெனுஞ் சொல்" என்றும்,

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்"

என்றும் மகா ஞானியாகிய திருவள்ளுவர் சொன்ன இக்குறளில் பிதாவானவன் செய்த தபோபலத்தினுல் சற்புத்திரன் பிறக்கிருன்

என்ற கொள்கையும், ஒரு உபகாரியாற் பிறருக்குக் கிடைத்த பொருட்செல்வத்தைக் கண்டு பொறாமை கொள்வோனாகிய ஒருவன் சுற்றத்தாரும் ஊண் உடையின்றிக் கெடுவரென்ற மாத்திரமே அவன் சந்ததியாரும் எத்தனைக்கு அதிகமாய்க் கெட்டுப்போவரென்ற கொள்கையும் ஏற்படுகிறதல்லவா? அல்லாமல் தென்புலத்தாராகிய பிதிர் தேவதைகளை உத்தேசித்துச் சந்ததிகள் புரியும் பலவகைப்பட்ட பிதுர்யாகங்களின் பலன் அவரவர் பிதிரரைச் சென்றுகூட அவர் சுவர்க்கமுதலிய பதவியை யடைகின்றனவென்ற கொள்கை இந்து சமயத்திற் பெரும்பாலார்க்கு உரிமைப்பட்டதன்றோ. இவற்றை யெல்லாம் சற்று முன்பின் யோசியாமல் பிதாக்கள் செய்த பாப தோஷங்கள் சந்ததிகளைப்பற்றி நிற்கமாட்டாதென்றும், அது தேவ நீதிக்குச் சரியானதல்லவென்றும் வாதாடுவது "பாலானாற் படை மோரானாற் கொளுத்து" என்ற லோக வதந்தியையொத்த போலிவாத மென்று சொல்வதற்கு ஆடங்கமென்னை? எக்காலத்தும் எவ்விடத்தும் உவரூற்றில் நன்னீருஞ் சுரக்காது. எட்டி மரத்தி லினியபலனுங் கிட்டாது. அவ்வாறே பாவிகளிடத்து ஜநித்த சந்ததிகளும் பாவிகளேயன்றிப் பரிசுத்தராகார் என்பது ஆக்ஷேபிக்கக்கூடாத நியாயமென்றறிக. மேலும் சரீர சம்பந்தமான பாத்தியதை சரீரத்தோடு கெட்டழிந் தொழிந்துபோவது கிரமந்தான். ஆத்மாவுக்குரிய பாத்தியதையோ அப்படிப்பட்டதன்று. ஏனெனில் ஆத்துமா நித்தியகாலத்துக்கும் அழிவற்றிருக்கத்தக்க பொருள், நடுத்தீர்வைநாளில் அவரவர் கிரியைக்குத் தக்கபலனை யடைவார்களென்பது சுருதிவாக்கியம். கிரியையாவது ஜென்மப்பாவம் செய்கைப்பாவமென்ற இரண்டுமாம். இவ்வகையாலாய பாபகர்ம்ம தோஷங்களெல்லாம் ஸ்ரீ கிறிஸ்து பகவானாகிய ரக்ஷா பெருமானுடைய புண்ணிய பலத்தால் சேஷமற மன்னிப்படையப்பெற்று உலகந்தரக்கூடாத தேவ சமாதானத்தை அடைந்துகொண்டாலேயல்லாமல் மற்றெவ்வகையினாலாயினும் பிதுரார்ஜிதமாய் நமக்குப் பாத்தியப்பட்ட கிரியாதோஷங்களின் பலன் நம்முடைய ஆத்துமாவை விட்டு நீங்காமல் நீக்கமின்றிப் பீடித்துக்கொண்டே நிற்கும். இத்யாதி முக்கிய விஷயங்களையெல்லாம் தீர விசாரியாமலும் ஆழ யோசியாமலும் கரிசனையற்றுக் குதர்க்கமாடிப் பொழுதுபோக்குவதும் கடவுள்பேரிற் குற்றஞ்சாட்டித் திரிவதும் மதிமோசமான காரியம்.

> "வெம்பு மிருத்தாம் ஆழி கிளம்பி விடுமாயுள்
> அம்பி யலைக்கச் செய்வன செய்யா தலைகூம்பின்
> கொம்பி லுறங்குங் கொள்கைய ரானீர் குணநாடில்
> நம்பனை நம்பிக் கும்பிடுங் கூவி நமரங்காள்." (இ—யாத்திரிகம்.)

7—வது கேள்வி. ரோமர், 8: 29, 30-ல் "தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்

பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார். எவர்களை முன் குறித்தாரோ அவர்களை யழைத்து மிருக்கிறார்" என்ற இந்த வாக்கியத்தினால் தேவன் மனிதருக்குள் வித்தியாசத்தை யுண்டுபண்ணியிருக்கிறாரென்று தெரிகிறது. ஆதலால் இது தேவநீதிக்கு விரோதமென்று சிலர் தருக்கிக்கிறார்கள்.

உத்தரவு. "காமாலைக் கண்ணருக்குக் காய்வெயிலும் பொன்னிறமாம்" என்ற லோக வதந்திப்படி சார்வதா குதர்க்கஞ்செய்து கொண்டுதிரிகிறவர்களுக்கு மாத்திரம் இப்படிப்பட்ட விகாரார்த்தந் தோன்றத்தக்கதேயன்றிக், "காய்தல் உவத்த லகற்றி யொருபொருட்கண் ஆய்தலறிவுடையார் கண்ணதே" யென்றபடி முன்பின் சம்பந்தமாயுள்ள வாக்கியங்களோடு பொருத்தி நடுநிலை பிசகாது கருதுபவருக்கு இவ்வகையான அர்த்தந் தோன்றாது.

1. கடவுள் தமது குமாரனைக்கொண்டு நரஜீவகோடிகளின் ஆத்தும ஈடேற்றத்துக்குத் தகுதியான இரக்ஷணிய புண்ணியத்தை அருமையாய்ச் சம்பாதித்து வைத்திருக்கிறார். இந்தப் புண்ணியம் ஒரு பக்ஷத்தாருக்கென்றுமாத்திரம் பிரத்தியேகப்படுத்தி அமைக்கப்பட்டதன்று. உலகத்திலுள்ள ஸகலமான ஜநஸமூஹங்களுக்கும் பொதுவாய் அமைக்கப்பட்டது என்ற இந்தக் கருத்துள்ள வாக்கியங்களை யிதனடியிற் காண்க.

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை யடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தி லனுப்பாமல் அவராலே உலகம் ரக்ஷிக்கப்படுவதற்காகவே அவரை யனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ ஆக்கினைத் தீர்ப்புக் குட்பட்டாயிற்று" என்று யோவா. 3: 16-18-லும்,

"துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ, அவன் தன் வழிகளைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" என்று எசே. 18: 23-லும்,

"நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதியாரையும் சீஷராக்கிப் பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள்" என்று மத். 28: 13-லும்,

"நீங்கள் உலகமெங்கும் போய்ச் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று மாற். 16: 15-லும்,

"இந்தச் சிறியரி லொருவனாகிலுங் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல" என்று மத். 18: 14-லும்

சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே சகல ஜனங்களுக்குமாக உண்டாக்கின இரக்ஷணிய புண்ணியத்தை உலக முழுக்கவும் பெற்று ஆத்ம ஈடேற்ற மடையவேண்டுமென்பதும் இந்தப் புண்ணியத்தால் ரக்ஷிப்பை ஸ்வதந்தரித்துக்கொண்டவர்க ளெவர்களோ அவர்கள் தாம் அந்தப் புண்ணிய பலத்தைப் பெருமல் வழிதப்பி மதிமயங்கித் தியங்குகிற பாவிகளுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களென்பதும், அவர்களெல்லாரும் பாவவழியை விட்டு விலகிச் சதாசீலராய் மனந்திரும்பிக் குணப்படவேண்டுமென்பதும் கடவுளின் திருவுளமென்று தெளிவாய் விளங்குகிறதல்லவா? இது நிற்க—

2. தாமுண்டாக்குவித்த ரக்ஷிப்பைச் சகல ஜனங்களும் பெற்றனுபவிக்க வேண்டுமென்பது கடவுளுக்குச் சித்தமாத்திரமன்று. அவர் தாமே பலவித யத்தனங்களாலும், குமாரனைக்கொண்டும், பரிசுத்தாவியைக்கொண்டும், தமது மெய்த்தொண்டரைக்கொண்டும், வருந்தி வருந்தி யழைத்துக்கொண்டு மிருக்கிறார். இதற்கும் அநேக வாக்கியங்களுள்ளன. அவற்றுள் சில வருமாறு:

"மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது." மத். 4: 17.

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களாகிய நீங்களெல்லாரும் என்னிடத்து வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதலைத் தருவேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்திற் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை லகுவாயுமிருக்கிறது." மத். 11: 28, 29.

"எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தி லனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று." மத். 23: 37.

"ஓ! தாகமாயிருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் தண்ணீரண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றி திராக்ஷரசமும் பாலுங் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் திருப்தியாகும்." ஏசா. 55: 1–3.

"ஆவியும் மணவாட்டியும் வாவென்கிறார்கள், கேட்கிறவனும் வாவென்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்

ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்." வெளி. 22: 17.

"நீங்கள் அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்களைப் பின்பற்றுமல், அவனவன் தன் தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பி, உங்கள் நடக்கையைச் சீர்திருத்துங்கள், அப்பொழுது உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த தேசத்திலே குடியிருப்பீர்களென்று சொல்லித் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரையெல்லாம் நான உங்களிடத்துக்கு ஏற்கெனவே அனுப்பிக்கொண்டிருந்தும், நீங்கள் உங்கள் செவியைச் சாயாமலும் எனக்குக் கீழ்ப்படியாமலும் போனீர்கள்." எரே. 35: 15.

இவற்றையொத்த வேதவாக்கியங்களால் குமாரனைக்கொண்டும் பரிசுத்த ஆவியைக்கொண்டும் தமது ஊழியக்காரரைக்கொண்டும் வீடுவீடாகவும், தெருத்தெருவாகவும், ஊர்ஊராகவும் தேசங்கள் தோறும் அந்தந்தப் பாஷைகளில் உலகமெங்குமுள்ள பிரஜைகளுக்கெல்லாம் இந்தச் சுவிசேஷமான திவ்விய அழைப்பு நடந்துகொண்டேவருகிறது.

3. மேலே விதந்துகாட்டப்பட்ட வேதவாக்கியங்களில் எல்லா மனிதரும் ரக்ஷிக்கப்படவேண்டுமென்பதே தேவனுக்குச் சித்தமென்றும், அதுமாத்திரமல்ல; பன்முறையும் சுவிசேஷத்தைக் கூறி வரைவின்றி யெல்லாரையும் அழைக்கிறுரென்றும் மெய்ப்படுகிறதினுல் சிலர் தர்க்கஞ்செய்கிறபடி தேவன் மனிதருக்குள் வித்தியாசத்தை யுண்டுபண்ணி யிருக்கிறுரென்றுவது, அதினிமித்தம் அவருடைய நீதிக்குப் பங்கமுண்டாகிறதென்றுவது சொல்வது வீண்வாதமென்று திருஷ்டாந்தப்படுகிறதல்லவா? அப்படியானுல் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களை முன்குறித்திருக்கிறுர். அவர்களை யழைத்து மிருக்கிறுரென்று சொல்வானேன்? எனில்;—கடவுள் பூரணஞானமுள்ளவராதலில் உலகத்திலுள்ள இன்னின்னுர் தாமுண்டாக்கி வைத்திருக்கிற ரக்ஷிப்பைச் சுதந்தரித்துக் கொள்வார்களென்றும், இன்னின்னுர் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பிவராது பாவத்திலேயே நிலைத்திருக்கும் நிமித்தம் ரக்ஷிப்படையமாட்டார்களென்றும் உற்பாதமாக முன்னறிந்தே யிருக்கிறுர். ஆனுல் அந்த முன்னறிவைக்கொண்டு ரக்ஷிப்பின் சுவிசேஷத்தை அவர்களுக்கு அறிவிக்க அவசியமில்லையென்று கைவிட்டுவிட்டாரா? மற்றவர்களுக்கு ஒத்த பிரகாரம் அழைக்காமலிருக்கிறுரா? ஒருக்காலும் அப்படித் தடைப்படுத்தவில்லை. எல்லாம் யாதொரு வித்தியாசமில்லாமலே நடத்தி வருகிறுர். அப்படிக்கில்லாமல் நீ ரக்ஷிப்படைய மாட்டாயென்றும், நம்மால் நீ கைவிடப்பட்டாயென்றும் தேவன் யாருக்காவது சொன்னதுண்டா? அல்லது பௌஷிபகால வர்த்தமானங்களையும், சம்பவங்களையும் முன்னறிந்துகொள்ளத்தக்க வரத்தை ரக்ஷிப்படையத் தக்க

வர்களுக்குப் பிரசாதித்ததுண்டா? அப்படிக்குமில்லையே. பின்னை யேன் யாதொரு குறிப்புந் தோன்றுமலிருக்கச்சே காலமிருக்கும் பொழுது நல்வழியைப் பற்றிக்கொள்ளாமல் வாணுளை வீணுளாக்க வேண்டும். பாவ இச்சை முதலிய துராசாரப் பிரியந்தானல்லவா காரணம். அனைதத் தள்ளிவிட மனமில்லாமல் தன்னுயிரிலும் அருமையாய் அதைப் பேணிப் பொதிந்து வைத்துக்கொண்டு தேவன் மேற் பழிபோட்டு அவரை யவதூறு செய்யத் துணிவது தீராப் பழியும் தொலையாப் பாதகமுமாம். இவ்வாறு துணிகரப்பாவத்தில் நிலைத்திருக்கிற அவனவனுக்குக் கடினப்பட்டுப்போன அவனவனுடைய மனேசாக்ஷி நீ ரக்ஷிப்படையமாட்டாயென்று இடித்திடித்துக் கண்டித்துக்கூற அந்த வாதைக் காற்றமாட்டாமல் அதற்கொரு போக்குத் தேடிப் பிதற்றுகின்ற பிதற்றுமொழியென்றே அநுமானிக்க வேண்டிவருகிறது.

4. உலகத்தில் சார்வதா நடந்தேறிவருகிற தேவ பராமரிப்புச் சாமான்யமென்றும் விசேஷமென்றும் இரண்டு பகுப்புள்ளன. அவற்றுள் சாமான்ய பராமரிப்பாவது பிரபஞ்சத்துள்ள சகலமான சிருஷ்டிகளுக்கும் தேகசம்ரக்ஷணுர்த்தமாக அருளப்படுகிற பொது நன்மைகள். அவை சூரிய சந்திர நக்ஷத்திரமுதலிய வானஜோதிகளால் உண்டாகும் விதம் விதமான அநேக நன்மைகள், மழை வருஷிக்கிறதினுல் பூமி ஆகாராதி முதலியவைகளாகிய தன் பலனை விளைவித்துக் கொடுத்தலை யுள்ளிட்ட இன்றியமையாத அளவிறந்த நன்மைகள், பகலிரவாகிய பேதங்களாலும், பருவ பேதங்களாலும் உண்டுபடுகிற அமோகமான சுகாநுபவ உபகரணங்கள். யானை, குதிரை, ஒட்டகைகள் ஆடு மாடு முதலிய அநேக மிருகஜாதிகளாலும் அநேகவகையான பக்ஷிஜாதிகளாலும் உண்டுபடுகிற அபரிமிதமான் உதவிகள், கல், மண், மர முதலிய அசர சிருஷ்டிகளால் விளைகிற அநேகவகையான உபயோகங்கள். இவற்றையொத்த பல்லாயிர கோடி நன்மைகளைத் தட்டுத் தடையின்றிக் கேளாமலே யவசரத்துக்குத் தக்கதாகப் பிரதிதினமும் இரவு பகலாக ஓயாது உபசரித்துக் காப்பாற்றிவருமுறையே மனிதஜாதிகளனைவருக்குள்ளும் தேவன் பொதுவாய் நடத்திவருகிற பராமரிப்பு. இனி விசேஷ பராமரிப்பாவது மனுஷீக ஆத்தும சம்ரக்ஷணுர்த்தமாக அருளப்படுகிற திவ்விய நன்மைகளாம். அவை ஆவிக்குரிய ஞானதீக்ஷைபெற்றுப் பாவத்தை யருவருத்துத் தியக்ஷித்துவிட்டு சதாசாரசீலராய் ஸ்ரீ கிறிஸ்துபெருமானுக்குத் தொண்டராகித் திரிகரண சுத்தியோடு அன்பினுற் கிரியை செய்கிற உத்தம விசுவாசமுடைய மெய்யடியார்களுக்கு மாத்திரம் அருளப்படுபவைகளாம். எவையெனில் தேவகிருபை, தேவாவியின் அருட்பிரசாதம், சுத்தமனம், திவ்விய தைரியம், உண்மை, வைராக்கியம், ஜெபத்தின்ஆவி, தேவதிருவாக்கின்மேல் நம்பிக்கை, தேவநேசம், ஸ்வயவெறுப்பு, பரோபகாரசிந்தை, தன்னைப்

போற் பிறனை நேசிக்கும் நேசம், பக்தி, விசுவாசம், அன்பு, உலகம் தரக்கூடாத சித்தசமாதானம், க்ஷமை முதலிய சற்குணங்கள், அளவிறந்த கிருபையின் யத்தனங்கள், கடைசியாய்ச் சமாதான மரணமும், மரணத்துக்குப்பின் நித்தியஜீவனும் இன்னோரன்ன பரம நன்மைகளாம். இவ்வகைப்பட்ட நன்மைகள் மெய்விசுவாசிகளுக்கே அருமையாயிருப்பவைகள். அவர்களுக்கே பிரயோஜனப்படத்தக்கவைகள். அவிசுவாசிகளாகிய ஏனையருக்கு இவை யருளப்படுவதில்லை. அருளப்படுமாயினும் அவர்கள் அதனருமையை யறியார்கள். விசுவாசத்தோடு கேட்கிறவர்களுக்கே யருளப்படும்.

5. விசுவாசிகள் யாவரும் தேவனுடைய சொந்த ஜனமாயிருக்கிறார்களென்று வேதங் கூறுகின்றது. அவர்களே தேவகுமாரனாகிய நமது ரக்ஷகரது திருச்சித்தத்துக்கு இணங்க நடப்பவராதலால் அவர்களே அவராலே தெரிந்துகொள்ளப்பட்டு அவருடன் பங்காளிகளும் சுதந்தரவாளிகளுமாவார்கள். விசுவாசிக்கிறவனெவனும் இரக்ஷிக்கப்படுவானென்று சொல்லப்பட்டிருக்கும் வாக்கியங்களையே கிறிஸ்துவேதத்தில் விஸ்தாரமாகக் காண்பதன்றி ஒருவனாவது கைவிடப்பட்டானென்றாவது, இரக்ஷிக்கப்படமாட்டானென்றாவது சொல்லியிருக்கும் வசன மொன்றேனுங் காண்பதில்லை. தேவனானவர் தம்மை விசுவாசியாமலும் தம்மையே கடவுளென்றெண்ணி வழிபடாமலுமிருக்கிற துஷ்டர்களைப் பலவாற்றானுந் தம்மிடத்துக் கழைத்துப்பார்த்தும், அவர்கள் விலகித் தூரமாய்ப் போய்விடும்பொழுது அவர்களைத் தள்ளிவிடுவது தேவனுக்கு நியாயமல்லவென்று சொல்வதெப்படி? அவர் நீதியு மிரக்கமுமுள்ள தேவனேயல்லாமல் தமக்குக் கீழமைந்து தமக்குத் தொண்டர்களாய் நடப்பவர்களுக்கு நன்மைசெய்து அவர்களைத் தம்முடையவர்களாகத் தெரிந்துகொள்வதும், தம்மைப் பகைத்துத் தமக்குக் கீழ்ப்படியாதிருக்குந் துஷ்டர்களை வெறுத்துத் தள்ளுவதும் தேவனுக்கே யுரிய உத்தமகுணங்களாயிருப்பதினால் அவைகளைத் தவறென்று சொல்லத் துணிவது மகாமதியீனமேயன்றிப் பிறிதொன்றல்ல. ரோ. 8: 29, 30; யோவா. 3: 16.

உண்மை யிதுவாதலில் குதர்க்கம் பேசுகிற சிநேகிதரே! இதுவே தகுதியானகாலம். இதுவே ரக்ஷணியநாள். ஆதலில் ஆத்மசம்ரக்ஷணார்த்தமான விசேஷ பரம நன்மைகளைப் பெற்று நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள உண்மையாய் முயற்சிப்படுவீராகில் நீங்கள் கிறிஸ்துரக்ஷகரின் புண்ணியபலத்தால் ஆத்துமரக்ஷிப்பை ஸ்வதந்தரித்துக்கொள்வீர்கள். தெரிந்துகொள்ளப்பட்டவருமாவீர்கள்.

8–வது கேள்வி. "பின்பு தேவனாகிய கர்த்தர் இதோ மனுஷன் (விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்து) நன்மை தீமை யறியத்தக்கவனாய் நம்மிலொருவனைப்போலானான்" (ஆதி. 3. 22.). இதை யோசிக்கையில் பாவம் தேவனிடத்திலிருந்துதானே உற்பத்தியாயிற்றென்று நினைக்கவேண்டிவருகிறது எனச் சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள்.

உத்தரவு. மனிதனே பாவகாரண னென்பதைப்பற்றியும் பாவம் தேவனிடத்திலில்லவேயில்லை, தேவனிடத்திலிருந்து வரவுமில்லை, தேவன் பாவகாரணருமல்ல ரென்பதைப்பற்றியும் முன்னுறத்தக்க நியாயங் காட்டிச் சமாதானங் கூறியிருக்கின்றோம். ஈண்டு மனிதனைத் தேவனோடு ஒப்பானவனாகச் சொல்லியிருக்கிறதைப்பற்றிமாத்திரம் சமாதானங் கூறவேண்டியது அவசியமாயிருக்கிறது. "கடவுள் நம்மிலொருவரைப்போலானான்" என்று ஆதாமைப்பற்றி வேதத்திற் சொல்லியிருக்கிற அந்த வாக்கியத்துக்குத் தேவத்துவத்திலொருவரைப்போலானான் என்பது வாக்கியத்தின் பூதார்த்தம். ஆதாம் இயற்கையில் எவ்வகையிலுங் குறைவுள்ளவனான மனித சிருஷ்டி. இவன் தானே தன்னை யுயர்த்திக்கொள்ளப் பார்த்தவன். ஆதலால் அந்த வாக்கியத்தில் ஆனான் என்னும் ஆக்கச் சொற்பயனில்லை வந்திருக்கிறது. ஆதாம் எழுவாய், ஆனான் பயனிலை. குறைவுள்ள நிலைமையிலிருந்த ஆதாம் குறைவற்ற பூரணநிலைமை யுடையாரைப்போலத் தன்னை யாக்கிக்கொள்ள முயன்றான். ஆனால் சித்திக்காமல் தன்னிலையினின்றும் விழுந்தான் என முன்பின்னுள்ள வாக்கியங்களாற் பொருள்படுகிறது. இது குணார்த்தம். இதினாலே கடவுள் அவனை அவனியற்கை நிலையை விட்டு மாற்றி யுயர்வுள்ள நிலைமையிலாக்கினாரென்ற அர்த்தம் எவ்விடத்தும் எக்காலத்து முண்டாகாது. ஏனெனில் கடவுள் தாமுதலில் சங்கற்பித்துச் செய்த சிருஷ்டிப்பினியற்கையை இடையில் மாற்றுகிறவரல்லர். கடவுள் மாறாத லக்ஷணமுடையவராயிருத்தல்போலவே அவர் கிரியைகளையு மாற்றாத் தன்மையுடையவர். மனிதன் தான் அறிவிலுங் குறைவுள்ளவன் செய்கையிலுங் குறைவுள்ளவன். ஒன்றைத் தீர்க்காலோசனையில்லாமற் செய்வான். பின்பு மனஸ்தாபப்படுவான். அப்புறம் அதை மாற்றிச் செய்வான். மனிதன் அபூரணன். தேவன் ஒருவரே பூரணர். ஆதலால் மனிதன் எவ்வகையா யுண்டானவனென்றும் அவனும் அவனுக்கு இயல்பிற் கிடைத்த அறிவும் எத்தகையது என்றும், அவன் பாவத்தில் விழுதற்கு முந்தின நிலைமை யெப்படிப்பட்டதென்றும் நன்மை தீமை யென்பன யாவையென்றும் மனிதன் தீமையை யறிந்தவனானதால் அவன் பரிசுத்த நிலையிலிருந்தானென்பது எப்படியாகுமென்றும் உவமவாக்கியத்தின் முடிவான பொருள் எப்படியென்றும் ஆகிய இவற்றைப்பற்றி விவரமாய்ச் சர்ச்சிப்பாம்.

1. மனிதன் எவ்வகையாயுண்டானவன்.

ஆதி. 1. 27ல் தேவன் தம்முடைய சாயலாக மனிதனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் என்றும், ஆதி. 2. 7ல் தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே யுருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே யூதினார். மனுஷன் ஜீவாத்துமா

வானுன் என்றும் காண்கிறபடியே மனுஷன் ஜீவனும் ஆத்துமாவுங் கூடிய விவேகாத்தும தேகியாய்ப் படைக்கப்பட்டவன். ஆத்துமா வென்பது அறிவு, ஞானம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், விவேகம், யூகம், யுத்தி முதலிய ஞானதத்துவங்களோடு காரியா காரியங்களை நிதானித்துச் சரீரத்தையாண்டு நடத்துகிற சித்துப் பொருள் (சித்தென்பது மறைந்திருந்தும் விளங்கக்கூடிய பொருள்). ஆதி. 1. 28ல் தேவன் அவர்களை (பிதா மாதாக்களை) நோக்கி நீங்கள் பலுகிப்பெருகிப் பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்திச் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்களென்று சொல்லி அவர்களை யாசீர்வதித்தார். மேலும் தேவன் தமக்குக் கீழ்ப் பட்டிருக்கவேண்டிய சிருஷ்டியென்பதை அவனுள்ளத்தில் பதித்து வைக்கக் கருதி மனுஷனை ஏதேன் தோட்டத்திற்கு அழைத்துக் கொண்டுவந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி நீ தோட்டத்திலுள்ள சகல விருக்ஷத்தின் கனியையும் புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை யறியத்தக்க விருக்ஷத்தின் கனியைப் புசிக்கவேண்டாம், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாயென்று கட்டளையிட்டார் (ஆதி. 2. 15–17.). இவ்வகையாகப் பூர்வ மனிதரைத் தம்முடைய சாயலாக விவேகாத்தும தேகிகளாகப் படைத்து உலகசிருஷ்டிகளெல்லாவற்றிலும் அவனை மேன்மைப்படுத்திச் சராசரப்பொருள்க ளெல்லாவற்றிற்கும் அவனை யதிகாரியாக வைத்துச் சகலமும் அவனுக்குக் கீழ்ப்பட்டிருக்கவும் பூமி தன் பலனைச் செழிப்பாய்க் கொடுக்கவும் கற்பித்துச் சகல நன்மைகளையும் யதேஷ்டையாய் அநுபவித்துக்கொண்டு பரிசுத்த நிலையில் சகல ஐஸ்வரிய சம்பன்னனாய் வாழ்ந்திருக்கவும் சித்தஞ்செய்தார்.

2. அவனுக்குக் கிடைத்த அறிவு எத்தகையது.

பரிசுத்தமான நிலைமையிற் படைக்கப்பட்ட ஆதாம் இவ்வளவு சீக்கிரத்தில் கெட்டுப்போவதற்குக் காரணமென்னையெனில், அவனுக்கு மேலான நிலைமை கிடைத்திருந்தபோதிலும் அவன் முற்றறிவுடையவனல்லன். கடவுள் ஒருவரே முற்றறிவுடையவர். ஆதாமுக்குக்கிடைத்திருந்தது சிற்றறிவு; ஆயினும் அது நிர்மலமானது, தூயது. எதிர்கால வர்த்தமானங்களைத் திட்டமா யறிந்துகொள்ளக்கூடியதன்று. அவன் சந்ததியாருக்குள்ள இயற்கை யறிவுக்கோ நிர்மலமுமின்று, தூய்மையுமின்று. ஆகவே சாமான்யமாய் இயற்கையறிவானது அதிநுட்பத்திலிருந்து துவக்கிப் படிப்படியாய் வளர்ந்து விர்த்தியாகத் தக்கது. இது இயற்கைவாசனை சேர்க்கைவாசனையின் தன்மைக்குத் தக்கதாகப் பேதப்படுகிறது. செய்யத்தக்க நல்ல முயற்சிக்கும் கிடைக்கத்தக்க நல்ல சற்சங்கக் கூட்டுறவுக்கும் சத்விஷைய சம்பந்தமான வேதாகமாதி சாஸ்திர விசாரணைக்கும் லௌகிக விவகாரப்பயிற்

சிக்கும் இடம் பொருள் ஏவல் காலதேச வர்த்தமானங்களுக்கும் இத்யாதி நல்ல ஹேதுக்கள் வாய்க்குமாயின் அதற்குந் தக்கதாக விருத்தியாகி "அடுத்தது காட்டும் பளிங்கேபோல்" என்றபடி கிடைக்கத்தக்க நல்ல ஹேதுக்களின் மயமாக விளங்கிப் பிரகாசிக்கும். அல்லது கேட்டுக்குக் காரணமான துர்ச்சகவாச தோஷ முதலியவற்றின் சம்பந்தங்களால் சித்தவிருத்தி குன்றி வேறுபட்டுக் கேடடைந்து பழுதுபட்டுப்போகும். ஞானலேசம் அல்லது பகுத்தறிவு என்ற இந்த தத்துவம் உயர்திணை வஸ்துக்களாகிய விவேகாத்ம தேகிகளுக்குத்தான் உரிமையுள்ளது. அஃறிணைச் சிருஷ்டிகளுக்கு ஆத்மாவில்லாத காரணத்தால் காட்சி முதலிய ஹேதுக்களாலுண்டுபடுகிற அப்பியாச அறிவு ஒன்றுமாத்திர முள்ளது. இப்படியென்று பெயரெடுப்புள்ள சாஸ்திரிகள் விளக்கியிருக்கிறார்கள்.

3. பாவஞ்செய்வதற்கு முன்னுள்ள ஆதாமின் பரிசுத்த நிலை.

மநுப்பிரதமருக்குச் சிருஷ்டிப்பை யொட்டிக்கிடைத்த ஞானலேசமென்கிற அதிநுட்பமான சிற்றறிவு நல்ல ஹேதுக்களைப் பெற்று வளர்ந்துவந்த அந்தக்காலத்தில் எல்லாம் நன்மையாகவே பயன் பட்டுவந்தன. ஆண்டு கிடைக்கப்பெற்ற நல்ல ஹேதுக்களெவையெனில் தேவன் அசரீரிவாக்காக முதல் மனிதரோடு பேசுதல், தேவதூதர்கள், சம்மனசுகள் முதலிய பரிசுத்தக் கூட்டத்தோடு சஞ்சரித்துக்கூட்டுறவு செய்தல், திருப்தியும் மனச்சமாதானமுமான வாழ்க்கை, எல்லாம் நலமாகக்காணுங் காட்சி, இவைபோன்றவைகளாம். அந்த ஆச்சிரமத்திலிருக்கையில் அவர்களுக்குத் துன்பம் துக்கம் சஞ்சலம் வியாதி முதலியவைகளா லுண்டாகும் கஷ்ட நஷ்டங்களும் பொறாமைமுதலிய துர்க்குண ஜேஷ்டைகளாலுண்டுபடும் சமாதான குறைவுகளும் இவற்றோடொத்த மனவருத்தங்களும் அவர்களுக்குக் கிடையவே கிடையாது. சிருஷ்டிகரை மனமொழிமெய்களால் வழிபடுதல், பிள்ளைப்பத்தி, அன்பு, உண்மை முதலிய சிலாக்கியமான குணங்களுமே வரவர வளர்ந்து பெருகிச் சந்தோஷமாய், மனமகிழ்ச்சியாய், காம்பீரமாய், யதேஷ்டையாய், நிர்ப்பயமாய்ப் பனுகிப்பெருகி வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

"பாவமே யில்லை பாவ பயங்கர மில்லை தேவ
சாபமு மில்லை சாவின் சஞ்சலத் தொடர்பு மில்லை
கோபமும் பகையு மில்லை குணதோஷ மில்லை மிக்க
ஆவலு மில்லை பூரு வாச்சிர மத்தர்க் கம்மா." (இ. யாத்திரிகம்.)

"உண்மையில்லை பொய்யுரை யில்லாமையால்
வண்மையில்லையால் வறுமை யில்லையால்
திண்மையில்லையாற் செறுந ரின்மையால்
வெண்மையில்லைபல் கேள்வி மேவலால்." (ராமாயணம்.)

4. நன்மை தீமையைப்பற்றி.

1. ஒப்பற்ற உயர்ந்த மெய்க்கடவுளால் நிருமிக்கப்பட்ட விதி நிஷேதங்களை மனமொழி மெய்களால் உண்மையாய்க் கைக்கொண்டு நடந்துகொள்ளுதல். 2. அரசனிட்ட கட்டளைகளுக்கு (தேவகட்டளைக்கு ஒத்துவருமட்டில்) கீழ்ப்படிந்து இணங்கி அடங்கி நடந்து கொள்ளுதல். 3. தாய்தந்தையரை உபசரித்து ஏற்ற மரியாதை செய்து அவர்களிடுங் கட்டளையைப் பிரீதியோடு கைக்கொண்டு தேவ கட்டளைக்கு ஒத்துவருமட்டில் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளுதல், (சாதுக்களும் முதியோரும் உத்தமிகளான பத்தினிமாரும் தாய் தந்தையருக்குச் சமானஸ்தரென்றறிக.) 4. குரு, கல்வி படிப்பிப்ப வரும், ஞானபோதனைசெய்து பக்குவமறிந்து தீக்ஷைகொடுப்பவரும் இவ்விருதிறத்தாரையும் பிதாமாதாவாகவே மதித்து பூஜிதைசெய்து கௌரவித்தல். 5. தமையன் அல்லது தமையன்மார் இவரையுந் தாய்தந்தையருக்கொத்த பிரகாரம் மதித்தல். 6. தன்னைப்போலப் பிறரை நேசித்து நடந்துகொள்ளுதல். மற்றவன் தனக்குச் செய்ய விரும்புவதை யொப்பத் தான் பிறருக்குச் செய்தல் இவைகளைத் திரிகரண சுத்தியோடு கைக்கொண்டு வருதலே நன்மையாம். இவற் றிற்கு அந்நியமான எல்லாச் செய்கைகளும் தீமையே தீமையென் றறிக. தீமை யெங்குஞ் செய்யப்படுவ தில்லையாயின் செய்கைப்படுவ தெல்லாம் நன்மையேயன்றிப் பிறிதொன்றன்று. ஆகவே மனிதர் பூர்வாச்சிரமத்தில் தீமை நடைபெற்றதில்லை யென்றறிக.

5. தீமையை யறிந்தபிறகு பரிசுத்த நிலையிலிருப்பது எப்படியாகும்.

தீமை யின்னதென்று உற்பாதமாக அறிந்திருப்பது பாவமல்ல. அநாதி கடவுளின் இயற்கையான முற்றறிவிலே நன்மை யின்னது தீமை யின்னதென்றும் அதற்கு வரத்தக்க முடிவு இத்தகையதென் றும் தீர்க்கமாய் அவருடைய திருவுளத்துக்குத் தெரிந்திருந்தது தானே. அதனால் அவர் பாவமுடையவரென்று சொல்லலாமா? முற்கூட்டியே பாவ மித்தகையதென்று அறியாமற்போனால் பின்னை பாவத்துக்கு ஒருவன் எப்படித்தான் விலகுவான். முதல் மனிதரும் பாவஞ்செய்வதற்கு முந்திய பரிசுத்த நிலையிலிருக்கும்போதே தேவன் கொடுத்த கட்டளையினால் தேவகட்டளைக் கமைவது நன்மை யென்றும் கட்டளையை மீறுவது பாவமென்றும் பாவஞ் செய்தாற் சாகவே சாவாயென்ற தண்டனை தன்னைவிட்டு விலகாதென்றும் திட்டமாய் அறிந்திருந்தார்களே. அதுமுதல் அவர்களுக்குப் பாவ மின்னதென்று தெரிந்துதானே யிருந்தது. இந்த அறிவு அது முதற் பாவமாக எண்ணப்பட்டிருந்தால் அவர்களைப் பரிசுத்த நிலையில் வைக்காமல் ஏதேனென்ற பரிசுத்த க்ஷேத்திரத்தை விட்டு

அப்போதே துரத்தியிருக்கலாமே. நஞ்சை நஞ்சென்றறிவார் எவரும் சாகார். நஞ்சைத் தின்றவர் மாத்திரமே சாவார். ஆதலாற் பாவத்தை அறிகிற் அறிவுமாத்திரத்தில் அது பாவமாகிறதில்லை. பின்னையெது பாவமெனில் பிரமாண விரோதமாய் உள்ளத்தில் அந்தரங்கத்தில் தோன்றி இச்சை தடித்து ஜீவசாக்ஷி தடுப்பதையு மீறி மனமொழி மெய்களால் விதித்தவற்றைச் செய்யாமலும் விலக்கினவற்றைச் செய்தலுமாகிய கிரியையே பாவமென்க. அவ்வறிவு இச்சையோடு கலந்து உள்ளத்து நிகழ்ச்சி பெறுமாயினும் பாவமென்றும் அந்தப் பாவத்துக்குத் தண்டனை வந்தாயிற்றென்றும் சுவிசேஷப் பிரமாணங் கற்பிக்கிறது. ஆதலால் சரீரத்தையும் ஆத்துமத்தையும் நரகத்திலே தள்ளிக் கெடுக்க வல்லவருக்குப் பயப்படுங்களென்று சுவிசேஷம் ஆத்மபுனித ஞானபோதனையுங் கொடுக்கிறது. ஆதலால் குற்றஞ் செய்வதற்கான காரணத்திற் பிரவேசியாதபடிக்கு விழித்துக்கொண்டு ஜெபம்பண்ணுங்களென்று விலகிக்கொள்வதற்கான உபாயத்தையுங் கற்பிக்கிறது அது.

6. ஆதாம் பாவஞ்செய்து பரிசுத்தநிலை யிழந்துபோதல்.

ஆதியாகமம், 3-ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் சர்ப்பத்துக்கும் ஏவாளுக்கும் நடந்த சம்பாஷணையின் கடைசியில் சர்ப்பமானது நீங்கள் இந்தக் கனியைப் புசிக்கும்நாளில் நன்மை தீமை யறிந்து தேவர்களைப்போலிருப்பீர்களென்று தேவன் அறிவாரென்று சொன்னது. அப்பொழுது ஸ்திரீயானவள் அதின் கனியைப் பறித்துப் புசித்துத் தன் புருஷனுக்குங் கொடுத்தாள். அவனும் புசித்தான் என்று சொல்லியிருக்கிறது. ஏவாள் பெண்பாலானதால் சர்ப்பத்தின் வஞ்சனைப்பேச்சை நம்பி மோசம்போனாள். ஆதாமுங்கூட் மதிமோசம்போனானே. அடிக்கடி தேவசந்நிதி கிடைக்கப்பெற்றுத் திருவாக்குந் தன் செவியாரக் கேள்வியுற்றவனாயிற்றே. அந்தோ! பெண்மயக்கத்தால் அவள் வார்த்தையைத் தட்டமாட்டாமலோ அல்லது தேவர்களைப்போ லாகலாமென்ற பேராசைப் பயித்தியந்தானோ? யாதோ அவனும் தீவினைக்கொப்பத்தில் விழுந்தான். இப்படியாக ஸ்திரீபுருஷ ரிருவருங் கெட்டார்கள். தங்கள் சந்ததி பாரம்பரைகளையுங் கெடுத்தார்கள். உலக சிருஷ்டிகளையுந் தேவசாபத்துக் குள்ளாக்கினார்கள். தேவசமுகத்தில் விசாரணை நடந்தபோது ஏவாள், சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். ஆதாம் என்னுடனேகூட விருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருக்ஷத்தின் கனியை யெனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேனென்றான். இப்படித் தன் குற்றத்தை யொப்புக்கொள்ளாமல் பிறர்பேரிற் போடுகிற இந்தப் பொல்லாத குணமும் அன்றுதொட்டின்றுகாறும் உலகத்தில் நடைபெற்றுவருகிறது. தேவன் இவ்வெல்லாவற்றிற்காகவும் அவர்களைக் கடிந்துகொண்டு நீதியும் நியாயமுமாய் அவர்

களுர்க்குத் தக்க தண்டனை விதித்து முடிந்தபின் நம்முடைய ஆதித்தாய் தந்தையரை பூலோக ஸ்வர்க்கம்போலிருந்த ரமணீயமான ஏதேன் பூங்காவனத்தைவிட்டு அப்புறப்படுத்தித் தோட்டத்திற்குக் காவலையு மேற்படுத்தினர். இவ்வாறு துரத்துண்ட ஆதாமே, எடுத்துக் கொண்ட உவமவாக்கியத்துக்கு உபமேயப்பொருள்.

7. உவமவாக்கியத்தின் முடிவானபோருள்.

1. நம்மிலொருவரைப்போலானன் என்பதில் நம்மில் என்ற வார்த்தை திரித்துவத்தில் என்றும், ஒருவரை யென்ற வார்த்தை கிறிஸ்துவை என்றும் அர்த்தமாகும். அப்படியானல் திரித்துவத்திலொருவராகிய கிறிஸ்துவைப்போலானன் என்று பொருள்படும். திரித்துவமாவது பிதா, குமாரன், பரிசுத்தஆவியென்கிற மூன்று தத்துவங்களையுங் குறிக்கத்தக்கது. ஆகவே பிதாவாகிய தேவன் ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அவற்றிலுள்ள சமஸ்தமான சராசரப்பொருள்களுக்கும், சர்வசிருஷ்டிகளுக்கும் பிரதானுகத் தம்முடைய சாயலின்படியே (பரிசுத்தம், ஞானம், பாக்கியம்) தமது சர்வசக்தியினுலும் பரிபூரண ஞானத்தினுலும் மநுப்பிரதமனைச் சிருஷ்டித்துப் பரிசுத்தநிலையில் வாழ்ந்திருக்கும்படி சித்தஞ் செய்தார், சகல நன்மைகளையும் அருளிச்செய்தார். "பிதாவுமாதாவு முன்னைக் கைவிட்டாலும் நாமுன்னைக் கைவிடோ" மென்ற திருவாக்கை அவன் சந்ததியாரெல்லாருக்கும் அருளிச்செய்தார். எல்லாவற்றையும் நல்லனவாகக் கண்டார்.

2. குமாரதேவன் முதல் மனிதனுகிய ஆதாமினுற் பாவக் கேட்டுக்குள் ளகப்பட்டு நித்தியகேட்டுக்கு ஏதுவாயிருந்த உலகத்தை ரக்ஷிக்கத் தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் மத்தியஸ்தராக ஏற்பட்டுப் பாவிகளுக்காகப் பிணைநின்று மனிதாவதாரஞ் செய்து வெளிப்பட்டுப் பாவப் பிராயச்சித்தபலியாகச் சிலுவையிற் பிராணத்தியாகஞ் செய்து ரக்ஷிப்பின் புண்ணியத்தைச் சம்பாதித்து மநுக்குலத்தை ரக்ஷித்துவருகிருர். இது குமாரதேவன் செயல்.

3. திரித்துவத்திலொருவராகிய பரிசுத்தாவியான தேவன் பிதாவினிடத்தினின்றும் குமாரனிடத்தினின்றும் உலகத்தில் வந்து ஆத்மகோடிகளுடைய ஹிருதயங்களில் மெய்ஞ்ஞான தீபத்தைப் பொருத்தி அஞ்ஞானவிருளைப் போக்கடித்து ஆத்மவிசாரத்தை மூட்டி மனந்திருப்பிக் குணப்படுத்தி மெய்த்தொண்டர் திருக்கூடத்தை விருத்திப்படுத்திக் கிறிஸ்துவின் பிராயச்சித்தப் புண்ணியத்தையூட்டிப் பரம நன்மைகளைத் தினம் தினம் பிரசாதித்துவருகிருர். தினந்தினம் பக்குவப்படுத்திவருகிருர். இது பரிசுத்த ஆவியின் செயல். இவைகளெல்லாம் திரியேகப் பெருமானுடைய மகத்தான திருவருட்செயல்கள்.

4. இஃதிப்படியிருக்க முதல் மனிதனாகிய ஆதாம் இத்தகையரான மாகாத்மியமுள்ள கடவுளையும் அவர் தனக்கு அருளிச்செய்த மேலான பதவியையும் சகலவிதமான நன்மைகளையு மறந்து நன்றி கெட்ட துரோகியாய்த் தன்னோடு உலகமுழுவதையும் கெடுத்து பரிசுத்த நிலையைக் குலைத்து மரணத்தையும் நித்திய நிர்ப்பந்தத்தையும் ஸ்வதந்தர மாக்கிக்கொண்டவன் அல்லாமல் சர்வ சக்தியுள்ள தெய்வத்தைத் தனக்கு எதிரியாக்கிக்கொண்டவன். இப்போதும் அந்தப் பகைமையும் போராட்டமும் உலகத்தில் ஓயாமல் நடந்து வருகிறது.

5. திரித்துவ தேவச்செயலும் ஆதாமின் பாவச்செயலும் இவ்வாறிருத்தலில் பரிசுத்த தெய்வத்துக்கும் பாவக்கறையுள்ள மனுஷனுக்கும் ஒப்பிட்டுச்சொன்ன இந்த உவமையை எவ்வகையில் சமாசப்படுத்தலாமெனில், தெய்வம் பூரண சுயாதீனர். ஆதாம் தேவாதீனத்துக்குட்பட்ட சுயாதீனனாகச் சிருஷ்டிக்கப்பட்டவன். அவன் தேவனிட்ட கட்டளையை மீறின அன்றே தேவாதீனத்தை யுதறிவிட்டுத் தானே தன்னை முற்றும் சுயாதீனனாக்கிக்கொண்டான். இந்த விஷயத்தில் தேவனைப்போலவே ஆதாமுஞ் சுயாதீனனாகத்தானே யிருக்கிறான் என்னும் இந்தக் கருத்தைத் தேவன் தம்முடைய திருவுளத்தில் கண்டு நம்மிலொருவனைப்போலானானென்று தேவன் சொன்னாரென்று கொள்க. ஆயின் தேவன் நம்மைப்போலானானென்று சொல்லாமல் நம்மிலொருவனைப்போலானானென்று சொல்ல நிமித்தம் யாதெனில் திரித்துவமே திரியேகத்துவமாயிருத்தலில், ஒருவனை யுவமித்தல் மூவனையும், மூவனை யுவமித்தல் ஒவ்வொருவனையும் என்று தானே யாகுமென்க. அல்லாமலும் இன்னொருவகையாய் கிறிஸ்து—பரிசுத்தாவியினால் மனிதாவதாரஞ் செய்தவர். ஆதாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன். கிறிஸ்து உலகமுழுவதையும் ரக்ஷிக்கிறதற்கென்று ஏற்பட்ட புண்ணியநாதர். ஆதாம் தன்னையும் உலக முழுவதையுங் கேட்டுக்குள்ளகப்படுத்திய பாவகாரி. கிறிஸ்துவினால் சகல மனிதருக்கும் ரக்ஷிப்பு வருகிறது. ஆதாமினால் சகல மனிதருக்கும் பாவம் வந்தது. கிறிஸ்துவினால் உலகத்திற்கு நித்தியஜீவன் கிடைத்தது. ஆதாமினால் உலகத்துக்கு நித்தியமரணம் வந்தது. கிறிஸ்துவினால் மோக்ஷவாசல் திறக்கப்பட்டது. ஆதாமினால் மோக்ஷவாசல் அடைபட்டது. நரகந் திறக்கப்பட்டது. மேலே விதந்த இத்யாதி விஷயங்களை உவமைக்குப் பொதுத்தன்மையாகக் கொள்ளலாம்; ஆதலால் எடுத்துக்கொண்ட உவம வாசகத்தில் வழுவின்றென்க.

6. வேதவாக்கியங்களெல்லாம் தேவாவியின் அநுக்கிரகத்தைப் பெற்ற மெய்த்திருத்தொண்டரா லெழுதப்பட்ட உண்மையுரை. அதில் விளங்குகிற சத்தியமே தெய்வ நிலை. இப்படி யென்ற தீர்க்க விசுவாசமுள்ளவர்களுக்கே உண்மைப்பொருள் விளங்கத்தக்கது.

தெய்வ நிலையை அல்லது உண்மை நிலையை அறியவேண்டுமென்று உண்மையாய் விரும்பி முயல்வாருக்கே பரிசுத்தாவியானவர் அவர்கள் இருதயத்தை வெளிச்சமாக்கிச் சத்தியத்தை விளங்கக் காட்டுவார். கண்டபிறகாயினும் கடைப்பிடிவேண்டும். அறிந்த அளவில் அநுசரிக்கவேண்டும். தொழிற்படவேண்டும். ஆபின் சாதுசங்கக் கூட்டுறவு வாய்க்கும். அப்பால் ரக்ஷிப்புக் கைவரும். இவ்வெல்லாம் வேத சத்தியமென்க.

18-ம் அத்தியாயம்.

முடிவுரை.

பீடிகை. சகலலோக காரணகர்த்தா வொருவருளரென்பது எந்தத் தேசத்தவரென்றாலும் எந்தப் பாஷைக்காரரென்றாலும் எல்லாருக்கும் சர்வசம்மதமான தீர்க்க சிந்தாந்தம். அப்படியிருப்பினும் உலகத்திற் பற்பல பேதமான அநேக சமயங்களும், சமயங்கள் தோறும் பற்பல தேவர்களும் உளரென்ற கொள்கை அங்கங்கே தடிப்புக்கொண்டு சமயங்களொன்றோடொன்றிகலிப் போரிடுகின்றன வென்பதும் யாவரும் அறிந்த விஷயம். இவ்வகைத்தாய் சமய பேதங்களால் உண்டுபடுகிற ஜாதக பாதகங்களும் அனந்தம். இவற்றை யுத்தேசித்து மெய்க்கடவுளொருவரே யாண்டு மெவ்விடத்தும் நீக்கமற நிறைந்து நின்று உலகமுழுவதிலும் ஒரு தனிச்செங்கோலோச்சி ஆண்டு நடத்திவருகிறா ரென்பதற்குத் தக்க நியாயங்களை விளக்கிக்காட்டி அவர் ஆத்ம ஜீவகோடிக ளுஜ்ஜீவித்தற்பொருட்டு ஏற்படுத்தியிருக்கிற இரக்ஷணியமார்க்க மெதுவென்று சுருதியுத்தி யநுபவ சாதனங்களாலறிந்து நிர்ணயப்படுத்தியவற்றைப் பகிரங்கமாக்குவான் றொடங்கி இந்தியாவில் வழங்கிவருகிற சைவ வைஷ்ணவமுதலிய சில சமயங்களை ஆராய்ச்சி செய்து ஆதாரசகிதம் வஸ்து நிர்ணயப் பிரகாரணமென்ற இந்தப் பிரதம பாகத்தை யெழுத நுதலியதென்க.

1-ம் அத்தியாயம், விவாதாம்ஸம். இதில் உலகாயதமுதலாக விக்கிரக தேவவணக்க மீறாக வாதிக்கப்படும் சமயங்களும் அவற்றின் கொள்கைகளும் அவற்றின் ஆதாரங்களும் இவை இவையென்று சுருக்கமாய் விதந்துகாட்டி அதன்மேல் வாதிக்கும் சமய மிதுவென்றும், அதற்கு ஆதாரமான நூல்களிவையென்றும், அதன் கொள்கைகளித்தகையனவென்றும் புலப்படத்தக்கது.

2–ம் அத்தியாயம், பொதுப்பிரகாணத்தில் உலகமும் உலகத்தி லுள்ள இயற்கைப்பிரமாண வரம்புகளும், அவ்வரம்பு கடவாமே உலகம் நடைபெற்று வருமுறையும், சிருஷ்டிப்பின் ஒழுங்கும், அவைகள் ஒன்றுக்கொன்று உபயோகப்பட்டு வருமாறும், உலகத்தில் ஆண்டாண்டு சம்பவிக்கிற அற்புதச் செயல்களும் பெரியோர் கூறி யிருக்கிற சப்தப் பிரமாணங்களுமெல்லாம் இவ்வெல்லாவற்றிற்கு மூலகாரணமாயுள்ள கடவுளுளரென்றும், அவர் பலரல்லர், ஒரே யொருவர்தானுளரென்றும், தக்க நியாயங்காட்டி அந்த மகோன்னத ராகிய மெய்க்கடவுளுக்குப் பொருந்தியதாய், ஆஸ்திகமதஸ்தர் ஆச கலரும் ஒப்புக்கொள்ளத்தக்கவும், ஒப்புக்கொள்ளவேண்டியவும், மறுக்கக்கூடாதவுமான பொதுமையுள்ள திவ்விய லக்ஷணங்க ளிவை யென்று அதிபூர்வமான கிறிஸ்துவேதத்தும் ரிக்குவேதத்து மிருந்து தெரிந்தெடுத்து விவரமாய் விளக்கி இவ்விலக்ஷணங்களைக்கொண்டு ஒவ்வொரு சமய கடவுளரின் குணந்தொழிலாதிகளிற் புலப்படும் நன்று தீதுகளையறிந்து ஒன்றுன மெய்க்கடவுளின்னுரென நிர்ணயிப் பான் கருதி விதந்திருக்கின்றும்.

3–ம் அத்தியாயம், உலகாயதமதம். இதில் ஆரம்பமாக உலகாயத மதத்தின் கொள்கைகளைச் சுருக்கமாய் வெளிப்படுத்தித் தேவகுரு வாகிய வியாழன் சில வகுப்பினைக் கெடுக்கும்பொருட்டுக் கபட மாக வியற்றிக்கொடுத்த சிற்றின்ப நூலைக்கொண்டு உலகத்தில் வழங் கிய சம்ஸ்கிருதம் தெலுங்கு தமிழ் முதலிய பாஷைகளி லுண்டுபட்ட கொக்கோகம் மதனநூல் கோவைமுதலிய சிற்றின்ப ஆபாசங்கள் நிறைந்த நூல்கள் காரணமாக நாஸ்திகமதந் தலையெடுத்தனவென் பது பெரும்பாலார் கொள்கையாயினும் தீரயோசிக்குங்கால், நூல் காரணமாக உலகாயத முதலிய நாஸ்திகந் தோன்றுமல் நாஸ்திகரா வாருடைய அநாசாரச் செய்கைகளையும் ஆபாசமான அநுஷ்டிப்பு களையும் நிலைப்படுத்தவே அந்நூல்களேற்பட்டனவென்றும், ஆஸ்திக மதாசாரங்களில் தவறியோருடைய யெதிர்வாதக் கொள்கையே நாஸ் திகமென்று வழங்குவதன்றி, மற்றப்படி அஃதோர் பிரத்தியேக மத மல்லவென்றும், தன்னை நாஸ்திகரென்று சொல்லயாராவது சம்மதிக்கா ரென்றும், பரமகாருணியரான கடவுள் தம்மையறிந்து திரிகரண சுத்தி யாய் வழிபட்டும் பேரின்ப நிலையடைதற்பொருட்டு உலக ஆரம்பந் தொட்டுக் காலாந்தரத்தில் தமது திருவுள்ள மிப்படியென்று வெளிப் படுத்திய மெய்ச்சுருதிக்கு அந்நியமான எந்த ஆஸ்திகமதமும் மறு உலகிற்கு நாஸ்திக மதத்தோடொத்துத் தீர்ப்படையத்தக்கவென்றும், பொதுமையான நியாயங்களால் விளக்கி அதற்குமேல் உலகாயதர் கொள்கையில் முக்கியமான சிலவற்றை யெடுத்துச் சித்தியாருடையை அநுசரித்துக் கண்டிதஞ் செய்திருக்கின்றும். கடைசியாய் ரக்ஷணிய சமயத்தார் அநுசந்தானஞ் செய்துவரும் ஈடேற்ற ஞானபோதனையின் சுருக்க மித்தகையனவென்றும் விளக்கியிருக்கிறேம்.

4–ம் அத்தியாயம், சாங்கியமதம். இது நாஸ்திகமதத்தோடொத்த வொருமதமே யாதலில் அதற்கென்று பிரத்யேகமான நியாயமெடுத்துக்காட்ட அவசரமில்லை யென்றபோதிலும், அம்மதஸ்தர் கடவுள் ஸ்தானத்தில் சுத்த சூன்யமான மாயையை யொருவஸ்துவென்று பெயரிட்டு அதுவே கடவுளென்றும், ஜெகத் உற்பத்திக்கு அதுவே காரணமென்றும் கூறுவராதலால் அந்தக் கொள்கையைக் கண்டிக்கு நிமித்தமாய் அந்த மாயை யொரு வஸ்துவல்ல, ஒன்றுமில்லாத சூனியமேயென்றும், இன்மையிலிருந்து யாது முண்டாவதில்லையென்றும், மாயைக்கு உள்ளதுபோலக் கற்பனைசெய்து லக்ஷணங்க ளுண்டென்று கொள்வது தப்பென்றும், மாயையைப்பற்றியுள்ள தப்பபிப்பிராயத்துக்குப் பேதைமையே காரணமென்றும், தீர்மான மிப்படி யென்றுந் தெளிவாய் நியாயங் காட்டியிருக்கின்றும்.

5–ம் அத்தியாயம், பௌத்தமதம். இம்மதஸ்தர் கடவுளென்று கருதி வழிபடும் புத்தனென்பவர் தாய் வயிற்றிற் கர்ப்பமாயிருக்கையில் இயற்கைப் பிரமாணப்படி பிறந்தால் தனக்கும் சாவுவருமென்றஞ்சிச் சாவாமையை விரும்பிப் பிள்ளையுரு முதிர்ந்தகாலத்துத் தாய் வயிற்றைப் பீறி விலாவைக் கிழித்துப் பிறந்தாரென்றும், அரசமரத்தையும் புத்ததிருக்கூட்டத்தையும் வடதிசை நோக்கிக் கண்டு தாமாக ஞானத்தையடைந்தாரென்றும், இவர் பிறப்புத் தன்பொருட்டன்று பிறர்பொருட்டேயென்றும், தேகவியோகமாகி அரசமரத்தடி நிழலில் வீற்றிருந்த பின்னர் அவர் எலும்புகள் தாதுநாயனுர், தண்டக அல்லது தாடகநாயனுரென விளங்கி இன்றுகாறும் ஸ்மிருதி உபதேசித்துக்கொண் டிருக்கிறுர்களென்றும், இவ்வாறு முத்திகூடிய புத்தனே பரமேஸ்வரனுகிக் கடவுள் ஸ்தானத்தை யடைந்தாரென்றும், அவரை வழிபட்டுவருகிற பௌத்தருக்குப் புத்தனைத்தவிர வேறு கடவுளுமில்லை, ஆத்துமாவுமில்லை யென்று அச்சமய நூல்கள் கூறுகின்றவாதலால், இதுவும் நாஸ்திகமதமேயென்று முன் கூறியுள்ள நியாய திருஷ்டாந்தங்களே போதுமாயினும் சிற்சில விசேஷக்கொள்கைகளுக்குத் தக்க நியாயங்காட்டிக் கண்டித்திருக்கின்றும். பொதுப் பிரகாணத்திலும் சாங்கிய மதத்திலுங் காட்டியிருக்கிற நியாயங்களை யொட்டி உய்த்துணர்ந்து கொள்கவென்று விடுத்தாம்.

6–ம் அத்தியாயம், க்ஷமணமதம். இதற்குக் கடவுள் அருகன். அல்லது அருகபரமேசுரன். இந்து சமயங்களிலெல்லாம் அருக சமயமே முந்தியது. அதற்குள்ள சாக்ஷியங்க ளிவையென்றும் அக்காலத்துள்ள பிரஜைகளும் அரசர்களும் முனிவர்களும் ரிஷிகளும் தபசிகளும் பிரமா விஷ்ணு ருத்திரரென்று பிந்தியகாலத்தில் பெயரெடுப்பாய்த் தலையெடுத்த மும்மூர்த்திகளும் ஆதியி லருகசமயத்தவர்களே யென்றும், அருகன் கடவுள் ஸ்தானத்தை வஹித்துக்கொள்ள நேரிட்ட மூல்யங்களிவையென்றும், அருகன் ஏற்படுத்திய தர்மா

தர்மங்களிவையென்றும், சமயநூல்களிவை சமயக்கோட்பாடுகளிவையென்றும் தெளிவாய் விளக்கிக்காட்டி அதற்குமேல் அருகமத கண்டனத்தில் அருகன் மனிதப்பிறப்பாய சாமான்ய வொருமனிதனென்றும், அவர் தேவனாயிருந்தால் மனிததேகங் கொண்டுதானு மனித ஞானத்தைப் படித்தறியவேண்டும்; அது அவசியமில்லையென்றும், கடவுள் தன்மைக்கு அருகன் அருகனல்லன்; மனிதனுகப் பிறந்திறந்துபோன வொரு தபசியேயென்றும், இவைபோன்ற சிற்சில விஷயங்களைப் பற்பல நியாயங்களைக்கொண்டு கண்டித்து நிராகரணஞ் செய்திருக்கின்றும்.

7–ம் அத்தியாயம், **மாயாவாதிமதம்**. இந்த மதஸ்தர் எல்லாவற்றிற்கு மூலகாரணமாயுள்ள பரப்பிரம வஸ்து வொன்றுண்டென்றும், அது நிர்க்குணப் பிரமமாதலில் மாயையே ஜெகத்காரணமாயிருந்து முத்தொழிலையும் நடத்திவருகிறதென்றும் பிரமமாகிய கடவுள் நிர்க்குணப் பிரமமென்பதற்கு உபநிஷத்துப் பிரமாணமுள்ளதென்றும், மற்றொருவகையாய் எல்லாம் பிரமமயமென்றும், மேலும் ஆத்துமாவே பரமாத்துமா ஜீவாத்துமாவெனப் பிரிந்து, பரமாத்துமா கடவுளாகவும் ஜீவாத்துமா உடல்கடோறும் புகுந்து உபாதிகளிற் சிக்குண்டு அலைகிறதென்றும், நானே பிரமமாயிருக்கிறேன் (அகம் பிரமம்) என்றும், தங்கள் கக்ஷியை ஸ்தாபித்துப் பேசுங்கொள்கைகளை மறுத்து நியாயதிருஷ்டாந்தங்காட்டி யெதிர்வாதஞ் சொல்லியாக்ஷேபித்துக் கண்டனஞ்செய்தும் அவர்கள் அங்கங்கே பிரயோகப்படுத்தியிருக்கிற திருஷ்டாந்தாபாசங்களையும் அவற்றிலுள்ள வழுக்கள் புரைசல்களையும் எடுத்துப் புலப்படுத்தியுமிருக்கிறோம்.

8–ம் அத்தியாயம், **சைவசமயக் கடவுள், சிவபிரான்**. சைவசமயிகளெல்லாருந் தாங்கள் செய்யு நித்திய கர்மாநுஷ்டானங்கள் முதலிய யாவத் சடங்குகளையும் சிவனை யுத்தேசித்தே செய்கிறார்கள். ஆதலால் அவருக்கு கடவுள்தன்மை யெப்படி வந்ததென்பதைப் பற்றி யாராயுங்கால் இந்து சமயங்களுக்கெல்லாம் பிரமாண கிரந்தமாக ஏற்பட்டிருக்கிற நான்கு வேதங்களிலும் யாதொரு ஆதாரமுமில்லையென்றும், ஆகமங்களிற் பிரமாணங்களுளவென்பது மெய்யென்றால் அந்த ஆகமங்களெல்லாம் பூர்வீகர்களாலே பிரமாணநூலாக வொப்புக்கொள்ளப்பட்டதில்லை. மேலும் சிவன் சாமான்யனை யொத்த மனிததேகியா யிருக்கிறாரென்று சைவசமய நூல்களே கூறுகின்றன. அறியாமை காரணமாக எத்தனையோமுறை ஆபத்துக்குட்பட்டிருக்கிறார். அவருக்குச் சூட்டப்பட்டிருக்கிற பெயர்க்காரணங்களைக் கவனிக்கையில் அவரைக் கடவுளென்று வணங்க அருகரல்லர். பொதுப்பிரகரணத்திற் காட்டியிருக்கிற சர்வேசுரத்துவ முதலிய திவ்விய லக்ஷணங்களி லொன்றேனும் சிவனுக்குப் பொருந்தவில்லையென்றும், அல்லாமல் அவருடைய சரித்திர ஆபாசங்களைப் பார்த்

தால் இவ்வகைப்பட்ட கிருத்தியங்களுடையோனைக் கடவுளென்று துணிந்து கூறுவது மகாபாதகமும் தேவநிந்தையுமாயிருக்கிறதென்றும், ஆதார சகிதமாய் விவரித்து மறுத்திருக்கிறோம்.

9-ம் அத்தியாயம், **வைசேஷிகமதக் கடவுள்.** கணாதர் அல்லது கணநாதர் என்றவொரு முனிவர் இந்துவேத ஆதாரங்கள் கிஞ்சித்துமின்றித் தாமாகக் கற்பிதமாயியற்றிய வொரு கிரந்தத்தில் ஆத்துமா பரமாத்துமா வென்றும் ஜீவாத்துமா வென்றும் இரண்டுகூறாகப் பிரிந்து அவற்றுள் பரமாத்துமா சிவனென்ற கடவுளாயிற்றென்றும், ஜீவாத்துமாவென்ற மற்றொரு கூறு உடல்கடோறும் புகுந்து ஜெகத்தாக விளங்குகிறதென்றும், கடவுளாகிய சிவனுக்கு இயற்கை ஞான மின்றென்றும், அவருக்கு மனவின் சையோகத்தினால் ஞானமுண்டாகிறதென்றும் இவ்வாறு சிலவிஷயங்களில் சைவசமயத்துக்கும் வைசேஷிக மதத்துக்கும் வித்தியாசப்படுத்தி யெழுதிய முகாந்தரத்தினால் இது வேறொரு சமயமெனப் பெயரெடுத்துத் தலைநீட்டியது. ஆதலாற் கடவுளுக்குரிய லக்ஷணங்கள் ஆத்துமாவுக்கில்லையென்பதையும், ஆத்துமாவுங் கடவுளு மொன்றென்கிற தப்பறையான கொள்கையையும் ஈஸ்வரனுக்கு இயற்கை ஞான மின்றென்கிற மௌட்டியத்தையும் கண்டித்து ஏற்ற நியாயஞ் சொல்லி நிராகரித்திருக்கிறோம்.

10-ம் அத்தியாயம், **அச்சுமறவாதக் கடவுள்.** முன்னர்க் கூறிய சிவபிரான். இந்தக் கடவுள் மெய்க்கடவுள ரல்லரென்று சைவசமயக் கடவுள் மறுப்பில் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறது. மற்றக் கொள்கைகள் அந்தந்தப் பிரகரணத்திற் கண்டிக்கப்படும்.

11-ம் அத்தியாயம். **வைஷ்ணவசமயக் கடவுள், விஷ்ணு.** இவர் கடவுளென்பதற்கு இந்துக்கள் வேதத்தில் ஆதாரமில்லை. ஸ்மிருதி கர்த்தா பதினெண்மரில் விஷ்ணு மூன்றாவதான வொரு ரிஷி யென்று அவர்கள் வேதத்தில் வெளியாகிறது. மற்றோரிடத்திற் குறிப்பிட்டபடி இவர் சூரியனுடைய பரிசாரகனென்றாகிறது. ஆகவே தேவர்களுடைய வகுப்பிற் சேர்ந்தவர். அல்லாமல் வேதத்தில் நாராயணன், பிரஜாபதி, பரமேஷ்டி யென்ற பெயர்கள் வருகின்றன. சிலர் இந்தப் பெயர்கள் விஷ்ணுவைச் சுட்டியன வென்பர். அந்த அர்த்தத்தைக் கவனிக்கும்போது பிரதம சிருஷ்டியாகிய மனிதனென்று பொருள்படுகிறதேயன்றி தேவவகுப்பென்று முதலாய் நிர்ணயிக்க மார்க்கமில்லை. மேலும், வாசுதேவன், பரவாசுதேவன், பரவாசுதேவமூர்த்தியென்ற பெயர்கள் வைணவமத நூல்களில் விஷ்ணுவுக்குரிய விசேஷ நாமங்களோடு வழங்கிவருகின்றன. வேதங்களில் இப்பெயர்களைப்பற்றி யாண்டுமில்லை. புராணாதி யிதிகாசங்களிலும் இதர நூல்களிலுமே வழங்குகின்றன. இவைகள் சாக்ஷிமாத்திரமாய் உலகத்துக்குப் பிரயோஜனப்படத்தக்க நூல்களல்ல.

விஷ்ணு துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தின்பொருட்டு உலகத்தில் பத்து அவதாரமெடுத்து ஆண்டாண்டு சஞ்சரித்துத் தர்மத்தை நிலைநிறுத்தினதாகப் புராணங்கள் கூறுவதில் நாலு மிருகங்கள். அவற்றால் மிருக தர்மங்கள்தான் நிலைப்படத்தக்கது. அதுபோக நராவதாரம் ஆறில் இராமாவதாரமொன்று. அதன் சதாம்ஸத்தினால் ஏகதேசந் தர்மஸ்தாபனத்தின் பொருட்டென்னலாம். மற்றவைகளில் வாமனாவதாரமும் திருவிக்கிரமாவதாரமும் நடுநிலைபிசகி யொரு தலை சாய்ந்தது. பரசுராமம் நியாயரகிதமானது. பலராமம் பிரயோஜனமற்றது. கிருஷ்ணாவதாரம் வஞ்சனை, சூது, தந்திரம், பொய், திருட்டு, அநியாயம் முதலியவைகளுக் குறைவிடமானது. அவதார தர்மம் இப்படியாக சாக்ஷாத் விஷ்ணுவின் சரித்திர சாராம்ஸங்களைக் கவனித்தால் அவற்றில் வெளியாகிற ஆபாச கிர்த்தியங்களையும் அநியாயங்களையு மெப்படியென்று வெளியிடக்கூடியது. வைணவ சமயிகள் அறியாதனவுமன்று. ஏனைய இந்து மதஸ்தர் தூஷியாததுமன்று. இவ்வாறாக இந்தியாவில் நிலைத்து வளர்ந்தும் க்ஷீணித்தும் உருக்குலைந்தும் தேய்ந்தும் வயோதிக தசையடைந்து வருகின்ற வைணவசமயக் கடவுளிடத்து மெய்த் தெய்வத்துக்குரிய லக்ஷணங்களில் ஒன்றும் பொருந்தாமையைத் தக்க நியாயங்கள் சொல்லி ஆதாரசகிதம் நிராகரணஞ் செய்திருக்கின்றோம்.

12-ம் அத்தியாயம், **பாஞ்சராத்திரக் கடவுள், விஷ்ணு**. இவருடைய அம்ஸாவதாரங்களி லொன்றாகிய கபிலாவதாரத்தில் அவர் தாயாகிய தேவகதி யென்பவள் தன் மகனைத் தனக்கு ஞானோபதேசஞ் செய்யென்று வேண்டியபோது, அவர் தாயே "ஜெகத் சர்வம் விஷ்ணுமய" மென்று எவருஞ் சொல்லக் கேட்டிருக்கிறீரன்றோ அதுவே ஆத்மார்த்தமான ஞானோபதேசம் என்று அதைத்தானே சற்று விஸ்தரித்து ஐந்துராத்திரி உபதேசித்தாரென்றும், இதேகாரணமாய் வைஷ்ணவ சமயத்தோடு சம்பந்தப்பட்டதாய் அதனோர் பிரிவாய்ப் பாஞ்சராத்திரமென்கிற இந்த மதம் உற்பத்தியாயிற்றென்றும், அந்த உபதேசம் இவையென்றும் கொள்கைகள் இவை யென்றும் விதந்துகாட்டி அவைகளை மறுத்து விவகரித்திருக்கிற நியாய திருஷ்டாந்த ஆதாரங்களினால் பரவாசுதேவன் கடவுளல்லரென்று கண்டிதஞ் செய்திருக்கின்றோம். இந்தப் பாஞ்சராத்திரக் கொள்கைகளையும் அதன் மறுப்பையும் ஏனோதானோவென்று ஒப்புக்கு வாசித்துப் பார்க்கிறவர்கள் முதலாய் உண்மையைக் கிராகியஞ் செய்து கொள்வார்க ளென்பதற்குச் சந்தேகமில்லை.

13-ம் அத்தியாயம், **பிரமனாதிய கடவுள்**. 1-வது. இவர்களுள் முதன்மைபெற்ற பிரமாவைச் சைவரும் வைஷ்ணவரும் பிரதான கடவுளென்று ஒப்புக்கொள்ளுகிறார்க ளென்றாலும், பிரமா வொரு பொய்சொன்ன காரணத்தினால் சிவன் அவருக்குப் "பூஜையுங்

கோயிலும் போகவென்றனன்” எனத் தீர்ப்பிட்டபிரகாரம் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஒத்த பூஜிதை பிரமாவுக்கு இல்லாமற்போனது அவரது நிர்ப்பாக்கியம்போலும். ஆதாம் ஏவாள் சிருஷ்டிப்பைப் பற்றிச் சுபக்ஷத்துக்குரிய கிறிஸ்துவேதம் வெளியிடுகிறபடி பிரமாவுஞ் சிருஷ்டியானுரென்று யசுர் வேதத்தைச்சேர்ந்த ரிக் வேதம் 90–92-வது பிரிவுகளிலும் மற்றொரு பிரிவிலுங் கூறியிருக்கிற வாக்கியங்களை இந்தப் புஸ்தகத்தின் 108, 109-ம் பக்கங்களில் உதாஹரணப்படுத்தி யிருக்கிறதைக் கண்டுகொள்க; இவ்வகையாய்ச் சிருஷ்டிக்கப்பட்ட பிரமா கடவுளாவதெப்படி யென்றும், ஒன்றான மெய் கடவுளுக்குரிய தேவலக்ஷணம் பிரமாவினிடத்து அவருடைய நடபடிகளிலாயினும் அவருடைய சரித்திர பாகங்களிலாயினும் ஒன்றேனுங் காணப்படவில்லையென்றும், அவருடைய சரித்திரங்களெல்லாம் புராணக் கட்டுப்பாடுகளும், பொழுதுபோக்கும்படி கற்பிதமாகப் புனையப்பட்ட கதைகளென்றும் பிரமாவே பிரமமென மயங்கிக் கூறுவார்க்கு அப்படி யல்லவென்று தெளிவாய்ப் புலப்படுமாறு தக்க நியாயங்க ளிவையென்றுங் காட்டியிருக்கின்றோம்.

2–வது. அக்கினி, வாயு, இந்திரன், வருணன், மித்திரன், அஷ்டவசுக்கள் முதலிய தேவவகுப்பினராய சிருஷ்டிப்பொருள்களையே பூர்வ ரிக்வேதகாலத்திலுள்ள ரிஷிகளும், அரசர்களும், பிரஜைகளும் கடவுளாகக் கருதி வழிபட்டு வந்தார்களென்றும், பிற்காலத்துத் தோன்றிய ரிஷிகள் பிரமமொன்றே தெய்வம்; அது அநாதி நித்திய ஸ்வயம்புவென்றும், அதை வணங்குமுறை யிதுவென்றும், அததற்குரிய ஆதாரங்க ளிவையென்றும் விளங்கக்காட்டி ஸ்தாபித்தவிதமிப்படியென்றும், அப்பாலுள்ள பின்சந்ததியார் இவ்வகையாய கடவுளரும் கொள்கைகளும் எல்லாம் தவறென்று கண்டு உபேக்ஷித்திருக்கிறார்களென்றும், தக்க நியாயங்களோடு நிராகரணஞ் செய்திருக்கின்றோம்.

14–ம் அத்தியாயம், **அநேகேச்சுரவாதம்.** அநேகேச்சுரவாதக் கொள்கையையுடைய இந்துதேசத்தில் இன்ன திக்கில் இன்ன நாட்டிலிருக்கிறார்களென்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு வகுப்பினர் யாண்டுமில்லர். இந்துக்களாகிய சுதேசிகள் யாவரும் வெவ்வேறாகிய இன்ன இன்ன மதஸ்தரென்று பெயர்க ளேற்பட்டிருந்தபோதைக்கும் பொதுவாய்ச் சொல்லுகிறபக்ஷத்தில் ஒவ்வொருவரும் அநேகேச்சுரவாதிகளென்றே நிர்ணயிக்கவேண்டியவர்கள். “எம்மதத்தோர் எவ்வகை நிஷ்டை சொல்லினுஞ் சம்மதிமே யெமக்குந் தீபற தற்போதம் வாய்க்குமே லுந்தீபற” இதனாலுமறிக. ஆதலின் இக்கொள்கை தவறென்பதற்குப் போதுமான நியாயங்காட்டி யிருக்கின்றோம்.

15–ம் அத்தியாயம், **விக்கிரக-தேவ வணக்கம்.** ஆரம்பத்தில் விக்கிரகபக்தி உற்பத்திக் கிரமத்தை விவரித்து அதற்குமேல் அந்தக்

கொள்கையை நிராகரணஞ் செய்யுந் துவக்கத்தில் வைணவ சமயத்த வரான ஒரு மகாபண்டிதர் அதன் மறுப்புக்கு எழுதியிருக்கிற விஸ்தாரமான சுருதிப் பிரமாணங்கள், அவற்றிற்கு விக்கிரகபத்தியார் செய்யும் தப்பர்த்தங்கள், நியாய திருஷ்டாந்தங்கள், சாக்ஷியங்கள், அர்ச்சையால் விளையும் ஜாதகபாதகங்கள், கடைசியாய் அவர் இது விஷயத்தைப்பற்றிச் சொன்ன சுருக்கமான உபநியாசம் ஆகிய இவைகளில் இந்தப் புஸ்தகத்திற்கு உசிதமாய்க் காணப்பட்டவைகளை அங்கங்கே தெரிந்தெடுத்து அவர் கூற்றையே கூறியிருக்கின்றும். இடந்தோறும் அத்தைப் புலப்படுத்தியு மிருக்கின்றும். கடைசியாய் சுபக்ஷ நிராகரணத்தில் விக்கிரகத்தைப்பற்றி மெய்ச்சுருதி கூறுங் கூற்றும், விக்கிரகத்தின் கதி யிப்படியாகுமென்ற தீர்க்கதரிசனங் களும், அவற்றில் இந்தியாவில் நிறைவேறிய தீர்க்கதரிசன உண்மையும் இவ்வாறென விளக்கியிருக்கின்றும்.

சுபக்ஷம்.

16–ம் அத்தியாயம், கிறிஸ்துசமயம். இதற்குக் கடவுள் ஜெகோவா. இக்கடவுளுக்கு மெய்ச்சுருதியிலும், திருச்சபையிலும் வழங்கி வருகிற திருநாமங்களும் அவற்றின் பொருள்களும் இவை இவை யென்பதூஉம், கடவுள் மொழியாகிய வேதம் வெளியிட்டிருக்கிற பரமார்த்த நிஷ்கருஷமாகிய வஸ்து பிதா, குமாரன், பரிசுத்தாத்மரான இந்த ஜெகோவாவாகிய திரியேக பெருமானென்பதூஉம், தேவனுடைய கிரியைகளெல்லாம் அம்மூவருக்கும் உரியவைகளாயிருந் தும் அவைகளை யொழுங்காய்ச் சொல்லுகிறபொழுது பிதா சிருஷ்டித்தார், குமாரன் ரக்ஷித்தார், பரிசுத்தாவி பிழைப்பித்துப் பரிசுத்தமாக்குகிறுரென்பதூஉம், அதேபிரகாரம் பிதா குமாரனை நமக்கு ரக்ஷகராகக் கொடுத்தார். குமாரன் வந்து நமக்குந் தேவனுக்கும் நடுவராய் நின்று நம்முடைய காரியத்தை நடப்பிக்கிறுரென்பதூஉம், ஆவியானவர் பிதாவையும் குமாரனையும் குமாரன் கொடுக்கிற ரக்ஷிப்பையும் நமக்கு வெளிப்படுத்தி நம்மை மறுபடியும் ஜெனிப்பிக்கிறுரென் பதூஉம், மேலும் பிதா தீர்மானிக்கிறவர், குமாரன் நிறைவேற்றுகிறவர், ஆவி ஈகிறவரென்பதூஉம், அல்லாமல் பிதாவின் மூலமாய்க் குமாரனாலே ஆவியைக்கொண்டு நாம் சிருஷ்டிக்கப்பட்டும் இரக்ஷிக்கப்பட்டும் புதிதாய்ப் பரிசுத்தமாக்கப்பட்டு மிருக்கிறேமென்பதூஉம், நாம் கிரகியஞ் செய்துகொள்ளுமாறு வேதத்திற் பொருள் மைந்து கிடக்கின்றனவாதலில் தேவன் ஒரு மூவராயிருத்தலையும், அம்மூவரும் ஒரே தேவனாக விருத்தலையும், ஒரே கடவுள் மூவராயிருத்தலையும், அம்மூவரே ஒரே தேவத்தன்மையுடையராய் ஒரே தேவனாக விருத்தலையும் மெய்ச்சுருதி வாக்கியங்களால் தெளிவாய் விளங்கத் திருஷ்டாந்தப்படுத்திக் கடைசியாய் பொதுப்பிரகாணத்தில் விதக்கப்பட்ட மெய்க்கடவுளுக்கிருக்கவேண்டிய தேவலக்ஷணங்

கள் 32-ம் திரியேக பெருமானிடம் ஐயந்திரிபற மெய்ப்படுவதை அநேக வேதவாக்கியங்களால் உதாகரித்து அவ்விலக்கணங்கள் யாவும் ஒருங்கே திரியேக பெருமானாகிய ஜெகோவாவின் பக்கலுள்ளனவே யென்று புலப்படுத்தியிருக்கின்றோம்.

17–ம் அத்தியாயம், சந்தேகநிவிர்த்தி. மேலைய பதினாறு அத்தியாயங்களிலும் விவரித்த பொருள்களை யநுசரித்துக் கடைசியில் தீர்க்க சித்தாந்தப்படுத்திய வஸ்து நிர்ணயத்தைப்பற்றிப் பரமதஸ்தர் சிலர் சிற்சில விஷயங்களிற் சந்தேகித்துக் கேட்கும் கேள்விகளை யெட்டுக் கேள்விகளாகச் சுருக்கி அவற்றிற்குத் தெளிவாய்ச் சொல்லப்படுகிற உத்தரவுகளே இந்தப் பதினேழாம் அத்தியாயத்திலடங்கிய பொருளாம். அவைகளைச் சுருக்கிக் காட்டுகின்றோம்.

1. கேள்வி: பாவம் உலகத்தில் எப்படி வந்தது?

உத்தரவு: கடவுள் விலக்கியிருந்த மரத்தின் கனியைத் தேவ கட்டளையை மீறிப் புசித்த அன்றே பாவம் உலகத்தில் வந்தது. ஆகவே மனிதன்தான் பாவகாரணன். தெய்வமன்று.

2. கேள்வி: நன்மை தீமை யறியத்தக்க விருக்ஷத்தை யுண்டாக்குவானேன்?

உத்தரவு: மனிதன் கடவுளுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டியவன் என்ற உணர்ச்சியை அவன் எப்போதுந் தன்னுள்ளத்திலும் செய்கையிலுங் காத்துக்கொள்ளு நிமித்தமாகவே.

3. கேள்வி: மனிதனைச் சுயாதீனமுள்ளவனாகப் படைப்பானேன்?

உத்தரவு: மனிதனைப் பராதீனனாகப் படைப்பதிலும் படையாமலிருப்பதே நன்மை யென்க. சுயாதீனனாகப் படைத்தது தோஷமன்று.

4. கேள்வி: மனிதனைத் தடுக்காமல் அவன் பாவத்தில் விழப் பார்த்திருந்ததென்ன?

உத்தரவு: அவனுக்குள் அமைத்துவைத்த மனோசாக்ஷியினாலும், தமது கற்பனையினாலுந் தேவன் தடுத்தேயிருக்கிறார்.

5. கேள்வி: கடவுள் பரிசுத்தராயிருக்கையில் அசுத்தச் செய்கை யெப்படி ஊடாடக்கூடும்?

உத்தரவு: இந்தக் கேள்வி தேவன் திருச்சித்தங்கொண்டு வெளிப்படுத்தினாலேயன்றி நாமாக அறிந்துகொள்ளக் கூடாதகாரியம். மனிதன் தானாகவே பாவத்தைச் சம்பாதித்துக்கொண்டானென்று கிறிஸ்துவேதஞ் சொல்லுகின்றது. இதுவே சத்தியம். இதில் ஐயமின்றென்க.

6. கேள்வி: மநுப்பிரதமர் பாவஞ்செய்ய அவன் சந்ததியாராகிய உலகத்தாரையும் தண்டனைக்குட்படுத்துவ தெப்படி?

உத்தரவு: கசப்பான வித்திலிருந்து இனிப்பான பழத்தைத் தருகிற விருக்ஷமும், கைப்பான உவர்நீரூற்றிலிருந்து மாதுரியமான ஜலமுமுண்டாகக் கூடாதவாறு அசுத்தமான பாவத்தினின்று நிர்மலமான புனிதத்துவமு முண்டாகா தென்றறிக.

7. கேள்வி: ரக்ஷிப்புக்கென்று சிலரைத் தெரிந்துகொள்வதினால் தேவன் பாரபக்ஷமுள்ளவரென்றாகிறதல்லவா?

உத்தரவு: அப்படியன்று; இரக்ஷணிய சத்தியம் எல்லா மநுக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. திவ்விய அழைப்பு எல்லாருக்கும் வந்தெட்டுகிறது. ஞானபோனக பானவருக்கம் எல்லாருக்காகவும் யத்தனமாக்கப்பட்டுள்ளது. ஒருவரையாவது வரையவில்லை. சிலர் பாவப்பிரியத்தினாலும், தங்கள் துர்க்குணத்தினாலும், இடறுண்டு போகவுமாட்டார், கேட்கவுமாட்டார். தாங்களே மதிமோசம் போகிறார்கள். இதை நினையாமல் தேவன் பாரபக்ஷ முடையவரென்று சொல்லித் திரிவதே தெரிந்துகொள்ளப்படாமை யென்றறிக.

8. கேள்வி: ஆதி. 3. 22–ம் வாக்கியத்தின்படி "நம்மிலொருவரைப்போலானான்" என்றமையால் மனிதன் தேவனானான்? இதெப்படி?

உத்தரவு: ஆதாம் தேவகட்டளையை மீறி அவருக்கடங்காமல் தன்னிஷ்டப்படி பாவம் செய்தபோதே தேவனைப்போல முற்றுஞ் சுயாதீனனானான் என்ற கருத்தும், இரண்டாவதாக ஆதாம் உலகத்தைக் கெடுத்தான், கிறிஸ்து உலகத்தை ரக்ஷிக்கிறார் என்ற கருத்து மடங்கியிருக்கின்றன. இத்யாதி விஷயங்களைக்கொண்டு உவமித்த தென்றறிக.

இதுமட்டாக விதந்து நிர்ணயப்படுத்தியிருக்கிற வஸ்துநிர்ணயப் பிரகரணத்தை வாசித்தறிந்த சுதேச சிநேகிதரே!

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்கிற இந்த வசனத்தை தம்முடைய பிரதம திருத்தொண்டர்களி லொருவரான தோமாஸ் அப்போஸ்தலனுக்குள்ள சந்தேகம் நிவிர்த்தியாதற்பொருட்டும் பாபாந்தகாரத்தி லடைபட்டிருந்த இந்த உலகத்தை யீடேற்று நிமித்தமாயும் ஈண்டு திருஅவதாரஞ்செய்து உலகசற்குருமூர்த்தமாய் எழுந்தருளிவந்திருந்த தேவகுமாரனாகிய ஸ்ரீ கிறிஸ்து பகவான் தமது திருவாய்மலர்ந்தருளிச் செய்தார். இதை ஆண்டு கேள்வியுற்ற அப்போஸ்தலன் மாத்திரமல்ல எக்காலத்துமுள்ள நராத்துமகோடிகளெல்லாம் உஜ்ஜீவித்தற்பொருட்டுச் சுவிசேஷ சத்தியமாகிய அரதநக்கோவை மணிகளுக்கு நடுநாயகமாய் ஜோதர்மய

மாய் திவ்விய ஞானபரணமாய் மலைமீதேற்றிய தீபம்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. இதுபற்றியன்றே இரக்ஷணிய யாத்திரிகம், வியாக்கியானி அரமனைப்படலம், 32-ம் கவிதொடங்கி 38-வது கவிமட்டுமுள்ள கவிகளைச் சொற்ற காரணம்:—

எண்படு மருட்சுவி சேஷ மேய்ந்துநம்
புண்படு மிருதயப் புரைக ணீக்கிநற்
பண்பொடு பவித்திரப் பத்தி வித்திமெய்
விண்படு போகத்தை விளக்கு மாலரோ.

திருவரு ளாளர்க்கு ஜீவ வாசனை
தருவது புலைநெறி தழுவி யோர்க்குமன்
வெருவரு மரணவா சனைவி ளைப்பது
நிருமலன் றருசுவி சேஷ நீர்மைகாண்.

பாவதா ருவையறப் படுக்குங் கோடரி
ஜீவதா ருவிலெழு தெய்வ மாக்கனி
தேவதா தரும்வியந் தேத்து செம்பொருள்
பூவுல குயவரு புனிதன் புத்துரை.

ஆன்மநோ யகற்றுசஞ் சீவி யன்பர்க்குத்
தேனினு மினியதீஞ் சுவைய தெள்ளமிர்
தூன்மனத் திருள்கெட வொளிரு மொண்சுடர்
வானவர் கோமகன் மதுர வாய்மொழி.

பாவியென் றுணர்ந்துபுண் பட்ட நெஞ்சர்க்குத்
தேவநீ தியின்வருந் திகிலை மாற்றிடுந்
தாவரு நித்யஜீ வனையுந் தந்திடுந்
தீவினை யறவரு செம்மல் வாசகம்.

துன்பெனுந் தீச்சுடச் சுழன்று சோர்வுறும்
அன்பருக் கவ்வன லவிக்கு நித்யபே
ரின்பவா ரிதிவிசு வாசிக் கின்னுயிர்
நம்பெரு மானிவண் நவின்ற வாசகம்.

தீர்த்தனே டாதியிற் றிகழ்ந்து தெய்வித
வார்த்தையாய்ப் புவிக்கொளி மருவ மானிட
மூர்த்தியாய் விளங்கிய முனைவன் றந்தநூற்
சீர்த்தியை யாவரே தெரிக்கு நீர்மையார்.

இவ்வகையான அருமை பெருமைகளை நோக்கியே கிறிஸ்து மார்க்கவேதசத்தியத்திற்குத் திருவாக்கு, திருவசனம், அருள்வாக்கு, அருள்வசனம், ஜீவவாக்கு, ஜீவவசனம், திருமொழி, அருள்மொழி யென்று சிலாக்கியமான பெயரிட்டுத் திருச்சபை தொன்றுதொட்டு வழங்கிவருகிற கருத்து. ஆதலின் இவ்விடத்துத் தெரிந்துகொண்ட இந்தத் திருவாக்கே பூலோகத்தாரெல்லாருக்கும் புருஷார்த்தத்தை

யருளத்தக்க பரமார்த்த நிஷ்கருஷம். இதுவே கிறிஸ்துவேத முழுவதுக்கும் பிரணவ வாக்கியம். இப்படியென்று மெய்விசுவாசிகள் யாவரும் அநுசந்தானம் பண்ணிவருகிறார்கள். ஆதலால் இகபர சர்வார்த்த சாதனமாகிய இந்தத் திருவாக்கை நாம் சத்விநய பயபக்தியோடு சிந்தித்துக்கொள்ளவேண்டியது இன்றியமையாத முக்கியவிஷயம். ஆதலின் இதை யலக்ஷியம்பண்ணாமல் நீங்களெல்லீரும் சற்றுக் கவனமாய்க் கவனித்துப் புருஷார்த்தத்தை யடையும்பொருட்டு உங்களுக்கு விநய பூர்வமாக விக்ஞாபனஞ் செய்துகொள்ளுகிறோம்.

இவ்விடத்து ரக்ஷகர் திருவுளம்பற்றின பிரணவ வாக்கியத்தில்,

1. ஸ்ரீ கிறிஸ்துபகவான் வழியாயிருக்கிறது எப்படி?

2. சத்தியமாயிருக்கிற தெப்படி?

3. ஜீவனாயிருக்கிற தெப்படி? யென்று,

மூன்று பிரிவாய், தேவாவியின் அநுக்கிரகத்தை முன்னிட்டு சவிஸ்தாரமாகப் பொருள்விளங்கும்படி சிந்தனை செய்துகொள்வோமாக. ஆயின் முதலாவது நான் வழியாயிருக்கிறேனென்று ரக்ஷாபெருமான் சொன்ன கருத்தைப்பற்றிய விசாரணை.

உ ப நி யா ச ம்.

1. நானே வழியாயிருக்கிறேன் என்பதைப் பற்றியது.

வழியென்பது ஓரூரிலிருந்து மற்றோரூருக்கு மனிதர் நடந்தாவது, வாகனங்களிலேறியாவது போக்குவரவு செய்யும் பாதை. இதற்கு மார்க்கம், ரோட்டு, ரஸ்தா, சாலையென்று பெயர் வழங்குகின்றன. இவ்விடத்தில் குறிப்பிட்ட வழியாவது பூலோகத்துப் பிரஜைகள் தம்முடைய பரலோக ராஜ்யத்துக்கு வரத்துப்போக்கா யிருக்கும்படியேக சக்ரேஸ்வரனாகிய திரியேகப்பெருமானால் ஏற்படுத்தப்பட்ட பூர்வபாதை. பூர்வபாதையென்றும் சுவிசேஷமார்க்கமென்று மிரண்டு வகை. அதற்கே கிரியை உடம்படிக்கையென்றும் கிருபை உடம்படிக்கையென்றும் பெயர். மனிதர் பரலோகத்தரசன் கட்டளையை மீறிப் பாவஞ்செய்து சாமித்துரோகிகளாவதற்கு முன்வரையில், இந்தப் பாதை துப்புரவாயுந் துலக்கமாயுமிருந்தது. பாவம் பூலோகத்தில் உற்பத்தியான அன்றே இந்தப் பூர்வபாதை தூறடர்ந்து பைசாஸப் பிரகிருதிகளும், துஷ்ட மிருகங்களும், விஷப்பூச்சிகளும், பலுகிப் பெருகி உலகம் தேவசாபத்

துக்குட்பட்டது. மனிதனையும் மரணபந்தம் பற்றிக்கொண்டது. பூர்வபாதை கட்டோடே போக்குவரவு முட்டி பைசாசத்தலைவனுல் நரக பாதலத்துக்குப் போகிற பெரும்பாதை திறக்கப்பட்டது. இந்த ஹேதுவினுல் இப்படிக் கடவுளுடைய நீதியுள்ள உக்கிர கோபாக்கினி மனித ஜீவஸமூஹங்களெல்லாவற்றின் மேலுமூண்டு கொண்டிருப்பதையும் பூமி சகலவித நிர்ப்பாக்கியமான நிர்ப்பந் தத்துக் குட்பட்டிருப்பதையுந் திருவுளத்தில் நன்குணர்ந்த தேவ குமாரனும், திரியேகத்துவத்தில் ஒரு தத்துவமான இரக்ஷணிய புண் ணியமூர்த்தி தமது பிதாவுக்கும், தண்டனைக்கிலக்காயிருக்கிற நரஜீவ கோடிகளுக்கு மத்தியஸ்தராய்த் தமது கருணைப்பிரவாகத்தினுல் நடு நின்று பிதாவின் சமுகத்தில் பரிந்துபேசித் தாமே உலகத்தில் மனி தாவதாரஞ்செய்யவும் உலகத்தின் பாவங்களைத் தம்முடையபேரில் ஏற்றுக்கொண்டு தேவநீதியின் உக்கிரதண்டனை முழுமையையும் தாமே உத்தரிக்கவும், நியாயப்பிரமாணத்தைத் திரிகாணசுத்தியாய் முற் றிலுங் கைக்கொண்டு உலகத்தாரெல்லாருக்காகவும் நீதியைச் சம்பாதிக் கவும் திருவுள்ளமானுர். பிதாவின் திருவுள்ளத்துக்கும் தமது குமா ரனுடைய மன்ருட்டு நலமென்று கண்டது. திருவுள்ளமுவந்தார். அப்போதே தம்முடைய குமாரனை ரக்ஷணியாதிபதியாக மகுடாபி ஷேகஞ்செய்து ஏற்றகாலத்தில் உலகத்திலனுப்பினுர். அவர் உலகத் திலனுபவிக்கப்போகிற சகல துன்பங்களும் வேதனைகளும் நிந்தை களுமெல்லாம் தம்முடைய திருச்சித்தத்துக்குப் பரிஷ்காரமாய்த் தெரிந்திருந்தும் "தேவன் தம்முடைய ஒரேபேருன குமாரனை விசு வாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை யடையும்படிக்கு அவனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவா 3: 16.). குமாரனுந் தாம்செய்துகொண்ட கிருபை உடம்படிக்கையை நிறைவேற்றும்பொருட்டு கேவலம்மனிதாவதாரஞ் செய்தார். எவன் தம்மை விசுவாசிக்கிருனே, எவன் தம்மை விசுவாசத்தோடு உபாசிக்கிருனே, எவன் அவற்ருேடு தமது திரு வசனத்தைக் கைக்கொண்டு கடைசி மூச்சொடுங்குமாறும் மனவி லும் வாக்கிலும் செய்கையிலும் காத்து அநுஷ்டிக்கிருனே அவனை நீதிமானுக்கித் தம்முடைய மகோன்னதமான உத்கிருஷ்ட புண்ணிய பலத்தால் ஆத்ம ரக்ஷணியமாகிய நித்தியஜீவ பேரின்பவீட்டில் சேர்க் கிருர். "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக் கிற யேசுவை நோக்கி" (எபி. 12: 1.) விசுவாசிகள் செய்யும் ஜீவயாத்திரையில் இடையில் எவ்வகையான விக்கினங்கள், இடை யூறுகள், விபத்துகள், சோதனைகள் முதலியவைகள் நேர்ந்தாலும் அவரே முன்னின்று அவைகளை விலக்கிக் காப்பாற்றுகிருர். ஆத லால் கிறிஸ்துபெருமானை எவன் விசுவாசக்கண்பெற்று தரிசித்து நடக்கிருனே அவனே மோக்ஷபாதையிற் செல்லுகிருன். அவ னுக்கு யேசுவே வழியாயிருக்கிருர். அந்த மார்க்கம் அல்லது வழி

யேசுவாயிருக்கிறார் என்பதில் ஐயம் யாது. இதுபற்றியே "என்னாலே யல்லாமல் பிதாவினிடத்தில் ஒருவனும் வரான். என்னை யறிந்தீர்க ளானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள். இதுமுதல் நீங்கள் அவனையறிந்தும் கண்டுமிருக்கிறீர்க" ளென்று ரக்ஷகர் தாமே திருவுளம் பற்றினார் என்றறிக. (யோவா. 14: 6, 7.)

இதற்கோரு திருஷ்டாந்தம்.

பாபாந்தகாரமான பரிசிக்கத்தக்க காரிருள் மூடிக்கொண்டும் குரூ ரமாய் ஹிம்ஸிக்கத்தக்க மகாகொடிய துஷ்டப்பிரகிருதிகள் குழுமிக் கொண்டும் போக்குமுட்டி யொன்றையொன்று கொன்று தின்று தேக் கெறிந்து யதேச்சையாய்த் திரிந்துகொண்டும் லவலேசம் வெளிச்ச மென்பது கிடையாமலிருக்கத்தக்க பிரபஞ்சமென்று பெயர்கொண்ட வொரு ஆரணியம் உண்டு. அதிலே நாசதேசத்திலிருந்து ஜீவ யாத்திரை செய்யத் தலைப்பட்ட பிரயாணிகள் சிலர் வழிதப்பி அர்த்த ராத்திரியில் அதற்குள்ளே யகப்பட்டு வழியுமின்றி ஒளியுமின்றித் திகைத்து அஞ்சி நடுங்கிப் பதறிக் குலைகுலைந்து ஏக்குற்றுத் தவித்தார் கள். திடீரெனத் தங்களுக்குச் சம்பவித்த நிர்ப்பந்த மோச நாசத்தால் வருந்தி, இனியிதிலிருந்து தப்பிப் பிழைக்க வழிகிட்டுமோ ஜீவ தேசத்தை யாண்டுவருகிற நீதி தவறாத செங்கோலரசன் இந்த ஆர ணியத்தில் ஒரு வழியைத் துலக்கி இடைக்கிடையே தீபஸ்தம்பங்கள் நிறுத்தித் தம்முடைய பரிஜனர்களை நிறுவிப் பிரயாணிகளுக்கு உதவி செய்யாதிருப்பாரோ, செய்திருப்பார். அதைத் தேடிக் கண்டுபிடிக்க முயல்வோமாகில் ஒன்று வனவிலங்குகளுக்கு இரையாவோம், அல் லது மோசநாசப்படுகுழியில் முழுகிப்போவோம், அல்லது பேய்க்கணங் கள் அடர்ந்து கொல்லுமேயென்று பலவாறு எண்ணமிட்டுக் கலங் கினார்கள். இவ்வாறு அவர்கள் நெடுநேரமாகத் திகிலடைந்து உழன்று கொண்டிருக்கையில், இதோ அகஸ்மாத்தாய் வெகுதூரத்தில் சுட ரொளிப் பிரபையொன்று காணப்பட்டது. அது சிறிதுபொழுது தங்கள் பிராணன் பிரிவதுபோல் மறைந்தும் திரும்பவந்து உடலிற் புகுவதுபோலும் சற்றுத் தெளிச்சை பிறந்து உணர்வு கிட்டியது. அப்போது ஒளிஉருவாய் வெளிவந்த ஈசன் "வருத்தப்பட்டுப் பார ஞ்சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமு மனத் தாழ்மையுமாயிருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொ ண்டு என்னிடத்திற் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்க ளுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும், என் நுகமெதுவாயும் என் சுமை லகுவாயுமிருக்கிறது" என்றார். சற்றுப்பொறுத்து நானே வழியென்ற திவ்விய மங்கள வசனாமிர்தம் அவர்கள் செவி வழி புகுந்தது. உடனே பரிமளங்கலந்த மந்தமாருதம் அவர்கள் தேகத்தில் படிந் தது. அக்ஷணமே ஜீவதேசத்தரசனுழையர் சிலர் அருகில் வந்து, நண்

பரே கலங்காதீர், மலங்காதீர், அஞ்சன்மின், இதுவே ரக்ஷணியநாள் இதுவே தகுதியானகாலம் என்று திருவாக்கைக் கூறினதுமன்றி,

பாவ பாரஞ் சுமந்துபிர பஞ்சா ரணியத் தலைந்தாத்ம
நோவுற் றிளைத்தீர் தாகித்தீர் நோக்கு மிதுதான் ரக்ஷணிய
ஜீவ ஊற்று விசுவாசச் செங்கை யார முகந்தருந்திற்
சாவீ ரல்லீர் தாகியீர் சரதம் வாரும் ஜெகத்தீரே. 1.

இரும்போ நெஞ்ச மின்னுந்தா னிளக விலையோ வீண்டுசற்றே
திரும்பிப் பாரு முமக்காக ஜீவன் கொடுத்த தியாகேசன்
பெரும்பா தையைவிட் டிடுக்கவழி பிரவே சியுங்கள் பிழைப்பிரென
விரும்பி யழைத்து வருகின்றார் விரைந்து வணங்கும் ஜெகத்தீரே. 2.

ஜீவன் பிழைக்க மகவளித்த தேவே தந்தை தியாகேசன்
பாவ நிவிர்த்தித் துமைப்பரம பதத்திற் கூட்டுந் துணைபுனித
ஆவி சுருதி யமிழ்தூட்டும் அன்னை மெய்வே தியருறவோர்
தேவ குடும்ப மிதைவிரைந்து சேர வாரும் ஜெகத்தீரே. 3.

ஒன்று நினைமின் நராத்துமங்க ளூர்த்த கதிசேர்ந் துயவேண்டில்
என்றும் யேசு கிறிஸ்துநல்கு மிரக்ஷ ணியபுண் ணியபலத்தால்
அன்றி வேறு வழியிலையீ தனந்ததரஞ்சத் தியமதனால்
இன்றே யந்த விரக்ஷகனை யிறைஞ்ச வாரும் ஜெகத்தீரே. 4.

இப்பாடல்களையுங் கூறித் தெருட்டினார்கள்.

இத்யாதி சம்பவங்களைக் கண்டுங் கேட்டு மறிந்துகொண்ட பிரயாணிகளுடைய ஹிருதயத்தில் பரிசுத்தாவியாகிய தேவன் கிறிஸ்துவின் திருவாக்கைப் புகுத்தினார். அகவிருளகன்றது. விசுவாசக் கண் அங்குரித்துக் கிளம்பிற்று. பிரயாணிகள் தங்களுக்குமுன் தோற்றிய பிரகாசத்தை இலக்காகக் குறித்துச் சாவதானமாய் ஒளியண்டையடுத்துத் தங்களை யமிழ்த்திக்கொண்டிருந்த சகலவித சஞ்சலத் தொடர்புகள் சூரியனைக் கண்ட பனிப்படல மிரிந்தோடுவதுபோல க்ஷணிகத்தில் தொலைந்தோடவும் பரமானந்த பூரிதராய்க் கிருதார்த்த மடைந்தவர்போல அகக்களிப்புற்றார்கள். ஈண்டெடுத்து உதாகரித்த திருஷ்டாந்தத்தில் அர்த்தராத்திரி அவாந்திரமான காட்டுக்குளகப்பட்டு வருந்தின பிரயாணிக்கு அவ்விடத்துப் பிரகாசிப்பித்த ஒளி பிரயாணிகளுக்கு எப்படி வழியாயிருந்ததோ அப்படியே ஸ்ரீ கிறிஸ்து பெருமானும் தம்மை மெய்விசுவாசத்தாற் பற்றிக்கொண்ட தம்முடைய தொண்டர்களுக்கு வழியாயிருக்கிறாரென்று ஸ்பஷ்டமாய் விளங்குவதை யுய்த்துணர்க.

இவ்வழி யெத்தகையதெனில்,

முதலாவது, இது நேர்வழி. இவ்வுலகத்திலிருந்து பரலோகத்திற்குப் போகிற வழிகளிலெல்லாம் இந்த வழியே யாதொரு கோணலும் மாறுபாடுமின்றி நேராய்ச்சென்று உன்னதத்தி லுய்க்கத்தக்கது.

இரண்டாவது, நெருக்கவழி அல்லது இடுக்கவழி.

"ஒற்றையேவழி யோரடித் தடமுடைத் தும்பர்க்
கொற்றவன் திருநகர் செலக்குறித் ததுகோணல்
அற்றநூல் வழியய லடிபிச குறினந்தோ
துற்றுகாரிருட் சூழலுய்த் திடுமிது துணிபே"

யென யாத்திரிகத்திற் கூறியிருக்கின்றது.

உன்னதத்தை நோக்கிச் செல்லும் வழி இது ஒன்றேயெனில், அல்ல, மேனோக்கிச் செல்லும் வழிகள் பலவுள்ளனவென்று சில குதர்க்கர் சொல்லுவர். ஒரு ஹிந்து, வழிகள் பலவுள வென்பதற்கு உத்தரவாக, "வாலே முகமாய் வர ஆனையேறினன் போலேயுன், போதமோ போய்த்தீண்டும்" என்று திருஷ்டாந்தப்படுத்துகிறார். இதன் கருத்தென்னவெனில், ஒரு ஊருக்குப் பிரயாணப்படுவோன் ஒருவன், தான் மாத்திரம் அவ்வூரை நோக்கி யானையின் வால்முக மாய் மேலே உட்கார்ந்து அவ்வூரைப் பின்புறமாக்கொண்ட யானையை நடத்தினால் அவன் குறித்த வூரை யெவ்வளவுகாலஞ் சென்ற போதும் கிட்ட வல்லவனுகான் என்பதே. அதுபோல ஸ்வர்க்க பதவியை நாடி முயல்வானொருவன் கிறிஸ்துமார்க்கத்தை விடுத்து ஏனைய மார்க்கத்தில் செல்வானாயின் உயர்பத மென்றுமடையான் என்பதற்கே தக்க திருஷ்டாந்தமாயிருக்கிறது. இது நேர்வழியா யிருப்பினும் பிரயாணிகளுக்கு மெத்த இடுக்கமான பாதையாயிருப் பதினால் தாராளமாயும் உல்லாசமாயும் அஜாக்கிரதையாயும் பிர யாணஞ்செய்தால் மோசநாசம் சம்பவிக்கத்தக்கது. காலடி சற்றுப் பிசகுமானாலும் ஹதோகதியிலமிழ்ந்து நித்திய வருத்தத்தை யடைய வேண்டிவரும். பாதைக் கிருபுறமும் பாதலம் புகுத்தும் படுக ருள்ளது. அதினின்றேறுவதற்கு யாதொரு வழியுமின்று வரம்பு மின்று; ஆதலிற் யாத்திரிகர் தங்கள் அங்க சேஷ்டைகளை விடுத்துக் காயங்களை யொடுக்கிப் பொறி புலன்களை யடக்கி மனஸை யொரு முகமாக்கி மேல்நோக்கிய ஒரே நோக்கமுள்ளவர்களாய்ச் சர்வ ஜாக் கிரதையுள்ளவர்களாய் சாவதானமாய்ப் பிரயாணஞ்செய்யவேண்டும்.

இவ்வாறே யாத்திரிகம் கடைதிறப்புப்படலம், 4, 5, 6-ம் கவிகள்,

"இடுக்க வாயிலெ திர்ந்தத னுட்புக
அடுக்கு மோவெனக் காசையை வேரறப்
படுக்கு நர்க்கும்ப ருமித்த தூலத்தை
ஒடுக்கு நர்க்குமல் லாலென வுள்ளினன்.

உருக்கு மாரரு ளோங்கிய வேந்தனோர்
திருக்கு மாரனைச் சிந்தையு ளேதரித்
திருக்கு மாரண ரேயிக லியாவையும்
ஒருக்கு மாற்றல ரொல்லு மவர்க்கரோ.

> திருடர் வஞ்சகர் காமிகள் செல்வமார்
> குருடர் மற்றோ ருரிமையைக் கொள்ளைகொள்
> முருடர் கோபிகள் மூர்க்கர் குதர்க்கராம்
> புருடர்க் கீண்டு புகலரி தாகுமால்"

என்று சொல்லியிருக்கிறது.

மூன்றாவது, நின்மல நகர்க்குச் சேர்வழி. இந்த வழி பரிசுத்தருடைய மோக்ஷ பட்டணத்தில் பிரயாணிகளைக் கொண்டுவிடத் தக்க பாதையாம். இது மோக்ஷத்திற்குப் போகிற மார்க்கமென்று சொல்லுகிறதானால் அந்தத் திவ்யஸ்தானத்தைச் சேரத்தக்கதான மார்க்கமென்று மாறுபாடாகச் சொல்லும் மார்க்கங்கள் சில வுண்டென்றாகிறது. இது முழுப் பித்தலாட்ட மார்க்கங்களேயன்றி உண்மையான வழியென்று நம்பற்க. அவ்வாறே,

> "கடவுளோ ளொருவனுண்டே வேத மொன்றே
> காட்டியசற் குருதீக்ஷை தானு மொன்றே
> அடைவுடனே யவனருளும் பதவி யொன்றே"

யென்று இந்து ஞானிகளி லொருவருஞ் சொல்லியிருக்கிறார். மோக்ஷ ஸ்தலம் அல்லது பேரின்பவீடு அதிபாரிசுத்தமுள்ள ஸ்தலம். அதற்கு அதிகாரியும் பூரண பரிசுத்தர், அதை யடையத்தக்கவரும் பரிசுத்தரா யிருத்தல்வேண்டும். "பரிசுத்த மில்லாதவன் தேவனைத் தரிசிப்பதில்லை" யென்றும், "தேவன் பாவிகளை பக்ஷிக்கும் அக்கினி" என்றுந் திருவசனங் கற்பிப்பதனால் அசுத்தம் அவ்விடத்தில் சேரக்கூடாது.

அந்தப் பரிசுத்த ஸ்தலத்தைச் சேர விருப்பமுடையா ரெவரும் பரிசுத்தராதல்வேண்டும். பரிசுத்தமாவதும் பாவக்கறை யற நீங்குவதும் நம்முடைய கிரியைகளினால் ஆகக்கூடிய காரியமல்ல. நாம் கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளா யிருந்தால்மாத்திரம் "அவருடைய (தேவனுடைய) குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவரா யிருக்கிறார். நாம் பாவஞ் செய்யவில்லை என்போமானால் நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களா யிருப்போம். அவருடைய வார்த்தை நமக்குள்ளிராது." 1 யோவா. 1: 7, 8-ல் தெளிவாய் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. இந்த வசனங்களை நாமுண்மையாய்க் கைக்கொண்டு கிரியையில் அநுஷ்டிப்போமென்றால் நின்மல நகர்க்குச் சேருகிற வழியிற் பிரயாணஞ் செய்கிறவர்களாயிருப்போம்.

நான்காவது, திகைப்பில் வழி. கடவுளின் பேரருளால் நீங்கள் ஸ்ரீ கிறிஸ்துபகவானைப் பற்றிக்கொள்ளும் விசுவாசிகளானாலொழிய மற்றப்படி உங்களுக்கு முடிவில் எப்படியாமோ எப்படியாமோவென்கிற திகைப்பும் சந்தேகமும் நீங்கமாட்டாது. விசுவாசிகளுக்கோ அப்படியல்ல.

ஏன்? அவர்கள் தரிசித்து நடத்துகிறவர்கள்.

கிறிஸ்துவின் திருச்சபை ஆரம்பகாலத்தில் ஸ்தேவானென்ற ஒரு உத்தம தீர்க்க விசுவாசியைப் பகைவர் கல்லெறிந்து கொல்லக் கொலைக்களத்தில் நிறுத்தியிருக்கையில் அவர் முகந் தேவதூதன் முகம்போற் பிரகாசிக்கக் கண்டார்களென்று சொல்லியிருக்கிறது (அப். 6: 15.). அப்பால் அவர் சுவிசேஷ சத்தியத்தைப் பூர்வோத்தரமாகக் கொலைபாதகருக்கு விவரித்துச் சொல்லி முடித்த பின்பு "அவன் (ஸ்தேவான்) பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் வானத்தை அண்ணாந்து பார்த்துத் தேவனுடைய மகிமையையும் தேவனுடைய வலதுபாரிசத்தில் யேசுவானவர் நிற்கிறதையுங் கண்டு, அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையுங் காண்கிறேன்" என்றான். அப். 7. 55–57. "பின்பு பகைவர் கல்லெறிந்து கொல்லுகையில் கர்த்தாராகிய யேசுவே யென் ஆவியை யேற்றுக்கொள்ளுமென்று அவரைத் தொழுதுகொண்டான்." அவர்கள் கொன்றார்கள். இன்னோரல்லவா கிறிஸ்துவின் வழியில் நடந்து பரிசுத்தப்பட்டணம் சேரத் தக்கவர்கள்.

ஐந்தாவது, ஜீவ வழி. கிறிஸ்து புண்ணியபலத்தால் அவரைப் பற்றிக்கொண்ட மெய் விசுவாசிகளுக்கு மறுமையிற் கிடைக்கத்தக்க முக்கியமான பேறு நித்தியஜீவன். இந்த மகத்தான பேற்றையடைய முயன்று செல்லும்வழி யிதுவே, யாதலில் இதனை ஜீவவழி என்று கூறப்பட்டது.

"குறைவுறா நித்தியங் குவலத் தக்கது
கறையுறா நலத்தது கருதொ ணாதது
நிறைவது வாடிடு நீர்மைத் தன்றுகாண்
இறை பர லோகபே ரின்பபாக்கியம்."

இத்தகைய பேரின்ப பாக்கியத்தை நித்திய காலத்துக்குங் கூட்டுவிக்கிற இந்த வழியிற்செல்லும் மெய் விசுவாசிகளாகிய பரிசுத்தவான்கள் தேகத்தோடே இப்பிரபஞ்சத்தில் சஞ்சரிப்பவர்களாயினும் தேவகிருபை அவர்களுள்ளத்தில் தினந்தினம் அந்த பேரின்ப பாக்கியத்தின் லேஷத்தை ஊட்டி ருசிப்பித்து வருவதினால் இவர்களே ஜீவன்முக்த ரென்னப்படுகிறார்கள். இந்தப் பரிசுத்தவான்களே தங்கள் பரம யஜமானுக்காக ரக்தசாக்ஷிகளாய்ச் சந்தோஷசித்தராய் சர்வ பரித்தியாகத்துடன் பிராணத்தியாகஞ் செய்யவுந் துணிந்து யத்தனப்படுகிறவர்கள். அக்காலத்து மாத்திரமல்ல இக்காலத்துந் திவ்ய தைரியங்கொண்டு ரக்ஷாபெருமானுக்காகப் பாடுபடவும் ஜீவனைக் கொடுக்கவும் துணிவுள்ளவர்கள் எத்தனையரென்று கணக்கிடக்கூடும்.

ஆறாவது, உண்மை வழி. உண்மை நிலையே தெய்வமாதலினும் "தேவன் உண்மையுள்ளவர்" என்றும், நானே சத்தியமா யிருக்கிறேனென்றும் சத்தியவேதஞ் சொல்லுகிறதினாலும், உண்மை நிலையாகிய

தெய்வம் உலகத்துக்குப் பொய்மையை ஒப்புவிக்காதென்றதினாலும், உண்மையே உலகத்திற்கு ஆதாரமாயிருப்பதினாலும், உண்மையில்லாம லுலகமின்மையாலும் சத்தியமே ஜெயமென்கிற உலக வ்தந்திப்படி தொன்றுதொட்டின்றளவும் உண்மையே ஜெயங்கொள்ளுகிறது, பொய்மை யொழிந்துபோகிறது என்பது உலக மொப்புக்கொள்ளுகிற சாக்ஷியமாதலினாலும் கிறிஸ்துமார்க்க சத்தியம் உலகமெங்கும் பிரசித்தமாயிருக்கிறபடியாலும் இன்னும் அனேகவித முகாந்திரங்களினாலும் சுவிசேஷ மார்க்கமே மெய்மார்க்கமென்றும் அது ரக்ஷணிய மார்க்கமென்றும் உலகந் தெளிவாய் ஒப்புக்கொண்ட சத்தியம்.

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்"

என்று நீதி சாஸ்திரமுந் தெரிவிக்கின்றது.

தற்சோதனை.

1. நான் என்னைப் பாவியென்று அறிகிறேனா?
2. பாவத்துக்குத் தேவதண்டனை வருமென்றஞ்சுகிறேனா?
3. நான் கிறிஸ்துவின் வழியில் நடக்கிறவன்தானா?
4. என் மனங் கிறிஸ்துவைப் பற்றியிருக்கிறதா?
5. எனக்குள் விசுவாசமுண்டா?
6. அந்த விசுவாசம் கிறிஸ்துவின் திருப்பாதத்தையே குறிக்கொண்டு சேவித்து அதனடியிலேயே விழுந்துகிடக்கிறதா?

இவ்வகையாகத் தினந்தினம் தன்னைச் சோதித்துக் கிறிஸ்துவின் ஸமுகத்தை நாடவேண்டும்.

2. நானே சத்தியமாயிருக்கிறேன் என்பதைப்பற்றி.

இதன் தாத்பரியம்.—சத்தியமென்ற வடமொழியும் உண்மையென்ற தமிழ்மொழியும் ஒரே பொருளுள்ள சொற்கள். இவற்றில் ஸத் என்பது வடமொழிப்பகுதி. உள் என்பது தமிழ்மொழிப் பகுதி. இவற்றோடு அததன் பிரத்யயங்கள் சேர்ந்து சத்தியம் உண்மை யென்ற சொற்கள் பூரணப்பட்டுப் பண்புப் பெயர்த்தன்மையாய் வழங்கிவருகிறது. இவற்றின் தாதுப்பொருளை அல்லது பகுதிப் பொருளைக் கவனிக்கையில் உள்ளது இருக்கிறது என்று பொருள் படுகிறது. சத்தியமென்பதற்கு அசத்தியமும், உண்மை யென்பதற்கு இன்மையும் பொருளை யெதிர் மறுத்துக் காட்டுகிற சொற்களாம். இவ்வுலகத்தில், உலகரக்ஷகராக அவதரித்து இரக்ஷணிய தர்மத்தை நிலை நிறுத்திய ஸ்ரீ கிறிஸ்துபகவான் நானே சத்தியமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார். இந்த வாக்கியத்தைக் கிறிஸ்துவேதத்தில் இதற்குச் சம்பந்தமாய் அநுவதித்திருக்கிற முன் பின்னுள்ள வாக்கியங்களைக்கொண்டு நடுநிலையா யோசிக்கையில் பூத பௌஷிய வர்த்தமானமென்கிற திரிகாலங்களிலுமுள்ள வஸ்து வொன்றையே குறிக்கத்தக்கது. ஆதலின் அப்படி யென்றென்றைக்

கும் உள்ள வஸ்துவெது? திரியேகப்பெருமானுகிய இந்த ரக்ஷண்ய மூர்த்தியே யென்றென்றைக்குமுள்ள உண்மைப்பொருள், அல்லது ஸத்தியஸ்வரூபி யென்ருகிறது. அப்படியாஞல் அந்த வஸ்து அநாதி நித்யஸ்வயம்புவாகவே யிருத்தல்வேண்டும்.

"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாருதவராயிருக்கிருர். பலவிதமான அந்நிய போதனைகளினுல் அலைப்புண்டு திரியாதிருங்கள்" என்று எபி. 13: 8–லும், "அதற்குத் தேவன் இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினுர் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக வென்ருர்" என்று யாத். 3: 14–லும் தெளிவாய்க் கூறியிருக்கிறது. கடவுள் ஒருவரைத்தவிர ஏனைய சிருஷ்டிப்பொருள்களெல்லாம் நிலையில்லாது மாறிப்போகிறவைகள்தானே. தேவன் ஒருவரே சதாகாலங்களிலு முள்ளவர், மாருதவர். ஆதலால் அவரே உண்மைப்பொருள். அவரே ஸத்தியஸ்வரூபி யென்றறிக.

உண்மை சத்திய மிரண்டும் பண்புப்பெயர். அதைப் பொருள் பெயராக்குவது எப்படியாகுமெனில் பண்பு அல்லது குணங்களெல்லாம் பொருளோடு இயற்கையிற் சம்பந்தமுடைய அபேதமான ஒற்றுமை யுடையதேயன்றிப் பொருளுக்கு அந்நியமான பிறிதொன்றல்ல; குணமின்றிப் பொருளும், பொருளின்றிக் குணமும் தனித்து நிற்கக்கூடியதன்று. ஒன்றைவிட்டொன்றைப் பிரிக்க முயன்ருல் பொருளுங் குணமும் நாசமாம். இது இலக்கண மரபு. இப்படி யென்று காட்சிப்பிரமாணத்தினுலு மறியலாம். நானே சத்தியமா யிருக்கிறேன் என்ற வாக்கியத்தில் கிறிஸ்து வேறு, சத்தியம் வேறு என்று பிரித்தறியப்படு பொருளன்று. கிறிஸ்துவே சத்தியம், சத்தியமே கிறிஸ்து என்றுதான் பொருள். ஆகவே பண்புப்பெயரைக் கடவுளாகவும் கடவுளைப் பண்புப்பெயராகவுங் கூறுவது எந்தப் பாஷைக்கும் இயல்பே. வழுவு மன்று, தோஷமு மன்றென்க.

இரண்டாவது, சத்தியம் எத்தகையது? கிஞ்சித்தும் பொய் கலவாமல் முற்றும் மெய் பேசுவதே சத்தியம். இது யாவரும் அறிந்த விஷயமே. இதைப்பற்றிச் சத்தியபாஞுகிய ஸ்ரீ கிறிஸ்துபெருமான் சொல்லுகிறதாவது: "உள்ளதை யுள்ளதென்றும், இல்லதை யில்லதென்றுஞ் சொல்லுங்கள், இதற்கு மேற்பட்டதெல்லாந் தீமையா யிருக்கும்" என்று திருவுளம்பற்றியிருக்கிருர். இதுவே துப்புரவான சத்தியம். இந்து மார்க்கமோ வென்ருல்,

"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமையி லாத சொலல்" என்றும்,
"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்றுங் கற்பிக்கிறது.

இவற்றிலெது சரியென்பதை நீவிரே நடுநிலையாய் நிதானியுங்கள். அதுநிற்கக், கிறிஸ்துரக்ஷகர் நானே சத்தியமாயிருக்கிறேன் என்று தெரிந்துகொண்ட இந்த வாக்கியத்திற் கற்பித்திருக்கிறூரே: அது எப்படியென்று நாம் ஆராய்ச்சி செய்யுங்கால், சத்தியமானது எந்தப் பாஷையானாலும் அந்தந்தப் பாஷைச் சொற்களை யூன்றுகோலாகக் கொண்டு நிகழத்தக்கது. ஆதலிற் பேச்சுக்காலிலே இன்னது சத்தியம் இன்னது அசத்தியமென்று ஏகதேசமாய்த் தெரிந்துகொள்ளலாம். இதுதான் உலகத்தில் வழங்கிவருகிறது. உள்ளத்தில் உண்மையான சத்தியம் பதிந்திருந்தாலும் அது பேச்சுக்காலில் வெளிப்படுவது அபூர்வம். அதுவும் துப்புரவாயிருக்காது. எவ்வளவோ அழுக்குப்படிமானமுள்ளனவா யிருக்கலாம். காரிய மிதுவாதலில் துப்புரவான நிர்மலமான சத்தியமெங்குளது, எப்படி யுலகத்துக்கு வெளிப்பட்டதெனில் இதைப்பற்றிக் கிறிஸ்துமார்க்க சத்தியமே இதன் பூர்வோத்தரத்தைத் திட்டமாயுந் தெளிவாயும் நிஷ்களங்கமாய் வெளியிடுகிறது. அதாவது, “ஆதியிலே வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனுயிருந்தது. அவர் ஆதியிலே தேவனேடிருந்தார். சகலமும் அவராலே யுண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமலுண்டாகவில்லை” (யோவா. 1: 1–3.). அல்லாமலும் அதே யதிகாரம் பதினலாம் வாக்கியத்தில் “அந்த வார்த்தை மாம்ஸமாகிக் கிருபையினுலுஞ் சத்தியத்தினுலும் நிறைந்தவராய் நமக்குள் வாசம்பண்ணினுர். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறுனவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே யிருந்தது” என்று முன் சொன்னதை அநுவதித்துமிருக்கிறது. ஆதலிற் சகல சிருஷ்டிகளு முண்டாவதற்கு முன்னுன ஆதியிலுள்ள அந்தத் திருவாக்கு அநாதி நித்திய ஸ்வயம்புவாகிய நிர்மல தேவனிடத்து அடங்கியிருந்து வெளிவந்தது ஆதலாலும், சத்தியமாவது வாக்கினின்றே வெளிப்படத்தக்கது ஆதலாலும், தேவனிடத்திலிருந்து உத்யமான சத்திய திருவாக்கே தேவனுடைய ஒரே பேறுன திருக்குமாரன் ஆதலாலும், அவர் திரியேகத்துவத்தில் ஒருத்துவராயிருக்கிறுர், ஆதலினுலும், அவர் அநாதி நித்திய ஸ்வயம்புவாகிய வஸ்துவென்றும் ஆகவே வாக்கும் வாக்கோடு அபேதமாயிருக்கிற சத்தியமும் அநாதி நித்திய ஸ்வயம்புத்துவ முடையதென்றும் அவருடைய திருவுள்ளம் சத்தியஸ்தானம், அவர் திருவாய்மலர்ந்து வெளிப்பட்ட வாக்குகளெல்லாம் சத்தியம், அவருடைய செய்கைகளெல்லாஞ் சத்தியத்துக்கு அவிரோதமான செய்கைகளென்றும் இப்படி திரிகாணத்தும் நிஷ்களங்கமான ஸத்திய ஸ்வரூபியாய் உலகத்தில் இரக்ஷணிய தர்மத்தை நிறைவேற்றிய குமார மூர்த்தமே சத்திய மூர்த்தமென்றறிக. இன்னும் ரக்ஷகருக்கு ஜீவனென்றும் ஒளியென்றும் ஞானமென்றும் திருமொழியில் பெயர் வழங்கியிருக்கின்றன. அவை வருமாறு:—

1 யோவா. 1: 5-ல் "தேவன் ஒளியாயிருக்கிறார்." அவரில் எவ்வளவேனும் இருளில்லை. இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியாயிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவைகளும் இவைகளும் ரக்ஷகருக்கு அபேதமான திருநாமங்களே. எப்படியெனில் வாக்கே சத்தியம், சத்தியமே ஞானம், ஞானமே ஒளி, ஒளியே கிறிஸ்து. இப்படியென்று காரண காரிய சம்பந்தத்தோடு ரக்ஷகருக்குப் பொருந்தியன வென்பதையும் மேற்கூறிய திருநாமங்களோடு சேர்த்து உய்த்துணர்க.

1 யோவா. 1: 1-ல் "ஆதிமுதல் இருந்ததும் நாங்கள் கேட்டதும் எங்கள் கண்களினாலே கண்டதும் நாங்கள் நோக்கிப் பார்த்ததும் எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்."

1 யோவா. 1: 2-ல் "அந்த ஜீவன் வெளிப்பட்டது. பிதாவினிடத்திலிருந்ததும் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு அதைக்குறித்துச் சாக்ஷி கொடுத்து அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்."

கொலோ. 3: 3, 4-ல் "ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடேகூட மகிமையில் வெளிப்படுவீர்கள்."

1 யோவா. 5: 20-ல் "நாம் சத்தியமுள்ளவரை யறிந்துகொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம். இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்."

நீதி. 8: 12-ல் "ஞானமாகிய நான் விவேகத்தோடே வாசம் பண்ணி நற்புத்தியான அறிவுகளைக் கண்டடைகிறேன். தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம். பெருமையையும் அகந்தையையும் தீயவழியையும் புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்."

மூன்றாவது, சத்திய முதலிய எல்லா நற்குணங்களும் உலகத்துக்கு எப்படி வந்தது? எனில் "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது" என்று யாக். 1: 17-ல் சொல்லியிருக்கிறது. இதனால் திரியேகப்பெருமானுடைய திருவுள்ளமே

சத்திய முதலிய சகல நன்மைகளுக்கும் சகல வரப்பிரசாதங்களுக்கு மூலஸ்தானமென் றறியலாம். மநுப்பிரதமர் சிருஷ்டிக்கப்பட்ட அன்றே இத்யாதி சகல சற்குணங்களின் வேசங்களும் அவர்களுள் ளத்தில் ஊன்றி வளரும்படி பிரசாதிக்கப்பட்டது. சிறிதுகாலம் சகல சற்குணங்களும் நன்மையாகவே வளர்ந்துவந்தன. மனிதர் தேவகட்டளையை மீறிப் பாவஞ்செய்த அன்றே தேவகோபமும் சாபமுமுண்டாகி சகல சற்குணங்களும் பழுதுபட்டுப் போயின.

சகல துர்க்குணங்களும் வளர்ந்து மேலிட்டன. அதுமுதல் மநுப்பிரதமர் தொடங்கி அவர் சந்ததி பரம்பரைகளுக்கெல்லாம் சற் குணங்கள் குன்றிவிட்டன. துர்க்குணங்களே விருத்தியாகின. சகல கேடுகளு முலகத்தில் பெருக நேரிட்டது. மனுப்பிரஜைகளைப் பாவ இருளினின்றும் துர்க்குணச் சேற்றினின்றும் வேதனைப்படுகரி னின்றும் மீட்கும்படி திருவுளங்கொண்ட பிதாவினிடத்திலிருந்து வாக்குருவாய் வெளிப்பட்டுவந்த சத்தியமூர்த்தியாகிய கிறிஸ்து பெருமானனவர் மனிதாவதாரஞ் செய்து சுத்த சத்திய சுவிசேஷ மார்க்கத்தை அவர்களுக்குப் பிரசங்கித்துத் தெருட்டினர். ரக்ஷணிய வழி இதுவாக்குமென்று தம்முடைய பரிசுத்த நன்னடையினுல் மய லற விளங்கக் காட்டினர். தாம் உலகத்துச் சற்குருவாய் வெளிப் பட்ட தேவகுமாரனென்பதை அநேகமான அற்புதச் செய்கைகளி னுல் திருஷ்டாந்தப்படுத்தினர். உத்தமமான சில திருத்தொண்ட ரைத் தெரிந்தேற்படுத்திப் பிதாவின் திருச்சித்தத்திலுள்ள பரமார்த்த நிஷ்க்கருஷத்தை அவர்களுக்கு உபதேசித்து அவர்களைச் சத்தி யத்திற் பிரதிஷ்டை செய்தார். அவர்களையும் உண்மையுள்ள திருத் தொண்டரென்று பிரஜைகள் அறிந்துகொள்ளும்படியாகவும் அவர் கள் வாக்குப் பயன்படத்தக்கதாகவும் விசேஷ அற்புதங்களைச் செய்யத்தக்கதான வரப்பிரசாதங்களை அநுக்கிரகித்தார். இவ்வாறு கிறிஸ்துரக்ஷகர் தமது பிரதம திருத்தொண்டரிடத்து அணையாது பொருத்திவைத்த சத்திய தீபம் இன்றுகாறும் அணைந்துபோகாமல் சுக்ஞான சுடரொளி வரவரக் கிளைத்துவருகிறது. கிறிஸ்துவின் திருச் சபை பெருகிவருகிறது. உலக முடியுமளவும் நான் உங்களுட னிருப்பேன் என்ற திருவாக்குப்படி தமது திருச்சபையிலுள்ள மெய்யடியாருடைய மனவாக்குக்காயங்களைத் தம்முடைய பரிசுத்த ஆவியினுலே புனிதப்படுத்தித் தமக்குப் பிரியமான வாசஸ்தானமாக வும் திருமாளிகையாகவுந் திருமாமணி மண்டபமாகவுந் திருவுள்ளமு வந்தருளி வீற்றிருந்து இரக்ஷணிய சுவிசேஷ சத்தியத்தையுந் தர்மத் தையும் நிலைநிறுத்திவருகிருர்.

மலையுற் றேங்குசு டரின்இவ் வையகத்
தலையுற் றூன்மவி ரகைஷ தயங்கிடக்
கலையுற் றேங்குக திர்மதி யிற்சபை
நிலையுற் றேங்கிப் பெருகி நிலாவுமே.

சென்னி தேவ குமாரன் திருச்சபைக்
கிந்நிலத் திருத் தொண்டரெல் லாமுடல்
அன்ன வாப்பரி சுத்த வைக்கியம்
மன்னி நின்றுவ ளர்க்குந் தருமமே."

சத்தியம் ஆத்துமாவுக்கு இன்றியமையாத பொருள்.

எப்படிச் சரீரம் அன்னம் ஆகாரமில்லாமல் பிழைத்திருக்க முடியாதோ அப்படியே சத்தியமும் அதனோடிணைந்த குணங்களு மில்லாமல் ஆத்துமாப் பிழைத்திருக்க முடியாது. நித்திய மரணத்தை யடையும். எப்படியெனில் மனித தேகத்திலுள்ள அவயவாதிகள் யாவும் முக்கிய பிரயோஜன முள்ளவைகளா யிருந்தபோதிலும் மூளையும் இருதயமும் உதரமும் அத்தியந்தாவசியகமாய்ப் பிரயோஜனமுள்ளவைகள். அவற்றில் உதரமானது அன்னபானாதிகளைக் குடலுக்குள் ளிட்டு நன்றாய்ச் சதைத்து அரைத்துக் குழம்பாக்கி உபயோகமற்ற கோதுகளை மலக்குடலுக்குப் போக்கிவிடுகிறது. அரைத்து வந்த குழம்பு நேரஞ் செல்லச் செல்லப் புளிப்பேறிப், பொங்கி, யாவிரூபமாய்ப் பரிணமித்து, ரத்தமாக மாறிக், குழாய் வழியாய் இரத்தாசயத்துக்குட் புகுந்து, நிச்சுவாசத்தோடு உட்புகுந்த இருந்தாமில வாயுவினால் சுத்தியாக்கப்படுகிறது. பின்பு இரத்தக் குழாய் வழியாக விரைந்து செல்லுகிற ரத்தம் தேகத்தின் பாதாதி கேசபரியந்தம் ஒரு நிமிஷத்திற்குள்ளாகவே ஒரு முறை சுற்றிப் பரவி, எல்லாப் பாகங்களையும் குறைவற நிரப்பித், தேகத்தை வளர்க்கிறது. இரத்தாசயத்துக்குச் சற்றுப் பின்னம் நேரிட்டாலும், இரத்த ஓட்டந் தடைப்படுமாயினும், சரீர தத்துவங்களெல்லாங் குன்றி, யாதொரு வேலையையுஞ் செய்ய பலமில்லாமல் நாடிகள் தளர்ந்து, மூச்சொடுங்கிப் பிரேதமாகிறது. இதுவே மரணம். இதுவே சரீரத்தின் முடிவு. இப்படிப்போலவே ஆத்தும புருஷனுடைய நிலைமையு முள்ளதென்று ஒருவாறு ஒப்பிட்டுச் சொல்லக் கூடியது.

எங்ஙனமெனில் உடம்படிக்கை வகுப்பைச் சேர்ந்த ஆத்துமாவுக்குத் தினந்தினம் இலவசமா யருளப்படுகிற ஞானபோனக பானவருக்கங்களைக் கண்ணுஞ் செவியுமாகிய பொறிகள்வழியா யுட்கொண்டு, நெஞ்சிற் கூட்டிச் சேர்க்கிறது. ஆத்துமக்கவலை, சிந்தனை, மெய்மனஸ்தாபம், கண்ணீர், பெருமூச்சு இத்யாதிகருவிகள் கிடைத்த ஆகாராதிகளைப் பக்குவப்படுத்தி அதன் சாரத்தை ஜீவதாரக சத்திய நிலையமாகிய ஹிருதயஸ்தானத்துக்கு அனுப்பிவிட்டு, அதன் சக்கையைப் புறம்பே கழித்துவிடுகின்றன. பரிசுத்தமான ஸுவாதவாதம் உட்புகும்போதெல்லாம் ஹிருதயத்திலுள்ள சாரத்தை ஜீவாமிர்த புனித இரத்தமாக்குகிறது. பின்பு அந்த இரத்தம் விசுவாசக்குழாய் வழியாய்ச் சென்று, ஆத்தும தத்துவங்க ளனைத்தையுங் குறைவற நிரப்பி, நித்திய ஜீவனை வளர்த்துவருகிறது.

இப்படிக்கில்லாமல் பேய்க்காற்று உட்பிரவேசிக்க ஆத்ம புருஷன் இடங்கொடுப்பானுயின் ஜீவநாசத்தைக் கொடுக்கும். இதில் உடம் படிக்கை வகுப்பு என்றது ஞானதீக்ஷையையும், ஞானபோனக பான வருக்கங்கள் என்றது கிருபையின் எத்தனங்களையும், கோது என்றது பாபகரமான உலகக்கல்வி, கேட்டுக்கேதுவான துர்ப்பழக் கம், பாவப்பிரிய முதலிய துராசாரங்களையும், ஜீவதாரக சத்திய நிலை யம் என்றது ஆன்மாவின் ஹிருதய ஸ்தானத்தையும், சுவாதவாதம் என்றது பரிசுத்தாவியாகிய தெய்வத்தின் முயற்சியையும், இரத்தம் என்றது ஆத்துமாவைப் பிழைப்பூட்டிவருகிற சத்திய சாரத்தையும், பேய்க்காற்று என்றது அறுவகை விகாரம், காமம், வெகுளி, மயக்கம் முதலியவைகளையுங் குறிக்கும்.

இம்மட்டாக நாம் சத்தியத்தைப்பற்றிச் சிந்தனை செய்துவந்ததில் சத்தியமே அநாதி நித்திய ஸ்வயம்புவாயுள்ள திரியேகபரம் என்று மபலற வெகு தெளிவாய் விளங்குகிறது. ஆம் சத்தியமே சர்வ வல்ல மையுள்ளது. சத்தியமே சர்வ ஞானமுள்ளது. சத்தியமே சர்வ வியா பகமுள்ளது. சத்தியமே அதிபாரிசுத்தமுள்ளது. சத்தியமே யெல்லா வுலகங்களுக்கும் சிருஷ்டி ஸ்திதி சம்ஹார கர்த்தாவாயு மிருக்கிறது. சத்தியபரனுகிய கிறிஸ்துவே உலகத்தை இரக்ஷித்தார். கிறிஸ்துவே உலகத்துக்கு எல்லாமாயிருக்கிருர். ஆதலால் இவரே நமக்கு வழி. இவரே நமக்கு சத்தியம். இவரே நமக்கு ஜீவன். இவ்வாறு நமக்கு எல்லாமா யிருக்கிறவரை நாம் பஜிக்கிறோமா? இந்தச் சத்தியத் துக்கு நம்முடைய இருதயகமலம் மலர்ந்து இடங்கொடுத்திருக்கிறதா? எவன் உள்ளத்தில் உண்மையுள்ளவன் அவன் உண்மையை நினைக் கிறன். உண்மையைப் பேசுகிறன். உண்மையைச் செய்கிறன். அவனுக்கு உண்மையே துணை. உண்மையே வழி. உண்மையே ஜீவன். உண்மையே மோக்ஷம். உண்மையே பேரின்பம். இஃது அனந்த தர்மசத்திய மென்றறிக.

3. நானே ஜீவனுயிருக்கிறேன் என்பதைப்பற்றி.

1. ரக்ஷகர் இவ்விடத்துத் திருவுளம்பற்றுகிற ஜீவன் மனுக்களுக் குரிய நிலையற்ற, மரித்துப்போகத்தக்க, சொற்பகாலந் தோன்றிப் பின்பு அகன்றுபோகிற புகையைப்போல ஒழிந்துபோகத்தக்க, புல்லைப்போல வும் புல்லின் பூவைப்போலவும் வாடிப்போகத்தக்க ஜீவனன்று. தாமா கவே யிருக்கிறவும், தமக்குத் தற்கிழமையாக வுள்ளவும், என்றென் றைக்கும் மாருதவும், அழிந்துபோகாதவுமான தம்முடைய நித்திய ஜீவனையே சுட்டி, நானே ஜீவனுயிருக்கிறேனென்று திருவுளம்பற்றின தாகக் கொள்ளவேண்டும். யோவான் அப்போஸ்தலன் தாமெழு திய முதலாம் நிருபம் 2-ம் வாக்கியத்தில், ''அந்த ஜீவன் வெளிப்பட் டது. பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டது மான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு அதைக்

குறித்து சாக்ஷிகொடுத்து அதை உங்களுக்குத் தெரிவிக்கிறோ"மென்று சொல்லியிருக்கிறார். "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கு மரியாமலுமிருப்பான். இதை விசுவாசிக்கிறாயா?" என்றார். ரக்ஷகர் தாமே இந்த வாக்கியத்தைச் சொன்னாரென்று அந்த அப்போஸ்தலன் தானே சொல்லுகிறார். அன்றியும் யோவா. 6: 68-ல் "சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்திற் போவோம், நித்திய ஜீவவசனங்க ளும்மிடத்திலுண்டே! நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவென்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்துமிருக்கிறோம்" என்றான். இவ்வாறு கண்டுங் கேட்டும் உணர்ந்தும் சுருதியுக்தி அநுபவ சகிதமாயறிந்த பிரதம திருத்தொண்டர் ஸ்ரீ கிறிஸ்து நானே ஜீவன் என்று சொன்ன திருவாக்கைச் சத்தியமென்று நிச்சயமாய்த் தெரிந்து உண்மையாய் நிஷ்களங்கமாய் வெளியிட்டிருக்கிறார்கள். வேதத்தில் இன்னும் அநேக சாக்ஷியங்களுண்டு. அவைகளை விரிக்கிற் பெருகும். இக்காலத்துள்ள கிறிஸ்துவின் அடிமைகளும் அப்படியே ரக்ஷாபெருமானே வீட்டுக்குப் போகிற வழி; அவருடைய திருவாய்மலர்ந்தருளிச் செய்த வாக்குகளே தீர்க்க சத்தியம்; அந்த சத்தியமே எங்களுடைய ஹிருதயத்தில் பதிந்துள்ளது; அவரையே எங்கள் பலவீன விசுவாசத்தாற் பற்றிப் பிடித்திருக்கிறோம்; நாங்கள் செல்லுகிற இந்த வழியே நித்திய பேரின்ப வீடு சேர்க்கத்தக்க மெய்வழி; இதுவே எங்களுள்ளத்திற் பதிந்த பரமார்த்த நிஷ்கருஷம்; "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்; உபத்திரவமோ, நாசமோசமோ, பட்டயமோ இவை யெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறோம்; நாம் மரணமானாலும் ஜீவனானாலும் தேவதூதர்களானாலும் அதிகாரங்களானாலும் வல்லமைகளானாலும் நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும் உயர்வானாலும் தாழ்வானாலும் வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்று பவுல் அப்போஸ்தலன் தாமெழுதிய. ரோ. 8: 36-ம் வாக்கியந்தொடங்கி 39-ம் வாக்கிய முடியுமட்டாக சொன்னபடியே இக்காலத்திலுந் தங்கள் நாயன் அன்பை ருசித்தவர்கள் எத்தனையோபேருளரென்பதற்குச் சந்தேகமில்லை. 57-ம் வருஷத்தில் நடந்த டில்லி மியூட்டனியில் ஒரு மகம்மதிய கிறிஸ்தவன் தன்னில் அன்புகூர்ந்த ரக்ஷகர் நாமத்தை யேற்றுக்கொண்ட நிமித்தம் இரத்தசாக்ஷியாகப் பிராணத்தியாகஞ் செய்தனன். அனேக இந்துக்கள் அக்காலத்தி லறிவார்களே. இது ஒன்றோ?

ஏகதேசம் நாற்பது வருஷங்களுக்கு முன் கிறிஸ்துமார்க்க விரோதியாயிருந்த மதகஸ்கார் தீவரசன் நவீன கிறிஸ்தவர்களான தன் பிரஜைகளைத் தடுக்க முயன்று, கொடுமை பொறுக்கமாட்டாமல் அனேகர் பின்வாங்கிப்போக, பின்வாங்காது திடச்சித்தமாய்க் கிறிஸ்துவின் நாமத்தை யறிக்கையிட்டுவந்த பதினெண்மரைப் பிடித்து ஒரு மலைச்சிகரத்திலேற்றி ஒவ்வொருவராய்ப் பிணைத்திருந்த வடத்தை ஒவ்வொரு கட்டாய்ச் சேதித்து மலையடியிற் கொந்தளித்துக் கொண்டிருந்த சமுத்திரத்தில் விழுத்து அத்தனையரையுங் கொன்றான். மரித்தவர்களோ சந்தோஷசித்தராய்த் தங்களை யழைத்தாட்கொண்ட ரக்ஷாபெருமான் திருவடி நீழலைச் சேர்ந்தார்களென்பது அக்காலத்தில் லோகப்பிரசித்தமாயிருந்தது. இக்காலத்தும் அநேக ருள்ளத்திற் பதிந்திருக்கலாம். மார்க்க விரோதியாயிருந்த மதகஸ்கார் தீபத் தரசனும் அப்பால் அந்தத் தீவாரும் கிறிஸ்தவரானார்கள். இதென்ன? கிறிஸ்துவின் அன்பின் வலி. "வாழ்வோர்க் கிவ்வகளிலொன்றே போதும்."

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று." (திருவள்ளுவர்.)

2. புது ஜீவன்.—ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாகப் பரிசுத்தாவியினால் மறுபிறப்படைந்தால்மாத்திரம் புது ஜீவனடையப் பாத்திரனாகிறான். அந்த மறுபிறப்பாவது:

"பாவவுணர்ச்சி, மனந்திரும்பல் பக்ஷாத்தாபம் பரமசுதன்
ஜீவஅவஸ்தைதனைநினையும் சிந்தைக்கனிவு, விசுவாசம்;
தேவசினேகம், பவவெறுப்புத், திடநம்பிக்கை இவை பரிசுத்
தாவியருளாற் பெற்றிறைவற் காட்பட்டொழுகும் ஜகத்தீரே."

இத்யாதி சற்குணங்களைத் தழுவி இவற்றிற் கெதிரிடையான துர்க்குணங்களையும் அதன் மூல்யங்களையும் கட்டோடே தியக்ஷித்து விட்டுவிடுவதே மறுபிறப்பாம். ஆகவே பாவத்துக்குச் செத்துப் பரிசுத்த ஜீவியத்தை விரும்பி மனம் வாக்குக் காயங்களென்ற முக்கரணங்களும் ஒருப்போலக் கிரியைப்படுமாயின் அதுவே புது ஜீவகிருத்தியமாம். அவனே ஆவிக்குரிய மெய்த்தொண்டனும், சத்தியபரனாகிய கிறிஸ்துவின் ஜீவன் தன் ஹிருதயத்துச் சுரந்து வரப்பெற்றவனுமாகிறான். இப்படியென்று திருவசனங்களாலும் அறியலாம்.

"உங்கள் உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்." (எபே. 4: 23, 24.)

"அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்

கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்." (ரோ. 6: 11.)

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை யேற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத் தார்." (யோவா 1: 12.)

அல்லாமல் ரோமர் நிருபம் 8-ம் அதிகார முழுமையையும் வாசித்துக் காண்க.

3. ஆவிக்குரிய ஜீவன். — ஆத்மார்த்தமான சத்கர்மங்களைச் செய்து தேவனை மகிமைப்படுத்தும்படி திவ்யேகப்பெருமானாலே கிறிஸ்துவுக்குள்ளாக அருளப்படுகிற ஒரு விசேஷித்த ஈவு, அல்லது வரப்பிரசாதம். இந்த ஈகை இடையில் அழிந்தொழிந்துபோகத்தக்க தன்று. பரிசுத்தமுள்ளது, தேவனுக்குப் பிரியமானது. தேவமகிமை யொன்றையே நாடத்தக்கது. இது மறுமையிற் பெற்றுக்கொள்ளக் கூடியதன்று. ஆத்துமா சரீரசம்பந்த முடைத்தாயிருக்கும்போதே பெற்றுக்கொள்ளவேண்டியது; உடம்படிக்கை வகுப்பைச் சேர்ந்த வர்கள் புநர்ஜநநம் அடைந்தபிறகு பாவமன்னிப்படைந்த பரிசுத்த வான்களுக்கே கிறிஸ்துரக்ஷகரைப்பற்றிய உபாசனையின் பலத்தா லும், பரிசுத்தாவியின் அநுக்கிரகத்தாலும் தேவனா லருளப்படுகிற தென்பது வேத சம்மதம்.

"கிறிஸ்துவுடனேகூடச்சிலுவையி லறையப்பட்டேன், ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நானல்ல: கிறிஸ்து எனக்குட் பிழைத் திருக்கிறார்; நானிப்பொழுது மாம்ஸத்திற் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." (கலா. 2: 20.)

"உங்கள் செவியைச் சாய்த்து என்னிடத்தில் வாருங்கள். கேளுங் கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்." (ஏசா. 55: 3.)

"குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்தியஜீவனை யடைவதும், நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும் என்னை யனுப்பினவருடைய சித்தமாயிருக் கிறது என்றார்." (யோவா. 6: 40.)

"தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாம் ஸத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களா யிருப் பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." (ரோ. 8: 9.)

“தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை யடையும்படிக்கு அவனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தி லன்புகூர்ந்தார்.” (யோவா. 3: 16.)

“என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள். நான் உங்களைத் தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் கர்த்தரென்று அறிந்துகொள்வீர்கள். இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறாரென்று சொல் என்றார்.” (எசே. 37: 14.)

இப்படியாகக் கிறிஸ்துவினிடத்துள்ள ஆவிக்குரிய நித்திய ஜீவனே தம்முடைய திருத்தொண்டருக்குட் பரவி நின்று அவர்களுடைய ஆத்துமாக்களைப் பிழைப்பூட்டுகிறதென்றறிக.

ஆவிக்குரிய ஜீவனை யடைவோர் பக்குவப்படுமாறு.

1. பாவவழியை விட்டு ஜீவவழியில் நடக்க விரும்புவோரெவரும் மனந்திரும்பிக் குணப்பட்டவர்களாய் கிறிஸ்துமார்க்க உடம்படிக்கை வகுப்பிற் சேர்ந்து உண்மையாய் முயற்சிப்பட வேண்டும்.

2. கிறிஸ்துரக்ஷகரிடத்திலேயே ஜீவவாக்கைக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படியே “என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்களென்று” ரக்ஷகர் தாமே திருவுளம்பற்றியிருக்கிறார். அவரிடத்தில் நாமெதைக் கற்றுக்கொள்ளக்கூடும். அவர் அதரிசயப் பொருளாயிற்றேயெனில் அப்படியன்று; நாம் கற்றுக்கொள்ளவேண்டியது அவர் திருவாய் மலர்ந்தருளிய ஜீவவாக்கு. அதரிசியமா யிருக்கிறவரென்பது மெய்தான். அவர் பிரத்தியக்ஷத்தில் எதிர்முகமாய் வீற்றிருந்து வாய்மொழியாகக் கற்றுக்கொடுக்கிறவரல்லர். ஆயினும் எல்லாவற்றையும் மௌனோபதேசமாய்க் கற்பிக்கத்தக்கவர். ஜீவகலையை வெகு தெளிவாய்ச் சந்தேக விபரீதமின்றிக் கற்பிக்கத்தக்க திறமையுடையவர். தேவனால் தெரிந்து நியமிக்கப்பட்டவர். இவருக்கே ஆத்ம ஞானமும் அதற்கு அவிரோதமானமட்டில் லௌகீக ஞானமும் பூரணமாயுண்டு. ஒன்றுக்கொன்று மாறுபடாமல் சமாசமாய்க் கற்றுக்கொடுக்கிறதற்கு வல்லவர். நாம் தனித்திருந்து அழைத்தாலும், இரண்டு மூன்றுபேர் கூடியிருந்து அழைத்தாலும் தாமஸியாமல் வரக்கூடியவர். யாரும் எந்தச் சமயத்திலும் அவரிடத்துப் போகலாம். பிரியத்தோடு முகமலர்ச்சியாய் கற்பிக்கத்தக்கவர். வரைவின்றி யெவரையும் ஏற்றுக்கொள்வார். நாம் விரும்பிக் கேட்டுக்கொண்டதையும் அருளுவார். கேளாதிருந்தாலும் நமக்கு வேண்டும் நன்மையானவைகளை யறிந்து தாமாகவு மருளிச்செய்வார். ஆதலால் அவர் ஒருவரே நல்ல குரு. உபாத்தியாயருக்கு உபாத்தியாயராகவும்

குருவுக்கு குருவாகவும் அமைந்தவர் அவரேயாதலால் இகபர சர்வார்த்த சாதனமான திவ்வியகலையை நன்றாய்த் தெளிவாய்க் கற்றுக்கொள்ளலாம். இலவசமாய்க் கற்றுக்கொள்ளலாம். நாம் அவருக்குக் குருதக்ஷிணையாகச் சமர்ப்பிக்கத்தக்க பொருள் அவருக்கு அருமையானதாக நம்மிடத்து வேறொன்றுமில்லை. நம்மிடத்து அவர் பிரியப்படுகிறதெல்லாம் நம்முடைய இருதயந்தான். இதைமாத்திரம் நாம் மனப்பூர்வமாய் அவருக்குக் கையளிக்கவேண்டும். அப்படிச் செய்வோமானால் அவருடைய ஆதீனமெல்லாம் நமக்கே ஸ்வதந்தரமாகும். யாதொரு ஐயமுமின்று.

3. "கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்று அப்போஸ்தலன் புத்திசொல்லுகிறார். (ரோ. 13: 14.)

சிந்தையைத் தரித்துக்கொள்ளுதலாவது:—

மனத்தாழ்மையாயிருக்க ரக்ஷகரிடத்திற் படித்துக்கொள்ள வேண்டும் (மத். 11: 29.). கிறிஸ்துரக்ஷகரைத் தவிர வேறே யாரிடத்தில் இந்தக் குணத்தைப் படித்துக்கொள்ளக்கூடும். ஒருவரிடத்துமில்லையே. எப்படிப்பட்ட எளியவனும் தான் பெருமையாயிருக்க முடியாதென்று கண்டாலும் தனக்கில்லாத மேன்மையையுள்ளதுபோலப் பாவித்துப் பெருமைபாராட்டித் திரிகிறானே. இதனால்வருந் தீமையை நினைக்கிறானில்லை. வெட்கத்துக்கு அஞ்சுகிறானில்லை. எளியவன் காரிய மிப்படியிருக்கையில் வலியவன் மனோதர்மம் எப்படியிருக்காது! உலகத்தில் பெருமையாயிருக்க விரும்பாதவன் யார்? மநுப்பிரதமரும் தாங்கள் தேவனைப்போலிருக்கவேண்டுமென்று வீண்பெருமையை விரும்பினதினாலன்றோ உலகம் இவ்வளவு பெரிதான கேட்டுக்குள்ளாயிற்று. ஆகவே யுலகத்தில் தாழ்மையுள்ளவ ரொருவரு மில்லையாவெனில், கிறிஸ்து ரக்ஷகரிடம் படித்துத் தேறின உத்தமரிடத்து முதலாய் இதுவிஷயத்தில் அபூர்வமாய்ச் சிற்சில குறைவுகள் காணப்படுவதுண்டே, அப்படியானால் மற்றவர்களுக்குக் கேட்பானேன். ஏதோ காரியார்த்தமாகத் தாழ்மையுள்ளவர்போல் நடிப்பவர் பலருளர்.

"மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்."

"வலியி னிலைமையான் வல்லுருவப் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று"

என்று திருவள்ளுவருஞ் சொல்லுகின்றனரே. ஆகவே உலகத்தில் உண்மையான மனத்தாழ்மையுடையாரைக் காண்பது அசாத்தியம். ஆம் உலக சற்குருவா யெழுந்தருளி வந்திருந்த ஸ்ரீ கிறிஸ்துரட்சகரிடத்தில் இந்தக் குணமெப்படி யுள்ளதென்று கவனிப்போம். அவர் உன்னதமான தேவன். மகைஸ்வரியமுள்ள பிரபு. உலகம்

உண்டாகட்டுமென்ற மாத்திரமே சகலமு முண்டாயிற்று. ஒழியட்டு மெனில் அக்ஷணமே யொழியத்தக்கது. அப்படிப்பட்ட சர்வவல்லமையுள்ள ஆந்தாதி கர்த்தன் நரஜீவ ஜெந்துக்களை யீடேற்று நிமித்தமாய் மனிதாவதாரஞ்செய்யத் திருவுள்ளமானுர். கன்னிகையில் கருப்பாசயத்து முறைப்படி யமர்ந்திருந்தார். மாட்டுக்கொட்டிலிற் பிறந்தார். வாலாரிட்டங்களையுமடைந்தார். ஊரூரா யலைந்தார். மாதுர் பிதுர் வாக்கியங்களைத் தட்டாமல் முறைப்படி யடங்கியிருந்தார். வேதமுறைப்படி குருத்துவத்தை மேற்கொண்டு உபதேசித்து வந்தார். ஜனங்களுக்குப் போதித்தார். நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு பிரஜைகளுக்குத் தம்முடைய நடக்கையை முன்மாதிரியாக உலகத்தில் நிலைநிறுத்திவைத்தார். தாம் வசனித்தபடியே திரிகரணசுத்தராய் வாக்கிலுஞ் செய்கையிலும் வெளிப்பட்டார். "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு. மனித குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" யென்று அவரே வெளியிடுகிறபடி அவ்வளவாய் இரவும் பகலும் உழைத்தார். தன்னைப்போல பிறனை நேசிக்க வேண்டுமென்ற தம்முடைய கட்டளைக்குத் தாமே யொரு தக்க சான்ருக விருந்தார். காருண்ய குணங்களெல்லாம் அவருடைய சாநித்தியத்தில் நிருத்தனம் பயின்றுகொண் டிருந்தன.

> "அன்புரு வாயநம்பிக் கருந்துமாகார மான்ம
> துன்பமே பருகும்பானஞ் சொரிகண்ணீ ராதலாலே
> என்பெலாங் கட்டுவிட்ட தெழிற்றிரு மேனிவாடித்
> தன்பல மோடுபோலக் காய்ந்தற சலித்தம்மா." (யாத்திரிகம்.)

"அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை; அவர் வையப்படும்பொழுது பதில் வையாமலும் பாடுபடும்பொழுது பயமுறுத்தாமலும் நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை யொப்புவித்தார்." (1 பேது. 2. 23.)

"பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீஷர்களுடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினுல் துடைக்கவுந் தொடங்கினுர்." (யோவா. 13: 5.)

"அவர்களுடைய கால்களைக்கழுவினபின்புதம்முடைய வஸ்திரங்களை அவர் தரித்துக்கொண்டு திரும்ப உட்கார்ந்து அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை யறிந்திருக்கிறீர்களா?" (யோவா. 13: 12.)

"ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானுல், நீங்களும் ஒருவருடைய கால்களை யொருவர் கழுவக் கடவீர்கள்." (யோவா. 13: 14.)

"ஆவியி லெளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோக ராஜ்யம் அவர்களுடையது." (மத். 5: 3.)

ஆவியிலெளிமை மனத்தாழ்மை. அது கடவுள் திருச்சித்தத்துக்கு அமைந்தொழுகுந் தன்மையாம்.

"இத்தகையவரும் பொறையு மனநலமு மியைந்தவரே
வித்தகனுக் கடித்தொழும்பரெனத் தகுமெய்க் கிறிஸ்தவர்மற்
றித்தகைய குணமிலருங் கிறிஸ்தவரென் றிசைபெறுதல்
செத்தவரைத் துஞ்சினவ ரெனவுரைக்குஞ் சீர்மைத்தால்."
(யாத்திரிகம், 211-ம் பக்கம்.)

"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து."

"பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்"

என்றார் பிறரும். உலக சற்குருவாகிய ஸ்ரீ கிறிஸ்துவின் பரிசுத்த சரித்திரத்தை வாசித்தறிய விரும்புவோரெவரும் நான்கு சுவிசேஷத்திலடங்கிய சத்தியத்தை வாசித்து உய்த்துணர்க.

4. பொறுமை. — ஸ்ரீ கிறிஸ்துபகவானிடத்துள்ள காருண்ய குணங்களில் எத்தை நாம் விசேஷமாகத் தெரிந்துகொள்ளக்கூடும்? ஒவ்வொன்றும் பரிபூரணமுள்ளது. ஒவ்வொன்றும் உத்கிருஷ்டமானது. ஒவ்வொன்றுந் தனக்குவமை யில்லாதது. ஒவ்வொன்றும் எக்காலும் எவ்விடத்தும் வரைவின்றி யெவருக்கும் எவரிடத்தும் உபயோகப்படத்தக்கது. பிராண சிநேகிதரே! தேவகுமாரன் அனுபவித்த சிலுவையின் பாடுகளை தீர்க்க புத்தியுள்ள வானசேனைகளுக்காயினும் இம்மட்டென்று அளவுபடுத்திச் சொல்ல முடியுமா? பூமியில் ஆதிதொடங்கிப் பிறந்திறந் தொழிந்து போன சகலரும், இனி அந்தம்வரை பிறந்திறந்தொழிந்து போகத்தக்க சகலரும் கொடிய மகா பாவிகளாகிய தேவதுரோகிகளே. அதற்கு வரத்தக்க முடிவு நித்திய நரக தண்டனை. உலகத்துக்குந் தெய்வத்துக்கும் மத்தியஸ்தராக ஏற்பட்டுப் பிணைநின்றவர் தேவகுமாரனாகிய ஸ்ரீ கிறிஸ்து ஒருவரே. இவர் தாமே உலகமுழுவதுக்கும் வரவிருந்த உக்கிர தேவகோபாக்கினியின் தண்டனை முழுமையும் கொஞ்சப் பொழுதில் தம்முடைய திருமேனியிலும் ஆத்துமத்திலுந் தாங்கி உத்தரித்தாரெனில், அந்த நோவு இத்தகையதென்று யார் விவரித்துச் சொல்லக்கூடும்? பூதலப் பரப்பையும், ஆகாச விரிவையும், சமுத்திரத்தையும், சமுத்திர தீரத்து மணலையும் மட்டிட்டு அளவிடத்தக்க கணித சாஸ்திரக்ஞரா யிருந்தபோதிலும் ஸ்ரீ கிறிஸ்துரக்ஷகர் மகா பொறுமையாய்ச் சகித்து உத்தரித்த மகா கொடிய வேதனையை இவ்வளவென்று அளவுபடுத்தக் கூடியவராவாரோ? ஆகார். தம்முடைய ஒரு வார்த்தையிலே உலக முழுவதையும் அடக்கிவைத்

திருந்த தேவகுமாரனேயல்லாமல் பின்பு தம்மிடத்தில் நின்று வெளிப்பட்ட உலகத்தின்மேற் கவிழவிருந்த தேவகோபாக்கினியின் அக்கினிப் பிரளயத்தைத் தம்முடைய திருமேனியின்மீது தாங்கி உத்தரிக்க வல்லவர் வேறுருளர்; ஒருவரு மிலர். விஸ்தாரமான பூவுலகத்துள்ள மநுப்பிரஜைகள் ஆன சகலரும் உய்தற்பொருட்டு தேவகுமாரனுடைய பரிசுத்த திருமேனி யநுபவித்த அவஸ்தை யிப்படியென்று அதன் தன்மையை ஊழியூழிகாலஞ் சிந்தித்துச் சிந்தித்துக் கடல்போலக் கண்ணீர் பெருக வடித்தாலும் போதுமா? போதாது. ஸ்ரீ கிறிஸ்து சகித்த வேதனையைக் கண்டு சகிக்கமாட்டாமல் அசர சிருஷ்டிகளாகிய பூமி பிளந்தது. சூரியன் இருண்டது. சிகரங்கள் தலைசாய்ந்து பருவதங்கள் வெடித்தது; என்றால் தேவகுமாரன் சகித்த வேதனையை வகுத்துச்சொல்ல யாராலே முடியும். புண்ணிய மூர்த்தியாகிய கிறிஸ்துவின் ஆத்தும வேதனையும் அவருடைய திருமேனியிலிருந்து இரத்த வெயர்த்துளி சிதறத்தக்கதாக அவரடைந்த உபாதியும் இப்படியென்று விவரித்துக் காட்ட ஆயிரம் வாயுள்ளவருமில்லை. தீர்க்காயுள் படைத்தவரு முலகத்தி லில்லை. இருப்பினும் அசாத்தியமாம். யாத்திரிகம், இரக்ஷணிய சரிதப்படலம் 104–110 வாசித்துக் காண்க.

நானே வழியுமாய்ச் சத்தியமுமாய்ச் சீவனுமா யிருக்கிறேன் என்ற வாக்கியத்தின் பொருள் இப்படி யுள்ளதென்பதைப் பற்றித் தெளிவாய் விவரித்துக் காட்டியிருக்கிறோம். அவைகளில் கிறிஸ்து ரக்ஷகர் இவ்வுலகத்தில் அவதரித்து அவர் மோக்ஷபாதை யிதுவென்று காட்டியதும், அவர் திருவடிச்சுவடுகள் பதிந்த அடையாளங்களுள்ளதுமான சுவிசேஷ வழியே அவர் காட்டிய வழியென்றும், ஆதலால் அவர் காட்டிய வழி வேறு, அவர் வேறாகவிராமல் அவர் கற்பித்த திருவாக்கே மோக்ஷமார்க்கமா யிருப்பதினால் அவரே வழியாயிருக்கிறாரென்றும், அதற்கு திருஷ்டாந்த மிதுவென்றும் புலப்படுத்தினோம். அப்பால் அவர் காட்டிய அந்த வழி யெத்தகையதெனில்: நேர்வழி, ஒருக்கவழி, பரிசுத்தப் பட்டணத்துக்குப் போகிறவழி, திகைப்பில்வழி, ஜீவவழி, உண்மைவழி யென்றும் பாகுபாடுசெய்து சிந்தித்தோம். இவ்வாறு முதற் பாகத்தை முடித்து இரண்டாவதாகச் சத்தியத்தின் தாத்பரிய மிப்படி யென்று விவரித்ததின்பின்பு சத்தியம் எத்தன்மையதென்றும், அது உலகத்துக்கு எப்படி வந்ததென்றும், அதன் பிராபல்ய மிப்படியென்றும், சத்திய முலகத்துக்கு இன்றியமையாத பொருளென்றும்; ஆதலால் உண்மை நிலையே கிறிஸ்துமார்க்கம், உண்மைதிரிகரணத்தும் வெளிப்படுவதாயின் அவனே ஜீவன் முத்தன் என்றுங் கவனித்தோம். கடைசியாக நானே ஜீவனென்றுரைத்த திருவாக்கை கவனித்தபோது அழிந்துபோகிற ஜீவனையல்ல அழியாமையாய்க் கிறிஸ்துவினிடத்துள்ள நித்திய ஜீவனையேயென்றும், இதை யடைந்தவர்களே கிறிஸ்

துவுக்காக இரத்தச்சாக்ஷிகளாகும்படி துணிவுந் திவ்ய தைரியமு முடையவர்களாகிறார்களென்றும், இதுவே வேதத்தில் புது ஜீவனென்றும், ஆவிக்குரிய ஜீவனென்றும், இன்னமுகாந்தரங்களினால் வழங்கியிருக்கின்றனவென்றும், ஆவிக்குரிய ஜீவனையடைய விரும்புவோரெவரும் தங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ளுமாறு இப்படியென்றுங் கவனித்துக்கொண்டோம். இவற்றை நழுவ விட்டுவிடாமல் உள்ளத்திற் பதிய வைத்து திரும்பத் திரும்ப மனனஞ்செய்து ஸ்ரீ கிறிஸ்து ரக்ஷகரே நம்மெல்லாருக்கும் இகபர சாம்ராஜியத்தை யருளத்தக்க புண்ணிய மூர்த்தியென்று அவருடைய திருவடியில் தீர்க்கவிசுவாசம் வைத்து இதுவே ரக்ஷணியநாள் இதுவே தகுதியான காலமென்று நன்குமதித்து ஜீவரக்ஷை யடையும்பொருட்டு சர்வ ஜாக்கிரதையாய் முயற்சிப்படுவோமாக. திரியேகப்பெருமானே யிதற்கு வேண்டுங் கிருபையை யருளிச்செய்வாராக.

தேவாரம், உண்மை வற்புறுத்தல். (பண்பழம் பஞ்சுரம்.)

1. தொக்கபாவமன் னிப்புநித்திய ஜீவநன்மையுஞ் சுகிர்தமும்
மிக்கபேரின்ப வீடுநங்கிறிஸ்தி யேசுவைவிசு வாசிக்கிற்
கைக்குள்வந்ததிங் கையமொன்றிலை கண்டுகேட்டுணர்ந் துலகுளீர்
தக்கவாறுநன் ருய்மின்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

2. தேவதேவத்ரி யேகதெய்விக ஜேசுவின்திரு நாமமே
ஜீவரக்ஷணை நல்குதிவ்விய சீலமார்திரு மந்திரம்
ஆவதன்றிமற் றில்லைவேறிதை யாயுமின்விரைந் துலகுளீர்
தாவரும்பர மார்த்தரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

3 இம்பர்மெய்ப்புரு ஷார்த்தமீட்டுதற் கேற்றநல்வழி யீசனை
நம்பியன்புசெய் வார்க்கெலாமழி யாதபேரின்ப நன்னிதி
உம்பர்நோக்குசன் மார்க்கமாதியு ணர்த்துசற்குரு வுலகுளீர்
தம்பிரான்கதி கூட்டுரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

4. எமையுயக்கொண்ட வீசனுதிதொட் டெழுபவித்தது மிம்பரிற்
சிமையத்தேயலர் தீபம்போன்றுள திருச்சபைக்குய்த்துத் தெருட்டலும்
உமையடுத்தடுத் துண்மைகூறிவற் புறுத்திநிற்பது முலகுளீர்
சமையபாஷ்கர னுமிரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

5. முத்துவத்தனி யேகவஸ்துவு மோக்ஷமுந்தரு மார்த்தமும்
நித்யஜீவனும் ஜீவமார்க்கமு நெறிதிரிந்துசெல் பாவமும்
சித்தசஞ்சலப் படகெரும்முள தீர்க்கசத்திய முலகுளீர்
சத்தியந்தவ றுதரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

6. ஆதிநித்திய மாத்துமாமற்ற வகிலம்யாவும நித்தியம்
பூதலத்திறந் தோருயிர்த்தெழுந் தெம்பிரானடிப் புரியுநாள்
நீதியர்வரு பலநித்திய நீக்கமின்றுல கத்துளீர்
சாதுசங்கத்தைச் சார்மின்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

7. கனிதனீர்மையிற் கிறிஸ்துவின்றிருக் கடைக்கணுக்கிலக் காகிடில்
துனிதவிர்ந்திடும் பாவசங்கடந் தொலையுநுந்நடை சுகிர்தமாம்
புனிதநல்மனம் பொருந்துமன்புளம் பொங்கிமேலிடுமுலகுளீர்
தனிதமாருண் மல்குமரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

8. கிழக்கெழுஞ்சுடர் போலச்சத்தியம் கிளரக்கண்டினுங் கேதமார்
பழக்கமானதீ வினையைவேரறப் படுத்துநன்னெறி பற்றிடீர்
வழக்குரைத்துவா ளுளைப்போக்குதன் மதிகொலோவுல கத்துளீர்
சழக்கைவிட்டுளந் திரும்புமரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

9. சேயருந்தம ருஞ்சிநேகருந் தேடுபல்பொருட் செல்வமுங்
காயநீத்துயிர் பிரியுங்காலொரு கடிகைபின்வரக் காண்டுமோ
நாயகன்கிறிஸ் தியேசுவேமறு மைக்குநற்றுணை யுலகுளீர்
தாயகம்பிறி தில்லைரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

10. நம்மைநோக்கிய தண்டனைக்கொரு நடுவராய்நின்று தாங்கியும்
செம்மையிற்றிறம் பாதுநித்திய ஜீவபுண்ணியந் திரட்டியும்
இம்மைக்குமறு மைக்குநன்மையுண் டாகவிங்குதித் துலகுளீர்
தம்மையுந்தந்த சாமிரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

வஸ்து நிர்ணயப் பிரகரண முற்றிற்று.

S. P. C. K. Press, Vepery, Madras—1898.

தேசிய கல்வி [illegible] விர்த்தி [illegible]

[illegible] அனுவகை [illegible] விற்பனைக்குச் செய்யப்

தமிழ் [illegible] புஸ்தகங்களின் [illegible]

அருணோதயம்		
அங்கிலேய இல்லற வொழுக்கம்		
அங்கிலேய தேசத்தில் ஆறுமாத சஞ்சாரம்		
ஆதி பிரித்தித்த சரித்திரத்திலிருந்து தெரிந்தெடுத்த சரிதை		[illegible]
இராஜசுத்தப் பயாத்திரிகம்		0
[illegible]		9
[illegible] ஜீவியம்		0
[illegible] விநோத சதா மஞ்சரி		[illegible]
[illegible]	1	[illegible]
[illegible] லம்	6	0
[illegible] னம்: உ. தோ. சத் [illegible] நாதன் ஐயரின் ஜீவிய சரிதை	4	0
கார்பீல்டு சேஞ்சுதிபதி	1	0
காத்தம்மாள் சரித்திரம்	[illegible]	0
கிறிஸ்து [illegible] நாமதேய [illegible] னம்	4	0
கிறிஸ்து [illegible] தாரதம்மிய விளக்கம்	3	0
[illegible] இந்தாதேசத்தில் விருத்தியான	[illegible]	[illegible]
[illegible] ரம்	[illegible]	[illegible]
[illegible]	2	[illegible]
[illegible]	[illegible]	0
சித்திரப்பட [illegible] யாத்திரிகம்	6	[illegible]
சிறுவருக்கேற்ற சித்திரப்படச் சரிதைகள்	1	[illegible]
[illegible] ரிபோதயம்	1	8
டாக்டர் லிவிங்ஸ்டோன் என்பவரின் ஜீவிய சரிதை	1	6
நல்லதாய்	[illegible]	6
பாதகண்ட புராணம்	2	0
பலதேச சித்திரப்படச் சரிதைகள்	[illegible]	0
[illegible] ரிசுத்த பவுல் அப்போஸ்தலன் [illegible]		0
[illegible]		[illegible]
[illegible] சரிதை		[illegible]
மாதர் [illegible]		
மாதர் பூஷணம்		[illegible]
மார்டின் லூதர் சரித்திரம்		[illegible]
[illegible] உபமானங்கள்		[illegible]
[illegible] சரிதை		
[illegible] ந்லாக விக்கிரக [illegible]		[illegible]
[illegible]		[illegible]
[illegible] இரக [illegible] னியின் சரிதை		[illegible]
[illegible]	1	0
[illegible] சரித்திரம்	1	[illegible]
[illegible] சரித்திரம்	[illegible]	[illegible]
[illegible] சித்திரப்படச் சரிதை	2	[illegible]